Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the
Director of Stationery and Printing,
Chennai-600 002.

வெளியீடு : 10-2-2013 Issued : 10-2-2013

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, மே 10, 2013—தொகுதி 53—எண் 2

Friday, the 10th May 2013—Volume 53 No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

10–5–2013

உள்ளடக்கம்

	பக்கங்கள்
1. வினாக்கள்–விடைகள்—	
உடுக்குறியிட்ட வினாக்கள்	261-310
2. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்—	
(அ) போக்குவரத்துக் கழக கட்டமைப்பு மற்றும் சேவை மேம்பாடு, வட்டாரப் போக்குவரத்து அலுவலக விரிவாக்கம் குறித்த முதலமைச்சரின் அறிக்கை	311-315
(ஆ) சுற்றுலா, கலை–பண்பாட்டுத் துறையில் சிறப்புக் கல்வி மையம், இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகம் அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை	315-319
(இ) சட்டக் கல்விக்குப் புதிய சலுகைகள் மற்றும் கட்டமைப்பு–விடுதி வசதிகள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை	320-322
(ஈ) பெண்களுக்குத் தனிச் சிறை அமைத்து சிறைச்சாலைகளில் கட்டமைப்பு வசதிகள் செய்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை	323-324
3. போக்குவரத்து சேவை மேம்பாடு, இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகம் அமைத்தல், சட்டக் கல்விக்குப் புதிய சலுகைகள், சிறைச்சாலைகளில் கட்டமைப்பு வசதிகள்–முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி—	
முனைவர் செ.கு. தமிழரசன்	325-330
திரு. உ. தனியரசு	330-334

பக்கங்கள்

3. போக்குவரத்து சேவை மேம்பாடு, இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகம் அமைத்தல், சட்டக் கல்விக்குப் புதிய சலுகைகள், சிறைச்சாலைகளில் கட்டமைப்பு வசதிகள்—முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி—*தொடர்ச்சி*

*திரு. பி.வி. கதிரவன்	334-337
திரு. ஆ. நாராயணன்	337-339
முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா	339-341
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்	342-343
திரு. சு. குணசேகரன்	343-349
*திரு. அ. சவுந்தரராசன்	350-353
திரு. டி. சுரேஷ்குமார்	353-354
*மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி	354-356
*மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்	357
*மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி	357-358
*மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்	359-361

4. அறிக்கைகள் அளித்தல்—

அரசு உறுதிமொழிக் குழு	363-364

பக்கங்கள்

5. மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி* 364-551

(அ) கோரிக்கை எண் 43–பள்ளிக் கல்வித் துறை

(ஆ) கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

(இ) கோரிக்கை எண் 49–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

}—*தொடர்ச்சி*

*மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்	365,371,374, 378-393, 411-421 424,433-434, 437-438,440, 443,445-452, 454-457, 472-475, 477-482, 484-487, 489,500-548,
திருமதி ர. சுபா	379-391, 394-395
மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா	393
*மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி	421-423
*மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்	393-394, 441-442,444,
*திரு. கே.பி. அன்பழகன்	395-409,
செல்வி கே. பாலபாரதி	409-425
மாண்புமிகு திரு. பி. தங்கமணி	415-416
திரு. க. பாலகிருஷ்ணன்	425

பக்கங்கள்

5. மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 43–பள்ளிக் கல்வித் துறை
(ஆ) கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)
(இ) கோரிக்கை எண் 49–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை
—*தொடர்ச்சி*

திரு. ஆர். சந்திரசேகர்	426-431,
திரு. சு. குணசேகரன்	369,432-437 439-441, 444-450,
திருமதி எஸ். விஜயதரணி	368-369 377, 438,
திரு. ஆர். சுந்தர்ராஜ்	451
திரு. எஸ். ஜாண் ஜேக்கப்	368,452-457,
திரு. ஆ. நாராயணன்	457-470
திரு. அ. அஸ்லம் பாஷா	370,373-374, 378,470-478
டாக்டர் க. கிருஷ்ணசாமி	479-487
மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்	488-491
**திரு. பி.வி. கதிரவன்*	491-492, 494-498
மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்	491-492
திரு. எல். வெங்கடேசன்	492-494,
**டாக்டர் (திருமதி) நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ்*	498-499

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 551-554

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விஜய, சித்திரை 27, திருவள்ளுவர் ஆண்டு – 2044

2013 மே 10, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.”

படிப்பதற்குரிய நூல்களைக் குற்றமில்லாமல் கற்க வேண்டும். அதன் பிறகு, கற்ற நூல்களில் அறிந்துகொண்டவற்றுக்குத் தக்கவாறு வாழ்க்கையில் அவற்றைப் பின்பற்றி நடக்க வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 455, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

455—

துணை மின் நிலையம்

***6892—திரு. இரா. குமரகுரு:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, எலவனாசூர் கோட்டையில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

உளுந்தூர்பேட்டை தொகுதி, எலவனாசூர் கோட்டையில் ஒரு புதிய 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம், ஒவ்வொன்றும் 8 எம்.வி.ஏ. திறன் உள்ள இரண்டு மின்மாற்றிகள் அமைப்பதற்கு 12–வது ஐந்தாண்டு பெருந்திட்டக் காலத்தில் திட்டமிடப்பட்டுள்ளது. துணை மின் நிலையம் அமைக்க எலவனாசூர் கோட்டை கிராமத்திற்கு ஒரு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள நுழையவாடி கிராமத்தில் சர்வே எண் 137/1A, 137/7 மற்றும் 131/12–ல் உள்ள 3 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலம் கண்டறியப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிலம் கையகப்படுத்திய பின்னர் நிருவாக ஒப்புதல் பெறப்பட்டு, எலவனாசூர் கோட்டையில் புதியதாக 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம், ஒவ்வொன்றும் 8 எம்.வி.ஏ. திறன் உடைய இரண்டு மின்மாற்றிகளோடு அமைக்கும் பணிகள் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.*

திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3–வது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, 200 ஆண்டு கால சாதனைகளை இரண்டே ஆண்டுகளில் நிறைவேற்றிய சாதனைத் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) காவேரியை மீட்டெடுத்த காவேரித் தாயே! நாளை இந்தியாவை வல்லரசாக ஆக்கப்போகின்ற பாரதத்தின் நம்பிக்கை நட்சத்திரமே! மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட, உளுந்தூர்பேட்டை ஒன்றியம், எலவனாசூர் கோட்டையிலே 33/11 கே.வி. துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 மே 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எலவனாசூர் கோட்டை பகுதியிலே கிட்டத்தட்ட 40 கிராமங்களுக்கு மேல் இருக்கின்றன. அங்கே 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு மின்வெட்டால் இழப்புகளும், 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் கடைகளுக்கு இணைப்புகளும் வழங்கப்பட்டு, கிட்டத்தட்ட 15 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள தியாகதுருகம் துணை மின் நிலையத்திலிருந்துதான் இப்பொழுது எலவனாசூர் கோட்டை பகுதிக்கு மின்சாரம் வந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அங்கே குறைந்த மின் அழுத்தம் ஏற்படுகின்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 33/11 கே.வி. துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். மின் தேவை பெருகிவரும் இந்தக் காலகட்டத்திலே, விவசாயிகள் அதிகமாக மின் இணைப்பு கோருகின்ற சூழலிலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விவசாயிகள்மீது மிகுந்த அக்கறை கொண்டு, நிறைய பல திட்டங்களைச் செயலாற்றிக்கொண்டுவரும் வேளையிலே, அங்கே 110/22 கே.வி. மின் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அமைத்துக்கொடுப்பார்கள் என்றால், விவசாயிகளுக்கு இது துணையாக இருக்கும். அதுவும் அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களெல்லாம் நீண்ட நாள் கோரிக்கையாக இதை வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். அதை மறுபரிசீலனை செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 110/22 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது உளுந்தூர்பேட்டை தொகுதி, எலவனாசூர் கோட்டை பகுதிக்கு 10 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள எரையூர் 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்திலிருந்தும், 11 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள உளுந்தூர்பேட்டை 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்திலிருந்தும், 12 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள தியாகதுருகம் 110/22 கே.வி. துணை மின் நிலையத்திலிருந்தும் மற்றும் 12 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள எ.சாத்தனூர் 33/11 கே.வி. துணை மின் நிலையத்திலிருந்தும் சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகின்றது.*

[2013 மே 10

முற்பகல் 10–05

இத்துணை மின் நிலையங்களிலுள்ள மின் மாற்றிகளின் திறன் முறையே 8 எம்.வி.ஏ., 12 எம்.வி.ஏ., மற்றும் அங்கு இருக்கின்ற மின் பளு 27 எம்.வி.ஏ., 5 எம்.வி.ஏ. ஆகும். ஏற்கெனவே அந்தப் பகுதிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்ற மின்சாரத்தினுடைய அளவு, மின் பளுவின் தேவை குறைவு. இன்றைக்கு அந்தப் பகுதியில் உள்ள மின் மாற்றிகளின் மொத்த திறன் 64 எம்.வி.ஏ. ஆகும். ஆனால், இன்றைக்கு அந்தப் பகுதியில் வழங்கப்பட்டு வரும் மின் பளு தேவை 51 எம்.வி.ஏ. தான். ஆகவே, 51 எம்.வி.ஏ., அளவில்தான் மின் பளு அங்கு தேவையிருக்கின்றது. அங்கு புதிதாக துணை மின் நிலையம் அமைக்கும் தேவை, அவசியம் எழவில்லையென்றாலும்கூட, ஏற்கெனவே அங்கே இருக்கின்ற கட்டமைப்பு வசதிகள் 64 எம்.வி.ஏ. அளவிற்கு செய்திருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, வளர்ந்து வரும் மின் தேவையினைக் கருத்திற்கொண்டு, எலவனாசூர் கோட்டையில் புதிதாக 33/11 கே.வி. துணை மின் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். எலவனாசூர் கோட்டையில் 9.5 எம்.வி.ஏ., மின் பளு தேவைதான் இருக்கிறது. இருந்தாலும்கூட அங்கு 16 எம்.வி.ஏ. திறன் கொண்ட அளவிற்கு புதிதாக மின் மாற்றிகளை அமைத்து, துணை மின் நிலையம் அமைத்தால், பத்து ஆண்டுகள் வரை மின் பற்றாக்குறை அந்தப் பகுதியில் இருக்காது என்பதால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, புதிதாக 33/11 கே.வி. துணை மின் நிலையம் அமைக்கப்பட்டால், அந்தப் பகுதியின் இந்த மின் தேவைக்கு போதுமானதாக இருக்கும் என்பதால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, புதிதாக 33/11 கே.வி. துணை மின் நிலையம் அமைக்கப்படும் என மீண்டும் ஒரு முறை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.*

திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியில் இருக்கின்ற மின்சாரப் பிரச்சினையை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தற்போது புதிதாக*

2013 மே 10]

33/11 கே.வி. துணை மின் நிலையம் அமைத்தால் போதுமானது என்று தெரிவித்திருக்கிறார்கள். அவருக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று என்னுடைய உளுந்தூர்பேட்டை ஒன்றியத்திற்கு உட்பட்ட காட்டசலூர் கிராமத்தில் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில், 19–5–2008 அன்று அங்கே ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்று தெரிவித்து, அந்தப் பகுதியில் நிலமும் தேர்வு செய்யப்பட்டு, வருவாய்த் துறைமூலம் நிலங்கள் எடுக்கப்பட்டன. ஆனால், மைனாரிட்டி தி.மு.க. அரசு அந்தத் துணை மின் நிலையத்திற்காகத் தேர்வு செய்யப்பட்ட இடத்தினை அவர்கள் கட்சியைச் சார்ந்த, நிலமற்றவர்களுக்கு நிலத்தைப் பட்டா போட்டுக் கொடுத்த காரணத்தினால், அங்கு துணை மின் நிலையம் அமைக்கப்படாமல் கைவிடப்பட்டுவிட்டது. அதன்பிறகு, அந்தப் பகுதி மக்கள், திருக்கோவிலூர் ஒன்றியத்திலுள்ள செங்கனாகொல்லையில் இருக்கின்ற கோயில் புறம்போக்கு நிலத்தினைத் தேர்வு செய்திருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியிலும் ஒரு துணை மின் நிலையம் அமைத்துக் கொடுத்தால், சுற்றுப் பகுதியில் இருக்கின்ற காட்டுச்சென்னூர், கொம்பசமுத்திரம், பல்லவாடி, தானம், தாங்கல், துலாம்பூண்டி ஆகிய கிராமங்களில் இருக்கின்ற விவசாயிகள் பயன் பெறுவார்கள். எனவே, அங்கேயும் ஒரு துணை மின் நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு, கண்டறியப்பட்ட இடத்தை அன்றைக்கு இருந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் பட்டா போட்டுக் கொடுத்துவிட்டார்கள் என்று உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த இடத்தினைத் தனியார்கள் கைப்பற்றிவிட்டார்கள் என்றும் சொல்லியிருக்கிறார். அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு இடத்தைப் பட்டா போட்டுக் கொடுத்துவிட்டார்கள் என்று சொன்ன விவரத்தை, மாண்புமிகு*

உறுப்பினர் அவர்கள் எழுத்து மூலமாகத் தெரிவிப்பார்களேயானால், அதன்மீது சட்டப்படியான உரிய விசாரணை மேற்கொண்டு, அந்த இடத்தினை மீண்டும் கையகப்படுத்த வாய்ப்பிருக்கிறதா என்பதைப் பார்த்து, அப்படி ஒரு வாய்ப்பு இருந்தால், அந்த நிலத்திலேயே துணை மின் நிலையம் அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும், அல்லது நிலத்தை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் அல்லது அதில் சட்டச் சிக்கல் ஏதும் இருந்தால், மாற்று இடம் தேர்வு செய்வதற்கான நடவடிக்கையையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.*

முற்பகல் 10—10

திரு. ஆர். சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் நகராட்சி என்பது வளர்ந்து வரக்கூடிய நகராட்சிகளில் ஒன்றாக இருக்கிறது. அங்கே அந்த நகராட்சிப் பகுதிகளுக்கு ஏற்கெனவே ஒரு 110 கே.வி. துணை மின் நிலையத்திலிருந்து மேலூர் நகர் முழுவதும் மின்சாரம் வழங்கப்படுகிறது. மேலூர் நகராட்சி நன்கு வளர்ந்து வருகின்ற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதியதாக 110 கே.வி. திறன் கொண்ட ஒரு துணை மின் நிலையம் அமைக்கவோ அல்லது ஏற்கெனவே அங்கிருக்கின்ற 110 கே.வி. திறன் கொண்ட துணை மின் நிலையத்தை 220 கே.வி. திறன் கொண்டதாகத் தரம் உயர்த்தி, வளர்ந்து வருகின்ற மேலூர் நகராட்சிப் பகுதி முழுவதையும், எல்லா மக்களுக்கும் நன்மை அளிக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுமூலம் ஆராய்ந்து, துணை மின் நிலையம் அமைக்கவோ அல்லது அதன் தரத்தை உயர்த்தித் தரவோ மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

2013 மே 10]

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வளர்ந்து வரும் பெருநகரமான மேலூர் நகரிலே மின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது என்பதை அரசு நன்றாக அறியும். எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று அந்தப் பகுதியிலே இப்போது இருக்கின்ற மின் தேவை எவ்வளவு, அங்கே இருக்கின்ற மொத்த மின் பளு எவ்வளவு என்பதையும், அங்கே மின்கட்டமைப்பு, மின் மாற்றிகளினுடைய திறன் எவ்வளவு, எவ்வளவு இணைக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் அங்கே ஆய்வு செய்து, தேவை ஏற்பட்டால் அந்த 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்கு, அதாவது கூடுதல் திறன் கொண்ட மின் மாற்றிகளைக் கூடுதலாக அந்தப் பகுதியிலே நிறுவுவதற்கும் அல்லது தேவை ஏற்பட்டால் அங்கே கூடுதலாக ஒரு புதிய துணை மின் நிலையத்தை ஏற்படுத்துவதற்கும் ஆய்வுகளை மேற்கொண்டு, அதன் அடிப்படையிலே பணிகளைச் செய்யும் பொருட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 456, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

456—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***22946—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சி, வார்டு எண் 2–ல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் பேரூராட்சி, 2–வது வார்டின் மக்கள்தொகை 1,438 ஆகும். இப்பகுதிக்கு காவேரிக் குடிநீரை நீராதாரமாகக் கொண்டு, 13–வது வார்டு சந்தைப் பேட்டை மேட்டுப் பகுதியில் கட்டப்பட்டுள்ள 8.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின்மூலம் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தற்போது இப்பகுதிக்கென்று தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். இங்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடையளிக்கின்ற நேரத்தில், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சிப் பகுதியில் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து அங்கு காவேரிக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்று கூறினார். மேற்கொண்டு இங்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பதற்கு சாத்தியக் கூறு இல்லை என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரி தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சியில் சந்தைப்பேட்டைக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்திற்குக் குழாய் பதிக்கப்பட்டு, குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் 3 மீட்டர் அளவுக்கு நீரேற்றம் செய்யப்பட்டால்தான், வார்டு எண் 2–ல் உள்ள மக்களுக்குக் குடிநீர் கிடைக்கிறது. ஆனால், 1 மீட்டர் அளவுக்குத்தான் நீரேற்றம் செய்ய முடிகிறது. அதனால் நீரழுத்தம் இல்லாத காரணத்தினால், அப்பகுதியில் வசிக்கும்

மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் குடிநீருக்கு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கனிவோடு பரிசீலித்து, வார்டு எண் 2–ல் உள்ள சமுதாயக் கூடத்திற்கு அருகில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய தாரமங்கலம் பேரூராட்சி 30,000 மக்கள்தொகை கொண்ட பேரூராட்சியாகும். இதில் 18 வார்டுகள் அமைந்துள்ளன. இந்தப் பேரூராட்சியில் 3 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைந்திருக்கின்றன. 8 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றும், 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றும், 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், ஆக 3 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைந்துள்ளன. இப்போது இருக்கின்ற அமைப்பில், ஒரு நாளைக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர்வீதம் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேண்டிய அளவிற்கு நீர் கிடைக்கவில்லையென்று கூறுகிறார். அதை ஆய்வு செய்து, அப்படிக் குறைவாக இருக்கின்றபட்சத்தில், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை நிறைவேற்றுகின்ற விதத்திலே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

முற்பகல் 10–15

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு

அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் பேரூராட்சி வார்டு எண் 4–ல் உள்ள காட்டூரில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு, இதுவரை நீரேற்றம் செய்யப்படாமல் இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நங்குவள்ளி பாறைக்கல்லூர் பிரதான இணைப்பிலிருந்து வார்டு எண் 4–ல் பயன்படுத்தப்படாமல் இருக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீரேற்றம் செய்து, அப்பகுதி மக்களுக்குக் குடிநீர் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், தாரமங்கலம் பேரூராட்சி, 18–வது வார்டு கருக்கம்பட்டி, 14–வது வார்டு கோழிக்கட்டனூர், வெற்றிலைக்காடு, 5–வது வார்டு, மோட்டுப்பட்டி ஆகிய பகுதிகளுக்கும் காவேரிக் குடிநீர் சரியாகக் கிடைப்பதில்லை. இப்பகுதி மக்களுக்குக் காவேரிக் குடிநீர் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே காவேரிக் குடிநீர்த் திட்டத்தின் வாயிலாக ஒரு குறிப்பிட்ட அளவிற்குக் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. அதோடுமட்டுமல்லாமல், அந்தப் பேரூராட்சியில் 72 ஆழ்குழாய்க் கிணறுகள் இருக்கின்றன. அதிலே 20 மின்விசைப் பம்புகள் போட்டு, அதற்குத் தனியாக அந்தக் குடிதண்ணீரை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வழியாக நீரேற்றப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இருக்கின்ற அளவில் நபர் ஒருவருக்கு 70 லிட்டர் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. எதிர்காலத்தில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.

2013 மே 10]

திரு. க. தினகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுல்தான்பேட்டை ஒன்றியத்திற்குட்பட்ட செலக்கரச்சல் பஞ்சாயத்தில் லட்சுமிநாயக்கன்பாளையம் கிராமத்தில் 5 வருடங்களாக ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதுபட்டு, இடிந்துவிழும் நிலையில் இருக்கின்றது. அங்கே தண்ணீர் விடவும் முடியவில்லை. மேலும், அங்கே, மக்கள் நடந்துவரும் வழிப்பாதையில் கோயில், மருத்துவமனை, கால்நடை மருத்துவமனை எல்லாம் இருக்கின்றன. எனவே, அதை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும். கடந்த ஆட்சிக் காலத்திலிருந்த கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. தாமோதிரன் அவர்கள் அன்றைக்கே சொல்லியிருந்தார்கள். ஆனால், இருப்பினும் கடந்த ஆட்சியில் செய்துகொடுக்கப்படவில்லை. உடனடியாக மக்களுடைய பயன்பாட்டிற்குப் புதியதாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைக் கட்டிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்துள்ள கோரிக்கையை ஆய்வு செய்து, அது உறுதிப்படுகின்றபட்சத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், புதியதாக மாற்றாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியத்தைச் சார்ந்தது துவரங்குறிச்சி என்ற கிராமம். அங்கு வடக்குத் தெரு என்ற பகுதியில் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை இருப்பதாக அந்தப் பகுதி மக்கள் என்னிடம் தெரிவித்தார்கள். அதை ஆய்வு செய்து 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு

நீர்த்தொட்டி அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)*

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *என்னுடைய கோரிக்கை பட்டுக்கோட்டை தொகுதி, துவரங்குறிச்சியைப் பற்றியது.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய உடனேயே நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்கள். நன்றி சொல்வார்களா என்று கேட்டார். (குறுக்கீடு) பரவாயில்லை. இது கேள்வி நேரம். அதனால் தேவையில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய துவரங்குறிச்சி பகுதியில் ஆய்வு செய்து, வாய்ப்பு இருப்பின் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ** என்று கூறிய அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது, நான் சொன்னது உட்பட. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.*

திரு. அ. பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியம், கடகத்தூர் ஊராட்சி, மணிப்பூருக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக, அங்கு குடிநீர் வரவில்லை. அந்த மணிப்பூருக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரை, தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் உள்ள அனைத்துக் குடியிருப்புகளுக்கும் ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம் அமல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. அது முடிவுறுகிற நிலையில் இருக்கிறது.*

முற்பகல் 10—20

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கிராமத்தைக் குறிப்பிட்டு, அந்த கிராமத்திற்குக் காவேரி நீர் வரவில்லை என்று சொல்கிறார். முதலில் அது ஆய்வு செய்யப்படும். ஆய்வு செய்த பிறகு, அந்தக் கிராமத்திற்குக் குடிதண்ணீர் வரவில்லை என்று சொன்னால், அதன்மீது நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படும் என்று கூறிக்கொள்வதோடு, மாண்புமிகு உறுப்பினர் கூறிய அந்தக் கிராமத்தில் மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டி தேவைப்படுகின்ற பட்சத்தில், அதை நிறைவேற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 457, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

457—

குளிர்பதனக் கிடங்கு

***7690—திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி பகுதியில் காய்கறிகளுக்கென குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

[2013 மே 10

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சியிலிருந்து 18 கி.மீ. தொலைவில் உள்ள கிணத்துக்கடவில் ரூ.2.25 கோடி மதிப்பீட்டில் காய், கனிகளுக்காக 500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் பணி தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தற்போது நடைபெற்று வருகிறது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் பொள்ளாச்சியில் காய்கறிகளுக்காக குளிர்பதனக் கிடங்கு எந்தப் பகுதியில் அமைக்க வேண்டும் என்று தெரிவித்தால், தேவையின் அடிப்படையில் மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, நடப்பாண்டில் அமைக்க ஆவன செய்யப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி அவர்கள்.*

திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் மாணவ, மாணவியருக்கு மடிக் கணினி தந்து நானிலத்திற்கு நல்வழிகாட்டியானார் நமது மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கல்வி ஒன்றே சமுதாய வேறுபாடுகளை வேரோடும், வேரடி மண்ணோடும் களைந்தெறியும் ஒரே கருவி என்பதைக் கருத்தில்கொண்டு, பார்போற்றும் பல்வேறு திட்டங்களைத் தந்து, ஒரு புதிய உலகத்திற்கு தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்லும் மாண்புமிகு அம்மா அவர்களின், நாளை நாற்பதையும் வென்று, பாரதத்தை ஆண்டு, வல்லரசாக மாற்றும் நல்லரசு (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் பாத மலர் பணிந்து வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சி பகுதியில் சுமார் 2,800 ஹெக்டேர் பரப்பளவில் ஏறக்குறைய 50,000 மெட்ரிக் டன் காய்கறிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதனை அப்பகுதி விவசாயிகள் பொள்ளாச்சி நகர்ப் பகுதியில் அமைந்துள்ள காந்தி காய்கறி சந்தைக்குக் கொண்டு சென்று, விற்றுச் செல்கிறார்கள். சில நேரங்களில் உற்பத்தி அதிகமாகி விலை வீழ்ச்சி அடையும். அப்போது திரும்பக் கொண்டு சென்றால், கெட்டுவிடும் என்பதால், காய்கறிகளை ரோட்டிலேயே கொட்டிவிட்டுச் செல்கின்றனர். அதைப் பறித்தால் நஷ்டம் ஏற்படும்

2013 மே 10]

என்பதைக் கருத்தில்கொண்டு, சிலர் அப்படியே தோட்டத்திலேயே விட்டுவிடுகின்றனர். இந்த நிலையை மாற்ற, பொள்ளாச்சிக்கு அதிகமான காய்கறி வரத்து இருப்பதாலும், பொள்ளாச்சி நகராட்சிப் பகுதியில் குளிர்பதனக் கிடங்கு அமைக்கத் தேவையான இடத்தை வழங்க பொள்ளாச்சி நகராட்சி தயாராக இருப்பதாலும், காந்தி வாரச் சந்தையில் 1,000 மெட்ரிக் டன் காய்கறிகளை வைக்க ஒரு குளிர்பதனக் கிடங்கை ஏற்படுத்தி, அதற்கு சூரிய ஒளியின்மூலம் மின்சாரத்தைப் பெற ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சி காந்தி மார்க்கெட் பகுதியில் தேவையான இடத்தினை வேளாண்மை விற்பனைத் துறைக்கு பொள்ளாச்சி நகராட்சி வழங்கும்பட்சத்தில், பயிரிடப்படும் காய்கறிகளின் பரப்பு மற்றும் உற்பத்தி அடிப்படையில் குளிர்பதனக் கிடங்கு அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்செல்லப்பட்டு, நிதி ஒதுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். சூரிய ஒளியில் மின்சாரம் தயாரித்து, அந்தக் குளிர்பதனக் கிடங்கிற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்றும் கேட்டிருக்கிறார்கள். அதுவும் வருங்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி அவர்கள்.*

திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருள்சூழ்ந்த இந்தியாவின் ஒளிவிளக்காய் விளங்குகின்ற மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், குளிர்பதனக் கிடங்கு அமைத்துக்கொடுக்க ஆவன செய்யப்படும் என்றும், சூரிய ஒளியின்மூலம் மின்சாரம் வழங்க பரிசீலிக்கப்படும் என்றும் சொல்லிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியினைக் காணிக்கையாக்கி அமர்கிறேன்.*

[2013 மே 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 458, மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

458—

நியாய விலைக் கடை

***3677—திரு. ர.ம. பாபு முருகவேல்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதியில் கண்ணமங்கலம் பேரூராட்சிக்குச் சொந்தமான இடத்தில் நியாய விலைக் கடை கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி தொகுதி, கண்ணமங்கலம் பேரூராட்சியில், திருவண்ணாமலை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையின் கட்டுப்பாட்டின்கீழ், கற்பகம்–I மற்றும் கற்பகம்–II ஆகிய இரு முழுநேர நியாய விலைக் கடைகள் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன.

முற்பகல் 10—25

இந்நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அடி மனைகள் இல்லை. எனவே, கண்ணமங்கலம் பேரூராட்சியில் இட ஒதுக்கீடு செய்ய வேண்டி முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. இட ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றதும், இந்நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 மே 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு நான் எழுப்பிய உடுக்குறியிடாத வினாவிற்கு, ஆரணி நகராட்சியிலே மூன்று பகுதி நேர நியாய விலைக் கடைகள் அமைத்துத் தரப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

கண்ணமங்கலம் பேரூராட்சியிலே, கடந்த 2012–2013 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து புதிய கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டது. அப்போதும் இதே பதிலைத்தான் மாவட்ட நிருவாகம் சொன்னது. அதாவது, இடம் இல்லை என்ற காரணம். எனவே, இடத்தை உடனடியாக அங்கே ஏற்பாடு செய்து புதிய கட்டடம் கட்டித் தரவும், செய்யாறு ஒன்றியத்திலே நாவல்பாக்கம் உள்வட்டத்திலே 2 புதிய நியாய விலைக் கடைகளை கடுகனூர் மற்றும் செங்கம்பூண்டியில் அமைத்துத் தருவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கண்ட 2 முழுநேர நியாய விலைக் கடைகளுக்கும் இடம் கேட்டு பேரூராட்சிக்குக் கடந்த 11–1–2012 அன்று முன்மொழிவு வேலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதுவரை எந்தவித பதிலும் இல்லாததால், கடந்த 27–2–2013 அன்று நினைவூட்டுக் கடிதமும் வேலூர் மண்டல பேரூராட்சிகளினுடைய உதவி இயக்குநருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. விரைவிலே இடம் கிடைத்தவுடன், உறுதியாகக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.*

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆரணி பகுதியில் பகுதிநேரக் கடைகள் கேட்டிருக்கிறார்கள். சட்ட விதிகளுக்கு உட்பட்டு, கடைகளைப் பிரிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்

அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல, ஆரணி தொகுதியிலே, மேற்கு ஆரணி ஒன்றியத்திலே, ஒன்னுபுரம் பஞ்சாயத்திற்குட்பட்ட தேவாங்கபுரம், முருகமங்கலம் பஞ்சாயத்திற்குட்பட்ட மூங்கில்தாங்கல், பாளை ஏகாம்பரநல்லூர் பஞ்சாயத்திற்குட்பட்ட சி.சி. ரோடு ஆகிய பகுதிகளிலே, விதிமுறைகளுக்குட்பட்டு 150 குடும்ப அட்டைகளுக்கு மேலும், ஒன்றரை கிலோ மீட்டருக்கு தொலைவிலும் இருக்கின்ற கடைகளைப் பிரித்து, பகுதிநேர நியாய விலைக் கடைகளை அமைத்துத் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். ஆரணி நகராட்சியிலே 6 கூட்டுறவு நியாய விலைக் கடைகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அந்தக் கூட்டுறவுக் கடைகளுக்கு இடம் இருக்கின்றது. கட்டடங்கள் இல்லை. எனவே, அந்த இடத்திலே புதிய கட்டடங்கள் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பதவி ஏற்றதற்குப் பிறகு, அவர் கேட்டதற்கிணங்க, 1–6–2011–க்கு பிறகு 4 பகுதிநேரக் கடைகள் அவருடைய தொகுதியிலே திறக்கப்பட்டிருக்கின்றன. அதே மாதிரி, இப்போதும் நான் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொன்னதுபோல, விதிகளுக்கு உட்பட்டு, கடை திறக்கும் வாய்ப்பு இருக்கும்பட்சத்தில், உறுதியாக கடை திறக்கப்படும். சொந்த இடம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தச் சங்கத்திற்குச் சொந்த இடம் இருக்கும்பட்சத்தில், மாவட்ட ஊராட்சி முகமையினுடைய வளர்ச்சி நிதியிலிருந்து நிதி பெற்றோ அல்லது சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய தாராளமான தொகுதி மேம்பாட்டு நிதியைப் பெற்றோ உறுதியாகக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்

அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 459, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் மற்றும் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

459—

வனத் தீயைத் தடுத்தல்

***8978—திரு. ரா. சரத்குமார்:**
திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வனத் தீயினைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழக வனப் பகுதிகளில் தீப்பிடிப்பதைத் தடுக்க அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது:

தீத்தடுப்புக் கோடுகள் வெட்டுதல், தீ எச்சரிக்கை மையங்கள் மற்றும் தீத்தடுப்புக் கோபுரங்கள் அமைத்தல், கிராம வனக் குழுக்களுக்குத் தீத்தடுப்புப் பயிற்சி அளித்தல், தீத்தடுப்புக் காவலர்களால் ரோந்துப் பணி மேற்கொள்ளுதல், நீர்த்தேக்க அமைப்புகளை உருவாக்குதல், தீத்தடுப்பு விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல், தீத்தடுப்பு உபகரணங்கள் வழங்குதல், தொலைநோக்குக் கருவிகள்மூலம் தீத்தடுப்புக் கோபுரங்களிலிருந்து தீ நிகழ்வுகளைக் கண்காணித்தல் மற்றும் விரைவு தீத்தடுப்பு ரோந்துக் குழுமூலம் தீத்தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளுதல் ஆகியவற்றின்மூலம் தமிழக வனப் பகுதிகளில் தீப்பிடிப்பது தடுக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலை, தமிழக மக்களின் வாழ்வாதாரமாக விளங்குகிறது. இங்கு பல்வேறு வகையான உயிரினங்கள், விலை உயர்ந்த மரங்கள், அரிய வகை மூலிகைகள், வன விலங்குகள், வன விலங்குச் சரணாலயங்கள், அடர்த்தியான வனக் காடுகள் எல்லாம் உள்ளன. இப்படிப்பட்ட வனத்தின் வளத்தை இந்த அரசு பாதுகாக்க வேண்டும். மேலும், தீப்பிடித்து எரிந்த பின்பு அந்த இடத்தில் புல், பூண்டு எல்லாம் அழிந்து மண் வளம் குறைந்து மண் அரிப்பு ஏற்படுகிறது.

முற்பகல் 10–30

மனிதரால் தீ வைக்கப்படுகிறதா, இல்லையென்றால் இயற்கையாக தீப் பற்றுகிறதா? இரப்பர் பிளாண்ட்டேஷனில்கூட தீ ஏற்பட்டிருக்கிறது. அதற்குக்கூட சரியான பதிலை அறிந்துகொள்ள முடியவில்லை. வனத் துறையினுடைய மரக் கிடங்குகள்கூட, பலமுறை தீயால் எரிக்கப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட சம்பவங்களைக் கண்டறிந்து, அடர்த்தியான வனப் பகுதிகளிலே உயரமான இடங்களில் Fire Watch Tower அமைத்து, வெளிநாடுகளில் பயன்படுத்துவதுபோல நவீன கேமராமூலம் தீப் பிடிக்கும் இடங்களைக் கண்டறிந்து, மேலும் தீ பரவாமல் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பசுமையாக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2–5–2013 அன்று பேரவை விதி 110–ன்கீழ் நடப்பாண்டில் ரூபாய் 35 கோடியே 62 இலட்சம் மதிப்பீட்டில் வனப் பராமரிப்புப் பணிகளான உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் தீத் தடுப்பு மேலாண்மை போன்ற பணிகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். தமிழக வனப்

2013 மே 10]

பகுதிகளில் ஏற்படும் தீ விபத்துகளால் பெரும்பாலும் குறைந்தளவிலான சேதம் மட்டுமே ஏற்படுகிறது. நெருப்பினால் சேதம் ஏற்பட்டுள்ள வனப் பகுதிகளில் மழைக் காலங்களில் துளிர்விட்டு வளர ஆரம்பித்து விடுகிறது. நெருப்பு பெரும்பாலும் தரையில் உள்ள காய்ந்த இலைகள், சருகுகளில் மட்டுமே பிடிப்பதால், புல் பூண்டுகள், புதர் செடிகள் மட்டுமே தீயினால் பாதிக்கப்படுகின்றன. நிலையான மரங்களுக்கு ஏதும் பாதிப்பு ஏற்படாத வண்ணம் பல்வேறு தீத் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தீயினால் இதுவரை வன விலங்குகள் ஏதும் பாதிக்கப்படவில்லை. மேலும், இயற்கையாக வளர்ந்த மரங்களுக்கும் பாதிப்பு ஏற்படுவதில்லை. இருப்பினும், தீப் பிடிப்பதைத் தடுக்க அரசு எல்லா வகையிலும் நடவடிக்கை எடுத்து வருகின்றது. மேலும், தீத் தடுப்புக் கோபுரங்களிலிருந்து தீ நிகழ்வு ஏற்படாவண்ணம் கண்காணிக்கப்பட்டு, தீ விபத்துகளை ஏற்படுத்தும் சமூக விரோதிகள் கண்டறியப்பட்டு, கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் தென்னாப்பிரிக்க நாட்டில்கூட, வனங்களில் தீப் பிடித்து பல மாதங்களாக அணைக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவே, தமிழகத்தினுடைய வனப் பகுதிகளிலே, அவ்விதமான ஒரு நிகழ்வு ஏற்படாதவண்ணம், அப்படி ஒரு நிகழ்வு வருகிறது என்றால், அதைத் தடுப்பதற்கு தீயை அணைக்கக்கூடிய திட sodium bicarbonate மூலமாக ஹெலிகாப்டர்மூலம் தீப் பிடிக்கக்கூடிய இடங்களில் தீயை அணைக்கவும், மேலும் Fire Protection Watchman பணியிடங்களை அதிகரித்து, வனப் பகுதிகளைக் காப்பாற்றவும் அரசு முன்வருமா என்பதையும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குரிய நடவடிக்கை எடுப்பார்களா என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 மே 10

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனங்களில் தீத் தடுப்பு நடவடிக்கைகள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் சிறப்பாக எடுக்கப்பட்டு வருகின்றன. தீ நிகழ்வுகள் ஏற்படாவண்ணம் பாதுகாக்க கோடைக்காலம் துவங்கும் முன்னரே காப்புக் காடுகளுடைய எல்லைகளில் தீத் தடுப்புக் கோடுகள் 3 மீட்டர் அகலத்திற்கு வெட்டப்படுகின்றன. அங்கே தீ ஏற்படும் மாதங்களான ஜனவரி, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் புதிதாக தீத் தடுப்புக் காவலர்கள் நியமனம் செய்யப்பட்டு, அவர்கள் ரோந்துப் பணிகளை மேற்கொண்டு, தீ நிகழ்வுகளைத் தடுக்க உபயோகப்படுத்தப்பட்டு வருகிறார்கள் மற்றும் பல்வேறு நீர்த்தேக்க அமைப்புகள் உருவாக்கப்படுகின்றன. ஆழ்குழாய்க் கிணறு, கைப் பம்புகள் அமைத்தல், சிமென்ட் தடுப்பணைகள், கசிவுநீர்க் குட்டைகள் கட்டுதல் இப்படிப் பல்வேறு வகைகளில் தீத் தடுப்பு நிகழ்வுகள் நடைபெற்றுகொண்டிருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியதை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, ஆய்வு செய்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 460, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். வேதாச்சலம், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

460—

சுரங்கப் பாதை

*****6729—திரு. எஸ். வேதாச்சலம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் தொகுதி, கொரட்டூர் இரயில்வே கேட் பகுதியில் சுரங்கப் பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 மே 10]

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அம்பத்தூர் தொகுதி, கொரட்டூர் இரயில்வே கடவு 4–க்கு மாற்றாக சாலை கீழ்ப்பாலம் அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். வேதாச்சலம் அவர்கள்.*

திரு. எஸ். வேதாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எங்கள் குலதெய்வம் இருக்கும் இடத்தை நோக்கி மாண்புமிகு அம்மா அவர்களின் பாதங்களில் பணிவான வணக்கத்தைச் சமர்ப்பிக்கிறேன்.*

என்னுடைய தொகுதியில் கொரட்டூர் பகுதியில் எல்சி–4 தரைப்பாலம் அமைக்க விண்ணப்பித்தேன். பதில் கிடைக்கும் முன்னரே பாலம் அமைக்க உத்தரவு பிறப்பித்த எங்கள் குலதெய்வத்திற்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

மேலும், இச்சுரங்கப்பாதை பக்கத்தில் பட்டரவாக்கத்தில் அரை கி.மீ. தொலைவில் ஒரு மேம்பாலமும், கொரட்டூர் மற்றும் பாடி பக்கத்தில் ஒரு மேம்பாலமும் உள்ளன.

ஆதலால், தற்போது கொரட்டூர் பகுதியில் அமைக்கப்படுகின்ற மேம்பாலத்தினை, சென்னை மாநகராட்சி விதியின்கீழ் பல்லாவரம், சேத்துப்பட்டு, சைதாப்பேட்டை, விம்கோ நகர் போன்ற பகுதிகளில் அமைந்துள்ள சுரங்கப் பாதைகள் போல் சுரங்கப் பாதையாக அமைக்க வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

[2013 மே 10

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் தொகுதி, கொரட்டூர் இரயில் நிலையம் அருகில், கடவு எண் 4–க்கு மாற்றாக ரூ.19.97 கோடி செலவில் சாலை கீழ்ப்பாலம் அமைப்பதற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அமைக்கப்படவுள்ள கீழ்ப்பாலத்தின் இரயில்வே பகுதியின் பணி இரயில்வே துறையினரால் ரூ.9.68 கோடி மதிப்பில் செயல்படுத்துவதற்கு 9–1–2013 அன்று அங்கீகாரம் வழங்கப்பட்டு முதற்கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இரயில்வே பணிகள் முடிந்தவுடன் அணுகுசாலை அமைப்பதற்கான பணி நெடுஞ்சாலைத் துறை மூலமாகத் துவங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். வேதாச்சலம் அவர்கள்.*

திரு. எஸ். வேதாச்சலம்: *மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் கனிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 461, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

461—

பால் பண்ணைக்குப் புதிய கட்டடம்

*__8823__—**திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியிலுள்ள பால் பண்ணைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 மே 10]

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி ஆவின் பால் பண்ணை நிறுவனத்திற்கு நாளொன்றுக்கு 50,000 லிட்டர் கையாளும் திறனுள்ள பால் பதன ஆலை ஒன்று காரைக்குடி, கழனிவாசலில் 1986 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது. தற்போது இப்பால் பண்ணையில் நாளொன்றுக்கு சராசரியாக 31,000 லிட்டர் பால் கையாளப்பட்டு வருகிறது. இவ்வொன்றியத்தின்மூலம் கொள்முதல் செய்யப்படும் அனைத்துப் பாலையும் குளிர்விக்கும் அளவிற்கு இந்த ஆலையின் திறன் உள்ளது. காரைக்குடி ஒன்றியத்தில் பால் கொள்முதல் அதிகரித்து, ஆலையில் கையாளும் திறன் உயர்த்தப்பட வேண்டுமென்ற நிலை வரும்போது, பால் பண்ணைக்குக் கூடுதல் கட்டடம் தேவை இருப்பின், பரிசீலனை செய்து மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று காரைக்குடி பால் பண்ணைக்குக் கூடுதலாகக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏடு தந்து, எழுத்து தந்து, எழுதுகோல் முதல் எண்ணற்றவை தந்து, ஆடை தந்து, அட்லஸ் தந்து, ஆண்டு முழுவதும் உணவு தந்து, பாடம் தந்து, படிப்பு தந்து, மிதியடி முதல் மிதிவண்டி வரை அனைத்தும் தந்து, கல்வி தந்து, அம்மாவின் கனிவைத் தந்து, காலம் போற்றும் மாற்றம் தந்து, புரட்சிக்குப் புது வடிவம் தந்த தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டு ஆண்டுகள் தேர்வில் மாணவர்களின் வெற்றியோ 88 சதவிகிதம், இரண்டு ஆண்டு கால ஆட்சியில் அம்மாவின் வெற்றியோ 100 சதவிகிதம், பள்ளிக் கணக்கில் 2,352 மாணவர்கள் 100 சதவிகிதம், அரசியல் கணக்கில் அம்மா ஒருவரே 100 சதவிகிதம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடியில், மாண்புமிகு முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் 1986 ஆம் ஆண்டு இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டத்தை உள்ளடக்கிய பால் நிறுவனம், பால் பண்ணை துவங்கப்பட்டன. அங்கே துவங்கப்பட்டு, இன்றைக்கு நல்ல நிலைமையிலே 43,000 லிட்டர் பால் உற்பத்தி செய்யக்கூடிய சூழ்நிலையில், 27 ஆயிரம் லிட்டர் உள்ளூரிலே, காரைக்குடி நகரத்திலே விற்பனையும் செய்யப்படுகிறது. அந்தப் பால் நிறுவனம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் பொதுவாகக் கட்டப்பட்ட கட்டடத்தில், இயங்கி வருகிறது. அங்கு இடம் பற்றாக்குறையாக இருந்து வருகிறது. இப்பொழுது, நிருவாகப் பிரிவிற்கும், பொது மேலாளர், தலைவர், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உயரதிகாரிகள் அறைகள், கூட்ட அறைகள் மற்றும் பால் உபயோகப் பொருட்கள் வைப்பதற்கும், வாகன நிறுத்துமிடம் போன்றவை இல்லாமல் இருக்கின்றன. ஆகவே, இங்கே, புதிதாகக் கூடுதல் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி, காரைக்குடி ஒன்றியத்தில், பால் கொள்முதல் அதிகரிக்கும் நிலையிலும், அதேபோன்று, அங்கே புதிய கட்டடம் தேவை இருப்பின் பரிசீலனை செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

முற்பகல் 10—40

திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடி ஆவின் நிறுவனத்திற்கு துணைப் பதிவாளர்

2013 மே 10]

அலுவலகம், மானாமதுரையில் இயங்கி வருகிறது. இதை காரைக்குடி ஆவின் நிறுவனத்துடன் இணைத்தால் அது நிருவாகத்திற்கு ஒத்துழைப்பாக இருக்கும். ஆகவே, இதையும் இணைக்கக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் நல்ல நிலைமையிலே செஞ்சி பகுதியில் இயங்கிவந்த ஆவின் பால் நிறுவன கட்டடம் இப்பொழுது இடிந்த நிலையில் மூடப்பட்டிருக்கிறது. ஆவின் நிறுவனத்திற்கு 50 சென்ட் இடமும் இருக்கிறது. அங்கே புதிய கட்டடத்தைத் தந்து, மீண்டும் அந்த பால் உற்பத்தி நிலையம் துவங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற D.R. Office மானாமதுரையில் ஆரம்பம் முதலே செயல்பட்டு வருகிறது. இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை ஆகிய இரண்டு மாவட்டங்களையும் சேர்த்து ஒரே D.R. Office என்பதால் இரண்டு மாவட்டங்களுக்கும் நடுவில் மானாமதுரையில் செயல்பட்டு வருகிறது. சிவகங்கை மாவட்டம் தனியாக உருவான பின்னர், ஆட்சியர் அலுவலக வளாகத்திற்கு D.R. Office மாற்றம் செய்ய கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளன. மேலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் ஒவ்வொரு மாவட்டத்திலும் தனியாக D.R. Office அமைக்க வேண்டும் என்ற அடிப்படையில், தற்போது திருப்பூர் மாவட்டத்திற்குத் தனியாக ஒரு D.R. Office அமைக்க ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், D.R. Office அமைப்பது குறித்து பரிசீலனை செய்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவினைப் பெற்று அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

ஏற்கெனவே இயங்கி வந்த அந்தப் பால் விற்பனைச் சங்கம், காரைக்குடி ஆவின் நிறுவனத்துடன் சேர்க்கப்பட்டு, அந்தச் சங்கத்தில் பணியாற்றிய பணியாளர்கள் அனைவரும் காரைக்குடி

[2013 மே 10

ஆவின் நிறுவனத்தில் பணியாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அந்தக் கட்டடம் ஆரம்ப காலத்தில் வாடகைக்கு விடப்பட்டு, தற்போது அங்கே நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இந்த இடத்திற்கு அருகில் ஏற்கெனவே ஒரு ஆவின் பாலகம் இருப்பதால், அந்தக் கட்டடத்தில் ஆவின் பாலகம் அமைக்கத் தேவையில்லை. மேலும் அந்தக் கட்டடத்திற்கு அருகில் கால்வாய் ஓடுவதால் கட்டடத்தைப் புதுப்பித்து பயன்படுத்த முடியாமல் உள்ளது. ஆகையால் அந்தக் கட்டடம் தேவையிருப்பின் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 462, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

462—

தூர் வாருதல்

***19605—திரு. ஏ. லாசர்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைகை அணையைத் தூர் வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வைகை அணையைத் தூர் வார அரசு முன்வருமா என்ற கேள்வியை இங்கே எழுப்பியுள்ளார்கள். தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், வைகை அணையைத் தூர் வாருவதற்கு விருப்ப வெளிப்பாடு, அதாவது Expression of Interest 11 நிறுவனங்களிடமிருந்து 26–9–2012 அன்று பெறப்பட்டது. 7–12–2012 அன்று முதன்மை தலைமைப் பொறியாளர், (நீர்வள ஆதாரத் துறை) அவர்களின் தலைமையில் நடைபெற்ற தொழில்நுட்பக் குழுவின் அறிவுரைப்படி, வைகை அணை நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மணல் படிமானங்கள் பற்றிய ஆய்வுகள்

மேற்கொள்ள உரிய மட்ட அளவுகள் நீர்பரப்பு மேலாண்மைப் பொறியாளர்களால் எடுக்கப்பட்டு வருகின்றன. பல்வேறு வழிகளில், பல்வேறு நிறுவனங்களிடம் அங்கே எந்தெந்த பணிகளைச் செய்ய வேண்டும் என்ற ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தொழில்நுட்பக் குழுவின் முடிவின்படி தமிழகத்தினுடைய ஈடு இணையில்லா மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.*

திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை அணையினுடைய நீர் ஆதாரத்தை விவசாயத்திற்காகவும், குடிநீருக்காகவும் 5 மாவட்டங்கள் சார்ந்து இருக்கின்றன என்பது நாம் அனைவரும் அறிந்ததே. அந்த அணை கட்டப்பட்டு ஏறத்தாழ 55 ஆண்டுகள் ஆகின்றன. 7,000 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட அந்த அணையில் இப்பொழுது 6,000 மில்லியன் கன அடி அளவுக்குத்தான் தண்ணீர் தேங்குகிறது. ஆயிரம் மில்லியன் கன அடி நீர் தேக்க முடியாத அளவுக்கு 20 அடி உயரத்திற்கு மணலும், சகதியும் நிரம்பியிருக்கின்றன. அணை கட்டப்பட்டு 55 ஆண்டுகள் ஆகிவிட்டன. எனவே, இந்த 2 இலட்சத்து 40 ஆயிரம் ஏக்கர் அளவுக்கு பாசன வசதி கொண்ட, அதேபோல் 5 மாவட்டத்திற்குக் குடிநீர் ஆதாரங்களைத் தரக்கூடிய இந்த அணை என்பது ஆயிரம் மில்லியன் கன அடி குறைந்து இருப்பதனால் 40 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கான பாசனமும் இந்தக் காலத்தில் குறைந்திருக்கிறது. இவற்றைக் கணக்கில் எடுத்துக் கொண்டுதான்*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. ஏ. லாசர்: *5 மாவட்டங்களுடைய ஆதாரமான மிகப் பெரிய இந்த அணையில் 20 அடி தேங்கி இருக்கக்கூடிய இந்த மணலையும், சகதியையும் அப்புறப்படுத்தினால் குடிநீருக்கும், விவசாயத்திற்கும் பயன்பட்டு அந்த 5 மாவட்ட விவசாயிகளுடைய வயிற்றில் பால் வார்த்ததாக மாறும். எனவே, அந்த மணலை அகற்றி, விலைக்கு விற்றாலே செலவுகளை ஈடுகட்டி விடலாம் என்று பொறியாளர்கள் சொல்கிறார்கள். அதையும் கணக்கில் எடுத்துக் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய*

நடவடிக்கையை காலத்தில் எடுத்தால், அந்த 5 மாவட்டத்து மக்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை அணையானது தென் மாவட்ட மக்களின் வாழ்வாதாரமாக விளங்குகின்ற ஒரே காரணத்தினால்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த ஆய்வுப் பணிகளை முதலில் வைகை அணையில் துவக்க வேண்டுமென்று சொல்லி அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) விரைவிலே தென் மாவட்ட மக்களின் வயிற்றிலே மட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் திரு ஏ. லாசர் அவர்களுடைய வயிற்றிலும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பால் வார்ப்பார்கள் என்ற உறுதியை இங்கே கூறிக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

திரு. ஏ. லாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு ஒரு துணைக் கேள்வியைக் கேட்க விரும்புகின்றேன்.

இதேபோல், என்னுடைய தொகுதியிலே சோத்துப்பாறை அணை, மஞ்சளாறு அணை என்று இரண்டு அணைகள் இருக்கின்றன. இவையும் தூர் வாரப்படாமல் இருக்கின்றன. சோத்துப்பாறை அணையை தூர் வாருவதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவாகும் என்ற தகவலை பொறியாளர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அனுப்பி வைத்திருக்கின்றார்கள். மஞ்சளாறு அணையும் அதே நிலையில் இருப்பதனால், இவை இரண்டையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தூர் வார முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

2013 மே 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து அணைகளிலும் அந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும், படிப்படியாக முன்னுரிமை கொடுத்து, எந்தெந்த அணைகளுக்கெல்லாம் முன்னுரிமை கொடுக்க வேண்டுமோ அதற்கெல்லாம் கொடுத்து, அந்தப் பணிகளை துவக்க வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி விரைவிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்தர்களின் கோரிக்கையைக் கேட்காமலேயே தெரிந்து, அதைக் கொடுக்கும் சக்தி கடவுளுக்கு மட்டும்தான் உண்டு. அவ்வாறு கேட்காமலேயே தொண்டாமுத்தூர் தொகுதிக்கு பவானி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு 114.25 கோடி ரூபாய் செலவில் 7 பேரூராட்சிகள், 7 ஊராட்சிகள் பயன்படும் குடிநீர்த் திட்டத்தை அறிவித்த, ஏழரை கோடி தமிழ் மக்களின் உரிமைக் குரல், வருங்கால பாரதம், காக்கும் கடவுள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில், கோவை மாவட்டம் மற்றும் தொண்டாமுத்தூர் தொகுதி மக்களின் சார்பாக, நன்றி மலர்களைச் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.*

தொண்டாமுத்தூர் தொகுதிக்கு உட்பட்ட குறிச்சிக்குளம், செங்குளம், பேரூர்குளம், வேடப்பட்டிக்குளம் ஆகிய குளங்களுக்கு நீர் வரும் வாய்க்கால்களைத் தூர் வாரியும், குறிப்பாக குறிச்சிக்குளத்தைத் தூர் வாரிக் கொடுத்தால் நல்லது. மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலில், கோவை மாநகராட்சி, கரைமீது மக்கள் நடைப் பயிற்சி செய்ய walking track *அமைத்து படகுத் துறை அமைக்கத் தயாராக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தூர் வார ஆவன செய்வார்களா என்பதைக் கேட்டு அமர்கின்றேன்.*

[2013 மே 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அங்கே தூர் வாருவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவிலே அவருடைய கோரிக்கை நிறைவேறும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 463, மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

463—

கால்நடை மருத்துவமனை

*__5080__—**திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர் தொகுதி, தாமோதரஹள்ளி ஊராட்சி, சாதிநாயக்கன்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் தொகுதி, தாமோதரஹள்ளி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சாதிநாயக்கன்பட்டி கிராமத்திலும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் கால்நடைகளின் அலகு ஏறக்குறைய 3,000–க்கு மேல் இருப்பதால் அங்கே ஒரு கிளை நிலையம் அமைக்க சாத்தியக் கூறு உள்ளது. எனவே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று அங்கே ஒரு கிளை நிலையம் அமைக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

2013 மே 10]

திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். அவர்தம் வழித் தோன்றலாய் ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்று வாழ்ந்து காட்டிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் புகழ் காத்து, பொற்கால ஆட்சி நடத்திவரும் பொன்மனத் தாய், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்க மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு எடுத்துவருகின்ற அதீத முயற்சியால் தமிழக மக்கள் எவரும் இடம்பெயர்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும், அப்பகுதி மக்களையும் பார்வையிட வந்த மத்திய அரசின் நிபுணர் குழுவின் தலைவர் திரு. பர்வேஷ் சர்மா மற்றும் குழுவினர் பாராட்டிச் சென்றுள்ளனர்.

முற்பகல் 10–50

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புகழ்மிக்க ஆட்சிக்கு மத்திய நிபுணர் குழு ஆய்வு செய்த பின்னர் பாராட்டு தெரிவித்துள்ளார்கள். தமிழ்நாட்டையும், தமிழ்நாட்டு மக்களையும் பாதுகாக்க தாயாக நானிருக்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்கின்ற முதல்வரைப் பெற்றிருக்கின்ற அற்புத மக்களாகிய நாங்கள் கடவுளின் வரமாய் கிடைக்கப்பெற்றிருக்கின்ற எங்கள் அன்புத் தாய், தாங்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்ற இந்நாளில், எங்கள் பிறவிப் பயனையும் நாங்கள் சேர்த்துக்கொண்டிருக்கிறோம் என்ற பெருமையோடு வாழ்ந்து, நாங்கள் நல்ல நன்றியையும், விசுவாசத்தையும் காட்டி உயிருள்ளவரையும் மாண்புமிகு அம்மா தங்கள் பொற்பாதம் பணிந்து வாழ்வோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாற்றுத் திறனாளிக் குழந்தைகளுக்காக 32 நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள் ரூபாய் 4.5 கோடியில் செயல்படுத்தப்படும் என்பதை அறிவிப்புச் செய்து, இந்த நாட்டு மக்களுடைய மனங்களிலே, நின்று நடமாட முடியாத குழந்தைகளுக்கும் நடமாடும் மருத்துவ சிகிச்சைப் பிரிவு கிடைக்கச் செய்கின்ற அன்புத் தாயாய் தாங்கள் இருக்கிறீர்கள் என்பதை நிரூபித்துக் காட்டிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே, தங்களுக்கு எங்கள்

உயிருள்ளவரையிலும் நன்றி கலந்த விசுவாசத்தை நாங்கள் தெரிவித்துக்கொண்டிருப்போம். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது பர்கூர் சட்டமன்றத் தொகுதி, தாமோதரஹள்ளி ஊராட்சியில், சாதிநாயக்கன்பட்டி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர அரசு ஆவன செய்யும் என அறிவித்திருக்கின்ற மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கும், நாங்கள் வாழ்த்தி வணங்குகின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் எனது தொகுதிக்குக் கிடைக்கப்பெற்றிருக்கின்ற இந்தக் கால்நடை மருத்துவமனைக்கு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, எனது தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகரில் நீண்ட நாட்களாக சிறப்பாகச் செயல்பட்டுவந்த கூட்டுறவு கால்நடைத் தீவன உற்பத்தி நிலையம் தற்போது சில நாட்களாக மூடிக் கிடக்கிறது. அரசின் விலையில்லா ஆடு, மாடு வழங்கும் திட்டத்தால் தற்போது கால்நடைத் தீவனங்களுக்கு நல்ல தேவை உள்ளது. எனவே, அரசு இந்தக் கால்நடை தீவன உற்பத்தி நிலையத்தை மீண்டும் செயல்படுத்துமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைத் தீவன உற்பத்தி சம்பந்தமாக நிறைய விவரங்கள் சொல்லவேண்டியிருப்பதால், உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 464, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

2013 மே 10]

464—

சிப்காட் தொழில் வளாகம்

***17847—திரு. ஆர்.பி. உதயகுமார்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தூர் தொகுதியில் புதிய சிப்காட் தொழில் வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கேட்டாலும் கிடைக்காது கடந்தகால ஆட்சியில். ஆனால், கேட்காமலேயே கொடுப்பவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதற்கிணங்க (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 7–5–2013 அன்று விதி 110–ன்கீழ் அறிவித்த வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பில், தென் மாவட்டங்களில் ஒன்றான விருதுநகர் பகுதியில் 3,400 ஏக்கர் பரப்பளவில் சிப்காட் வளாகம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். அந்த அறிவிப்பிற்கிணங்க அந்தப் பகுதியிலே சிப்காட் வளாகம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.*

திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் தாய்த் தமிழ்நாட்டின் தலைவிதியை பொன் எழுத்துக்களால் வடித்து எழுதும் வகையில், சட்டப் பேரவை விதி 110–ன்கீழ் ஒவ்வொரு நாளும் நம் தெய்வீகத் திருமகள் அம்மா அவர்கள் வாரி, வாரி வழங்கி வருகின்ற முத்து, முத்தான மக்கள் நலன் காக்கும் அறிவிப்புகளில் அயல்நாடுகளுக்கு இணையாக இந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடும்வகையிலும், இத்திருநாட்டில் இதுவரை பிறந்தவர்களுக்கு மட்டுமல்லாமல், இனி பிறக்கப்போகின்றவர்களுக்கும் சேர்த்தே வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்ற வகையிலும், வல்லரசு நாடுகளுக்கு இணையாக நம் நாட்டுப் பொருளாதார வளர்ச்சியை ஊக்கப்படுத்திடும்வகையிலும், இதுவரை வரலாறு கண்டிராத*

தொழிற்புரட்சிக்கு வித்திடும்வகையிலும், 9 தென் மாவட்டங்களில் 20,250 ஏக்கர்களில் அமைக்கப்படுகின்ற தொழிற்பூங்காக்களைப் போல, விருதுநகர் மாவட்டத்திலும் (மேசையைத் தட்டும் ஒலி), பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதுடன், உணவுப் பதப்படுத்துதல், பொறியியல் மற்றும் அச்சுத் தொழிற்கூடங்கள் ஆகியவை இடம்பெறும்வகையில் ஒரு தொழிற்பூங்காவை 3,400 ஏக்கரில் உருவாக்கித் தருவதோடு மட்டுமல்லாமல், தொழில் தொடங்குவோருக்கு மானிய விலையில் நிலமும், மூலதன மானிய உயர்வும், மதிப்புக் கூட்டு வரியிலே சலுகையும் தந்து, ஒட்டுமொத்த இளைய சமுதாயத்தின் வாழ்விலே நம்பிக்கை ஒளி ஏற்றிவைத்திட்ட இந்தியத் திருநாட்டின் பொருளாதார ஞானி, வாழும் மனித தெய்வம் மாண்புமிகு அம்மா, (மேசையைத் தட்டும் ஒலி) தங்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்கி, இளைய சமுதாயத்தினரின் சார்பிலே கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி அமைகின்றேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர் அவர்கள்.

திரு. சி.எச். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கும்மிடிப்பூண்டி தொகுதியின் அருகிலுள்ள, ஆந்திர மாநிலத்தின் தடா என்ற பகுதியில் Sri City என்றும் SEZ அமைந்துள்ளது. பல நல்ல தொழிற்சாலைகள், அதாவது non-polluting industries அங்கே சென்றுவிடுவதால் கும்மிடிப்பூண்டி பகுதியில் Special Economic Zone என்னும் SEZ அமைக்க அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டத்தில் ஏற்கெனவே இரண்டு சிப்காட் வளாகங்கள் இருக்கின்றன. அங்கு மாண்புமிகு உறுப்பினர் SEZ அமைக்க வேண்டும் என்று கேட்கிறார். SEZ–ஐப் பொறுத்தவரையில் மத்திய அரசு minimum alternate tax கொண்டு வந்த காரணத்தினால் புதிய தொழில் முனைவோர் வருவதில்

2013 மே 10]

சிறிது காலதாமதம் ஆகிக் கொண்டிருக்கின்றது. அதைத்தான் அன்றையதினம் காங்கிரஸ் உறுப்பினர் கேட்டபோதுகூட நான் சொன்னேன். அந்தவகையிலே ஆந்திராவிற்குச் சென்றாலும் அது பொருந்தும் என்ற காரணத்தினாலே SEZ துவங்குகிறவர்கள் யாரும் ஆந்திராவிற்குச் செல்வதில்லை. அங்கு விலை குறைவாகக் கொடுக்கின்ற காரணத்தினால், ஏக்கர் ஒரு ரூபாய்க்குக் கொடுக்கின்ற காரணத்தினால் செல்கின்றார்களேயொழிய, ஏதோ தமிழகத்தில் அந்த SEZ துவங்காமல் ஆந்திராவிற்குச் செல்கிறார்கள் என்று சொல்வது தவறான கருத்து.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் SEZ-ஐப் பொறுத்தவரையில் தமிழகத்தில் 9 SEZ-கள் இயங்கி வருகின்றன. இன்னும் இடம் இருக்கிறது. இன்னும் யாரையாவது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அணுகினால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இடம் கொடுத்து, அந்த SEZ அமைப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 465, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் அவர்கள்.

465—

கூட்டுறவு நூற்பாலை

***7364—திரு. எம். ஆறுமுகம்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகளை நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்திலுள்ள 5 கூட்டுறவு நூற்பாலைகளை நவீனப்படுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூபாய் 104.41 கோடியையும், இராமநாதபுரம்

கூட்டுறவு நூற்பாலையை நவீனப்படுத்திட ரூ.18 கோடியே 43 இலட்சத்தையும் வழங்கியுள்ளார்கள். அரசாணை கிடைக்கப் பெற்றவுடன் டெண்டர் கமிட்டிக்கு அரசு பரிந்துரைத்துள்ளது. நிதி கிடைத்தவுடன் விரைவில் வேலைகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தம் கூட்டுறவு நூற்பாலைகள் 18 இயங்கி வந்தன. தற்போது 5 ஆலைகள் மட்டுமே இயங்கிக் கொண்டிருக்கின்றன. புதுக்கோட்டை–அறந்தாங்கி கூட்டுறவு நூற்பாலை, எட்டயபுரம் பாரதி கூட்டுறவு நூற்பாலை, தேனி அண்ணா கூட்டுறவு நூற்பாலை, ஊத்தங்கரை கூட்டுறவு நூற்பாலை, கன்னியாகுமரி ஸ்பின்னிங் மில்ஸ் ஆகிய ஆலைகளை நவீனப்படுத்தியும், நடைமுறை மூலதனத்திற்கான பணத்தை ஒதுக்கியும் செயல்படுத்த அரசு முன்வருமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 104 கோடி ரூபாயை நவீனப்படுத்துவதற்காக ஒதுக்கியிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், பணம் ஒதுக்குவதோடு மட்டுமல்லாமல், working capital கொடுத்தால் மட்டுமே அந்த ஆலைகள் தொடர்ச்சியாக இயங்குவதற்கான வாய்ப்பு இருக்கும். எனவே, அவற்றையும் கொடுத்து நல்ல முறையில் நவீனப்படுத்தி இயக்குவதற்கான முறையில் அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இயங்கி வருகின்ற 5 கூட்டுறவு நூற்பாலைகள் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில்தான், இன்றையதினம் ரூ.4 கோடியே 72 இலட்சம் இலாபத்தில் இயங்குகின்றன என்பதை இங்கே பெருமையோடு நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2013 மே 10]

கூட்டுறவு நூற்பாலைகள் ஆரம்பித்த காலத்திலிருந்து ஒவ்வொரு வருடமாக நஷ்டம் ஏற்பட்டு 13 கூட்டுறவு நூற்பாலைகள் கிட்டத்தட்ட 486 கோடி ரூபாய்க்கு நஷ்டம் ஏற்பட்டு மூடப்பட்டன. தற்போது இயங்கி வருகின்ற 5 கூட்டுறவு நூற்பாலைகளும் ரூ.130 கோடி cumulative loss - தொடர் நஷ்டம் ஏற்பட்டு, இன்றையதினம் ரூபாய் 130 கோடி நஷ்டமாக உருவாகிக்கொண்டிருக்கின்றது. கடந்த காலங்களில் சரியாக மில்களைப் பராமரிக்காததன் காரணமாக இதுபோன்ற நஷ்டங்கள் ஏற்பட்டன. இன்றையதினம் மில்களுக்குக் குறைந்த சம்பளத்திற்கு ஆட்கள் வராததன் காரணமாக தனியார் மில்கள் போட்டி போட்டு வாகனத்தைக் கொண்டு சென்று, அவர்களை அழைத்துச் செல்கின்ற நிலைமையை அறிந்து, இன்றையதினம் தமிழகத்திலுள்ள 5 கூட்டுறவு நூற்பாலைகளும் வேன்கள்மூலம் மில்கள் தொடர்ச்சியாக இயங்குவதற்கு வேலைகளுக்காக ஆட்களைக் அழைத்துக்கொண்டு வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய 31 ஆண்டுக்கால அரசியல் வாழ்க்கையில் தொடர்ந்து 22 ஆண்டுகள் போராடி, காவேரிப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைப் பெற்றுத் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றையதினம் தமிழகத்திலுள்ள 5 கூட்டுறவு நூற்பாலைகளும் கடந்த 22 வருடங்களாக நஷ்டத்தில்தான் இயங்கி வந்தன. இந்த ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய எண்ணங்களைச் செயல்படுத்தியதன் காரணமாக, நஷ்டத்தில் 22 ஆண்டுகளாக இயங்கி வந்த அந்தக் கூட்டுறவு நூற்பாலைகள் 4 கோடியே 72 இலட்சம் ரூபாய் இந்த ஆண்டு இலாபத்தை ஈட்டியிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நடைமுறை மூலதனம் வேண்டுமென்று கோரினார்கள். நடைமுறை மூலதனம் கொடுத்தால் மட்டும் இலாபத்தில் இயங்க வைக்க முடியாது. ஒவ்வொரு கூட்டுறவு நூற்பாலையும் தன்னுடைய உற்பத்தித் திறனை, அனைத்து மெஷின்களையும்

பயன்படுத்தி, 3 ஷிப்டுகளிலும் நிரந்தரமாக அங்கே வேலையாட்களை ஏற்பாடு செய்து, கட்டாயம் நவீனப்படுத்த கோரப்பட்டு, கிட்டத்தட்ட 30 ஆண்டு காலமாக நவீனப்படுத்தாத அந்த பழைய மில்களை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றையதினம் நவீனப்படுத்துவதற்காக இந்த நிதியை ஒதுக்கியிருக்கின்றார்கள். இனிமேல் வரக்கூடிய ஆண்டுகளில், இந்தக் கூட்டுறவு நூற்பாலைகள் குவிந்த நஷ்டங்களையெல்லாம் ஈடு செய்து, இலாபத்தை ஈட்டித் தரும். அதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18 கூட்டுறவு நூற்பாலைகளில், 5 கூட்டுறவு நூற்பாலைகளை நவீனப்படுத்தி இயக்குவதற்கான முறையில் அமைச்சர் அவர்கள் அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றார்கள். நன்றி. மீதம் இருக்கக்கூடிய 12 நூற்பாலைகளில், இந்த நூற்பாலைகள் இயங்கிக் கொண்டிருந்த இடங்களை விற்று, 12 நூற்பாலைகளில் ஏதாவது சில நூற்பாலைகளை இயக்குவதற்கான சாத்தியக் கூறுகள் உண்டா? அப்படி சாத்தியக் கூறுகள் இருக்குமேயானால் அந்த நூற்பாலைகளை இயக்க வேண்டும் என்பதோடு, இவ்வாலைகளை இயக்குவதற்கு தகுதியானவர்களைக் கண்டறிந்து, நவீனப்படுத்தி இயக்க நடவடிக்கை எடுக்குமா? ஸ்ரீவில்லிபுத்தூர், அச்சங்குளம் கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு இதுவரை gratuity, வருங்கால வைப்பு நிதி கொடுக்காமல் இருந்து வருகிறார்கள். எனவே, அதையும் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூடப்பட்டுள்ள 13 கூட்டுறவு நூற்பாலைகள், மொத்தமாக ரூ. 486 கோடி நஷ்டத்தில் இயங்கி

மூடுவிழா கண்டிருக்கின்றன. ஆனால், இந்த 13 மில்களையும் மீண்டும் இயக்குவதற்காக, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு உயர்மட்டக் குழுவை தலைமைச் செயலாளர் தலைமையில் அமைத்திருக்கின்றார்கள். அந்த உயர்மட்டக் குழு 3 முறை கூடி ஆய்வு செய்திருக்கின்றது. எந்தெந்த மில்களெல்லாம் மீண்டும் இயக்கப்படலாம் என்பதை அவர்கள் ஆராய்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அறிக்கை சமர்பிக்கவிருக்கிறார்கள். ஆகவே, அந்த அறிக்கையைப் பெற்றவுடன், வருங்காலத்தில் எந்தெந்த மில்களையெல்லாம் இயக்குவதற்கு சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் இயக்குவதற்கு சிறப்பான முறையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இங்கே தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 466, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

466—

பேருந்து வசதி

***7257—திரு. க. தினகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூர் ஒன்றியம், வாகராயாம்பாளையம்–கருமத்தம்பட்டி வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கும்பிட்ட கரம் விலகும் முன் வரம் தரும் அன்னை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவிற்கிணங்க (மேசையைத் தட்டும் ஒலி) 10–3–2013 முதல் சூலூர் தொகுதி, சூலூர்–அன்னூர் வழித்தடத்தில் 8 நடைகளும், வாகராயாம்பாளையம்–கருமத்தம்பட்டி–சோமனூர் வழித்தடத்தில் 5 நடைகளும் பேருந்துகள் இயக்கப்பட்டு

வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.*

திரு. க. தினகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, அந்தப் பகுதியிலே கடந்த மாதம் முதல் இந்த ஆட்சியிலே,* 12 B *புதிய வழித்தடத்திலே பேருந்து இயக்கப்பட்டிருக்கின்றது. அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அன்னூரிலிருந்து வாகராயாம்பாளையம் வழியாக சூலூருக்கு இரண்டு முறைதான் பேருந்து வருகின்றது. மேலும் அன்னூரிலிருந்து சோமனூர், கருமத்தம்பட்டி வழியாக இரண்டு முறைதான் பேருந்து வருகின்றது. அது போதவில்லை என்பது மக்களுடைய கோரிக்கை. அதை உடனடியாகப் பரிசீலனை செய்து, புதிதாக இன்னொரு பேருந்து இயக்கப்பட வேண்டும். இல்லையெனில் இதையாவது சூலூருக்கு 4 முறையும், அன்னூருக்கு 4 முறையும் இயக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூலூர் தொகுதியில் மக்களுடைய நலன் கருதி கூடுதலான பேருந்து வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, சூலூர் தொகுதியில் மட்டும் 6 புதிய வழித்தடங்களில் பேருந்துகளை இயக்கிய வரலாறு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11–05

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற வழித்தடங்களில் பயணிகளுடைய எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது. அதற்குண்டான பேருந்துகள் தற்போது இயக்கப்பட்டு

2013 மே 10]

வருகின்றன. பயணிகளுடைய எண்ணிக்கை அதிகரிக்கின்றபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவைப்பெற்று கூடுதல் நடைகள், கூடுதல் பேருந்துகள் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.

திரு. க. தினகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொள்ளாச்சியிலிருந்து 48B, சுல்தான்பேட்டைக்கு உட்பட்டது, ஐயம்பாளையம் வரை வந்து செல்கிறது. இதனை கம்மாளப்பட்டி வழியாக ஜல்லிப்பட்டி ஊராட்சிக்குத் திரும்பிச் செல்லும்போது ஜல்லிப்பட்டி, கம்மாளப்பட்டி பகுதி மக்கள் பொள்ளாச்சிக்குச் சென்றுவர முடியும். மேலும் தடம் எண் 77, கோவையிலிருந்து சூலூர் ஒன்றியம்—இடையர்பாளையம் வரை வந்து செல்கிறது. அதனை போகம்பட்டி பஞ்சாயத்து–பொண்ணாக்கண்ணி வரை வந்து, திரும்பிச் செல்லும்போது அங்கு படிக்கின்ற மாணவ, மாணவிகள் நடந்து போகக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதனைக் கருத்தில்கொண்டு, தொகுதி முழுவதும் இருக்கின்ற பள்ளி மாணவ, மாணவிகள் காலையிலும், மாலையிலும் சென்று வருகின்ற வகையில் அதுகுறித்து ஆய்வு செய்து அனைத்து இடங்களிலும் அந்தப் பேருந்தைச் சீரமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சிறிது நேரத்திற்கு முன்பு, ஒரு துணைக் கேள்வியை நான் கேட்டபோது, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள், சுல்தான்பேட்டை ஒன்றியத்தில் செலக்கரச்சல் பஞ்சாயத்தில் பச்சநாயக்கன்பாளையத்தில் 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி பழுதடைந்துள்ளது என்பதைக் கூறியபோது, அதனை அப்புறப்படுத்திவிட்டு அப்பகுதியில் புதிதாக நீர்த்தேக்கத்தொட்டி கட்டித் தரப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

[2013 மே 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' என்ற இலட்சிய நோக்கத்தோடு பொற்கால ஆட்சி நடத்தி வருகின்ற மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் இருக்கின்ற அனைத்துத் தரப்பு மக்களும், அனைத்துப் பகுதி மக்களும், சீரான பேருந்து வசதிகளைப் பெற வேண்டும் என்பதற்காக 6,000 புதிய பேருந்துகளை வழங்கியிருக்கிறார்கள். எந்தெந்தப் பகுதிகளுக்குப் புதிய பேருந்துகள் இயக்கப்பட வேண்டும் என்றும், வழித்தடம் நீட்டிப்பு செய்யப்பட வேண்டும் என்றும் துறையின் சார்பாக ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற வழித்தடங்களில் கூடுதல் நடைகள் இயக்குவதற்கும், வழித்தடங்கள் நீட்டிப்புக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 467, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

467—

திருத்தேர் சீரமைத்தல்

***20594—திரு. சு. மாதேஸ்வரன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லாநத்தம் ஊராட்சி, அருள்மிகு வரசித்தி விநாயகர், கருப்பனார், செல்லியம்மன் திருக்கோயில் தேரினைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 மே 10]

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) கல்லாநத்தம் ஊராட்சி, அருள்மிகு வரசித்தி விநாயகர், கருப்பனார், செல்லியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின் கீழுள்ள பட்டியலில் சேராத திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்குச் சொந்தமாக பழுதடைந்த நிலையில் மரத்தேர் ஒன்று உள்ளது. இதனைச் சீரமைக்க ரூ.15 இலட்சம் வரை செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டுத் தொகையில் ரூ.10 இலட்சத்தை துறையின் பங்களிப்பாகவும், மீதமுள்ள ரூ.5 இலட்சத்தை பொது மக்களின் பங்களிப்பாகவும் பெற்று திருத்தேர் திருப்பணி செய்திட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.*

திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அறிவை வளர்த்திட வேண்டும் மக்கள் அத்தனைப் பேருக்கும் எண் ஒன்றாய்', என்ற உயரிய நோக்கத்தோடு இன்று கல்வித் துறையிலே மகத்தான புரட்சியைச் செய்துகொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் மாட்சிமை பொருந்திய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மலர்ப் பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

எனது தொகுதிக்குட்பட்ட கல்லாநத்தம் ஊராட்சியில் அருள்மிகு வரசித்தி விநாயகர், கருப்பனார், செல்லியம்மன் திருக்கோயில் தேரானது மிகவும் பழமை வாய்ந்தது. அதுமட்டுமல்லாமல், 3 ஊராட்சிகளில் உள்ள மக்கள் சமூகப் பிரிவினையை ஒன்று சேர்க்கக்கூடிய திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. ஆகவே, மாட்சிமை பொருந்திய மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இத்திருத்தேரினைப் பழுதுநீக்கித் தருவார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியதுபோல துறையின் மூலமாக ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு, மேற்கொண்டு ரூ.5 இலட்சம் நிதியை பொது மக்களின் பங்களிப்போடு பெற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.*

திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தேர் புனரமைத்துத் தரப்படும் என்று வாக்குறுதி அளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், அத்திருக்கோயிலுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கடந்த ஆட்சிக் காலத்தில்தான் குடமுழுக்கு செய்யப்பட்டது. அதனையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார்களா என்று கேட்டு, மீண்டும் இந்த வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுடைய மலர்ப் பாதங்களைத் தொட்டு வணங்கி, தொகுதியினுடைய மக்கள் சார்பாகவும் வணங்கி, நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 468, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

468—

வீட்டுமனைப் பட்டா

***14583—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2013 மே 10]

மேலூர் தொகுதி, அழகர்கோவில் பகுதியில் வசிக்கும் நரிக்குறவர் இன மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன்.

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், கிடாரிப்பட்டு கிராமத்தில் சர்வே எண் 676/5, 677/2 மற்றும் 677/5–ல் உள்ள புலங்களில் நரிக்குறவர் இன மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்கின்றபோது மேற்படி நபர்கள் இப்புலங்களில் வீட்டுமனைப் பட்டா பெற விருப்பம் இல்லை என மறுப்பு தெரிவித்ததன் காரணத்தினாலே அவர்களுக்கு மாற்று இடம் தேர்வு செய்து விரைவில் வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதியில், கள்ளழகர் திருக்கோயில் அடிவாரத்தில் இருக்கின்ற நரிக்குறவர் இன மக்களுக்கு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே பட்டா வழங்க வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். நரிக்குறவர் சமுதாய மக்களைப் பொறுத்த அளவில், நம்மோடு இணைந்து வாழ்வதற்கு ஒரே காரணம், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும், மண்ணை விட்டு மறைந்தாலும் மக்கள் மனதை விட்டு மறையாமல் இருக்கின்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும்தான், நரிக்குறவர் சமுதாய மக்கள் மனிதர்களாக வாழ்வதற்கு ஒரு முன்னுதாரணத்தை எடுத்துக் காட்டியவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி). ஒரே ஒரு திரைப்படம் மூலமாக, ஒரே ஒரு பாடல் மூலமாக அந்தச் சமுதாயம் இன்றைக்குத்

தலைநிமிர்ந்து நிற்கக்கூடிய அளவிற்கு உருவாக்கியவர் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், கடந்த காலங்களிலெல்லாம் அடிப்படை வசதி இல்லாத காரணத்தினால், கிராமப்புறங்களில் இருக்கின்றவர்களெல்லாம் நகர்ப் பகுதியை நாடி வருவார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இன்றைக்கு நகர்ப்புறத்தில் இருக்கின்றவர்களெல்லாம் கிராமங்களில் குடியேறிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குக் காரணம், அடிப்படை வசதி. பள்ளிக் கட்டட வசதி, நல்ல தரமான ஆசிரியர் வசதி, கிராமங்களிலே ரோடு வசதி, குடிதண்ணீர் வசதி, வீடுகள், விலையில்லாத பொருட்கள் இப்படி வழங்குகின்ற காரணத்தால், நகர்ப்புறங்களில் இருக்கின்றவர்களெல்லாம் (மேசையைத் தட்டும் ஒலி) கிராமத்திற்குச் சென்றால், அதிக நன்மைகள் கிடைக்கும் என்று சொல்லக்கூடிய அளவுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே இன்றைக்குக் கிராமப்புறங்கள் வளர்ச்சி அடைந்திருக்கின்றன. அப்படிப்பட்ட வேளையில், இந்த நரிக்குறவர் சமுதாய மக்களின் உடம்பைக் கிழித்துப் பார்த்தால்கூட, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய எண்ணமும், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய எண்ணமும்தான் அவர்களுடைய இதயத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

நான்கூட வேறு இடத்திலே நிலம் பார்த்தேன். ஆனால், அவர்களைப் பொறுத்தவரையில், அழகர்கோவில் என்பது சுற்றுலாப் பயணிகள் வரக்கூடிய இடமாக இருப்பதால், அந்த இடத்திலே அவர்கள் கடைகளை வைத்து பிழைத்துக்கொண்டிருக்கிறார்கள். வேறு இடத்திலே அவர்கள் வீடு கட்டி, அங்கிருந்து பிழைக்க முடியாது. ஆகையால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, அதே அழகர்கோவில் பகுதியிலேயே, தனியார் நிலத்தைக் கையகப்படுத்தலாம் இல்லையென்றாலும், கோயிலுக்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் மலை அடிவாரத்தில் இருக்கின்றன. அந்த இடத்திலேயே அவர்களுக்குப் பட்டா கொடுத்தால்தான், அவர்கள் அங்கு குடியிருந்துகொண்டு வியாபாரத்தைச் செய்ய முடியும்.

2013 மே 10]

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே அவர்களுக்கு ரேஷன் கார்டு வழங்கப்பட்டுள்ளது. அங்கு 150 குடும்பங்கள் குடியிருக்கின்றன. 150 ரேஷன் கார்டுகள் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய திட்டமான விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி அனைத்தும் அவர்கள் வாங்கிவிட்டார்கள். அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமையும் இருக்கின்றது. அனைத்தும் அவர்களுக்கு அழகர்கோவிலில்தான் இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகையால், அந்த அழகர்கோவில் ஊராட்சிக்குட்பட்ட, அழகர்கோவில் மலை அடிவாரத்திலேயே அவர்களுக்குப் பட்டா கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நரிக்குறவர் சமுதாயத்தைப் பொறுத்தவரையிலே "குடிசையெல்லாம் வீடாகும் நேரத்திலே நாங்கள் தெருவோரம் குடியேறத் தேவையில்லே; சர்க்காரு ஏழை பக்கம் இருக்கையிலே நாங்கள் சட்ட திட்டம் மீறி இங்கு நடப்பதில்லே" (மேசையைத் தட்டும் ஒலி) என்று ஆனந்தமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் இன்றைக்கு ஆனந்தப் பாட்டு பாடிக் கொண்டிருக்கின்றார்கள். ஏனென்று சொன்னால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்ற பின்னாலேதான், இந்த இரண்டு வருட காலத்திலே 2,53,000 இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கி சாதனை படைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னாலே, மூன்றாவது ஆண்டான இந்த ஓர் ஆண்டு மட்டும், இரண்டு இலட்சம் பட்டாக்களை வழங்க வேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இலக்கு நிர்ணயித்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற மேலூர் வட்டம், கிடாரிப்பட்டு கிராமத்தைப் பொறுத்தவரையிலே அரசு புஞ்சை

தரிசு நிலம் அங்கு இருக்கின்றது; அந்த இடத்திலே பட்டா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால், அந்த இடம் அவர்களுக்கு சரியான இடமாக அமையாத காரணத்தாலே, அவர்கள் ஏற்க மறுத்துவிட்டார்கள். ஆகவே, அழகர்கோவில் பகுதியிலே வசிக்கிற நரிக்குறவர் இன மக்களுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, உடனடியாக மாற்று இடம் தெரிவு செய்யப்பட்டு, இந்த ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டு இலட்சம் பட்டாக்கள் வழங்குவதற்கு இலக்கு நிர்ணயித்திருக்கின்ற அடிப்படையிலே அந்த இடத்திலே வருவாய்த் துறையின் மூலமாகப் பட்டா கொடுப்பதற்கான நடவடிக்கையை விரைந்து எடுத்து, அந்தப் பகுதிவாழ் நரிக்குறவர் இன மக்களுக்கு உடனடியாக பட்டா வழங்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.*

திரு. ஆர். சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நரிக்குறவர் இன மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்ற எனது கோரிக்கையை, உடனடியாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று, இந்த ஆண்டு பட்டா வழங்கப்படும் என்று அறிவிக்கச் செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், அறிவிப்புச் செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்

(அ) போக்குவரத்துக் கழக கட்டமைப்பு மற்றும் சேவை மேம்பாடு, வட்டாரப் போக்குவரத்து அலுவலக விரிவாக்கம் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி எண் 110—ன்கீழ் 4 அறிக்கைகளை அளிப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். மேலும், அமர்ந்து கொண்டு அறிக்கைகள் அளிப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகம் ஒரு குடும்பம் என்னும் தத்துவத்தை அடைய உறுதுணையாக இருக்கும் போக்குவரத்துச் சேவையினையும், போக்குவரத்துச் சேவையினைச் செவ்வனே புரிந்துவரும் போக்குவரத்துத் தொழிலாளர்களின் மேம்பாட்டினையும் உயர்த்தும் உன்னதமான திட்டங்களை எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.*

மாநிலத்திலுள்ள போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் பேருந்துகள் சேவை எவ்வித தொய்வும் இன்றி வழங்கிட பணிமனைகள் மிகவும் அவசியமாகும். பணிமனைகள் அதிக அளவில் இருப்பது பேருந்துகள் பழுதுபடுதலைக் குறைப்பதுடன், டீசல் செலவையும் குறைப்பதற்கு வழிவகை ஏற்படுத்தும். கடந்த இரண்டு ஆண்டுகளில் முன் எப்போதும் இல்லாதவகையில், 43 பணிமனைகள் அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) பல சட்டமன்ற உறுப்பினர்களும் இந்த மாமன்றத்தில் பல இடங்களில் பணிமனைகள் அமைக்க வேண்டும் எனக் கோரியுள்ளனர்.

பணிமனைகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்கும்வகையில், மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில் ஆதம்பாக்கம், குரோம்பேட்டை, பெரம்பூர், குன்றத்தூர், பெரும்பாக்கம், தையூர், கும்மிடிப்பூண்டி ஆகிய இடங்களிலும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் கோட்டத்தில் செங்கம், எலத்தூர் ஆகிய இடங்களிலும், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2013 மே 10

கழகம், சேலம் கோட்டத்தில் ஓமலூர், பள்ளப்பட்டி ஆகிய இடங்களிலும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர் கோட்டத்தில் சூலூர், மதுக்கரை, கிணத்துக்கடவு, பேரூர் ஆகிய இடங்களிலும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் கோட்டத்தில் விராலிமலை, உப்பிலியாபுரம், பிராட்டியூர், கரூர், கும்பகோணம், பாளையம் ஆகிய இடங்களிலும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், மதுரை கோட்டத்தில் காரியாப்பட்டி, ஒட்டன்சத்திரம் ஆகிய இடங்களிலும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி கோட்டத்தில் ஆலங்குளம், சாத்தான்குளம் ஆகிய இடங்களிலும் 25 பணிமனைகள் 22 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் புதியதாக அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மலைப் பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் மாநிலத்தின் பிற பகுதிகளுக்கு விரைவாக எளிதில் சென்று திரும்பும் வகையில், 35 கோடி ரூபாய் செலவில் 250 சிற்றுந்துகள், அதாவது Mini Bus Service புதியதாக அறிமுகப்படுத்தப்படும் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இடைநிற்றல் இன்றி, அனைவரும் கல்வி கற்க வேண்டும் என்ற நோக்கத்தினை நிறைவு செய்யும் வகையில், அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு திட்டங்களின் பயனாக, பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களின் எண்ணிக்கை மற்றும் கல்லூரிகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. மேலும், தொழில் துறை மற்றும் அறிவியல் துறைகளில் அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக, தொழில் துறை நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களின் எண்ணிக்கையும் ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. எனவே, இதனால் ஏற்படும் கூடுதல் போக்குவரத்துத் தேவையினை நிறைவேற்றும் வகையிலும், அவர்களுக்கு மேம்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சேவையினை வழங்கிடும் வகையிலும், தற்போது சென்னைப் பெருநகரத்தில் மகளிர் மற்றும் சிறுவர்களுக்காக இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கை 134–லிருந்து 200 ஆக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முன் பதிவு செய்யும் பயணிகளை ஊக்குவிக்கும் வகையில், குறைந்தபட்சம் 10 அல்லது அதற்கு மேற்பட்ட பயணச் சீட்டுகள் முன்பதிவு செய்யும் குழுமப் பயணிகளுக்கு பயணத் தொகையில் 10 சதவீதம் தள்ளுபடி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சலுகை தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும் வகையில் தீபாவளி மற்றும் பொங்கல் போன்ற பண்டிகைக் காலங்களில் இச்சலுகை வழங்கப்பட மாட்டாது.

போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகளில் வழக்கமாகப் பயணம் செய்யும் பயணிகளுக்கு மாநகர் அல்லது நகரப் பேருந்துகளில் தற்போது மூன்றில் ஒரு பங்கு சலுகைக் கட்டணத்துடன்கூடிய மாதாந்திர பயணச் சீட்டு வழங்கும் முறை நடைமுறையில் உள்ளது. இந்தச் சலுகை புறநகர்ப் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதுமட்டுமல்லாமல், பயணிகளின் வசதிக்காக புதுப்பிக்கப்படக்கூடிய கையடக்க பயண அட்டை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின்படி, பயணிகள் பயணிக்கும்போது அதற்குரிய கட்டணம் பயண அட்டையில் உள்ள தொகையிலிருந்து கழித்துக்கொள்ளப்படும். போக்குவரத்துக் கழக கிளை அலுவலகம் அல்லது பேருந்து நிலைய அலுவலகம் மற்றும் நடத்துநரிடம் பணத்தினைச் செலுத்தி கையடக்க அட்டையினைப் புதுப்பித்துக்கொள்ளலாம். இத்திட்டம் முதற்கட்டமாக சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் அறிமுகப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வாகனப் பெருக்கம் மற்றும் சரக அலுவலகத்திற்கும் அதன் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் அலுவலகங்களுக்கும் இடையில் உள்ள தூரம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, நிருவாகத் திறனை மேம்படுத்த வேலூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய துணை போக்குவரத்து ஆணையர் அலுவலகம் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

போக்குவரத்து வாகனத்திற்கான அனுமதிச் சீட்டு, வாகன மறு பதிவு, தடையில்லாச் சான்று, பன்னாட்டு ஓட்டுநர் உரிமம் ஆகியவற்றைப் பெற பொதுமக்கள் அதிக தூரம் பயணம் செய்வதைத் தவிர்க்கும் வகையில், சோழிங்கநல்லூர், அம்பத்தூர், வாணியம்பாடி, மயிலாடுதுறை மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய இடங்களில் உள்ள பகுதி அலுவலகங்கள், வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களாகத் தரமுயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பெருகிவரும் வாகன எண்ணிக்கை மற்றும் மக்கள்தொகை காரணமாக தற்போது இயங்கிவரும் போக்குவரத்து அலுவலகங்களில் அன்றாடப் பணிகள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. இதன் விளைவாக, பொதுமக்களுக்குத் துரித சேவை செய்திட முடியாத சூழ்நிலை உள்ளது. பொதுமக்களுக்கு விரைந்து சேவை செய்யும் நோக்கில், மீனம்பாக்கம் வட்டாரப் போக்குவரத்து அலுவலக நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ள குன்றத்தூரில், கூடுதலாக ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகமும், சேலம், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில், கூடுதலாக வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களும் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பொதுமக்கள், ஓட்டுநர் உரிமம், நடத்துநர் உரிமம் மற்றும் வாகனப் பதிவு போன்ற பல்வேறு சேவைகளை உடனுக்குடன் பெறும் வகையில், திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி, கடலூர் மாவட்டம் பண்ருட்டி, விழுப்புரம் மாவட்டம் செஞ்சி, வேலூர் மாவட்டம் ஆம்பூர், புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர், திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி, திருச்சி மாவட்டம் லால்குடி, கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம் வால்பாறை ஆகிய இடங்களில் புதிய பகுதி அலுவலகங்கள் தொடங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சாலைப் பாதுகாப்பில் வாகன ஓட்டுநரின் பங்களிப்பு இன்றியமையாதது என்பதைக் கருத்தில் கொண்டும், சாலை விபத்துகளைத் தவிர்க்கும் வண்ணமும், மொத்தமுள்ள 42 போக்குவரத்து ஓட்டுநர் தேர்வு தளங்களில், முதற்கட்டமாக 14 ஓட்டுநர் தேர்வு தளங்கள் இந்த ஆண்டு 10 கோடி ரூபாய் செலவில் கணினிமயமாக்கப்பட்ட ஓட்டுநர் தேர்வு தளங்களாக

மாற்றி அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) கணினிமயமாக்கப்பட்ட தேர்வு தளங்கள்மூலம் ஓட்டுநர் உரிமத் தேர்வு நடத்தப்படும்போது தேர்வு முடிவுகள் அனைத்தும் கணினி வரைபடம்மூலம் துல்லியமாகப் பதிவு செய்யப்பட்டு, திறமையின் அடிப்படையில் ஓட்டுநர் உரிமம் வழங்க இயலும்.

முற்பகல் 11–25

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள், போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணிக்கும் பயணிகளின் வசதியையும், போக்குவரத்து உரிமங்களைப் பெறும் பொது மக்களின் வசதியையும் மேம்படுத்துவதோடு, சாலை விபத்துகளைக் குறைக்கவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) சுற்றுலா, கலை–பண்பாட்டுத் துறையில் சிறப்புக் கல்வி மையம், இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம் அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் மன மகிழ்வுக்கு மூலக் கூறாக அமைந்து, வேலைவாய்ப்பினையும், அன்னியச் செலாவணியையும் ஈட்டித் தருவதில் முக்கியப் பங்கு வகிக்கும் சுற்றுலாவை மேம்படுத்துவதிலும், அரிய கலைச் செல்வங்களைப் பேணிப் பாதுகாப்பதிலும், திறன் படைத்த கலைஞர்களைக் கண்டறிந்து ஊக்குவிப்பதிலும் அதிக அக்கறையுடன் எனது தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துவாக்குடியில் உள்ள மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் மூன்றாண்டு பட்டயப் பயிற்சியும், ஓராண்டு சான்றிதழ் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. இதுமட்டுமல்லாமல், ஓட்டல் பணியாளர்களுக்கான பயிற்சித் திட்டம் மற்றும் திறன்சார் பயிற்சித் திட்டங்களின்கீழ் திறன் சாராத நபர்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இந்த நிறுவனம் அனைத்துவிதமான சுற்றுலா விருந்தோம்பல் கல்விக்கான சிறப்பு மையமாக 5 கோடி ரூபாய் செலவில் தரமுயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2013 மே 10

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், பெருமுக்கல் என்ற கிராமத்தில் மலைமீது அமைந்துள்ள ஸ்ரீமுக்யாசலேஸ்வரர் கோயில் தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்ட சின்னமாக அறிவிக்கை செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டு வரும் கோயிலாகும். செங்கல் கோயிலாக இருந்த இக்கோயில், சோழ மன்னனான விக்கிரம சோழ அரசர் காலத்தில் கற்கோயிலாக மாற்றப்பட்டது. இக்கோயிலில் உள்ள இறைவனின் பெயர் தமிழில் திருவான்மிகை ஈஸ்வரமுடையார் என்றும், பெருமுக்கல் உடையார் என்றும், வடமொழியில் ஸ்ரீமுக்யாசலேஸ்வரர் என்றும் வழங்கப்பெறுகிறது. தற்போது இக்கோயில் மிகவும் சிதிலமடைந்த நிலையில் உள்ளதால், வரலாற்றுச் சிறப்புமிக்க இக்கோயிலைப் பழமை மாறாமல் பாதுகாத்து, மறுசீரமைப்புப் பணியை மேற்கொள்ள ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என்பதை மனநிறைவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிக அளவில் திருக்கோயில்களும், அவற்றில் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. இதுவரை தொல்லியல் துறையால் 24,060 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகள் தமிழ் பிராமி, வட்டெழுத்து, பண்டைய தமிழ், கிரந்தம், தெலுங்கு, கன்னடம், நாகரி போன்ற எழுத்து வடிவங்களில் உள்ளன. தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறையால் 1967 ஆம் ஆண்டு முதல் படியெடுக்கப்பட்ட கல்வெட்டு மைப்படிகள் – Estampages – சிதைந்து, கிழிந்துபோகும் அபாயத்தில் உள்ளன. இவற்றை ஒழுங்குபடுத்தி, சீர்செய்து, படிப்பதற்கு ஏற்றவாறு செய்வது அவசியம் என்பதைக் கருத்தில்கொண்டு, இக்கல்வெட்டுகளை எண்ணிலக்கம், அதாவது Digitisation முறையில் ஆவணப்படுத்துவதற்காகவும், மாவட்டம், வட்டம், ஊர், கோயில்கள் வாரியாக மைப்படிகளில் உள்ள குறிப்பிடப்பட்ட எண்களைக் கொண்டு, தனித் தனியாகப் பிரித்து கணினியின்மூலம் பதிவு செய்வதற்காகவும், 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்தப் பணிகள் நடப்பாண்டு முதல் மூன்று ஆண்டுகளில் செய்து முடிக்கப்படும். இதன்மூலம் தற்போதைய மற்றும் வருங்கால ஆய்வாளர்களும், மாணவர்களும் மிகுந்த பயனடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

2013 மே 10] [செல்வி ஜெ ஜெயலலிதா]

சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ள 6 கட்டடங்களுள், 3 கட்டடங்கள் தொன்மையான, பாரம்பரியமிக்க கட்டடங்கள் ஆகும். அதாவது, 100 ஆண்டுகளுக்கு மேல் பழமையானவை; வரலாற்று முக்கியத்துவம் பெற்றவை. அத்தகைய கட்டடங்களில் ஒன்று 'தேசியக் கலைக் கூடம்' – National Art Gallery - *ஆகும். அந்தக் காலகட்டத்தில் இங்கு தொடர்ந்து அறிவார்ந்த சொற்பொழிவுகள் நடைபெற்று வந்தன. சென்னையின் அடையாளக் கட்டடமாக விளங்கும் இந்தக் கட்டடத்தில் பாரம்பரியமிக்க தஞ்சாவூர், ராஜஸ்தான், டெக்கான், மினியேச்சர் எனப்படும் ஓவியங்கள் மற்றும் சந்தன மரச் சிற்பங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இந்தக் கட்டடம் பழுதடைந்ததாலும், இக்கட்டடத்தின் ஒரு பகுதி ஏறத்தாழ ஒரு பக்கம் அழுத்தப்பட்ட நிலையில் இருந்ததாலும், பொது மக்களின் பயன்பாட்டிற்கு உகந்தது அல்ல என்று 2002 ஆம் ஆண்டு முடிவு செய்யப்பட்டு, இந்தக் காட்சிக் கூடம் மூடப்பட்டது. எனினும், இந்தக் கட்டடம் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டடங்களை ஆய்வு செய்ய நியமிக்கப்பட்ட சிறப்புக் குழு, இந்தக் கட்டடத்தை ஆய்வு செய்து, இப்புராதனக் கட்டடம் தகுந்த வல்லுநர்களைக் கொண்டு பாதுகாக்கப்பட வேண்டும் என முடிவு செய்துள்ளது. சென்னையின் அடையாளங்களில் ஒன்றான இக்கட்டடத்தைப் பழுதுபார்த்து, புதுப்பிக்க 11 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11–30

கலை–பண்பாட்டுத் துறை கட்டுப்பாட்டின்கீழ் உள்ள சென்னை, கும்பகோணம் அரசு கவின்கலைக் கல்லூரிகள் மற்றும் மாமல்லபுரம் அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி ஆகியவற்றில் பயிலும் மாணவர்களுக்கு மடிக் கணினி வழங்குவதன்மூலம் பாடத்தை ஒட்டிய கணினிப் பயிற்சிகளான, Photoshop, Dreamweaver, Director, Maya *போன்ற* Animation *கணினி மென்பொருட்களை நன்கு பயன்படுத்தி, கலைப் படைப்புகளைப் புதுமையாகவும், பார்ப்போர் வியக்கும்வண்ணமும் செய்ய இயலும் என்பதைக் கருத்திற்கொண்டு, இந்த மூன்று கல்லூரிகளிலும் இளங்கலை பட்டப் படிப்பு பயிலும் 633 மாணவ, மாணவிகளில் ஏற்கெனவே 12 ஆம் வகுப்பின்போது விலையில்லா மடிக் கணினி*

பெற்ற 59 மாணவர்களைத் தவிர்த்து, எஞ்சியுள்ள 574 மாணவர்களுக்கு விலையில்லா மடிக் கணினிகள் 1 கோடியே 3 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதேபோன்று, திருவையாறு அரசு இசைக் கல்லூரியில் B.A. (Music), அதாவது இளங்கலைப் பட்டப் படிப்பில் பயிலும் 32 மாணவ, மாணவியரில் ஏற்கெனவே பள்ளிக் கல்வித் துறையின்மூலம் 12 ஆம் வகுப்பில் விலையில்லா மடிக் கணினிகள் பெற்ற 4 மாணவர்களைத் தவிர, எஞ்சியுள்ள 28 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மடிக் கணினிகள் 5 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கலை—பண்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் நான்கு அரசு இசைக் கல்லூரிகள், இரண்டு கவின்கலைக் கல்லூரிகள் மற்றும் ஒரு கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி ஆகிய ஏழு கல்லூரிகள் இயங்கி வருகின்றன. தற்போது திருவையாறு, மதுரை, கோயம்புத்தூர் அரசு இசைக் கல்லூரிகள் மற்றும் கும்பகோணம் அரசு கவின்கலைக் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியருக்குக் கட்டணமில்லா பேருந்து பயண அட்டை வழங்கப்பட்டுள்ளது. ஆனால், சென்னை அரசு இசைக் கல்லூரி, சென்னை அரசு கவின்கலைக் கல்லூரி மற்றும் மாமல்லபுரத்தில் உள்ள அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்குக் கட்டணமில்லா பேருந்து பயண அட்டை வழங்கப்படவில்லை. இந்த மூன்று கல்லூரிகளில் பயிலும் 801 மாணவ, மாணவிகளுக்கும் எதிர்வரும் கல்வியாண்டில் இருந்து கட்டணமில்லா பேருந்து பயண அட்டை வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக 10 இலட்சத்து 41 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இசையானது ஆன்மாவுடன் தொடர்புடையது என்பது சாதி, சமய, மத சார்பற்று அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது ஆகும். மனதையும், ஆன்மாவையும் இசைய வைப்பதே இசை.

மேற்கத்திய நடைமுறைகள் மற்றும் நாகரிகம், நமது இசையின் உண்மைத் தன்மையை அழித்துவிடாமல் பாதுகாக்கும்பொருட்டும்,

மேற்கத்திய மற்றும் பாரம்பரியமற்ற ஓவியங்களுக்கு வழங்கப்பட்டு வரும் வரவேற்பு, நமது பாரம்பரியமிக்க ஓவியங்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையிலும், தமிழகத்தின் தொன்மையான இசை மற்றும் கலையினைப் பாதுகாத்து, அவற்றினை எதிர்கால இளைய தலைமுறையினருக்கு எடுத்துச்செல்லும் வகையில், இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகம் ஒன்று ஏற்படுத்தப்படும் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11–35

இந்தப் பல்கலைக்கழகத்தின்கீழ் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு ஆகிய இடங்களில் உள்ள அரசு இசைக் கல்லூரிகள், சென்னை மற்றும் கும்பகோணத்தில் உள்ள அரசு கவின்கலைக் கல்லூரிகள், மாமல்லபுரத்தில் உள்ள அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி மற்றும் இத்துறைகளைச் சார்ந்த அனைத்து உதவி பெறும் மற்றும் உதவி பெறாத தனியார் கல்லூரிகள் மற்றும் இசை, நடனம், கவின்கலைகளைக் கற்பிக்கும் கல்லூரிகள் செயல்படும். இதர பல்கலைக்கழகங்களில் நடத்தப்படும் இசை சார்ந்த கவின்கலைப் புலம் சார்ந்த, இளங்கலை மற்றும் முதுகலை பட்டப் படிப்புகளும் இப்பல்கலைக்கழகத்தின் ஆளுமையின்கீழ் கொண்டுவரப்படும். இசை மற்றும் கலைக்குப் பொதுவான பாடத் திட்டம், அவற்றைச் செயல்படுத்தும் நடவடிக்கைகள், ஆய்வுகள் மற்றும் வளர்ச்சிப் பணிகள், தேர்வுப் பணி ஆகியவற்றை இந்தப் பல்கலைக்கழகம் மேற்கொள்ளும். இப்பல்கலைக்கழகத்தில் குரலிசை, வீணை, வயலின், நாதஸ்வரம், தவில், மிருதங்கம், கடம், கஞ்சிரா, முகர்சிங், புல்லாங்குழல், பரதநாட்டியம், நட்டுவாங்கம், கிராமியக் கலை ஆகிய 13 துறைகள் ஏற்படுத்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

எனது தலைமையிலான அரசால் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் சுற்றுலாத் துறையை மேம்படுத்தவும், தமிழகத்தின் பாரம்பரியமிக்க பண்பாடு மற்றும் கலைகளை நல்ல முறையில் பாதுகாக்கவும், அவற்றை இளைய சமுதாயத்தினரிடையே எடுத்துச் செல்லவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

[2013 மே 10

(இ) சட்டக் கல்விக்குப் புதிய சலுகைகள் மற்றும் கட்டமைப்பு–விடுதி வசதிகள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களாட்சியில் சட்டத்தின் மாட்சியே மேலானது என்பதாலும், சட்டம் மனித சமுதாயத்தின் மாண்பை பேணிக் காப்பதாலும், மக்களின் எண்ணங்களையும், விருப்பங்களையும் நிறைவேற்றக்கூடியதாக சட்டங்கள் விளங்குவதாலும், சட்டக் கல்விக்கு எனது தலைமையிலான அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது.

நான் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், சட்டக் கல்வியின் தரத்தை சர்வதேச சட்டப் பள்ளிகளின் தரத்திற்கு இணையாக அமைக்கும் வகையில், ஸ்ரீரங்கத்தில் 100 கோடி ரூபாய் செலவில் தேசிய சட்டப் பள்ளி ஒன்றிற்கு நான் அடிக்கல் நாட்டினேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்த சட்டப் பள்ளிக்கான மாணவ, மாணவியர் சேர்க்கை விரைவில் நடைபெற உள்ளது.

தற்போது அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் தொழிற்கல்லூரிகளில் ஒற்றைச் சாளரக் கலந்தாய்வின்மூலம் சேர்க்கை பெறும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவ, மாணவியருக்குக் கல்விக் கட்டணத்தில் சலுகை அளிக்கப்பட்டு வருவதாகவும், ஒற்றைச் சாளரக் கலந்தாய்வின்மூலம் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் சேர்க்கை பெறும் மாணவ, மாணவியருக்கும் இந்தக் கல்விக் கட்டணச் சலுகை அளிக்கப்படுவதாகவும், ஆனால் சீர்மிகு சட்டப் பள்ளியில் ஐந்தாண்டு பி.ஏ., பி.எல். (ஹானர்ஸ்) பயிலும் மாணவ, மாணவியருக்குக் கல்வி கட்டணச் சலுகை வழங்கப்படுவதில்லை என்றும் எனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

எனவே, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கும் சீர்மிகு சட்டப் பள்ளியில் பி.ஏ., பி.எல். (ஹானர்ஸ்) சட்டப் படிப்பிற்கான மாணவ, மாணவியர் சேர்க்கை அரசின் முகமையான தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் மூலம் தகுதித் தேர்வின் அடிப்படையில் நடைபெறுவதாலும், இந்தப் படிப்பு சென்னையில் உள்ள தமிழ்நாடு

டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப் பள்ளியில் மட்டுமே பயிற்றுவிக்கப்படுகிற காரணத்தாலும், ஒற்றைச் சாளர கலந்தாய்வின்மூலம் மாணவ, மாணவியர் சேர்க்கை நடைபெறவில்லை என்றாலும், இதனைச் சிறப்பினமாகக் கருதி, 2010–2011 ஆம் கல்வியாண்டு முதல் இப்பள்ளியில் பி.ஏ., பி.எல். (ஹானர்ஸ்) பயிலும் தமிழகத்தைச் சார்ந்த முதல் தலைமுறை பட்டதாரி மாணவ, மாணவியருக்கும் கல்விக் கட்டணத்தில் சலுகை வழங்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதுமட்டுமல்லாமல், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் மற்றும் சில சட்டக் கல்லூரிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் மற்றும் விடுதிக் கட்டடங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

முற்பகல் 11–40

நான் முதன்முதலாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது, தெற்காசியாவிலேயே முதன்முதலாக சட்டக் கல்விக்கென தனியாக தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தை நிறுவினேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பல்கலைக்கழகத்தின்கீழ் 7 அரசு சட்டக் கல்லூரிகளும், ஒரு தனியார் சுயநிதி சட்டக் கல்லூரியும் இயங்கி வருகின்றன. மேலும், சீர்மிகு சட்டப் பள்ளிமூலம் இளநிலை மற்றும் முதுநிலை ஹானர்ஸ் பட்டம் மற்றும் பட்ட மேற்படிப்பு வகுப்புகளை நடத்தி வருகிறது. இந்தப் பல்கலைக்கழகம் தற்போது அமைந்துள்ள இடம் போதுமானதாக இல்லாததால், இங்கு பயிலும் மாணவ, மாணவியர்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தர இயலாத நிலை உள்ளது. இந்தப் பல்கலைக்கழகம் மேலும் சிறப்புடன் இயங்கும் வகையில் இப்பலைக்கழகத்திற்கு என பெருங்குடியில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தில் நிருவாகக் கட்டடம், நூலகக் கட்டடம், இளநிலை மற்றும் முதுநிலை மாணவர்களுக்கான வகுப்பறைகள் அடங்கிய கட்டடங்கள், மாணவ, மாணவியர் விடுதிகள், உள் மற்றும் வெளி விளையாட்டு அரங்கங்களை உள்ளடக்கிய ஒரு முழுமையான பல்கலைக்கழக வளாகத்தினைக் கட்டிட 59 கோடியே, 27 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2013 மே 10

செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரி மாணவியருக்கு விடுதி வசதி உள்ளது. எனவே, செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரி மாணவியருக்கு விடுதி வசதி உள்ளதுபோல், மாணவர்களுக்கும் விடுதி வசதி ஏற்படுத்தித் தரும் வகையில், செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு 9,275 சதுர அடி பரப்பளவில் 15 அறைகள் கொண்ட விடுதிக் கட்டடம் கட்ட ஒரு கோடியே 72 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் 70 மாணவர்கள் விடுதி வசதி பெறுவர். தற்போது, தற்காலிகக் கட்டடத்தில் இயங்கி வரும் வேலூர் அரசு சட்டக் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டட வசதி ஏற்படுத்தித் தரும் வகையில் வேலூர் அரசு சட்டக் கல்லூரிக்கு 17 வகுப்பறைகள், முதல்வர் அறை, ஆசிரியர்கள் அறை, நூலகம் மற்றும் அலுவலக அறை கொண்ட புதிய கட்டடம் 44,509 சதுர அடி பரப்பளவில் 7 கோடியே 56 இலட்சம் ரூபாய் செலவில் கட்டித் தரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால், நடப்பாண்டில் 240 மாணவர்களும், வேலூர் அரசு சட்டக் கல்லூரியில் ஐந்து ஆண்டு சட்டப் படிப்பு தொடங்கும்போது, சுமார் 700 மாணவர்களும் பயன்பெறுவர்.

மதுரை அரசு சட்டக் கல்லூரியில் தற்போது உள்ள விடுதியில் சுமார் 38 மாணவர்களுக்கு மட்டுமே தங்கும் வசதி உள்ளது. வெளியூர்களிலிருந்து வந்து தங்கி, கல்வி பயின்று வருகின்ற மாணவர்கள் பலர் தனியார் விடுதி மற்றும் வாடகை வீடுகளில் தங்கியிருந்து சட்டப்படிப்பை மேற்கொள்கின்றனர். எனவே, கூடுதலாக 50 மாணவர்கள் விடுதியில் தங்கி, கல்வி பயில ஏதுவாக, மதுரை அரசு சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு இரண்டு தளத்துடன்கூடிய 9,362 சதுர அடி பரப்பளவில் ஒரு புதிய விடுதிக் கட்டடம் கட்ட ஒரு கோடியே 21 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கைகள் சீர்மிகு சட்டப் பள்ளியில் பயிலும் தமிழகத்தைச் சார்ந்த முதல் தலைமுறை பட்டதாரி மாணவ, மாணவியர் பயன்பெறவும், சட்டம் பயிலும் மாணவ, மாணவியருக்கான வசதிகள் மேம்பாடு அடையவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2013 மே 10]

(ஈ) பெண்களுக்குத் தனிச் சிறை அமைத்து, சிறைச்சாலைகளில் கட்டமைப்பு வசதிகள் செய்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றவாளிகளை சிறையில் அடைத்து, எதிர்காலத்தில் குற்றம் இழைக்காதவண்ணம் சீர்திருத்தி, அவர்களுக்குப் புது வாழ்வு அளிக்கும் புனிதமான பணியை மேற்கொண்டு வரும் சிறைத் துறைப் பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டும், சிறைவாசிகள் நலன் மற்றும் மறுவாழ்வினைக் கருத்தில் கொண்டும், பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது. தற்போது, சென்னை, திருச்சி மற்றும் வேலூர் ஆகிய மூன்று இடங்களில் மட்டுமே பெண்களுக்கு தனிச் சிறைகள் இருப்பதால், பெண் சிறைவாசிகள் தங்களுடைய சொந்த மாவட்டத்திலிருந்து வெகு தொலைவில் உள்ள சிறைகளில் அனுமதிக்கப்படுகின்றனர். உதாரணமாக, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த பெண் சிறைவாசி 350 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள திருச்சி சிறையில் அனுமதிக்கப்படுகின்றார். இவ்வாறு நீண்ட தூரத்தில் உள்ள சிறைகளில் அனுமதிக்கப்படுவதால், சிறைவாசிகளை அவர்களது உறவினர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் சந்திக்க இயலாத நிலையும், சிறைவாசிகளை சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களில் ஆஜர்படுத்துவதிலும், மிகுந்த சிரமங்கள் ஏற்படுகின்றன. இந்த சிரமங்களைத் தவிர்க்கும் வகையில், தென் மாவட்டங்கள் மற்றும் மேற்கு மாவட்டங்களிலிருந்து வரும் பெண் தண்டனை சிறைவாசிகளைத் தங்க வைப்பதற்காக 30 கோடி ரூபாய் செலவில் முறையே மதுரை மற்றும் கோயம்புத்தூரில் புதியதாக தனிச் சிறைகள் உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11–45

தற்போது தமிழ்நாட்டில் 9 மத்திய சிறைகள், 10 மாவட்டச் சிறைகள் என மொத்தம் 19 மாவட்டங்களில் சிறைகள் உள்ளன. மீதமுள்ள 13 மாவட்டங்களில் மாவட்டச் சிறைகள் அமைக்கப்படுவது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, முதல் கட்டமாக திருப்பூர், தருமபுரி மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 39 கோடி ரூபாய் மதிப்பில் மாவட்டச் சிறைச்சாலைகள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2013 மே 10

சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும், சிறை வளாகத்தில் பசுமையை மேம்படுத்தும் வகையிலும், சிறைவாசிகளைப் பயனுள்ள வகையில் பணியில் ஈடுபடுத்தும் வகையிலும், மதுரை மத்திய சிறையில் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டது. இத்திட்டத்தினை புழல் மத்திய சிறை வளாகத்திலும் விரிவுபடுத்த ஆணையிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தினை மற்ற சிறைச்சாலைகளிலும் செயல்படுத்த வேண்டியது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, 6 மத்திய சிறைகள், 2 பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியம்மூலம் நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மரபு முறையில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத் தேவையைக் குறைத்திடவும், சிறையின் மின் தேவையை மரபுசாரா எரிசக்தியின்மூலம் பூர்த்தி செய்யும் வகையிலும், மேற்கூரை சூரிய ஒளி உற்பத்தி முறை, அதாவது Rooftop Solar Photo voltaic முறையினை புழல் மத்திய சிறையில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் ஏனைய மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகிய சிறைகளிலும் 35 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்புதிய அறிவிப்புகள் சிறைத் துறையை நவீனமயமாக்குவதுடன், சிறைவாசிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், சிறைவாசிகள். குறிப்பாக பெண் சிறைவாசிகள் நல வாழ்வினை மேம்படுத்தவும் உறுதுணை புரியும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

3. போக்குவரத்து சேவை மேம்பாடு, இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம் அமைத்தல், சட்டக் கல்விக்குப் புதிய சலுகைகள், சிறைச்சாலைகளில் கட்டமைப்பு வசதிகள்—முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்று, இரண்டு, மூன்று என இன்றைக்கு நான்காய் மலர்ந்திருக்கின்றன மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் விதி 110-ன்கீழான அறிவிப்புகள். (மேசையைத் தட்டும் ஒலி) போக்குவரத்துத் துறையிலே ஒரு முன்னோடி மாநிலம் நம்முடைய தமிழக மாநிலம். தமிழகத்திலேதான் முழு போக்குவரத்துத் துறையும் அரசுத் துறையாக ஆக்கப்பட்டு ஏழை எளிய, நடுத்தர, மத்திய தர மக்களுடைய அன்றாட வாழ்விலே ஒரு துணையாக நிற்கிற துறையாக இருந்து கொண்டிருக்கிற இந்தத் துறை மிகச் சிறப்புமிக்க துறையாக அலங்கரித்துக் கொண்டிருக்கிறது. இந்தியாவிலேயே மிக அதிகப்படியான பெட்ரோல், டீசல் வாங்குகிற ஒரு போக்குவரத்துக் கழகம் நம்முடைய அரசுப் போக்குவரத்துக் கழகம். அதுவும் இரட்டை விலைக் கொள்கையை மத்திய அரசு நடைமுறைப்படுத்தினால்கூட, அதைப் பற்றி கொஞ்சமும் பொருட்படுத்தாமல் போக்குவரத்துக் கட்டணத்தை உயர்த்தாமல் (மேசையைத் தட்டும் ஒலி) ஏழை, எளிய, நடுத்தர மக்களுக்கு ஒரு காவல் அரணாய் இருந்து கொண்டிருக்கிற அந்தத் துறையை வழிநடத்திக் கொண்டிருக்கிறவர் நம்முடைய போற்றுதலுக்குரிய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆக, அந்தத் துறைக்கு மேலும், ஒரு மகுடம் சேர்ப்பதைப்போல 22 கோடி ரூபாய் அளவில் புதிய திட்ட மதிப்பீட்டிலே 25 பணிமனைகள்; மலைப் பகுதி மக்களும், மலைவாழ் மக்களும் பயனடைகிற வகையிலே 250 சிறிய பேருந்துகள்; இதற்கு மேலே சிறார், மகளிருக்காக சென்னை மாநகரத்திலே ஏற்கெனவே இருந்த 140 பேருந்துகளை அதிகப்படுத்தி 200 பேருந்துகள் வழங்க அறிவித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இவை எல்லாவற்றிற்கும் மேலாக எங்கள் வேலூர் மாவட்டம் சிறப்புப்*

பெறுகிற வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) வேலூர் ஒரு மாநகராக, உண்மையான மாநகராக வளர்கிற வகையிலே, வேலூருக்கு துணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகம், போக்குவரத்துத் துறையிலே தந்திருக்கிறார் நம்முடைய போற்றுதற்குரிய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

முற்பகல் 11–50

சுற்றுலாவிற்கு, அதுவும் கலை வளர்ப்பதற்கு, கலை வளர்ச் செல்வியாக (மேசையைத் தட்டும் ஒலி) இருக்கக்கூடிய போற்றுதற்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக கைவினைஞர்களுக்கு, அதற்காக ஒரு இலட்சம் ரூபாய், ஒரு பட்டயம், விருது தந்து கைவினைஞர்களுக்குப் பட்டம் கொடுத்து சிறப்பித்துள்ளார். இன்றைக்கு அழிந்துகொண்டிருக்கிற, தேய்ந்து கொண்டிருக்கிற அந்தக் கல்வெட்டுகளையெல்லாம் புதுப்பித்துக் கொடுக்க அறிவித்திருக்கிறார். பிள்ளைப் பிராயத்திலே, மாணவப் பிராயத்திலே, குடியாத்தம் பகுதியிலிருந்து சென்னைக்கு ஆசிரியர்களால் அழைத்துவரப்பட்டு அந்த அருங்காட்சியகத்தைப் பார்த்தேன். அப்போதெல்லாம் மாணவர்களை இந்த அருங்காட்சியகத்திற்கு அழைத்து வந்து, அதிலேதான் நடைமுறைக் கல்வியை, நம்முடைய வரலாற்றை, நம்முடைய தொன்மையை, நம்முடைய பழைய பண்பாட்டை எடுத்துச்சொல்லிக்கொண்டிருந்த அப்படிப்பட்ட ஒரு சுற்றுலா மையமாக தேசிய அருங்காட்சிய மையம் சென்னை எழும்பூரிலே இருந்தது. கேட்பாரற்று இருந்த, சிதைந்துபோய்க்கொண்டிருந்த, செல்லரித்துக்கொண்டிருந்த அந்த அருங்காட்சியகத்திற்கு இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூபாய் 11 கோடியைத் தந்து, மீண்டும் அந்த தேசிய அருங்காட்சியகம் தமிழகத்தில் ஒரு மிகப் பெரிய இன்றியமையாத சுற்றுலா மையமாக வருவதற்கு வித்திட்டிருக்கிறார்கள். ஒரு தமிழ் மாணவனாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய இந்த சீரிய திட்டத்தை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதைப்போலவே, தமிழகத்தின் அனைத்து வரலாறும், பௌத்த நெறியானாலும், சமண நெறியானாலும், தழைத்தோங்கிய தமிழகத்தின் தொன்மையையெல்லாம் எடுத்துச்

சொல்லிக்கொண்டிருப்பது கல்வெட்டுத் துறை. கல்வெட்டு மொழி என்பதே ஒரு தனி மொழி. அந்தக் கல்வெட்டு மொழியை இன்றைக்குப் படிக்க முடியாது. பலரும் அதைத் தெரிந்துகொள்ள முடியாது. அது ஒரு தனி மொழி. அந்தக் கல்வெட்டுத் துறையை ஊக்குவிக்கிற வகையிலே ஆராய்ச்சியாளர்களுடைய சிந்தனைகளுக்கு மேலும் செழுமை சேர்க்கிற வகையிலே இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எண்ணிலக்க வகையிலே அவற்றையெல்லாம் செம்மைப்படுத்துவதற்காக 50 இலட்சம் ரூபாயைத் தந்திருக்கின்றார்கள்.

1967–லே உருவாக்கப்பட்டது அந்தத் துறை. அந்தக் கல்வெட்டுத் துறைக்கே இன்றைக்கு ஒரு புத்துயிர் தருகிற வகையிலே ரூ.50 இலட்சத்தை டிஜிட்டல் மயம் ஆக்குவதற்கு, எண்ணிலக்கமாக்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இங்கே வாரி வழங்கியிருக்கிறார்கள்.

திருச்சி துவாக்குடியிலே இருக்கிற உணவக மேலாண்மைக் கல்லூரியைத் தரம் உயர்த்தியிருக்கிறார்கள். அதைப்போலவே கும்பகோணம் கலைக் கல்லூரி, மாமல்லபுரம் சிற்பக் கல்லூரி மாணவர்களுக்கெல்லாம் உலகத்தையே உள்ளங்கையிலே கொண்டுவந்து நிறுத்துகிற மடிக் கணினியை வழங்க அறிவித்திருக்கிறார்கள். தமிழகத்திலே, ஏதோ செல்வர் வீட்டு, சீமான் வீட்டு, கோடீசுவரர் வீட்டுக் குழந்தைகளுக்கு மட்டுமே அது கிடைக்கும் என்றிருந்ததை மாற்றி பட்டிதொட்டிகளுக்கெல்லாம் சாதாரண விவசாயக் குழந்தைகள், மூட்டை தூக்குகிற தொழிலாளியினுடைய குழந்தைகள், விறகு வெட்டிப் பிழைக்கின்ற தொழிலாளியினுடைய குழந்தைகளெல்லாம் இன்றைக்குப் பலன் பெறுகிற வகையிலே, உலகத்தை அறிந்துகொள்கிற வகையிலே அந்த மூன்றாவது கையை, தன்னம்பிக்கையை இன்றைக்கு வாரி வழங்கியிருக்கிற நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதைப் படிப்படியாக கிராம நிருவாக அலுவலர்களுக்குத் தந்தார், சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தந்தார், பஞ்சாயத்துத் தலைவர்களுக்குத் தந்தார், செவிலியர்களுக்குத் தந்தார். தமிழகத்தையே மடிக் கணினிமயமாக்கிக்கொண்டிருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு அந்த மாணவர்களுக்கும் மடிக் கணினி வழங்குகிற திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2013 மே 10

இதைவிட ஒருபடி மேலாகப் போய் தமிழகத்திலே விளையாட்டுத் துறைக்காக ஒரு தனிப் பல்கலைக்கழகத்தைத் தந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். சட்டத் துறைக்காகவே ஒரு பல்கலைக்கழகத்தைத் தந்தவர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இன்றைக்கு இசை, நுண்கலை இவற்றை உள்ளடக்கிய ஒரு பல்கலைக்கழகத்தை இந்தியாவிலே, ஆசியாவிலே (மேசையைத் தட்டும் ஒலி) முதல் முறையாக தமிழ்நாட்டிலே உருவாக்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். தமிழகத்தின் கலையை வளர்ப்பதற்கு, தமிழகத்தின் இழந்த பெருமையை மீட்டெடுப்பதற்கு, தமிழகத்தின் இழந்த அந்தப் பாரம்பரியப் பண்பாட்டினை மீட்டெடுப்பதற்கு இன்றைக்குப் பண்பாட்டுக் காவலராக, பண்பாட்டுப் பாதுகாவலராக (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகமே பாராட்டிப் புகழ்கிற கலைவளர்ச் செல்வியாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இவற்றையெல்லாம் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்.

13 துறைகள், அதிலே கலை, கிராமியக் கலை, கிராமிய விளையாட்டுகளை ஊக்குவித்து, ஒன்றியங்கள்தோறும் அதற்காகப் பரிசுகள் தந்து ஊக்கப்படுத்திக்கொண்டிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கு அந்தக் கிராமிய கலைகளைப் பாதுகாக்கிற வகையிலே, அதற்காகவே ஒரு துறையை இந்தப் பல்கலைக்கழகத்திலே உருவாக்கியிருக்கிறார்.

முற்பகல் 11–55

நான்காவதாக சட்டக் கல்வி. எனக்கு மிக நன்றாக நினைவிருக்கிறது. 30 ஆண்டுகளுக்கு முன்பு, 40 ஆண்டுகளுக்கு முன்பு, என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால், சற்றேறக்குறைய 40 ஆண்டுகளுக்கு முன்பு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஒரு வார இதழிலே அவர்களைப் பற்றிய ஒரு கேள்விக்குப் பதில் சொன்னார். 'நீங்கள் திரைத் துறைக்கு வராமல் இருந்திருந்தால் என்னவாக வந்திருப்பீர்கள்' என்ற ஒரு கேள்வி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னார்கள், 'நான் வழக்குரைஞராக வேண்டும் என்று விரும்பினேன், (மேசையைத் தட்டும் ஒலி) சட்டம் படிக்க வேண்டும் என்று விரும்பினேன்' என்று சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் ஒருவேளை வழக்குரைஞராக வந்திருந்தால்,

2013 மே 10] [முனைவர் செ.கு. தமிழரசன்]

இந்தியாவின் தலைமை நீதிபதியாகக்கூட வந்திருக்கலாம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவின் புகழ்பெற்ற சட்டமேதையாக வந்திருக்கலாம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், தமிழகம் மிகப் பெரிய வரலாற்றை இழந்திருக்கும். ஆனால், இன்றைக்கு மூன்றாவது முறையாக தமிழகத்தின் (மேசையைத் தட்டும் ஒலி) முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சட்டத் துறைக்கு ஏராளமாகச் செய்திருக்கிறார். சிறையிலே இருக்கக்கூடிய குற்றவாளியைப் பற்றிக்கூட கவலைப்படுகின்ற ஒரு முதலமைச்சர் உலகத்திலேயே நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களாகத்தான் இருக்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே, தண்டனை பெற்று தண்டனைக்குள்ளாகியிருக்கின்ற அவனுக்கு, தண்டனையே வாழ்வு என்று அந்த வருத்தத்தில், ஒய்ந்து கிடக்கின்ற அவனுக்கு, தண்டனை என்பது நிரந்தரம் அல்ல, ஒரு தாயாய் நான் உன்னை வழிப்படுத்த, நெறிப்படுத்த, (மேசையைத் தட்டும் ஒலி) மனித நேயத்தோடு உன்னைச் செம்மைப்படுத்த, வழிவகுப்பேன் என்று சொல்லுகின்ற, அப்படிப்பட்ட ஒரு தனி உள்ளம், அந்தத் தாயுள்ளத்தோடு சிறையிலே வாடி வதங்கிக்கொண்டிருக்கின்ற பெண்களின் உறவினர்களுக்கு, அவர்களுக்காக வாதிடுகின்ற வழக்குரைஞர்களுக்கு, அவர்களுக்கெல்லாம் தொல்லையாக இருக்கின்றதே, அவர்களுக்கெல்லாம் இடர்ப்பாடாக இருக்கின்றதே என்பதைக் கருத்தில்கொண்டு, இன்றைக்கு மதுரையிலும், கோவையிலும் புதிய பெண்கள் சிறையை உருவாக்குவதற்கு வழிவகுத்திருக்கிறார்கள். 39 கோடி ரூபாய் மதிப்பில் மாவட்டச் சிறைகளை உருவாக்குவதற்காக புதிய திட்டங்களை உருவாக்கியிருக்கிறார். திருப்பூர், தருமபுரி உள்ளிட்ட மூன்று புதிய மாவட்டச் சிறைச்சாலைகளையும், அதேபோல புதிய புனரமைக்கக்கூடிய சிறைச்சாலைகள், 39 மாவட்டங்களிலும் அந்தத் திட்டங்கள் வரும் என்கிற அளவிற்கு இன்றைக்கு அந்த மாவட்டங்களிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதி ஒதுக்கீட்டினை உருவாக்கியிருக்கிறார். இவற்றையெல்லாம் நான் வாழ்த்தி வரவேற்கின்றபோது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நேற்றைக்கு சமூகத்திலே பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், பழங்குடியினர், ஆதி திராவிடர் என்று அந்தந்தப் பிரிவினருக்கு ஒவ்வொன்றாக வழங்கி, கடைசியில் ஊனமுற்றவர்களுக்கும் வாரி வழங்கி, தமிழகத்தில் நேற்றைக்கு அப்படிப்பட்ட ஒரு மறுமலர்ச்சிக்கு வித்திடுகின்ற

வகையில், மூன்று அறிவிப்புகளைத் தந்தார். இன்றைக்கு நான்கு அறிவிப்புகளைத் தந்திருக்கிறார்.

மாண்புமிகு அம்மா அவர்களே, நீங்கள் பார்வையற்றவர்களுக்கு ஒளியாக இருக்கிறீர்கள், காது கேட்க முடியாதவர்களுக்கு ஒலியாக இருக்கிறீர்கள். பேச்சற்றவர்களுக்கெல்லாம் மொழியாக இருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கை இழந்தவர்களுக்கெல்லாம், மாற்றுக் கையாக இருக்கிறீர்கள். நடக்க முடியாதவர்களுக்கெல்லாம் வழியாக இருக்கிறீர்கள். ஒட்டுமொத்த சமூகத்திற்கும் ஊன்றுகோலாக இருக்கின்ற நீங்கள், ஊனமுற்ற சமுதாயத்திற்கு ஊன்றுகோலாக இருக்கின்ற நீங்கள், (மேசையைத் தட்டும் ஒலி) ஒட்டுமொத்த சமூகத்திற்கே விடிவிளக்காக இருக்கிறீர்கள். உடலிலே ஊனமுற்றவர்கள்கூட ஒருபுறம் இருந்தாலும், உள்ளத்தில் ஊனமுற்றவர்கள் பாராட்டுவதற்கோ, வரவேற்பதற்கோ உற்சாகம் இல்லாமல் இருக்கலாம். ஒதுக்கித் தள்ளுங்கள், நாளைய வரலாறு நிச்சயம் இவற்றையெல்லாம் எண்ணி எண்ணிப் போற்றும். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் போற்றுதலுக்குரிய இந்தத் திட்டங்களை நான் வாழ்த்தி, நன்றி பாராட்டி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால், 4 துறைகள் செழுமைப்படுத்தப்பட்டிருக்கின்றன. சமூகத்திற்கு அவசியமான போக்குவரத்துத் துறை, சிறைத் துறை, சட்டத் துறை, கலை—பண்பாட்டுத் துறைகளைச் சீரமைக்க, செழுமைப்படுத்த, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று 4 அறிவிப்புகளைத் தந்திருக்கிறார்கள். அதிலே, குறிப்பாக நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள், போக்குவரத்து உலகம் ஒரு குடும்பம் என்று சுட்டிக்காட்டியதைப் போன்று, சுருங்கி வருகின்ற அதைச் சுருக்குகின்ற ஆற்றல் வாய்ந்த துறையாக இருக்கின்ற போக்குவரத்துத் துறையை மேம்படுத்துவதற்காக, தமிழகத்திலே இருக்கின்ற போக்குவரத்து மண்டலங்களிலே 25 புதிய பணிமனைகளைத் துவக்குவதற்காக, 22 கோடி ரூபாயை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்திருப்பது பாராட்டுக்குரியது, நன்றிக்குரியது. அதுபோன்று, 250 சிற்றுந்து

2013 மே 10] [திரு. உ. தனியரசு]

வழித்தடங்களை, புதிய சிற்றுந்துகளை—மினி பஸ்களை அளிக்கும் திட்டத்திற்காக 35 கோடி ரூபாயை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருப்பது பாராட்டிற்குரியது.

நண்பகல் 12—00

அதேபோல, கூடுதல் போக்குவரத்து சேவையை விரிவுபடுத்த குழந்தைகள், பெண்களுக்கான பேருந்துகளை 134—லிருந்து 200 ஆக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உயர்த்தியிருக்கிறார்கள். சாதாரணமாக எதையும் அதிகப்படுத்துவது இல்லை, இப்போதுகூட 134 பேருந்துகளாக மாநகரங்களிலே இருந்தன. அந்த 134 பேருந்துகளிலே, பெண்களும், குழந்தைகளும், இட நெருக்கடி இல்லாமல் ஆடவர்களுடைய வேறு வகையான இன்னல்களுக்கு துன்புறுத்தல்களுக்கு ஆளாகாமல் அவர்கள் சுகமாகப் பயணிக்க வேண்டுமென்று, பயணிகளுடைய அடர்த்தியை, எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு, பெண்களின்மீதும், குழந்தைகளின்மீதும் கூடுதல் கவனம் செலுத்தி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அவர்கள் மகிழ்ச்சியாக பயணம் செய்வதற்காக 134 பேருந்துகளை 200 பேருந்துகளாக்கி, 66 பேருந்துகளைக் கூடுதலாகத் தந்திருப்பதற்கு மனதாரப் பாராட்டுகிறேன்.

அதேபோன்று, வழக்கமான நகரப் பேருந்து, புறநகரப் பேருந்து பயணிகளுக்குச் சலுகைகளை அளிப்பதற்காக, கையடக்க அட்டையை அறிமுகம் செய்திருப்பது பாராட்டுக்குரியது. ஏற்கெனவே இருந்த சலுகைகளுடன் கூடுதலான சலுகைகளைத் தந்து பயணிகள் விரைவாகவும், சலுகைகளுடனும் பயணம் செய்வதற்காக தினந்தோறும் பேருந்தைப் பயன்படுத்துகின்றவர்களுக்கு சலுகைகளைத் தந்திருக்கிறார்கள்.

அதேபோன்று, வேலூரில் துணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகத்தை அமைக்க இருப்பது, பகுதிப் போக்குவரத்து அலுவலகங்களாக இருந்தவற்றை வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களாகத் தரம் உயர்த்தியிருப்பது, பல மாவட்டங்களில் புதிய பகுதி போக்குவரத்துத் அலுவலகங்களை உருவாக்கியிருப்பது என இப்படிப் போக்குவரத்துத் துறையிலே ஏராளமான நலத் திட்டங்களை, அறிவிப்புகளைத் தந்து போக்குவரத்துத் துறை சீர்படவும், மறுமலர்ச்சி பெறவும் வசதி வாய்ப்புகளைப் பெறுவதற்காகவும் பல கோடி ரூபாய்களைத் தந்திருக்கின்றர்கள் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

[திரு. உ. தனியரசு] [2013 மே 10

மனமகிழ்வுக்கு மூலக் கூறாக இருக்கின்ற சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு, ஊக்கப்படுத்துவதற்கு, சுற்றுலா விருந்தோம்பலுக்கு மிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. தமிழர்களுடைய மிகச் சிறந்த குணங்களிலே ஒரு தலைசிறந்த குணமாக அறியப்பட்ட விருந்தோம்பல் குணத்திற்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சுற்றுலா விருந்தோம்பலுக்காகவே 5 கோடி ரூபாயை பயிற்சிக்காக, சிறப்புக் கல்வி நிறுவனத்திற்காகவும் தந்து, அந்தத் துறையை ஊக்கப்படுத்தியிருக்கிறார்கள்.

அதேபோன்று, செங்கற்களால் கட்டப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க பிரதான கோயில் விக்கிரமசிங்கேஸ்வரனால் கற்கோவிலாக மாற்றப்பட்டும்கூட, ஸ்ரீ முக்யாசலேஸ்வரர் திருக்கோயில் சிதிலமடைந்திருக்கின்ற நிலையை மாற்றுவதற்கு, சீரமைத்து அந்த வரலாற்றுப் புனிதமான கோயில் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில், அதற்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் தந்துள்ளார்கள் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

அதேபோன்று, கல்வெட்டுகளை 50 இலட்சம் ரூபாய் செலவில் நவீன டிஜிட்டல் முறையில் படி எடுத்துப் பாதுகாப்பது, விரிவுபடுத்துவது, அதுபோல சென்னையினுடைய அடையாளக் கட்டடமாக விளங்கும் அருங்காட்சியகக் கட்டடம் மூடப்படும் நிலையை மாற்றி, புதிதாகப் பழுதுபார்ப்பதற்காக 11 கோடி ரூபாயை அள்ளித் தந்திருப்பது, அதேபோன்று கலை—பண்பாடு கவின்கலைக் கல்லூரி மேம்பாட்டிற்கு, கும்பகோணம், மாமல்லபுரம் போன்ற இடங்களில் உள்ள கல்லூரிகளில் பயில்கின்ற மாணவச் செல்வங்களுக்கு விலையில்லா மடிக் கணினி திட்டத்தை விரிவாக்கி, அதற்காக ஒரு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட நிதியை தந்திருக்கிறார்கள்.

கலை—பண்பாட்டு துறையில் 4 கலைக் கல்லூரிகள் உட்பட 7 கலைக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்குக் கட்டணமில்லாப் பேருந்து பயண அட்டையை வழங்கி விரிவுபடுத்தி, அதற்காக 10 இலட்சம் ரூபாயை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்திருக்கிறார்கள்.

இசை ஆன்மாவை அமைதிப்படுத்துகிறது. அந்த இசைக்காக மேற்கத்திய பாரம்பரிய கலைகளுக்கு இணையாக நம்முடைய பாரம்பரிய இசையைக் காக்க, புதிய

பல்கலைக்கழகத்தை, இசைக்காக புதிய பல்கலைக்கழகத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அந்த இசைக் கலைக் கல்லூரிகளை ஒருங்கிணைத்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் பல்கலைக்கழகமாகத் தரம் உயர்த்தி அந்தத் துறையைச் செழுமைப்படுத்தவும், அறிவை விரிவுபடுத்தவும் அறிவித்திருக்கின்ற அறிவிப்பு வரவேற்பிற்குரியது; பாராட்டிற்குரியது.

அதேபோன்று, சட்டத் துறையில், மக்களாட்சியில் சட்டத்தின் மாட்சி மிக முக்கியமானது என்பதைக் கருத்தில்கொண்டு, ஸ்ரீரங்கத்திலே தேசிய சட்டப் பள்ளியை 100 கோடி ரூபாயில் செலவு செய்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதை நடைமுறைக்குக் கொண்டுவர வேகமாக பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில், சட்டக் கல்லூரியிலே ஐந்தாண்டு படிக்கின்ற பி.ஏ.,பி.எல். ஹானர்ஸ் மாணவர்களுக்குக் கல்விக் கட்டணச் சலுகையை விரிவுபடுத்தியிருக்கிறார்கள்.

பிற்பகல் 12—05

தெற்காசியாவிலேயே முதன்முதலாக நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் சட்டத்திற்காகத் தனியாக அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தை உருவாக்கி அந்த 7 சட்டக் கல்லூரிகளை இணைத்து அவை திறம்படச் செயல்படுவதற்காக தற்போது 59 கோடி ரூபாயிலே புதிய கட்டடங்கள் கட்டுவதற்காக அறிவித்துள்ளார்கள். செங்கல்பட்டு சட்டக் கல்லூரி மாணவிகளுக்கு இருக்கின்ற விடுதியைப் போன்று மாணவர்களுக்காகவும் ஒரு கோடி ரூபாய் செலவில் புதிய விடுதி, அதுபோன்று வேலூர் சட்டக் கல்லூரியிலே புதிய கட்டடம் கட்ட 7 கோடி ரூபாய் அனுமதித்ததுடன் மதுரை சட்டக் கல்லூரியை விரிவுப்படுத்தி, அதற்காக 1 கோடி ரூபாயைத் தந்திருக்கிறார்கள்.

அதுபோன்று, குற்றவாளிகளை சிறையில் அடைத்து திருத்துவதற்காக சிறைத் துறை செயல்பட்டு வருவதைக் கருத்தில் கொண்டு, பெண்கள் சிறை தொலைதூரத்தில் இருப்பதனால், பெண்கள் பயணிப்பதும், அவர்களுடைய நீதிமன்றக் காவல் பணிகளில் சிரமம் ஏற்படுவதையெல்லாம் எண்ணி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அதற்காக 30 கோடி ரூபாய் செலவில் பெண்களுக்கான தனிச் சிறைகளை அந்தந்தப் பகுதிகளிலேயே உருவாக்குவதற்கான திட்டத்தைத் தந்திருக்கிறார்கள்.

அதுபோன்று, திருப்பூர், தருமபுரி, விழுப்புரம் மாவட்டங்களிலே 39 கோடி ரூபாயிலே மாவட்ட சிறைச்சாலைகளைப் புதிதாக அமைக்கவிருப்பது, மதுரை சிறையிலே இருப்பது போல, நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய வசதியை புழல் சிறைச்சாலைக்கும் விரிவுபடுத்தி, அதற்காகவும் 30 கோடி ரூபாய் செலவு செய்யவிருப்பது, அதுபோன்று சிறைச்சாலைகளுக்குச் சிறப்பு நிதி என ஏராளமான நலத் திட்டங்களை இப்பொழுது இந்த 4 துறைகளில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

எப்படி படியெடுப்பது என்பது, ஒரு உருவத்தை, ஒரு பொருளைப் படியெடுப்பது, அதை நகல், ஜெராக்ஸ் எடுப்பதெல்லாம்—ஒரு பொருளை வேண்டுமென்றால் எத்தனை படிகள் வேண்டுமானாலும் எடுக்கலாம். ஆனால், மனிதர்களுடைய மனங்களை, உணர்வுகளைப் பிரதி எடுக்கிற, ஒப்பற்ற அதிநவீன ஆட்சித் துறைத் தலைவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) மனித மனங்களோடு, மனித மனங்களைப் படியெடுத்து, உலக ஆட்சியாளர்களுடைய ஆட்சித் துறை வரலாற்றில் இல்லாத அளவு, அறிஞர்களுடைய அறிவியல் ஆய்வுக்கெல்லாம் அப்பாற்பட்டு, ஒரு இனம் புரியாத ஆட்சியாளராக, மக்களுடைய நலன்களைக் கிரகித்துக்கொண்டு, யாரும் கேட்காமலேயே மக்களுக்கு தினம் தினம் அறிவிப்புகளைத் தந்து, ஒட்டுமொத்த மானுட சமூகத்தினுடைய வளர்ச்சிக்காகத் தொண்டாற்றுகின்ற ஒப்பற்ற ஆட்சித் துறைத் தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த 4 அறிவிப்புகளையும் மனதாரப் பாராட்டி உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்றும் 4 அறிவிப்புகளை மக்களுக்காக அறிவித்திருக்கின்றார்கள். போக்குவரத்துத் துறையில் பயணிகள் வசதிகளை மேம்படுத்தவும், சாலை விபத்துகளைத் தடுக்கின்ற வகையிலும் நிறைய சலுகைகளை வழங்கியிருக்கின்றார்கள்.

அதேபோன்று, சுற்றுலாத் துறையை மேம்படுத்துகின்ற வகையிலே, சுற்றுலாத் துறையின்மூலம் பண்பாடு, கலாச்சாரங்களைக் காக்கின்ற வகையிலே, இளைய சமுதாயத்திற்கு சுற்றுலாத் துறையினுடைய தொன்மை தெரிய வேண்டுமென்பதற்காக சலுகைகளை அறிவித்திருக்கின்றார்கள். சட்டக் கல்லூரியிலே, சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு பல சலுகைகளை அறிவித்திருக்கின்றார்கள். அதேபோன்று, சிறைத் துறையை நவீனப்படுத்தி, பெண்களுக்குத் தனிச் சிறை கட்டிக் கொடுத்து, இப்படி 4 அறிக்கைகளை இன்றையதினம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சமர்ப்பித்திருப்பதை, எங்களது அகில இந்திய பார்வர்டு பிளாக் இயக்கம் மனமாரப் பாராட்டி வரவேற்கின்றது.

போக்குவரத்துத் துறையிலே கடந்த இரண்டு ஆண்டுகளில் 43 பணிமனைகளை அமைத்துக் கொடுத்திருக்கின்றார்கள். இந்த நிதியாண்டிலே 25 பணிமனைகளை உருவாக்கி, அதற்கு 22 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பது என்பது வரவேற்கத்தக்கது. அதுமட்டுமல்லாமல், தனியார்கள்தான் மினி பஸ்களை இயக்கிக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது அரசே மினி பஸ்களை இயக்குவதற்கு 35 கோடி ரூபாயை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கியிருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது. குக்கிராமங்களுக்குக்கூட, மலைப்பகுதிகளில் இருக்கின்ற கிராமங்களுக்குச் செல்வதற்கு வசதியாக, 250 மினி பஸ்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உருவாக்கித் தந்திருக்கின்றார்கள். மகளிர் மற்றும் சிறுவர்கள் பயணம் செய்வதற்காக 134 பஸ்கள் என்று இருந்ததை 200 பஸ்களாக உயர்த்திக் கொடுத்திருக்கின்றார்கள். இது உண்மையிலேயே வரவேற்கக்கூடிய ஒன்று. அந்த அடிப்படையிலே, இந்தப் பணியைக் குறைப்பதற்காக, வேலூரிலே துணை போக்குவரத்து ஆணையர் அலுவலகத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றார்கள்.

பிற்பகல் 12–10

அதேபோன்று, பகுதி அலுவலகமாக இருந்ததை, வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். புதிதாக புதிய பகுதி அலுவலகங்களைத் தொடங்கி இருக்கிறார்கள். அதற்காக 10 கோடி ரூபாய் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கியிருப்பது பாராட்டுக்குரியது, வரவேற்புக்குரியது.

[திரு. பி.வி. கதிரவன்] [2013 மே 10

சுற்றுலா, கலை–பண்பாட்டுத் துறையை மேம்படுத்துவதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள், விழுப்புரம் மாவட்டம், ஸ்ரீமுக்யாசலேஸ்வரர் கோயில் சிதைந்து கிடந்திருக்கிறது என்பதால் அதை சீர்செய்ய உள்ளார்கள். கல்வெட்டுகளையெல்லாம் வருங்கால சந்ததியினருக்குத் தெரியப்படுத்த வேண்டும், அவர்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காக அதைச் சீர்படுத்திக் கொண்டு வருவதற்காக 50 இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கின்றார்கள்.

அதேபோல அருங்காட்சியங்களைப் பாதுகாக்க வேண்டும். தஞ்சாவூர், ராஜஸ்தான் போன்ற சிற்பக் கலைக் கூடங்களைச் சிறப்பிக்க வேண்டும் என்று, அதற்குப் பாதுகாப்பு செய்ய வேண்டும் என்பதற்காகவும், புராதனக் கட்டடங்களையும் பாதுகாப்பதற்காக 13 கோடி ரூபாயை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கியிருப்பதை எங்களது அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் இயக்கம் வரவேற்கிறது. அதற்கு எல்லாம் இந்தப் பல்கலைக்கழகத்தை அமைத்து, அதிலே 13 துறைகளை உருவாக்கி சிற்பக் கலையையும், சுற்றுலாத் துறையையும் மேம்படுத்துகின்ற வகையிலே செய்திருப்பதை எங்களது அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் இயக்கம் பாராட்டுகிறது.

சீர்மிகு சட்டக் கல்லூரி மாணவர்களுக்குப் பல சலுகைகளை அறிவித்திருக்கின்றார்கள். அதேபோன்று டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் 7 சட்டக் கல்லூரிகளுக்கும், அதைச் சுற்றி இருக்கின்ற ஏனைய சட்டக் கல்லூரிகளுக்கும் விடுதியை உருவாக்க அறிவிப்பு செய்திருக்கிறார். அதேபோன்று செங்கல்பட்டில் இருக்கின்ற சட்டக் கல்லூரிக்கும், மதுரையில் உள்ள சட்டக் கல்லூரிக்கும் மாணவர்களுக்கு விடுதியை ஏற்படுத்தி, அங்கே அவர்கள் படிப்பதற்கு வசதியை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றார்கள்.

அதேபோன்று சிறைத் துறையில், குறிப்பாக பெண்களுக்கான சிறை வடபகுதியிலே அதிகமாக இருக்கின்றது. அதேபோன்று தென்பகுதியிலே அதிகமாக இருக்கின்ற பெண் கைதிகளுக்காக மதுரை, கோயம்புத்தூரிலே பெண்களுக்கான புதிய சிறையை உருவாக்கியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், சிறைத் துறையில் 13 மாவட்டங்களுக்கு மட்டுமல்லாமல், இந்த ஆண்டு மூன்று மாவட்டங்களுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாவட்ட சிறைகள் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு 39 கோடி ரூபாய்

ஒதுக்கியிருக்கிறார்கள். இதுபோன்று அனைத்து தமிழக மக்களுடைய, அடித்தட்டு மக்களுடைய, சாதாரண மக்களுக்குத் தேவையானவற்றை ஆராய்ந்து, அறிந்து இந்த மக்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இப்படி நல்ல திட்டங்களை மக்களுக்குக் கொடுத்திருப்பதை எங்களது அகில இந்திய பார்வர்டு பிளாக் இயக்கம் சார்பாக மனமாரப் பாராட்டி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் 4 அறிக்கைகளை வெளியிட்டிருக்கிறார்கள். நேற்றையதினம் மாற்றுத் திறனாளிகளுக்கு 400 இலவச ஸ்கூட்டர்களை ஆயிரமாக உயர்த்தியிருக்கிறார்கள். இதன்மூலமாக இன்றைக்குப் படிக்க முடியாமல் இருந்த மாற்றுத் திறனாளிகள் படிக்கப் போகிறார்கள். அதேமாதிரி வேலைக்குப் போகிறவர்களுக்கும் இதன்மூலமாக அவர்களுடைய வாழ்க்கையை அமைத்துக்கொள்வதற்கான நல்ல திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்காக 32 நடமாடும் மருத்துவப் பிரிவுகளைக் கொடுத்து, அவர்கள் வீட்டிலே இருப்பவர்கள் எல்லோரும் இந்த மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளை எப்படி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்வது, வருவது என்பதற்காக இந்தத் திட்டத்தை அறிவித்து, அவர்கள் வீட்டில் எல்லோரையும் மிகவும் சந்தோஷப்படுத்தியிருக்கிறார்கள். அந்த மாதிரி மாணவர்களுக்காக ஒரு இலட்சம் ரூபாயை உயர்த்தி இரண்டு இலட்சம் ரூபாயாக நேற்றையதினம் நல்ல அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள்.

இன்றையதினம் கிட்டத்தட்ட 25 பணிமனைகளை 22 கோடி ரூபாய் செலவு செய்து புதியதாக அமைக்கவிருக்கிறார்கள். அனைவரும் படிக்க வேண்டும் என்பதற்காக, போக்குவரத்து வசதியை அதிகப்படுத்த, 35 கோடி ரூபாயில் மினி பஸ் விடுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். சென்னையில் இருக்கின்ற மகளிர்கள், தாய்மார்கள், சிறியவர்கள் சென்று வந்துகொண்டிருந்த மகளிருக்காக விடப்பட்டிருந்த 134 பேருந்துகளை தற்போது 200

[திரு. ஆ. நாராயணன்] [2013 மே 10

ஆக உயர்த்தியிருக்கிறார்கள். அதேமாதிரி முன்பதிவு செய்பவர்களுக்கு 10 சதவீதம் தள்ளுபடி செய்திருக்கிறார்கள்.

அதேபோல கையடக்க பயண அட்டை சென்னையில் அறிமுகப்படுத்தப்படுகிறது. இதெல்லாம் நாம் வெளிநாட்டிலேதான் பார்த்திருக்கிறோம். சென்னையில் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். அதைப்போலவே வேலூரிலே ஒரு போக்குவரத்துத் துணை ஆணையர் அலுவலகம் அமைக்கப்படவிருக்கிறது. அதேபோல பல இடங்களில் பகுதி வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் தரம் உயர்த்தப்படுகிறது. மீனம்பாக்கம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டுப்பாட்டில் குன்றத்தூரில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்கப்படுகிறது.

அதேபோல அன்னியச் செலாவணியைத் தருகின்ற மூன்று ஆண்டுகள் ஓட்டல் பட்டயப் பயிற்சிப் படிப்பு படித்தவர்களுக்குச் சிறப்பு மையம் அமைக்க 5 கோடி ரூபாய் செலவில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதேபோல வரலாற்றுச் சிறப்பு மிக்க கோயிலைச் சீரமைப்பதற்கு ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு, அதைபோல சிதைந்து போன கல்வெட்டு மைப்படிகளை ஒழுங்குபடுத்தி சீர்படுத்துவதற்காக கம்ப்யூட்டர் மூலமாக பதிவு செய்வதற்கு 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள்.

பிற்பகல் 12–15

சென்னையிலே 6 அருங்காட்சியகக் கட்டடங்கள் இருக்கின்றன. அவற்றில் மூன்று கட்டடங்களைக் கட்டுவதற்காக, 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த கட்டடங்களை ஓவியம், சந்தன மரச் சிற்பங்கள், சிற்பக்கலையைக் காப்பதற்காக 11 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கின்றார்கள். சில இசைக் கல்லூரிகளில் படித்த மாணவர்களுக்கு மடிக் கணினி விட்டுபோய்விட்டது என்பதைக் கண்டுபிடித்து, அந்த மாணவர்கள் மிகவும் பாவமாக இருக்கின்றார்களே, அவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று எண்ணி, அந்த 574 பேருக்கு மடிக் கணினி வழங்க உத்தரவிட்டுள்ளதற்காகப் பாராட்டுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல் பஸ் பாஸ் கொடுக்கப்படாதவர்களுக்கு அதை வழங்க ஏற்பாடு செய்திருக்கின்றார்கள்.

2013 மே 10] [திரு. ஆ. நாராயணன்]

டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சார்பாக கிட்டத்தட்ட 1 தனியார் சுயநிதி சட்டக் கல்லூரி, 7 அரசு சட்டக் கல்லூரிகளுக்காக 59 கோடியே 27 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. செங்கல்பட்டிலே மாணவர்களுக்கு 15 அறையைக் கொண்ட விடுதி கட்டுவதற்காக 1 கோடியே 72 இலட்சம் ரூபாய், வேலூரில் 17 வகுப்பறைகள் கட்டுவதற்கு 7 கோடியே 56 இலட்சம் ரூபாய், மதுரையிலே அரசு சட்டக் கல்லூரிக்காக 1 கோடியே 21 இலட்சம் ரூபாய் ஒதுக்கியமைக்காக என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பெண்களுக்கு மூன்று தனிச் சிறைகளுக்காக 30 கோடி ரூபாய் ஒதுக்கீடு, 13 மாவட்ட சிறைக்காக 39 கோடி ரூபாய் ஒதுக்கீடு, சிறையில் இருப்பவர்கள் சுத்தமாகவும், சுகாதாரமாகவும், சந்தோஷமாகவும், இருக்க வேண்டும் என்பதற்காக கிட்டத்தட்ட 30 கோடி ரூபாய் செலவில் நல்ல குடிதண்ணீரை வழங்குதல் ஆகியவற்றை மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். மின்சாரத் தேவையைக் குறைப்பதற்காக சூரிய ஒளிமூலம் மின்சாரம் தயாரிப்பதற்கு 35 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியுள்ளார்கள்.

பரிதவிக்கின்ற ஏழைகளுக்குத் திட்டம் போடுங்கள் அம்மா, பொருட்களைச் சரியாக பங்குபோடுவதற்கு சட்டம் போடுங்கள் அம்மா, குவிய குவிய விளைவதையெல்லாம் கூறு போடுங்கள் அம்மா, ஏழைக் குடும்பத்திலே பாலும், தேனும் ஆறாய் ஓட வேண்டும். அம்மா, நீங்கள் கொடுக்கின்ற திட்டம், குடிசையில் இருக்கின்ற ஏழை எளியவர்களுக்கு பாலும், தேனுமாக ஆறாய் ஓட வேண்டும் அம்மா என்று கூறி, சமத்துவ 56மக்கள் கட்சியின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 110–ன்கீழ் அறிவித்த 4 அறிவிப்புகளையும் மனித நேய மக்கள் கட்சி மனதார வரவேற்கிறது, பாராட்டுகிறது. குறிப்பாக தமிழகத்திலே 25 புதிய பேருந்து பணிமனைகள், 22.50*

கோடி ரூபாய் செலவிலே அமைக்கப்படும் என்ற அறிவிப்பை மனதார வரவேற்கின்றோம். மலைப் பகுதியிலே சிற்றுந்து மிக அவசியமாகத் தேவைப்படுகிறது. அதைச் சிறப்பாக உணர்ந்து 35 கோடி ரூபாய் செலவிலே 250 சிற்றுந்துகள் மலைப் பகுதிகளில் விடப்படும் என்ற அறிவிப்பை நெஞ்சார வரவேற்கின்றேன். அதைப்போல, நகர்ப்புறங்களில் மகளிர் மற்றும் சிறுவர்கள் செல்லக்கூடிய பேருந்துகளுடைய எண்ணிக்கை 200ஆக உயர்த்தப்படும் என்ற அறிவிப்பையும் நான் மனதாரப் பாராட்டுகின்றேன். நகர்ப்புறங்கள் விரிவடைந்து பணிக்காக புறநகரங்களுக்கெல்லாம் செல்லக்கூடிய நிலையிலே, நகரப் பேருந்துகளில் செல்பவர்களுக்கு மட்டும்தான் மாதாந்திர பஸ் பாஸ் என்பதை முதல் முறையாக விரிவுபடுத்தி அதை புறநகரப் பேருந்துகளில் பயணம் செய்யக்கூடிய மக்களுக்கும் அது பயன்படும் என்று விரிவுபடுத்தியதற்காகவும் நான் நெஞ்சாரப் பாராட்டுகின்றேன்.

எங்களுடைய ஆம்பூர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள் ஆம்பூரிலே துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்கப்பட வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை இந்தக் கூட்டத் தொடரிலே எழுப்பினார்கள். அதைக் கவனத்தில் கொண்டு ஆம்பூர் உட்பட பல்வேறு பகுதிகளில் புதிய பகுதி அலுவலகம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பையும், அதேபோல வாணியம்பாடியில் உள்ள பகுதி அலுவலகம் தரம் உயர்த்தப்படும் என்ற அறிவிப்பையும், மனித நேய மக்கள் கட்சியின் சார்பிலும், அந்தப் பகுதி மக்களின் சார்பிலும் வரவேற்கின்றேன்.

அதேபோன்று, மிக முக்கியமாக நம்முடைய வரலாற்றைச் சொல்லக்கூடிய கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு வைக்கப்பட்டாலும்கூட அவற்றை டிஜிட்டைஸ் செய்தால்தான் நீண்ட காலமாக நம்முடைய வரலாற்றைச் சொல்லும். அந்த அடிப்படையிலே 50 இலட்சம் ரூபாய் செலவில் படியெடுத்த கல்வெட்டுகள் எல்லாம் டிஜிட்டைஸ் செய்யப்படும் என்ற அறிவிப்பை நான் வரவேற்கின்றேன். சென்னையினுடைய அடையாளமாக எழும்பூரிலே இருக்கக்கூடிய பழமையான அருங்காட்சியகக் கட்டடம் 11 கோடி ரூபாய் செலவிலே புனரமைக்கப்படும் என்ற அறிவிப்பையும் நான் மனதார வரவேற்கின்றேன்.

கவின்–கலை, கட்டடக் கலை உள்ளிட்ட மாணவர்களுக்கு மடிக் கணினி இல்லாத கவலையைப் போக்கக்கூடிய வகையிலே அவர்களுக்கு மடிக் கணினி வழங்கப்படும் என்ற அறிவிப்பையும் நான் வரவேற்கின்றேன்.

பிற்பகல் 12–20

அதேபோல, சீர்மிகு சட்டக் கல்லூரியில் பயிலக்கூடிய தமிழகத்தைச் சேர்ந்த முதல் தலைமுறை மாணவர்களுக்குக் கல்விக் கட்டணச் சலுகைகள் இல்லாத நிலையை உணர்ந்து, அவர்களுக்கும் கல்விக் கட்டணச் சலுகை வழங்கப்படும் என்ற அறிவிப்பை நான் நெஞ்சாரப் பாராட்டுகிறேன். தமிழகத்திலே அமைந்திருக்கின்ற சட்டக் கல்லூரி இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக அமைய வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன், பெருங்குடியிலே முழுமையான சட்டப் பல்கலைக்கழகத்தினுடைய வளாகம் 52.25 கோடி ரூபாய் செலவிலே உருவாக்கப்படும் என்ற அறிவிப்பை நெஞ்சாரப் பாராட்டுகிறேன்.

ஒரு மேற்கத்திய சமூகவியலாளர் சிறைச்சாலைகளைப் பற்றிச் சொல்லும்போது "The extent of the civilisation of a country can be judged by walking into its Jails" என்று குறிப்பிடுவார்கள். அதாவது, ஒரு நாட்டினுடைய நாகரிகம் எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை நாம் உணர வேண்டுமென்றால் அதனுடைய சிறைச்சாலைக்குள்ளே செல்ல வேண்டும் என்று சொல்வார். அந்த அடிப்படையிலே இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறையிலே இருக்கக்கூடிய (மேசையைத் தட்டும் ஒலி) வசதிகளை மேம்படுத்தக்கூடிய வகையிலே, அங்கே 30 கோடி ரூபாய் செலவில் கழிவுநீர் சுத்திகரிப்பு வசதி செய்து தரப்படும், சூரிய சக்தி மின்சாரத்திற்கு வழிவகுக்கப்படும் என்ற அறிவிப்பையும், அதேபோல, குறிப்பாக, பெண் சிறைவாசிகளுடைய துயரங்களையெல்லாம் கருத்தில் எடுத்துக்கொண்டு, புதிதாக தமிழகத்திலே மதுரை மற்றும் கோயம்புத்தூரிலே பெண் சிறைவாசிகளுக்கென்று பிரத்யேகமாக புதிய சிறைச்சாலைகள் அமைக்கப்படும் என்ற அறிவிப்பையும் வரவேற்று, மொத்தமாக இன்றைய அத்தனை அறிவிப்புகளையும் மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்று அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று விதி 110–ன்கீழ் 4 முக்கிய அறிவிப்புகளை இங்கு வெளியிட்டிருக்கிறார்கள். அந்த அறிவிப்புகளை காங்கிரஸ் கட்சியின் சார்பில் வரவேற்று, வாழ்த்துகிறேன்.

போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில் போக்குவரத்துக் கழகங்களை மேன்மைபடுத்தும்வகையில் கடந்த ஆண்டுகூட 43 பணிமனைகள் உருவாக்கப்பட்டன. இந்த ஆண்டிலும் மாநகரம், விழுப்புரம், சேலம், கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களிலே 25 பணிமனைகள் அமைத்து, அதுபோல மலைப் பிரதேசங்களிலே செல்கின்ற மக்களுக்கு சாதகமான பேருந்து போக்குவரத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 250 சிற்றுந்துகள், அதேபோல போக்குவரத்துத் துறையில் இருப்பவர்களுக்கு 35 கோடி ரூபாய் செலவில் சிற்றுண்டிச் சாலைகள் (குறுக்கீடு) மன்னிக்கவும், சிற்றுந்துகள்–மினி பஸ் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள்.

அதுபோல பள்ளிகளிலே இடைநில்லாமல் மாணவர்கள் படிப்பதற்காக பல நல்ல சிற்றுந்துகள்–மினி பஸ் இயக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார். சென்னை மாநகரப் பேருந்துகளில் வருகின்ற மாணவர்கள், மகளிர் இவர்களெல்லாம் செல்வதற்கு 134 பேருந்துகள் என இருந்ததை 200 பேருந்துகளாக உயர்த்தியது, பயணச் சீட்டுகள் மொத்தமாக வாங்குபவர்களுக்கு 10% தள்ளுபடி, மாதாந்திரப் பயணச்சீட்டு வசதி மாநகருக்கு மட்டுமே என இருந்ததை இன்று புறநகருக்கும் மாற்றியிருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது. அதேபோல், வேலூரைத் தலைமையிடமாகக் கொண்டு துணை போக்குவரத்து ஆணையர் அலுவலகம் அமைப்பது, இன்னும் எத்தனையோ அறிவிப்புகளை அறிவித்திருக்கிறார்.

சுற்றுலாத் துறை, இசைக் கல்லூரி, திருக்கோயில்களில் கல்வெட்டுகள், தொல்பொருள் ஆராய்ச்சி, சட்டப் படிப்பிற்கு டாக்டர் அம்பேத்கர் பல்கலைக்கழகத்தை விரிவாக்குவது, பெண்களுக்குத் தனியாக சிறைச்சாலைகள் அமைப்பது, இப்படிப்பட்ட பலதுறை அறிவிப்புகளை அறிவித்திருப்பது உண்மையிலேயே பாராட்டுக்குரியது.

2013 மே 10] [திரு. எஸ். ஜாண் ஜேக்கப்]

அது மாத்திரம் அல்லாமல், இப்படிப்பட்ட அறிவிப்புகளை, என்ன அறிவிப்பு வருகிறது என்பதை தினம், தினம் கேட்பதற்காக மக்களெல்லாம் காத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாளை என்ன அறிவிப்பு வரப்போகிறதோ என்று மக்களெல்லாம் காத்திருக்கின்ற அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) இன்று நமது தமிழ்நாடு மாத்திரமல்ல, இந்தியாவே உற்று உற்றுப் பார்க்கும் அளவுக்கு மிகப் பிரமாண்டமான அறிவிப்புகளை (மேசையைத் தட்டும் ஒலி) வெளியிட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல்லாண்டு காலம் வாழ்ந்து, இந்த மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்ய வேண்டுமென்று மனதார வாழ்த்தி, காங்கிரஸ் கட்சியின் சார்பாக வாழ்த்தி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித குல வரலாற்றின் துவக்கத்தில் மனிதர்கள் முதலில் இனக் குழுக்களாக வாழத் தொடங்கினார்கள். அவர்கள் இனக் குழுக்களாக வாழ்ந்த காலத்தில் அவர்களுடைய தொழில் என்பது வேட்டையாடுதல். எனவே, அந்தக் குழுக்கள் அந்த வேட்டையாடுதல், அதில் கிடைப்பதை உண்பதில் இரண்டையுமே தேவைக்கேற்ப சமத்துவமாகப் பகிர்ந்துகொண்ட காரணத்தால், மாமேதை மார்க்ஸ் அவர்கள், அந்த இனக் குழுக்களின் வாழ்க்கையைப் பிரதான கால கம்யூனிச வாழ்க்கை என்று சொல்வார்கள். அந்த அடிப்படையில் அத்தகைய ஒரு சமத்துவம் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்த அந்த இனக் குழுக்களுக்குத் தலைமை தாங்கியவர்கள் பெண்கள். எனவேதான் அதைத் தாய்வழிச் சமுதாயம் என்று சொல்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அத்தகைய தாய்வழிச் சமுதாயத்தில் உணவு, உழைப்பு மட்டுமல்ல, தேவைகளும் பகிர்ந்தளிக்கப்பட்டன. அந்த அடிப்படையில்தான் இன்றைக்குத் தமிழ்நாட்டில் ஒரு தாய்வழித் தலைமை ஏற்பட்டிருக்கிற நேரத்தில், (மேசையைத் தட்டும் ஒலி) நீண்ட காலத்திற்குப் பின்னால் +2–விலே இரண்டு மாணவர்கள் முதலிடத்தைப் பிடித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, நமது ஆட்சியில் பாலின வேறுபாடுகள் இல்லாமல் இன்றைக்குக் கல்வித் துறையில் முன்னேறியிருக்கிறார்கள். எல்லாத்

[திரு. சு. குணசேகரன்] [2013 மே 10

துறைகளிலும் எல்லோரும் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை முதலிலே தெரிவித்து, வெற்றியடைந்த அந்த மாணவர்களுக்கு என் சார்பிலும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலும் வாழ்த்துகளை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் போக்குவரத்துத் துறையில் சிறப்பான அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே 43 பணிமனைகளை அமைத்து அடிப்படையாக பணிமனைகளை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். போக்குவரத்து என்று சொன்னால் பஸ்களைப் பழுதுபார்ப்பது, பராமரிப்பது என்பது முக்கியமான பணி. எனவே, இப்போது 22 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவிலே 25 பணிமனைகள் அதிகப்படுத்தியிருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறேன்.

அதேபோல் மலைப் பிரதேசங்களில் 250 சிற்றுந்துகளைப் பயன்படுத்துவதற்கு 35 கோடி ரூபாய், மகளிர்—சிறார் பேருந்துகளை 134—லிருந்து 200 ஆக அதிகப்படுத்தியிருப்பது, இப்படிப் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தியிருந்தாலும், இதிலே அடிப்படையான சில திட்டங்களை அறிமுகப்படுத்தியிருப்பதற்காக இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்பைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, மாதாந்திர பயணச் சீட்டுகள் நகரப் பேருந்துகளுக்கு மட்டுமல்லாமல் புறநகர்ப் பயணிகளும் பயன்படுத்துகிற வகையில் அறிவிக்கப்பட்டிருப்பது என்பது உண்மையிலேயே ஒரு நல்ல திட்டம்.

அதைப்போல, இன்றைக்குப் பயணத் திட்டத்தில் கையடக்கப் பயணிகள் பயண அட்டை திட்டம் என்பது சிறப்புக்குரியது. அதை இனிமேல் அதிகப்படுத்துவதற்கான நடைமுறைகளை உருவாக்க வேண்டும். இப்போது சென்னையில் முதல் துவக்கமாக உருவாக்கியிருக்கிறார்கள். மேலை நாடுகளிலெல்லாம் இன்றைக்கு இரயிலாக இருந்தாலும், மெட்ரோ இரயிலாக இருந்தாலும் அல்லது பேருந்துகளாக இருந்தாலும், இந்தக் கையடக்க பயண அட்டைத் திட்டத்தின் அடிப்படையில், 6 மாதம், ஒரு வருடம் என்ற அடிப்படையில், சலுகைத் திட்டத்தின் அடிப்படையிலே அந்தப் பயணத் திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அதன் மூலமாக மக்கள் எளிதாக பல இடங்களுக்குச் சென்று வருவதற்கும், தங்களுடைய பயணச் செலவுகளைக் குறைப்பதற்குமான வாய்ப்புகள் உறுதி செய்யப்பட்டிருக்கின்றன. எனவே, அந்த

நடைமுறையை இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழ் மாநிலத்தில் உருவாக்கியிருப்பதற்காக நமது மாண்புமிகு தமிழக முதல்வருக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், ஓட்டுநர்கள் அவர்களுடைய திறமைகளை வளர்ப்பதற்கு அல்லது அவர்கள் அந்தச் சான்றிதழைப் பெறுவதற்கு ஆர்.டி.ஓ. அலுவலகங்கள் கூடுதலாக உருவாக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, வால்பாறை, திருத்துறைப்பூண்டி போன்ற இந்திய கம்யூனிஸ்டு கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கக்கூடிய அந்த தொகுதிகளில் உள்ள ஆர்.டி.ஓ. அலுவலகங்கள் உருவாக்கப்பட்டிருப்பதற்கும் வரவேற்பைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு சாலை விபத்துகள் என்பது பெருமளவில் நிகழ்ந்துகொண்டிருக்கிற நேரத்தில் சாலை விபத்துகளைக் குறைப்பதற்காக, தவிர்ப்பதற்காக அந்த ஓட்டுநர் தளங்களை ரூ.10 கோடி மதிப்பீட்டில் கணினிமயமாக்கப்படுகிற அந்தத் திட்டம் என்பது வரவேற்கப்படக்கூடியது. அதே நேரத்தில் இன்னொரு திட்டமாக முன்பதிவில் குறைந்தபட்சம் 10 நபர்களுக்கு சேர்த்து குழுவாகப் பதிவு செய்தால் 10 சதவிகித சலுகைக் கட்டணம் அளிக்கப்படுகிறது. இது உண்மையிலேயே வரவேற்கக்கூடியது மட்டுமல்ல. அரசுப் பேருந்துகளில் பயணிகளை ஈர்ப்பதற்கான ஒரு வழியையும் உருவாக்கியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இதில் குறிப்பாக நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பண்டிகைக் காலங்களில் அந்தச் சலுகை இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். வருங்காலங்களில் இதனை அவர்கள் பரிசீலிக்க வேண்டும்.

பிற்பகல் 12–30

இன்றைக்கு நமது தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, பண்டிகைக் காலங்களில் கடந்த 2 ஆண்டு காலமாக பொங்கல், தீபாவளி போன்ற நாட்களில் மக்கள் அதிகளவில் செல்கிறார்கள். கடந்த காலங்களிலெல்லாம் தாங்கள் பணியாற்றக்கூடிய ஓர் இடத்திலிருந்து சொந்த ஊருக்குச் செல்வது என்பது மிகப் பெரிய சிரமமான காரியம். இரவெல்லாம் விழித்து பேருந்து நிலையங்களிலும், இரயில் நிலையங்களிலும் காத்துக் கிடந்து, தீபாவளி மறுநாள் காலை என்று சொன்னால் அல்லது பொங்கல்

[திரு. சு. குணசேகரன்] [2013 மே 10

மறுநாள் காலை என்று சொன்னால், தீபாவளிப் பண்டிகை முடிந்து, பொங்கல் பண்டிகை முடிந்து, அதற்கு மறுநாள் காலையிலே அந்தக் குடும்பங்கள் தங்கள் சொந்த ஊருக்குச் சென்றடைந்த காலமெல்லாம் உண்டு. இதைப் பயன்படுத்தி தனியார் பேருந்துகளெல்லாம் கொள்ளையடித்த காலங்களும் உண்டு. ஆனால், நமது மாண்புமிகு தமிழக முதல்வர் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய எல்லா மத்தியப் பேருந்து நிலையங்களிலும் மாண்புமிகு அமைச்சர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் இரவெல்லாம் விழித்திருந்து, நேரடியாகச் சென்று, கூடுதலான பணியாளர்களை நியமித்து, பேருந்துகளைச் சீரமைத்து, ஒழுங்குபடுத்தி, வரக்கூடிய அத்தனைப் பயணிகளுக்கும் அவர்கள் சேவைகளைச் செய்கிறார்கள். அவர்கள் செய்கிற சேவைகளைப் பார்க்கிற நேரத்தில், விமானப் பயணத்தில் மட்டும்தான் நமது நாட்டில் அத்தகைய சேவை முறை இருக்கும்; அத்தகைய விமானப் பயணிகளுக்கு எத்தகைய அன்பான உபசரிப்போடு, விமானத்தின் இருக்கைவரை சென்று பயணிகளை அமர்த்துவார்களோ அதைபோல, விழாக் காலங்களில் பேருந்து நிலையங்களில் அதிகாரிகளும், போக்குவரத்துத் துறையிலே பணியாற்றக்கூடிய உயர் அதிகாரிகள், ஊழியர்களெல்லாம் சென்று, அமைச்சர் உள்ளிட்ட அத்தனை பேருமே, ஒவ்வொரு பயணியையும் பேருந்தில் அமர வைத்து, அந்தப் பேருந்து புறப்பட்டதற்குப் பின்னால்தான் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் அடுத்த பணியைச் செய்கிற அளவிற்கு ஒரு சிறப்பான திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அதுவே தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மக்களுக்குப் பெரிய உதவியாக அமைந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைபோல, சுற்றுலாத் துறைக்கு இன்றைக்கு நிறையத் திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். காலம் கடந்து கொண்டிருக்கிறது. சென்னையில் இருக்கக்கூடிய தேசியக் கலைக்கூடம்; அதைப் புதுப்பிக்க ரூ.11 கோடி, உண்மையிலேயே ஒரு சிறந்த திட்டம். அதைப்போல, சோழர் கால ஏழாம் நூற்றாண்டுக் கோயிலைப் புதுப்பிக்க ரூ.1 கோடி, அதுவும் சிறந்த திட்டம். தமிழ்நாடுதான் தொல்லியல் துறையில் அதிகமான கல்வெட்டுகளைப் பெற்றிருக்கிற ஒரு மாநிலம். குகைக் கோயில்கள் அதிகமாக இருக்கக்கூடிய ஒரு மாநிலம். அந்த அடிப்படையில், 24,600 கல்வெட்டுகளையும் புதுப்பிக்கும்விதமாக, அதனுடைய

வரலாறுகள் எந்தக் காலத்திலும் சிதைந்துவிடாமல் இருப்பதற்காக கணினிமயமாக்கப்படுவதற்காக ரூ.50 இலட்சம் என்ற புதிய நடைமுறையை உருவாக்கியிருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நான் வரவேற்கிறேன்.

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக இன்றைக்கு இசை, கவின்கலைப் பல்கலைக்கழகம் உருவாக்கியிருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் சிறப்பாக நாங்கள் வரவேற்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து இசை, கிராமிய இசைகளை ஒன்றிணைத்து, அதைப் பாதுகாத்து அதனுடைய தன்மைகளை, தரத்தை இளைய தலைமுறை, எதிர்காலத் தலைமுறை பயன்படுத்துகிற வகையில் கொண்டு செல்வதற்கு இந்தப் பல்கலைக்கழகம் பேருதவியாக இருக்கும். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து இசை சம்பந்தப்பட்ட பாடப் பிரிவுகளையும் அதில் தொகுத்துக் கொண்டு செல்வதற்காக எடுத்திருக்கிற முயற்சியும் பாராட்டுக்குரியது. குறிப்பாக, இன்றைக்கு மேற்கத்திய இசையால், நமது இசை தேய்ந்து கொண்டிருக்கின்ற நேரத்தில், நமது இசையை மீண்டும் தலைநிமிரச் செய்வதற்கான இந்த நடவடிக்கை வரவேற்கத்தக்கது.

கடந்தகால ஆட்சியில்கூட கிராமிய இசைகளை, கிராமியக் கலைஞர்களைப் பாதுகாக்கிறோம் என்ற அடிப்படையில் ‘சங்கமம்’ என்ற ஒரு நிகழ்ச்சியை ஒரு மின்மினிப் பூச்சி நிகழ்ச்சிபோல நடத்திக் காட்டினார்கள். அதனால் தை ஒன்றாம் தேதி கலைஞர்கள் கூடினார்கள், ஆடினார்கள், பாடினார்கள். அடுத்த கட்டம் என்னவென்றே தெரியாத நிலையில் பல நூறு கோடி ரூபாய்கள் செலவழிக்கப்பட்டன. ஆனால், இன்றைக்கு உண்மையாகவே தமிழ்நாட்டினுடைய இசை, கிராமியக் கலைகளை (மேசையைத் தட்டும் ஒலி) வளர்ப்பது என்று சொன்னால், இத்தகைய அணுகுமுறையும், நடவடிக்கைகளும், திட்டங்களும்தான் இன்றைக்குப் பாதுகாக்குமே தவிர, அதன் மூலமாக எழக்கூடிய எழுச்சி தமிழ்நாட்டு மக்களை ஆதரித்து நிற்கும். எனவே, இந்தத் திட்டத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நான் வரவேற்கிறேன்.

அதைபோல சட்டக் கல்லூரி மாணவர்களுக்குப் பல்வேறுவிதமான உதவிகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. பொதுவாக நீதிமன்றமும், சட்டமும்தான் நம்மை ஆண்டு கொண்டிருக்கின்றன. ஆனால், கடந்தகால ஆட்சி முறைகளை

[திரு. சு. குணசேகரன்] [2013 மே 10

பார்க்கிற நேரத்தில் நீதிமன்றங்களாக இருந்தாலும் சரி அல்லது சட்டக் கல்லூரி, சட்ட விடுதிகள் என்று எடுத்துக்கொண்டால் அதற்கான கூடுதலான நிதியொதுக்கீடுகள் இருக்காது. கடந்த முறைகூட நாங்களெல்லாம் நீதிமன்றங்களுக்குக் கூடுதலான நிதிகளைக் கேட்கிற நேரத்தில், மத்திய அரசிடமிருந்து நிதி வந்தால் கட்டுவோம் என்றுதான் பதில் சொன்னார்கள். ஆனால், மத்திய அரசிடமிருந்து நிதி வருகிறதோ இல்லையோ, மாநில அரசு சட்டத்தினுடைய ஆட்சியை மட்டுமல்ல (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சட்டத்தைப் பாதுகாக்கிற நீதிமன்றங்களுக்கும், அதைப் பாதுகாத்துக் கொண்டிருக்கின்ற சட்டம் பயிலுகின்ற மாணவர்களுக்கும், அவர்கள் தங்கியிருக்கின்ற விடுதிகளுக்கும், அம்பேத்கர் சட்டக் கல்லூரியைப் புதிய நவீன வடிவத்தில் வசதியாக உருவாக்குவதற்கும் ரூ.59 கோடியே 27 இலட்சம் என்கின்ற அடிப்படையில் நிதிகளை அள்ளிக் கொடுத்திருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறோம்.

பிற்பகல் 12—35

அதைப்போல, சிறைத் துறை, அதிலே குறிப்பாக, மகளிர் நலனைக் காக்க மதுரை மற்றும் கோவையில் தனிச் சிறைகள் அமைத்திருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியில் சார்பில் வரவேற்கிறேன். 13 மாவட்டங்களிலும் சிறைச்சாலைகளை உருவாக்குவதற்கு முன்னோடியாக, திருப்பூர், தருமபுரி மற்றும் விழுப்புரத்தில், முதலில் 3 மாவட்டங்களில் உருவாக்கியிருக்கிறார்கள். சிறைச்சாலைகளில் மரபு சாரா எரிசக்தி உற்பத்திக்கு ரூ.35 கோடி நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல நவீன சுத்திகரிப்பு நிலையத்திற்காக ரூ.30 கோடி என்று ஒரு பெரும் தொகையை ஒதுக்கி, சிறைக் கைதிகள் அவர்கள் சமுதாயத்தில் தவறு செய்திருந்தாலும், அவர்கள் சட்டத்தின்படி தண்டிக்கப்பட்டதற்குப் பின்னால், அவர்கள் திருந்த வேண்டும், அவர்களும் மனிதர்கள்தான் என்ற உணர்வோடு அவர்களைப் பாதுகாத்து, திருத்துவதற்கான ஒரு இடமாக சிறைச்சாலையை மாற்றுகிற வகையில், இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிற இந்தத் திட்டங்களையெல்லாம் நான் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறேன்.

நேற்றும், நேற்றைய முன்தினமும், 2 நாட்களாக மத்திய அரசின் சார்பில் தமிழகத்தில் வறட்சியை மத்தியக் குழு பார்வையிட்டு, நேற்றையதினம் தமிழக முதல்வர் அவர்களை அந்தக் குழு

2013 மே 10] [திரு. சு. குணசேகரன்]

சந்தித்திருக்கிறது. அந்தக் குழுவின் தலைவர் திரு. சர்மா அவர்கள் தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கக்கூடிய கடுமையான வறட்சியைச் சுட்டிக்காட்டி, தமிழ்நாட்டில்தான் இந்தியாவிலேயே வறட்சி வருகிறது என்று அறிந்து, அதைத் தடுப்பதற்கும், வறட்சியிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கும் (மேசையைத் தட்டும் ஒலி) ஒருங்கிணைந்த திட்டங்களை உருவாக்கியிருக்கிறார்கள் என்று சிறப்பாகப் பாராட்டி அந்தத் திட்டங்களைப் பற்றியெல்லாம் சொல்லி, கடைசியாக அவர் சொல்லியிருக்கிற ஒரு காரணம், வறட்சி என்று சொன்னால் மக்கள் இடம் பெயர்வார்கள், migrate-ஆவது என்பதுதான் கடந்த கால வரலாறு. ஆனால் இன்றைக்குத் தமிழ்நாட்டில் எந்த ஒரு தனி மனிதனும், தனிக் குடும்பமும் இத்தகைய வறட்சியான கொடுமையில்கூட இடம் பெயராமல், சொந்தக் கிராமங்களில், சொந்த இடங்களில் வாழ்கிறார்கள் என்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வறட்சியை எதிர்கொள்கிற ஒரு நிருவாக அமைப்பு முறையும், சிந்தனையும், திட்டங்களும் இருக்கிற காரணத்தினால் அதை எதிர்கொண்டு இருக்கிறோம் என்பதைச் சொல்லி, நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மத்தியக் குழுவிடம் ரூ.19,990 கோடி நிதியைக் கேட்டிருக்கிறார்கள். மத்தியக் குழு சிறப்பாகப் பாராட்டியிருக்கிறது. ஆனால், குழு மத்திய அரசுக்குக் கொண்டுபோய் அந்தத் திட்டங்கள் குறித்து சொல்லப் போகிறார்கள். மத்தியிலே இருக்கின்ற ஆட்சியாளர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. 'தானே' புயலில் நாம் பட்ட அனுபவம் நமக்கு ஒரு கரும்புள்ளியாகவே இருந்துகொண்டிருக்கிறது. எனவே, இன்றைக்கு மத்திய அரசின் குழு வந்து சென்றாலும், மத்திய ஆட்சியாளர்களைப் பொறுத்தவரை திருவிழாக் கூட்டத்தில் பிள்ளையைப் பிடிப்பவர்களைப்போலத்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களும், நமது அரசும் எச்சரிக்கையோடு மத்திய அரசை அணுகி இந்த நிதியைப் பெறுவதற்குப் பேருதவியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள். (குறுக்கீடு) அதில் என்ன இருக்கிறது? அதில் ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், அதில் ஒன்றும் இல்லை.

(குறுக்கீடு) அவர் பொதுவாகத்தான் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டு நான் முடிவெடுக்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், நீங்கள் பேசுங்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து தொழிலாளர் சம்மேளனத்தோடு தொடர்பு உடையவன் என்கிற முறையில் ஏற்கெனவே நான் எழுப்பியிருக்கிற பல்வேறு கவலைகளுக்கு இந்த அறிவிப்பிலே பதில் கிடைத்திருக்கிறது. Dead mileage என்பது நம்முடைய போக்குவரத்துக் கழகங்களில் ஒரு பெரிய பிரச்சினையாக இருந்தது. போக்குவரத்துக் கழகங்களின் நஷ்டத்திற்கு ஒரு காரணமாகவும் இருந்தது. அதிக பணிமனைகளை வைப்பதன் மூலமாகத்தான் அதை நாம் குறைக்க முடியும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள், தங்களுடைய இடத்திற்குச் செல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி, உங்களுடைய இடத்திற்குச் சென்று உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், நீங்கள் பேசுங்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: Dead mileage என்பதுதான் நம்முடைய போக்குவரத்துக் கழகங்களின் இழப்புக்கு மிக முக்கியமான காரணியாக இருந்தது. அதிகப் பணிமனைகள் என்பதும், அதிக ஊழியர்கள் என்பதும், தினசரி பராமரிப்பு, வாராந்திர பராமரிப்பு, மாதாந்திர பராமரிப்பு என்பதும் அவசியம். அதேபோல preventive maintenance செய்யப்பட வேண்டும். பழுதுபட்ட பிறகு பழுதுபார்ப்பது என்பது வேறு, பழுதுபடாமல் பார்த்துக்கொள்வது என்பது வேறு. இதற்கெல்லாம் பணிமனைகள் என்பது மிக முக்கியமான கூறு ஆகும். அதனை உணர்ந்து எங்களுடைய நீண்டநாள் கோரிக்கைகள் நிறைவேறுகிற வகையிலே பணிமனைகள் அதிகம் வந்துகொண்டிருக்கின்றன. இந்தப் பணிமனைகளை அதிகப்படுத்துவதன்மூலமும், பழுதுபார்ப்பை சரிசெய்வதன் மூலமாக நடைத் தடைகளை நாம் பெரிய அளவுக்குக் குறைக்க முடியும். இப்போது குறைத்திருக்கிறோம். இன்னும் பெரிய அளவுக்குக் குறைக்க முடியும். இதன் மூலமாக நம்முடைய வருமானத்தைப் பெருக்க முடியும். அதற்கான ஒரு ஏற்பாடு இதற்குள்ளே அமைந்திருக்கிறது என்பதை நான் பாராட்டுகிறேன்.

2013 மே 10] [திரு. அ. சவுந்தரராசன்]

பிற்பகல் 12—40

அதேபோல, மினி பஸ் என்பது மொத்தமும் தனியாரிடம்தான் கடந்த ஆட்சியிலே விடப்பட்டது. மினி பஸ் வரும். ஆனால், அது முழுக்க, முழுக்க தனியாருக்குத்தான். அரசுப் பேருந்து ஓடாத இடங்களில் மட்டும், unserved area-ல் மினி பஸ் ஓடும் என்று அறிவித்து, முந்தைய ஆட்சியில் அனுமதித்தார்கள். ஆனால், நம்முடைய பேருந்து ஓடக்கூடிய வழித் தடத்திலேயே 5 கிலோ மீட்டர், 7 கிலோ மீட்டர் என்று அனுமதித்து, நம்முடைய வருமானத்தை மிகப் பெரிய அளவில் பாதிப்பிற்குள்ளாக்கினார்கள். இப்போது மினி பஸ் இருக்கும், அவர்கள் சொன்னதுபோல, சிற்றுந்து இருக்கும். ஆனால், அந்த சிற்றுந்துகளை நம்முடைய போக்குவரத்துக் கழகங்களே இயக்கும் என்பதுதான் இதிலே இருக்கின்ற மிக முக்கியமான ஒன்று. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சிற்றுந்துகளை நாம் சிறப்பாக இயக்குவதன் மூலமாக, இழப்பு ஏற்படுத்துகிற பேருந்துகளுடைய இழப்பை ஈடுகட்ட முடியும். சிற்றுந்துகளை மிகச் சிறப்பாக நாம் வருமான ஊற்றாக ஆக்க முடியும். அது இங்கே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

அதேபோல, மகளிருக்கும் சிறார்களுக்கும் இன்னும் நிறைய தனிப் பேருந்துகள் தேவை. இருந்தாலும் இப்பொழுது நல்ல தொடக்கமாக 200 பேருந்துகள் என்று ஆக்கியிருக்கிறோம். மகளிருக்குத் தனியாகப் பேருந்தும் கிடைத்திருக்கிறது. அவர்களுடைய வசதி கருதி, அவர்களுக்கு இருக்கின்ற இன்னல் கருதி, தனிச் சிறையும் கிடைத்திருக்கிறது.

அதேபோல, முன்பயணச் சலுகை அட்டைகளில் மூன்றில் ஒரு பங்கு சலுகை என்பது நகரத்திற்கு மட்டும்தான் இருந்து கொண்டிருந்தது. அதிலும் எங்களுக்கு நீண்டகாலமாக கேட்டுக்கொண்டிருக்கக்கூடிய ஒரு கோரிக்கை இருந்தது. இப்பொழுது மாவட்டப் புறவழித் தடங்களுக்கும் அது வரும் என்பது நிச்சயமாக நகரத்தையொட்டி இருக்கக்கூடிய, நகரமயமாகிக் கொண்டிருக்கின்ற இன்றைய சூழ்நிலையில் பயணிகளுக்கு மிகப் பெரிய வரப்பிரசாதமாக முன்பயணச் சலுகை அட்டைகள் அமையும். நமக்கும் ஒவ்வொரு மாதத்திற்கு முன்பே பணம் கிடைத்துவிடும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இரண்டும் சேர்த்து அது சிறப்பாக இருக்கும் என்று நான் பாராட்டுகிறேன்.

[திரு. அ. சவுந்தரராசன்] [2013 மே 10

அதேபோல், வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களை அதிகப்படுத்துவது என்பது வாகனப் பெருக்கம் பெருமளவுக்கு பெருகிக் கொண்டிருக்கும்போது தேவைப்படுகிறது. இப்பொழுது ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளிலே 'ஓட்டுநர் உரிமம் பெற்றுத் தரப்படும்' என்று விளம்பரம் செய்யக்கூடியவர்கள் இருக்கிறார்கள். பெற்றுத்தரப்படும் என்றால், 'பெற்றுத் தரப்படும்'. கற்றுத் தரப்படுமா என்பது கேள்விக்குறி? அதுவே இன்றைக்கு பொதுவாக ஓட்டுநர்கள் மத்தியிலே மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. இப்பொழுது கணினிமயமாக்குவதன் மூலமாக உண்மையான திறமை உள்ளவர்களுக்கு மட்டும்தான் ஓட்டுநர் உரிமம் கிடைக்கும் என்பதை மிகக் கறாராக, கண்டிப்பாக, அமல்படுத்துவது தமிழ்நாட்டிற்குத் தேவை, வாகனப் பெருக்கம் இருக்கிறபோது மேலும் தேவை. தரமான வண்டி தேவை என்பதைப்போல, தரமான ஓட்டுநரும் தேவை. அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன்.

அதேமாதிரி, தொன்மையைக் காப்பாற்றுவது, நம்முடைய பாரம்பரியத்தைக் காப்பாற்றுவது, அதற்காகச் செய்யப்பட்டிருக்கின்ற ஏற்பாடுகள், நம்முடைய சென்னை நகரத்தினுடைய எழிலார்ந்த நினைவுச் சின்னமாக இருக்கக்கூடிய தேசிய கலைக்கூடத்தைப் புதுப்பிப்பது என்பவற்றை வரவேற்கிறேன். கவின்கலைக் கல்லூரி மாணவர்களுக்கும், இசைக் கல்லூரி மாணவர்களுக்கும், இதர மாணவர்களுக்குச் சமமான மதிப்பை, அந்தஸ்தை இப்பொழுதுதான் நாம் கொடுத்திருக்கிறோம். அவர்களுக்கும் மடிக் கணினி வழங்குகிறோம். அதேபோல, கட்டணமில்லாப் பேருந்து வசதி அவர்களுக்கும் கிடைக்கப் போகிறது. அவர்களுடைய நீண்டகாலக் கோரிக்கை நிறைவேறியிருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன்.

அதேபோல, சட்டக் கல்லூரி விஷயத்தில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள், சட்டப் பல்கலைக்கழகத்திற்கு நாம் கட்டவிருக்கின்ற புதிய கட்டடங்கள், அவற்றையும் நான் பாராட்டுகிறேன்.

சிறைத் துறையைப் பொறுத்தவரையில், மிக முக்கியமாகத் தேவைப்படுவது சிறைகளுக்குள் சீர்திருத்தம். சுதந்திரப் போராட்டக் காலத்திலிருந்து சிறைக்குள் இருந்த நம்முடைய பெரும் தலைவர்கள் உட்பட அத்தனைபேரும் தொடர்ந்து எழுப்பிக் கொண்டிருப்பது, இன்றைக்கும்கூட மிக முக்கிய மனித உரிமை ஆர்வலர்களுடைய விவாதப் பொருளாக இருப்பது, சிறை

2013 மே 10] [திரு. அ. சவுந்தரராசன்]

சீர்திருத்தம். சிறைகளிலே அளவுக்கு அதிகமாக ஆட்களை அடைப்பது, அதன் மூலமாக ஏற்படக்கூடிய சிக்கல்கள், பிரச்சினைகள், அவற்றையெல்லாம் நாம் சீர் செய்ய வேண்டும் என்கிற கோரிக்கை இருந்தவந்த தருணத்தில், சிறைகளை நாம் அதிகப்படுத்துகிறோம்; சிறைக்குள்ளே சுகாதார ஏற்பாடுகளை அதிகப்படுத்துகிறோம்; சிறை வசதியை அதிகப்படுத்துகிறோம் என்கிற முறையிலே எடுக்கப்பட்டிருக்கக்கூடிய நடவடிக்கைகளும் பாராட்டிற்குரியவை. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே இந்த அறிவிப்புகளை நான் வரவேற்கிறேன், மகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள்.

திரு. டி. சுரேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே விதி 110–ன்கீழ் எப்பொழுது அறிவிப்பு வரும் என்று தமிழக மக்கள் காத்துக் கொண்டிருக்கின்ற வேளையிலே, இன்றையதினம் நான்கு அறிவிப்புகளை, முத்தான அறிவிப்புகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்ததை வரவேற்கிறேன். அவர்கள் சொல்வதைப்போல, நேரம் பொன் போன்றது. அனைத்து உறுப்பினர்களும் இங்கே விரிவாகப் பேசியுள்ளார்கள்.

பிற்பகல் 12–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிற்காக தமிழ்த் தாய் ஈன்றெடுத்த தமிழ்த் தலைவியே! (மேசையைத் தட்டும் ஒலி) தாழ்த்தப்பட்ட மக்களின் தர்ம தேவதையே! (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்துச் சமூக மக்களும் ஒன்றே என்று உணர்ந்த உத்தமத் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழன், தமிழன் என்று நாடகமாடியவர் மத்தியிலே தமிழுக்குத் தன்னையே அர்ப்பணித்துக்கொண்ட வள்ளலே! (மேசையைத் தட்டும் ஒலி) இன்று தமிழகத்தை ஆட்சி செய்து வரலாறு படைத்து, நாளைய இந்தியாவை ஆளப்போகும் வல்லமை பொருந்திய தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) முந்தைய கருணாநிதி ஆட்சியில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க இடம் பார்க்கிறோம், இடம் பார்க்கிறோம் என்று கூறி, ஆட்சி முடியும் வரை பணிமனைக்கான இடம் தரவில்லை. இன்றையதினம் வரலாறு படைக்கின்ற தமிழகத்தின் தன்னிகரற்ற தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள்,

செங்கம் தொகுதியில் போக்குவரத்துப் பணிமனை அமைத்துத் தரப்படும் என்று அறிவித்ததற்கு, என் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றி, நன்றி என்று கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற கோடிக்கணக்கான பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் சார்பாக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு முதலிலே என்னுடைய நன்றியினைப் பகிர்ந்துகொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையான, 69 சதவிகிதம் இட ஒதுக்கீட்டுக் கொள்கையினை அமல்படுத்திய காரணத்தினால், கடந்த 20 ஆண்டுகளில், மூலைமுடுக்குகளில் இருக்கின்ற சாதாரண ஏழையெளிய மக்கள், இந்த 20 ஆண்டுக்காலத்தில், அந்த மாணவச் செல்வங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கருணையால், தமிழகம் முழுவதும் அல்ல, உலகம் முழுவதும் மருத்துவர்களாக, பொறியாளர்களாக இன்று வலம் வந்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குக் காரணம், 69 சதவிகித இடஒதுக்கீட்டுக் கொள்கை. அந்த இடஒதுக்கீட்டுக் கொள்கையை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மனதிலே ஓடிக்கொண்டிருக்கின்ற காரணத்தினால்தான், இந்த தேசிய சட்டப் பள்ளியில் திறமைமிக்க மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காகத் தேர்வு முறைகள் கொண்டுவந்தாலுங்கூட, அந்த முதல் தலைமுறை மாணவன் சாதாரண குடும்பத்திலேயிருந்து வருகின்றவன், அவனுக்கு மற்ற மாணவர்களைப்போல, கல்விக் கட்டணத்தில் சலுகை வழங்க வேண்டுமென்று தாயுள்ளத்தோடு

2013 மே 10] [திரு. கே.பி. முனுசாமி]

அறிவித்திருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சமூக மக்களின் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தனது சமூகம், தன்னுடைய மக்கள், தன் மக்களுக்காகவே நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்று பல சமூகத் தலைவர்கள் சுயநலம் கருதி போராடிக் கொண்டிருந்தாலும், தமிழகத்தினுடைய ஒட்டுமொத்த சமூகத்தினுடைய தலைவராக (மேசையைத் தட்டும் ஒலி) முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) எல்லோருக்கும் சமமான நிலையிலே நீதி வழங்கக்கூடிய, சமூக நீதி காத்த வீராங்கனை எங்களுடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் மன மகிழ்ச்சியோடு இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலே, பொதுவாக நிருவாகம் என்றால் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தவிர சிந்தித்துச் செயல்படக்கூடிய ஒரு தலைவர் யாருமே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) காரணம், ஒவ்வொரு துறையாக, எந்தத் துறையாக இருந்தாலும், அந்தத் துறையின் தலைமைப் பொறுப்பிலே அமர்ந்திருக்கின்றவர்களிலிருந்து, அவருக்குக் கீழே பணியாற்றுகின்ற அனைத்து அலுவலர்களும் மன அமைதியோடு, மகிழ்வோடு திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும், செயலாற்ற வேண்டும் என்ற குறிக்கோளைக் கொண்டவர். அதன் அடிப்படையிலே இன்று டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு 59.27 கோடி ரூபாயை ஒதுக்கி, அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்துவதற்காக நிதியை ஒதுக்கிக் கொடுத்துள்ளார்கள். எனவே, இத்துறையின் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பொதுவாக, நாங்களும் சட்டம் படித்திருக்கின்றோம். படிக்கின்ற காலத்தில் அங்கே பார்த்தீர்கள் என்றால், ஒரே ஒரு கட்டடம்தான் இருக்கும். கெல்லீசிலே ஒரு கட்டடம்; அது நீண்டகாலமாக இருந்தது. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித்

[திரு. கே.பி. முனுசாமி] [2013 மே 10

தலைவி அம்மா அவர்கள் 7 கல்லூரிகளை உருவாக்கி, அனைத்துக் கல்லூரிகளுக்கும், இப்போது வேலூரில் உள்ள அந்தக் கல்லூரிக்கு மட்டும்தான் இடம் இல்லாமல் இருந்தது. இன்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதியை ஒதுக்கி, அங்கே கட்டடம் கட்டிக் கொடுத்ததற்கு, அந்த மாணவர்களின் சார்பாகவும், துறையின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12—50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் ஜவாஹிருல்லா அவர்கள் கூறினார்கள். ஒரு நாட்டினுடைய செயல்பாடுகள் எப்படி என்பதை அங்குள்ள சிறையைப் பார்த்தால் தெரியும் என்று சொன்னார்கள். சென்னையில் இருக்கின்ற மத்திய சிறைச்சாலை வெள்ளையர் ஆட்சிக் காலத்திலே அமைக்கப்பட்டது. அன்றைக்கு ஆங்கிலேயர்கள் அடிமைப்பட்டு கிடந்த நம் இந்தியர்களை அந்த சிறைச்சாலையிலே வைத்தார்கள். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புழல் சிறைச்சாலையை அனைத்து வசதிகளும் கொண்ட ஒரு சிறைச்சாலையாக உருவாக்கிக் கொடுத்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்பொழுதுமே நிருவாகத் தலைவர்கள் கூட்டம் அதிகமாக இருக்கிறது என்பதற்காக ஓர் இடத்தை மாற்றுவார்கள். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புதிய சிறைச்சாலையை எந்தக் கண்ணோட்டத்தோடு உருவாக்குகிறார் என்று பாருங்கள். நேரம், காலம் சிறைச்சாலைக்கு உறவினர்கள் வந்து செல்வதற்காக, அவர்களுடைய மன ஓட்டத்தை அறிந்து கொண்டு, புதிய சிறைச்சாலைகளை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். இப்படிச் சிறைத் துறையிலே பல்வேறு சீர்த்திருத்தங்களைக் கொண்டுவந்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு சிறைத் துறையின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

2013 மே 10]

*மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா, தாங்களும், தெய்வமும் தனித் தனி வடிவங்கள் இல்லையென்பதை நாளும், நாளும் மெய்ப்பிக்கும் வண்ணம் (மேசையைத் தட்டும் ஒலி) விதி 110—ன்கீழ் மக்களுக்குப் பயன்தரும் திட்டங்களைத் தரும் மக்களாட்சியின் மணிமகுடமே! கோடை வெயில்கூட தங்கள் திட்டத்தால் குளிர்கிறது தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) தங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

இதுவரை சொல்லப்பட்ட சுவைகள் ஆறு. அம்மா, உங்களின் அன்பு என்னும் ஏழாவது சுவையையும் இணைத்து விருந்தோம்பலின் கலங்கரை விளக்கமாக சுற்றுலாத் துறை திகழ ரூ.5 கோடி செலவில் திறன்சார் பயிற்சித் திட்ட மையத்தைத் தரமுயர்த்திய தரணி புகழும் தாயே! தங்களுக்கு சுற்றுலாத் துறையின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைப் பணிந்து சமர்ப்பிக்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

‘கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு’

ஒரு செயலைச் செய்வதற்கு வேண்டிய கருவிகளையும், ஏற்ற காலத்தையும் செய்யும் வகையையும், செயலின் அருமையையும் நன்கு சிந்திப்பவரே, நல்ல ஆட்சியாளர் என்றார் வள்ளுவப் பெருந்தகை. (மேசையைத் தட்டும் ஒலி) முடியாது என்று ஏனையோர் சொல்வதை முடித்துக் காட்டுகின்ற ஆற்றலும், நடக்காது என்று மற்றவர்கள் நினைப்பதைக்கூட நடத்திக் காட்டுகின்ற வலிமையும் கொண்ட ஒரே முதலமைச்சர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலம் போக்குவரத்துத் துறைக்குப் பொற்காலம். பேருந்துகளின் இயக்கம் டீசல்மூலம் என்றாலும், போக்குவரத்துத் துறையின் செயலாக்கம் கணினிமூலம் என்னும் புதுமைகளோடு சுகமான

[திரு. வி. செந்தில்பாலாஜி] [2013 மே 10

பயணம், நிறைவான சேமிப்பு என ஏழையெளிய மக்களுக்கு அரசுப் போக்குவரத்துக் கழக வரலாற்றில் முதன்முதலாக முன்பதிவு மூலம் 10–க்கும் மேற்பட்டோர் குழுவாகப் பயணம் செய்பவர்களுக்கு 10 சதவிகிதம் பயணச் சலுகை; மாதாந்திரப் பயண அட்டை பெறுபவர்களுக்கு மூன்றில் ஒரு பங்கு பயணச் சலுகை; புதுப்பிக்கக்கூடிய கையடக்க பேருந்து பயண அட்டைகள்; மகளிர் மற்றும் சிறுவர்களுக்குப் பேருந்துகள்; மாட்டு வண்டிகூட போக முடியாத காடுகளைக் கடந்து மலைகளில் வாழும் மலைவாழ் மக்கள் நலன் கருதி, நாட்டிலேயே முதன்முதலாக மலைப் பகுதிகளுக்கு 250 சிற்றுந்துகள் (மேசையைத் தட்டும் ஒலி) எனப் பல்வேறு அறிவிப்புகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் ஐந்தாண்டுகளில் 10 புதிய பணிமனைகள் மட்டுமே உருவாக்கப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 24 மாத ஆட்சிக் காலத்தில் 68 புதிய பணிமனைகளை வழங்கி. வரலாறு படைத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வாகன எண்ணிக்கை உயர்விற்கேற்ப புதிய அலுவலகங்கள்; விபத்தினைக் குறைக்க தரமான ஓட்டுநர்களை உருவாக்க கணினிமயமாக்கப்பட்ட ஓட்டுநர் தேர்வு தளங்கள் என எங்கும் புதுமை; எதிலும் புதுமை; ஆம். புதுமையிலும் புதுமை எனத் தொலைநோக்குப் பார்வையோடு மக்கள் நலனை மட்டுமே மனதிலே கொண்டு, மக்களுக்கு வசதிகள் செய்வதையே குறிக்கோளாகக் கொண்டு போக்குவரத்துத் துறையில் புதுமைத் திட்டங்களைத் தந்துள்ள, பூமிக்கு வந்த புண்ணியமே! புரட்சியில் விளைந்த பொன்மனமே! மக்களைக் காத்திடும் கண்ணியமே! (மேசையைத் தட்டும் ஒலி) 7 கோடி தமிழர்களின் இதயமே! இன்றைய தமிழகமே! நாளைய பாரதமே! (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களில் கோடானுகோடி நன்றி மலர்களைச் சமர்ப்பித்து வணங்குகிறேன்.

பிற்பகல் 12–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலை-பண்பாட்டுத் துறைக்கு ஒரு மகத்தான பொற்காலம் என்றுதான் சொல்லவேண்டும். இந்தக் கலை பண்பாட்டுத் துறையைப் புத்துருவாக்கமும், மீட்டுருவாக்கமும் செய்து, புனருத்தாரணம் செய்திருக்கிறார் தமிழகத்தினுடைய தலைசிறந்த முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

'அம்மாவின் அன்பை வர்ணிக்க எனது வார்த்தைகளுக்கு வலிமை இல்லை. ஆகவே, ஒரு வயலின் கொடுங்கள்; வாசித்துக் காட்டுகிறேன்' என்று சொன்னான் ஒரு காஷ்மீரத்துக் கவிஞன். அப்படியான ஒரு மனநிலையைத்தான் நாங்கள் பெற்றிருக்கிறோம். முத்துத் தாண்டவரும், அருணாச்சலக் கவிராயரும், மாரிமுத்துப் பிள்ளையும் தமிழிசை தந்த மூன்று மும்மூர்த்திகள். கர்நாடக இசையினுடைய மும்மூர்த்திகள் என்று சொன்னால், தியாக அய்யரும், சியாமா சாஸ்திரியும், முத்துசாமி தீட்சிதரும் வாழ்ந்த மண்ணில், இன்றைக்கு உலகப் புகழ்பெற்றிருக்கிற நாலந்தா பல்கலைக்கழகத்தைப்போல, இசைக்கும், நுண்கலைகளுக்கும் ஒரு பல்கலைக்கழகத்தைத் தந்த மகத்தான ஒரு தலைவர்தான் நம்முடைய தமிழகத்தினுடைய தன்னிகரில்லா முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பீத்தோவனும், மொசார்ட்டும் இசையின் உலகத்தை வருடிக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், இன்று இசைப் பல்கலைக்கழகத்தைத் தந்து இந்த உலகத்தை வியக்க வைத்திருக்கிறார் நம்முடைய தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். 'வாத்தியத்தில் இல்லை சங்கீதம்; வாசிப்பவனிடத்தில் இருக்கிறது' என்று சொல்வார்கள். காருக்குறிச்சி அருணாச்சலத்தைப் போல, ஷேக் சின்ன மௌலானாவைப் போல, நாமும் வாசிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டு, அவர்கள் இல்லாதபோது அவர்கள் நாதஸ்வரத்தை எடுத்தால், நமக்குக் காற்றுதான் வரும். ஆகவே, வாத்தியத்தில் இல்லை இசை; வாசிப்பவரிடத்தில் இருக்கிறது. காருக்குறிச்சி அருணாச்சலத்தைப் போல, ஷேக் சின்ன மௌலானாவைப் போல வாசிக்க இயலாது. மறைந்த குன்னக்குடி வைத்தியநாதனைப் போல, லால்குடி ஜெயராமனைப் போல வயலினை இசைக்க முடியாது. அந்த இசை, வாத்தியத்திற்குள் இல்லை; வாசிக்கக்கூடிய மனதிற்குள் இருக்கிறது.

அப்படிப்பட்ட இசையை, மகத்தான ஒரு இலக்கை நோக்கி உச்சத்தில் வைக்க வேண்டும்; அதற்கொரு கிரீடத்தைச் சூட்ட வேண்டுமென்பதற்காக இந்தியாவிலேயே மகத்தான ஒரு பல்கலைக்கழகத்தைத் தந்திருக்கிற தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) எங்களின் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறோம்.

'இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்'

என்று வள்ளுவப் பேராசான் சொன்னார். இசையை நுட்பமாக அறிந்தவர்தான் நம்முடைய தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவர் இசையின் குழந்தை; கடவுளின் பரிசு; காலம் தந்த நன்கொடை; (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் தந்த நற்செய்தி. திரை இசைப் பாடல்களில் எவருக்குமே இல்லாத அளவிற்கு—இசையமைப்பாளரிடம் இருக்காது; பாடகர்களிடம்கூட இருக்காது; பாடல் எழுதிய பாடலாசிரியரிடத்திலேகூட இருக்காது—அத்தனைப் பாடல்களையும் திரட்டி வைத்திருக்கக்கூடிய ஒரு இசைநுட்பத்தைக் கற்றறிந்தவர்தான் நம்முடைய தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இசையை மாத்திரமல்ல; இசையை நேசிக்கிறவர்களுக்கும் தகுந்த மரியாதையைச் செய்யக்கூடிய அரசாகத்தான் இந்த அரசு இருக்கிறது.

1970 காலகட்டங்களில் இந்தியில் கொடிகட்டிப் பறந்தவர் கிஷோர்குமார் என்கிற பின்னணிப் பாடகர். அவர் பாடல் ஒலிப்பதிவுக்குச் செல்கிற போதெல்லாம், காசோலை வரும்; ஆனால் திரும்ப வந்துவிடும். இப்படியாக நடந்து கொண்டிருக்கிற வேளையில், என்ன செய்வது என்று யோசித்துப் பார்த்தார். ஒலிப்பதிவுக் கூடத்திற்குச் செல்கின்றபோது, தொண்டையைக் கொஞ்சம் இருமிக் கொண்டே செல்வாராம். இருமிக் கொண்டு செல்கின்றபோது, 'தொண்டை சரியில்லை; கொஞ்சம் குரல் சரியில்லை' என்று சொல்லிக் கொண்டேயிருந்தார். ஒலிப்பதிவுக் கூடத்திலிருந்து கண்ணாடி வழியாக வெளியே தன்னுடைய காரோட்டியைப் பார்ப்பார். காரோட்டி கட்டை விரலைக் காண்பித்துவிட்டால், 'காசு வாங்கி விட்டேன்' என்று அர்த்தம். கட்டை விரலைக் காட்டிவிட்டால், 'சரி, தொண்டை சரியாகி

விட்டது' என்று பாடத் தொடங்கிவிடுவார். இப்படித்தான் தனக்கென்று ஒரு பாணியை அமைத்துக் கொண்டுவிட்டார். இப்படி ஒவ்வொரு நாளும் போனது. ஒரு நாள் இசைக் கூடத்திற்கு வந்தார்; ஒலிப்பதிவுக் கூடத்திற்கு வந்தவுடன் தொண்டையைச் செருமினார். 'தொண்டை கொஞ்சம் வலிக்கிறது' என்று சொன்னார். தொடர்ந்து இப்படி முயற்சி செய்து கொண்டேயிருந்தார். காரோட்டி கட்டை விரலைக் காட்டவேயில்லை. 'ஒருவேளை இது உப்புமா கம்பெனியாக இருக்குமோ? பணம் வரவில்லையோ?' என்று நினைத்துக்கொண்டு, 'இன்று உடல்நிலை சரியில்லை; ஆகவே, ஒலிப்பதிவைப் பிறகு வைத்துக்கொள்ளலாம்' என்று சொல்லி கிளம்பிவிட்டார். கார் மும்பை சாலையில் விரைந்து போகிறது. காரோட்டியைப் பார்த்துக் கேட்டார்; 'என்ன தம்பி, கம்பெனியில் காசு இல்லையா?' என்று கேட்டார். 'இல்லை சார், இது உங்களுடைய சொந்தப் படம்' (பலத்த சிரிப்பு) என்று அவர் சொன்னதாக ஒரு செய்தி உண்டு. ஆக, இது அவருடைய வாழ்க்கையில் நடந்த ஒரு சுவையான சம்பவம்.

ஆக, இப்படி, கலைஞர்களை மதிக்க வேண்டுமென்று யார் உள்ளத்தில் அது தோன்றுகின்றதோ, அவர்தான் கலைமகள். அப்படிப்பட்ட கலைமகளாக, இன்றைக்கு இந்தியாவையே வழிநடத்தக்கூடிய ஒரு மகத்தான தலைவியாக இருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் கலை-பண்பாட்டுத் துறைக்குப் பல்வேறுபட்ட சலுகைகளை வழங்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இந்தத் துறையின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றி மலர்களைப் பணிவுடனும், அடக்கத்துடனும் வெளிப்படுத்துகிறேன்; நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உண்மையான ராஜதந்திரி யார் என்று இங்கிலாந்து நாட்டினுடைய ஒரு சிந்தனையாளர், எட்மண்ட் பர்க் கூறுகிறபோது "உண்மையான ராஜதந்திரிக்கும், ராஜதந்திரியைப் போல் நடிப்பவருக்கும் உள்ள முக்கிய வேறுபாடு என்ன என்றால், ராஜதந்திரியாக நடிப்பவர், தனக்கு வசதியாக நிகழ்காலத்தை மட்டும் நினைப்பவர்; அதுமட்டுமல்லாமல், நேரத்திற்குத் தக்கவாறு வேஷம் போடுபவர்; ஆனால், தெளிந்த ராஜதந்திரியோ உயர்ந்த குறிக்கோளுக்காகவும், நிலைத்த

[பேரவைத் தலைவர்] [2013 மே 10

கொள்கைகளுக்காகவும் தன்னை அர்ப்பணிப்பவர், எதிர்காலச் சமுதாயம் ஏற்றமுற தொலைநோக்குத் திட்டங்களை அறிவிப்பவர்" என்று சொல்லியிருக்கிறார். அந்த வகையிலே, ஏழைகளின் இதயத் துடிப்பு, வாழ்வில் வசந்தம் பந்தலிட வழிகாட்டும் கலங்கரை விளக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்துத் துறைகளிலும் என்னென்ன நலத் திட்டங்களை அறிவிக்க முடியும் என்று, நித்தம், நித்தம் சிந்தித்து, மேடு, பள்ளம் இல்லாத, சமத்துவ, சமதர்மத்தை நிலைநாட்ட, தொலைநோக்குத் திட்டங்களை அறிவித்து வருகிறார்கள்.

இன்றைக்கு ஒரு ராஜதந்திரி, என அறிவார்ந்த அரசியல் அறிஞர்கள் எல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களைப் பாராட்டுகிறார்கள். பத்திரிகைகள் அனைத்தும் மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவிப்புகளை இன்றைக்குப் பாராட்டிக் கொண்டிருக்கின்றன. ஆனால், பயிர்களை, களைகள் போற்றிப் புகழ்வதில்லை; போலீசைப் பாராட்டி, திருட்டுக் கும்பல் தீர்மானம் இயற்றுவதில்லை; அகிம்சையைப் போற்றி, ஆர்.டி.எக்ஸ் வாழ்த்துப் பா பாடுவதில்லை; கன்னக்கோல் திருடனுக்கு, காவலனைப் பிடிப்பதில்லை; கனிவுடைய காவியத் தாய் தரும், விதி 110—ன்கீழான அறிவிப்புகள் வெகு ஜனங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது; வெதும்பும் மக்களுக்கு வேதனை அளிக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவிப்புகளை ஏழு கோடி தமிழினமும் ஏற்று, மனந்திறந்து, புகழ்ந்து பாராட்டுகிறார்கள்; நடுநிலையோடு நன்மை நிகழ்வதை நினைத்துப் போற்றுகிறார்கள். மக்களைக் காத்து, எல்லையில்லா உயர்வு தர, இமைமூடாப் பணி செய்ய மாண்புமிகு அம்மா அவர்களால் மட்டுமே இயலும் எனக் கூறுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணிகளின் வசதியைப் பெருக்க அறிவிப்புகள். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னர்தான், சாலை விபத்துகளின் விகிதம் குறைந்து, விபத்துகளே இல்லாமல் இன்றைக்கு தமிழகம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

சுற்றுலாத் துறையை மேம்படுத்த, பண்பாடு மற்றும் கலைகளை நல்ல முறையில் பாதுகாக்க இன்றைக்கு பல்வேறு அறிவிப்புகள்; தேசிய கலைக் கூடத்தைப் பழுதுபார்க்க ரூபாய் 11 கோடிக்கான அறிவிப்பு; கலைக்கூடத்தை மட்டும் காப்பாற்றியவர் அல்ல மாண்புமிகு அம்மா அவர்கள், இந்த மன்றத்தையும் காப்பாற்றி,

இழந்த பெருமையை மீட்டுத் தந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நீதி தேவதையின் சிலையைப் பார்த்தோம் என்றால், பொதுவாகவே அதன் கண்கள் கட்டப்பட்டிருக்கும்; நடமாடும் நீதி தேவதை, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் பார்வை பாரபட்சமற்றது. (மேசையைத் தட்டும் ஒலி) சட்டம் பயிலும் மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு அறிவிப்புகள்; சிறைவாசிகளின் நலன் காக்க, சிறைத் துறையை நவீனப்படுத்த, காலத்தால் சபிக்கப்பட்ட மக்களின் காயத்தைப் போக்கவும், கண்ணீரைத் துடைக்கவும், தாயினும் மேலான தங்கத் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் இன்றைய அறிவிப்புகள் அமைந்துள்ளன.

1993 ஆம் ஆண்டு, மே மாதம் 10 ஆம் நாள்தான், இதே தினத்தில்தான், இந்திய மகளிர் குழு முதன்முறையாக எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தது; சாதனை படைத்தது. மாண்புமிகு அம்மா அவர்களின் இன்றைய அறிவிப்புகளால், தமிழகம் வளர்ச்சியின் உச்சத்தையும், சிகரத்தையும் நிச்சயம் எட்டும். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த நன்றிகளோடு, என்னுடைய நன்றியையும் இணைத்துத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. அறிக்கைகள் அளித்தல்

அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கை அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார், அரசு உறுதிமொழிக் குழுத் தலைவர்.*

திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் நல்வாழ்விற்காக, தமது வாழ்க்கையையே அர்ப்பணித்து, சோதனைகளையும், வேதனைகளையும், துன்பங்களையும், துயரங்களையும் தனதாக்கிக் கொண்டு, அஞ்சாத மன உறுதியுடனும், ஆழ்ந்த அறிவாற்றலுடனும், விடா முயற்சியுடனும், சீரிய சிந்தனையுடனும், மங்காத மதிநுட்பத்துடனும், மாசற்ற மனித நேயத்துடனும், பண்பட்ட தொலைநோக்குப் பார்வையுடனும், ஊண், உறக்கம்*

பாராமல், ஊர் உறங்கும் வேளையிலும் அயராது உழைத்து, இவ்வையகத்திற்கே வழிகாட்டுகின்ற வகையில் வாழும் மனித தெய்வம் நம் மாண்புமிகு அம்மா அவர்கள்.

இத்தாய்த் தமிழ்நாட்டிலே தனி மனித இராணுவமாய் சாதித்துக் காட்டிய, கழக அரசின் ஈராண்டு சாதனை வரலாற்றின் வழி நடந்து, இத்தரணியிலே தலைநிமிர்ந்து நிற்கிறது நம் தாய்த் தமிழ்நாடு. வற்றாத கங்கை நதியாக, வற்றாது வந்து கொண்டிருக்கும் நம் தாயின் சாதனை வரலாற்றின் வழிநடக்கும்போதுதான் இத்தரணியிலே தலைநிமிர்ந்து நிற்கும் இந்தியத் திருநாடு என்பதோடு மாத்திரமல்லாமல், மனித குலத்தைப் பாதுகாத்து, வளமோடு வாழ வைத்துக்கொண்டிருக்கின்ற நம் தெய்வத் தாயின் வெற்றி வரலாறுதான் இனி வரும் காலமெல்லாம் இந்த அவணிக்கு வழிகாட்டிடும் ஒரே புனித வரலாறாக, புதிய சகாப்தம் படைத்திடும் என வணங்கிக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *2012–2013* ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை அரசு உறுதிமொழிக் குழுவின் ஐம்பத்து எட்டு முதல் தொண்ணூற்று ஐந்து வரையிலான *38* அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

பிற்பகல் *1–05*

5. மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 43–பள்ளிக் கல்வித் துறை

(ஆ) கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

(இ) கோரிக்கை எண் 49–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

(அ) கோரிக்கை எண் 43–பள்ளிக் கல்வித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2013–2014* ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக்

கோரிக்கை எண் 43—*பள்ளிக் கல்வித் துறை, மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.16,670,40,10,000/–, மூலதனக் கணக்கில் ரூ.294,84,60,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.5,40,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 2377, திரு. அ. கணேஷ்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2690, திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,670,40,10,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.294,84,60,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,40,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3055, திரு. வி. முத்துக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 257, திரு. எஸ்.ஆர். பார்த்திபன்.

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ்நாட்டில் உள்ள தனியார் மற்றும் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்குக் காப்பீட்டுத் திட்டம் வழங்குவதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,670,40,10,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.294,84,60,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,40,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 422, திரு. அ. சவுந்தரராசன்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘ஒன்றியப் பள்ளிகளில் அடிப்படை வசதி மற்றும் ஆசிரியர் எண்ணிக்கையை உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து’ விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,670,40,10,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.294,84,60,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,40,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1360, திரு. க. பாண்டியராஜன்.

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘விருதுநகர் ஒன்றியம், ஊராட்சிகளில் தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யவும், விருதுநகர், சிவஞானபுரம் ஊராட்சி, பேளம்பட்டி இரயில்வே காலனியில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து’ விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,670,40,10,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.294,84,60,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,40,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1483, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'குளச்சல் சட்டமன்றத்திற்குட்பட்ட மண்டைக்காடு அரசு மேல்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,670,40,10,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.294,84,60,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,40,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1742, திரு. அ. பாஸ்கர்.*

திரு. அ. பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '2009 ஆம் ஆண்டு கல்வி உரிமைச் சட்டத்தில் தெரிவித்தபடி பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக தனியார் பள்ளிகள் ஒதுக்கவேண்டிய 25 சதவிகித இடங்களை அரசே எடுத்து, அந்த இடங்களை கவுன்சலிங் முறையில் நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,670,40,10,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.294,84,60,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,40,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1818, திரு. வெ. பொன்னுப்பாண்டி.*

திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அரசுப் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

ரூ.16,670,40,10,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.294,84,60,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,40,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1986, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ்நாட்டில் ஆசிரியர் பயிற்சி முடித்த வேலையில்லாத ஆசிரியர்களுக்குப் பதிவு மூப்பு அடிப்படையில் பணி வழங்குவதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,670,40,10,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.294,84,60,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,40,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2241, திரு. கே. உலகநாதன்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,670,40,10,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.294,84,60,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,40,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2294, திருமதி எஸ். விஜயதரணி.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழக அரசு காவல் துறை அலுவலர்களுக்கு, இராணுவத்திற்கு வழங்கப்படுவது போன்று சலுகை விலை

அங்காடி அமைத்து பொருட்கள் வழங்குவதைப்போல், ஆசிரியர்களுக்கும் மாவட்டத்திற்கு ஒரு சிறப்பு அங்காடி அமைத்து பொருள் வழங்குவதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,670,40,10,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.294,84,60,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,40,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2422, டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 2440, செல்வி கே. பாலபாரதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2559, திரு. டி. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2666, திரு. சு. குணசேகரன்.

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தொடக்கக் கல்வியில் (இளம் பருவக் கல்வி 1 முதல் 5 வரை) தாய் மொழிக் கல்வி அவசியம். அதனை நிறைவேற்ற ஆங்கிலவழிக் கல்வியைத் தடை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,670,40,10,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.294,84,60,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,40,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2786, முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'TET தேர்வில் பிற்படுத்தப்பட்ட, மிகவும்*

பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையின, சீர்மரபின மற்றும் தாழ்த்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களின் தேர்ச்சி மதிப்பெண்ணைக் குறைப்பதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,670,40,10,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.294,84,60,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,40,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2877, திரு. அ. அஸ்லம் பாஷா.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆம்பூர் தொகுதி, ஆம்பூர் ஆனைகார் ஓரியண்டல் அராபிக் பள்ளிக்கு தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாகப் பத்தாம் வகுப்பு தேர்வு மையமாக இயங்க அனுமதி மறுக்கப்படுவதைப் பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,670,40,10,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.294,84,60,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,40,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3004, திரு. ம. கலை அரசு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3210, திரு. க. பாலகிருஷ்ணன்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் தாண்டவராயசோழன்பேட்டையில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,670,40,10,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.294,84,60,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,40,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்.”

(ஆ) கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 46 – தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை), மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.37,28,99,000/–, மூலதனக் கணக்கில் ரூ.2,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 2344, திரு. அ. கணேஷ்குமார், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 2432, திரு. கே. உலகநாதன்.

திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘கொள்கை பற்றி’ விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

“தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.37,28,99,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2686, திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.37,28,99,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3049, திரு. வி. முத்துக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1643, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ்த் திருநாளை (தமிழ்ப் புத்தாண்டு) ஒவ்வொரு மாவட்டத்திலும் விமரிசையாகக் கொண்டாட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.37,28,99,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2027, திரு. அ. சவுந்தரராசன்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உயர் நீதிமன்றத்தில் தமிழில் வாதாடவும், தமிழில் தீர்ப்பு வழங்கவும் வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.37,28,99,000/–, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2169, திரு. ர.ம. பாபு முருகவேல்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அனைத்து தனியார் கல்லூரிகளிலும் தமிழ் இளங்கலை மற்றும் முதுகலைப் படிப்பை கட்டாயப் பாடமாக்குவதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.37,28,99,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2557, திரு. டி. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3203, திரு. க. பாலகிருஷ்ணன்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உலகத் தரம் வாய்ந்த தமிழ் டிஜிட்டல் நூலகம் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.37,28,99,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3220, திரு. அ. அஸ்லம் பாஷா.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ் மொழியில் படித்தவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.37,28,99,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்.”

(இ) கோரிக்கை எண் 49–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 49–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.112,50,08,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 2343, திரு. அ. கணேஷ்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2681, திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘கொள்கை பற்றி’ விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,50,08,000/–, மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 630, திரு. க. பீம்ராவ்,*

திரு. க. பீம்ராவ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மதுரவாயல் தொகுதியில், அம்பத்தூர் மற்றும் மதுரவாயல் பகுதியில் ஸ்கேட்டிங் ஸ்டேடியம் துவங்க இந்த நிதியாண்டிலேயே (2013–2014) நிதி ஒதுக்கிட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,50,08,000/–, மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1362, திரு. க. பாண்டியராஜன்.*

திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'விருதுநகரில் உள்ள மாவட்ட விளையாட்டு அரங்கில் விளையாட்டு வீரர்களுக்காக நீச்சல் குளம், உடற்பயிற்சி நிலையம், தங்கும் விடுதி அமைக்க வேண்டியும், விருதுநகரில் விளையாட்டுப் பயிற்சிப் பள்ளி அமைப்பதன் அவசியம் குறித்தும்' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,50,08,000/–, மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1401, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கப்பியறை பேரூராட்சியில் அரசுக்குச் சொந்தமான 30 ஏக்கர் நிலத்தில் விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,50,08,000/–, மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2025, திரு. அ. சவுந்தரராசன்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சென்னையில் பிரபலமாக இருந்த குத்துச்சண்டை விளையாட்டை மீண்டும் பிரபலமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,50,08,000/–, மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2085, திரு. ர.ம. பாபு முருகவேல்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆரணி தொகுதி, ஆரணி நகர் பகுதியிலுள்ள மினி விளையாட்டு அரங்கம் தொடர்ந்து செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,50,08,000/–, மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2216, திரு. கே. உலகநாதன்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் அரசால் தொடங்கப்பட்ட கிராமப்புற விளையாட்டு மையங்களைப் புனரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,50,08,000/–, மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2286, திரு. வெ. பொன்னுப்பாண்டி.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கிராமப்புறங்களில் உள்ள விளையாட்டு மையங்களைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,50,08,000/–, மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2304, திருமதி எஸ். விஜயதரணி.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அடுக்குமாடிக் கட்டட குடியிருப்புகளில் குழந்தைகள் விளையாட்டு, சிறுவர் பூங்கா அமைப்பது போன்று, GYM அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,50,08,000/–, மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2569, திரு. டி. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2983, திரு. ம. கலை அரசு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3040, திரு. வி. முத்துக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3221, திரு. அ. அஸ்லம் பாஷா.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் உள்ள நகராட்சி மற்றும் ஊராட்சிகளில் விளையாட்டு மையங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,50,08,000/–, மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறை, தமிழ் வளர்ச்சி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை ஆகியன பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலே தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில்

@ 555 முதல் 785 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I, II மற்றும் III ஆக அச்சிடப்பட்டுள்ளன.

பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று மூன்று மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் மூன்று மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். விவாதத்தைத் தொடக்கி வைப்பவர் தே.மு.தி.க. உறுப்பினர் மாண்புமிகு திருமதி ர. சுபா அவர்கள்.

பிற்பகல் 1–10

திருமதி ர. சுபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டுக்கான பள்ளிக் கல்வித் துறை, தமிழ் வளர்ச்சி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்தில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களை வணங்கி என் உரையைத் துவங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வியானது சமுதாயத்தில் குவிந்து இருக்கும் அறிவுத் திறன் மற்றும் பண்புகளை ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்க்கும் ஒரு வழிமுறையாகும். இலவசம் மற்றும் கட்டாயக் கல்விச் சட்டத்தின்கீழ் 25% இட ஒதுக்கீடு இடங்களை நிரப்புவதற்கு ஒவ்வொரு தனியார் பள்ளிகளும், ஆரம்ப நிலையில் சேர்க்கை தர வேண்டும். ஆனால், அரசு 25% இட ஒதுக்கீட்டினை ஏழையெளிய, பொருளாதாரத்தில் பின் தங்கிய மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என்று சட்டம் கொண்டு வந்தும், தனியார் பள்ளிகள், மெட்ரிக்குலேஷன் மற்றும் C.B.S.E. பள்ளிகளில் இட ஒதுக்கீடுகளைத் தர மறுக்கின்றனர். எனவே, இதை அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, சட்ட விதிமுறைகளை மீறும் பள்ளிகள்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். . .(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 25 விழுக்காடுகள் இட ஒதுக்கீட்டை தனியார் பள்ளிகள் பின்பற்றவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டை எழுப்பியிருக்கிறார். அவை எந்தப் பள்ளிகள் என்று தெளிவாக உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டால், அப்பள்ளிகளின்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். நிச்சயமாக அனைத்துப் பள்ளிகளிலும் 25 விழுக்காடு இட ஒதுக்கீடுகளைப் பின்பற்ற வேண்டுமென்று அரசு வலியுறுத்தியிருக்கிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.*

திருமதி ர. சுபா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளர் சீரமைப்புத் துறையில் பணிபுரியும் வெளி மாவட்ட ஆசிரியர்களை மாறுதல் செய்யலாம் என்று அரசாணை இருந்தும், பள்ளிக் கல்வித் துறை அந்த ஆசிரியர்களுக்குப் பணி மாறுதல் வழங்குவதில்லை. இதனால் நூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர்களின் குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பாண்டில், . . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு மாறுதல் வழங்கப்படவில்லை என்ற ஒரு கருத்தை வைத்திருக்கிறார். கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் போதிய ஆசிரியர்கள் இல்லை.* T.R.B. *மூலமாக, அதாவது* Teachers Recruitment Board, *ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாக ஆசிரியர்கள் பணியிடம் நிரப்பப்பட்டு, பின்னாளில் அவர்களுக்கு மாறுதல்கள் வழங்கப்படும் என்கிற நெறிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்தக் கருத்து அரசின் உரிய பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.

திருமதி ர. சுபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு கல்வி ஆண்டு முடிந்தவுடன், அடுத்த கல்வியாண்டிற்கான மாணவர்களின் சேர்க்கை நடைபெறும் என அண்மையில் அரசு அறிவித்தது. ஆனால், கடந்த அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களிலேயே, தனியார் பள்ளிகளில் விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு, மாணவர்களின் சேர்க்கை முடியும் தருவாயில் உள்ளது. மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, இதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆசிரியர் மற்றும் மாணவர்களின் விகிதாச்சாரம் 1:30 என்ற அளவில் இருக்க வேண்டும். ஆனால், மாணவர்களின் விகிதாச்சாரம் அரசு அறிவித்த வகையில் இல்லாமல் இருப்பதால், போலி மாணவர்கள் வருகைப் பதிவேடுகளைத் தயாரித்து, அந்த ஆசிரியர்களின் பணி நீட்டிப்பிற்காகத் தவறுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இதை அரசு கவனத்தில் எடுக்க வேண்டும். மேலும் அரசு வழங்கும் சலுகைகளும் இதனால் வீணாகின்றன. எனவே, தவறு செய்பவர்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். . .(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் பள்ளிகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பீர்கள் என்றால், மாநில அரசுப் பள்ளிகளில் 29 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற வீதத்தில் இருக்கிறார்கள். 30 அல்லது 35–க்கு மேற்பட்ட மாணவர்களுக்குத்தான் ஒரு ஆசிரியர் என மத்திய அரசுப் பள்ளிகளில் இருக்கிறார்கள். நம்முடைய அரசுப் பள்ளிகளில் 29 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் இருப்பது என்பது தமிழ்நாட்டில் முதன்மையான, ஒரு மகத்தான ஒரு ஆட்சியின் வெளிப்பாடாக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.

திருமதி ர. சுபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வி உரிமைச் சட்டத்தின்படி ஆசிரியர்–மாணவர்கள் விகிதாச்சாரம் 1:30 என்று அமலில் உள்ளது. 30 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்னும் அரசாணை இன்றைய கால கட்டத்திற்கு ஆரம்பப் பள்ளிகளில் கல்வி மேம்பாட்டிற்கு எந்த வகையிலும் உதவி புரியாது. தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில், நடைமுறையில் உள்ள நவீன கற்பித்தல் முறைகளில், செயல்வழிக் கற்பித்தல், எளிய வழி படைப்பாற்றல் கல்வி முறை, சமச்சீர்க் கல்வி முறை, தற்போது அறிமுகம் ஆகியுள்ள பொது பாட நூல்களில் கற்பித்தல், கற்றல், செயல்பாடுகள் ஆகியவற்றில் மேம்பாட்டு பெற்று கல்வியில் தமிழகம் சிறந்த மாநிலமாக உருவாகிட ஆசிரியர் மாணவர்கள் விகிதாச்சாரம் 1:10 என்று மாற்றியமைத்து, புதிய அரசாணை வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்-மாணவர்கள் விகிதாச்சாரம் 1:10 என்று, . .(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–15

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைமுறைக்கு ஒவ்வாத ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கொண்டிருக்கிறார். ஒரு சைவ ஓட்டலுக்குப் போய் அமர்ந்து சாப்பிட உட்கார்ந்த பிறகு அசைவ உணவு வேண்டுமென்று கேட்பதைப்போலத்தான் மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வி அமைந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, 1:10 ratio என்பது சாத்தியம் இல்லை. தற்போது நிதிநிலை அறிக்கையினுடைய அடிப்படையில் அப்படி ஒரு வாய்ப்பும் இல்லை. நீங்கள் பார்த்திருப்பீர்களென்றால், Teacher ratio, PTR ratio தொடக்கப் பள்ளியில் 1:27; அதாவது 27 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர்; நடுநிலைப் பள்ளியில் 29 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர்; தேசிய அளவில் நடுவண் அரசால் நிர்ணயிக்கப்பட்டது

எவ்வளவு தெரியுமா? 30 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர்; 35 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்கிற இலக்கைவிட ஒரு மகத்தான இலக்கை தமிழ்நாடு எட்டியிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.

திருமதி ர. சுபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இயங்கிடும் மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி ஒன்றிய அரசின் பல்வேறு நலத் துறை மற்றும் அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் முன்பருவக் கல்வி வகுப்புகள் தொடங்கினால், தற்போது செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையங்களை முன் பருவக் கல்வி நிலையங்களாகத் தரமுயர்த்தி, மேம்படுத்தி தொடக்க கல்வித் துறையின்கீழ் கொண்டு வந்தால், 5 வயதுக் குழந்தைகளுக்கும் தரமான கல்வி அளிக்கப்படும் வகையில் பெருகிவரும் ஆங்கிலவழி மழலையர் பள்ளிகளுக்கும் மாற்று ஏற்பாடு கண்டிடும் வகையிலும் அரசுப் பள்ளிகளில் இலவச மழலையர் கல்வி வகுப்புகள் தொடங்கப்பட வேண்டும். இதனால் தனியார் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை குறையும். அரசுப் பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கை உயரும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு நல்ல கோரிக்கை வைத்திருக்கிறார். அதாவது, எல்.கே.ஜி., யு.கே.ஜி. மழலையர் பள்ளி. இந்த மழலையர் பள்ளி இருப்பதனால்தான் தனியார் பள்ளிகளில் அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் சேருகிறார்கள் என்கிற செய்தியை அவர் குறிப்பிட்டார். அது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. கொள்கை முடிவு தேவை. மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று விரைவிலே அதுகுறித்த நடவடிக்கை எடுக்கப்படும் என்கிற செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.

திருமதி ர. சுபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–2012 ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி பட்டியல் இனத்தவர் என்றழைக்கப்படும் தலித்துகள் 16.2 சதவீதம் பேர், பழங்குடியினர் 8 சதவீதம் பேர். ஆனால், ஒட்டுமொத்த பள்ளி ஆசிரியர்கள் 6 சதவீதம் பேர் மட்டுமே SC/ ST பிரிவைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். கல்லூரிப் பேராசிரியர்கள் 2 சதவீதம் பேர் உள்ளனர். எனவே, தேசிய ஆசிரியர் தேர்வு வாரியம்–NCTE வழிகாட்டுதலின்படி தகுதித் தேர்வுமூலம் ஆசிரியர்களை நியமிக்கும் முறையை அரசு அறிமுகப்படுத்தியது. ஆசிரியர் தகுதித் தேர்வில் அந்தந்த மாநிலங்களுக்கேற்ப இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தலாம் என NCTE தெளிவாகக் கூறுகின்றது. சமீபத்தில் ஆசிரியர் தகுதித் தேர்வு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதித் தேர்வில் இட ஒதுக்கீடு வேண்டுமென்று ஒரு கோரிக்கையை உறுப்பினர் வைத்திருக்கிறார். தகுதித் தேர்வில் இட ஒதுக்கீடு வழங்குவதற்கு எந்தவிதமான நெறிமுறைகளையும் அரசு வகுக்கவில்லை. ஆனால், ஆசிரியர் தேர்வு வாரியத்தில் இடம் பெறுகிற, ஆசிரியர் தேர்வில் முதன்முதலாக அவர்கள் தேர்வு செய்யப்படுகிறபொழுது, அது முழுக்க முழுக்க இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் நடக்கிறது. தகுதித் தேர்வு என்கிற பட்சத்தில் 60 சதவீத மதிப்பெண்களை ஒரு ஆசிரியர் எடுக்க வேண்டும். மத்திய அரசு என்ன சொல்கிறதென்றால், இந்த 60 சதவீதத்தை இட ஒதுக்கீடு என்கிற பெயரில் அதைச் சொல்லவில்லை. இந்த மதிப்பெண்களை வேண்டுமானால் குறைத்துக்கொள்ளலாம் என்று சொல்கிறார். ஆனால், நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் Each One Teach One என்கிற ஒரு கொள்கைப் பிரகடனத்தை அறிவித்திருக்கிறார். அதனுடைய

அடிப்படையிலே, ஒரு ஆசிரியருடைய தகுதி என்பது 60 சதவீதமாகத்தான் இருக்க வேண்டும், அந்த மதிப்பெண் அடிப்படையில்தான் இருக்க வேண்டும். அது குறையக்கூடாது என்கிற ஒரு கொள்கை முடிவை எடுத்திருக்கிறார் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.

திருமதி ர. சுபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும், நான் மாண்புமிகு அமைச்சரிடத்திலே கேட்பது தலித்துகள், தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்படுத்தப்பட்டோருக்கும், பழங்குடியினருக்கும் cut off mark, அதாவது மார்க்கைக் குறைக்க வேண்டுமென்பதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும், 2012 ஆம் ஆண்டு இட ஒதுக்கீடு பின்பற்றப்படாமல் 2,325 பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள். அது செல்லாது என சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு கூறி, ஒட்டுமொத்த நியமனத்தையும் மறு ஆய்வு செய்யுமாறு உத்தரவிட்டுள்ளது. எனவே, குறைவான பிரதிநிதித்துவ வாய்ப்பு பெற்ற தலித்துகள், பிற்படுத்தப்பட்டோர், பழங்குடியினரும் பயனடைவார்கள். குறிப்பாக, வேலைவாய்ப்பில் தலித்துகளின் பிரதிநிதித்துவம் மிகவும் குறைவாக உள்ளதால் அவர்களுக்குத் தேவைப்படும் அளவிற்கு cut off mark–ஐக் குறைக்கலாம் என மத்திய அரசின் உள் துறை விவகார பணியாளர் மற்றும் பயிற்சித் துறை கூறியுள்ளது. இட ஒதுக்கீடு வழங்கும் சிறப்புப் பிரிவினருக்குக் cut off மதிப்பெண்களைக் குறைக்கலாம் என NCTE-யும் கூறியுள்ளது. எனவே, அரசு நடத்தும் ஆசிரியர் தகுதித் தேர்வு SET–ல் இட ஒதுக்கீடு அடிப்படையில் நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2010 ஆம் ஆண்டில் சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்து கொண்ட 30,000 ஆசிரியர்களில் 21 ஆசிரியர்கள் தகுதித் தேர்விலிருந்து விலக்களிக்கப்பட்டு நியமனம் செய்யப்பட்டுள்ளனர். (குறுக்கீடு) அதேபோன்று மீதமுள்ள 9,000 பட்டதாரி ஆசிரியர்களும் 850

பட்டதாரி தமிழ் ஆசிரியர்களும் நியமனம் செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களை மட்டும், கல்வி முறையில் ஆசிரியர் பணி நியமனம் செய்து வருகிறது. தமிழகத்தில் கடந்தகால நடைமுறைப்படி வேலைவாய்ப்பக பதிவு மூப்பு அடிப்படையில் நியமனம் செய்வதே சரியானது. ஆசிரியருக்கான அனைத்துத் தகுதிகளும் பெற்றவர்கள் என்ற அடிப்படையில் பயிற்சிக்காலம் முடிந்தும் பட்டம், பட்டயம் பெற்றவர்களுக்கு மீண்டும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அடிப்படையிலான மூப்பு என்பது நடைமுறைக்கு ஒவ்வாத ஒரு கருத்து. மூப்பு என்பதன் அடிப்படையில் வேலைவாய்ப்பு அலுவலகம்மூலம் அரசு இப்பொழுது பணி நியமனம் செய்வதில்லை. ஆசிரியர் தேர்வு வாரியத்தின்மூலம்தான் இப்பொழுது தேர்வு நடத்தி, அந்தத் தேர்விலே தேர்ச்சி பெற்று, தற்போதைய சூழலுக்கு ஏற்று, மாணவர்களுக்கு ஏற்ற ஒரு நடைமுறையைப் பின்பற்றுகிற ஒரு பாடத் திட்டத்தை (CURRICULAM) பின்பற்ற அந்த ஆசிரியர்கள் சரியான முறையிலே தயாராக இருக்கிறார்கள் என்பதை அறிந்துதான் தேர்வு செய்யப்பட்டு அவர்கள் ஆசிரியர்களாக பணி நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்

திருமதி ர. சுபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் ஆசிரியர் தகுதிக்கான படிப்பை படித்து முடித்துவிட்டார்கள். ஆசிரியர் தகுதித் தேர்வை, பட்டம், பட்டயம் எல்லாவற்றையும் தேர்ந்து முடித்துவிட்டுத்தான் வந்திருக்கிறார்கள். நாம் எதற்காக இன்னொன்று வைக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இயங்கிடும் சுயநிதிப் பள்ளிகளின் கல்விக் கட்டணத்தை அரசு முறைப்படுத்தியும் அதைக் கண்டுகொள்ளாமல் அதிகப்படியான கட்டணம் வசூலிக்கின்றனர். முறைப்படியான ரசீதும் தருவதில்லை. எனவே, (குறுக்கீடு) அரசு தொடர் நடவடிக்கை எடுத்து . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, NCTE ஒரு நெறிமுறைகளை வகுத்துள்ளது. குழந்தைகளுக்கான இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் 23–வது பிரிவின் துணைப் பிரிவு 1–ன்படி தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் அதாவது NCTE, 23–8–2010–ல் வெளியிட்டுள்ள அறிக்கையில் 1 முதல் 8 வரையிலான வகுப்புகளுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதில் குறைந்தபட்சத் தகுதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தின் வழிகாட்டுதலின்படி அனைத்துப் பள்ளிகளிலும் 1 முதல் 8 வரையிலான வகுப்புகளுக்குப் பணி நியமனம் செய்யப்படும் ஆசிரியர்கள் வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதியுடன் அரசால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பினால் நடத்தப்படும் ஆசிரியர் தகுதித் தேர்விலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டியது அவசியமாக இருக்கிறதென்பதை NCTE அறிவித்திருக்கிறதென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்

திருமதி ர. சுபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) எனவே, அரசு தொடர் நடவடிக்கையாக மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அனைத்துத் தரப்பினரையும் கொண்டு கண்காணிப்புக் குழு அமைத்து பள்ளிகளின் கட்டண விவரம் குறித்த புகார் மீது பொது விசாரணை நடத்த வேண்டும். மேலும், தமிழ்நாட்டிலுள்ள தனியார் மற்றும் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்குக் காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பொதுப் பாடத் திட்ட பாட நூல்களில் சர்ச்சைக்குரிய பகுதிகள் இருப்பது காணப்பட்டுள்ளது. இதுபோன்ற குறைபாடுகள் எதிர்காலங்களில் ஏற்படாமலிருக்கும் வகையில் தற்போதுள்ள பொதுப் பாடத் திட்ட வாரியம் ஆசிரியர் கல்வி மற்றும் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் ஆகியவற்றையும்விட, உயர்ந்தபட்ச அமைப்பாக அரசியல் சார்பற்ற கல்வி அமைப்பாக பள்ளிக் கல்விக்கான தன்னாட்சி அமைப்பு ஒன்றினைத் தமிழ்நாட்டில் அமைத்திட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

திருமதி ர. சுபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு, கல்வித் துறையில் மாணவர்களுக்கு இலவசமாகப் பாடநூல்கள், குறிப்பேடுகள், வண்ணப் பென்சில்கள், புத்தகப் பை, சீருடைகள் மற்றும் காலணிகள் வழங்குகின்றது. இதனை ஆசிரியர்களே அலுவலகத்திற்குச் சென்று, எடுத்துவரவேண்டியுள்ளதால் பணிச்சுமை, கால விரயம் ஏற்பட்டு கல்விப் பணிக்கு இடையூறாக உள்ளது. மேலும், ஈராசிரியர்கள் உள்ள பள்ளிகளில் உள்ள மாணவர்களுக்குப் பாடம் கற்பித்தலில் பெரும் பின்னடைவு ஏற்பட்டு கல்வி பாதிக்கப்படுகின்றது.

பிற்பகல் 1–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தலைமை ஆசிரியர் என்பவர் வகுப்பில் பாடம் நடத்துவதில்லை. அவர் administration work —நிருவாக ரீதியான பணிகளை மேற்கொண்டிருக்கிறார். அந்த நிருவாக ரீதியான பணிகளுக்காகத்தான் அவர்களுக்கு அவ்விதமான பணிகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. ஒரு பள்ளிக்கூடத்திற்கு என்ன தேவை என்பதை சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியர்தான் நன்கு உணர்ந்தவராக இருக்கிறார். ஆகவே, இந்தப் பணிகள் குறித்து வேறு ஏதாவது சிரமம் ஏற்பட்டால், அதுகுறித்து ஆராய்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்கு

எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.*

திருமதி ர. சுபா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவிகள் கல்விக் கடன் பெறுவதற்கு வங்கிகளுக்குச் சென்றால், வசதி படைத்தவர்களும் மற்றும் சிபாரிசு உள்ளவர்களுக்கு மட்டுமே கல்விக் கடன் வழங்குகின்றனர். ஏழை, நடுத்தர, சாமானிய மாணவர்கள் பயன் பெற முடியவில்லை. மேலும், கடன் பெற்றாலும் அவர்களை அசல் மற்றும் வட்டியினைக் கட்டச் சொல்லி வங்கி அதிகாரிகள் வற்புறுத்துகின்றனர். மாணவர்கள் அரசுப் பணிக்குச் சென்றபின் கடனைத் திருப்பிக் கொடுத்தால் போதும் என்று அரசு கூறியுள்ளது. ஆனால், வங்கி அதிகாரிகள் மாணவர்களின் குடும்பச் சூழ்நிலையைப் புரிந்துகொள்ளாமல் கடனைத் திரும்பிச் செலுத்த வற்புறுத்துகின்றனர். எனவே, அரசு அவர்களுடைய வட்டி மற்றும் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாங்கிய கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று மத்திய அரசிடம் அவர்கள் விண்ணப்பிக்க வேண்டும். தேசிய வங்கிகளில் நடைமுறைக்கு மாறாகப் பின்பற்றப்படுகிறது என்கிற செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா, உரையை முடியுங்கள்.*

திருமதி ர. சுபா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று கோரிக்கைகள் உள்ளன. 6-வது ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி மத்திய அரசுக்கு இணையான ஊதியம்*

இடைநிலை ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டும். கடந்த 2010 ஆம் ஆண்டு சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்துகொண்ட 30,000 ஆசிரியர்களில் 21,000 ஆசிரியர்களுக்கு ஆசிரியர் தகுதித் தேர்விலிருந்து விலக்கு அளிக்கப்பட்டு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இதுபோன்று மீதமுள்ள 9,000 ஆசிரியர்களுக்கு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் கேட்காமலேயே 8 சதவிகித அகவிலைப்படியைத் தந்த ஒரே முதலமைச்சர் நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா, உரையை முடியுங்கள்.

திருமதி ர. சுபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு தேசிய பாதுகாப்பு உரிமை ஆணையக் கூட்டம், அதன் தலைவர் சாந்தா சின்ஹா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் தமிழகம் மற்றும் புதுவையில் நிகழ்ந்த 62 உரிமை மீறல்கள் குறித்த சம்பவங்கள் பற்றி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இதில் கல்வி உரிமை மீறல், குழந்தைத் தொழிலாளர், உடல் ரீதியான தண்டனை அளித்தல், குழந்தை கடத்தல், பாலியல் வன்கொடுமை உள்ளிட்ட பல்வேறு உரிமை மீறல் சம்பவங்கள் இடம் பெற்றிருந்தன. இறுதியில் இந்த ஆணையம் ஒவ்வொரு பள்ளிகளிலும் புகார் பெட்டி அமைக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தது. இதை பள்ளிக் கல்வித் துறை எத்தனை சதவிகிதம் நிறைவேற்றியுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: புது சப்ஜெக்ட்டையெல்லாம் பேசாதீர்கள். உரையை முடியுங்கள். மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகளுக்கு எவ்வாறெல்லாம் துன்புறுத்தல் ஏற்படுகின்றது என்பதையறிந்து பள்ளிக் கல்வித் துறைமூலம் அவர்களுக்காகப் புகார் பெட்டிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தலைமை ஆசிரியரின் மேசை மீதும் புகார் புத்தகம் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றோடு மாத்திரமல்ல, பாலியல் தொந்தரவுகள் வரும் என்று சொன்னால், அதன்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுத்து, சஸ்பென்ட் அல்ல டிஸ்மிஸ் வரை செய்திருக்கின்ற ஒரே அரசு நம்முடைய தமிழக அரசுதான் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள். மேற்கொண்டு புது சப்ஜெக்ட் பற்றி பேசுவதற்கு நேரம் இல்லை. (குறுக்கீடு) உரையை முடியுங்கள். (குறுக்கீடு)

திருமதி ர. சுபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்வதேச தரத்தில் தமிழகம் விளையாட்டுத் துறையில் முன்னேற வேண்டும் என்றால் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள். (குறுக்கீடு) உரையை முடிக்க வேண்டும். நேரம் அவ்வளவுதான். (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள். திருமதி ர. சுபா அவர்கள்.

திருமதி ர. சுபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்வதேச தரத்தில் தமிழகம் விளையாட்டுத் துறையில் முன்னேற வேண்டும் என்பதற்காக, கடந்த 2005 ஆம் ஆண்டு தமிழக அரசால், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் விளையாட்டுக்கு என்று ஒரு தனிப் பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டது. இதில் உடற்கல்வி சம்பந்தப்பட்ட பல படைப்புகள் நடத்தப்படுகின்றன. விளையாட்டு தொழில்நுட்பத்தில் தமிழகம் முன்னேற்றம் அடைய கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் M.Tech., Sports Technology என்ற பட்டப் படிப்பு ஆரம்பித்து நடத்தி வருகிறார்கள். இவர்கள் உலகிலேயே விளையாட்டிற்குப் பெயர் பெற்ற ஆஸ்திரேலியாவில் உள்ள அடிலெய்டு பல்கலைக்கழகத்தின் பாடத் திட்டத்தினையே பின்பற்றி வருகிறார்கள். இங்குப் பட்டம் பெற்ற மாணவர்கள் வேலைக்காகக் காத்துக்கொண்டிருக்கும் சூழ்நிலையில் . . .

பிற்பகல் 1–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டிற்கென்று மகத்தான சாதனைகளைச் செய்திருக்கின்ற ஒரே அரசு நம்முடைய தமிழக அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. இன்றைக்கு இந்தியாவிலேயே முதன்முதலாக உடற்கல்வி பல்கலைக்கழகம் கொண்டுவந்த ஒரே அரசு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)*

சமீபத்தில்கூட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விதி 110–ன்கீழ் அறிவித்த அறிக்கையிலே, உலக அளவில் செஸ் போட்டி சற்றேறக்குறைய 30 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாட்டில், சென்னையில் நடத்தப்படும் என்கின்ற ஒரு அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். அவற்றோடு மாத்திரமல்ல, கடந்த காலத்தில் ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கம், வேளச்சேரி நீச்சல் வளாகம் போன்றவையெல்லாம் துவங்கப்பட்டது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காலத்தில்தான். இப்போது அம்மா அவர்கள் மாண்புமிகு முதலமைச்சராக மூன்றாவது முறையாக வந்ததற்குப் பிறகு, ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கம் வெல்பவர்களுக்கு 2 கோடி ரூபாய் பரிசு வழங்கப்படும் என்கின்ற அறிவிப்பை அறிவித்த ஒரே அரசாங்கம் இந்தியாவிலேயே தமிழகம்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு முதலமைச்சர் டிராபியிலே ஏறக்குறைய 5 கோடி ரூபாய்க்கு மேலாக பரிசுத் தொகைகளை வழங்கி, விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்துகின்ற ஒரே அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான். இன்றைக்கு விளையாட்டு வீரர்களை, அற்புதமான ஆற்றல் படைத்தவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் உள்ளபடியே விளையாட்டுத் திறனைப் பெற்றிருக்கிறார்கள் என்று கண்டறியப்பட்டால், அவர்களுக்கு வருடத்திற்கு 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, தொடர்ந்து அவர்களைக் கண்காணித்துக்கொண்டு, ஒன்றேகால் கோடி ரூபாய் வருட

காலத்திற்கு—ஒரு விளையாட்டு வீரருக்கு 25 இலட்சம் ரூபாய் வருடத்திற்கு, தொடர்ந்து 5 ஆண்டுகளாக அவர்களுக்கு 25 இலட்சம் ரூபாய், 25 இலட்சம் ரூபாய் என்று சொல்லி, ஒரு கோடியே 25 இலட்சம் ரூபாய் தருகிற ஒரே அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசிக்கொண்டிருந்தபோது, பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்குப் பாலியல் பலாத்காரம் போன்ற புகார்கள் இருந்தால் அந்தப் புகார்களை வைப்பதற்கு புகார் பெட்டி பள்ளிகளில் வைக்கப்பட்டிருக்கிறதா என்று வினவினார். புகார் பெட்டிகள் மட்டுமல்ல, Child help line என்ற ஒரு தொலைபேசி சேவையை இங்கே துவங்கியிருக்கிறோம். தமிழ்நாடு அரசின் சார்பில், காவல் துறையின் சார்பில் இந்த Child help line என்ற தொலைபேசி சேவை இருந்துகொண்டிருக்கிறது. குழந்தைகள் பாதிக்கப்பட்டால், இதுபோன்ற புகார்கள் ஏதும் இருந்தால், அவர்கள் குறிப்பிட்ட ஒரு நம்பரை டயல் செய்தால், அதற்கு எந்தவிதமான கட்டணமும் இல்லை, அந்தப் புகாரைப் பற்றி அங்கே தகவல் சேகரிப்பவர்கள் உடனடியாக காவல் துறையினரை அனுப்பி நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளையாட்டு வீரர்களின் முக்கியத்துவத்தைப் பற்றி அரசு கவனம் கொள்ள வேண்டுமென்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். பொறியியல் கல்லூரியைப் பொறுத்தவரையில் விளையாட்டு வீரர்களுக்கென தனி இட ஒதுக்கீடு உண்டு. அது 100 இடங்கள் மட்டுமே இருந்தன. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி

அம்மா அவர்கள் 100 இடங்களை, விளையாட்டு வீரர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து 500 இடங்களாக மாற்றிக்கொடுத்துள்ளார்கள். அந்தப் பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சேரும் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி சுபா, 23 நிமிடங்கள் ஆகிவிட்டன. உரையை முடியுங்கள்.

திருமதி ர. சுபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், புகார்களைத் தெரிவிக்க child help line அமைக்கப்பட்டுள்ளது என்று அறிவித்ததற்காக மாணவர்களின் சார்பிலும், என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக அரசு M.Tech., Sports Technology பயின்ற மாணவர்களுக்குப் பணி வழங்கினால் அந்தத் தொகை முழுவதுமாகப் பயன்படும். தமிழகம், உலக அளவில் சாதனை புரிய வாய்ப்பு உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு, தொடக்கக் கல்வித் துறையிலிருந்து பள்ளிக் கல்வித் துறையின்கீழ் செயல்படும் உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு அலகு விட்டு அலகு மாறுதல் கடந்த 2009–2010 ஆம் கல்வியாண்டில் வழங்கப்பட்டது. அதேபோல், தற்போதும் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் அலகு விட்டு அலகு மாறுதல் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன். (குறுக்கீடு) திருமதி சுபா, தொகுதிப் பிரச்சினையை எழுதிக் கொடுத்துவிடுங்கள். பதிவு செய்துகொள்கிறேன்.

திருமதி ர. சுபா: எனது தொகுதிக் கோரிக்கைகளை முன்வைக்கிறேன். கெங்கவல்லி தொகுதிக்குட்பட்ட தலைவாசல் ஒன்றியத்திலுள்ள சார்வாய் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி கி.பி. 1895 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, நூற்றாண்டு விழா நிறைவுபெற்ற பழமையான பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 27–6–1982–ல் கெங்கவல்லி தொகுதிக்குட்பட்ட தொடவூர் பேரூராட்சியில் உள்ள நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டது. மேலும் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியிலிருந்து மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டும் என்று கடந்த 27–10–2010–ல் ரூபாய் 70,000 பள்ளிக் கல்வித் துறைக்குச் செலுத்தப்பட்டது. 31–12–2010 அன்று மீதமுள்ள தொகை ரூபாய் 1,30,000 பள்ளிக் கல்வித் துறைக்குச் செலுத்தப்பட்டது. அப்பள்ளிக்கு 7 ஏக்கர் நிலம் உள்ளது. 30 வகுப்பறைகள் உள்ளன. ஆய்வகம் ஒன்று உள்ளது. மேலும், மாணவர்களுக்குத் தேவையான பெஞ்ச், டெஸ்க் ஆகிய அனைத்தும் உள்ளன. அனைத்து வசதிகளையும் கொண்ட இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியிலிருந்து மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த ஆவன செய்திட கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன்.

பிற்பகல் 1–35

***திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பு வழிக்கும், அறநெறிக்கும் குறளே ஆதாரம்; அகில உலகத்தின் ஆனந்த வாழ்விற்கு பொருளே ஆதாரம்; தொல்லை தரும் தீயவர்களுக்கு இருளே ஆதாரம்; கோடானுகோடி தொண்டர்களுக்கும் பாமர மக்களுக்கும் அம்மா உங்கள் அருளே ஆதாரம். இலட்சியப் பாதையில், மாற்றார் உருவாக்கிய தடைக் கற்களையெல்லாம் தகர்த்தெறிந்துவிட்டு, தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் வழிநடத்திச் செல்லும் எனக்கு எல்லாமாகவும் விளங்கும், தங்கத் தமிழகத்தின் சிங்க நிகர் தலைவியாம், பார்போற்றும் அன்னையாம், மாற்றாரும் மனம் கனிந்து பணிந்து ஏற்கும் கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறை, தமிழ் வளர்ச்சி, (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைமீதான விவாதத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை என்று வைக்கப்படும்."

என்றார் வள்ளுவர். அதாவது தன் குடிமக்கள் நலியாத வண்ணம் காத்து காப்பாற்றும் மன்னனை இறைவனுக்கு நிகராக மக்கள் போற்றுவார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழக மக்களின் நல்வாழ்விற்காக தம் வாழ்க்கையை அர்ப்பணித்து, அல்லும் பகலும் மக்களின் முன்னேற்றமே எனது மூச்சு என்று நாள்தோறும் எண்ணி, சிந்தித்து தினந்தினம் பற்பல புதிய திட்டங்களைச் செயல்படுத்தி, நம் மாநிலத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக மாற்றுவதற்கு சபதமிட்டு அதன்வழி செயலாற்றி வரும் மாண்புமிகு அம்மா அவர்களை வள்ளுவர் கூறியவாறு இறைவனாகவே மக்கள் எண்ணிக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் இரண்டாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, கல்விக்கு மிக முக்கியத்துவம் கொடுத்து, படிப்பது பாவம், படிப்பே நமக்குத் தேவையில்லையென்று பழமையில் மூழ்கிக் கிடந்த மக்களிடையே, படிப்புதான் தங்களது சமூகப் பொருளாதார மாற்றத்திற்கு அடிப்படை என்ற உணர்வை உருவாக்குவதில் தீவிரமாகச் செயலாற்றினார்கள். அந்த வகையில், கடந்த 2001 முதல் 2006 ஆம் ஆண்டு வரை மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் 1,274 புதிய தொடக்கப் பள்ளிகள் துவங்கப்பட்டன. 2,790 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 394 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 406 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டன. மேலும், மரத்தடியிலே படிக்கின்ற காலம் மாறி, மாளிகை போன்ற கட்டடங்களில் படிக்கின்ற காலத்தை உருவாக்கிக் கொடுத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முதல் முறையாக, கல்வித் துறைக்காக நபார்டு வங்கியிடம் நிதியுதவி பெற்று, அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலே வகுப்பறைகள், ஆய்வகக் கட்டடங்கள், குடிநீர் வசதி, கழிப்பிட வசதி போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்தி,

தனியார் பள்ளிகள் கட்டடத்திற்கு நிகராக, ஏன் அதற்கு மேலாகக் கட்டடங்களைக் கட்டிக் கொடுத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். மேலும், புதியதாகத் தொடங்கப்பட்ட துவக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்ட பள்ளிக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை முழுமையாகப் பூர்த்திச் செய்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று பாடங்கள் வரை தோல்வியுறும் மாணவர்களுக்கு உடனடி மறுதேர்வு முறையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தக் கட்டத்தில்கொண்டு வந்து, இப்பொழுது 2012 ஆம் ஆண்டில் முழு தேர்ச்சி பெறாத அனைத்துப் பாடங்களையும் எழுதக்கூடிய வாய்ப்பை உருவாக்கித் தந்து, அந்த மாணவர்களுடைய ஓராண்டு காலத்தை வீணடிக்காமல், அவர்கள் உயர் கல்விக்குச் செல்கின்ற நிலையை உருவாக்கித் தந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

தமிழ்நாட்டில் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களும் தமிழ் கற்பதை உறுதி செய்யும் நோக்குடன், அறிவியல் தமிழ் என்ற பாடம் மாநிலத்தில் உள்ள அனைத்து வகைப் பள்ளிகளிலும் எல்.கே.ஜி. முதல் 12 ஆம் வகுப்பு வரை அறிமுகம் செய்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மேலும், 2001 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை 58,282 ஆசிரியர் பணியிடங்களை நிரப்பினார்கள். 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா பாடப் புத்தகத்தை வழங்கினார்கள், +1, +2 வகுப்பு கல்வி பயிலும் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் விலையில்லா மிதி வண்டிகள் வழங்கினார்கள். இப்படிப் பல்வேறு வகையில், கல்வித் துறையில் மாண்புமிகு அம்மா அவர்கள் கவனம் செலுத்திய காரணத்தினால், தொடக்க நிலையில் நிகர சேர்க்கை விகிதம் 2001–2002–ல் 93 சதவிகிதத்திலிருந்து உயர்ந்து, 2005–2006–ல் 99.29 சதவிதமாகவும், தற்பொழுது 99.69 சதவிகிதமாகவும் உயர்ந்துள்ளது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, நடுநிலையில் நிகர சேர்க்கை 2001–2002 இலே 90 சதவிகிதத்திலிருந்து உயர்ந்து, 2005–2006 இலே 98.25 சதவிகிதமாக உயர்ந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) தற்பொழுது, அது 99 சதவிகிதமாக

உயர்ந்துள்ளது என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது 55 ஆயிரம் பள்ளிகளையும், ஐந்தரை இலட்சம் ஆசிரியர்களையும், 1 கோடியே 35 இலட்சம் மாணவர்களையும் அங்கமாகக் கொண்ட பள்ளிக் கல்வித் துறையின் முக்கியம் கருதி, கிள்ளியோ, அள்ளியோ கொடுக்காமல் வரலாறு காணாத அளவிற்கு ரூபாய் 16,965.30 கோடியை (மேசையைத் தட்டும் ஒலி) வாரி வழங்கி, கடையேழு வள்ளல்களையும் மிஞ்சி, எட்டாவது வள்ளலாக மாண்புமிகு அம்மா அவர்கள் விளங்குகிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009–ஐ நடைமுறைப்படுத்த தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011–ஐ நவம்பர் மாதம் 2011–ல் வெளியிட்டது நம் அம்மா அவர்கள் தலைமையிலான தமிழக அரசுதான் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, இச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் முதன்மை மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என அனைத்து மாநில கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் மத்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. கபில் சிபல் அவர்கள் கருத்து தெரிவித்தார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பள்ளி பொதுத் தேர்வு எழுதிய அனைத்து மாணவர்களுக்கும், மாணவர்களின் புகைப்படத்துடன்கூடிய நுழைவுச் சீட்டு அரசு தேர்வுத் துறையால் வழங்கப்பட்டுள்ளது. இச்செயல் அனைவராலும் வரவேற்கப்பட்டது. இதன்மூலம் ஆள் மாறாட்டம் நடைபெறாமல் முற்றிலும் தடுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் மாணவர் புகைப்படம் மற்றும் பாதுகாப்பு குறியீடு கொண்ட மதிப்பெண் சான்றிதழ்களை வழங்க

ஆணையிட்டுள்ளார்கள். இவ்வகை மதிப்பெண் சான்றிதழ்கள் மாணவர்களுக்கு ஒரு மதிப்புமிக்க, ஏற்கத்தக்க சான்றிதழ்களாகப் பயன்படுவதோடு, போலி மதிப்பெண் சான்றிதழ்களை முற்றிலும் ஒழிக்கும் என்பதில் ஐயமில்லை. அதன்படி தற்போது 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதியுள்ள மாணவர்களுக்கு இப்புதிய மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் முதன்மைத் திட்டங்களில் ஒன்று பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு மடிக் கணினி வழங்கும் திட்டம். இத்திட்டம் நாட்டிற்கே ஒரு முன்மாதிரியாகத் திகழ்கிறது. பிற மாநிலங்களிலும் இத்திட்டத்தை ஆர்வத்துடன் பின்பற்றத் தொடங்கியுள்ளனர். இந்த ஆண்டு மட்டும் 5.50 இலட்சம் +2 மாணவ, மாணவிகள் பயன்படும்வகையில் ரூபாய் 925.01 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்–மாணவர் விகிதாச்சாரம் தமிழ்நாட்டில், தொடக்கப் பள்ளியில் 1:26.70 ஆகவும், நடுநிலைப் பள்ளியில் 1:27.28 ஆகவும் அடைய உதவியுள்ளது. தேசிய அளவில் மத்திய அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட ஆசிரியர்–மாணவர் விகிதாச்சாரமான தொடக்கப் பள்ளிக்கு 1:30 மற்றும் நடுநிலைப் பள்ளிக்கு 1:35–ஐவிட தமிழ்நாட்டின் விகிதாச்சாரம் மேம்பட்டதாக உள்ளது என்பதைப் பெருமையோடு இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவ, மாணவியருக்கு, அவர்கள் கல்வி அறிவைப் பெருக்குகின்ற விதத்திலே, பெற்றோர்களுக்குத் தொல்லை தராமல், தேவைகளை முழுமையாக வழங்குகின்ற வகையிலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நான்கு இணை சீருடைகள், இடை நிற்றலைக் குறைக்க சிறப்பு ஊக்கத் தொகை, காலணிகள் வழங்குதல், கல்வி உபகரணங்கள் வழங்குதல், பள்ளிப் புத்தகப் பைகள் வழங்குதல், நோட்டுப் புத்தகங்கள் வழங்குதல், பாட நூல்கள் வழங்குதல், மிதிவண்டி வழங்குதல், பேருந்துப் பயண அட்டை வழங்குதல் என்பதோடு நின்றுவிடாமல், மலைப் பிரதேச மாணவர்களுக்கு கம்பளி ஆடைகள் என்று, ஒவ்வொரு பிரிவு மாணவர்களுக்கும் என்ன தேவை என்பதை உணர்ந்து அவர்கள் ஒவ்வொருவருக்கும் தாயாக இருந்து (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் அனைவரும் தரமான கல்வி பயில வேண்டும் என்று கருதி, வாரி வழங்கி வருபவர் நம்முடைய மாண்புமிகு புரட்சித்

தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதோடு நின்றுவிடாமல், மாணவ, மாணவியரின் நுண்ணறிவை வளர்க்கும் வகையில் அனைத்து மாணவர்களுக்கும் சதுரங்கம் விளையாடுவதற்குரிய வசதிகளை மாண்புமிகு அம்மா அவர்கள் செய்து கொடுத்திருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எல்லா விஷயங்களிலும் தொலைநோக்குப் பார்வை கொண்டுள்ள மாண்புமிகு அம்மா அவர்கள், அடுத்த நூற்றாண்டை மாணவர்கள் எதிர்நோக்கும் வகையிலே அறிவுசார் கணினித் திறன்களை மாணவ, மாணவியர் பெறும் வகையில் அறிவுசார் பள்ளிகளைத் துவக்கி செயல்படுத்தி வருகிறார்கள். மாணவர்களின் செயல்பாடுகளைத் தொடர்ந்து கவனிக்கும் வகையில் ஸ்மார்ட் கார்டுகளை ஒவ்வொரு மாணவர்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கல்வி முறையில் மறுமலர்ச்சி ஏற்படுத்தும் வகையில் முப்பருவக் கல்வி முறையை அறிமுகப்படுத்தி, ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை நடைமுறைப்படுத்தி வரும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, இந்த ஆண்டு முதல், ஒன்பதாம் வகுப்பிற்கும் அறிமுகப்படுத்தப்பட உள்ளது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை அறியும்போது, தமிழகத்தின் கல்வித் துறை விரைவிலே இந்தியாவினுடைய முதன்மை இடத்திற்கு வரும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் *1–45*

மாணவர்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையுமே விலையில்லாமல் வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்கள், மாணவர்களுக்குத் தரமான கல்வியை உபதேசிக்க ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் இதுநாள் வரை *51,757* ஆசிரியர்களைத் தெரிவு செய்ய உறுதி செய்ததுடன் வரலாற்றுச் சாதனையாக ஒரே நாளில் கடந்த டிசம்பர் மாதம் *2012*–ல் *20,920* ஆசிரியர்களுக்குப் பணி நியமன ஆணைகள் வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) பணி நியமன ஆணை பெற்றவர்களின்

குடும்பங்கள் மட்டுமல்ல, அவர்களால் கல்வி அறிவு பெறுகின்ற இலட்சக்கணக்கான மாணவர்களின் குடும்பங்களும் இந்த உலகம் உள்ளவரை வாழ்த்திக் கொண்டேயிருக்கும்.

அதுமட்டுமல்ல, 18,176 ஆசிரியரல்லாதப் பணியாளர்களை நியமிக்க ஒப்புதலளித்து இன்று வரை 7,275 பணியாளர்களை நியமித்து மாண்புமிகு அம்மா அவர்கள் பள்ளிக் கல்வித் துறையை வலுப்படுத்தியதோடு, அப்பணியாளர்களின் குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்தையும் அளித்து விளக்கேற்றியுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2006 முதல் 2011 வரை ஆட்சியில் இருந்தவர்கள் மொத்தம் 931 பணியாளர்களை மட்டுமே நியமித்துள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் பல்லாயிரம் குடும்பங்களுக்குப் பணி நியமன ஆணை வழங்கி, அக்குடும்பங்களில் விளக்கேற்றினார்கள்.

முந்தைய ஆட்சியாளர்கள் நில அபகரிப்பு, அரசியல் படுகொலை, பத்திரிகை அலுவலகங்கள் எரிப்பு, நண்பர்கள் தற்கொலை எனப் பல்வேறு செயல்கள்மூலம் பல்லாயிரம் குடும்பங்களின் விளக்கை அணைத்து, தன் மகள், பேரன், மகளின் தாய் ஆகியோரின் வீட்டு விளக்குகளை மட்டும் பிரகாசமாக எரியச் செய்தார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எல்லாத் துறைகளிலுமே உயர் தொழில்நுட்பங்களைப் புகுத்தி வரும் மாண்புமிகு அம்மா அவர்கள், கல்வித் துறையில் புவியியல் தகவல் முறைகள் என்னும் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, குடியிருப்புப் பகுதிகளை ஆய்வு செய்து, இன்னும் 732 இடங்களிலே புதிதாக துவக்கப் பள்ளிகளைத் துவக்கலாம் என்றும், 330 துவக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தலாம் என்றும், உண்டி உறைவிடப் பள்ளிகளை எங்கெங்கு துவக்க வேண்டும் என்பதையெல்லாம் இன்றைக்கு ஆய்வு செய்து, கண்டறிந்து வைத்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மழலையர் முன்பருவக் கல்வியை ஊக்குவிக்கும் வகையிலே 4,800 அங்கன்வாடி மையங்களுக்கு 3.81 கோடி ரூபாய் செலவில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி, ஊக்கப்படுத்தியுள்ளார்கள்.

குழந்தைகளின் நல வாழ்வில் தந்தையரை விட, தாய்மார்களுக்கு இருக்கும் அக்கறையை நன்கு உணர்ந்த அம்மா அவர்கள் 'அன்னையர் பள்ளி பார்வைக் குழு' என்னும் ஐந்து அன்னையர்களைக் கொண்ட குழுக்களை அமைத்து பள்ளிகளில் உள்ள கழிப்பறை, குடிநீர், ஆய்வகம், நூலகம், விளையாட்டு மைதானம், வகுப்பறை ஆகியவற்றிலுள்ள வசதிகளை உறுதி செய்ய ஆணையிட்டு, செயல்படுத்தி வருகிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள், 2011–2012 ஆம் கல்வியாண்டில் மட்டும் 710 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தியுள்ளார்கள் என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2011–ல் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு இரண்டு ஆண்டுகளில் 200 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தியுள்ளார்கள் என்பதையும் இந்த நேரத்திலே பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பள்ளி மாணவர்களின் மனதையும், உடலையும் தூய்மைப்படுத்தும் வகையிலே யோகா பாடத்தை ஒரு பாட வேளையில் கற்றுத் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தக் கல்வித் துறைக்கு ஆற்றியிருக்கிற சேவை என்பது சாதனை மட்டுமல்ல, ஒரு சரித்திரம் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவில் உள்ள மாநில முதல்வர்களில் ஒரு சிலரின் செயல்களைத்தான் அனைவரும் உற்று நோக்குகின்றார்கள். அதில் தலையாய இடத்தைப் பிடிப்பவர் எங்களது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே ஆவார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய தலைமையின்கீழ் தமிழ் வளர்ச்சித் துறையிலே அங்கம் வகிக்கும் தமிழ் வளர்ச்சி இயக்ககம் மொழிபெயர்ப்புப் பிரிவு, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,

தமிழ் பல்கலைக்கழகம் உள்ளிட்ட அமைப்புகள் தளர்வின்றி, செம்மையாகச் செயல்பட்டு வருகின்றன.

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழோடு அறிவியல் தமிழ் என்னும் நான்காம் தமிழை உலகிற்கு உணர்த்திய பெருமை மாண்புமிகு அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) 1968–லே உலகத் தமிழ் மாநாடு கண்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தை உருவாக்கினார்கள். 1981–லே ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு கண்ட புரட்சித் தலைவர் அவர்கள், தஞ்சை பல்கலைக்கழகத்தையும், மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கத்தையும் உருவாக்கினார்கள். 1982–லே இச்சங்கத்திற்கு தல்லாகுளம் பகுதியில் 14.15 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. 1995–ல் அகிலமே வியக்கும் வண்ணம் எட்டாவது உலகத் தமிழ் மாநாடு கண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அறிவியல் தமிழ் என்னும் நான்காம் தமிழை, தமிழ்கூறும் நல் உலகிற்கு அறிமுகப்படுத்தி, மாபெரும் அறிவியல் தமிழ்ப் பண்பாட்டுக் கருத்தரங்கத்தை நடத்தி அன்னைத் தமிழுக்கு அணி சேர்த்தார்கள். இதனால் கணினி உலகில் தமிழுக்கும் ஒரு தனி இடம் கிடைத்தது.

மாண்புமிகு அம்மா அவர்களால் முறையாக அறிவிக்கப்பட்ட 'தமிழ்த்தாய் விருது' இடையிலே வந்த குறுமதியினரால் தடை செய்யப்பட்டது. மீண்டும் ஆட்சிக்கு வந்த மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ்நாட்டிலும், பிற மாநிலங்களிலும், தமிழுக்கும், தமிழ் இலக்கியத்திற்கும், தமிழர்களுக்கும் தொண்டாற்றி வரும் தமிழ் அமைப்புகளை ஊக்கப்படுத்தி, பாராட்டிச் சிறப்பிக்கும் வகையில் 'தமிழ்த்தாய் விருது' வழங்கப்படுகிறது. இவ்விருதுபெறும் அமைப்பிற்கு ரூபாய் 5 இலட்சம் பரிசு தொகையுடன், பாராட்டுக் கேடயமும் வழங்கப்படுகிறது.

பிற்பகல் 1–50

இதுபோக திருவள்ளுவர் விருது, பாரதியார் விருது, பாரதிதாசன் விருது, திரு.வி.க. விருது, கி.ஆ.பெ. விசுவநாதன் விருது, கபிலர் விருது, உ.வே.சா. விருது, கம்பர் விருது, சொல்லின் செல்வன் விருதுகள் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் விருதுத் தொகையாக ரூபாய் 1 இலட்சம், 1 சவரன் தங்கப் பதக்கம், தகுதியுரையும் வழங்கப்படுகின்றன. மாண்புமிகு

முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி உலகத் தமிழ்ச் சங்கம் புதுப் பொலிவுடன் செயல்படும் வகையில் ரூபாய் 100 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. இச்சங்கத்திற்கு ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் பெருந்திட்ட வளாகம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையைப் பொறுத்தவரை, தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம் 2005–ல் மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கப்பட்டது. இந்திய தேசத்திலேயே விளையாட்டிற்கென தனிப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்ட ஒரே மாநிலம் தமிழ்நாடு என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பல்கலைக்கழகம் உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுத் துறை தொடர்பான உடற்கல்வி மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றில் உயர்ந்த மையமாக விளங்குகிறது. இதற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ரூபாய் 5 கோடி வழங்கி ஆணையிட்டுள்ளது என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தெற்காசிய விளையாட்டுப் போட்டியை சென்னையில் நடத்திய ஒரே முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லி 1995 ஆம் ஆண்டிலே நடைபெற்ற தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின்போது மிகச் சிறந்த கட்டமைப்புகளான பல்நோக்கு உள் விளையாட்டரங்கம், மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டரங்கம் மற்றும் வேளச்சேரி நீச்சல் குள வளாகம் ஆகியவற்றை அமைத்த பெருமை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், தனி முத்திரைப் பதித்துள்ள ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் 1993 ஆம் ஆண்டில் 234 நாட்களிலேயே கட்டி முடிக்கப்பட்டது சாதனைக்குரியது ஆகும். இதற்கு முன்பும் இவ்வளவு குறுகிய காலத்தில் யாரும் இதுபோன்ற விளையாட்டு அரங்கத்தைக் கட்டியதும் இல்லை, இதற்கு மேலும் யாராலும் கட்டவும் முடியாது. மாண்புமிகு அம்மா அவர்கள் நினைத்தால் மட்டும்தான் இந்தச் சாதனையை மாற்றியமைக்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)

இளைஞர்களிடையே விளையாட்டு ஆர்வத்தைத் தூண்டும் வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒலிம்பிக் போட்டியில் தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கம் பெறுவோர்க்கு முறையே ரூபாய் 2 கோடி, ரூபாய் 1 கோடி, ரூபாய் 50 இலட்சம் ஊக்கத் தொகை வழங்கவும் உத்தரவிட்டுள்ளார்கள். அதோடுமட்டுமல்ல, 5–வது முறையாக உலக செஸ் சாம்பியன் பட்டம் வென்ற திரு. விஸ்வநாதன் ஆனந்த் அவர்களுக்கு தமிழக அரசின் சார்பில் 2 கோடி ரூபாய் ஊக்கத் தொகைக்கான காசோலையை 6–6–2012 அன்று தலைமைச் செயலகத்தில் தங்களுடைய திருக்கரத்தால் மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கினார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஒலிம்பிக் போட்டிகள் மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கம் பெற வாய்ப்புள்ள திறன் வாய்ந்த சிறந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளைத் தயார் செய்ய மற்றும் உதவி அளிக்க ஒரு சிறப்புத் திட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் துவங்கப்பட்டுள்ளது. இதன்படி 5 தலைசிறந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் உதவி விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கவும், விஞ்ஞான ரீதியில் சிறப்புப் பயிற்சி பெறவும், உயர்தர விளையாட்டுக் கருவிகள் மற்றும் பயிற்சிக் கருவிகள் வாங்கிடவும், சத்தான உணவு வகைகள் பெற்றிடவும் ஓராண்டிற்கு ரூபாய் 25 இலட்சம் நிதி வழங்கப்படுகிறது. உலகில் பல்வேறு நாடுகளில் உள்ள கடல்களிலும் பல கிலோ மீட்டர் தூரம் பாய்மரப் படகைச் செலுத்தி சாதித்திருக்கும் 17 வயது ஐஸ்வர்யா நெடுஞ்செழியன், ‘இந்த ஆண்டு முதல் தமிழக அரசின் ஊக்கத் தொகை ரூபாய் 25 இலட்சம் எனக்குக் கிடைத்துள்ளது, தமிழக முதல்வரின் இந்த செயலால் அடுத்துவரும் போட்டிகளில் சிறப்பாகச் செயல்பட்டு, வெற்றி பெற்று, தமிழகத்திற்கும் எனக்கு உதவிய முதல்வருக்கும் பெருமை சேர்ப்பேன்’ என்று தினமணி பத்திரிகையிலே 5–5–2013 அன்று தெரிவித்துள்ளார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விளையாட்டுத் துறையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எப்பொழுதெல்லாம் ஆட்சிக்கு வருகின்றார்களோ அப்பொழுதெல்லாம் பல்வேறு வகைகளில் பல்வேறு சீர்திருத்தங்களைச் செய்துகொண்டிருக்கின்றார்கள்

என்பதைச் சொல்லி மாண்புமிகு அம்மா அவர்கள் 'நாளை நமதே, நாற்பதும் நமதே' என்ற தொண்டர்களின் கோஷத்துடன் நாற்பதையும் வென்ற, நாடாளும் நாயகியாக இப்பாரத மக்களைப் பாதுகாக்கும் அரணாக, டெல்லி (மேசையைத் தட்டும் ஒலி) செங்கோட்டையில் மூவர்ணக் கொடி ஏற்றி தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்களின் ஒட்டுமொத்தப் பிரதிநிதியாக இப்பாரதத்தை ஆளப் போகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளை தங்களிடம் மனுவாகக் கொடுக்கின்றேன். அவற்றை இங்கே இணைத்துக்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதிக் கோரிக்கைகள்: தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், பஞ்சப்பள்ளி சின்னாறு அணையிலிருந்து வெளியேறும் உபரி நீரை ஜெர்தலாவ் கால்வாய் 5000 மீட்டரிலிருந்து புதிய கால்வாய் அமைத்து, எர்ணஹள்ளி ஏரியிலிருந்து புலிக்கரை ஏரி, பேகாரஅள்ளி உட்பட 14 ஏரிகளுக்குத் தண்ணீர் கொண்டு வர நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், பஞ்சப்பள்ளி சின்னாறு அணையிலிருந்து வெளியேறும் உபரி நீரை செங்கன் பசுவன்தலாவ் ஏரியிலிருந்து புதிய கால்வாய் அமைத்து, சாமன் ஏரி முதல் தண்டுகாரனஅள்ளி ஏரி வரை 11 ஏரிகளுக்குத் தண்ணீர் கொண்டு வர நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி மாவட்டம், தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே எண்ணேகொள்புதூரில் உள்ள தடுப்பணையிலிருந்து தருமபுரி மாவட்டம், தும்பலஅள்ளி அணைக்கு தண்ணீர் கொண்டு வர வேண்டுமென்றும், தண்ணீர் கொண்டுவரும் வழியில் அம்மன் ஏரி முதல் நரியனஅள்ளி ஏரி வரை 36 ஏரிகளுக்கும் கால்வாய் அமைத்து தண்ணீர் நிரப்பவும் நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி மாவட்டம், தாளமடுவு மலைப் பகுதியில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அரியாலம்

அணைக்கட்டிலிருந்து வெளியேறும் உபரி நீரை புதிய கால்வாய் அமைத்து, தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், கும்மனூர் ஊராட்சியில் தூள்செட்டி ஏரிக்குத் தண்ணீர் கொண்டுவரவும், தூள்செட்டி ஏரியின் கீழ்ப்புறத்தில் புதிய தடுப்பணை ஒன்று கட்டி சி.எம்.புதூர் ஏரி வரை 17 ஏரிகளுக்கு தண்ணீர் கொண்டுவரும் திட்டத்தினை நிறைவேற்றித் தருமாறும் மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நல்லூர் ஊராட்சியில், தொள்ளகாது என்ற இடத்தில் சின்னாற்றின் குறுக்கே அணை கட்டி, அந்தப் பகுதி மக்களின் விவசாய பாசனத்திற்கும், நிலத்தடி நீரை உயர்த்துவதற்கும் வகை செய்யுமாறு மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி, மாரண்டஅள்ளி—பஞ்சப்பள்ளி சாலையிலிருந்து அகரம் மற்றும் கல்அகரம் கிராமத்திற்குச் செல்லும் சாலைக்கு சின்னாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைக்க வேண்டும் என மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், பாலக்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நம்மாண்டஅள்ளியில் இருந்து புதுப்பேட்டைக்குச் செல்லும் சாலையில் சின்னாற்றின் அணையின் குறுக்கே ஒரு உயர்மட்டப் பாலம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட அமானிமல்லாபுரத்திலிருந்து சந்திராபுரம் செல்லும் சாலையில் சின்னாறு குறுக்கே ஒரு உயர்மட்டப் பாலம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தருமபுரி மாவட்ட கூட்டுறவுச் சர்க்கரை ஆலை பாலிடெக்னிக் கல்லூரி, சர்க்கரை ஆலைக்கு கரும்பு விநியோகம் செய்யும் விவசாயிகள், ஆலைப் பணியாளர்களின் குழந்தைகள் மற்றும் தருமபுரி மாவட்ட மாணவ, மாணவியர் தொழில்நுட்பக் கல்வியினைப்பெறும் வகையில் அரசாணை எண் 1344, கல்வித் துறை, நாள் 12—10—1984—ன்படி, 1985—1986 ஆம் ஆண்டு சுயநிதிக் கல்லூரியாக ஆரம்பிக்கப்பட்டது. அரசாணையின்படி மொத்த

மாணவர்களின் சேர்க்கையில் கரும்பு விநியோகம் செய்யும் விவசாயிகளின் குழந்தைகளுக்கு 45%, ஆலையில் பணிபுரியும் பணியாளர்களின் குழந்தைகளுக்கு 5%, பொது தொகுப்பிற்கு 50% ஆகும். 1992 ஆம் வருடம் ஆலை அபிவிருத்தி நிதியிலிருந்து வழங்கப்பட்ட நிதி நிறுத்தப்பட்டது. 1999 ஆம் வருடம் முதல் கல்லூரியின் வருமானத்தைக் கொண்டு இக்கல்லூரி நடத்தப்பட்டு வருகிறது. தற்பொழுது கல்விக் கட்டணம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் குறைவான மாணவர்களே சேர்ந்திருக்கிறார்கள். கல்விக் கட்டணம் அரசு ஒதுக்கீடு ரூ.12,000/–, நிருவாக ஒதுக்கீடு ரூ.15,000/– ஆகும்.

ஏழை விவசாயிகளின் குழந்தைகள் மற்றும் ஏழைத் தொழிலாளர்களின் குடும்பத்தில் உள்ள குழந்தைகள் சேர்ந்து படிப்பதால், மேற்கண்ட கல்விக் கட்டணத்தைச் செலுத்தி தொடர்ந்து படிக்க முடியாமல் நின்று விடுகின்றனர். எனவே, இவர்கள் தொடர்ந்து படிப்பைப் படிக்க தற்பொழுது சுயநிதிக் கல்லூரியாகச் செயல்படும் கல்லூரியை, அரசுக் கல்லூரியாக அல்லது அரசு நிதி உதவிபெறும் கல்லூரியாக மாற்றம் செய்தால், ஏழை மாணவர்கள் படிப்பதற்கு ஏதுவாக இருக்கும்.

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கீழ்க்கண்ட பள்ளிகளைத் தரம் உயர்த்தித் தர கோருகிறேன்:

பொம்மஅள்ளி அரசு உயர்நிலைப் பள்ளியை, அரசு மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித்தர வேண்டும். பெரியாம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியை, அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியாகப் பிரிக்க வேண்டும். தும்பலஅள்ளி, குண்டாங்காடு, அகரம், வாழைத்தோட்டம், மோதூர், எர்ரகுண்டஅள்ளி (பூகானஅள்ளி ஊராட்சி) ஆகிய நடுநிலைப் பள்ளிகளை, அரசு உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும். திம்மராயனஅள்ளி தொடக்கப் பள்ளியை, நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித்தர வேண்டும்.

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காரிமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் நாகசமுத்திரம் காலனி, கிரியான அள்ளிபுதூர், தெத்துப்பள்ளம், பாலக்கோடு ஊராட்சி ஒன்றியத்தில் ஒட்டர்தின்னை, திம்மலாமேடு ஆகிய இடங்களில் புதிய துவக்கப் பள்ளிகள் தொடங்க அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாரண்டஅள்ளி பேரூராட்சியில் சார்–பதிவாளர் அலுவலகம் கட்ட போதுமான இடம் உள்ளது. ஆகவே அதற்கு ஒரு கட்டடம் கட்ட நிதி ஒதுக்கித் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நல்ல வாய்ப்பை உருவாக்கிக்கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பேச வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கு நன்றியையும், நமது மதிப்பிற்குரிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு வணக்கத்தையும், நம் அனைவரையும் உருவாக்கிய நமது ஆசிரியர் பெருமக்களுக்கு நன்றியையும் தெரிவித்து, சில கருத்துகளை இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன்.

கடந்த 12 ஆண்டு காலத்தில் மழைக்குக்கூட பள்ளியின் பக்கம் ஒதுங்கவில்லை என்று பாமர மக்கள் சொல்வதைப்போன்று பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கைமீதான விவாதத்தில் நான் இதுவரை பேசியது இல்லை. ஆகவே, இந்தத் துறைமீதான விவாதத்தில் இது எனது கன்னிப் பேச்சு என்ற முறையிலே, எனது உரையை துவக்குகிறேன். அதற்காக சில முயற்சிகளை மேற்கொண்டபோது, பல ஆசிரியர் அமைப்புகள், அமைப்புகளில் இல்லாத ஆசிரியர்கள், ஆசிரியைகள், மாணவர்கள், மாணவர்கள் அமைப்புகளிலே இருக்கக்கூடியவர்கள், இணையதளத்தில் இருக்கக்கூடிய முகநூல் நண்பர்கள், இப்படிப் பலதரப்பட்டவர்கள் மத்தியில் கல்வித் துறை பற்றிய நல்ல ஆலோசனைகள், கருத்துகள் இருந்தால் பகிர்ந்துகொள்ளுங்கள் என்று ஒரு கருத்தைக் கேட்டேன். அப்பொழுது அநேகமாக அனைவரும் ஒரே குரலிலும், ஒரே கருத்தாகவும் சொன்னது தமிழக அரசு மிகச் சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் சமச்சீர்க்

கல்வியை அமல்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அது எங்களுக்கு மகிழ்ச்சியளிக்கிறது என்ற கருத்தை (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

இதில் ஆசிரியர்கள் சங்கங்களில்கூட வேறுபாடுகள் இருக்கும். அவர்களெல்லாம் அதிகமாகப் படித்தவர்கள். பல அரசியல் கருத்து உள்ளவர்கள். ஆனால், தமிழக அரசினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தக் காலகட்டத்தில் பள்ளிக் கல்வித் துறையில் எடுத்திருக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைகளும், குறிப்பாக மாணவர்களுக்கு வழங்கியிருக்கக்கூடிய 14 வகையான விலையில்லாத பொருட்கள் அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு மிகப் பெரிதும் உதவிகரமாக இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்ற கருத்தையே அவர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். இதை நான் எனது கருத்து என்று சொன்னால் இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி உறுப்பினர் பாராட்டினார் என்று சொல்வார்கள். ஆசிரியர்கள் கொடுத்திருக்கக்கூடிய மனுவிலேயே ஒரு ஆசிரியர் குறிப்பிட்டிருக்கிறார்—ஒரே நாளில் 21,000 ஆசிரியர்களுக்குப் (மேசையைத் தட்டும் ஒலி) பணி ஆணை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் எங்களுடைய கோரிக்கையைக் கொடுங்கள் என்று அவர் எழுதிக்கொடுத்திருக்கிறார். ஆகவே, அவர்கள் கொடுப்பதையெல்லாம் நான் பேசுவேன் என்ற நம்பிக்கையில், நிச்சயமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்வார்கள் என்ற நம்பிக்கையோடு ஆசிரியர் அமைப்பில் இருக்கக்கூடியவர்கள், ஆசிரியப் பெருமக்கள் எதிர்பார்க்கின்றார்கள். அந்த வகையில் பள்ளிக் கல்வித் துறைப்பற்றி, இன்றைக்குக் கல்வித் துறை இன்னமும் எந்த அளவிற்கு முன்னேற வேண்டும் என்ற முறையிலே, சில கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

சமச்சீர்க் கல்வி, பொதுப் பாட கல்வித் திட்டம் இன்றைக்கு அமலாகிக்கொண்டிருக்கிறது. பள்ளிக் கல்வி இயக்ககம் என்ற ஒரு அமைப்பு இருந்தாலே போதுமானது. ஆனால், மெட்ரிகுலேஷன் இயக்ககமும் இணையாக இருக்கிறது. இந்த மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் ஏதாவது சமச்சீர்க் கல்விக்கு எதிராக வேறு புதிய பாடத் திட்டம் நடத்துகிறார்களா என்று ஆய்வு செய்தால், அதுவும் நடத்தவில்லை. சமச்சீர்க் கல்வியில் நமது அரசு கொடுத்திருக்கக்கூடிய அதே பாடங்கள்தான் அங்கும் இருக்கின்றன. அப்படி இருக்கும்போது ஏன் மெட்ரிகுலேஷன்

என்று தனியாக வைத்து, தனியாகக் கட்டணம் வசூல் செய்கிறார்கள் என்று நம்முடைய தமிழகத்தில் இருக்கக்கூடிய பெற்றோர்கள், மாணவர்கள் மத்தியில் ஒரு கேள்வியாக இருக்கிறது. ஆகவே, மெட்ரிகுலேஷன் இயக்ககம் என்ற வார்த்தையை நீக்கி, அனைத்துப் பள்ளிகளையும், அரசு பள்ளி, அரசு உதவிபெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள் அனைத்தையும் ஒரே குடையின்கீழ் கொண்டுவருவதற்கு முயற்சிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, கல்விக் கட்டணம் தொடர்பாக முடிவு செய்ய ஒரு குழு இருக்கிறது. ஓய்வு பெற்ற நீதிபதி திரு. சிங்காரவேலு அவர்கள் தலைமையில் இருக்கிறது. மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை கட்டணத்தைத் தீர்மானிக்கிறார்கள். அந்தத் தனியார் பள்ளியில் என்ன வரவு–செலவு ஆகிறது என்பதையெல்லாம் காட்டித்தான் கட்டணம் நிச்சயிக்கப்படுகிறது. ஆனால், பெற்றோர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், அப்படியெல்லாம் நிச்சயம் செய்துவிட்டு வந்து வெளியே அதிகபட்சமாக வசூல் செய்கிறார்கள் என்றும், அதுகுறித்து நீதிமன்றத்திலும் நாங்கள் வழக்குப் பதிவு செய்திருக்கிறோம் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: எந்தப் பள்ளியிலும் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத் தொகையைவிட அதிகமாக வசூல் செய்வதில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தப் பள்ளி என்று குறிப்பிட்டுச் சொல்வார்கள் எனில், அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் Vepery Seventh Day Adventist School, மதுரையில் இருக்கக்கூடிய Mary Ann Matriculation School, இது

தவிர ஒரு public school; பெயர்தான் public school. ஆனால், அது private school தான். இந்தப் பள்ளிகளில் கூடுதலாகக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆகவேதான்...

பிற்பகல் 2–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர், ஆதாரத்தோடுதான் இதைப் பேசுகிறீர்களா? (குறுக்கீடு) அப்படியென்றால் என்னிடம் காட்டி அனுமதி பெற்றிருக்க வேண்டுமல்லவா?

செல்வி கே. பாலபாரதி: நான் பிறகு கொடுத்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. முன்பே காட்டியிருக்க வேண்டுமல்லவா? பேசுவதற்கு முன்பு என்னிடம் காட்டிவிட்டல்லவா பேசியிருக்க வேண்டும்?

செல்வி கே. பாலபாரதி: சரி. இதில் தவறு இருந்தால் இனிமேல் நான் கவனமாகப் பார்த்துக்கொள்கிறேன். ஆனால், நான் உண்மையைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு என்ன சொல்லியிருக்கிறார்களென்றால், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட நேற்றைக்கு முதல் நாள், வங்கிகள் மூலமாக நம்முடைய அரசுத் திட்டப் பயன்கள் முறையாகப் போய்ச் சேருகின்றனவென்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோல் தனியார் பள்ளிகளில் பெற்றோர்கள் எவ்வளவு பணம் கட்ட வேண்டுமென்பதை வங்கிகளின் மூலமாகச் செலுத்திவிட்டால் அது ஒரு ஆதாரபூர்வமாகவும் இருக்கும்; அவர்களுக்கும் ஒரு நம்பிக்கை அளிக்கக்கூடிய வகையில் இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பள்ளியில் அதிகக் கட்டணம் வசூல் செய்கிறார்களென்று சொன்னால் சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடத்திலே புகார் தெரிவிக்க வேண்டும். மாநிலம் முழுவதும், மாநிலத்திற்கென்று சொன்னால் Director of Matriculation

Schools இருக்கிறார். மெட்ரிக்குலேஷன் பள்ளிகளினுடைய இயக்குநர் இருக்கிறார். அவருக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும். ஆக, ஒரு சமூகப் பொறுப்புள்ள ஒரு சட்டப் பேரவை உறுப்பினர் இந்தப் புகார்களை ஏன் முதன்மைக் கல்வி அலுவலரிடம் தெரிவிக்காமல் இந்தப் பேரவையிலே தெரிவிக்கிறார் என்பதுதான் வியப்பாக இருக்கிறது. இருந்தபோதிலுங்கூட, இதுபோன்ற குறைபாடுகள் இருக்குமென்று நீங்கள் தெரிவிப்பீர்களென்று சொன்னால், சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலருக்குத் தெரிவித்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நோக்கங்களைப் புரிந்துகொண்டு முதன்மைக் கல்வி அலுவலர்கள் செயல்பட்டிருக்க வேண்டும். அங்கு இருக்கக்கூடிய பிரச்சினைகளைத்தான் நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். அதற்குமேல் நான் போக விரும்பவில்லை. ஆனால், நீங்கள் சொன்ன அந்த நடைமுறையை நாங்கள் பின்பற்றுவோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதன்மீது உரிய கவனம் செலுத்தினால் இன்னும் பெற்றோர்களுக்கு நாம் நம்பிக்கை அளிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நேற்றையதினம் +2 தேர்வு முடிவுகளில், நாமக்கல் பள்ளிக்கூடங்களிலிருந்து இரண்டு மாணவர்கள் முதலிடம் பெற்றிருக்கிறார்கள். வருடா வருடம் நாமக்கல், ராசிபுரம், சேலம், ஈரோடு பள்ளிகளில் அதிகபட்சமாக மாணவர்கள் முதலிடத்திற்கு வருகிறார்கள். இந்த சிஸ்டம் எங்கு துவங்குகிறதென்றால் 10-வது, +1, +2, இந்த 3 வகுப்புகளைத்தான் அங்கு நடத்துகிறார்கள். இந்த 3 வகுப்புகளில் package system அநேகமாக, ஆசிரியர்களுக்கு ரூ.25 இலட்சம் ஒரு வருடத்திற்கு நிச்சயம் செய்கிறார்கள். அரசுப் பள்ளிகளில், அரசுத் துறை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உள்ளிட்டு, இவ்வளவு விலையில்லாப் பொருட்களைக் கொடுத்து, விதம் விதமாக வாரம் முழுவதும் சாப்பாடு போட்டு, நம்முடைய

ஆசிரியர்கள் உழைத்தும்கூட நம்மால் முடியவில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், பொறுங்கள். நான் பேசி முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அமைச்சர் பேசும்போது நீங்கள் குறுக்கிடக்கூடாது.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தனியார் பள்ளிகளைப் பற்றி இங்கு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசுப் பள்ளிகளில் பயின்றவர்கள் உயர்ந்த இடத்தை அடைந்திருக்கிறார்கள். குறிப்பாக விருதுநகர் மாவட்டம் தொடர்ந்து 28 ஆண்டுகளாக முதலிடத்தைத் தக்க வைத்துக்கொண்டிருக்கிறதென்ற செய்தியை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவற்றோடு மாத்திரமல்ல. தரம் என்பது அரசுப் பள்ளிகளில்தான் அதிகமாக இருக்கிறது. கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசில் கல்வியை ஒரு கடைச் சரக்காகப் பயன்படுத்திய காரணத்தினால்தான் இந்தக் கல்வி கொஞ்சம் கொஞ்சமாக சரிந்தது. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு 14 அம்சத் திட்டங்கள் போன்று இருக்கிற பல்வேறுபட்ட திட்டங்களினால் இன்று மாணவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக உயர்ந்து, மாணவர்களுடைய தரமும் உயர்ந்து, தேர்ச்சி விகிதமும் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தனியார் பள்ளிகளில் 800 பேர் Science Group படிக்கிறார்கள். எல்லோருமே I Group, II Group தான் வைக்கிறார்கள். வரலாறு வைக்கவில்லை, புவியியல் வைக்கவில்லை. பொருளாதாரம் வைக்கவில்லை, Commerce வைக்கவில்லை.

அப்படியென்றால், இந்த subjects எல்லாம் இல்லாமல் என்ன சமூகம்? அப்படியென்றால் அவர்களுடைய நோக்கமே, மருத்துவர், பொறியாளர். இது இரண்டும்தான் ஒரு பிரதானமான வாழ்க்கையினுடைய வெற்றியா? கல்வியினுடைய வெற்றியா? அப்போது, இந்த நாமக்கல், இதுபோன்ற பள்ளிகளில் இருக்கக்கூடிய அந்த concept–தவறு. வரலாறும், தமிழும், இன்னும் இருக்கக்கூடிய பாடத் திட்டங்களும் எவ்வகையிலும் குறைந்தவையே கிடையாது. இதிலே 800 இடங்களுக்கான அனுமதி அவர்களுக்கு எப்படி கிடைத்தது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, நம்முடைய நாமக்கல் பகுதியிலே தேர்வு நடைபெறுகிறபோது கடுமையான கண்காணிப்புப் பணிகளை மேற்கொண்டோம். இதுவரையில் இல்லாத அளவில் இணை இயக்குநர்கள் அடிப்படையிலே 3 இணை இயக்குநர்கள் தலைமையிலே 3 மாவட்டங்கள் என்று பிரிக்கப்பட்டு 32 மாவட்டங்களிலும் ஆங்காங்கே இணை இயக்குநர்கள் தேர்வு மையத்தைக் கண்காணித்து பணிகளில் ஈடுபட்டார்கள். அப்படி அந்தப் பணிகளில் ஈடுபடுகிறபோது தேர்வுகளில் குறைபாடுகள் அல்லது ஏதாவது தவறுகள் இழைக்கப்பட்டிருந்தால் உடனே அந்த இடத்தில் தேர்வு மையத்தை இரத்து செய்திருக்கிற ஒரே அரசு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) செல்வி கே. பாலபாரதி, ஒரு நிமிடம் பொறுங்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது,

நாமக்கல் மாவட்டத்தில் குறிப்பிட்ட பள்ளிகளில் கணிதம் மற்றும் அறிவியல் பாடங்கள் மட்டும்தான் இருக்கிறது என்று சொன்னார்கள். என்னுடைய மகனே, தற்போது முதல் மதிப்பெண் வாங்கிய பள்ளியில்தான் Vocational Group படித்தார். எனவே, மற்ற பாடங்களும் அந்தப் பள்ளியிலே இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஏனென்று சொன்னால், நாமக்கல் மாவட்டம் தொடர்ந்து முதல் இடத்தில் வந்து கொண்டிருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து இதைக் கேட்டுக் கொண்டிருக்கின்றாரா என்று தெரியவில்லை. அனைத்துப் பள்ளிகளிலும் இதுபோன்ற மற்ற பாடங்களும் இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசுப் பள்ளிகளில் First Group, Second Group–களில் 80 மாணவர்களுக்கு மேல் சேர்க்கையே கிடையாது. அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் கிடையாது. ஆனால், இங்கே 800 பேர் First Group–லே எப்படி சேர்க்கை நடந்தது? இந்த அனுமதியை எங்கிருந்து பெற்றார்கள்? கடந்தகால ஆட்சியும் இதற்கு உடந்தை. ஆகவே, இதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். தமிழ்நாடு முழுவதும் ஆசிரியர்கள் உழைக்கிறார்கள், ஏழையெளிய மாணவர்கள் இருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட பள்ளி மட்டும், அரசுப் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பில் அதிகபட்சமாக மதிப்பெண் பெற்று வருபவர்களை, இரண்டு வருடங்களுக்கு அவர்களுக்கு கோச்சிங் கொடுத்து, அதிகபட்சமாக மார்க் வாங்க வைப்பது என்பது தனியான ஒரு போக்கில் போய் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 ஆண்டுகள் தொடர்ந்து கோச்சிங் எந்தப் பள்ளியிலும் வழங்கப்படுவதில்லை. +1 பாடத்தை +1–ல்தான்

நடத்த வேண்டும். +2 பாடத்தை +2–ல் தான் நடத்த வேண்டும். +2 பாடத்தை +1–லே நடத்தப்படுவதாக மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறார். அப்படி நடைபெற்றுக் கொண்டிருந்தால் அதன்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தீவிரக் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு அதனுடைய அங்கீகாரம் இரத்து செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கீகாரம் இரத்து செய்வதோடு, இதுபோன்ற தனியார் பள்ளிகளை அரசாங்கமே எடுத்து நடத்த முடியும். நிச்சயமாக நம்முடைய மாணவர்களுக்கு நல்ல கல்வியை வழங்க முடியும் என்பதற்கு திருப்பூரில் இருக்கக்கூடிய மாநகராட்சிப் பள்ளி, இந்தியாவிலேயே 7 ஆயிரம் மாணவிகளைக் கொண்ட ஒரு மேல்நிலைப் பள்ளியாக இருக்கிறது. அருமையான கழிப்பறை வசதிகள், ஆசிரியர்கள், கற்றுக் கொடுத்தல், napkin disposal இயந்திரம் உட்பட உள்ளன. அந்தப் பள்ளி ஒரு மாநகராட்சிப் பள்ளி, மிகப் பெரிய சாதனை புரிந்துள்ளது. அதில் படிக்கிற எந்த மாணவியும் fail–லே ஆவதில்லை. ஆகவே, அரசுக் கல்வியில் முடிந்தால் எப்படி வெற்றி கிடைக்கிறது என்பதற்கு திருப்பூர் ஜெய்பா மாநகராட்சிப் பள்ளி முன்னுதாரணமாக அமைகிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்வி உரிமைச் சட்டத்தின்படி 25 சதவிகிதம் இட ஒதுக்கீடு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் பள்ளியைப் பற்றி அவர் குறிப்பிட்டார். இந்தியாவிற்கே முன் மாதிரியாக தமிழ்நாடு கல்வியிலே சிறந்து விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அவற்றோடு மாத்திரமல்ல, 2011 ஆம் ஆண்டில் தேர்ச்சி விகிதம் 85.9, 2012 ஆம் ஆண்டில் தேர்ச்சி விகிதம் 86.7, தற்போது 2013 ஆம் ஆண்டில் 88.1 சதவிகிதம் தேர்ச்சி விகிதம் கூடியிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்கின்ற தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கருத்தில் எனக்கு எந்த மாறுபாடும், வேறுபாடும் இல்லை என்பதையும் நான் பதிவு செய்கிறேன். அடுத்ததாக, கல்வி உரிமைச் சட்டத்தின்மூலம் அனைவருக்கும் கல்வி என்று மத்திய அரசு சொல்கிறது. ஆனால், அதையெல்லாம் ஒரு பக்கம் சொல்லிவிட்டு, இதில் போட்டிருக்கக்கூடிய N.C.T.E. என்பதில் சொல்லியிருக்கக்கூடிய பல்வேறு விதிகள், நிபந்தனைகள், கட்டுப்பாடுகள் ஆகியவற்றால் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. ஆசிரியர்கள் நியமனத்தில் மாநில அரசுகள் கடுமையான பிரச்சினைகளை சந்திக்க வேண்டிய அளவிற்கு இருக்கிறது. ஆகவே, இங்கே 25 சதவிகிதம் ஏழைகளுக்கான, நலிந்தோருக்கான கல்வியை பெறுவதில் 14–5–2013 ஆம் தேதியுடன் முடிந்துவிட்டது. அதை ஜூன் மாதம் வரை நீட்டிக்க வேண்டும். அவர்களுக்கும் அரசினுடைய இலவசத் திட்டங்கள் சென்று சேர்வதற்கு அறிவுறுத்த வேண்டும். இதில் தனியார் பள்ளிகள், அந்த 25 சதவிகித இட ஒதுக்கீட்டின்படி நமது தமிழகத்தினுடைய நலிவடைந்த குழந்தைகளுக்குக் கல்வி கொடுப்பதிலிருந்து தப்பவிடாமல் அதற்கு அரசாங்கத்தினுடைய ஒரு அமைப்பை ஏற்படுத்தி, அவர்களுக்கு அந்த உரிமையை பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

TET, TRB தேர்வில், ஆசிரியர் தகுதித் தேர்வில் இட ஒதுக்கீடு என்பது மிக, மிக முக்கியமானது. வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக அவர்கள் படித்த படிப்பு மூப்பின் அடிப்படையில்தான் அவர்களுக்குப் பணி வழங்க வேண்டுமென்ற கருத்தை நான்

எங்கள் கட்சியினுடைய கருத்தாக தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேசமயத்தில், இப்போது மத்திய அரசினுடைய பல நிபந்தனைகளை ஏற்று, ஆசிரியர் தேர்வு நடந்து கொண்டிருக்கிறது. 2012 ஆம் ஆண்டில் நடந்திருக்கக்கூடிய 6 ஆயிரம் பேர் தேர்ச்சியிலும் சரி, அதற்குப் பிறகு நடந்திருக்கக்கூடிய ஆசிரியர் தேர்விலும் சரி இட ஒதுக்கீடு கடைப்பிடிக்கப்படவில்லை என்ற வருத்தம் எல்லோருக்குமே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2–10

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் தகுதித் தேர்வினுடைய இட ஒதுக்கீட்டைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி எழுப்பினார்கள். ஏற்கெனவே நான் தெள்ளத் தெளிவாக இந்த அவையிலே பதிவு செய்திருக்கிறேன். குழந்தைகளுக்கான இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் பிரிவு 23 (1) பிரிவின்படி தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம், அதாவது, N.C.T.E. 23–8–2010–ல் வெளியிட்ட அறிக்கையில் 1 முதல் 8 வரையிலான வகுப்புகளுக்கு ஆசிரியர்களாக நியமிக்கப்படுகிறவர்களுக்கான குறைந்தபட்சத் தகுதிகள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தின் வழிகாட்டுதலின்படி அனைத்துப் பள்ளிகளிலும் 1 முதல் 8 வரையிலான வகுப்புகளுக்கு நியமனம் செய்யப்படும் ஆசிரியர்கள் வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதிகளுடன் அரசால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பினால் நடத்தப்படும் ஆசிரியர் தகுதித் தேர்விலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதற்கான அடிப்படைக் காரணங்களாக பல்வேறு கூறுகளைச் சொல்கிறார்கள். ஆக, அதனடிப்படையில், மேற்கண்ட கருத்துகளின் அடிப்படையில், தமிழ்நாட்டில் தகுதியான மற்றும் திறமையான ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்காகத்தான் தகுதித் தேர்வில் அனைத்துப் பிரிவினருக்கும் 60 விழுக்காடு தேர்ச்சி விழுக்காடாக இங்கே நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இது அரசின் கொள்கை முடிவு என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசத் தொடங்கி 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. உரையை நிறைவு செய்யுங்கள்.*

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனாலும், அடித்தட்டில் காலங்காலமாக இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடியின மக்கள், மாற்றுத் திறனாளிகள்—இரண்டு கண்களும் தெரியாத ஒருவர், ஆசிரியர் தேர்வில் உட்கார்ந்து பார்வை உள்ளவர்களுக்குச் சமமாக எப்படி மதிப்பெண் வாங்க முடியும்? ஆகவேதான் இட ஒதுக்கீடு என்பது அவசியம். 252–வது அரசாணையின்படி, 50 மதிப்பெண்களுக்குக்கீழே இருந்தால் அவர்களுக்குத் தகுதிக்கான மார்க் கொடுக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே, அந்த அரசாணை கைவிடப்பட வேண்டும். இட ஒதுக்கீடு கட்டாயமாகக் கொடுக்கப்பட வேண்டும். திருத்தும்போதே மார்க் போடப்பட்டால்தான் நம்முடைய சமூகத்தினுடைய பிற்படுத்தப்பட்டவர், மிகவும் பிற்படுத்தப்பட்டவர், சிறுபான்மையினர், மலைவாழ் மக்கள் அனைவரும் 'வாத்தியார்' என்கிற இடத்திலே சென்று உட்கார வேண்டும். ஆகவே அதற்கான இட ஒதுக்கீட்டினை நாங்கள் கேட்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தகுதியான ஆசிரியர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று சொன்னால், தேர்வில் 60 விழுக்காடு மதிப்பெண் அவர் பெற்றிருக்க வேண்டும். அப்பொழுதுதான் தரம் வாய்ந்த மாணவர்களை உருவாக்க முடியும். தகுந்த ஆசிரியர் தேர்வின்மூலம் தேசிய அளவில் ஒரு தரத்தின்படி திறமையான ஆசிரியர்களை நியமிக்க வாய்ப்புகள் உருவாகும்.*

அவற்றோடு மாத்திரமல்ல, ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் செயல்பாட்டினை மேம்படுத்த வழிவகை செய்யவும் மற்றும் ஆசிரியர் பயிற்சி மாணவர்களின் திறமைகளை மேம்படுத்திக்கொள்ளவும் இது பயன்படும். இத்தேர்வு முறையின்மூலம் மாணவர்களின் கல்வி நலனில் அக்கறைகொண்ட அனைவருக்கும் அரசு சிறப்புக் கவனத்தைச் செலுத்தி ஆசிரியர்

தரத்தினை உறுதி செய்திருக்கிறது. நீதிமன்றத் தீர்ப்பில்கூட வெவ்வேறு மதிப்பெண்களை, வெவ்வேறு பிரிவினருக்கு வழங்க இயலாது என்பதை உறுதி செய்து திட்டவட்டமாகத் தெளிவாக நீதிமன்றத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்கிற செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், உங்களுடைய கட்சி உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார், அதில் என்ன பாயிண்ட் ஆப் ஆர்டர்? உங்களுடைய கட்சி உறுப்பினர் இதற்கு ஒப்புக்கொள்கிறாரா என்று கேளுங்கள். (குறுக்கீடு).*

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இட ஒதுக்கீடு சம்பந்தமாக நாங்கள் எங்களுடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய கருத்தை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு, பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கிறேன். அடுத்ததாக, இதில் இருக்கக்கூடிய மிக முக்கியமான ஒரு பிரச்சினை, தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள் ஒரு கருத்தைச் சொல்கிறார்கள். இட ஒதுக்கீட்டின் அடிப்படையிலே ஆசிரியர் நியமிக்கப்படுவதில்லை என்று சொல்கிறார். தகுதியின் அடிப்படையில் இட ஒதுக்கீட்டுக்குத் தக்கவாறுதான் ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். எந்தக் காரணத்தைக்கொண்டும் எந்தெந்த சமூகத்திற்கு ஒதுக்கப்படுகிறதோ, எத்தனை விழுக்காடுகள் இருக்கிறதோ, அதனடிப்படையில்தான் அவர்களுக்கு ஒதுக்கப்படுகிறது. அவ்வளவு திறமைவாய்ந்த ஆசிரியர்கள் ஒவ்வொரு சமூகத்திலும் இப்பொழுது வந்துவிட்டார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, உரையை நிறைவு செய்யுங்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், எனக்கும் சமூக நீதியில் வேறு எந்தக் கருத்து வித்தியாசமும் இல்லை. தகுதியா, சமூக நீதியா என்றால், நாம் யார் பக்கம் நிற்போம் என்று அனைவருக்கும் தெரியும். ஆகவே, இது மத்திய அரசினுடைய ஒரு வழிகாட்டுதலால் அவ்வாறு இருக்கிறது. சிக்கல்கள், சிரமங்கள் இருக்கின்றன. அதை மீண்டும் பரிசீலனைக்கு உட்படுத்தி, திருத்துகிறபோது, கொஞ்சம் மார்க் போடுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எங்களுடைய கோரிக்கையை வைக்கிறோம். அவ்வளவுதான். வேறு ஒன்றுமேயில்லை. கோரிக்கையை நான் வைத்து விட்டேன். அதற்குப் பிறகு நான் அடுத்த பாயின்ட்டுக்குச் சென்றுவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் சொல்வதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. நியாயமான கருத்தும்கூட; அதில் ஒன்றும் எங்களுக்கு வேறுவிதமான கருத்து வேறுபாடு இல்லை. ஆனால், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூக மக்களுக்கு இட ஒதுக்கீடு சென்றடையவில்லை என்று சொல்கிற அந்தக் கருத்தை மட்டும் எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, உரையை நிறைவு செய்யுங்கள்.

செல்வி கே. பாலபாரதி: உரையை முடித்துவிடுகிறேன். இட ஒதுக்கீடு அவர்களுக்குச் சென்றடைய வேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கம், சென்றடையவில்லை என்று நான் சொல்லவில்லை. சென்றடைய வேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் பலவகையான வேலைகளைச் செய்கிறார்கள்.

விலையில்லாப் பொருட்களையெல்லாம் வாகனங்கள் மூலமாக பள்ளிகளுக்குக் கொண்டு செல்வதற்கும், அங்கே ஏதாவது துப்புரவுப் பணியாளர்கள் போன்ற உதவியாளர்களைப் பணியமர்த்துங்கள். தொடக்கப் பள்ளி . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 2–15

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் 21,000 ஆசிரியர்களுக்கான பணி நியமன உத்தரவுகள் வழங்கப்பட்டன. அப்படி வழங்கப்பட்ட உத்தரவுகள் முழுவதுமே சமூக அடிப்படையிலும், எந்தெந்த விழுக்காடுகள் ஒதுக்கப்பட வேண்டுமோ, அந்த அடிப்படையில்தான் வழங்கப்பட்டுள்ளன. அது நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது; சென்றடைந்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள். புது பாயின்டிற்குப் போகாதீர்கள்.*

செல்வி கே. பாலபாரதி: உரையை முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் மாணவர்களுக்கான விலையில்லாத கல்விப் பொருட்களை, அவர்களே சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்குச் சென்று எடுத்து வருகிறார்கள். அந்தப் பொருட்களை வாகனங்கள் மூலமாக நேரடியாக சப்ளை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பள்ளிகளுக்கு ஓர் உதவியாளராவது நியமிக்கப்பட வேண்டும். மணி அடிப்பதிலிருந்து, பெருக்குவது வரைக்கும், கல்வி தொடங்கிய காலத்திலிருந்தே இதுவரையிலும் தொடக்கப் பள்ளிகளிலே எந்தப் பணிக்கும் உதவியாளர்களை நியமிக்கும் நடைமுறையே இல்லை. ஆகவே, அதனைப் பரிசீலனை செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

இடைநிலை ஆசிரியர்களுக்கு ஆறாவது ஊதியக் குழு ஊதிய நிர்ணயத்தில் இருக்கக்கூடிய முரண்பாட்டைக் களைய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

இடைநிலை பட்டதாரி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், 2003–ல் அன்றைக்கிருந்த அரசு இரண்டு ஆண்டுகளைப் பணிமுறிவுக் காலமாக அறிவித்தது; அந்த இரண்டு ஆண்டுகளையும் பணிக் காலமாக மாற்றித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மிக அருமையான நடவடிக்கையாக ஊர்ப்புற நூலகர்களை நமது அரசு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய காலத்தை எடுத்துக்கொள்வது என்பது, அரசினுடைய கொள்கை முடிவில் இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, சீக்கிரம் உரையை முடியுங்கள்.

செல்வி கே. பாலபாரதி: உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை முடிக்கிறமாதிரி தெரியவில்லையே?

செல்வி கே. பாலபாரதி: அதேமாதிரி, ஊர்ப்புற நூலகர் பணியிடங்களில், நிறைய இளம் பெண்களுக்கு, இளைஞர்களுக்கு நல்ல வாய்ப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அவர்களுக்குக் காலமுறை ஊதியம் வழங்கி, சிறப்பு நேர்வாக அவர்களுடைய பணியை நிரந்தரப்படுத்தினால், கிராமப்புற மக்கள் நூல் வாசிப்பதற்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர் அவர்கள். (குறுக்கீடு)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

செல்வி கே. பாலபாரதி: உரையை முடித்துவிடுகிறேன். இரண்டே இரண்டு கோரிக்கைகள்தான். வாசித்தவுடன் முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் முடிக்கிற மாதிரி தெரியவில்லையே?

செல்வி கே. பாலபாரதி: உரையை முடித்துவிட்டேன். கோரிக்கை மட்டும்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோரிக்கைகளையெல்லாம் எழுதிக் கொடுங்கள். நான் பதிவு செய்துகொள்கிறேன், நேரமில்லை. இன்றைக்குப் பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கை. நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டும். நீங்கள் சற்று ஒத்துழையுங்கள். (குறுக்கீடு) சரி, உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

செல்வி கே. பாலபாரதி: வேளாண் பட்டதாரி ஆசிரியர்கள், தொழில் கல்வி ஆசிரியர்கள், கம்ப்யூட்டர் படிப்பு முடித்திருப்பவர்கள் T.R.B.–ல் பதிவு செய்வதற்கு தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்று, T.R.B.–ல் வெற்றி பெற்றவர்களுக்கு Computer, Economics போன்ற பாடங்களைப் படித்தவர்களுக்கு இன்னமும் வேலை கொடுக்கவில்லை. அவர்களுக்குப் பணி கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, அரசு உதவிபெறும் பள்ளிகளில் 2010 முதல் 2011 வரை ஆசிரியர்கள் நியமனம், அலுவலர்கள் நியமனம் போன்றவற்றில், அரசுத் துறை இப்பொழுது அலுவலக உதவியாளர்களை வழங்கியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர் அவர்கள். (குறுக்கீடு)

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கட்சி உறுப்பினர் பேசுவதிலேயே Point of order கேட்கிறீர்களே! அதெல்லாம் அனுமதிக்க முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை. அதெல்லாம் Point of order இல்லை, உட்காருங்கள். உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசினார்கள். அதிலே Point of order கேட்டால் எப்படி? (குறுக்கீடு) அமைச்சர் பதிலுரை முடித்த பிறகு கடைசியாக விளக்கம் கேட்பதற்கு அனுமதிக்கலாம்.

திரு. ஆர். சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியாரின் பொதுவுடைமை, அண்ணாவின் அறிவுடைமை, புரட்சித் தலைவரின் பண்புடைமை என அனைத்தையும் உடைமையாகப் பெற்ற கழக நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

தாயாய், தமிழாய், ஊனாய், உயிராய், பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய், நாளைய நவபாரதம் காக்க புறப்பட்டிருக்கும் புறநானூறே! (மேசையைத் தட்டும் ஒலி) நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய், நித்தம் நித்தம் புதுப் புது திட்டம் தரும் ஒப்பில்லா தலைவியே! அறிவின் பிறப்பிடமே! ஆற்றலின் சிறப்பிடமே! ஈகையின் ஊற்றே! கல்வியை உயர்த்திப் பிடிக்கும் எங்கள் உன்னதத் தலைவியே! எட்டு திசைகளும் எட்டிப் பார்க்கும் எழுச்சித் தலைவியே! பகுத்தறிவுப் பெட்டகமே! தமிழகத்தின் கண் நிறைந்த காட்சியாய் விளங்கும் ஞானத் தமிழ் காக்கும் தலைவியே! கல்வித் துறைக்கு கண் கொடுத்து, அத்துறைக்கு கருவிழியாய், கண் இமையாய், கல்விக் காவலனாய் விளங்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீரங்கம் தொகுதி, மணப்பாறை ஒன்றியத்திற்குட்பட்ட ஒண்டிப்பட்டி வருவாய் கிராமத்தில் ரூ.1,200 கோடி மதிப்பில் காகித அட்டை தயாரிப்பு ஆலை அமைத்து, அப்பகுதியிலுள்ள சுமார் 2,000 குடும்பங்களில் விளக்கேற்றி வைத்த எங்கள் குடும்ப தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பிலும், எனது மணப்பாறை தொகுதி மக்களின் சார்பிலும் கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி வணங்குகிறேன் அம்மா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கைமீதான விவாதத்தில் உரை நிகழ்த்த வாய்ப்பளித்த என் தாயே, காவேரியை கையால், வாயால், தடுத்தவர்களை நீதியால் வென்றெடுத்த பொன்னியின் செல்வி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே! திராவிட இயக்கத்தின் வீர வரலாறே! உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவியே! மாண்புமிகு அம்மா அவர்களே! உங்கள் மலர்ப் பாதங்களில் என் நன்றியைப் படைக்கின்றேன் அம்மா!

பிற்பகல் 2—20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் தொலைநோக்குத் திட்டத்தை சிந்தித்து, இதுகாறும் எந்த ஆட்சியும் முனைப்பெடுக்காத ஒன்றை, தமிழர்களுக்கு வழங்கிய தாயே! 2013–2014 ஆம் நிதியாண்டில் தமிழக நிதியில் கல்விக்கு அதிக ஒதுக்கீடு என்பது அறிவாளிகள் மட்டுமே செய்யக்கூடிய சாதனை. ரூ.16,965.30 கோடி நிதியளித்து, சந்தன மரத்திற்குத் தீயை தின்னக் கொடுப்பவர் மாதிரி இன்றி, அறிவுக்கு விளக்கு தந்த அன்னையே! உங்கள் உரத்த சிந்தனையை உலகே வியக்குதம்மா!

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் மக்கள் விரும்பும் ஆங்கில மொழிவழிக் கல்விக்கு வழிகாணும் வகையில், அரசு தொடக்கக் கல்வி முதல் மேல்நிலைப் பள்ளி வரை ஆங்கிலவழிக் கல்வியைக் கற்பிக்க ஆவன செய்தும், ஆங்கில ஆசிரியப் பெருமக்களைப் பணியமர்த்தியும், மக்களின் ஆசையை நிறைவேறச் செய்த தாயே! உங்களுக்கு என் மனமார்ந்த நன்றியைப் படைக்கின்றேன் அம்மா.

கற்றலில் இனிமை, எளிமை, பருவமுறைத் தேர்வு வழியாக கல்வி மேம்பாட்டையும், நீதியரசர் குழுமூலம் கல்விக் கட்டணங்களையும் நிர்ணயித்து, ஏழை மக்களும் சிறப்பானதோர் கல்வியைப் பெற வழிவகை செய்த தாயே! உங்களை நாடே போற்றுகிறது அம்மா!

கற்றலில் வறுமை வந்து தடைக்கல்லாய் நின்றபோது, படிக்கல்லாய் மாற்றிட, இடை நிற்றலைத் தவிர்த்திட, ஆரம்ப வகுப்பு முதல் மேல்நிலை வகுப்பு வரை கல்வி உதவித் தொகைகள் ரூபாய் ஆயிரம், ரூபாய் ஆயிரத்து ஐநூறு, ரூபாய் இரண்டாயிரம் என பல்வழிகளில் வழங்கி, இடைநிற்றலைத் தவிர்த்து எல்லோரும் அரசுப் பள்ளியை நோக்கி பார்வையைத் திருப்பும் விதமாக, குழந்தைகளைப் பள்ளிக்கு ஈர்த்து, கல்வி புரட்சியாய் மாற்றிய தாயே! உங்களுக்கு ஆனந்தக் கண்ணீர் நிறைந்த ஈரக் கண்களோடு நன்றி பாராட்டுகிறேன், அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

கால்நடையாய் பள்ளிக்கு வந்த நம் குழந்தைகளின் கால்களுக்குக் காலணி வழங்கி, பாதங்களில் முள் தைக்காமல் உபாதைகள் தவிர்த்து, இலவசமாய் பேருந்து சலுகைகள் தந்து,

மேல்நிலைக் கல்வி பயில்வோருக்கு மிதிவண்டிகள் தந்து, மாணவர்களின் கண்ணீரை நீக்கி, அறிவொளி தந்த அன்னையே! கண்ணீரைத் தருகின்றவர்களுக்கும் கண்களையே தருகின்ற என் தாயே! என் விழி நன்றி மலர்களாய் ஆனந்தக் கண்ணீர் உகுக்கிறது தாயே!

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வியில் வானளாவிய சாதனை படைத்திட இணையதளக் கல்வி வசதி ஏற்படுத்தி, கற்றலில் புதுமை சேர்த்த பொன்னியின் செல்வியே! மடிக் கணினி வழங்கி மாணவர்களின் மனதில் ஆழ்கடலின் ஆழமாய் நின்ற எங்கள் தாயே!

ஏழைக் குழந்தைகள் மதிப்பெண் எடுத்து உயர் கல்வி பயில இயலாத குறை நீக்க, அதிக இடங்களை அனைத்துப் பிரிவுகளிலும் தோற்றுவித்து, வங்கிவழிக் கடனுதவிகள் ஏற்படுத்தி, ஏழைகளும் படிக்கும் நிலையை உருவாக்கிய எங்கள் அன்னையே!

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கற்றல் ஆர்வத்தை அதிகரித்து பள்ளிக்கு வரும் சதவீதத்தை அதிகரிக்க, ஆண்டுதோறும் வண்ணப் பென்சில்கள், அழிப்பான்கள், ஜாமெட்ரி பெட்டிகள், பாடநூல்கள், புத்தகப் பை வழங்குவதோடு, விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசுகள் தந்து, பள்ளிக்கு வரும் ஆர்வத்தை உருவாக்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

வீட்டருகே சுகாதாரமான அனைத்து வசதியோடு பள்ளியைப் புனரமைத்து, புதிய கட்டடங்கள் வழங்கி வண்ணமயமாக பள்ளிகளை உருவாக்கிய எங்கள் தாய் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன்.

ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டாண்டுகளில் பள்ளிக் கல்வித் துறையில் ஆசிரியர் மற்றும் பணியாளர்கள் பற்றாக்குறையை நீக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையின்பேரில் 51,757 இடைநிலை ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களைத் தகுதித் தேர்வால், நியாயத் தராசில் இட்டு பணியமர்த்தியும், 7,275 ஆசிரியர் அல்லாத பணியாளர்களை கல்வித் துறையில் நியமித்து மற்றும் பணிக்காலத்தில் காலமான பள்ளிக் கல்வித் துறையைச் சார்ந்த 394 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கிய தாயே! உங்களை நாடே பார்க்கிறது அம்மா!

கல்வித் துறை சீர்திருத்தத்தில் சிறப்புத் தேர்வுகள் தந்து, வீழ்ந்தோரைத் துவண்டு விடாமல், ஆண்டுகள் வீணாகாது, இளைய தலைமுறையின் உணர்வுகளை உள்வாங்கிய எங்கள் தாயே!

பள்ளிகளைத் தரம் உயர்த்தியும், அன்றாட அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றியும், பள்ளிகளைக் கட்டமைப்பு வசதிக்குள் கொண்டு வந்த தாயே! தாயுள்ளத்துடன் நீங்கள் செய்ததால் நாடே உங்களை நன்றியுடன் “அம்மா கொடுத்தாங்க, அம்மா செய்த திட்டம்” என்று சொல்லக் கேட்கிறேன் தாயே!

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே எந்த ஒரு முதலமைச்சரும் செய்யாத சாதனையாக, ஒரே நாளில் 20,920 ஆசிரியர்களை நியமனம் செய்து, கல்விக் கண் திறந்த மாண்புமிகு அம்மா அவர்களை சரஸ்வதியாகப் பார்க்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2—25

கல்வியின் வளர்ச்சி, ஒரு தேசத்தின் அறிவின் வளம்; சமூகத்தை வளர்த்தெடுக்கும் பொறுப்புடன் அறிவாளியின் தேவை அறிந்த என் தாய் மாணவர்களின் நலன் காக்கும் அரசு, மாணவிகளின் உடல் உபாதை நீக்கும் நாப்கின் திட்டம்; மலைப் பகுதியில் குளிர் தாங்க கம்பளி ஆடைத் திட்டம் என பல்வேறு நலன்களை ஆற்றும் எங்கள் தாயே! தமிழக முதல்வர் அம்மா அவர்களே! நாடே உங்களுக்கு நன்றிக் கடன்பட்டிருக்கிறது அம்மா. கிராமங்கள் கல்வியில், விளையாட்டில் விஞ்சி 700 சதவீத வெற்றியைப் பெற்று விளங்கிடும் வகையில், மறுமலர்ச்சி விளைவித்து எவரும் எட்டாத வகையில் வான்முட்டும் சாதனை செய்த அன்னையே!

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாணவர்களின் நலன் காக்கும் அரசாக மட்டுமின்றி, அரசுப் பணியாளர் மற்றும் ஆசிரியர் நலன் நாடுகின்ற அரசாக உயர்ந்து, கொடை தந்து, குடையாய் நிழலாய் அவர்தம் வாழ்வில் வழிநெடுகிலும் திட்டங்கள் அளித்த தாயே! நெஞ்சார்ந்த நன்றியோடு அறிவு சமூகம் உங்களுக்குச் சாமரம் வீசுகிறது தாயே! பள்ளிக் கல்வியோடு அங்கன்வாடிகளுக்குப் புதிய கட்டடங்கள்; உணவு வகைகள்; மகளிருக்கென புதிய தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம் ஏற்படுத்தி, பெண் கல்வியின் வளர்ச்சியில் மறுமலர்ச்சி தந்த தெய்வமே! அம்மா, நீங்கள் மட்டுமே வரலாறுகளைத் தோற்றுவிக்கும் புதிய வரலாறு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு திட்டம் தீட்டினால், அதற்கு ஒரு பலன் மட்டும் கிடைக்காது. பல்நோக்குப் பலன்கள் கிடைக்கும் வகையில்தான் அம்மா அவர்களின் திட்டம் இருக்கும். தெற்காசிய விளையாட்டுப் போட்டி சென்னையில் முதன்முதலாக சீரும் சிறப்புமாக, உலகம் வியக்கும்வண்ணம் நடைபெற நவீன நீச்சல் குளங்கள், உள்விளையாட்டரங்கங்கள் போன்ற பல்வேறு விளையாட்டுத் துறைக்கான உள்கட்டமைப்புகளை அன்று அம்மா அவர்கள் உருவாக்கினார்கள். தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளுக்கு வருகை தந்த வெளிநாட்டு வீரர்கள் தங்கிய இடம்தான், இன்றைக்குச் சென்னையில் மிக முக்கிய பகுதியான கோயம்பேடு பேருந்து நிலையத்தையொட்டி இருக்கிற தெற்காசிய விளையாட்டு கிராமக் குடியிருப்பாகும். அங்குதான் I.A.S., I.P.S., போன்ற அரசு உயரதிகாரிகள் குடியிருந்து, குடிமைப் பணிகளைச் செவ்வனே செயலாற்றி வருகின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலக சதுரங்கக் கூட்டமைப்பின் வேண்டுகோளினை ஏற்று, உலக சதுரங்க வாகையர் போட்டியினை நம் தமிழ்நாட்டில், சென்னையில் நடத்திட ரூ.29 கோடி நிதி ஒதுக்கி பெருமை சேர்த்தவர் நம் மாண்புமிகு அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இளைஞர்களின் திறன்வளர் பயிற்சியை ஊக்குவிக்கும் விதமாய், 75 கோடி ரூபாயாக இருந்த மாநில திறன் மேம்பாட்டு இயக்கத்திற்கான நிதி ஒதுக்கீட்டை இந்த நிதியாண்டில் 100 கோடி ரூபாயாக உயர்த்தி, வடிவமைக்கப்பட்ட திறன் பயிற்சியைத் தொடர்ந்து அளிக்க 8 கோடி ரூபாய் நிதியொதுக்கமும் செய்து, அந்த இளைஞர்களுக்கும் வாழ்வளித்தவர்தான் எங்கள் மாண்புமிகு அம்மா.

2010–2011 ஆம் ஆண்டில் வெறும் 31.26 கோடி ரூபாயாக இருந்த விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் துறைக்கான மொத்த ஒதுக்கீட்டை, இந்த நிதியாண்டில் 112.50 கோடி ரூபாயாக உயர்த்தியவர்தான் எங்கள் மாண்புமிகு அம்மா. இப்படியெல்லாம் அட்டவணைப்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான் முடியும். உண்மையைச் சொன்னால், ‘தமிழுக்கு ஆய்த எழுத்து தனிச் சிறப்பு; அதுபோல் தமிழகத்தின்

அரியணையில் எங்கள் அம்மா இருப்பது இன்னுமோர் அருஞ்சிறப்பு' (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான் கல்வித் துறையானது மாசறு பொன்னாக, வலம்புரி முத்தாக, கரும்பாக, தேனாக விளங்கி வருகிறது என்ற என் கருத்தைப் பதிவு செய்கிறேன். "சும்மா சொன்னாலே வாயெல்லாம் நோகுமின்னு, சுருங்கவே சொல்லுகிறேன். பாரதத் தாய் எங்கள் அம்மா," என்று சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) முதுகு சவாரிக்கு பரண் அமைக்காமல், சுயமரியாதைக்கு சொந்தம் கொண்டாடும் அன்னையை மீண்டும் வணங்கி, ஒரு கானக் குரலோடு, பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். எனது தொகுதி சம்பந்தமான கோரிக்கையை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடத்தில் சமர்ப்பிக்கின்றேன்.

தொகுதி கோரிக்கைகள்: எனது மணப்பாறை தொகுதியில் மணப்பாறை பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த வேண்டுகிறேன்.

மணப்பாறை தொகுதி, மருங்காபுரி ஒன்றியப் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. எனவே, இப்பகுதியில் ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஏற்படுத்தித் தருமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

மணப்பாறை தொகுதியில் மணப்பாறை வட்டம் பெரிய வட்டமாக உள்ளது. சுமார் நான்கரை இலட்சம் மக்கள் தொகை கொண்ட இந்த வட்டத்தை இரண்டாகப் பிரித்து, மருங்காபுரியை தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டமாக உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களை வேண்டுகிறேன்.

மணப்பாறை தொகுதி, மருங்காபுரி ஒன்றியத்திற்குட்பட்ட பாலாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைத்து, மருங்காபுரி ஒன்றியத்திலுள்ள 29 ஊராட்சி விவசாயிகளின் துயர் துடைக்க மாண்புமிகு அம்மா அவர்களை வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள். நீங்கள் உட்பட இன்னும் ஆறு உறுப்பினர்கள் பேச வேண்டியுள்ளது. காலத்தின் அருமை கருதி சுருக்கமாகப் பேச வேண்டும்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை, தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கைமீதான விவாதத்தில் எனது கருத்துகளை முன்வைக்க வாய்ப்பளித்ததற்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செல்வத்துள் சிறந்த செல்வம் கல்விச் செல்வம் என்று கல்வியின் சிறப்பை, அதன் மாண்பை பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் உணர்ந்தவர்கள்தான், கல்வி ஏழைக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காக,

‘அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னவாயினும் புண்ணியங்கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்’

என்று போற்றி அனைவரும் கல்வி கற்க வேண்டும், கல்வி கற்பிக்க வேண்டுமென்று சிந்தித்துச் செயல்பட்டவர்கள்; கல்விக்கு அதிக முக்கியத்துவம் இல்லாத காலத்தில் கல்வியின் சிறப்பை உணர்ந்தவர்கள். இன்று கல்வியின் தேவை அனைத்து சமூக நிலைகளிலும் தேவைப்படும் சூழ்நிலையில் நமது கல்வித் துறையின் கொள்கைகள், செயல்பாடுகளைச் சீரமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அனைவருக்கும் கல்வி என்ற வகையில், நமது மாநில அரசு பல்வேறு வகையான திட்டங்களை உருவாக்கியிருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறேன். சமூக வேறுபாடுகளை, ஏற்றத்தாழ்வுகளைப் போக்கிட உதவும் கல்வி அனைவருக்கும் தகுதிக்கேற்றவாறு கிடைத்திடவும், கல்வியின்மூலம் நடைபெறும் கொள்ளை இலாபத்தைக் கட்டுப்படுத்திடவும் மாநில அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பிற்பகல் 2–30

குறிப்பாக, தொடக்கக் கல்வியை மேம்படுத்திட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பல்வேறு சிறப்பான திட்டங்களை உருவாக்கியுள்ளார்கள். ஆனால், தனியார் கல்வி நிறுவனங்கள் முன்பருவக் கல்வி, தொடக்கக் கல்வியில் தாய் மொழிக் கல்வி தவிர்த்த ஆங்கில மொழிக் கல்வியின் மோகத்தை உருவாக்கியும்,

பயன்படுத்தியும் கொள்ளை இலாபம் ஈட்டுகின்றனர். உலகம் முழுவதும் தாய் மொழிக் கல்வி பற்றிய விழிப்புணர்வும், அவசியத்தையும் விஞ்ஞானரீதியாகப் புரிந்து வளர்ந்த நாடுகள் எல்லாம், தாய் மொழியில் கல்வித் திட்டத்தை உருவாக்கியுள்ள நிலையில், தமிழகத்தில் தலைகீழாக தாய் மொழி தவிர்த்த கல்வி ஊக்கப்படுத்தப்படுகிறது. இளம் பருவத்தில் உள் உணர்வால் உள்வாங்கப்பட்டு உணரும் தாய் மொழியைத் தவிர்ப்பது சரிதானா? அது நமது மொழியின் வளர்ச்சிக்கு உதவுமா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாய் மொழிக் கல்வியை வளர்க்க வேண்டுமென்ற ஒரு கருத்தை வைத்தார். தாய் மொழியை முதல் பாடமாக எடுத்தவர்களுக்குத்தான், மாநிலத்தில் முதலிடத்தில் இடம் பெறுவதற்கான வாய்ப்பு வழங்கப்படுகிறது. இப்போது இன்றைய நாளிதழில்கூட நீங்கள் பார்த்திருப்பீர்களேயானால்—அவர்கள் சமஸ்கிருதம் அல்லது பிரெஞ்சு மொழிகளை இரண்டாவது பாடமாக எடுத்திருந்தால், அவர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லை. தமிழ்ப் பாடத்தை மையமாக எடுத்தவர்களுக்கு மட்டும்தான், மாநிலத்தில் முதலிடத்தைப் பிடிக்கக்கூடிய ஒரு வாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது என்கிற செய்தியை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆங்கிலம் தொடர்பு மொழி; அதுவே பாட மொழியாக மாற்றப்படுவது தடுக்கப்பட வேண்டும். அறியாத வயதில், புரியாத மொழியில் பாடம் கற்றல் என்பது, மொழியின் வளர்ச்சியில் எதிர்கால சந்ததியினரின் சிந்தனைகளைச் சீரழிக்கும். தமிழகத்தில் ஆங்கில மொழியின் தாக்கம் தொடக்கக் கல்வியில் கடந்த 10 ஆண்டுக் காலமாக அரசுப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை விகிதம் குறைந்து கொண்டே வருவதிலிருந்து தெரிகிறது.

குறிப்பாக, 2012–2013 ஆம் ஆண்டைய புள்ளிவிவரத்தின் அடிப்படையில், அரசு சார்ந்த பள்ளிகளில், அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பெரும்பாலும் தாய் மொழிக் கல்வி வலியுறுத்தப்படுகிறது. அதில் கிட்டத்தட்ட 91 இலட்சம் மாணவர்கள் இருக்கின்றார்கள். ஆனால், இன்றைக்கு மெட்ரிகுலேஷன் என்று சொல்லக்கூடிய ஆங்கிலவழிக் கல்வி பள்ளிகளில், ஆரம்பக் கல்வியிலிருந்து மேல்நிலைக் கல்வி வரை 43,51,054 மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 50 விழுக்காடு மாணவர்கள் இன்றைக்கு ஆரம்பக் கல்வியிலிருந்து மேல்நிலைக் கல்வி வரை ஆங்கிலத்தில் படிப்பது என்பது, இன்றைக்குத் தமிழ்ச் சமுதாயத்தில் சரி பாதியினர் தமிழ் மொழிப் பண்பாடு மற்றும் அதனுடைய நடவடிக்கையிலிருந்து விலகிச் செல்லக்கூடிய ஒரு சூழலை உருவாக்கியிருக்கிறது. அதனால்தான், இதைத் தடுக்க வேண்டுமென்று சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் இருமொழிக் கொள்கை பின்பற்றப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆங்கிலம் கற்க வேண்டாம் என்பது எங்களுடைய நிலை அல்ல. ஆங்கிலம் கற்க வேண்டும்; அதுவொரு மொழியாக இருக்க வேண்டும்; அது தொடர்புக்காக இருக்க வேண்டும். ஆனால், அதையே அனைத்துப் பாடத் திட்டங்களிலும் வைத்து, அதன்மூலமாகத்தான் எதிர்காலத்தில் அவர்களுக்கு வாழ்வு கிடைக்கும் என்ற மோசமான ஒரு கருத்தைப் பரப்பி, அதன்மூலமாக கொள்ளை இலாபம் அடைகின்ற இந்தக் கல்வித் துறையினுடைய நடவடிக்கைகளை, தனியார்த் துறையினுடைய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கு மாநில அரசு கொள்கை வகுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த

நிலையில் முன்பருவக் கல்வி, ஆரம்பக் கல்வி, ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை கட்டாயத் தாய் மொழிக் கல்வி என்ற கொள்கை முடிவை அரசு எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, ஐரோப்பிய நாடுகளில் ஈழத் தமிழர்கள் 25 ஆண்டுகளுக்கு முன்னால் குடியேறியவர்கள், தங்கள் குழந்தைகள் அன்னிய மண்ணில் பிறந்து வளர்வதால், அங்குள்ள பள்ளிகளில் பயின்று, தமிழ் மொழி அவர்களுக்கு அடிப்படையில் இல்லாத நேரத்தில், அங்கு பிறந்த குழந்தைகளுக்கு தமிழ் மொழி அறிவு, பேச்சு, எழுத்து மற்றும் பண்பாடு ஆகியவற்றைக் கற்றுக்கொடுக்கும் விதமாக, அன்னை பூபதி கல்வி நிலையங்களை ஐரோப்பியா முழுவதும் உருவாக்கி, அங்கே பிறந்து வளர்ந்த தமிழ்க் குழந்தைகளுக்கு நமது மொழி, வளர்ச்சி, பேச்சு, எழுத்தாற்றல், பண்பாடு, நாகரிகம், கலாச்சாரம் எல்லாவற்றையும் போதித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட நிலையில், உலகத் தமிழர்களுக்கெல்லாம் தாயகமாக விளங்கக்கூடிய தமிழ்நாட்டில், இன்றைக்குத் தலைகீழாக, கல்வியின் வாயிலாக, ஒரு மொழி ஆதிக்கம் என்பது, அன்னிய மொழி ஆதிக்கம் என்பது ஊடுருவிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

அதைப்போல, இன்றைக்குக் கல்வித் துறையில் தனியார் பள்ளிகளின் ஆதிக்கம் என்பது அதிமாகிக் கொண்டேயிருக்கிறது. குறிப்பாக, எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள் ஒன்றைச் சுட்டிக்காட்டினார்கள். தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரையில், சிறப்புப் பள்ளிகள் நாமக்கல் மாவட்டத்தில் மட்டுமல்ல; தமிழ்நாடு முழுவதிலும் உள்ள ஒரு நிலை இருக்கிறது. நம்முடைய நாட்டில் பழமொழி ஒன்று சொல்வார்கள்; ‘கைக் காடையை வைத்துக்கொண்டு, காட்டுக் காடையைப் பிடிப்பது’ என்று சொல்வார்கள். அதைப்போல, பத்தாம் வகுப்பில் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்ற மாணவர்களை, வலை வைத்துப் பிடித்துத் தேடி, அவர்களுக்கு இலவசக் கல்வி அல்லது இலவச ஹாஸ்டல் போன்றவற்றையெல்லாம் கொடுத்து, அவர்களுக்கு ஆசை காட்டி, அவர்களை அந்தப் பள்ளிகளில் சேர்த்துக்கொள்கிறார்கள்; இதுபோன்று சுமார் 50 மாணவர்கள், 100 மாணவர்களை அங்கே சேர்த்துக்கொள்கிறார்கள். ஆனால், ஆயிரக்கணக்கான

மாணவர்களை, சராசரிக்கு மேலாக இருக்கக்கூடிய மாணவர்களிடமிருந்து பணத்தைக் கூடுதலாகப் பெற்றுக்கொண்டுதான், சேர்த்துக்கொள்கிறார்கள். ஆனால், அரசுப் பள்ளிகளில்தான், இன்றைக்கு சராசரி மாணவனுக்குக் கீழேயுள்ள மாணவர்களைச் சேர்த்து, பயிற்றுவித்து, சாதனைகளைப் படைத்துக் கொண்டிருக்கிறோம்.

பிற்பகல் 2—35

எனவே, தனியார் பள்ளிக்கூடங்களின் நோக்கம், "மாணவர்களுக்குக் கல்வியைப் போதிப்பது அல்ல; கொள்ளை இலாபம் ஈட்டுவது". இன்றைக்கு மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, அண்ணா பல்கலைக்கழகம் போன்றவற்றில் தங்களுடைய குழந்தைகளைச் சேர்க்க வேண்டுமென்றால், தங்களுடைய குழந்தைகள் இப்படிப்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் படித்தால்தான் முடியும் என்று பெற்றோர்கள் ஏமாந்து, அந்தப் பள்ளிகளில் தங்களுடைய குழந்தைகளைச் சேர்க்கிறார்கள். ஆனால், அந்தக் கல்வி நிலையங்களிலும் இன்றைக்கு ஆயிரக்கணக்கான மாணவர்கள் 600 மார்க், 700 மார்க் என்று எடுத்து, தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். அங்கு குழந்தைகளைச் சேர்த்த பெற்றோர்களுக்குப் பணச் செலவும் கூடுதலாக இருக்கிறது. ஆனால், தனியார் கல்வி நிலையங்கள், "தங்களுடைய பள்ளியில் இந்த ஆண்டு, 1,100-க்கு மேல் மதிப்பெண்கள் எடுத்த மாணவர்கள் இத்தனை பேர்; 1,050-க்கு மேல் மதிப்பெண்கள் எடுத்த மாணவர்கள் இத்தனை பேர்; 1,000-க்கு மேல் மதிப்பெண்கள் எடுத்த மாணவர்கள் இத்தனை பேர்" என்று விளம்பரப்படுத்துகிறார்களேதவிர, எத்தனை மாணவர்களுடைய எண்ணிக்கையில், இத்தனை மாணவர்கள், இவ்வளவு மதிப்பெண்கள் எடுத்துள்ளனர்கள் என்று விளம்பரப்படுத்துவது கிடையாது. அப்பள்ளிகளில், "1,000—க்குக் கீழாக, 900—க்குக் கீழாக, 700—க்குக் கீழாக மதிப்பெண்கள் பெற்றவர்கள் இத்தனை பேர்" என்ற விவரத்தை குறைந்தபட்சம் அரசாவது எடுத்து அறிவிக்க வேண்டும். இன்றைக்குத் தனியார் பள்ளி நிறுவனங்கள் கொள்ளை இலாபத்தை நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்ற காரணத்தினால், இதற்கு ஈடுகொடுக்கும்விதமாக, தமிழ்நாட்டிலுள்ள அரசுப் பள்ளிகளில் பணியாற்றக்கூடிய ஆசிரியப் பெருமக்களெல்லாம், இன்றைக்கு மிகுந்த ஈடுபாட்டோடு, கல்வித் துறையில் அரசுப் பள்ளிகள் மேன்மை பெற வேண்டும்; அங்கு பயிலக்கூடிய மாணவர்கள்

வெற்றி பெற வேண்டும்; சாதிக்க வேண்டும்; கல்வி பெற வேண்டும், தகுதி பெற வேண்டும் என்கின்ற அடிப்படையில் இரவு, பகல் பாராமல் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள், தனியார் பள்ளிகளைக்காட்டிலும், இரவு நேர பாடசாலைகளையெல்லாம் எந்தவிதமான ஊக்கத் தொகையும் இல்லாமல், நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதனால்தான், தென் மாவட்டங்களில்கூட இப்படிப்பட்ட சாதனைகளை நாம் சாதிக்க முடிகிறது என்பதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எனவே, கொள்கை நிலையில், தனியார் பள்ளிகளுடைய செயல்பாடுகளைக் கண்காணித்து, அதை மக்களுக்கு அம்பலப்படுத்துவதன் மூலமாக, அரசுப் பள்ளிகளை ஊக்கப்படுத்துவதற்கு, அரசுப் பள்ளிகளில் மாணவர்கள் சேருவதற்கான ஒரு வாய்ப்பை உருவாக்க முடியும் என்ற கருத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுடைய எண்ணிக்கை கடந்த இரண்டு ஆண்டுகளில் அதிகரித்திருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நலத் திட்டங்கள், பதினான்கு அம்சத் திட்டங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினாலும், பல்வேறுபட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினாலும், கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. அரசாங்கத்தால் ஏற்பட்டிருக்கின்ற சரிவை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கடந்த இரண்டு ஆண்டுகளில் நிறுத்தியிருக்கிறது. ஆக, படிப்படியாக அரசுப் பள்ளிகளில், கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு, இந்த ஆண்டைவிட அடுத்த ஆண்டு என்று மாணவர்களுடைய எண்ணிக்கை கூடிக் கொண்டுதான் இருக்கிறது. ஆசிரியர்களுடைய உழைப்பும், அவர்களுடைய உன்னதமான அர்ப்பணிப்பும், அரசாங்கத்தால் பாராட்டப்பட்டு, உரிய முறையில் அவர்களுக்கான பணி மேம்பாடு, நல்லாசிரியர் விருது போன்றவையெல்லாம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்கிற செய்தியை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு நடைபெற்ற, 2011–2012 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் கூட்டத் தொடரின்போது, "அனைத்து அரசுப் பள்ளிகளிலும் ஆங்கிலவழிக் கல்வி அறிமுகப்படுத்தப்படுமா?" என்று நான் கோரியபோது, உடனே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், "இந்த ஆண்டிலிருந்து, அனைத்து அரசுப் பள்ளிகளிலும் ஆங்கிலவழிக் கல்வி புகுத்தப்படும்" என்ற உத்தரவைப் பிறப்பித்து, அதை நடைமுறைக்கும் கொண்டு வந்தார்கள். இன்றைக்கும் நாங்கள் அதற்கு நன்றி பாராட்டுகிறோம். ஆங்கிலவழிக் கல்வி, அனைத்து அரசுப் பள்ளிகளிலும் எந்த நிலைமையில் இருக்கிறது; எத்தனைப் பள்ளிகளில் அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கிறது; ஆசிரியப் பெருமக்கள் அனைவரும் பணியமர்த்தப்பட்டுவிட்டார்களா? தொடர்ந்து விரைவில் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, சுருக்கமாகக் கேளுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: அந்தப் பணிகளை முடிவடையச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தொடக்கக் கல்வி முதல் மேல்நிலைக் கல்வி வரை 2012–2013 ஆம் கல்வியாண்டில், ஆங்கிலவழி இணைப்புப் பிரிவு அதாவது, English Medium தொடங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 320 பள்ளிகளில், 22,400 மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். மேலும், இதனுடைய எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே இருக்கும் என்கிற செய்தியை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பில் ஆரம்பக் கல்வி தொடங்கி ஆங்கிலவழிக் கல்விக்கான இந்தத் திட்டம் எங்கிருந்து வந்தது என்று சொல்கிற நேரத்தில் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், நீங்கள் பேச ஆரம்பித்து 11 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் சார்பிலிருந்துதான் இந்தத் தவறான கருத்து முன்வைக்கப்பட்டிருக்கிறது; அதை தயவுசெய்து பின்பற்ற வேண்டாம். நாம் தமிழ்நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்; மொழிக் கல்வியைப்பற்றி நமக்கு அடிப்படையான சிந்தனைகள் இருக்கின்றன. எனவே, அரசுப் பள்ளிகளில் இத்தகைய ஆங்கிலவழி பாடக் கல்வி முறையை ஒழிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல; குறைந்தபட்சம் 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை தாய்மொழிக் கல்வி கட்டாயப்படுத்தப்பட வேண்டுமென்ற கருத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–40

அதைப்போல இன்றைக்குப் பள்ளிச் சேர்க்கையில், ஆரம்பப் பள்ளியில் 1 ஆம் வகுப்பு சேர்க்கைக்கான வயது வரம்பு ஜூன் 1 ஆம் தேதி 5 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும் என்று உள்ளது. ஆனால், ஜூன் 2 ஆம் தேதியிலிருந்து டிசம்பர் 31 ஆம் தேதி வரை பிறந்துள்ள குழந்தைகளுக்கு மறு ஆண்டு ஜூன் 1 ஆம் தேதி என்பது 5 வயதைக் கடந்து 6 வயதை எட்டும் நிலையில் உள்ளது. இதனால் எதிர்காலத்தில் இக்குழந்தைகள் பல்வேறு பணிகளுக்கான வாய்ப்புகளில் பெரிதும் பாதிப்படைகிறார்கள். எனவே, ஜூன் 1 ஆம் தேதிய வயது வரம்பை அந்த ஆண்டின் டிசம்பர் 31 வரை பிறந்த குழந்தைகளுக்கு 5 வயதாகக் கணக்கிட்டு, அவர்களை அந்த ஆண்டே 1–வது வகுப்பில் சேர்க்க வேண்டும் என்ற நடைமுறையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதைப்போல இன்றைக்கு நமது T.R.B. தேர்வுகளைப்பற்றி பல்வேறுவிதமான பிரச்சினைகள் வந்தன. ஆனால், 2012 ஆம் ஆண்டு T.R.B. தேர்வில் தேர்வுபெற்ற முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் சான்றிதழ்கள் சரிபார்ப்பின்போது தகுதி நீக்கம் செய்யப்பட்டார்கள். அதற்குக் காரணம், அவர்கள் படித்த பாடப் பிரிவுகள் பல்கலைக்கழகத்தில் சமநிலைச் சான்றுகள் வழங்கப்பட்டும், T.R.B.–ல் சமநிலைச் சான்றிதழ் வழங்கப்படவில்லை என்று காரணம் கூறப்பட்டது. உயர் கல்வித் துறை நடவடிக்கை மேற்கொண்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் T.R.B. சமநிலைச் சான்று வழங்கிவிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆசிரியர் தேர்வு வாரியத்தில் குறிப்பிடப்பட்டிருந்த முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு (Post graduation teachers) எல்லாம் பணி நியமனம் தரப்படவில்லை என்ற ஒரு கருத்தை இங்கே வலியுறுத்தினார்கள். குறிப்பாக, ஒரு முதுகலைப் பட்டதாரி என்று சொன்னால், தாவரவியல் என்று எடுத்துக்கொள்ளுங்கள். Botany— தாவரவியலை ஒரு Main Subject-ஆக இல்லாமல், Ancillary Subject-ஆக வைத்துக்கொண்டு படித்துவிட்டு தாவரவியலுக்குரிய ஒரு வாய்ப்பைக் கேட்டால், அவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுவதில்லை. ஆக, சரியான முறையிலே Main Subject–க்குரிய பாடத்தை அவர்கள் பெற்றிருப்பார்கள் என்று சொன்னால், அவர்களுக்கு உரிய பணி நியமனம் வழங்கப்படுகிறது என்கிற செய்தியை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அவற்றோடு மாத்திரமல்ல, உங்களுடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய உறுப்பினர் திரு. டில்லி பாபு அவர்கள்கூட இந்தக் கோரிக்கையை முன்வைக்க என்னிடத்தில் வந்தபோதுகூட, இரண்டே நாளில் தாவரவியல் படித்தவர்களுக்கு உரிய பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்கிற செய்தியையும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது* B.A. English-Vocation *என்ற ஒரு* course–*ஐப் படித்திருக்கிறார்கள். அது* B.A., English-Literature–*க்கு சமம் என்று பல்கலைக்கழகம்* Equivalence certificate *கொடுத்திருக்கிறது. ஆனால்,* T.R.B., T.N.P.S.C.-*ல்* ** *பரீட்சை எழுதி அவர்கள் வெற்றிபெற்றதற்குப் பின்னால், இன்றைக்கு உயர் கல்வித் துறை அந்த* Vocational group–*ஐ,* B.A., English Literature *என்று* Equivalence Certificate *கொடுத்துவிட்டார்கள். கொடுத்துவிட்டதற்குப் பின்னால்,* ** *பரீட்சை எழுதியிருக்கிற மாணவர்கள் பொறுப்பேற்க முடியாது. எனவே, அவர்களைப் பணி நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

*****மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது* Subject Equivalence Certificate *கொடுப்பது உயர் கல்வித் துறைக்கு சம்பந்தப்பட்டது.* ** *ஒரு கருத்தை சொல்லி இருக்கிறார். அது தவறான செய்தி. பொதுவாக, பாடத் திட்டங்களை அமல்படுத்துகிறபோது, ஒவ்வொரு பல்கலைக்கழகமும் தற்போதைய கால சூழ்நிலைக்கேற்ப வேலைவாய்ப்பைக் கருத்தில்கொண்டு பாடத் திட்டங்களை மாற்றியமைக்கிறது. அவை அரசைக் கலந்தாலோசிப்பது இல்லை. பல்கலைக்கழகம் என்பது ஒரு* Autonomous Body. *அங்கு ஒரு கல்விக் குழு இருக்கிறது. அந்தக் கல்விக் குழுவால் முடிவெடுக்கப்பட்டு, இந்தக் காலத்திற்கேற்ப என்ன வேலைவாய்ப்புக்கு ஏற்றதோ, அதற்குத் தகுந்தாற்போல் பாடத் திட்டங்களை மாற்றியமைக்கிறது. அப்படிப் பாடத் திட்டங்களை மாற்றியமைக்கிறபோது, அவர்கள் எதிர்காலத்தில் ஏதாவது ஒரு பணிக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், பொது நிறுவனங்களில் பணிக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், அதில் பிரச்சினை வருவதில்லை. ஏனென்று சொன்னால், கல்வித்*

** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

தகுதி என்பது any Degree என்று ஒரு கருத்தை வைக்கிறார்கள். ஏதாவது ஒரு பட்டம் பெற்றிருந்தால் போதும் என்ற கருத்து இருக்கிறது. ஆனால், இவர்களே ஆசிரியர் பணிக்குச் செல்கிறபோது அங்கே சிக்கல் ஏற்படுகிறது. ஆகவே, இதற்காகத்தான் 1993 ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இணைக் கல்வி நிர்ணயக் குழு என்ற ஒரு குழுவை அமைத்தார்கள். அந்தக் குழுவிலே Vice-Chancellor, Madras University, Education Secretary, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையால் அமைக்கப்பட்ட ஒரு குழு இருக்கிறது. அந்தக் குழு, ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாக சம்பந்தப்பட்ட பாடத் திட்டங்களைக் கருத்தில்கொண்டு, அரசு அனுப்பி வைத்த, மாநில உயர் கல்வி மன்றம் அனுப்பி வைத்த அந்தப் பாடத் திட்டத்தின் அடிப்படையில் அதைப் பரிசீலனை செய்து, எந்தப் படிப்பிற்கு எது சமமானது என்பதை நிர்ணயித்து, அந்தக் குழு செயல்படுகிறது. பொதுவாக, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்பு, அதாவது 3–வது முறையாகத் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்ற பின்பு, இன்றைக்கு மாநில உயர் கல்வி மன்றத்தின் மூலமாக 75 பாடப் பிரிவுகளுக்கு சமன் நிலை அறிவிப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாக 28 பாடப் பிரிவுகளுக்கு சமன் நிலை அளிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பல்கலைக்கழகத்தின் மூலமாகவும், நீங்கள் சமன் நிலை செய்ய வேண்டும் என கருத்துகள் வந்திருக்கின்றன.

பிற்பகல் 2–45

அதோடுமட்டுமல்லாமல், சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்தும்கூட 6 பாடப் பிரிவுகளுக்கு சமன் நிலை வந்திருக்கிறது. இதைக் கருத்தில்கொண்டு, 75 புதிய பாடப் பிரிவுகளுக்குச் சமன் நிலை பாடப் பிரிவு அந்தஸ்து வழங்க வேண்டும் என்று கோரிக்கை வந்திருக்கிறது. இப்படி வழங்கப்பட்டிருக்கிற சமநிலையைக் கருத்தில் கொண்டு, Equivalence Certificate, இணைக் கல்விச் சான்றிதழ் அங்கு இருக்கக்கூடிய கல்வி நிர்ணயக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு, அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஜூன் 5 ஆம் தேதியில் ஒரு வயது என்றால், அவர்கள் பள்ளியில் சேருவதற்கு ஆறு வயதாகி விடுகிறது என்ற ஒரு கருத்தை ஏற்கெனவே முன்வைத்தார் ஆனால் ஜூன் 5–லிருந்து ஆறு மாதக் காலத்திற்கு exemption, தவிர்ப்பாணை வழங்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் (மார்க்சிஸ்ட்) சார்ந்த தோழர் செல்வி பாலபாரதி அவர்கள், நீங்கள் அதிகக் கட்டணம் வசூலிக்கும் பள்ளிகளின்மீது என்னவிதமான நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். St. John Matriculation Higher Secondary School, Chennai. Loyola Matriculation Higher Secondary School, Chennai இந்த இரண்டு பள்ளிகளின் Permanent Recognition, அதாவது நிரந்தரமான அங்கீகாரம் இரத்து செய்யப்பட்டிருக்கிறது என்கிற தகவலைத் தெரிவித்துக்கொள்கிறேன். Leo Matriculation School, Gill Adarsh Matriculation Higher Secondary School, Anna Adarsh Matriculation Higher Secondary School, Holy Family Fathima Convent போன்ற பள்ளிகள் மீதெல்லாம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்கிற செய்தியை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மாத்திரமல்ல; “Matriculation” என்கிற வார்த்தையை அகற்ற வேண்டும். ஏன் அதைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்தை சொன்னார். அதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, உரிய முறையில் பரிசீலனை செய்து, அடுத்து வருகிற காலங்களில் அந்தப் பெயர்களை நீக்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, ** என்ற ஒரு கருத்தைச் சொன்னார். உயர் கல்வித் துறையால் இதுவரையில் 75 பாடப் பிரிவுகளுக்கு சமன் நிலை வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் ** என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன அந்த வார்த்தைகள் நீக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், அமைச்சர் அவர்கள் சொன்ன மகிழ்ச்சியான பதிலோடு உங்கள் உரையை நிறைவு செய்யுங்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பகுதிநேர ஆசிரியர்கள் 16,549 பேர் பணி நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ரூ.5,000/- என்ற ஊதியத்தை ரூ.10,000/–ஆக கூடுதலாக உயர்த்தி வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்குப் பல்வேறு கோரிக்கைகள் மற்றும் குறைபாடுகள் இருக்கின்றன. அதனை நிவர்த்தி செய்வதற்கு மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், அவர்களை அழைத்துப் பேச வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு 2,492 மேல்நிலைப் பள்ளிகளில், மொத்தமே 800 பள்ளிகளில்தான் உடற்கல்வி ஆசிரியர்கள் பணிபுரிகிறார்கள். எனவே, அவர்களைக் கூடுதலாகப் பணி நியமனம் செய்ய வேண்டும். அதைப்போல பெற்றோர்–ஆசிரியர் கழகத்தின் சார்பில் பணி நியமனம் செய்யப்பட்ட தொழில் கல்வி ஆசிரியர்களும் நிரந்தரம் செய்யப்பட வேண்டும். உடற்கல்வி ஆசிரியர்களுக்கு என்று J.D., Sports என்ற பதவித் தரத்தை உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். எனவே, அதனை உருவாக்கித் தர

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல வேளாண்மைத் துறை, . . .(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உடற்கல்வி ஆசிரியர்கள் கோரியிருக்கிற அந்தக் கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள், மகிழ்ச்சியான செய்தியை அமைச்சர் அவர்கள் தெரிவித்துவிட்டார்கள். உங்கள் உரையை சீக்கிரம் முடித்து விடுங்கள். இன்னும் 5 உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேரள மாநிலத்தில், பணி மூப்பு அடிப்படையில் பணி நியமனத் தேர்வு செய்து, ஐந்து ஆண்டுகளில் அவர்களுக்கான தகுதித் தேர்வில் வெற்றி பெற வேண்டுமென்ற நிபந்தனையோடு பணி நியமனம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு அவர்கள் ஜி.ஓ–வை பாஸ் செய்து விட்டார்கள். எனவே, அந்த நடைமுறையை நீங்கள் இங்கேயும் பின்பற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இலவச மற்றும் கட்டாயக் கல்விச் சட்டத்தின்படி தனியார் பள்ளிகளில் 25% இட ஒதுக்கீட்டினை சரிவர அமல்படுத்துவது இல்லை. அதைக் கண்காணித்து அதனை நடைமுறைப்படுத்த வேண்டும். எப்படி மருத்துவக் கல்லூரியில் நீங்கள் பணி நியமன ஆணைகளை வழங்குகிறீர்களோ, அதைப்போல இட ஒதுக்கீட்டிற்கான ஆணையை நமது கல்வித் துறையே வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நமது கல்வித் துறையில் பதவி உயர்வு குறித்து, பல்வேறு துறைகளில் பல முரண்பாடுகள் இருக்கின்றன. காலத்தின் சூழல் காரணமாக இன்றைக்கு அதில் முரண்பாடுகள் இருக்கின்றன.

எனவே, அதற்காக ஒரு குழுவை நியமித்து, அந்த முரண்பாடுகளைக் களைவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தலைமையாசிரியராகப் பணி உயர்வு பெற்றவர்கள், அவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கும் விஷயத்தில் P.G.Assistant, B.T. Assistant ஆகிய இருவருக்கும் இடைப்பட்டு இருக்கிற பதவி உயர்வில், B.T. Assistant–க்கு அதிகமாகப் பதவி உயர்வு என்றும், P.G. Assistant-க்கு குறைவான பதவி உயர்வு இருக்கிறது என்றெல்லாம் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இந்தக் கோரிக்கைகளைப்பற்றி பரிசீலனை செய்வதற்குக் குழு ஒன்றை அமைத்து, அக்குழு கொடுக்கின்ற அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2—50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், நீங்கள் கேட்கிற கேள்விக்கெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல, நல்ல பதிலாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார். சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைப்போல, இன்றைக்குத் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்குக் கூடுதலாக நிதி ஒதுக்கீடுகளைச் செய்ய வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதைச் செய்திட வேண்டும்.

தமிழ் வளர்ச்சித் துறையின்கீழ் வழங்கப்படும் மதிப்புமிகு விருதுகளை அலுவலர்களே தீர்மானிக்கும் நிலையை மாற்றி, தக்க வல்லுநர்கள் குழுமூலம் தீர்மானிக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். வர்த்தக நிறுவனங்கள், கடைகளின் பெயர்கள் தமிழிலே விளம்பரப்படுத்தும் முறை கொண்டு வரப்பட

வேண்டும். அதைப்போல, 8 பேர் குழுவின் வழிகாட்டுதலில் தமிழ்ப் பல்கலைக்கழகம் கல்வித் துறையின்கீழ் செயல்பட்டது. ஆனால், பின்னர் வந்த ஆட்சியாளர்கள் இதனை தமிழ் வளர்ச்சித் துறையின்கீழ் கொண்டு வந்து விட்டார்கள். அதனால் அந்தப் பல்கலைக்கழகம் பல்வேறு நிதிகளைப் பெற்று செயல்பட முடியாத நிலை நீடித்துக் கொண்டிருக்கிறது. எனவே, தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தை உயர்நிலை . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தைப் பற்றிய கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கிறார். தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம், தமிழ் வளர்ச்சித் துறையினுடைய கட்டுப்பாட்டில் இயங்குகிறது. கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம், கால்நடைத் துறையினுடைய கட்டுப்பாட்டில் இயங்குகிறது. அதோடு, வேளாண்மைத் துறையினுடைய பல்கலைக்கழகம் வேளாண்மைத் துறையினுடைய கட்டுப்பாட்டில் இயங்குகிறது. இன்றுகூட ஒரு நாளிதழில் இதுசம்பந்தமாக அரை பக்கத்திற்குச் செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள். தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, அதை புனருத்தாரணம் செய்வதற்கான நடவடிக்கைகளை நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்தவர் தமிழக முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் என்பதையும் அந்தப் பல்கலைக்கழகத்தினுடைய வளர்ச்சிக்கு, அதனுடைய உத்வேகத்திற்கு இன்னும் பல்வேறு உதவிகளைச் செய்ய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தயாராக இருக்கிறார்கள் என்கிற செய்தியையும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், உரையை நிறைவு செய்யுங்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொல்கிற காரணம் பல்கலைக்கழக மானிய நிதிகள் கூடுதலாகக் கிடைக்கும். 18 கோடி ரூபாய் ஆண்டுக்குத் தேவைப்படுகிறது என்று சொல்கிறார்கள். எனவேதான் அத்தகைய கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். மத்திய அரசின் செம்மொழி உயராய்வு நடுவண் நிறுவனம் சென்னையில் உள்ளது. இதற்கு 11 கோடி ரூபாய் நிதி வழங்கப்படுகிறது. முந்தைய ஆட்சியில் அரசியல் தலையீட்டால் இதன் நிருவாக அமைப்பு செயல்பட முடியாத நிலை உள்ளது. எனவே, இந்த நிருவாகத்தைச் சீர்செய்யவும், நிதிகளைச் செலவு செய்யவும், பணி நியமனங்கள் நடைபெறவும் உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செம்மொழி உயராய்வு நிறுவனம் மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டில் உள்ளது. மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டில் இருக்கிற அந்தச் செம்மொழி உயராய்வு நிறுவனம் மாநில அரசாங்கத்திற்குரிய அதிகாரங்களுக்குட்பட்டு அதன்மீது நடவடிக்கை எடுப்பதற்கு துறை சார்ந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், நீங்கள் பேச ஆரம்பித்து 24 நிமிடங்களாகி விட்டன. செல்வி பாலபாரதி, நீங்கள் பேசிய அளவிற்கு அவரும் பேச வேண்டுமென்று பேசுகிறார்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2002 ஆம் ஆண்டு முதல்முறையாக நமது மாண்புமிகு முதல்வர் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு தமிழ் டிஜிட்டல் நூலகம் குறித்த ஒரு சிறப்பான அறிவிப்பை வெளியிட்டார்கள். ஆனால், ஆட்சி மாற்றத்திற்குப் பின்னால் அந்த டிஜிட்டல் நூலகம் என்பது தவிர்க்கப்பட்டு, அதன்மீது எந்த நடவடிக்கையும் கடந்த ஆட்சியில் எடுக்கப்படவில்லை. ஆனால், இன்றைக்கு நூலகத் துறையில் . .

. **மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், நன்றி சொல்கிறீர்களா? சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இத்துடன் உரையை முடித்துவிடுகிறேன். அந்தத் திட்டத்தின் அடிப்படையில் தமிழ் டிஜிட்டல் நூலகத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மீண்டும் தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும். இதன் மூலமாக நம்முடைய தமிழ் மொழியினுடைய வளர்ச்சி என்பது உலகம் முழுவதும் பரவுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. உலகம் முழுவதும் இருக்கக்கூடிய கல்விக் களஞ்சியங்களைத் தமிழ் மொழிக்குக் கொண்டு வருவதற்கும், வீடுகளிலே இருந்து நூலகத்தைப் பயன்படுத்துவதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே, எல்லாத் துறைகளையும் கணினிமயமாக்குவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஆசியாவிலேயே இதுவரை இல்லாத அளவில் ஒரு நவீன முன்மாதிரியான நூலகமாக இந்தத் தமிழ் டிஜிட்டல் நூலகத்தை உருவாக்கிட முடியும். அதற்கு மாண்புமிகு தமிழக முதல்வருடைய பார்வைக்குக் கொண்டு சென்று, அதை நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சித் துறையின்கீழ் டிஜிட்டல் மையப்படுத்துகிற பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற செய்தியை மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜான் ஜேக்கப் அவர்கள். (குறுக்கீடு) திரு. சு. குணசேகரன், உரையை முடிக்கிறீர்களா? நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வரைப் பொறுத்தவரை, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய இளைஞர்களுக்கு நல்ல உடல் ஆரோக்கியத்தை வளர்க்கக்கூடிய விளையாட்டுத் துறைக்குக் கூடுதலான நிதிகளையும், திட்டங்களையும் அறிவித்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தவகையில், . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், நீங்கள் பேச ஆரம்பித்து 26 நிமிடங்களாகி விட்டன. (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த அடிப்படையில் விளையாட்டுத் துறையில் இருக்கக்கூடிய பல்வேறு குறைபாடுகளை நீக்கி, மாவட்ட அளவில் விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்துகிற பல்வேறு திட்டங்களையும் கொண்டு வந்து, இந்தத் துறையை உலகத் தரம் வாய்ந்ததாக, தமிழ் இளைஞர்களை சர்வதேச அளவில் விருது பெறுவதற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் எந்தளவிற்கு முனைப்பு காட்டுகிறார்களோ, சிந்திக்கிறார்களோ, அதைச் செயல்படுத்துவதற்கு பல்வேறுவிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டு, அதற்கான பல திட்டங்களை வைத்திருக்கிறேன். காலமில்லாத காரணத்தால் சொல்ல முடியவில்லை. நேரடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் சொல்லி, கலந்தாலோசிக்கிறேன் என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 2—55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளையாட்டுத் துறை சார்ந்த குறைபாடுகள் குறித்த ஒரு கருத்தை முன்வைத்தார். விளையாட்டுத் துறையில் இந்தியாவிலே ஒரு முதன்மை மாநிலமாக தமிழ்நாடுதான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறதென்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன். இந்த விளையாட்டுத் துறைக்கு மாண்புமிகு தமிழக

முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறுவிதமான சலுகைகளைத் தந்திருக்கிறார்கள். ஒலிம்பிக் போட்டியில் வெற்றி பெற்று, முதல் பரிசினை, தங்கப் பதக்கத்தை தட்டிக் கொண்டு வருபவர்களுக்கு இரண்டு கோடி ரூபாயைத் தந்திருக்கிற ஒரே மாநிலம் தமிழக அரசுதான் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வெள்ளிப் பதக்கமென்றால் 1 கோடி ரூபாய், வெண்கலப் பதக்கம் என்றால் 50 இலட்சம் ரூபாய், அவற்றோடு மாத்திரமல்ல, ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், காமன்வெல்த் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்பவர்களுக்கு 50 இலட்சம் ரூபாய், வெள்ளிப் பதக்கம் வெல்பவர்களுக்கு 30 இலட்சம் ரூபாய், வெண்கலப் பதக்கம் வெல்பவர்களுக்கு 20 இலட்சம் ரூபாய். தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில், தேசியப் போட்டிகளில் கலந்துகொண்டு தங்கப் பதக்கம் வெல்பவர்களுக்கு 5 இலட்சம் ரூபாய், வெள்ளிப் பதக்கம் வெல்பவர்களுக்கு 3 இலட்சம் ரூபாய், வெண்கலப் பதக்கம் வெல்பவர்களுக்கு 2 இலட்சம் ரூபாய் என்கிற விதத்தில் தொடர்ந்து வழங்கப்படும் என்று அறிவித்து, அதைச் சரியான முறையிலே செயல்படுத்திக்கொண்டிருக்கிற அரசாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தேசியப் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கும், பள்ளிகளுக்கிடையேயான மாநில அளவிலான போட்டிகளான, பாரதியார் தினம், குடியரசு தின விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்குக்கூட பரிசுகளை அறிவித்திருக்கிற ஒரே அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய அரசுதான் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள்.

திரு. ஆர். சுந்தர்ராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏழை நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளை, பள்ளிக்கூடங்களிலே L.K.G. சேர்ப்பதற்கு அதிக பணத்தைக் கேட்பதனாலே, எந்தக் குழந்தைகளையுமே சேர்க்க முடிவதில்லை. ஏனென்றால், இன்றைக்கு அந்தக் குழந்தைகள் எல்லாம் படிப்பதற்கு. .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான கருத்துகளை இந்த அவைக்கு தெரியப்படுத்திக்கொண்டிருக்கிறார். பள்ளிக்கூடத்திலே* L.K.G., U.K.G *குழந்தைகளுக்கான கட்டணத்தைப் பொறுத்தவரையில், குழு ஒன்று அமைக்கப்பட்டு, அவர்கள் நிர்ணயம் செய்யும் அடிப்படையிலேதான் வசூலிக்கப்பட்டு வருகிறது என்கிற தகவலை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.*

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வித் துறை மற்றும் விளையாட்டுத் துறை மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்தில் கலந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். கடந்த கல்வியாண்டைவிட இந்த ஆண்டில் +2 தேர்வில் தேர்ச்சி விகிதம் கூடியிருப்பது தமிழக அரசின் கல்வித் துறையின் வளர்ச்சியையும், சுறுசுறுப்பையும் காட்டுகிறது. கல்வியில் புதுமைகள் பல புகுத்திவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மற்றும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ஆகியோர் கவனத்திற்கு சில கோரிக்கைகளை வைக்க விரும்புகிறேன்.*

“சுவர் இருந்தால்தான் சித்திரம் தீட்ட முடியும்” என்பதுபோல, மாணவர்களும் இளைஞர்களும் சீரான உடல்நலத்துடன் இருந்தால்தான் கல்வியும், பண்பாடும், மக்களின் நல்வாழ்வும் சிறக்கும். ஒரு நூலகம் துவங்கினால், 10 சிறைச்சாலைகளை மூடிவிட முடியும். அதேபோல ஒரு உடற்பயிற்சி மையம் துவங்கப்பட்டால், 100 மருத்துவமனைகளை மூடிவிட முடியும். அப்படியென்றால் மக்கள் நோயற்ற வாழ்வு வாழ்வார்கள் என்று பொருள். உடற்பயிற்சிக் கல்விக்கு முக்கியத்துவம் தந்த தமிழக அரசு, மாவட்டந்தோறும் உடற்பயிற்சிக் கல்வி நிலையங்கள் துவங்குவதோடு, படித்தவர்கள் அதிகமுள்ள எங்கள் கிள்ளியூர் தொகுதியில் ஒரு அரசு விளையாட்டுக் கல்லூரி அமைத்துத் தர

வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அக்கல்லூரிக்கு அமரர் பத்மஸ்ரீ டாக்டர் சிவந்தி ஆதித்தனார் பெயரைச் சூட்ட வேண்டுமென்றும், "உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு" என்று வாழ்ந்து மறைந்த ஐயா ஆதித்தனார் அவர்களின் அடிச்சுவட்டை அப்படியே பின்பற்றி, கல்வி, ஆன்மிகம், விளையாட்டு, ஊடகம் என ஜொலித்த அவருக்கு முக்கடலும் சங்கமிக்கும் குமரிமுனையில் வெண்கலச் சிலை அமைத்திட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

15–11–2011 அன்று வெளியிடப்பட்ட அரசாணை 180–ன்படி, 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை கற்பிக்கும் ஆசிரியர்கள் 23–8–2010–க்குப்பின் நியமிக்கப் பெற்ற ஆசிரியர்கள், இத்தேர்வில் தேர்ச்சி பெற வேண்டுமென்ற சூழ்நிலை உருவாகி உள்ளது. இதனால் 15–11–2011–க்கு முன்னர் பணியில் சேர்ந்த ஆசிரியர்களில் பலர் ஊதியம் பெற இயலாமல் இருக்கின்ற சூழ்நிலை உருவாகியுள்ளது.

பிற்பகல் 3–00

மேலும், அரசு உதவி பெறும் தொடக்கக் கல்வி, நடுநிலை மற்றும் உயர் நிலைப் பள்ளிகளில் புதிய பணி நியமனங்கள் செய்ய முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது. தமிழக அரசு இதனைத் தாயுள்ளத்தோடு அணுகி, பணி நியமனங்கள் முறையாக நடைபெற, ஊதியங்கள் முறையாக வழங்கிட ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது உதவிபெறும் பள்ளிகளில் உள்ள அலுவலகப் பணியாளர்கள் சார்ந்த பல பணியிடங்கள் இயக்குநரகத்திலிருந்து ஒப்புதல் கிடைக்காததால், ஒப்பளிப்புப் பெற இயலாத சூழ்நிலை உள்ளது. இதற்கும் தமிழக அரசு ஆவன செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். 1–4–2003 முதல் 31–5–2006 வரையுள்ள காலத்தில் பணி நியமனம் பெற்ற ஆசிரியர்கள் தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வந்தனர். இப்பணிக் காலத்தையும் காலமுறை ஊதியம் பெறும் வகையில் கருதி திருத்தம் கொண்டுவருவதோடு, பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தைக் கைவிட்டு பழைய ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி, புதிய பணியாளர்கள் குடும்பத்தைப் பலப்படுத்த பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அரசு ஊழியர்களுக்குப் பல்வேறு படிகளை வழங்கிவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், எங்களது குமரி மாவட்டத்திலுள்ள வீட்டு வாடகைப் படி பிரச்சினைக்குத்

தீர்வு தந்திட வேண்டும். குமரி மாவட்டத்தில் உள்ள குழித்துறை மற்றும் குளச்சல் நகராட்சிகள் 1998 ஆம் ஆண்டு இரண்டாம் நிலை நகராட்சிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன. இருப்பினும் இங்கு அதற்கான வீட்டு வாடகைப் படி இதுவரை உயர்த்தி வழங்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் மற்றும் பணிபுரியும் ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப் படி அவர்கள் வசிக்கும் பகுதிக்கேற்ப வழங்கப்படுகிறது. அவர்கள் வசிக்கும் பகுதியின் தரம் உயர்த்தப்படும்போது, அதற்கேற்ப வீட்டு வாடகைப் படி நிதித் துறை ஒப்புதலோடு உயர்த்தித் தரப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல், குழித்துறை நகராட்சிகள் மூன்றாம் நிலையிலிருந்து இரண்டாம் நிலைக்குத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. அதன்படி, வீட்டு வாடகைப் படி உயர்த்துவது குறித்த கருத்துரு நிதித் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள். நீங்கள் பேச ஆரம்பித்து 5 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிள்ளியூர், முஞ்சிறை, மேல்புரம் மற்றும் திருவட்டாறு ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் பணிபுரியும் அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் உயர்த்தப்பட்ட முறையான வீட்டு வாடகைப் படியினை வழங்கிட அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆங்கிலவழிக் கல்வி வகுப்புகள் துவங்க அனுமதி தந்து, மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் கல்வி வியாபாரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்திட வேண்டுகிறேன். அரசு உதவி பெறும் பள்ளிகளில் உள்ள சில சுய நிதிப் பிரிவு மாணவர்களுக்கு இலவச மடிக் கணினி மற்றும்

பவர் பைனான்ஸ் நிதியுதவித் தொகை வழங்கப்படாதது வருத்தம் அளிக்கிறது. எனவே, இம்மாணவர்களுக்கும் இந்தக் கல்வியாண்டிலிருந்து இலவச மடிக் கணினி மற்றும் பவர் பைனான்ஸ் படிப்பு உதவித் தொகையும் கிடைத்திட ஆவன செய்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு மாத்திரம்தான் மடிக் கணினி வழங்கும் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. ஆகவே, அரசு தனியார் பள்ளிகளில்,* Self Finance-*சுய நிதிப் பள்ளிகளில் அதற்குரிய திட்டம் வகைப்படுத்தப்படவில்லை என்ற தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.*

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முந்தைய தமிழக அரசின் கொள்கை முடிவு மாற்றத்தினால் 2–6–2002–க்கு முன், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் இடைநிலை ஆசிரியராகப் பணி நியமனம் பெற்ற பி.எட். தகுதியுடைய பட்டதாரி ஆசிரியர்களுக்கு, பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களாக மாற்றி, ஊதியம் வழங்கிடவும், பணிக் காலத்தினைக் கணக்கிட்டு தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை வழங்கிடவும் கேட்டுக்கொள்கிறேன். 6–வது ஊதியக் குழுவின் பரிந்துரையில் உள்ள ஊதிய முரண்பாடுகளைக் களைந்து . . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2–6–2003 முதல் பணிக்காலத்தை மட்டுமே எடுத்துக்கொண்டு தேர்வு நிலை வழங்கப்பட்டு வருகிறது.*

அதற்கு முந்தைய காலத்தினையும் எடுத்துக்கொள்வது என்பது அரசின் கொள்கை முடிவாக உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் உரையை முடியுங்கள்.

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் கணினி மற்றும் தொழிற்பயிற்சி ஆசிரியர்களுக்கு உரிய ஊதியம் கிடைத்திட வழிவகை செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சில பள்ளிகளில் ஆசிரியர் பற்றாக்குறையினால் மாணவர்கள் கல்வி கற்பது கடினமாக உள்ளது. அனைத்துப் பள்ளிகளுக்கும் கணினி, இணைய தளம் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்தப் பள்ளி என்று குறிப்பிட்டுச் சொன்னால், உடனடியாக அந்த ஆசிரியர் பணியிடம் பூர்த்தி செய்து தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது அனைத்துப் பள்ளிகளுக்கும் கணினி இணைய இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, ஆன்–லைன் மூலமாக மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். மாற்றுத் திறனாளிகள் ஆசிரியர்களின் கோரிக்கை; பள்ளிக் கல்வித் துறை ஆசிரியர்களின் கோரிக்கை குறித்த மாறுதல்களில் சொந்த இடத்திற்கு அருகில் பணிபுரியும் வகையில் மாற்றுத் திறனாளி ஆசிரியர்களுக்கு முதல் முன்னுரிமை வழங்க வேண்டும் என்று கேட்டு, மாண்புமிகு

பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 3–05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாற்றுத் திறனாளி ஆசிரியர்களுக்கு சீனியாரிட்டி அடிப்படையில் முதலிடம் கொடுத்து மாறுதல் தருவதற்குப் பரிசீலிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் உள்ளது என்கின்ற தகவலை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கைமீதான விவாதத்தில் பேசுவதற்கு அரிய வாய்ப்பினை எனக்களித்த எங்கள் சமத்துவத் தலைவர், பாசத்திற்குரிய அன்புத் தலைவர் திரு. ஆர். சரத்குமார் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொடுத்துக் கொடுத்துச் சிவந்த கரங்களைக் கொண்டவரான புரட்சித் தலைவரின் வாரிசாக இருந்து ஆட்சி செய்பவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். உலகமெங்கும் தமிழர்களின் வாழ்வில் ஒளிவிளக்காய் இருந்து ஒளிவீசும் தங்கத் தலைவி மாண்புமிகு அம்மா தங்களை வாழ்த்த அடியேனுக்கு வார்த்தை வரவில்லை அம்மா.

சட்டமன்றத்தில் பேரவை விதி 110–ன்கீழ் தாங்கள் அளிக்கும் ஒவ்வொரு அறிக்கையும் தமிழ் மக்களின் உயர்வுக்கு ஒவ்வொரு படிக்கற்களாக உள்ளன.

இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்காக தனி ஈழம் அமைக்க தீர்மானம், இலங்கைமீது பொருளாதாரத் தடை கொண்டுவர தீர்மானம் இப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது. மேலும், கச்சத் தீவை இலங்கையிடமிருந்து மீட்கவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நமது மீனவ மக்களின் வாழ்வுரிமைக்குப் பெரிய விடியலாக உள்ளது அம்மா.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் எல்லாத் துறைகளைக் காட்டிலும் பள்ளிக் கல்வித் துறைக்கு மிக அதிகமாக 16,965.30 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது பாராட்டிற்குரியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

'கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை'

கல்வி ஒன்றுதான் அழியாத சிறந்த செல்வமாகும். மற்ற செல்வங்களெல்லாம் அழியக்கூடியவை.

"கண்ணுடையவர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்'

கல்வி கற்றவரே உண்மையிலே கண்களை உடையவர்கள் ஆவார்கள். கல்லாதவர்கள் கண்கள் இருந்தும், அதனால் பயன் இல்லாதவர்கள் என்ற வள்ளுவரின் வாக்கிலிருந்து, கல்வி மனிதனின் வாழ்வுக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நாம் அறிவோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கல்வி என்பது ஒரு காலகட்டத்தில் உயர் சாதியினருக்கு உரியதாக இருந்ததைத் தமிழகத்தின் பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் கொண்டு சென்றவர் பெருந்தலைவர் காமராஜர்.

கல்விக் கண் திறந்த பெருந்தலைவர் காமராஜர் முதல்வராக இருந்தபோது, கண்ட கனவினை, புரட்சித் தலைவர் வழியில் வந்த மாண்புமிகு புரட்சித் தலைவி முதல்வர் அம்மா அவர்கள் தொலைநோக்குச் சிந்தனையோடு நிறைவேற்றிடவும், தமிழகத்தில்

அனைவருக்கும் தரமான கல்வி, தரமான இடத்தில், தகுதியான ஆசிரியர்களைக் கொண்டு கற்பிக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடனும் நடப்பு வரவு—செலவுத் திட்டத்தில் எல்லாத் துறைகளைக் காட்டிலும் மிக அதிகமான தொகையினை பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

2013—2014 ஆம் ஆண்டிற்கு அனைவருக்கும் கல்வித் திட்டத்திற்கு 700 கோடி ரூபாயும், தேசிய இடைநிலைக் கல்வித் திட்டத்திற்கு ரூபாய் 366.57 கோடியும், நபார்டு நிதியுதவித் திட்டங்களுக்கு ரூபாய் 293 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது பாராட்டிற்குரியது.

மேலும், நடப்பு நிதியாண்டிற்குள் அனைத்துப் பள்ளிகளிலும் 100 சதவீத குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகள் கிடைக்கும் என அறிவித்திருப்பதை எங்களது சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்கிறோம்.

மேலும், நடப்பு நிதியாண்டில் ரூபாய் 1,299.74 கோடி செலவில் மாணவ, மாணவிகளுக்கு இலவச நோட்டுப் புத்தகங்கள், சீருடைகள், புத்தகப் பைகள், காலணிகள், ஜியாமெட்ரி பாக்ஸ் மற்றும் வரைபட புத்தகங்கள், மிதிவண்டிகள், மலைப் பகுதிகளில் பயிலும் மாணவர்களுக்குக் கம்பளி ஆடைகள், மாணவியருக்கு சானிட்டரி நாப்கின் ஆகியவை வழங்குவதற்கு பெரும் நிதி ஒதுக்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தனியார் பள்ளிகளால் ஏற்பட்டுள்ள போட்டிகளைச் சமாளித்து, அதிகமான மாணவ, மாணவியரை ஈர்க்கும் வகையில், அரசுப் பள்ளிகளில் ஆங்கிலவழிக் கல்வி போதனா முறையை துவக்கினால், அனைத்துத் தரப்பு மக்களும் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களைப் போற்றிப் பாராட்டுவார்கள். இதனை எங்களது சமத்துவத் தலைவர் அண்ணன் திரு. ஆர். சரத்குமார் அவர்கள் சார்பாகவும் வலியுறுத்திடக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி அளிப்பதற்கான சட்ட விதிகளை அரசிதழில் வெளியிட்ட முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும். 2011 ஆம் ஆண்டு அம்மாவின் அரசு பதவியேற்ற பின்னர், 51,757 ஆசிரியர்களும், 7,275 ஆசிரியர் அல்லாத பணியாளர்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளது பாராட்டிற்குரியது.

மாணவர்கள் இடையில் பள்ளிப் படிப்பினை நிறுத்தாத வகையில் அவர்களுக்கும் சிறப்பு ஊக்கத் தொகையாக 2013–2014 ஆம் ஆண்டில் ரூபாய் 381 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது பாராட்டிற்குரியது. இதனால் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கை உயரும்.

மேலும், பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள், குறிப்பாக கூடுதல் வகுப்பறைகள், குடிநீர் வசதிகள் போன்றவற்றிற்காக ரூபாய் 1,684 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது பாராட்டிற்குரியது.

நபார்டு நிதியுதவித் திட்டத்தின்மூலம் ரூபாய் 50 கோடி செலவில் அனைத்துப் பள்ளிகளிலும் 100 சதவீத பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் கழிப்பறை வசதி செய்து கொடுப்பது 2 ஆண்டுகால மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியின் சாதனையாகும்.

பிற்பகல் 3–10

காவேரிப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுக்கு வழிவகுத்தது, முல்லைப் பெரியாறு விவகாரத்தில் அம்மாவின் நிலைப்பாடு போன்றவை பாராட்டுக்குரியவை. முழுமையான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் பலர் பயனடைந்துள்ளார்கள். மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு ஒரு நாளைக்கு ரூபாய் 300 சம்பளம் வழங்கப்படுகிறது. அனைத்து மாணவர்களுக்கும் மடிக் கணினி வழங்கப்படுகிறது. ஏழைப் பெண்களின் திருமண உதவித் திட்டம், தாலிக்குத் தங்கம் மற்றும் பசுமை வீடுகள் என ஏராளமான நல்ல திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. வெளி மார்க்கெட்டைவிட, தரமான அரிசி கிலோ ரூபாய் 20–க்கு அனைத்து மக்களுக்கும் வழங்கப்பட்டு வருவது பாராட்டுக்குரியது. சென்னை நகரில் அம்மா உணவகம்மூலம் இட்லி ஒரு ரூபாய், சாம்பார் சாதம் ஐந்து ரூபாய், தயிர் சாதம் மூன்று ரூபாய் என வழங்கப்பட்டு வருவது பெரிதும் பெருமைக்குரியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவரின் கொள்கைப் பாடல்கள் பல பள்ளிப்பாடங்களாக வைக்கப்பட வேண்டியவை. நமது சமுதாயத்தில் மிகச் சிலர்

இதை ஏற்றுக்கொள்வார்கள். சங்க காலங்களில் இயல், இசை, நாடகங்கள் இவை மூன்றுமே மிக முக்கியமான அம்சங்களாக இருந்தன. ஆனால், தற்போது சினிமாப் பாடல்கள் என்பது மிகத் தவறாகச் சித்தரிக்கப்பட்டுவிட்டன. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் பாடல்கள் சிறு வயதில் ஏற்படுத்தும் தாக்கத்தை நாலடியாரால், திருக்குறளால் ஏற்படுத்த முடியாது. அதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்: நாங்குநேரி தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான நாங்குநேரியான் கால்வாய் திட்டத்தினை நிறைவேற்றிட ரூபாய் 171 கோடியில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது என மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நான் இந்த அவையில் கேட்ட வினாவிற்கு பதிலளித்தார்.

அள்ளிக் கொடுக்கும் வள்ளலின் வாரிசான மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கேட்காமலே அனைத்தையும் வாரி வழங்கும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் எங்கள் நாங்குநேரி தொகுதி மக்களின் 60 ஆண்டுகால கோரிக்கையான நாங்குநேரியான் தனிக் கால்வாய் திட்டத்தினை நிறைவேற்றிட வேண்டும் என வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன். இதனால் எமது தொகுதி மக்கள் மாண்புமிகு அம்மாவை என்றும், எப்போதும் மறக்க மாட்டார்கள் என்பதை இந்த அவையில் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி பெரியகுளத்தின்கீழ் உள்ள 46 குளங்கள் வானம் பார்த்த குளங்களாகும். அதிகமான மழை பொழியும் காலங்களில் மட்டுமே நிரம்பக்கூடியவை. இக்குளங்களுக்கு நாங்குநேரி, பெரியகுளம் நிரம்பியபின் நாங்குநேரியான் கால்வாயில் நாங்குநேரி பெரியகுளத்திற்கு மேல் Regulator கட்டி புறக்கால்வாய் 40.95 கி.மீ. நீளத்திற்கு வெட்டி 46 குளங்கள், 459 கிணறுகள், நாங்குநேரி பெரியகுளம், ஆக மொத்தம் 3,690 ஹெக்டேர் நிலம் பாசன வசதி பெறும் பெருந்திட்டத்திற்கு, பொதுப் பணித் துறையின்

தலைமைப் பொறியாளர் (நீர்வள ஆதார அமைப்பு) திட்ட உருவாக்கம், சென்னை அவர்களால் ரூபாய் 17,100 இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, தங்களது ஆணை வேண்டி அனுப்பப்பட்டுள்ளதாக அறிகிறேன். இத்திட்டத்தினால், மழைக் காலங்களில் வீணாகும் நீர் சேமிக்கப்படுவதுடன், சுற்றுவட்டாரங்களில் நிலத்தடி நீர் உயரவும் வாய்ப்பு உள்ளது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நாங்குநேரி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றித் தர அன்புடன் வேண்டுகிறேன்.

நாங்குநேரி தொகுதி, மூலைக்கரைப்பட்டி பேரூராட்சியில் 33/11 KV துணை மின் நிலையம் 1979 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இந்தத் துணை மின் நிலையத்திலிருந்து பருத்திப்பாடு, ஆழ்வாநேரி, தோட்டாக்குடி, அ.சாத்தான்குளம், அரியகுளம், கூந்தகுளம், சிந்தாமணி, முனைஞ்சிபட்டி, இராமகிருஷ்ணாபுரம், காடன்குளம்–திருமலாபுரம், சடையநேரி–வெங்கட்ராயபுரம், விஜயநாராயணம் ஆகிய ஊராட்சிகளில் சுமார் 102 கிராமங்களும் மூலைக்கரைப்பட்டி பேரூராட்சியில் 17 கிராமங்களும் மின்வசதி பெறுகின்றன.

மேலும், இக்கிராமங்களில் சுமார் 50,000 வீடுகளும், 3,800 விவசாய மின் மோட்டார் பம்பு செட்டுகளும், 1 கயிறு ஆலையும், 25 ரைஸ் மில்களும் 3 தனியார் கல்லூரிகளும் உள்ளன. 4 கூட்டுக் குடிநீர்த் திட்ட நீரேற்று நிலையங்களும், 450 ஆழ்குழாய்க் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் ஆகியவற்றிற்குத் தேவையான மின்சாரம் மூலைக்கரைப்பட்டி 33/11 KV துணை மின் நிலையத்திலிருந்து பெறப்படுவதால் பல கிராமங்களில் மிகக் குறைந்த மின் அழுத்தம் ஏற்படுகிறது.

இந்தத் துணை மின் நிலையத்திற்கு 30 கி.மீ. தொலைவில் உள்ள சாத்தான்குளம் 110/33/11 KV துணை மின் நிலையத்தில் இருந்து 33 KV மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மின் தேவை அதிகரிக்கும் காலத்திலும், மழைக் காலங்களில் ஏற்படும் தடங்கல்களினாலும் மேற்கண்ட ஊராட்சிகளில் உள்ள கிராமங்களுக்கு மின் சப்ளை கொடுப்பதற்கு 17 கி.மீ. தூரத்திலுள்ள

ரெட்டியார்பட்டி 33/11 KV துணைமின் நிலையத்திலிருந்தோ அல்லது 23 கி.மீ. தூரத்தில் உள்ள கரந்தாநேரி 110/11 KV துணை மின் நிலையத்திலிருந்தோ, மின் சப்ளை பெறுவதற்குக் கூடுதல் மின்சாரம் இல்லை. ஆகையால் மூலைக்கரைப்பட்டியில் உள்ள 33/11 KV உப மின் நிலையத்தை 110/11 KV துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்தி, மேற்சொன்ன கிராமங்களின் மின்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களை அன்புடன் வேண்டுகிறேன்.

களக்காடு ஒன்றியம், பத்மநேரி பஞ்சாயத்துப் பகுதியைச் சேர்ந்த வண்டிக்காரன்நகர், கீழவடகரை, மேலவடகரை மற்றும் காமராஜ் நகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 500 வீடுகள் கொண்ட கிராம மக்கள் அருகில் உள்ள களக்காடு நகரத்திற்குச் செல்ல பச்சையாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பத்மநேரி பாலத்தின் வழியாக சுமார் 12 கி.மீ. தூரம் சுற்றிச் செல்ல வேண்டியுள்ளது. இதனால், அந்தப் பகுதியில் உள்ள விவசாய மக்கள் தங்கள் விளைபொருட்களை களக்காடு மற்றும் நாகர்கோவில் சந்தைக்கு எடுத்துச்செல்ல மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, கீழபத்தை மற்றும் மேலவடகரையின் குறுக்கே பச்சையாற்றில் கனரக வாகனம் செல்லும்வகையில் ஒரு பாலம் கட்டித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நாங்குநேரி ஒன்றியம், நாங்குநேரி அரசு மருத்துவமனையில் சித்தா பிரிவு அவ்வப்போது தற்காலிகமாக வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. ஆகையினால், மருந்து பொருட்களைப் பாதுகாப்பாக வைத்து, நோயாளிக்கு வழங்க மிகவும் சிரமமாக இருக்கிறது. மேலும், இங்கு தினசரி சுமார் 120 முதல் 150 நோயாளிகள் புறநோயாளிகளாக வந்து சிகிச்சை பெற்று வருகிறார்கள். உள்நோயாளிகள் 5 பேர் சிகிச்சை பெறுகின்றனர். எனவே, இம்மருத்துவமனைக்குப் புதிதாக சித்தா பிரிவிற்கென்று தனிக் கட்டடம் கட்ட ஆவன செய்யும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

களக்காடு ஒன்றியம், கள்ளிகுளம் ஊராட்சியில் உள்ள தெற்கு மீனவன்குளம் கிராமத்தைச் சுற்றிலும் 10 கிராமங்கள் இருக்கின்றன. இக்கிராமத்தைச் சேர்ந்த மக்கள் 15 கி.மீ. தூரத்திலுள்ள மருத்துவமனைக்குச்

செல்ல கடினமாக உள்ளது. ஆகையால், தெற்கு மீனவன்குளம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நாங்குநேரி ஒன்றியம், முனைஞ்சிப்பட்டி பஞ்சாயத்து, முனைஞ்சிப்பட்டி வட்டார ஆரம்ப சுகாதார மையம் செயல்பட்டு வருகிறது. 7 ஊராட்சிகள் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் 21 ஆயிரம் மக்கள் வசித்து வருகின்றனர். தினசரி ஆயிரம் பேர் புறநோயாளிகளாக சிகிச்சைப் பெற்று வருகின்றனர். முனைஞ்சிப்பட்டி அரசு மருத்துவமனையில் மிகக் குறைவான படுக்கைகள் உள்ளன. சில நோயாளிகள் தங்கிருந்து சிகிச்சை பெறும் சூழ்நிலை உள்ளது. இதனால் படுக்கைகள் போதுமானதாக இல்லை. எனவே, அரசுக்குச் சொந்தமான 5 ஏக்கர் நிலம் மருத்துவமனை அருகில் உள்ளது. ஆகவே, முனைஞ்சிப்பட்டி வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாளையங்கோட்டை ஒன்றியம், சிவந்திப்பட்டி மற்றும் களக்காடு ஒன்றியம் சிங்கிகுளம் ஆகிய இரு கிராமங்களைச் சுற்றியுள்ள மக்களுக்கும் தமிழக அரசால் கால்நடை மருத்துவமனை கட்ட 12–9–2001 அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டது. ஆகவே, தாங்கள் தயவுகூர்ந்து அனுமதி மறுக்கப்பட்ட சிவந்திப்பட்டி மற்றும் சிங்கிகுளம் கால்நடை மருத்துவமனைகளுக்குப் புதிய கட்டடம் கட்டித்தர அனுமதி வழங்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நாங்குநேரி தொகுதி, மூலைக்கரைப்பட்டி முதல் நிலை பேரூராட்சி 12,000 மக்கள்தொகை கொண்டதாகும். மேலும், சுற்றியுள்ள 23 கிராமங்களுக்கு மூலைக்கரைப்பட்டி, வியாபார மையமாக உள்ளது. இப்பேரூராட்சியில் நெடுஞ்சாலைக்குச் சொந்தமான, வடக்கே சார்–பதிவாளர் அலுவலகம் முதல் தெற்கே பேருந்து நிறுத்தம் வரை உள்ள 1 கி.மீ. சாலை மிகவும் குறுகியதாக இருப்பதால் பேருந்துகள் வந்து செல்ல கடினமாக உள்ளது. ஆகவே, மூலைக்கரைப்பட்டி பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையான கிழக்கே அமைந்துள்ள ஒருவழிப் பாதையைச் சீரமைத்து அணுகு சாலையாக அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நாங்குநேரி தொகுதியிலுள்ள புலியூர்குறிச்சி பஞ்சாயத்து ஏர்வாடியிலிருந்து கோதைச்சேரி செல்லும் சாலையில் கி.மீ. ½–ல் அமைந்துள்ள தாம்போகி (CAUSEWAY) மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. கடம்போடுவாழ்வு, வடுகட்சிமதில், சூரங்குடி, கோயிலம்மாள்புரம் போன்ற பஞ்சாயத்தைச் சார்ந்த மக்களுக்கு தாம்போகி பிரதான பாதையாக அமைந்துள்ளது. ஆகவே, இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான கோதைச்சேரி தாம்போகிக்குப் பதிலாக உயர்மட்டப் பாலம் அமைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நாங்குநேரி ஒன்றியம், சிங்கிகுளம் பஞ்சாயத்தில் மேலச்செவல்–சிங்கிகுளம்–பானாங்குளம் செல்லும் சாலையில் கி.மீ. 8/6–ல் அமைந்துள்ள தாம்போகி (CAUSEWAY) மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. மேலச்செவல் வழியாக களக்காடு, பானாங்குளம் வருவதற்கு தாம்போகி பிரதான பாதையாக அமைந்துள்ளது. ஆகவே, இப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான சிங்கிகுளம் தாம்போகிக்குப் பதிலாக உயர்மட்டப் பாலம் அமைக்க ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நாங்குநேரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நாங்குநேரி ஒன்றியத்தில் 26 பாசனக் குளங்கள் உள்ளன. மேற்படி பாசனக் குளங்கள் மழைக் காலங்களில் மட்டுமே நீர்வரத்தின்மூலம் நிரம்பும். மேற்படி குளங்களுக்கு பச்சையாற்றில் இருந்து வாய்க்கால்மூலம் குளங்களை இணைத்திட மாண்புமிகு அம்மாவின் கடந்தகால பொற்கால ஆட்சியில் சர்வே பணி முடித்துள்ளதாகவும், அதன்பிறகு வந்த அரசு, இத்திட்டத்தைக் கிடப்பில் போட்டு விட்டதாகவும் புகார் தெரிவித்துள்ளார்கள். மேற்படி குளங்களை இணைப்பதால் நாங்குநேரி ஒன்றியத்தில் வறட்சி நீங்கி செழுமை ஏற்படும். ஆகையால், தாங்கள் தொகுதி மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு நாங்குநேரியில் உள்ள பச்சையாற்றில் இருந்து 26 பாசனக் குளங்களை வாய்க்கால்மூலம் இணைத்திட ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை ஒன்றியம், தமிழாக்குறிச்சி அணைக்கட்டின்மூலம் மணிமுத்தாறு 2–வது ரிச் குளம், தமிழாக்குறிச்சி குளம் பயன்பெறுகிறது. கடந்த இரண்டு

ஆண்டுகளுக்கு முன்பு வெள்ளத்தில் தமிழாக்குறிச்சி அணைக்கட்டு சேதம் அடைந்ததால், தமிழாக்குறிச்சி குளத்திற்கு மழைக் காலங்களில் தண்ணீர் சீராகச் செல்லவில்லை. எனவே, இந்த குளத்தினால் பயன்பெறும் விவசாயிகள் பயிர் செய்ய முடியாமல் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர். எனவே, பச்சையாற்றின் குறுக்கே வெள்ளத்தால் பழுதடைந்த தமிழாக்குறிச்சி அணைக்கட்டை சரிசெய்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி சட்டமன்றத் தொகுதி பாளையங்கோட்டை ஒன்றியம் தருவை பஞ்சாயத்திற்குட்பட்ட தருவையில் அனைத்து சமுதாயத்திற்கும் பாத்தியப்பட்ட (கால்வாய் சாலை) சுடுகாட்டிற்குச் செல்லும் பாதையில் பாளையங்கால்வாய் குறுக்கே பாலம் அமைத்து மக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நாங்குநேரி தொகுதியிலுள்ள மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி அரசனார்குளத்தில் உள்ள பள்ளி மாணவ, மாணவிகள் 1 கி.மீ. தொலைவில் உள்ள கல்லத்திக்குதான் சென்று படிக்கின்றனர். அரசனார்குளத்தில் பள்ளி அமைக்க தேவையான இடமும் கல்வி பயில மாணவ, மாணவிகளும் (25) போதுமான அளவில் உள்ளனர். ஆகவே, அரசனார்குளத்தில் புதிய ஆரம்பப் பள்ளி அமைக்க ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை ஒன்றியம், முன்னீர்பள்ளம் பஞ்சாயத்து, முன்னீர்பள்ளம் அரசு மேல்நிலைப் பள்ளியில் சுமார் 1,000 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இப்பள்ளிக்குப் புதிய ஆய்வகம் கட்டுவதற்கான இடமும் இருக்கிறது. ஆகவே, புதிய ஆய்வக வசதியுடன்கூடிய கட்டடம் கட்ட ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நாங்குநேரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கீழ்க்காணும் கிராமங்களில் குடிநீர் பற்றாக்குறையாக உள்ளது. அதனை நிவர்த்திச் செய்து தரும்பொருட்டு புதிய மற்றும் கூடுதல் மேல்நிலைத் தொட்டிகள் அமைத்து குடிநீர்த் திட்ட வசதிகள் செய்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன்:

களக்காடு ஒன்றியம்

வ. எண்	ஊராட்சி	குடியிருப்பின் பெயர்
1.	படலையார்குளம்	படலையார்குளம்
2.	படலையார்குளம்	ஜெ.ஜெ. நகர்
3.	தளவாய்புரம்	இராஜாபுதூர்
4.	புலியூர்குறிச்சி	சீனிவாசபுரம்
5.	சீவலப்பேரி	சேதுராயபுரம் காலனி
6.	தேவநல்லூர்	பொத்தசுத்தியாதவர் குடியிருப்பு
7.	தேவநல்லூர்	பெருமாள்குளம்
8.	கீழகருவேலன்குளம்	கட்டார்குளம்
9.	கடம்போடுவாழ்வு	கடம்போடுவாழ்வு
10.	கடம்போடுவாழ்வு	சுந்தரபாண்டியபுரம்
11.	வடுகட்சிமதில்	வடிவால்புரம்
12.	வடுகட்சிமதில்	மேலமலையநேரி
13.	கீழகருவேலன்குளம்	கல்லடி சிதம்பராபுரம்
14.	மலையடிபுதூர்	மேலமாவடி
15.	மலையடிபுதூர்	ஆர்ச்விளை
16.	மலையடிபுதூர்	சண்முகசுந்தரர் நாடார் நகர்
17.	சூரங்குடி	நேதாஜி நகர்
18.	கீழகருவேலன்குளம்	கேசவநேரி முஸ்லிம் காலனி

நாங்குநேரி ஒன்றியம்

வ. எண்	ஊராட்சி	குடியிருப்பின் பெயர்
1.	சிந்தாமணி	சிந்தாமணி நாடார் குடியிருப்பு
2.	முனைஞ்சிப்பட்டி	ரெட்டார்குளம்
3.	செண்பகராமநல்லூர்	நாச்சான்குளம் வடக்குர்
4.	செண்பகராமநல்லூர்	ஜெகநாதபுரம் புதுக் காலனி
5.	இராஜாக்கமங்கலம்	சிறுமனஞ்சி காலனி
6.	இராஜாக்கமங்கலம்	வாகைகுளம்
7.	தெற்கு நாங்குநேரி	பெரும்பத்து
8.	சூரன்குடி	சூரன்குடி
9.	பாப்பான்குளம்	பாப்பான்குளம் காலனி
10.	இராஜாக்கமங்கலம்	செல்வம் நகர்
11.	இராமகிருஷ்ணாபுரம்	திணையூரணி

பாளையங்கோட்டை ஒன்றியம்

வ. எண்	ஊராட்சி	குடியிருப்பின் பெயர்
1.	நடுவக்குறிச்சி	நடுவக்குறிச்சி
2.	கீழநத்தம்	கிருபா நகர்
3.	மேலதிடியூர்	காமராஜ் நகர்
4.	செங்குளம்	செங்குளம்
5.	திருமலைக்கொழுந்துபுரம்	திருமலைக்கொழுந்துபுரம்

வ. எண்	ஊராட்சி	குடியிருப்பின் பெயர்
6.	குன்னத்தூர்	இந்திரா நகர்
7.	இட்டேரி	தாமரைச்செல்வி
8.	ரெட்டியார்பட்டி	ரெட்டியார்பட்டி
9.	கான்சாபுரம்	நொட்சிகுளம்
10.	பொன்னாக்குடி	பொன்னாக்குடி

மேற்கண்ட கோரிக்கைகளை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மேல்நிலை தொழிற்கல்வி ஆசிரியர்கள் சுமார் 10 ஆண்டுகளாக ஊதியமின்றி பணிபுரிந்துவரும் ஆசிரியர்களில் முதல் கட்டமாக 213 பேருக்கு ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.

2–6–2000 முதல் 31–3–2007 வரை விடுபட்டுள்ள 270 தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்ட பின்னரும் ஊதியம் வழங்கப்படவில்லை. தாயுள்ளம்கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆவன செய்திடுமாறு சமத்துவ மக்கள் கட்சித் தலைவர் சார்பாகவும், சமத்துவ மக்கள் கட்சி சார்பாகவும் இந்தக் கோரிக்கையை வைக்கிறேன்.

அடுத்து, தமிழ்நாடு தொழிற்கல்வி ஆசிரியர் சங்கத்தினரின் வேண்டுகோள். பள்ளிக் கல்வியில் தொழிற்கல்வி ஆசிரியர் சான்றிதழ் பயிற்சியை மீண்டும் நடத்த அனுமதி மற்றும் விவசாயம், நெசவு, மர வேலை பாட ஆசிரியர் நியமனத் தடை நீக்கம் குறித்தது ஆகும்.

தமிழக மக்களின் நம்பிக்கைக்கேற்ப செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசு, வெற்றிகரமாக இரண்டாம் ஆண்டை முடித்து மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கிறது.

மத்தியிலே இருக்கும் ‘கை’ ஏமாற்றவும் செய்கிறது. பெட்ரோல், டீசல் விலையை அடிக்கடி ஏற்றவும் செய்கிறது. நம்பி

ஒட்டுப்போட்டவர்களை எல்லாம் ஒழித்துக்கட்டும் வேலையும் செய்து வருகிறது. ஆனால், ஓட்டுப் போட்டவர்களை எல்லாம் உயர்த்துகிற வேலையை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மாவின் அரசு செய்து வருகிறது. குறிப்பாக, மாண்புமிகு அம்மாவின் ஆட்சியில் நில அபகரிப்பு புகார்கள் வெகுவாகக் குறைந்துள்ளன. பொதுமக்கள் தங்கள் விருப்பம்போல் அசையா சொத்துகளை வாங்குவதற்கும், விற்பதற்கும் ஏற்ற சூழ்நிலை தற்போது உருவாகியுள்ளது. ஆனால், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் இதுபோன்று இல்லை.

மேலும், மின்சாரக் கட்டமைப்பிற்கும், உற்பத்திக்கும் தற்போது அரசு மேற்கொண்டுவரும் முயற்சி அதிகம். கடுமையான பொருளாதார சூழ்நிலை நிலவிவரும் இத்தருணத்திலும் தமிழக பட்ஜெட்டில் புதிய வரிகள் ஏதும் இல்லை.

மாண்புமிகு அம்மாவின் அரசு பொறுப்பேற்று, தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக வருவாய் உபரி உள்ள நிதிநிலை அறிக்கையை மட்டுமே சமர்ப்பித்து வருகிறது. மாண்புமிகு அம்மாவின் விவேகமான தலைமையில் செயல்பட்டுவரும் இந்த அரசால் வசூலிக்கப்பட்ட வரியும் முறையாக செலவிடப்பட்டு வருகிறது. இப்படி பல அம்சங்களுடன் இயங்கிவரும் அம்மாவின் அரசை பாராட்டுவதில் வியப்பேதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள், உங்களுக்கு ஐந்து நிமிடங்கள். இன்றைக்குச் சூழ்நிலை அப்படி இருக்கிறது.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, “The destination of the nation is determined in the class room” என்று சொல்வார்கள். ஒரு தேசத்தின் தலையெழுத்து வகுப்பறைகளில்தான் நிர்ணயிக்கப்படுகிறது என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட அந்தப் பொன்மொழிக்கேற்ற கல்வித் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பேசுகின்ற வாய்ப்பை அளித்தமைக்காக முதலில் மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு பள்ளிக் கல்வித் துறைக்கு ரூபாய் 16,965 கோடியை ஒதுக்கீடு செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு

மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன், மாணவர்கள் சிறப்பாகக் கல்வி கற்க வேண்டுமென்று, பல்வேறு திட்டங்களை மாணவர்களுக்கு அளித்து குறிப்பாக, விலையில்லா மடிக் கணினி வழங்கி, இன்றைய மாணவர்களுக்கு வளர்ந்து வருகின்ற விஞ்ஞானத்தோடு, தங்களையும் ஈடுபடுத்திக்கொள்ளக்கூடிய வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்ட சமச்சீர்க் கல்வி முறையில் சிறுபான்மையினர் மொழிகளாக உருது, தெலுங்கு, கன்னடம், மலையாளம், அரபி ஆகிய மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டிருக்கின்ற சிறுபான்மையின மாணவர்களுக்கு, தம் தாய்மொழியில் கற்கும் வாய்ப்பு பறிக்கப்பட்டது. சமச்சீர்க் கல்விக்காக நியமிக்கப்பட்ட திரு. முத்துகிருஷ்ணன் தலைமையிலான ஒன்பது நபர்கள் அடங்கிய குழு, மொழி சிறுபான்மையின மாணவர்கள் தம் தாய் மொழியைக் கற்றுகொள்ளும்வகையில் பரிந்துரை செய்திருந்தது. ஆனால், இந்தப் பரிந்துரைகளை ஏற்காத முந்தைய தி.மு.க. அரசு புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. இந்தப் புதிய நடைமுறையில் மொழிவழி சிறுபான்மையின மாணவர்கள் தம் தாய் மொழியை மொழிப் பாடமாகக் கற்கும் வாய்ப்புப் பறிக்கப்பட்டது. 1968 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் இருமொழிக் கொள்கை பின்பற்றப்பட்டு வருகிறது. அப்போது முதல் சிறுபான்மையினர் மொழிகளை மொழிப் பாடமாகக் கற்கும் உரிமை தமிழகத்திலே வாழும் மொழி சிறுபான்மையினர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. இந்த உரிமைதான் சென்ற தி.மு.க. ஆட்சியில் பறிக்கப்பட்டது. இதன்காரணமாகத்தான், உருது மொழி பேசும் மக்கள் அதிகமாக வாழும் வேலூர் போன்ற மாவட்டங்களில் மிகப் பெரிய அளவில் தி.மு.க.–விற்கு எதிரான அலை சென்ற தேர்தலில் வீசியது. எனவே, சிறுபான்மையின மக்கள்மீது மிகுந்த அக்கறை கொண்ட இந்த அரசு மொழிவழி சிறுபான்மையின மாணவர்கள் தங்கள் தாய் மொழியில் 1 ஆம் வகுப்பிலிருந்து 10 ஆம் வகுப்பு வரை மொழிப் பாடமாகப் படிப்பதற்கும், தேர்வு எழுதுவதற்கும், தேர்வில் அவர்கள் எடுக்கும் மதிப்பெண்கள் தேர்ச்சிக்காக கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதற்கும் வழிவகுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது 27–9–2005–ல் இதே சட்டமன்றத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு மின்னணு நூலகம், தமிழ் டிஜிட்டல் லைப்ரரி அமைப்பது தொடர்பான அறிவிப்பை வெளியிட்டார்கள். இதனைத் தொடர்ந்து இந்தத் தமிழ் டிஜிட்டல் நூலகம் அமைப்பது தொடர்பாக, பாலன் திரு. கல்யாணசுந்தரம் அவர்களை ஒருங்கிணைப்பாளராகக் கொண்டு, ஒரு ஆலோசனைக் குழுவும் அமைக்கப்பட்டது. சட்டமன்றப் பேரவை முன்னாள் தலைவர் திரு. சி.ப. ஆதித்தனார் அவர்களின் ஸ்ரீவைகுண்டம் வீட்டைச் சீரமைத்து, அங்கு இந்த நூலகத்தை உருவாக்குவதற்கு 22–11–2005 ஆம் ஆண்டு அரசாணையும் வெளியிடப்பட்டது. இருப்பினும், சென்ற ஆட்சியின்போது, ... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டிஜிட்டல் நூலகம் அமைப்பதற்குரிய பணி அரசின் பரிசீலனையில் உள்ளது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த 10 தினங்களுக்கு முன்பு ஒரு கோரிக்கையை வைத்தார். உருது படித்திருக்கிற compassionate ground, அதாவது கருணை அடிப்படையிலான பணியாளர்களுக்கு இதுவரை வேலைவாய்ப்பு வழங்கப்படவில்லை என்ற ஒரு கோரிக்கையை வைத்தார். கோரிக்கை வைத்த 10 தினங்களுக்குள்ளாகவே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள் என்ற செய்தியை இந்த நேரத்திலே பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழு கருணை அடிப்படையிலான ஊழியர்களுக்கு மாத்திரம் தரப்பட வேண்டுமென்கிற பட்டியலை வைத்திருந்தபோது, இல்லை ஏழு சிறுபான்மையினர் பிரிவைச் சேர்ந்தவர்களையும் அழைத்து வாருங்கள் என்று நேற்றையதினம் அவர்களுக்கும் வழங்கினார்கள். அதற்கு முதலில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றியைத் தெரிவிக்க வேண்டும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் நன்றி தெரிவித்து, விடைபெறுங்கள்.*

திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இன்னும் பேசி முடிக்கவில்லை. நேற்றைக்கு சிறுபான்மையின என்ற முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களுக்குப் பணி நியமன ஆணை வழங்கி இருக்கின்றார்கள். மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

அதைப்போல நேற்றைக்கு T.R.B., *ஆசிரியர் தேர்வு வாரியம் ஒரு விளம்பரத்தை வெளியிட்டிருக்கின்றது. அதிலே உருது மொழி ஆசிரியர் பணியிடம் ஒன்றுகூட* vacancy *இல்லை என்று காட்டப்பட்டிருக்கிறது. 30–க்கும் மேற்பட்ட ஆசிரியர் பணியிடங்கள் இன்றைக்குக் காலியாக உள்ளன. அதையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: *உருது மொழி ஆசிரியர் பணியிடங்கள் காலி இருப்பின், அது உரிய முறையிலே பரிசீலினைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்கிற செய்தியை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல பதிலைச் சொல்லியிருக்கிறார்கள், அதற்கு நன்றி சொல்லிவிடுங்கள்.*

திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

1–6–1991–க்குப் பிறகு தொடங்கப்பட்ட தமிழ்வழிப் பள்ளிகளுக்கு நிதி உதவி வழங்கப்படமாட்டாது என்ற நிபந்தனையின் அடிப்படையில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய சுமார் 1,800 பள்ளிகளில் ஏறக்குறைய 8,000 ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். 4 இலட்சம் மாணவ, மாணவியர் இப்பள்ளிகளில் பயிலுகின்றனர். இப்பள்ளிகளில் தமிழக அரசின் பாடத் திட்டத்தை தமிழ் மொழியின் வாயிலாக கற்பிக்கும் நடைமுறை பின்பற்றப்பட்டு வருகின்றது. பொதுத் தேர்வில் தேர்ச்சி விகிதம் சிறந்த முறையில் உள்ளது. மெட்ரிக்குலேஷன் பள்ளிகளைப் போல் அல்லாமல், படிப்புக் கட்டணம் ஏதும் இப்பள்ளிகளில் வசூலிக்கப்படுவதில்லை. தகுதியான ஆசிரியர்கள் கடந்த 22 ஆண்டுகளாக நிருவாகம் வழங்கும் சொற்பமான ஊதியத்தில் பணியாற்றி வருகின்றனர். 10 ஆண்டுகள் நிறைவுற்ற முழு நிதி உதவி பெறாத பள்ளிகள் சுமார் 960 பள்ளிகள் ஆகும். இவற்றில் பணியாற்றும் ஆசிரியர்கள் சுமார் 4,000 பேர்கள். இப்பள்ளிகளுக்கு அரசு நிதியுதவி வழங்க முன்வந்தால், அரசுக்கு ஆகும் கூடுதல் செலவுத் தொகை ரூ.175 கோடிதான் என்று தெரிய வருகின்றது.
SSA . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது அரசின் கொள்கை முடிவில் இருக்கிறது என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.*

திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நூலகம் திறக்கப்பட்டால், 10 சிறைச் சாலைகள் மூடப்படும் என்று சொல்கின்றார்கள். என்னுடைய ஆம்பூர் தொகுதியிலே ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு மேலாக ஆம்பூரின் மையப் பகுதியிலே ஒரு மாவட்ட துணை நூலகம் இயங்கி வந்திருந்தது. சில ஆண்டுகளுக்கு முன்பாக, ஓர் அமைப்பினர் அந்த இடம் எங்களுக்குத்தான் சொந்தம் என்று சொல்லி, அந்த நூலகத்தைக் காலி செய்துவிட்டு, அந்த இடத்தைத்*

தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டனர். மூன்று மாதங்களுக்கு முன்னர், நூலகத் துறைக்கு அந்த இடம் சொந்தம் என்று சொல்லி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உத்தரவிட்டு, காவல் துறை அந்த நூலகத்தை மீண்டும் கையகப்படுத்தச் சென்றபோது, ஒரு கூட்டம் அதைத் தடுத்து நிறுத்திவிட்டது. சென்ற காவல் துறையினரும் திரும்ப வந்துவிட்டனர். அந்த இடம், அந்தத் தனியாருக்குச் சொந்தம் என்று சொன்னால், நாங்கள் அதைக் கேட்கப்போவதில்லை. அந்த இடம் நூலகத் துறைக்குச் சொந்தம் என்று சொன்னால், அதை எந்தவித பாரபட்சமுமின்றி உடனடியாக நீங்கள் கையகப்படுத்தி, அங்கே புதிய நூலகக் கட்டடம் கட்டப்பட வேண்டும். ஏனென்று சொன்னால், நாங்கள் எல்லாம் அந்த நூலகத்தைப் பயன்படுத்தியவர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உரிய முறையில் துறை சார்ந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அது நம்முடைய துறைக்குச் சொந்தமாக இருப்பின், உடனடியாக அதை மீட்டுத் தருவதற்குரிய பணிகள் மேற்கொள்ளப்படும். உலகப் புத்தகத் தினத்தை முன்னிட்டு ஒரு இலட்சம் உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டுமென்று பொது நூலகத் துறை அறிவித்த உடனேயே, ஒரே நாளில் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் உறுப்பினர்களைச் சேர்த்தது பொது நூலகத் துறை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டே இரண்டு கோரிக்கைகளைச் சொல்லி, எனது உரையை முடித்துவிடுகிறேன். தமிழ்நாடு பாடநூல் கழகம் சார்பாக மாண்புமிகு தமிழக

முதல்வர் அவர்களின் பள்ளி மாணவர்களுக்கான விலையில்லா நில வரைபட நூல் வழங்கும் திட்டத்தின்கீழ், நில வரைபட நூல் வழங்கப்பட்டுள்ளது. அதை நாங்கள் மனமாரப் பாராட்டுகின்றோம். இந்த நில வரைபட நூலில் பக்கம் 42, 47, 61–ல் மேற்கு ஆசியா நில வரைப்படத்திலுள்ள ஒரு குறையை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) கால நேர சூழ்நிலையைப் பாருங்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: ஐ.நா.–வினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நாடாக பாலஸ்தீனம் விளங்குகின்றது. இந்தியாவும் அங்கீகரித்துள்ளது. ஆனால், இது நமது தமிழக அரசின் பாடப் புத்தகத்திலுள்ள நில வரைபடத்தில் சுட்டிக்காட்டப்படவில்லை. இந்தத் தவறை பாடப் புத்தகத்தில் திருத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சர்வதேச தரத்தில் தமிழகம் விளையாட்டுத் துறையில் முன்னேற வேண்டுமென்பதற்காக கடந்த 2005 ஆம் ஆண்டு தமிழக அரசால் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் விளையாட்டுக்கென்று ஒரு தனிப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் M.Tech., Sports Technology என்னும் விளையாட்டு தொழில்நுட்பப் பட்ட மேற்படிப்பை ஆரம்பித்து நடத்தி வருகின்றார்கள். உலகளவில் விளையாட்டுக்குப் பெயர்பெற்ற ஆஸ்திரேலியாவில் உள்ள அடிலெய்டு பல்கலைக்கழகத்தின் பாடத் திட்டத்தினையே இவர்கள் பின்பற்றி வருகின்றனர். இங்கு பட்டம் பெற்று வேலைக்காக மாணவர்கள் காத்துக்கொண்டிருக்கும் சூழ்நிலையில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகமும் இவர்களைக் கண்டுகொள்வதே இல்லை. விளையாட்டுக்கென்று கோடிக்கணக்கில் செலவிடும் தமிழக அரசு M.Tech., Sports Technology பயின்ற மாணவர்களுக்குப் பணி நியமனம் வழங்கினால், அந்தத் தொகை முறையாகப் பயன்படுத்தப்படும். மேலும், தமிழகம் விளையாட்டுத் துறையில் உலகளவில் பல சாதனைகளைப் புரியும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 3—20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உடற்கல்வி பல்கலைக்கழகத்தில் இதுவரை எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு 106 மாணவர்கள் அந்தப் பல்கலைக்கழகத்தில்தான்* Research Scholars*ஆக இருக்கிறார்கள். நிறையியல் அறிஞர்களாக, அதாவது* M.Phil. Students*ஆக 73 பேர் இதுவரை எந்தப் பல்கலைக்கழகத்திலும், உடற்கல்வி பல்கலைக்கழகத்திலும் இல்லாத அளவிற்கு இந்தப் பணியை மேற்கொண்டு வருகிறார்கள். அத்தகைய தரம் உயர்ந்த ஒரு பல்கலைக்கழகமாக நம்முடைய உடற்கல்வி பல்கலைக்கழகம் திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, உரையை முடியுங்கள்.*

திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய விலையில்லா மடிக் கணினிகள் அரசுப் பள்ளிகளிலும், அரசு உதவி பெறுகின்ற பள்ளிகளிலும் வழங்கப்படுகின்றன. அரசு உதவி பெறுகின்ற பள்ளிகளில், சுய நிதிப் பிரிவில் படிக்கின்ற 200 மாணவர்கள் மடிக் கணினிகளைப் பெறுகின்றார்கள். சுய நிதிப் பிரிவிலே படிக்கின்ற 30 முதல் 40 மாணவர்களுக்கு அரசினுடைய எந்தத் திட்டங்களும், சலுகைகளும் கிடைப்பதில்லை. அது அந்த மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் ஏமாற்றத்தை அளிக்கின்றது. ஆகவே, தயவு செய்து அந்த மாணவர்களுக்கும் அதை அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு அங்கீகாரம் உள்ள பள்ளிகளுக்குத்தான் இந்த அரசாங்கம் அறிவித்திருக்கிற அனைத்து நலத் திட்ட உதவிகளும் கொடுக்கப்பட்டு வருகின்றன. Self-Finance-சுயநிதிப் பள்ளிகளுக்கெல்லாம் இது கொடுக்கப்படுவதில்லை, இது கொள்கை முடிவு என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவற்றோடு மாத்திரமல்லாமல், +1, +2 படிக்கிற மாணவர்களுக்கு சைக்கிள் தருகிறார்கள். +1, +2 படிக்கிற மாணவர்களுக்கு லேப்டாப் தருவதில்லை என்கிற கோரிக்கையைக்கூட ஏற்கெனவே என்னுடைய அறையிலே வந்து தெரிவித்தார்கள். +1, +2 படிக்கக்கூடிய மாணவர்களுக்கு மிதிவண்டி தர வேண்டும் என்கிற ஒரு தாய் உள்ளத்தோடு தந்தவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆனால், மடிக் கணினிக்கு அப்படி ஒரு கொள்கை பின்பற்றப்படவில்லை என்கிற செய்தியை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, பேசுங்கள். (குறுக்கீடு) திரு. அ. அஸ்லம் பாஷா, நீங்கள் காலத்தையும் நேரத்தையும் மதித்து உரையை முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) திரு. அ. அஸ்லம் பாஷா, நீங்கள் உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்களுடைய நேரத்தில் பேசுகிறீர்கள், பேசுங்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருப்பத்தூர் கல்வி மாவட்டம், மிகப் பெரிய கல்வி மாவட்டமாக இருக்கிறது. திருப்பத்தூர் கல்வி மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று நீண்ட நாட்களாகக் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருப்பத்தூர் கல்வி மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 66 கல்வி மாவட்டங்கள் தற்போது இருக்கின்றன. ஒரு கல்வி மாவட்டத்தைப் பிரிக்க வேண்டும் என்று சொன்னால், நிதியும் அதற்கு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும். காலப்போக்கில் அதற்குரிய நடவடிக்கை மேற்கொண்டு, பெரிய கல்வி மாவட்டங்கள் இருப்பின், கள்ளக்குறிச்சி, இன்னும் சில மாவட்டங்கள் இருக்கின்றன. அவற்றை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, பரிசீலனை செய்யப்படும் என்கிற தகவலை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, அனைத்து உறுப்பினர்களின் சார்பாக 5 நிமிடங்களில் பேசி, உரையை முடியுங்கள்.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு சமூகத்தை விடுதலை செய்வது, நாகரிகப்படுத்துவது, பொருளாதாரத்தில் மற்றும் பல்வேறு விதங்களிலே முன்னேற்றுவது கல்வி. அந்தக் கல்விக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கக்கூடியவகையில் 2012–2013 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தினைவிட 16.57 சதவீதம் கூடுதலாக வழங்கி, மொத்தத்தில் 16,965.30 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசினுடைய சார்பாக இந்த ஆண்டு கல்விக்கு ஒதுக்கியிருப்பதை புதிய தமிழகம் கட்சியின் சார்பாக முதற்கண் நான் வரவேற்கிறேன்.*

இவ்வளவு பெரிய தொகையை கல்வித் துறையின் சார்பாக தமிழகத்திலே வாழ்கின்ற இலட்சக்கணக்கான தமிழக மக்களுடைய கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்தோடு ஒதுக்கினாலும்கூட, நம்முடைய கல்வித் தரம் எந்த அளவுக்கு இருக்கிறது என்பது பல்வேறு விதமான கேள்விக் குறிகளை எழுப்புகிறது. ஏனென்று சொன்னால், இப்பொழுது பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபொழுது தமிழகத்திலே கல்வியினுடைய தரம், அரசினுடைய கல்வி நிறுவனங்களுக்கும், தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் இருக்கக்கூடிய வேறுபாடுகளை

எல்லாம் சுட்டிக்காட்டினார்கள். இது என்ன காரணத்தினால் இந்த வேறுபாடுகள் நடைபெறுகின்றன என்பதை நாம் ஆய்வு செய்தாக வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஏனென்று சொன்னால், அரசாங்கத்தினுடைய பள்ளிகளிலே பணிபுரியக்கூடிய ஒரு ஆசிரியருக்கு 40 ஆயிரம் ரூபாய், 50 ஆயிரம் ரூபாய் என்றெல்லாம் சம்பளம் கொடுக்கிறோம். ஆனால், வெறுமனே 10 ஆயிரம் ரூபாய், 15 ஆயிரம் ரூபாய் பெற்றுக்கொண்டு தனியார் பள்ளிகளில் பணிபுரியக்கூடியவர்கள், பயிற்சி அளிக்கக்கூடிய ஆசிரியர்களால் தனியார் பள்ளிகளில் அதிகமான தேர்ச்சி விகிதத்தைக் காட்ட முடிகிறது. அதிகமான முதல் மதிப்பெண் பெறக்கூடிய மாணவர்கள் உருவாக்கப்படுகின்றபொழுது அரசுப் பள்ளிகளிலே அது என்ன காரணத்தால் சாத்தியம் ஆகாமல் இருக்கிறது என்பதை நாம் ஆய்வு செய்தாக வேண்டிய நிலையிலே இருந்து கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 3—25

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கல்வித் தரம் குறைந்திருக்கிறது என்ற ஒரு கருத்தை வைத்தார். எதை வைத்து கல்வித் தரம் குறைந்திருக்கிறது என்கிற அளவீட்டை அவர் சொல்ல வேண்டும். கல்வித் தரம் என்று சொன்னால், அதனுடைய தரம் எந்த அளவுக்கு இருக்க வேண்டும் என்பதையும் அவர் குறிப்பிட வேண்டும். தமிழ்நாட்டினுடைய கல்வித் தரம், இந்தியாவில் அதிக அளவிலே ஒரு literary population என்று சொல்லக்கூடிய கல்வி அறிவில் முழுமையாகக் கல்வியறிவு பெற்றிருக்கக்கூடிய மாநிலங்களில் முதன்மையான ஒரு இடத்தை தமிழ்நாடு பெற்றிருக்கின்றது என்பதை மிக்க பணிவோடும், வணக்கத்தோடும் உறுப்பினர் மாண்புமிகு மருத்துவர் அவர்களுக்குச் சுட்டிக்காட்டிட விரும்புகின்றேன். இங்கே இருக்கின்ற சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், மாண்புமிகு

அமைச்சர் பெருமக்கள் உட்பட சற்றேறக்குறைய 90 சதவிகிதம் பேர் அரசுப் பள்ளிகளில் படித்தவர்கள்தான். நம்முடைய மருத்துவர்கூட அரசுப் பள்ளியில்தான் படித்திருப்பார்கள் என்று நான் கருதுகின்றேன். அப்படியிருக்கின்ற தருவாயில் அரசுப் பள்ளிகளையே மேலும் மேலும் குற்றம் சொல்லிக்கொண்டே இருக்கக்கூடாது. ஒரு சமூக அக்கறை என்பது இரு தரப்பிற்கும் இருக்க வேண்டும். ஆளும் கட்சிக்கும் இருக்க வேண்டும், எதிர்த் தரப்பிலே இருந்து குற்றம் சொல்கிறவர்களுக்கும் இருக்க வேண்டும். அந்த அக்கறையை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தினால், அதை இந்த அரசு, பள்ளிக் கல்வி அமைச்சகம் செய்து தருவதில் அக்கறையோடு செயல்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில ஆதாரங்களைக் கேட்டார்கள். ஆதாரம் என்பதை நான் எப்படி வெளிப்படுத்த முடியும்? தமிழகத்திலே 32 மாவட்டங்கள் இருக்கின்றன. ஒரு மாவட்டத்தில் 1–லிருந்து 5 ஆம் வகுப்புவரை உள்ள பள்ளிகளில் குறைந்தது 20–லிருந்து 30 பள்ளிகள் வரையிலும் பயிலக்கூடிய மாணவர்களுடைய எண்ணிக்கை பத்தைத் தாண்டவில்லை என்றுதான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு மருத்துவர். எந்த மாத்திரையைச் சாப்பிட்டால் side effect வரும்? இது கடந்த கால ஆட்சியிலே ஏற்பட்டிருக்கின்ற குறைபாடுகள். அந்தக் குறைபாடுகள் கொஞ்சம் கொஞ்சமாக நிவர்த்தி செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒரு நோய் என்று சொன்னால், அந்த நோய் உடனடியாகக் குணமாவதில்லை. குணமாவதற்கு சற்று கால அவகாசம் வேண்டும். அப்படி ஒரு கால அவகாசத்தைக் கடந்து, இரண்டாவது ஆண்டில் கல்வியில்

மறுமலர்ச்சியைக் கொண்டிருக்கின்ற ஒரு மாநிலமாக நம்முடைய தமிழக அரசு, நம்முடைய கல்வித் துறை திகழ்ந்துகொண்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்போதுமே நோய் நாடி என்றுதான் சொல்வார்கள். ஏனென்று சொன்னால், ஒரு நோயைச் சரியாகக் குறிப்பிட்டு, அதைச் சரியாக ஆய்ந்து, அது பற்றிய முழு விவரங்களைச் சேகரித்தால்தான் அதற்கு உண்டான சிகிச்சையை அளிக்க முடியும். அந்த அடிப்படையில் இன்றும், தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கக்கூடிய 20 முதல் 30 பள்ளிகளில், மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்களுடைய தொகுதியிலும் அதுபோன்ற நிலை இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இந்த நிலை அடுத்த ஆண்டும் அல்லது நம்முடைய எதிர்காலத்திலே வந்துவிடக்கூடாது, நீடித்துவிடக்கூடாது என்கிற அக்கறையோடுதான் நான் அதைக் குறிப்பிட விரும்புகின்றேன். இதை நான் ஏன் முக்கியமானதாகக் கருதுகின்றேன் என்று சொன்னால், ஆரம்பக் கல்விதான் மிக, மிக முக்கியமானது. தொடக்கக் கல்விதான் மிக, மிக முக்கியம். அதாவது உயர்நிலைப் பள்ளிக்கும், மேல்நிலைப் பள்ளிக்கும் மாணவர்கள் வந்துவிடுகிறார்கள். ஆனால் தொடக்கப் பள்ளியிலே மாணவர்களைச் சேர்ப்பதிலே பெற்றோர்களிடத்தில் ஒரு மிகப் பெரிய தயக்கம் இருக்கிறது. அரசுப் பள்ளியிலே என்ன குறை இருக்கின்றது என்பதை என்னுடைய ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியிலே இருக்கக்கூடிய பல ஆசிரியர்களையெல்லாம் அழைத்துப் பேசியபோது எல்.கே.ஜி., யு.கே.ஜி. வகுப்பிற்கு பிள்ளைகளைக் கொண்டுபோய் தனியார் பள்ளிகளிலே சேர்க்கின்றார்கள் என்று சொல்கின்றார்கள். அதன் பிறகு அவர்களை அரசுப் பள்ளிகளுக்குக் கொண்டுவர முடிவதில்லை. எனவேதான், நான் கடந்த முறை கேள்வி எழுப்பியபோதுகூட நம்முடைய அரசாங்கப் பள்ளிகளையும், மேல் நாட்டுப் பள்ளிகளுடைய தரத்திற்குச் சமமாக உயர்த்த வேண்டும் என்று சொன்னதன் பொருள், எல்லாவிதமான அடிப்படைக் கட்டுமானங்கள் கொண்டதாக இருக்க வேண்டும் என்பதுதான். ஒரு பள்ளி

என்று சொன்னால், நல்ல வகுப்பறைகள், குடிநீர் வசதிகள், கழிப்பறைகள், காவலர்கள், துப்புரவுப் பணியாளர்கள் உட்பட அனைத்துவிதமான கட்டுமானங்கள் செய்து தரப்பட வேண்டும். நாம் இரு மொழிக் கொள்கையைக் கடைப்பிடிக்கின்றோம். முழுவதுமாக தமிழ் வழிக்கே சென்றுவிட முடியுமா என்பது தெரியாது. எனவே, ஆங்கிலம் இருக்க வேண்டும், அதோடு தமிழும் இருக்க வேண்டும். அப்படி இருக்கின்றபோது இந்தத் தனியார் பள்ளிகளை நோக்கிப் படையெடுக்கக்கூடிய பெற்றோர்களுடைய மனப்பான்மையை எப்படித் தடுத்து நிறுத்துவது என்று சொன்னால், இப்பொழுதே, பாலர் பள்ளியிலிருந்தே, ஆங்கிலத்தைப் புகுத்த வேண்டும். அதுபோல, அரசாங்கத்தினுடைய எல்லாப் பள்ளிகளிலும் ஆங்கிலம் கற்பிக்க வேண்டிய நிலையை உருவாக்குவதற்கு உண்டான வகையிலே தமிழ்நாடு அரசின் சார்பிலே இப்போதிலிருந்தே நடவடிக்கை எடுத்தால்தான். எதிர்காலத்தில் ஆரம்பப் பள்ளிகளில் குழந்தைகள் சேர்வதை அதிகரிக்க முடியும். அரசு ஆரம்பப் பள்ளிகளில் குழந்தைகள் மிகவும் குறைந்துபோய்விட்டால், உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள எண்ணிக்கையும் குறைந்துபோய்விடும். மீண்டும் தனியார் கையே ஓங்கும். எனவே, அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும் என்பதுதான் என்னுடைய கவலை.

பிற்பகல் 3–30

அடுத்தது, தனியார் பள்ளிகளில் அதிகமான மதிப்பெண்கள் பெறுகிறார்கள் என்பதைப் பார்த்தோம். நாமக்கல், திருச்செங்கோடு போன்ற இடங்களில் உள்ள பள்ளிகளிலெல்லாம் அதிக மதிப்பெண்கள் பெறுகிறார்கள். நான் ஒரு வேண்டுகோளை வைக்கிறேன். பத்திரிகைகளில் முதல் மாணவர், இரண்டாவது மாணவர், மூன்றாவது மாணவர் என்றெல்லாம் பெரிய அளவிற்கு விளம்பரம் கொடுப்பது, தேவையில்லாமல் மாணவர்கள் மத்தியிலே ஒரு தாழ்வு மனப்பான்மையை உருவாக்குகிறது என்று கருதுகிறேன். ஏனென்று சொன்னால், ஒரு மார்க், 2 மார்க்குகளிலே ஒரு மாணவனுடைய முதல் தரத்தையும், இரண்டாவது தரத்தையும் தீர்மானிப்பது எந்தவிதத்திலும் சரியானதாக இருக்க முடியாது.

மேலும், நான் ஒன்றை உதாரணத்திற்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதுபோன்ற தனியார் பள்ளிகளில் அதிகமான மதிப்பெண்கள் பெற்றுச் செல்லக்கூடியவர்கள்

மருத்துவக் கல்லூரிகளிலே பெரிய அளவிற்கு வெற்றி பெறுவதில்லை. பொறியியல் கல்லூரிகளில் வெற்றி பெறுவது கிடையாது. தமிழகத்தில் இருக்கக்கூடிய பெரும்பாலான பொறியியல் கல்லூரிகளுடைய தேர்ச்சி விகிதம் 40%, 50%–ஐத் தாண்டுவது கிடையாது. எனவே, அப்படி இருக்கின்றபொழுது, இப்பொழுதெல்லாம் தனியார் பள்ளிகளில் படிக்கக்கூடியவர்கள் மட்டுமே தரம் உயர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்வதற்கும், விளம்பரப்படுத்திக்கொள்வதற்கும் வாய்ப்பளிக்க வேண்டியதில்லை. நான் சொல்ல விரும்புவது, தமிழ்நாடு அரசாங்கம் 16,000 கோடி ரூபாய் செலவிடுகிறது. ஒரு கோடி, இரண்டு கோடி ரூபாய் அல்ல. (குறுக்கீடு) சுமார் ரூ.17,000 கோடி. இவ்வளவு பெரிய தொகையைச் செலவு செய்தும்கூட, ஒருசில தனியார் பள்ளிகளை நாம் எதிர்கொள்ள முடியாமல் இருப்பது, ஏதோ ஒரு சிறிய அணுகுமுறையில், நமது பார்வையில் மாற்றம் கொண்டுவர வேண்டும் என்பதுதான் நான் வைக்கக்கூடிய வேண்டுகோள் என்று சொன்னால் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருக்குக் கொடுத்திருக்கின்ற கையேட்டைப் பார்க்கத் தவறிவிட்டார் என்றே கருதுகிறேன். நம்முடைய மாநிலத்தில் நான் ஏற்கெனவே கூறியதைப்போல* Trimester *என்றால் மூன்று;* Semester *என்றால் இரண்டு;* Trimester system*—முப்பருவக் கல்வி முறையைக் கொண்டுவந்து, தொடர் மதிப்பீட்டு முறையைப் பின்பற்றுகிறோம். இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் மருத்துவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று, மாநிலத்திலேயே முதலிடத்தைக்கூட பிடிக்கக்கூடியவர்கள், மருத்துவக் கல்லூரியிலே, பொறியியல் கல்லூரியிலே சேர்ந்தால்கூட மதிப்பெண்கள் குறைந்துவிடுகின்றன என்று சொல்கிறார்கள். ஆக, அதன் அடிப்படையில்தான் 2012–2013 ஆம் கல்வியாண்டில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு முப்பருவக் கல்வி முறையும், முழுமையான தொடர் மதிப்பீடு—ஆண்டு நிறைவில் அவர்களுக்கு மதிப்பீட்டை வழங்காமல்—தொடர்ந்து அவர்கள் ஒவ்வொரு காலகட்டத்தில் என்ன மதிப்பீடு எடுக்கிறார்கள் என்கிற அடிப்படையில் இந்தக் கல்வியாண்டு முறை புதுப்பிக்கப்பட்டு,*

2013–2014 ஆம் கல்வியாண்டில் 9 ஆம் வகுப்பிற்கும் இது விரிவுபடுத்தப்படுகிறது. ஒவ்வொரு பருவத்திற்கும் தனித்தனி பாட நூல்கள் வழங்கப்படுகின்றன. கல்விசார் செயல்பாடுகளுக்கு அப்பால் மாணவர்களின் முழுமையான திறன் வளர்ச்சியில் கவனம் செலுத்தப்படுகிறது. தேர்வு பற்றிய பயம் போக்கப்படுகிறது. 9 ஆம் வகுப்பு ஆசிரியருக்கு முழுமையான மற்றும் தொடர் மதிப்பீட்டு முறைக்கான பணியிடைப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது என்கிற செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: தனியார் பள்ளிகளில் அடிக்கடி, அதாவது 3 மாதம், 4 மாதங்களுக்கு ஒருமுறை பெற்றோர்களை அழைத்து, மாணவர்களுடைய தேர்ச்சி விகிதம், மாணவர்களுடைய performance பற்றி ஆய்வு செய்கிறார்கள். அரசாங்கப் பள்ளிகளிலே இன்னும் அதுபோன்ற முறை வந்திருக்கிறதா என்பது தெரியாது. எனவே, அதை ஆரம்பத்திலிருந்தே எல்.கே.ஜி.–யிலிருந்து, பாலர் பள்ளியிலிருந்து, அந்த முறையைத் துவக்குவது அரசாங்கப் பள்ளிகளிலே ஆசிரியர்களுக்குப் பொறுப்பை உண்டாக்கும். பல ஆசிரியர்கள் 50 கிலோ மீட்டர், 60 கிலோ மீட்டருக்கு அப்பாலிலிருந்து வருகிறார்கள். காலை 9–45–மணிக்கு வரவேண்டியவர்கள் 11–00 மணிக்கு வருகிறார்கள். 5–00 மணிக்குப் போக வேண்டியவர்கள் 4–00 மணிக்கே போகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கெல்லாம்தான் ஆசிரியர்களுக்குக் கலந்தாய்வு முறை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கலந்தாய்வு முறையிலே வெளிப்படையான மாறுதல் செய்யப்படுகிறது. இந்த வெளிப்படையான மாறுதலை வைத்து, அவர்களுக்குத் தேவையான இடத்தை அவர்களே தேர்ந்தெடுக்கக்கூடிய உரிமையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்திருக்கிறார்கள். அவற்றோடு மாத்திரமல்ல,

மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, 2012–2013 ஆம் ஆண்டில் 320 பள்ளிகளில் ஆங்கிலவழிக் கல்வி துவக்கப்பட்டிருக்கிறது. 2013–2014–ல் 3,000 தொடக்கப் பள்ளிகளில் ஆங்கிலவழிக் கல்வி துவக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 300 உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலவழிக் வகுப்புகள் துவங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்ற செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

பிற்பகல் 3–35

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல பள்ளிகளில் இன்னும்* Infrastructure, *அதாவது, கட்டமைப்பு வசதிகள், மாணவர்கள் அமர்வதற்கு பெஞ்சுகள், டெஸ்குகள் இல்லை. அந்தக் குறை பற்றி முழுவதுமாக என்னால் பட்டியல் கொடுக்க முடியும். பட்டியலை நான் காண்பிக்கத் தயாராக இருக்கிறேன். அவை எந்தெந்த பள்ளிகள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களே நேரடியாகச் சென்று, ஆய்வு செய்து உடனடியாக அந்தக் குறைபாட்டை நீக்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் பள்ளிகளில் அதிகமான கட்டமைப்புகளைப் பூர்த்தி செய்திருக்கிற மாநிலம். (மேசையைத் தட்டும் ஒலி) அங்கொன்றும், இங்கொன்றும் சில இடங்களில் அவ்வாறு இருக்கலாம். அவற்றை நிவர்த்தி செய்வதற்குரிய பணிகள் மேற்கொள்ள நபார்டு திட்டம் பயன்படுத்தப்படுகிறது. இதுவரை இல்லாத அளவுக்கு கடந்த ஆண்டில் நான் ஏற்கெனவே கடந்த முறை புள்ளிவிவரங்களை உங்களுக்குத் தெரிவித்திருந்தேன்——பல பள்ளிகளில் கட்டமைப்பைப் பூர்த்தி செய்து, கழிவறை, மேசை என போதுமான வசதிகளைப் பூர்த்தி செய்திருக்கிற மாநிலம்*

தமிழகம் மட்டும்தான் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *டாக்டர் கிருஷ்ணசாமி, உங்கள் உரையை முடியுங்கள்.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் கல்வியாண்டில் நலிவுற்ற மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட வகுப்பினருக்கு அருகிலுள்ள தனியார் பள்ளிகளில் 25 சதவிகித இட ஒதுக்கீடு வழங்க மத்திய அரசு ஏற்கெனவே ஆணை பிறப்பித்தது.* **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் 15 நிமிடங்களுக்கு மேல் பேசியாகிவிட்டது. உங்கள் உரையை முடியுங்கள்.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** இந்தக் கேள்வியை எழுப்புகிறவர் நீங்கள். நீங்கள்தான் அந்தக் குற்றச்சாட்டை எழுப்புகிறீர்கள். ** குற்றச்சாட்டை எழுப்புகின்ற காரணத்தினால் ஆதாரத்தைக் கேட்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஆதாரமில்லாமல் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் ஆதாரத்தைக் கொண்டு வந்து கொடுங்கள். அதற்குப் பிறகு பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடு) நீங்கள்*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

*உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் கதிரவன். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் உட்காருங்கள். நேரம் ஆகிவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேச ஆரம்பித்து 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) இல்லை, 15 நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டது, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கதிரவன், பேசுங்கள். (குறுக்கீடு) 20 நிமிடங்கள் அல்ல. நீங்கள் எந்த ஆதாரமும் இல்லாமல் பேசிய பேச்சுகளை மட்டும் நீக்குகிறேன். (குறுக்கீடு) அதை மட்டும்தான் நீக்கியிருக்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) ** என்றெல்லாம் சொல்லக்கூடாது. டாக்டர் கிருஷ்ணசாமி, பேரவைத் தலைவருடைய செயலை நீங்கள் விமர்சனம் செய்தால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *டாக்டர் கிருஷ்ணசாமி, உட்காருங்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். மாண்புமிகு பேரவை முன்னவர் பேசுகிறார் அல்லவா? (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு பேரவை முன்னவர் பேசுகிறார், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதுமாதிரி இல்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுவது மாதிரி எல்லாம் இல்லை, நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உரையாற்றுகிறபொழுது 25 சதவிகிதத்தை நலிந்த பிரிவினருக்கு ஒதுக்க வேண்டுமென்று விதி இருக்கிறது என்று சொன்னார்கள். ஏற்கெனவே அவர் அனுமானத்தில்தான் பேசினார். அனுமானத்தில் பேசக்கூடாது. ** கற்பனைக் கதையை இங்கே சொன்னால் அதை எப்படி நம்ப முடியும்? (குறுக்கீடு)*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி, அதற்குத்தான் நீங்கள் ஆதாரத்தைக் கொடுங்கள் என்று சொல்கிறேன். (குறுக்கீடு) ஆதாரம் கொடுங்கள். அவைக் குறிப்பிலே ஏற்றுகிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு உறுப்பினர் அனுமானத்தின்பேரில் பேசியதைத்தான் மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கினார்கள். ** அவர் அனுமானத்தின் பேரில் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவை முன்னவர் பேசும்போது உறுப்பினர் பேசுவதெல்லாம் அவைக் குறிப்பிலே ஏறாது.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அனுமானமாகச் சொல்லக்கூடாது. ** அனுமானமாக அவர் சொன்ன வார்த்தைகளைத்தான் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்.*

பிற்பகல் 3–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் ஆதாரம் இல்லாமல் பேசிய வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. நீங்கள் ஆதாரத்தைக் கொண்டு வந்து கொடுங்கள், பிறகு பேசலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளினுடைய சேர்க்கையில் 25 சதவிகித ஒதுக்கீடு, 'மே' மாதத்தில் மெட்ரிக் பள்ளி இயக்குநர்மூலம் கால அட்டவணை தந்து செயல்படுத்தப்படவுள்ளது. மேலும், இதனுடைய கண்காணிப்புப் பணி நடைபெற்று வருகிறது என்கின்ற செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் பேரவைத் தலைவருடைய நடவடிக்கையை விமர்சனம் செய்து பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) அவை எதுவும் அவைக் குறிப்பில் இடம் பெறாது. (குறுக்கீடு) அவையெல்லாம் அவைக் குறிப்பில் இடம் பெறாது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் வெளிநடப்புச் செய்வது என்பது உங்களுடைய விருப்பம். அதற்கு நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கேள்வியை மட்டும் நான் மாண்புமிகு உறுப்பினரிடம் கேட்டுக்கொள்கின்றேன். ** அதற்கு முன்னால் உறுப்பினர் ஒரு அனுமானமாக எடுத்துக்கொண்டு, ** என்று சொன்னால், எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? (குறுக்கீடு) இதைத்தான் நான் சொன்னேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி பேசியது முழுவதும் நீக்கப்படவில்லை. அவர் அனுமானமாக ** என்று ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் பேசிய அந்தக் குற்றச்சாட்டுதான் நீக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: இல்லை, அதற்கான ஆதாரத்தை மாண்புமிகு உறுப்பினர் கொண்டு வந்து கொடுத்தார் என்றால் அது அவைக் குறிப்பில் இருக்கும்; ஆதாரம் கொடுக்கப்படவில்லையென்றால் மாண்புமிகு பேரவைத் தலைவரின் முடிவுப்படி அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) டாக்டர் க. கிருஷ்ணசாமி உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது, நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதாரத்தைக் கொடுத்தால், அவைக் குறிப்பில் ஏற்றுங்கள், ஆதாரத்தைக் கொடுக்கவில்லையென்றால் அவைக் குறிப்பிலிருந்து நீக்குவது குறித்து மாண்புமிகு சட்ட மன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் பரிசீலனை செய்வார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முன்பே இதற்கான உத்தரவை நான் கொடுத்துவிட்டேன். (குறுக்கீடு) முன்பே அதற்கான உத்தரவை நான் கொடுத்துவிட்டேன். ஆதாரத்தைக் கொண்டு வந்து கொடுங்கள். ஆதாரத்தைக் கொடுத்தால் அந்தக் குற்றச்சாட்டு அவைக் குறிப்பில் இருக்கும், இல்லையென்றால் அந்தக் குற்றச்சாட்டு அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி உட்காருங்கள். திரு. பி.வி. கதிரவன், நீங்கள் பேசுங்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) திரு. பி.வி. கதிரவன், நீங்கள் பேசுங்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் எனது வணக்கத்தை உரித்தாக்கிக்கொள்கிறேன். (குறுக்கீடு)

(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேறினார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள், தே.மு.தி.க. உறுப்பினர்கள் இதற்கு முன்பு என்ன உத்தியைக் கையாண்டார்களோ, அதே உத்தியைக்

கையாண்டு, முழுவதும் பேசிவிடுவது, பேசி முடித்ததற்குப் பின்பு (குறுக்கீடுகள்) எங்களுக்குப் பேச வாய்ப்புக் கொடுக்கவில்லை என்று கூறி வெளிநடப்புச் செய்வது என்று செய்திருக்கிறார். இப்போது அவர்கள் திருந்தியிருக்கிறார்கள். (குறுக்கீடு) இப்போது டாக்டர் க. கிருஷ்ணசாமி அதே உத்தியைக் கையாள்கிறார். (குறுக்கீடுகள்) இனிமேல் அடுத்த முறை இந்த உத்தியை அவர் கையாண்டால், இதற்கு முன்பு அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டதோ அதே நடவடிக்கையை இவர்மீதும் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நல்ல Certificate தான் மாண்புமிகு அமைச்சர் கொடுத்திருக்கிறார். (குறுக்கீடு) இல்லை, (குறுக்கீடு) நல்ல வழியைத்தான் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் உங்களுக்கு நல்ல Certificate-தான் கொடுத்திருக்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் தே.மு.தி.க. உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள் என்ற நல்ல Certificate–ஐதான் கொடுத்திருக்கிறார். (குறுக்கீடு) இல்லை, நல்ல Certificate–ஐதான் கொடுத்திருக்கிறார். அதை நீங்கள் தவறாகச் சொல்கிறீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் தே.மு.தி.க. உறுப்பினர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள் என்ற நல்ல Certificate–ஐதான் கொடுத்திருக்கிறார். (குறுக்கீடு) திரு. எல். வெங்கடேசன், என்ன வாய்ப்புத் தர வேண்டுமென்று சொல்லுங்கள்? என்ன வாய்ப்பு?

திரு. எல். வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கையின் விவாதம் 1–4–2013–லே தொடங்கியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. பி.வி. கதிரவன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் குற்றச்சாட்டு சொல்லியிருந்தால் நீங்கள் சொல்லலாம், குற்றச்சாட்டு ஒன்றும் இல்லை, நீங்கள் என்ன விளக்கம் சொல்கிறீர்கள்?

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாடு சிறந்த நாடாக விளங்க வேண்டுமென்றால், கல்வி ரீதியாகத்தான் சிறந்த நாடாக மாறும் என்பதை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நன்கு உணர்ந்து பள்ளிக் கல்வித் துறையை. . . . (குறுக்கீடு)

2013 மே 10]

பிற்பகல் 3–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் தே.மு.தி.க. உறுப்பினர்களுக்கு வாய்ப்புக் கொடுத்தேன், அதை நீங்கள் வேறு விதமாகப் பயன்படுத்துகிறீர்கள். ஒரே வரியில் சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர், திரு. வெங்கடேசன், உட்காருங்கள். (குறுக்கீடு) என்ன சொல்லுங்கள், ஒரே நிமிடத்தில் பேசி முடிக்க வேண்டும். நீங்கள் ஆரம்பத்திலிருந்து கதையையெல்லாம் பேசக்கூடாது.

திரு. எல். வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏப்ரல், 1, 2 மற்றும் 3 ஆகிய நாட்களில் பேரவையில் விவாதத்தில் கலந்துகொண்டு நாங்கள் அமைதியான முறையிலே அவையினுடைய நடவடிக்கைகளில் ஈடுபட்டோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேசன், அவையெல்லாம் முடிந்துபோன விஷயம்.

திரு. எல். வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள், எங்களுடைய கருத்தைப் பதிவு செய்ய வேண்டும், அல்லவா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன கருத்து?

திரு. எல். வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் ** என்று சொன்ன வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. ** என்று சொன்ன வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

திரு. எல். வெங்கடேசன்: ஏப்ரல் 1, 2 மற்றும் 3 ஆகிய நாட்களில் உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் நாங்கள் அமைதியாகக் கலந்துகொண்டோம். எங்களுடைய விவாதத்தை ஆரோக்கியமான முறையில் இந்த அவையில் வைத்தோம். கூட்டுறவுச் சங்கத் தேர்தலுக்குப் பிறகுதான் எங்களுடைய கருத்தை வலியுறுத்தி நாங்கள் வெளிநடப்புச் செய்தோமேயொழிய, எந்தவொரு சூழ்நிலையிலும் தே.மு.தி.க. இந்த

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அவையினுடைய கண்ணியத்தையும், மரபுகளையும் மீறுகின்ற வகையில் நடந்துகொள்ளாது, நடந்துகொள்ளவும் இல்லை என்பதை இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், நீங்கள் பேசுங்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கல்வித் துறைக்காக இந்த நிதியாண்டில் 16,965.30 கோடி நிதியினை ஒதுக்கி, இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் நிதியினை ஒதுக்கி தமிழகத்தில் மனித வளத்தை மேம்படுத்துவதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறந்த திட்டங்களையெல்லாம் அறிவித்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, மாணவச் செல்வங்களுக்குத் தேவையான அனைத்துத் திட்டங்களையும் அறிவித்து, திட்ட உதவிகளைப் பெறுகின்ற மாணவச் செல்வங்களே பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதனடிப்படையில் மாணவர் சேர்க்கை இந்த ஆண்டில் உயர்ந்துகொண்டிருக்கிறது. மாணவர்களுடைய சேர்க்கை ஒவ்வோர் ஆண்டும் உயர்ந்துகொண்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே 2011–2012 ஆம் ஆண்டு 49,369 ஆசிரியர்களையும், 2012–2013 ஆம் ஆண்டு 13,756 ஆசிரியர்களையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பணி நியமனம் செய்திருக்கிறார்கள். ஒரே நேரத்தில், ஒரே நாளில் 20,920 ஆசிரியர்களை நியமனம் செய்து, வரலாற்றுச் சிறப்புமிக்க உத்தரவை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பிறப்பித்திருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதனை நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தொலைநோக்குத் திட்டம், 2023. பள்ளி மாணவர்கள்—இடைநிற்றல் இருக்கக்கூடாது என்பதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள்—ஒவ்வோர் ஆண்டும் நிதி ஒதுக்கி—2013–2014 ஆம் ஆண்டில் ரூ.353.56 கோடி நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பள்ளிகளிலே புதிய சாதி பேதமற்ற சமத்துவ சமூகம் (Casteless society) என்ற திட்டத்தையும், பல்லூடகப் பாதுகாப்பு (Cyber Safety) என்ற திட்டத்தையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். ஏனென்றால்,

மாணவர்களுக்கு மன உளைச்சல் இருக்கக்கூடாது என்பதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இத்தகைய திட்டங்களையெல்லாம் கொண்டுவந்திருக்கிறார்கள்.

ஒரு காலத்தில், பள்ளியிலே நீதி போதனை வகுப்பு என்ற ஒரு வகுப்பு இருக்கும். ஆனால் இப்பொழுதெல்லாம் அந்த வகுப்பு இல்லை. வருங்காலங்களில் அந்த நீதி போதனை வகுப்பை, ஒரு மணி நேரம், வாரத்திற்கு இரண்டு நாட்கள், மீண்டும் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளியிலே தகவல் தொழில்நுட்பத்திலே புதிய திட்டங்களையெல்லாம் அறிவித்திருக்கிறார்கள். விழுப்புரம் மாவட்டத்தில் முதல் முறையாக முன்னோடித் திட்டமாக ரூ.10 கோடியே 3 இலட்சம் நிதி ஒதுக்கி, 1,329 தொடக்கப் பள்ளிகளைக் கணினிமயமாக்கும் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். அதனைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, 2012–2013 ஆம் ஆண்டில் ஆங்கில வழிப் படிப்பிற்காக மாவட்டத்திற்கு 10 பள்ளிகள்வீதம் 640 பள்ளிகளைத் தேர்ந்தெடுத்து ஆங்கிலப் பள்ளிகளாக மாற்றியிருக்கிறார்கள்.

பிற்பகல் 3–50

அதேபோன்று, கள்ளர் சீரமைப்புத் துறையில் இருக்கின்ற பள்ளிகளில், மதுரை, தேனி, திண்டுக்கல் போன்ற மாவட்டங்களில், மாவட்டத்திற்கு தலா ஐந்து ஆங்கிலப் பள்ளிகளைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இன்று, வெளிநாட்டை விஞ்சுகின்ற அளவுக்கு கல்வித் தன்மையை வளர்க்க வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திட்டமிட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, தனியார் பள்ளிகளுக்கு நிகராக இன்று அரசுப் பள்ளிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. பள்ளிக் கட்டடங்கள், வகுப்பறைகள், சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர், கழிப்பறைகள், ஆசிரியர் நியமனம், ஆய்வகம், விளையாட்டு மைதானம், நூலகப் பகுதி போன்ற அனைத்தையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இதனை அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் இயக்கம் மனதாரப் பாராட்டுகிறது.

எங்களது உசிலம்பட்டி தொகுதியில் பெண்களுக்கென்று இதுவரை தனிப் பள்ளி இல்லை. மேல்நிலைப் பள்ளியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த நிதி ஆண்டிலேயே உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிறைய பள்ளிகளிலே சுற்றுச் சுவர்கள் இல்லாமல் இருக்கின்றன. அதைப் போக்குகின்ற வகையிலே, வருங்காலத்தில் சுற்றுச் சுவர்கள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பள்ளிக் கல்வித் துறையில், கடந்த நிதியாண்டிலும் நான் இதைச் சொல்லியிருக்கிறேன். அதாவது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் முந்தைய ஆட்சிக் காலத்தில் 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்புவரை படிக்கின்றவர்களுக்கு பாடம் கற்பித்த இடைநிலை ஆசிரியர்களை மாற்றி, 10–வது வகுப்புவரை பட்டதாரி ஆசிரியர்களாக நியமித்தார்கள். அதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, அரசுப் பள்ளிகளெல்லாம் அந்த அரசாணையை மதித்து, 6–வது முதல் 8–வது வகுப்புகளில் படிக்கின்றவர்களுக்காக ஆசிரியர்களாக பட்டதாரிகளுக்கு வேலை கொடுத்துவிட்டார்கள். ஆனால், அரசு உதவி பெறும் பள்ளிகளிலும், தனியார் பள்ளிகளிலும் பட்டம் படித்தவர்களுக்கு, இடைநிலை ஆசிரியர்களாக இருந்தவர்கள், பட்டப் படிப்பு படித்த ஆசிரியர்களுக்கு இதுவரையிலும் வேலைவாய்ப்பு அளிக்கப்படாமல் இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்ல விரும்புகிறேன். இடைநிலை ஆசிரியர்களாகவே இன்னும் இருந்து வருகிறார்கள். அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுத்து பட்டதாரி ஆசிரியர்களாகப் பணியில் அமர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே அரசு ஆணையிட்டும்கூட, தனியார் பள்ளிகளிலும், அரசு உதவி பெறும் பள்ளிகளிலும், அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கப்படவில்லை. அதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கதிரவன், உரையை முடியுங்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மதுரை மாவட்டம், உசிலம்பட்டியில் அரசு மேல்நிலைப் பள்ளியிலே 12 ஏக்கர் பரப்பளவிலே

விளையாட்டு மைதானம் இருக்கிறது. அதில் அரங்கங்கள் எதுவும் கட்டப்படவில்லை. மாவட்டத்தினுடைய விளையாட்டு விழாக்களையே அங்கு நடத்தலாம். அதற்கான இடம் இருக்கிறது. இதனைக் கருணைகூர்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, இளைஞர் நலனிலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளையாட்டு மேம்பாட்டிற்கென்று பல நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்கள். அனைத்துப் பள்ளிகளிலும் மாணவர்களுக்கு சதுரங்கம் விளையாடுவதற்கு வசதி செய்யப்பட்டு, தமிழகத்தில் உலக சதுரங்க விளையாட்டுப் போட்டியை நடத்துவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 29 கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பது இன்று தமிழகத்திற்குப் பெருமையளிக்கிறது.

அடுத்து, தமிழர்களின் வீர விளையாட்டான கபடிப் போட்டி. கடந்த ஜனவரி மாதம் 39–வது தேசிய ஜுனியர் ஆண்கள் மற்றும் பெண்கள் கபடி Championship போட்டி மதுரையில் நடைபெற்றது. அதில் 32 மாநிலங்களைச் சேர்ந்த வீரர்கள் கலந்து கொண்டார்கள். பெண்கள் பிரிவில், தமிழகத்தைச் சேர்ந்த பெண்கள், கபடிப் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றிருக்கிறார்கள். 35 ஆண்டுகளுக்குப் பின்னால் தங்கப் பதக்கம் பெற்றிருக்கிறார்கள். அந்த விளையாட்டு வீராங்கனைகள் மாண்புமிகு முதல்வர் அவர்களை நேரில் சந்தித்து ஆசி பெற ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. பி.வி. கதிரவன்: தமிழகத்தின் பாரம்பரிய விளையாட்டான கபடிப் போட்டியைப் பொறுத்தவரையில், உலகக் கோப்பை 2014–ஐ இந்த முறை நடத்துவதற்கு மத்திய அரசு ஆணையிட்டிருக்கிறது. அதனை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதியோடு தமிழகத்திலே நடத்துவதற்கு, அதிலும் குறிப்பாக 2014 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24 ஆம் தேதி நடத்துவதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மதுரை மாவட்டத்திலே டாக்டர் எம்.ஜி.ஆர். விளையாட்டரங்கம் இருக்கிறது. அனைத்து விளையாட்டுச் சங்கங்களின் கூட்டமைப்புகளும் சேர்ந்து மறைந்த சிவந்தி ஆதித்தன் அவர்களுக்குச் சிலை வைக்க வேண்டுமென்று முழுமனதோடு இருக்கின்றன. தமிழக அரசு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அந்த மைதானத்திற்கு முன்பு ஓர் இடம் வழங்கி, அதைச் சிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அவர் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் துணைத் தலைவராக இருந்திருக்கிறார். இந்திய கைப்பந்து விளையாட்டுச் சங்கத் தலைவராகவும் இருந்தார்.

பிற்பகல் 3—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கதிரவன், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள், நேரம் அதிகமாகிவிட்டது. (குறுக்கீடு) திரு. கதிரவன், உட்காருங்கள்.

திரு. பி.வி. கதிரவன்: எனவே, சிவந்தி ஆதித்தன் அவர்களின் சிலையைத் திறக்க கருணை காட்ட வேண்டும் என்று கேட்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, என் உரையை நிறைவு செய்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள் பேசுகிறபோது, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தலையிட்டு, உறுப்பினர் யூகத்தின் அடிப்படையில் சொன்ன குற்றச்சாட்டு அவைக் குறிப்பில் இருக்காது; அவர் ஆதாரம் கொண்டுவந்து கொடுத்தால் அவைக் குறிப்பில் இருக்கும் என்று பரிந்துரை செய்தது மட்டும் அவைக் குறிப்பில் இருக்கும். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசியது, நான் பேசியது உட்பட மற்றவை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ் அவர்கள்.

***Dr. (Tmt.) NANCY ANN CYNTHIA FRANCIS:** Hon'ble Speaker and my most beloved Amma, I thank the Hon'ble Speaker and my beloved Amma for giving me this opportunity to say a few words on the School

Education Demand. For a nation to grow and develop education is foremost and a great leader like our beloved Amma has taken great care to see that every child in Tamil Nadu gets good, quality education with universal access to become a strong nation. This is revealed in the syllabus and the teaching methods and evaluation methods that you, Amma have instituted. All the schemes to prevent drop-outs from schools and also to encourage education of the girl child reaching out to the remotest village are from the great love our beloved Amma has for the people of Tamil Nadu. Every detail regarding free textbooks, notebooks, uniforms, footwear, educational kits, laptops have been taken care of by you, Amma. Thank you Amma.

There are 28 Anglo-Indian Higher Secondary Schools and 5 Anglo-Indian High Schools in Tamil Nadu which cater to the children of the Anglo-Indian Community and to other children as well. The Government of Tamil Nadu under the dynamic leadership of our beloved Amma (Thumping of desks) introduced the fee compensation grant for the Anglo-Indian children in the year 1993-1994. The grant is given at the rate of Rupees Fifty per month per child for standard One to Ten and Rupees Hundred per month per child for Standards Eleven and Twelve. This amount is being disbursed from the year 1993-1994 onwards. We request you, beloved Amma, to kindly consider increasing the amount of this grant and also another fact is these Anglo-Indian children come from financially constrained family background and I request you, beloved Amma, to kindly consider including all these Anglo-Indian children in all the schemes which you have announced by your generous heart, namely free uniforms, textbooks, notebooks, educational kits, footwear, laptops, bicycles, etc. It will be a real boon to the Community. Hon'ble Speaker, with your permission I place my humble request for the Anglo-Indian children and I request the Hon'ble Minister for School Education to place it before my beloved Amma. Nanri, Vanakkam.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.*

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"செந்தமிழே! உயிரே! நறுந் தேனே!
செயலினை மூச்சினை உனக்களித் தேனே
நைந்தா யெனில்நைந்து போகுமென் வாழ்வு
நன்னிலை உனக்கெனில் எனக்குந் தானே!"

என்று தமிழாய் வாழ்கிற தன்னிகரில்லா மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் எனது நெஞ்சார்ந்த நன்றியறிதலைத் தெரியப்படுத்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண், பெண் என இனம் இரண்டு. இயல், இசை, நாடகம் எனத் தமிழ் மூன்று. அறம், பொருள், இன்பம், வீடு எனப் பொருள் நான்கு. மெய், வாய், மூக்கு, கண், காது எனப் புலன் ஐந்து. இனிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கார்ப்பு, கரிப்பு, புளிப்பு என சுவை ஆறு. சரிகமபதநி எனச் சுரம் ஏழு. வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு, வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு என திசை எட்டு. அற்புதம், சினம், கருணை, இழிவு, சாந்தம், இன்பம், அச்சம், உவகை, வீரமென ரசம் ஒன்பது. இறை ஒன்று, அந்த இறைதான் எங்கள் மாண்புமிகு அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) இறையருளாய் விளங்கும் மாண்புமிகு அம்மாவை நான் வணங்குகிறேன்.

பிற்பகல் 4—00

மூன்று தாய்கள் இந்த ஊருக்கும், உலகத்திற்கும் என்னை அடையாளப்படுத்தினார்கள். முகம் தந்தவர் என்னைப் பெற்ற தாய். முகவரி தந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி என்கிற தமிழகத்தின் தாய். (மேசையைத் தட்டும் ஒலி) முகவரி தந்து அடையாளப்படுத்தினார்; வானத்தை அறிமுகப்படுத்தினார்; சிறகை எனக்குத் தைத்துக் கொடுத்தார்; பறக்கக் கற்றுக் கொடுத்தார்; வாழ்க்கையின் அர்த்தத்தைச் சொல்லிக் கொடுத்தார்; இந்த உயரத்தை எனக்குத் தந்தார்; எல்லாமாகி நிற்கிற தாயாக, தந்தையாக, தாயுமானவராக விளங்குகிற மாண்புமிகு புரட்சித் தலைவி என்கிற மனித நேயப் பற்றுள்ள தலைவி அம்மா என்கிற தாய்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

காலமெல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய காலடியில் அமர்ந்து அவருடைய புகழைப் பாட வேண்டும். எனக்கான காலத்தையும் மாண்புமிகு அம்மா காலடியில் வைக்க வேண்டுமென்பதற்காக நாளும், பொழுதும் பாராமல், அஸ்தமனம், உதயம் என்று பாராமல், இரவு பகல் என்று பாராமல், அவரது புகழைப் பாடிக் கொண்டே இருக்க வேண்டுமென்று எனக்குத் தமிழைக் கற்றுக் கொடுத்தவர் தமிழ்த் தாய். இந்த மூன்று தாய்க்குமே என் முதல் வணக்கத்தைப் பணிவுடனும், அடக்கத்துடனும் நான் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே, எப்பிறவி எடுத்தாலும் தப்பாமல் உங்களை வணங்கும் பாக்கியம் ஒன்று போதும் தாயே. அம்மா, நீங்கள் ஒரு பல்கலைக்கழகம். அதில் ஆரம்பப் பாடசாலை மாணவன் நான். ஆகவேதான், பள்ளிக் கல்வித் துறை அமைச்சராக எனக்கு ஒரு வாய்ப்பை வழங்கியிருக்கிறீர்கள். தங்களையே நம்பி கால் நூற்றாண்டு காலமாக கடந்து வந்த பாதையை நான் நன்றியோடுத் திரும்பிப் பார்க்கிறேன். தேசத்தின் வரைபடத்தில் எங்கோ ஓர் மூலையில் ஒளிந்திருக்கும் ஒரு கிராமத்தின் கிளைக் கழகச் செயலாளரின் மகன் நான்.

அறியாமை, வெட்கம், யாரிடமும் அணுகாதது என்பதைத் தவிர வேறு எதுவும் தெரியாத அப்பாவி இளைஞனாக, சென்னை பச்சையப்பன் கல்லூரியில் வந்து சேர்ந்ததில் தொடங்கி, மாண்புமிகு அம்மா உங்கள் காலடியின் பாதங்களை நோக்கியே என் வாழ்க்கை நகர்கிறது.

பச்சையப்பன் கல்லூரியின் மாணவரணித் தலைவராகப் படிப்படியாக தன்னிகரில்லாத தாயின் கருணையால் வளர்ந்து, எனது 27 வயதில் 'வடக்கை வெல்லும் தெற்கு' என்கிற உங்கள் வாழ்க்கை வரலாற்றை காவிய நடையில் நான் எழுதியதைப் பார்த்து அளவில்லாத மகிழ்ச்சியை நீங்கள் தெரிவித்தீர்கள்.

திருமணம் செய்துகொண்டு, இந்த எளியவன், இந்தத் தொண்டன் தங்களிடம் ஆசீர்வாதம் பெறுவதற்காக வந்தபோது நீங்கள் கொடுத்த இரண்டு மிகப் பெரிய வெள்ளிக் குத்துவிளக்குகள் எங்கள் வீட்டின் இருட்டை அகற்றியிருக்கின்றன. எங்கள் வீட்டின் இருட்டை மாத்திரமல்ல, எங்கள் வாழ்க்கையின் இருட்டையும் மாண்புமிகு அம்மா நீங்கள் கொடுத்த விளக்குகள்தான் விரட்டியிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

தாங்கள் பிறந்த அதே பிப்ரவரி 24 புண்ணிய நாளில் எனக்கு இரண்டாவது பெண் குழந்தை பிறந்தபோது அம்மா நீங்கள் அந்தக் குழந்தைக்கு 'ஸ்ரீஜெயா' என்று பெயர் சூட்டியபோது, அகத்திலிருந்து ஆனந்தக் கண்ணீர், குற்றாலத்திலிருந்து கொட்டுமே தண்ணீர் அதைப்போல எங்கள் கண்களிலிருந்த கண்ணீரைக் கண்டு நீங்கள் மெச்சிப்போனீர்கள்.

கழகத்தின் சொற்பொழிவாளராக 5 ஆண்டு காலம், 10 ஆண்டு காலம் இலக்கிய அணியின் துணைச் செயலாளராக, 6 ஆண்டு காலம் இலக்கிய அணியின் செயலாளராகப் பணி செய்ய பணிக்கப்பட்டேன். தொடர்ந்து வந்தது தேர்தல். அது பொதுத் தேர்தல். 2011–ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் மனிதாபிமானமிக்க தலைவர், மாசற்ற மக்கள் தலைவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் பொற்பாதங்கள் பதிந்த அருப்புக்கோட்டை மண்ணிற்கு என்னை அனுப்பினீர்கள். துரோகி தூக்கியடிக்கப்பட வேண்டும். துரோகி தோற்கடிக்கப்பட வேண்டும். எம்.ஜி.ஆரால் வளர்ந்த ஒருவர், எம்.ஜி.ஆர். இயக்கத்தால் உருவான ஒருவர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் உப்பைத் தின்று உருவான ஒருவர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவிற்கும், புரட்சித் தலைவருக்கும் எதிராக, துரோகியின் கூடாரத்தில் நின்றுகொண்டிருக்கும் ஒருவரைத் தோற்கடிக்க வேண்டுமென்று நீங்கள் அனுப்பியபோது, மாண்புமிகு அம்மா அன்றைய நேர்காணலில் உங்களுக்குச் சொன்னதை நான் இன்று பதிவு செய்கிறேன்.

'செத்துப்போய்விட்டேன் என்ற தகவல் வருமேதவிர, தோற்றுப்போய்விட்டேன் என்ற தகவல் வராதம்மா' என்று நான் உங்களிடத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) நம்பிக்கையோடு சொன்னதை நான் அருப்புக்கோட்டை மண்ணை அடைந்தபோது, உங்களுடைய அருளால்; உங்களுடைய செல்வாக்கால்; உங்களுடைய வார்த்தையால்; உங்களுடைய அனுக்கிரகத்தால்; உங்களுடைய ஆசியால் அத்தனையும் வெற்றி வாய்ப்பாகக் கிடைத்தது. 30 ஆண்டுகளுக்குப் பிறகு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அருப்புக்கோட்டை மண்ணை கைப்பற்றி இந்த எளியவனை சட்டமன்ற உறுப்பினராக ஆக்கி நீங்கள் அழகுபார்த்தீர்கள்.

நாட்கள் நகர்ந்தன. நாட்காட்டி தன்னுடைய நாட்காட்டி ஏடுகளை ஒவ்வொன்றாக உதிர்த்துக் கொண்டே சென்றது. கழகத்தின்

காவல் அரண்களில் ஒன்றான கழக இளைஞர் பாசறை, இளம்பெண்கள் பாசறையினுடைய செயலாளராக என்னைப் பணி செய்ய வேண்டுமென்ற ஓர் உயர்ந்த சந்தர்ப்பத்தை, உயர்ந்த வாய்ப்பை உருவாக்கித் தந்தீர்கள். அதன் பிறகு பணி செய்து கிடந்த எனக்கு, மாதங்கள் உருண்டோடிக் கொண்டிருந்த ஒருபொழுதில், அலைபேசி வழியாக அவசரச் செய்தி வந்தது. செய்தி என்னவென்று கேட்டால், 'தமிழக அரசின் தலைமைக் கொறடா' என்ற உயர்ந்த வாய்ப்பை வழங்கினீர்கள். எனக்குள் எத்தனையோ மாற்றங்கள். எப்போதும் என்னுடைய சொந்தக் காரில் போய்க்கொண்டிருந்த நான் அல்லது நண்பர்கள் காரில் போய்க் கொண்டிருந்த நான், முதல் முதலாக அரசு காரில், அதுவும் சிவப்பு விளக்கு எரிய, பணி செய்ய காத்திருக்கும் பணியாளர்கள், கடமையாற்றக் காத்திருக்கும் கடைநிலை ஊழியர்கள், என்னைப் பாதுகாக்க 9 m.m. பிஸ்டலோடு காத்திருக்கும் மெய்க்காப்பாளர்கள் என்று எனக்குள்ளே எத்தனையோ மாற்றங்கள், சிறகுகள். மாண்புமிகு அம்மா, இவையெல்லாம் நீங்கள் தந்தது. வாய்ப்பு வந்த நான்கு மாத பிரமிப்பிலிருந்து நான் மீள்வதற்குள்ளாகவே, பறவை தன் சிறகை மறைத்துக் கொண்டு பறக்கின்ற அந்த இடைவெளி நேரத்தில், இன்னும் ஒரு இன்ப அதிர்ச்சியை மாண்புமிகு அம்மா, நீங்கள் தந்தீர்கள். பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறையினுடைய அமைச்சராகப் பணியாற்றும் உயர்ந்த வாய்ப்பை இந்த எளியவனுக்குத் தந்தீர்கள்.

பிற்பகல் 4—05

மாண்புமிகு அம்மா, எங்கோ ஒரு செம்மண் காட்டுக்குள் கிடந்த ஒரு சின்ன விதையை, வெப்பமும், மழையுமாய் இருந்து முளைக்க வைத்தது நீங்கள். பொருளாதாரத்தில் கொழுத்தவர்கள், அதிகாரத்தின் உச்சத்தை ஆட்டிப் படைக்கின்றவர்கள், சாதிய பலம் படைத்தவர்கள் மட்டுமே அமைச்சர்களாக முடியும் என்ற அரசியல் அதிகாரத்தை மாற்றிக் காட்டி, எளியவர்கள், வறியவர்கள், விசுவாசத்தோடு இயக்கப் பணியாற்றுகிறவர்கள், தலைமையின்மீது மாறான நம்பிக்கையும், பற்றும் கொண்டிருக்கின்றவர்களும் உயரத்திற்கு வரலாம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்கு இந்த அவையிலே எத்தனையோ சாட்சிகளை அழைக்கலாம். அவர்களுள் இந்த எளியவனும் ஓர் அத்தாட்சியாக நிற்கிறேன். மாண்புமிகு அம்மா, நன்றி சொல்ல என்னிடத்திலே வார்த்தை இல்லை. நான்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கற்ற தமிழைத் தேடுகின்றேன்; வார்த்தைகள் கொஞ்சம் பஞ்சமாக இருக்கின்றன. ஆதலால் உங்கள் பாதங்களில் பூக்களைத் தூவுகின்றேன்; மலர்களால் அர்ச்சிக்கின்றேன். பெரியாரைக் காட்டுங்கள் என்று சொன்னால், மாண்புமிகு அம்மா உங்கள் திசைப் பக்கம்தான் நாங்கள் காட்டுவோம். அண்ணாவைக் காட்டுங்கள் என்று சொன்னால், மாண்புமிகு அம்மா உங்களைத்தான் நாங்கள் காட்டுவோம். (மேசையைத் தட்டும் ஒலி) எம்.ஜி.ஆரைக் காட்டுங்கள் என்று சொன்னால், மாண்புமிகு அம்மா, நீங்கள்தான் எங்களுக்கு எம்.ஜி.ஆர். பெரியாரும், எம்.ஜி.ஆரும், அண்ணாவுமாய் நீங்கள்தான் இருக்கிறீர்கள். முப்பரிமாண ஆளுமையில், நாளைக்கு முப்படையையும் ஆளப்போகிற தகுதி உங்களுக்குத்தான் இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீன ஊடுருவல், சிங்களர் தாக்குதல், சரப்ஜித் சிங்குகளின் மரணம், இவற்றையெல்லாம் தடுப்பதற்குக் கையாலாகாத கைகளின் ஆட்சி; அத்தனைக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்போகிறது மாண்புமிகு அம்மா உங்கள் வெற்றிப்புள்ளி. ஒரு வரலாறு உங்களுக்குக் காத்திருக்கிறது. செங்கோட்டை உங்களுக்குக் காத்திருக்கிறது; சிவப்புக் கம்பளம் விரித்திருக்கிறது; இந்தியாவிற்குத் தைரியம் தரும் ஜான்சி இராணியே! எளியவர்மீது இரக்கம் காட்டும் இன்னொரு தெரசாவே! படை நடத்தி பகை முடிக்கும் இந்த மண்ணின் ஜோன் ஆஃப் ஆர்க்கே! இந்தியத் தலைமைக்கு ஏற்றவர் நீங்கள் என்பதை 1984 ஆகஸ்ட் 28–லே அன்னை இந்திரா உங்களை அடையாளப்படுத்தினார். (மேசையைத் தட்டும் ஒலி) செக்கஸ்லோவாகியா ஜனாதிபதியிடம் உங்களைத் தன் மகளுக்கு நிகரெனத் தொட்டுக் காட்டினார். நாட்டை ஆள்வதற்கு நட்புத் தலைவர்களில் வேறொருவரையும்விட அத்தனைத் தகுதிகளும் மாண்புமிகு அம்மா உங்களுக்கு உண்டு. ஆழ்ந்து ஆராயும் அரசியல் ஆழம்; அட்சரம் பிசகாமல் ஒலிக்கும் ஆங்கில மொழியின் ஜாலம்; 30 ஆண்டுகளுக்கும் மேலாகப் பழுத்துக் கனிந்திருக்கும் அனுபவ ஞானம்; சரியெனப் பட்டதைச் செய்து முடிக்கின்ற வீரம்; பொருளாதாரத்தைப் புள்ளி விவரங்களோடு, புத்தகங்களோடு மட்டும் ஒப்பிடாமல் அடித்தட்டு மக்களின் இரைப்பை வரை யோசித்துப் பார்க்கும் ஈரம் என உங்கள் பன்முக ஆளுமையினைப் பட்டியலிடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனையோ தலைவர்கள் டெல்லிக்குப் பணி நிமித்தமாகப் போவார்கள்; வருவார்கள். ஆனால், அம்மா நீங்கள் டெல்லிக்குப் போனால், இந்தியாவின் பிரதம அமைச்சர் உங்களை வாசல் வரை வந்து வரவேற்கிறார்; நீங்கள் டெல்லிக்குப் போனால், அரசியல் பத்திரிகைகள், ஊடக நண்பர்கள் உன்னிப்பாகக் கவனிக்கிறார்கள் என்று சொன்னால், அந்தத் தகுதியும், மிகுதியும் பெற்ற ஒரே தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாத்திரம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த எளியவர்கள், எங்களைப் போன்று இருக்கின்ற எளியவர்கள், இளைஞர்கள் அத்தனை பேருமே உங்களின் பின்னால் அணி வகுத்து நிற்கிறார்கள். ஒரு வரலாறு உங்களுக்காகக் காத்திருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களே, எளியவர்களைக்கூட உயரத்திற்கு இட்டுச் செல்கிற ஒரு பாங்கு! சமுதாயத்தில் விளிம்பு நிலையிலுள்ள மனிதனைக்கூட ஒரு உயரத்திற்கு அழைத்து வரவேண்டுமென்கிற உங்கள் விருப்பத்திற்கு எங்கள் தலைதாழ்ந்த வணக்கத்தினைத் தாழ்மையுடனும், பணிவுடனும் நான் வெளிப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஏற்றம்; இந்த மாற்றம்; இந்த உயரம்; இந்தச் சிறகு; இந்த மகிழ்வு எல்லாம் நீங்கள் தந்தது அம்மா. அம்மா! நம்பிய இயக்கத்திற்காக, நம்பிய கொள்கைக்காக, நம்பிய தலைவிக்காக, இந்த உயிர் பிரிகிறபோதுதான், இந்த வாழ்க்கை அர்த்தமுள்ளதாக மாறும். இது வெற்று வார்த்தை அல்ல; இந்த எளியவன் கூற்று உண்மையாகிறபோதுதான் சத்தியமான வார்த்தை என்பதை ஊரும், உலகமும் அப்போது உணரும் என உரைத்து, பள்ளிக் கல்வி, இளைஞர் நலன், விளையாட்டுகள் துறையினுடைய மானியக் கோரிக்கையின்மீது நடைபெற்ற விவாதத்திற்கு எனது பதிலுரையைப் பணிவுடன் சமர்ப்பிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரம்பரியமும், சிறப்பும், வரலாற்றுப் புகழும் கொண்ட நமது கல்வி முறைதான் உலகிற்கே முன்னோடி; மற்றவர்கள் எல்லாம் நமக்குப் பின்னாடிதான். கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே, அதாவது கி.மு. 200–லேயே நாம் கல்வியில் தலைசிறந்து விளங்கியிருக்கிறோம். அந்தப் பண்பாட்டுப் பெருமையை மீட்டு, கல்வியில் வளர்ச்சியும், புது மலர்ச்சியும் கண்டவர் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்

தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) "கல்வியில் சிறந்த தமிழ்நாடு; கம்பன் பிறந்த தமிழ்நாடு" என்று உரைத்தான் முண்டாசுக் கவிஞன், எட்டயபுரத்துப் பாட்டன் பாரதி. அவரது வரிகளுக்கு உயிர் கொடுத்தவர்; கல்வித் துறைக்கு உயர்வு கொடுத்தவர்; எங்கள் உயிருக்கு நேர் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

*தமிழகம், அறிவின் மையமாகவும்–*the Knowledge hub-*இந்தியாவின் புதுமையின் தலைமையிடமாகவும்–*Innovation Capital-*திகழ வேண்டும் என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களின் உயரிய விருப்பம். அதனடிப்படையில்தான், கல்வியில் பல புதுமைகளைப் புகுத்தி, சாதனை படைத்து வருகிறார்கள்.*

பிற்பகல் 4–10

தமிழகக் கல்வித் துறை என்பது, விரிந்து, பரந்து கிடக்கிற ஒரு பரந்துபட்ட அமைப்பாகும். ஐம்பத்து ஆறாயிரத்து ஐநூற்று எழுபத்து ஏழு பள்ளிகள், ஐந்து இலட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து அறுநூற்று நாற்பத்து நான்கு ஆசிரியர்கள், ஒரு கோடியே முப்பத்து ஐந்து இலட்சத்து இருபத்து ஓராயிரத்து நான்கு மாணவ, மாணவியரைக் கொண்ட வரலாற்றுச் சிறப்பு மிகுந்த ஒரு பரந்துபட்ட, விரிந்த ஒரு அமைப்பாகும் பள்ளிக் கல்வித் துறை.

பள்ளிக் கல்வி என்னும் உயரிய ஆலமரத்தை வேர்களும், விழுதுகளும் தாங்கிப் பிடிக்கின்றன. இந்த அமைப்பில் பல்வேறுபட்ட அமைப்புகள் இருக்கின்றன. 1. தொடக்கக் கல்வி (Elementary Education) *2. பள்ளிக் கல்வி (இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி)* (Secondary & Higher Secondary Education in School Education) *3. அனைவருக்கும் கல்வித் திட்டம்* (SSA) Sarva Shiksha Abhiyan *4. அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம்* (RMSA) Rastriya Madhyama Shiksha Abhiyan *5. மெட்ரிக்குலேஷன் பள்ளிகள்* (Matriculation Schools) *6. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்* (State Council for Education Research & Training) *7. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி* (Directorate of Non-Formal and Adult Education) *8. அரசுத் தேர்வுகள்* (Government Examinations) *9. ஆசிரியர் தேர்வு வாரியம்* (Teachers Recruitment Board) *10. தமிழ்நாடு பாடநூல் கழகம்* (Tamil Nadu Textbook

Society) 11. பொது நூலகங்கள் (Public Libraries) போன்ற அமைப்புகளை உள்ளடக்கியதுதான் இந்தப் பள்ளிக் கல்வித் துறை.

"அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்,
ஆலயம் பதினாயிரம் நாட்டல்,
அன்னயாவினும் புண்ணியங்கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்று சொன்னான் பாரதி. அந்த வரிகளுக்கு ஏற்ப, இன்று கல்வியில் ஒரு மகத்தான மறுமலர்ச்சியை செய்து கொண்டிருக்கின்ற ஒரு முதலமைச்சராக, இந்தியாவிலேயே ஒரு சிறந்த மாநிலமாக தமிழகத்தை மாற்றக்கூடிய வல்லமை கொண்டிருக்கிற முதலமைச்சராகத் திகழுகிறவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைப் பெருமையோடு இந்த அவையிலே நான் பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2011 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் எழுத்தறிவு பெற்றவர்கள் 74.04 சதவிகிதமாகும். ஆனால், தமிழகத்தில் எழுத்தறிவு பெற்றவர்கள் விகிதம் 80.33 சதவிகிதமாகும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் இந்த சதவிகிதம் எட்டப்பட்டுள்ளது என்பதை இந்த மன்றத்தில் நான் பெருமையோடு சுட்டிக்காட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) "எல்லோரும் எழுத்தறிவு பெற்றவர்களாக மாற வேண்டும்; எல்லோருக்கும் கல்வி கிடைக்கச் செய்ய வேண்டும்; தமிழகம் எங்கும் அறிவொளி பரவ வேண்டும்" என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களின இலட்சியம். மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, மாணவர் சேர்க்கை விகிதம் தொடக்கப் பள்ளிகளில் 99.69 சதவிகிதமாகவும்; நடுநிலைப் பள்ளிகளில் 99 சதவிகிதமாகவும் உயர்ந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மருத்துவர் க. கிருஷ்ணசாமி அவர்கள், "அரசுப் பள்ளிகளில் மாணவர்களுடைய எண்ணிக்கை குறைந்திருக்கிறது" என்று சொன்னார். நான் இந்த அவையிலே பதிவு செய்கிறேன். கண்ணியமிக்க இந்த அவையிலே நான் மெத்தப் பணிவோடும், அடக்கத்தோடும், சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாணவர் சேர்க்கை விகிதம் தொடக்கப் பள்ளிகளில் மட்டும் 99.69

சதவிகிதமாகவும்; நடுநிலைப் பள்ளிகளில் 99 சதவிகிதமாகவும், எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழ்நாட்டில்தான் உயர்ந்திருக்கிறது என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆசிரியர்–மாணவர் விகிதாச்சாரம், அதாவது Pupil-Teacher Ratio (PTR) விகிதம் தொடக்கப் பள்ளிகளில் 27 மாணவர்களுக்கு 1 ஆசிரியர் (1:27), நடுநிலைப் பள்ளிகளில் 29 மாணவர்களுக்கு 1 ஆசிரியர் (1:29) என்கிற நிலையில் தமிழ்நாடு உயர்ந்திருக்கிறது. ஆனால், தேசிய அளவில், நடுவண் அரசால் நிர்ணயிக்கப்பட்டது, 30 மாணவர்களுக்கு 1 ஆசிரியர் (1:30) மற்றும் 35 மாணவர்களுக்கு 1 ஆசிரியர் (1:35) என்ற விகிதாச்சாரங்களைவிட, மேம்பட்ட நிலையை அடைந்திருக்கின்ற மாநிலம் நம்முடைய தமிழ்நாடுதான் என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) "காலத்துக்கு ஏற்ற கல்வியும், அதில் புது ஒளியும் தந்து, தமிழன் இழந்த பாரம்பரியத்தை எல்லாம் மீட்டு, அதன் புகழைக் காத்த புனிதர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளலாரின் மனம் படைத்த மாண்புமிகு அம்மா அவர்களை மாணவச் செல்வங்கள் வாழ்த்திக் கொண்டேயிருக்கின்றன.

14 அம்ச திட்டம் தந்து, இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் செய்யத் தெரியாத, செய்யத் துணியாத ஒரு மகத்தான காரியத்தைச் செய்திருக்கிறார் மாண்புமிகு தமிழக முதலமைச்சர். ஆட்சிக் கட்டிலில் இரண்டாண்டு காலத்திற்கு முன்பாக பொறுப்பேற்றிருந்த நிலையில், கருவூலம் காலி, கஜானா காலி, வட்டி கட்டக்கூடிய நிலைமை என்கிற பல்வேறு இக்கட்டுகள், இடர்ப்பாடுகள், துன்பம், துயரம், கண்ணீர், வேதனை என்று இத்தனை இருந்தபோதிலும்கூட, தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துவர வேண்டுமென்று முனைந்து, தமிழகத்தில் பள்ளிக் கல்வித் துறைக்கு இதுவரையில்லாத ஒதுக்கீட்டை, உயர் ஒதுக்கீட்டை வழங்கி, பள்ளிக் கல்விக்கு உயர்ந்த ஒரு சேவையைச் செய்து கொண்டிருக்கின்றார் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

"ஆடையில்லா மனிதன் அரை மனிதன்" என்பார்கள்; கல்வியோடு ஆண்டுக்கு நான்கு அழகான சீருடைகள் கொடுத்து முழு மனிதனாக்கியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். கடந்த

காலத்தில், அரைக்கால் டிரவுசரோடு மாணவர்கள் செல்வதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். ஆனால், 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முழுக்கால் உடையும், மேல் சட்டையும், மாணவியர்களுக்கு சல்வார் கமீசும் என சீருடைகள் வழங்கிய ஒரே முதலமைச்சர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சீருடை சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 4–15

நாள்தோறும் உடல் நலமும், வளமும் பெற வகை வகையான சத்துணவு, சத்துமிக்க சத்துணவு. கண்களைப் பார்த்தே பசியைக் கண்டுகொள்கிறவர்தான் பெற்ற தாய். அப்படி வயிற்றுப்பாடு முடிந்தால்தான் வாழ்க்கைப்பாடு முடியும் என்று சொல்வார்கள். வயிற்றிலே பசி இருந்தால், செவிக்குச் செய்திகள் போகாது என்று சொல்லுவான் வள்ளுவப் பேராசான். அதனுடைய அடிப்படையில்தான் 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் 48.63 இலட்சம் மாணவ, மாணவியர்கள் 2012–2013 ஆம் ஆண்டில் பயன் பெற்றுள்ளனர்.

சுமையற்ற வண்ணப் பாட நூல்கள். "புத்தகங்களே, புத்தகங்களே, குழந்தைகளைக் கிழித்துவிடாதீர்கள்" என்று ஏற்கெனவே ஒரு கவிதையை நான் பதிவு செய்தேன். குழந்தைகள் அதிக நூல்களைச் சுமந்துகொண்டு பள்ளிக்கூடத்திற்குச் செல்வதனால் சிரமம், சிலுவைப்பாடு ஆகியவை ஏற்படுகின்றன. ஆக, இந்த சிரமத்தை நீக்குவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்துதான், புத்தகச் சுமையைக் குறைக்கின்ற வகையில் 257.41 கோடி ரூபாய் செலவிடப்பட்டு, 92 இலட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெற்று வருகிறார்கள்.

அன்றாடம் பாடங்களை எழுதிவர பாட ஏடுகள் தரப்படுகின்றன. பாலகர்களின் கைவண்ணம் காட்ட சுவைமிகு பாட ஏடுகள் பல. 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் 81.02 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கு 102.69 கோடி ரூபாய் செலவில் விலையில்லா நோட்டுப் புத்தகங்கள்.

குழந்தைகளின் மென்பாதங்களைக் காக்க ஒரு ஜோடி காலணி. பிஞ்சுப் பாதங்கள் கல்லிலும், முள்ளிலும், காட்டிலும், சூட்டிலும் பயணம் செய்வதன் பரிதாபம் கண்டு ஒரு ஜோடி காலணியை உடனே தந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். கடந்த காலத்தில் நீங்கள் பார்த்தீர்கள் என்று சொன்னால், 10 ஆம் வகுப்பு பாஸ் பண்ணினால் செருப்பு வாங்கித் தருவேன் என்பார்கள். 12 ஆம் வகுப்பு பாஸ் பண்ணினால் சைக்கிள் வாங்கித் தருகிறேன் என்பார்கள். ஆனால், ஒரு பெற்ற தாயும், தகப்பனும் செய்யாத ஒன்றை, பெறாத தாயாக இருக்கிற, தமிழகத்தின் தாயாக இருக்கிற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விலையில்லாத காலணிகள் வழங்க 104.15 கோடி ரூபாயைச் செலவிடுகிறது அரசு.

ஆண்டு முழுவதும் பள்ளி செல்ல பேருந்துப் பயண அட்டை. நடையாய் நடந்து, நாட்களைக் கழித்த காலம் போய், நகரப் பேருந்தில் நாட்களை களிக்கும் நந்தவன நாட்களைத் தந்திருக்கிறார் நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இலவசப் பேருந்துப் பயணம், வசதி படைத்த குழந்தைகளைப்போல பள்ளி செல்ல அழகான புத்தகப் பை, 92 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கு 127.78 கோடி ரூபாய் செலவில் வழங்கப்பட்டிருக்கிறது.

எண்ணங்களை வண்ணங்களில் வடிக்க வண்ணக் கிரேயான்கள் மற்றும் வண்ணப் பென்சில்கள். 1 ஆம் வகுப்பு முதல் இரண்டாம் வகுப்பு வரை பயிலும் 11.77 இலட்சம் குழந்தைகளுக்கு வண்ணக் கிரேயான்கள். 1.97 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு இதற்கு செய்யப்பட்டிருக்கிறது.

எளிதாகக் கணக்குகளைச் செய்ய கணித உபகரணப் பெட்டி. குட்டி இராமானுஜன்களை சுட்டியிலேயே உருவாக்க கணித உபகரணப் பெட்டி தந்தவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

உலகை அறிந்துகொள்ள உலக வரைபடப் புத்தகம். உலகை அறிய உள்ளங்கையில் உலக வரைபடம் என்று சொல்வார்கள். 46 இலட்சம் மாணவர்களுக்கு ரூ.13.57 கோடி நிதி ஒதுக்கீடு செய்து இதைத் தந்திருக்கிறார்.

கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத மடிக் கணினி (Laptop). இரண்டு விரல்களால் எழுதுங்கள் என்கிற கோஷம் ஒரு காலத்தில் எழுப்பப்பட்டது. தற்போது உலகம் முழுவதும் எழுப்பப்படுகிற கோஷம் பத்து விரல்களால் எழுதுங்கள் என்பதுதான். 10 விரல்களால் எவ்வாறு எழுத முடியும் என்று கேட்டால், மடிக் கணினியை இயக்குவதன்மூலம் 10 விரல்களால் எழுதலாம். 10 விரல்களால் எழுதுகிற கோஷத்தை இந்த உலகுக்கு, மாணவச் செல்வங்களுக்குத் தந்த ஒரே தலைவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

வீட்டுக்குள்ளே பள்ளிக்கூடத்தைக் கொண்டுவந்த பெருமையைத் தந்து மடிக்கணினியைத் தந்து வரலாற்று சாதனையைத் தந்தவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்.

பள்ளி சென்று வர மிதிவண்டி. 6.3 இலட்சம் மாணவ, மாணவிகளுக்கு 194.20 கோடி ரூபாய் செலவில் விலையில்லாத மிதிவண்டிகள்.

கல்விக் கரும்பை சுவைக்க ஊக்கத் தொகை. ஏறக்குறைய 10 ஆம் வகுப்பு மற்றும் 11 ஆம் வகுப்பு படிப்போருக்கு 1,500/– ரூபாயும், 12 ஆம் வகுப்பு படிப்போருக்கு 2,000/– ரூபாய் ஊக்கத் தொகையும் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கு 353.56 கோடி ரூபாய் செலவிடப்பட்டு, இதன்மூலம் 21.52 இலட்சம் மாணவர்கள் பயனடைந்து வருகிறார்கள்.

வருங்காலத்தை எதிர்கொள்ள வங்கி வைப்புத் தொகை. ‘ஒன்றே செய்க; ஒன்றும் நன்றே செய்க, நன்றும் இன்றே செய்க, இன்றும் இன்னே செய்க’ என்பதுதான் மாண்புமிகு அம்மாவின் தத்துவம். அதைத் தருகிற வகையில் வைப்புத் தொகையாக ரூபாய் 50 ஆயிரம் வீதம், 2,410 குழந்தைகளுக்கு 2012–2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.

கல்வித் துறையில் பல்வேறு வளர்ச்சி காணும் மகத்தான ஐந்து அம்சத் திட்டங்களை வகுத்துத் தந்திருக்கிறார்கள். அனைவருக்கும் கல்வி, உலகத் தரத்திலான கல்வி, நவீன தகவல் தொழில்நுட்பத்துடன்கூடிய கல்வி பெறும் வாய்ப்பு, வளமான உள் கட்டமைப்பு வசதி, கற்றல், கற்பித்தலில் புதுமை என்று ஏறக்குறைய பல்வேறு சாதனைகளை அரசு செய்திருக்கிறது.

பிற்பகல் 4—20

பள்ளி செல்லும் வயதினர் அனைவருக்கும் கல்வி கிடைக்கச் செய்தல். 'இங்கு வாழும் மனிதருக்கெல்லாம் பயிற்றுப் பல கல்வி தந்து, இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்' என்று பாடினானே பாரதி, அதைப்போல;

"வீடு தோறும் கலையின் விளக்கம்,
வீதி தோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளனவ் வூர்கள்,
நகர்க ளெங்கும் பலப்பல பள்ளி,
தேடு கல்வியி லாததொ ரூரைத்,
தீயி னுக்கிரை யாக மடுத்தல்"

என்று சொல்வானே, அதைப்போல பல்வேறுபட்ட பள்ளிகளை உருவாக்கினார். ஒரு கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் ஒரு தொடக்கப் பள்ளி, 3 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் ஒரு நடுநிலைப் பள்ளி, 5 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் ஒரு உயர்நிலைப் பள்ளி, 8 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் ஒரு மேல்நிலைப் பள்ளி, சமூகப் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள குழந்தைகளுக்குத் தனியார் பள்ளிகளில் 25% விழுக்காடு இடஒதுக்கீடைத் தந்தவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

போக்குவரத்து வசதி இல்லாத 8 மலைப் பிரதேச மாவட்டங்களில் உள்ள 4,857 இடைநின்ற பள்ளிச் செல்லாக் குழந்தைகளுக்கு வீட்டிலிருந்து பள்ளிக்குச் சென்று வர ரூ.145 இலட்சம் செலவில், ஒரு குழந்தைக்கு ஆண்டிற்கு ரூ.3,000/— வீதம் போக்குவரத்து வசதி செய்த ஒரே அரசு, தமிழக அரசுதான் என்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனைக் கண்காணிக்க ரூ.5 இலட்சம் செலவில் ஒரு மென்பொருளும் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

உலகத் தரத்திலான கல்வி. 'தரத்தோடும்' இருக்க வேண்டும் கல்வி, 'அறத்தோடும்' இருக்க வேண்டும் கல்வி. கல்வியின் வாயிலாகவே, புது உலகைக் காண வேண்டும் மாணவச் செல்வங்கள் என்பதற்காக ஒரு உலகத் தரத்திலான கல்விப் புரட்சியை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட கல்வி ஆசிரியர் தகுதி (TET)

தேர்வு எழுதிய ஆசிரியர்கள், தேர்வு நேரம் போதவில்லை என்று கோரிக்கை வைத்தவுடனேயே, அதைக் கனிவுடன் ஏற்று, 1½ மணி நேரமாக அதிகரித்து, மூன்று மணி நேரமாக உயர்த்தித் தந்தவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) வல்லுநர் குழுவை அமைத்திருக்கிறார். பள்ளிக் கல்வித் துறையின் ஏற்றம்மிகு மாற்றங்களைக் கொண்டு வந்து உலகத் தரத்திலான கல்வியை வழங்கும் பொருட்டு தலைசிறந்த கல்வியாளர்களைக் கொண்ட வல்லுநர் குழு அமைக்கப்பட்டு இருக்கிறது.

முப்பருவக் கல்வி முறையுடன்கூடிய முழுமையான, தொடர் மதிப்பீட்டு முறை (CCE) – Trimester "நான் மழைக் காலத்தில்கூட பள்ளிக்கூடப் பக்கம் ஒதுங்கியதில்லை" என்று சொல்வார் கிராமத்து எழுத்தாளர் திரு. கி. ராஜநாராயணன் அவர்கள். ஆனால், அது அந்தக்காலம். இப்போது மழைக் காலம் போல மகிழ்ச்சியாக இருக்கிறது பள்ளிக்கூடக் காலம் என ஊரும், உலகமும் சொல்லி வருவதை நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, முப்பருவக் கல்வி முறையும், முழுமையான மதிப்பீட்டு முறையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் ஒவ்வொரு பருவத்திற்கும் தனி தனிப் பாட நூல்கள். மாணவர்களின் முழுத் திறனையும் வெளிப்படுத்த பயிற்சி முறைகள். மதிப்பெண்களுக்குப் பதிலாக தரக்குறியீடு (Grades) இதனால் மாணவ, மாணவியரின் தேர்வு பயமும் நீங்கும்; இதனால் மாணவ, மாணவியரின் மன அழுத்தமும் குறையும். தொடர் மதிப்பீட்டு முறைக்கு ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. DIET, DTERT-யை SCERT-ஆகத் தரம் உயர்த்தியிருக்கிறது. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், அரசு மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சிக் குழுமமாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது.

கல்வியில் பின்தங்கிய ஏறக்குறைய 26 ஒன்றியங்களில் தலா ஒரு மாதிரிப் பள்ளி வீதம் 26 மாதிரிப் பள்ளிகளை ரூ.78 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அமைத்திருக்கிறார்கள். அடுத்து நவீன தகவல் தொழில்நுட்பத்துடன்கூடிய கல்வி, கல்விசார் மேலாண்மை தகவல் முறைமை EMIS (Educational Management Information System).

அரசு, கல்வித் துறை, பள்ளிகள், மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் ஆகியோர்களுக்கிடையே தகவல் தொடர்பு ஏற்படுத்தும் புது முயற்சியாகும் இது. இதன்மூலமாக பல்வேறுபட்ட நன்மைகள் ஏற்படுகின்றன. பள்ளிகளில் தகவல்கள், பாட நூல் பதிவிறக்கம், வினா வங்கித் தேர்வு முடிவுகள், அறிக்கைகள், புள்ளிவிவரங்கள் போன்ற இந்த முறைகள் இந்தக் கல்வியாண்டு முதல், அதாவது 2013–2014 முதல் நடைமுறைக்கு வரும் என்பதனை மிக்க மகிழ்ச்சியோடு இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, 'ஸ்மார்ட் கார்டு'. ஒவ்வொரு மாணவர்களின் சேர்க்கை, வருகை மற்றும் தொடக்கக் கல்வியை முடிக்கும் வரை உள்ள அனைத்து விவரங்களையும் இந்த 'ஸ்மார்ட் கார்டு' மூலம் தெளிவாக அறிய முடியும். இந்த ஸ்மார்ட் கார்டு சிஸ்ட்டம்தான் உலக அளவில் பின்பற்றப்படுகிறது. உலக அளவில் பின்பற்றப்படக்கூடிய மாநிலங்களில் தமிழ்நாடு தலைசிறந்த மாநிலமாகத் திகழ்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு சுட்டிக்காட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சிறப்பு வாய்ந்த திட்டம் இந்தக் கல்வி ஆண்டில் 2013–2014-ல் நடைமுறைப்படுத்தப்படும்.

புவியியல் தகவல் முறைமை Geographical Information System (GIS) என்பது பள்ளிக்கூடம் தொடர்பானச் செயல்பாடுகளை எல்லாம் இணைத்து எளிதாக மேலாண்மை செய்யவும், கண்காணிக்கவும் உதவும் ஒரு சிறந்த கருவியாகும். சுட்டியைச் (Mouse) சொடுக்கினாலே தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளில் அமைந்துள்ள பள்ளிகள் குறித்த தகவல்களை எல்லாம் அடுத்த நொடியில் நமக்குத் தந்துவிடும் என்பதுதான் இந்த முறை.

அடுத்து, குறுஞ்செய்தி (SMS) அடிப்படையிலான ஆசிரியர்களின் வருகைப் பதிவு. அதாவது, SMS மூலமாக ஆசிரியர்களின் வருகைப் பதிவேடை உறுதி செய்வது; பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களின் பொறுப்புணர்வையும், கடமையுணர்வையும், வருகையையும் கண்காணிக்கும் விதமாக "குறுந்தகவல்" SMS அடிப்படையிலான ஆசிரியர்களின் வருகைப் பதிவு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலை நாடுகளில்தான் இதுபோன்ற முறை உள்ளது. மேலை நாடுகளுக்கு இணையாக கல்வி வேண்டும் என்று நம்முடைய உறுப்பினர்கள் கேட்டார்களே, அதைப்போன்ற ஒரு செய்தியை குறுஞ்செய்தி மாத்திரமல்ல, புவியியல் தகவல்

முறைமை, Smart Card System. CCE—தொடர் மதிப்பீட்டு முறை, மற்றும் கல்விசார் மேலாண்மை முறைமை போன்றவற்றின் மூலமாக மேலைநாடுசார் கல்விக்கு இணையான ஒரு மகத்துவத்தை தமிழ்நாடு பெற்றிருப்பதற்கான கட்டமைப்பை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள்.

பிற்பகல் 4–25

அதைப்போல வளமான உள்கட்டமைப்புகள்; தமிழகத்தினுடைய தொலைநோக்கு–2023 திட்ட (Vision Tamil Nadu 2023) ஆவணத்தில் உள்ள பத்து இலக்குகளில் ஒன்றாக அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்வி கிடைக்க இந்திய நாட்டிலேயே மிகச் சிறந்த உள்கட்டமைப்பு வசதிகளைத் தமிழகம் ஏற்படுத்தித் தரும் என்ற செய்தியை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக ரூபாய் 1,660 கோடியில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பள்ளிகளின் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. இதுவரை இல்லாத அளவுக்கு இங்கு தான் 2011–2012 ஆம் ஆண்டில் 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக, 710 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக, 65 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் ஒன்றைப் பணிவுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மைனாரிட்டி தி.மு.க. அரசு கல்விக்கு எதுவும் செய்யவில்லை என்பதற்கு ஒரு ஆதாரபூர்வமான செய்தியை இந்த அவையிலே நான் பதிவு செய்கிறேன். மேல்நிலைக் கல்விக்கு P.G. Assistant-Post Graduate Teachers–க்கு பணியிடங்கள் கொடுக்கிறபோது 5 பணியிடங்களை மாத்திரம்தான் வழங்குவார்கள். ஆனால், மேல்நிலைக்கு Upgrade செய்கிறபோது, தரமுயர்த்தப்படுகிறபோது 9 பணியிடங்களைத் தந்த ஒரே அரசு நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான் என்பதை நான் பெருமையோடு சுட்டிக் காட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை இல்லாத அளவுக்கு 900 பணியிடங்கள் இதன்மூலம் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்கிற செய்தியையும் தெரிவிக்க விரும்புகிறேன். குறிப்பாக சப்ஜெக்ட் ஆசிரியர்கள்தான் வருவார்கள்.

கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், பொருளியல், வரலாறு, தமிழ், ஆங்கிலம் இவற்றைத் தந்திருக்கிற ஒரே அரசு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான்.

அடுத்து, ஆங்கில வழி இணைப்பிரிவுகள்; (English Medium) தமிழகத்தில் தொடக்கக் கல்வி முதல் மேல்நிலைக் கல்வி வரை 2012–2013 கல்வியாண்டில் இருந்து ஆங்கிலவழி இணைப்புப் பிரிவுகள் (English Medium) தொடங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 320 பள்ளிகளில் 22,400 மாணவர்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

அடுத்து, கற்றல்–கற்பித்தலில் புதுமை; மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலங்களில்தான் காய்ந்து கிடக்கும் வகுப்பறைகளில் கனமழை பெய்யத் தொடங்கி இருக்கிறது. மாணவர்களின் கதைகளுக்குக்கூட கால்கள் முளைக்கத் தொடங்கியிருக்கிறது என்பதைப்போல கற்றலில் ஒரு புதுமையைக் கொண்டு வந்திருக்கிறது.

உள்ளரங்க விளையாட்டைப் பொறுத்தவரையில்; உள்ளரங்க விளையாட்டுகளில் அறிவார்ந்த விளையாட்டு சதுரங்க விளையாட்டு என்று சொல்வார்கள். இந்தச் சதுரங்க விளையாட்டை பள்ளிகளுக்குக் கொண்டு வந்து 7 வயது முதல் 17 வயது வரையுள்ள 86 இலட்சம் பள்ளி மாணவ, மாணவியர்கள் பயன்பெறுகிற விதத்தில் ரூபாய் 39.47 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, தமிழகத்தைச் சிறந்த முறையில் வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

எளிமைப்படுத்தப்பட்ட செயல்வழிக் கற்றல் (SABL) முறை: இதில் குறைவான பட அட்டைகளுடன் நிறைவான சிந்தனைகளை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

அடுத்து, படைப்பாற்றல் கல்வி முறை. (ALM) படைப்பாற்றல் கல்வி முறை தரமான கல்வி முறையை உறுதி செய்கிறது.

சிறப்புத் துணைத் தேர்வு அனைத்துப் பாடங்களுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தேர்வில் தோல்வி அடைந்து, 3 பாடங்களுக்கு மட்டும் சிறப்புத் துணைத் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்ட நிலையில், மாண்புமிகு அம்மா அவர்கள் அனைத்துப் பாடங்களிலும் ஜூன், ஜூலையில் சிறப்புத் துணைத் தேர்வு எழுதுவதற்கு 2012 ஆம் ஆண்டு முதல் தாயுள்ளத்தோடு

ஆணையிட்டிருக்கிறார்கள். யாருக்கும் ஓராண்டு பிரேக் வராது. இந்தத் தேர்வு எழுதினால் அடுத்து உடனே அந்த ஆண்டே கல்லூரியில் சேரக்கூடிய வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

அடுத்து, நவீன மதிப்பெண் சான்றிதழ் வழங்குதல்; நில மோசடி நடந்தது, அதுபோல மதிப்பெண் சான்றிதழ் மோசடி Mark sheet மோசடிகூட கடந்தகால ஆட்சியில் நடைபெற்றது. அதையெல்லாம் தடுக்கின்ற விதத்தில் நவீன மதிப்பெண் சான்றிதழில் 2012–2013 ஆம் கல்வியாண்டு முதல் மாணவர்களின் நிழற்படம் ஒட்டப்படுகிறது. இரகசிய குறியீட்டுடன்கூடிய மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது என்கிற செய்தியையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து நடமாடும் ஆலோசனை மையங்கள். வளரிளம் பருவத்தில் ஏற்படும் மாற்றங்களால் மனக் கலக்கம், மனச் சோர்வு, மன அழுத்தம், மனக் குழப்பம் போன்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக உளவியல் ஆலோசனைகள் (Psychological Counselling) வழங்கும்வகையில் இந்தியாவிலேயே முதன்முறையாகத் தமிழகத்தில் உளவியல் ஆலோசகர், உதவியாளர் மற்றும் அனைத்து வகை வசதிகளுடன்கூடிய 10 நடமாடும் ஆலோசனை மையங்களை ரூபாய் 3 கோடி செலவில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்கிற செய்தியை நான் இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, நூலகங்கள். 'ஒரு நூலகம் திறக்கப்படும்போது ஒரு சிறைச்சாலை மூடப்படுகிறது' என்று சொன்னார் பேரறிஞர் அண்ணா. அணுகுண்டுக்கும், புத்தகத்திற்கும் என்ன வித்தியாசம் என்று கேட்டால், அணுகுண்டு போட்டால் ஒருமுறைதான் வெடிக்கும், ஆனால், நூல்கள் திறக்கத் திறக்க வெடிக்கும் என்று சொன்னார் எழுத்தாளர் ஜெயகாந்தன். அதைப்போல புத்தகம் என்பது மனிதனின் ஆன்மா, அது நமக்குப் புதிய சிறகுகளைத் தருகிறது. பறப்பதற்கு மட்டுமல்ல, பண்படுவதற்கும் அது தருகிறது. 2012–2013–ல் 32 மாவட்டங்களிலும் 1,093 ஊர்ப்புற நூலகங்களில் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. ஒரு மாவட்டத்திற்கு ஐந்து வீதம், 160 பகுதிநேர நூலகங்கள் ஊர்ப்புற நூலகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. மாவட்டத்திற்கு மூன்று வீதம், 96 ஊர்ப்புற நூலகங்கள் கிளை நூலகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. 36 பகுதிநேர நூலகங்கள் புதியதாகத் திறக்கப்பட்டுள்ளன. 32 நூல்

இருப்பு சரிபார்ப்பு அலுவலர்கள் தங்களது பணியைச் செம்மையாகவும், துல்லியமாகவும், விரைவாகவும் செய்வதற்கு ஏதுவாக, அவர்களுக்கு ரூ.16 இலட்சம் மதிப்பீட்டில் மடிக் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. அனுமதிக்கப்பட்ட 160 ஊர்ப்புற நூலகர் பணியிடங்களில் 70 ஊர்ப்புற நூலகர் பணியிடங்கள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 96 மூன்றாம் நிலை நூலகர் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்பட உள்ளோம் என்கிற மகிழ்ச்சியான செய்தியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4—30

அடுத்து, ஆசிரியர் நியமனங்கள். பொறியாளர்கள் கட்டடங்களை உருவாக்கலாம், விஞ்ஞானிகள் கண்டுபிடிப்புகளை உருவாக்கலாம், கவிஞர்கள் கவிதைகளை உருவாக்கலாம், ஆனால் இவர்களை உருவாக்குவது ஆசிரியர்கள்தான். அப்படிப்பட்ட ஆசிரியர்களுக்குப் பணி நியமனத்திற்கு ஒரு மகத்தான வழியை ஏற்படுத்தி 59,704 ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியிடங்களை நிரப்ப ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் ஆசிரியர் பணியிடங்கள் 49,369—ம், ஆசிரியரல்லாத பணியிடங்கள் 10,335—ம் ஆகும். இவற்றில் 2012—2013 ஆம் ஆண்டில் 21,597 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்களை நிரப்ப ஆணைகள் வெளியிடப்பட்டு ஏறக்குறைய வழங்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவில் யாரும் செய்ய முடியாத ஒரு மகத்தான சாதனையாக 20,920 ஆசிரியர்களுக்கு ஒரே நேரத்தில் பணி நியமன ஆணைகளை வழங்கிச் சாதனை புரிந்தவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி).

14 ஆண்டுகாலம் போராட்டம், இதுவரை யாரும் செய்யாத அளவிற்கு, யாரும் கொடுக்கவில்லை என்று நேற்றையதினம்கூட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர் தோழர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள் சொன்னார்கள். நாங்கள் கடந்த காலத்தில் மைனாரிட்டி தி.மு.க. அரசாங்கத்தினுடைய முதலமைச்சர் திரு. கருணாநிதியினிடத்தில் கோரிக்கை வைத்தோம். கோரிக்கை எப்படி அவரைப்போல சக்கர நாற்காலியில் போனதோ அதைப்போல மனுவையும் சக்கர நாற்காலியில் தள்ளிக்கொண்டே போனார்கள் என்று சொன்னார். ஆனால், கோரிக்கை வைத்த மூன்றே நாட்களில் நிறைவேற்றித் தந்தவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் என்று குறிப்பிட்டார்.

அதைப்போல மனித நேய மக்கள் கட்சி உறுப்பினர்கள் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்களும், திரு. அ. அஸ்லம் பாஷா அவர்களும் கோரிக்கை வைத்தபோது உருது ஆசிரியர்களுக்குப் பணியிடம் கொடுக்க வேண்டுமென்பதற்காக அதையும் கொடுத்து, ஏறக்குறைய 394 பணியிடங்களைத் தந்தவர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 34 உதவி தொடக்கக் கல்வி அலுவலர் பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளன என்கிற செய்தியைச் சொல்லிக்கொள்ள விழைகிறேன்.

“எழுத்தறிவு இல்லாதவர்கள் எழுதக் கற்றுக்கொள்ளுங்கள், எழுத்தறிவு பெற்றவர்கள் எழுதக் கற்றுக்கொடுங்கள்” என்று சொன்னார் பிடல் காஸ்ட்ரோ. அதைத்தான் மாண்புமிகு அம்மா ஒரு பிரகடனமாக, இன்று அறிவித்திருக்கிறார் “Each One Teach One” என்று சொல்லி, ஒவ்வொருவரும் கற்றுக்கொள்ள வேண்டும் என்கிற ஒரு மகத்தான தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பது தமிழகத்தில்தான் என்பதை நான் இந்த மன்றத்திலே மத்தளம் கொட்ட, வரிசங்கம் நின்றூத தலைநிமிர்ந்து என்னால் சொல்ல முடியும். கற்கும் பாரதம் எனும் எழுத்தறிவுத் திட்டம் தமிழ்நாட்டில் 7 மாவட்டங்களில் 3,152 வயது வந்தோர் கல்வி மையங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதன்முறையாக கணினி வழியாகக் கல்வி கற்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி 40 மையங்கள் “மாதிரி வயது வந்தோர் கல்வி மையங்கள்” ஆகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன என்கிற மகிழ்ச்சியான செய்தியையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தலையில்லாமல் ஆறு நாட்கள் வாழும் கரப்பான் பூச்சி, கால்களைக் கொண்டே ருசி அறியும் வண்ணத்துப்பூச்சி, மூன்று ஆண்டுகள் தொடர்ந்து தூங்கும் நத்தை என, உலக உயிர்களில் எத்தனை அதிசயங்கள் இருந்தாலும் அத்தனை உயிர்களையும் நேசிக்கும் ஒரே அதிசயம் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான்.

அம்மா நீங்கள் வானம் மற்றவர்கள் கைக்குட்டைகள், அம்மா நீங்கள் வரலாறு மற்றவர்கள் கோளாறு, அம்மா நீங்கள் தங்கம் மற்றவர்கள் தகரம், அம்மா நீங்கள் மேகம் மற்றவர்கள் வெறும் தாகம், அம்மா நீங்கள் சிங்கம் மற்றவர்கள் வெறும் அங்கம், அம்மா நீங்கள் எட்டாவது வள்ளல் மற்றவர்கள் வெறும் துள்ளல், கல்லாமையை இல்லாமையாக்கி இந்தியாவின் எதிர்காலத்தை

வகுப்பறைகளில் தீர்மானிக்கும் வரலாற்றுத் தலைவியை வணங்கி, பள்ளிக் கல்வித் துறையினுடைய மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலுரையை நிறைவு செய்து, தமிழ் வளர்ச்சித் துறை தொடர்பான பதிலுரையை வழங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கூட்டத்திலே பேசுகிறபோது இத்துடன் எனது உரையை முடித்துக்கொள்கிறேன் என்று சொன்னால் சந்தோஷப்படுகிற மாதிரி சந்தோஷப்படுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சித் துறையைக் காக்கின்ற ஒரே தலைவர், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். மொழி ஒரு இனத்திற்குப் பெயர் வைக்கிறது. அனைத்து இனத்திற்கும் மொழிப் பெயர் வைக்கிறார்கள். இத்தாலியர்கள் தங்கள் மொழிக்கு இசை மொழி என்கிறார்கள். ஆங்கிலேயர் தங்கள் மொழிக்கு வணிக மொழி Commercial language என்கிறார்கள். பிரெஞ்சுக்காரர்கள் தங்கள் மொழிக்குக் காதல் மொழி என்கிறார்கள். இந்தக் கூற்றையெல்லாம் உண்மையென்று ஒப்புக்கொண்டால், தமிழ் மொழிக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று கேட்டபோது, அது பக்தி மொழியென்று சொன்னார்கள், பக்தி இலக்கியக்காரர்கள். வைணவ மற்றும் சைவ–வைணவர் காலத்தில் தமிழை அந்த காலத்தில்தான் தங்கள் தோளில் சுமந்தனர். பூமியை மையமாக வைத்துக்கொண்டு இந்த உலகம் சுற்றுகிறது என்று சொல்லி கி.பி. 127–ல் டாலமி இந்த உலகத்திற்குத் தவறான தகவலை அறிவித்தான்.

பிற்பகல் 4–35

ஓரறிவு முதல் ஆறறிவு படைத்த இனம் மனித இனம் என்று உலகத்திற்கு எடுத்துச் சொன்னவன் நம்முடைய தமிழன்தான். அப்போதே இந்த உலகத்திற்கு அறிவித்தவன் தொல்காப்பியன். அப்படி இருக்கையில், 250 ஆண்டு காலம், கால் நூற்றாண்டு காலம், களப்பிரர்கள் காலத்தில், இருண்ட காலம் என்று அழைக்கப்படுகின்ற அந்தக் காலத்தில் தமிழ் மொழி நசுக்கப்பட்டது. பாலி மொழிக்குப் பால் வார்க்கப்பட்டது. அப்படிப்பட்ட நிலையிலும்கூட சமணர்கள் தோள்களில் சுமந்து, கொஞ்சம் கொஞ்சமாக சமணர்கள் தோள்களில் வளர்ந்ததுதான் தமிழ் இலக்கியம். பக்தி இலக்கியமாக வளர்ந்ததுதான் என்பதைப்

பெருமையோடு சுட்டிக்காட்ட விழைகிறேன். 'தமிழ் மாணவன் ஒருவன் இங்கே உறங்குகிறான்' என்று தன் கல்லறையில் எழுதிவைக்கச் சொன்னார் ஜி.யு. போப். 'என் வாழ்க்கையில் நான் வருந்திய ஒரு விஷயம் என்னவென்றால் தமிழ் பயில எனக்கு வாய்ப்பு இல்லையே' என்று சொன்னார் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கணியன் பூங்குன்றனின் வரிகள் ஐ.நா. சபையில் இன்னும் அசைக்க முடியாத வரலாற்றோடு தோரணவாயிலில் இடம் பெற்றிருக்கின்றன. 'தமிழ்ச் செய்யுளில் தெய்வீக இறைப்பண்பு உள்ளது' என்று சொன்னார் வீரமாமுனிவர். சிந்துச் சமவெளி நாகரிகமும், குமரிக்குக் கிழக்கே இருந்த லெமூரியாக் கண்டமும் தமிழின் தொன்மைக்குச் சான்று.

மனித இனம் கடந்து வந்த பரிணாம நிலைகளான, நாடோடியாய்த் திரிதல், வேட்டையாடுதல், கால்நடை மேய்த்தல், கடல் சேர்தல், உழவு செய்தல் என்கிற பெயருக்கு தமிழன் இட்ட புனைப்பெயர்தான் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன. அப்போதே இந்த உலகத்திற்கு எடுத்துரைத்தவன் தொல்காப்பியன். Touch is the first sense – Taste is the second sense – Smell is the third sense – Seeing is the fourth sense – Listening is the fifth sense – Mind is the sixth sense என்று உலகிற்கு அறிவித்தான். "ஒன்றறிவதுவே உற்றறிவதுவே – ஈரறிவதுவே அதனொடு நாக்கே – மூவறிவதுவே அதனொடு மூக்கே – நான்கறிவதுவே அதனொடு கண்ணே – ஐந்தறிவதுவே அதனொடு செவியே – ஆறறிவதுவே அதனொடு மனமே என்று உலகத்தில் ஒன்று முதல் ஆறறிவு படைத்த இனம் மனித இனம் என்பதை இந்த ஊருக்கும், உலகத்திற்கும் உரக்கச் சொன்னவன் தொல்காப்பியன் என்பதை இந்த அவையிலே நான் பெருமையோடு சுட்டிக்காட்டுகிறேன். வரலாற்றுப் பெருமைவாய்ந்த, காலப்பெருமை வாய்ந்த நம் மொழியை மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் தாங்கிப் பிடிக்கவும், ஓங்கிச் சிறக்கவும் ஓயாமல் உழைத்துக் கொண்டு இருக்கிறார்கள். தமிழை வளர்க்கவும், தமிழை உயர்த்தவும் தமிழ் வளர்ச்சித் துறை பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறது.

ஆனால், தமிழ்தான் எனக்கு எல்லாம் என்று சொல்லி, செம்மொழித் தமிழை வளர்ப்பேன் என்று சொல்லி ஊருக்கும், உலகத்திற்கும் சொன்னவர், ஒன்றும் வளர்க்கவில்லை என்பது ஊருக்கும், உலகத்திற்கும் தெரியும். தண்டவாளத்தில் தலை

வைப்பேன் என்பார், தண்டவாளத்தில் தலை வைத்தது உண்மைதான். அவர் தலை வைத்தது 4 ஆம் நம்பர் பிளாட்பாரம். இரயில் வந்ததோ 3 ஆம் நம்பர் பிளாட்பாரம் என்பதுதான் செய்தி. (மேசையைத் தட்டும் ஒலி) அதைவிடுத்து தமிழுக்காக அதைச் செய்கிறேன், இதைச் செய்கிறேன் என்று தொடர்ந்து உளறிக்கொண்டு, இன்னும் காலத்தை நகர்த்திக்கொண்டிருக்கிறார். ஆனால், உள்ளூர் தமிழ் மாத்திரம் அல்ல, உலகத் தமிழர்கள் யாருமே ஏற்கத் தயாராக இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) பாவம், எஞ்சிய நாட்கள் அவருக்கு மிகவும் துக்ககரமான நாட்களாக நகர்ந்துகொண்டிருக்கின்றன என்பதைத்தான், இ.மெயில், இன்டர்னெட்டில் எல்லாம் உலகத் தமிழர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டம்தோறும் ஆட்சி மொழிக் கருத்தரங்குகளை நடத்த ஆகும் செலவினத் தொகை ரூ.5,000/—த்திலிருந்து ரூ.20,000/— ஆக உயர்த்தித் தந்திருக்கிறார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆட்சி மொழிப் பயிலரங்குகள் மாவட்டம்தோறும் ரூ.30,000/— செலவில் நடத்தப்படுகின்றன. ஆட்சித் தமிழ் புத்தாக்கப் பயிற்சி ரூ.9.30 இலட்சம் செலவில் நடத்தப்படுகிறது. ஆட்சிச் சொல் அகராதி, சிறப்புச் சொல் துணை அகராதிகள் அச்சில் உள்ளன. மனித நாகரிகத்திற்கு மட்டுமல்ல மொழிக்கும் வளர்ச்சி உண்டு. நாள்தோறும் புதிது புதிதாய் புழக்கத்திற்கு வரும் பிறமொழிச் சொற்களுக்கு இணையாக தமிழ்ச் சொற்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. Champion – என்று சொன்னால் வாகையர், Pizza – என்று சொன்னால் பொதி ரொட்டி, Sim Card – என்று சொன்னால் செல் அட்டை என்றும் No Entry – அல்வழி, தற்போது செல்போன் என்று சொன்னால் செல்லிடைப் பேசி. சிலபேர் செல்போன் என்று சொல்கிறார்கள். மிஸ்டு கால் கொடுப்பதில் பாதி நேரம் கழிந்துவிடுகிறது. நான்கூட சொன்னேன் மிஸ்டு கால் கொடுக்காதீர்கள். சொந்தக் காலில் நில்லுங்கள் என்று சொல்கின்ற அத்தகைய சொற்கள் எல்லாம் இந்த அகராதியில் மிக அழகாகப் புகுத்தப்பட்டிருக்கின்றன.

தமிழுக்கும், தமிழிலக்கியத்திற்கும் தொண்டாற்றியவர்களுக்கு விருதுகள் வழங்கி ஊக்கம் தருகிற ஒரே தமிழக முதலமைச்சர் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(மேசையைத் தட்டும் ஒலி) திருவள்ளுவர் விருது, பாரதியார் விருது, பாரதிதாசன் விருது, திரு.வி.க. விருது, கி.ஆ.பெ. விசுவநாதம் விருது, போன்ற விருதுகளுக்கு ரூ.1 இலட்சமும், ஒரு பவுன் தங்கமும் தந்து வருகிறார். சித்திரை முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டாக்கி மீட்டெடுத்திருக்கின்ற புலமையை மீண்டும் புத்துருவாக்கி வரலாற்று உண்மைக்கு உயிர் கொடுத்தது, சித்திரையை தமிழ்ப் புத்தாண்டு என்று அறிவித்த தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நாளில் 5 விருதுகளை உருவாக்கியிருக்கிறார். எந்த அரசும் செய்யாத ஒன்றை செய்திருக்கிறார். 5 விருதுகளை உருவாக்கினார். சிறந்த தமிழ் அமைப்புகளுக்கு தமிழ்த் தாய் விருது, சிறந்த தமிழ் அறிஞர்களுக்கு கபிலர் விருது, சிறந்த நூல் திரட்டாளர்களுக்கு உ.வே.சா. விருது, கம்பனை நாள் எல்லாம் கற்று உணர்கின்றவர்களுக்கு கம்பன் விருது, சொல்லின் செல்வராக மேடை முழுவதும் சென்று முழங்குகிற சொற்பொழிவாளர்களுக்கு சொல்லின் செல்வர் விருது, என்கிற 5 விருதுகளை உருவாக்கி வரலாற்றில் இதுவரை யாரும் இந்தளவு விருதுகளை உருவாக்கியதில்லை என்கிற அளவிற்கு தமிழகத்தில் ஒரு வரலாற்று திருப்புமுனையை ஏற்படுத்தியிருக்கிறார் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு டெல்லி தமிழ்ச் சங்கத்திற்கு ரூ.5 இலட்சம் பரிசு. சங்கப் பாட்டி, மூதாட்டி, தமிழ்ப்பாட்டி ஔவையின் பெயரில் விருது ஒன்றை உருவாக்கி சாதனை படைத்த பெண்களுக்கு வழங்க ஆணையிட்டுள்ளார் என்பதையும் இந்த அவையிலே நான் பெருமையோடு சுட்டிக்காட்டுகிறேன். சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின்கீழ் நூலாசிரியர்களுக்கு ரூபாய் 30,000/–மும் பதிப்பகத்தாருக்கு ரூபாய் 10,000/–மும் வழங்கப்பட்டு வருகின்றன.

பிற்பகல் 4–40

அதைப்போல, மறைகள் நான்கோடு, ஐந்தாவதாக வைக்கத்தக்க உலகப் பொது மறையாம் குறளின் பாக்களை ஒப்புவிக்கும் போட்டி நடத்தப்பட்டு, ஒவ்வொரு சிறாருக்கும் பரிசுத் தொகையாக ரூபாய் 10,000/– வழங்கப்பட்டு வருகிறது.

மாணவர் நெஞ்சில் மொழிப் பற்றையும் அறிவுப் பற்றையும் உருவாக்க மாவட்ட, மாநில அளவில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. கடந்த காலத்தில் மைனாரிட்டி தி.மு.க.

அரசு, பரிசுத் தொகையாக வெறும் ரூபாய் 1,000/– மட்டும் தந்தது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் ரூபாய் ஆயிரத்தை ரூபாய் 10,000/– ஆக உயர்த்தித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது தவிர பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை என்ற திட்டத்தின்கீழ் 100 பேருக்கு திருச்சி மாவட்டம், திருவரங்கத்தில் ரூபாய் 10 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டது. தமிழ் மொழியின் சொத்தான தமிழறிஞர்களின் நூல்கள் தொடர்ந்து நாட்டுடைமையாக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 146 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டிருக்கின்றன.

அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் 641 தமிழறிஞர்களுக்கு மாதந்தோறும் ரூபாய் 2,000/– வீதம் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. தமிழ் வளர்ச்சித் துறைக்கென ரூபாய் 4.45 இலட்சம் மதிப்பீட்டில் தனியாக வலைத்தளம் ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது.

‘புத்தம் புதிய கலைகள் –
பஞ்ச பூதங்களின் நுட்பங்கள் கூறும் செயல்கள்
மெத்த வளருது மேற்கே – அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை’

என்று சொல்வான் பாரதி. அதை இங்கு உண்டு என்பதை நிரூபித்துக்கொண்டிருக்கின்ற விதத்தில் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தின் மூலம் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் மாண்புமிகு முதலமைச்சரின் பிறந்த நாள் நிகழ்வுகள், தாய்மொழித் திருநாள், மொழியாக்கத் திருநாள், நூல் வெளியீடுகள், தமிழியல் – ஆய்விதழ் வெளியீடு போன்றவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு ரூபாய் 177.40 இலட்சத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

உலகப் புகழ் பெற்ற திருக்குறளை அரபு மொழியில் வெளியிடும் முயற்சியை இந்நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. தமிழைச் சொல்லி பிழைப்பு நடத்தியவர்கள் எல்லாம் இதை விட்டுவிட்டார்கள். ஆனால், அரபு மொழியிலும், சீன மொழியிலும் மற்றும் இருக்கக்கூடிய பல்வேறு மொழிகளிலும் ஆய்வுகளைத் தந்திருக்கிறது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு.

1981 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் நாள் தஞ்சைத் தரணியில் தமிழ்ப் பல்கலைக்கழகம் புரட்சித் தலைவர் இதய தெய்வம் எம்.ஜி.ஆர். அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது. இப்பல்கலைக் கழகம், தமிழ் செழிக்கவும், தமிழ் நிலைக்கவும் பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த ஆண்டு, இதற்கு 2 கோடி ரூபாயை சிறப்பு மானியமாக வழங்கி இப்பல்கலைக்கழகத்தை உலகத் தரப் பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், தலைமைச் செயலக மொழிபெயர்ப்புப் பிரிவு, ஆசியவியல் நிறுவனம் போன்றவை தமிழ் வளர்க்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றன.

‘தாய்மையே உண்மையானது
தாய்மையே கருணை கொண்டது
தாய்மையே தன்னலமற்றது
தாய்மையே உன்னதமானது
தாய்மையே வானைவிட உயர்ந்தது
உலகின் அத்தனை மொழிகளிலும்
உள்ள புனிதச் சொல் தாய்மை.
நான் சின்னஞ்சிறு மழலையாய்
தவழ்ந்திருந்த வேளையில்
நான் கண்டுகொண்டது
ஒன்றே ஒன்றுதான்.
இந்த உலகம்
என் தாயின்
மடியைவிடப் பெரியதில்லை.
வளர்ந்தேன்.
சாங் ஜாங்கையும்
மஞ்சள் ஆற்றையும்
என் இடுப்புக்குக் கீழே ஓடவிட்டேன்.
இப்போதும் சொல்கிறேன்.
இந்த உலகம் என் தாயின் மடியைவிடப் பெரியதில்லை’

என்று சொல்வான் ஒரு சீனக் கவிஞன்.

'அம்மா என்றால் தமிழ் வார்த்தை; அதுதான் குழந்தையின் முதல் வார்த்தை' என்று பாடிய தமிழர் தாய், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்கி தமிழ் வளர்ச்சித் துறையினுடைய பதிலுரையை நிறைவு செய்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையினுடைய பதிலுரை.

எங்கள் பசிக்கு, உணவு தந்தவர், எங்கள் உறக்கத்திற்கு விழித்திருக்கிறவர், நாங்கள் பூக்களில் நடக்க, முட்களைத் தாங்குகிறவர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா, கருணை நீங்கள்; கடல் நீங்கள்; காவேரி நீங்கள்; கார்முகில் நீங்கள்; கண்முன்னே காட்சி தரும் கடவுளும் நீங்கள்; விழி நீங்கள்; நாடு நடைபோடும் வழி நீங்கள்; வீடு வளம்பெற ஒளி நீங்கள்; அலையின் எழுச்சி நீங்கள்; அகிலத்தின் சுழற்சி நீங்கள்; தங்க மனம் நீங்கள்; சிங்க குணம் நீங்கள்; தமிழின் சுவை நீங்கள்; தர்மத்தின் அறம் நீங்கள்; பெரியாரின் துணிவு நீங்கள்; அண்ணாவின் அறிவு நீங்கள்; தலைவரின் கனிவு நீங்கள்; மூன்றும் சேர்ந்த மொத்தம் நீங்கள்; 1 ½ கோடித் தொண்டர்களுக்கும், 7 கோடித் தமிழர்களுக்கும் உடம்பில் ஓடும் இரத்தம் நீங்கள்.

பூமிப்பந்தில் இந்திய ஜனத்தொகைக்கு இரண்டாவது இடம். இந்திய ஜனத்தொகையில் இளைஞர்கள் எண்ணிக்கை முதலிடம். தமிழ்நாட்டில் இளைஞர்கள் எண்ணிக்கை 40 சதவீதம். கொட்டிக் கிடக்கும் ஆற்றலை விறகாக்கப் போகிறோமா, வீணையாக்கப் போகிறோமா? இதுதான் நம் முன்னாலே நிற்கிற கேள்வி.

பிற்பகல் 4–45

"உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்" என்று சொல்வார் திருமூலர். 'செங்கற்களாலும் கட்டடங்களாலும் கட்டி எழுப்பப்பட்டிருக்கிற கோபுரங்களுக்குள்ளே மாத்திரம் இறைவன் வசிக்கவில்லை. இரத்தத்தாலும், சதையாலும் கட்டி எழுப்பப்பட்டிருக்கிற இந்த உடலுக்குள்ளே உயிராக வசிக்கிறான்' என்று சொல்வார் திருமூலர். இளைய நெருப்பு உருக்கையே

உருக்கிவிடும் வல்லமை கொண்டது. அதனால்தான், ஆன்மிகப் புரட்சியாளர் விவேகானந்தர் சொன்னார். "நூறு இளைஞர்களைத் தாருங்கள். இந்த நாட்டை மாற்றிக் காட்டுகிறேன்" என்றார். முதுமையின் அனுபவத்தை இளமையின் வேகத்தோடு இணைத்தால் மட்டுமே இந்திய எழுச்சி இமயமாய் உயரும். அதே நேரத்தில் கவனிப்பாரற்றுப் போகும் இளைய ஆற்றல் தேசத்தின் அபாய அறிவிப்பாய் மாறிவிடுகிற அபாயமும் உண்டு. இளைஞர் நலனும், விளையாட்டும் உடம்போடு உயிர்கொண்டிருக்கும் நட்பைப் போன்றது; ஒன்றில்லாமல் மற்றொன்று இல்லை, சாத்தியமில்லை, அது சத்தியமும் இல்லை. பெண்ணினத்தின் தலைமை இருந்தபோதுதான், சமூகம் சரியாய் இருந்ததென்பது மானுடவியல் ஆய்வாளர்களால் முன்மொழியப்பட்ட, வரலாற்றாய்வாளர்களால் வழிமொழியப்படும் உண்மை.

இளைஞர் நலனிலும், விளையாட்டுத் துறையிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் அதிக ஆர்வம் கொண்டவர் என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான் நேரு உள் விளையாட்டரங்கம் நம் கண் முன்னாலே காட்சியாக விரிகிறது. தமிழ்நாடு விளையாட்டில் வளர்ச்சியை எட்ட, தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளுக்காக நேரு விளையாட்டரங்கம், பல்நோக்கு உள் விளையாட்டரங்கம், மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கம், நீச்சல் குள வளாகங்கள், டென்னிஸ் விளையாட்டரங்கம். அத்தனையும் தந்தது தமிழகம் பெற்ற தவப் பயன் மாண்புமிகு அம்மா நீங்கள்தான்.

ஒரு மனிதனுடைய வெற்றிக்கு மூன்று தளங்கள் சரியாக இருக்க வேண்டும். ஒன்று உடல், மனம் மற்றும் அறிவு. உடல் மிகச் சரியாக இருக்க வேண்டும். உடலில் இரண்டு விதமான கொழுப்புகள் நம்முள்ளே தங்குகின்றன. ஒன்று நல்ல கொழுப்பு, மற்றொன்று கெட்ட கொழுப்பு. நல்ல கொழுப்பிற்கு Good cholesterol என்றும் கெட்ட கொழுப்பிற்கு Bad cholesterol என்றும் ஆங்கிலத்தில் சொல்வார்கள். எதைச் சாப்பிட்டாலும், எண்ணெய் பலகாரங்களைச் சாப்பிட்டால், நாம் அதை அழைக்காமலேயே நம் உடலினுள் கெட்ட கொழுப்பு தங்கிவிடும். இந்த உடல் கொழுப்பை எங்கே ஒளித்து வைக்கின்றது தெரியுமா? இது கைகளிலோ அல்லது கால்களிலோ வைப்பதில்லை. அது இடுப்புப் பகுதியைத் தேர்ந்தெடுக்கிறது. இடுப்புப் பகுதியைத் தேர்ந்தெடுத்தவுடன் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி முன்னேறி

அது தொந்தியாகச் சரிகிறது. ஆகவேதான், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொந்தி மரணத்தின் தந்தி என்று சொல்வார்கள். எனக்குக்கூட தொந்தி வந்திருக்கிறது, இது இரண்டாவது விஷயம். (சிரிப்பு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படித் தொந்தி வராமல் பார்க்க வேண்டுமென்பதற்காக உடலைச் சரியான முறையில் பேணிக் காக்க வேண்டும்.

அப்படி உடல் சரியாக இருந்தால், அடுத்த தளம் மனம், அது சரியாக இருக்க வேண்டும். மனம் என்பது எப்போதுமே மாறுபட்டுக்கொண்டே இருக்கும். இது ஒன்றைவிட்டு இன்னொன்றுக்கு ஆசைபட்டுக்கொண்டே இருக்கும். ஒன்று கிடைத்தால் அது இல்லையே, அது கிடைத்தால் நன்றாக இருக்குமோ என்று மனம் துள்ளலோடு ஆசைப்பட்டு சுழன்றுகொண்டே இருக்கும். ஆக, அப்படிப்பட்ட மனதைக் கட்டுப்படுத்த, மனதை ஒருமுகப்படுத்த வேண்டும். அது இரண்டாவது தளம்.

மூன்றாவது தளம் அறிவு. உடல் சரியாக இருந்து, மனமும் சரியாக இருந்து அறிவில்லையென்று சொன்னால் பயனில்லை. ஆகவேதான், வள்ளுவன் சொல்வான் 'அறிவுடையார் எல்லாம் உடையார்', 'அறிவற்றம் காக்கும் கருவி' என்று பேசுவான். 'அறிவுதான் எல்லாவற்றிற்கும் தலையானது. அறிவுடையவர்கள் எல்லாவற்றையும் உடையக்கூடிய வாய்ப்பைப் பெறக்கூடியவர்கள்' என்று வள்ளுவன் வசந்தத்தின் வாசல்களைத் திறந்துவைப்பான். அப்படிப்பட்ட மூன்று தளங்கள் நமக்குச் சரியாக இருந்தால், வாழ்க்கை ஒரு மந்திரச் சொல்லாய்க்கூட அமையும். அப்படி இந்த மூன்று தளங்களுக்கும் அடிப்படையாக இருப்பது விளையாட்டு. ஒரு நொடியில் தொடப்போகும் வெற்றிக் கோட்டைத் தொடுவதற்கு 15 ஆண்டுகள் பயிற்சியை மேற்கொள்கிறான் விளையாட்டு வீரன். விளையாட்டு வீரர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்கிற பாடம் என்னவென்றால், கீழே விழுகிறான், காயம் அடைகிறான், தோல்வி அடைகிறான். இருந்தாலும்கூட அதைப் பற்றிக் கொஞ்சமும் பொருட்படுத்தாமல் மீண்டும் மீண்டும் முயற்சிக்கிற அந்தப் பாங்கு விளையாட்டு வீரர்களிடம் மட்டும்தான் இருக்கும். விளையாட்டுக் குணம் உடையவர்களுக்குத்தான், விளையாட்டு ஆற்றல் உடையவர்களுக்குத்தான் Stamina, போராட்டக் குணம்

இருக்குமென்று நம்முடைய மருத்துவர்கள் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட விளையாட்டு வீரர்களை உருவாக்கக்கூடிய மகத்தான வாய்ப்பை தமிழகம் ஏற்படுத்தி வருகிறது.

ஒலிம்பிக் போன்ற சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா பதக்கப் பட்டியலை வென்று வந்தால், வெற்றி வாய்ப்புக் கிடைக்கும் என்ற நம்பிக்கைக் கதவுகளை இளைஞர்களுக்குத் திறந்து வைக்கிறது. பல்வேறுபட்ட இளைஞர்களை உருவாக்கி, இன்றைக்கு 25 இலட்சம் ரூபாயை தந்து, ஒரு வருடத்திற்கு ரூபாய் 25 இலட்சம் என்று சொல்லி, ஆண்டு முழுவதும் அவர்களைப் பராமரித்து, ஒவ்வொரு வருடமும் ரூபாய் 25 இலட்சம் என்று சொல்லி, ஐந்து வருடத்திற்கு ரூபாய் 1 கோடியே 25 இலட்சம் தருகிற ஒரே அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான் என்பதை நான் பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒவ்வொரு இளைஞருக்குப் பின்னாலும் ஒரு கனவு இருக்கும். கிராமத்திலிருந்து வரும் இளைஞர்களுக்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். வாய்ப்பு ஏற்படுகிறபோதுதான், வாசல்கள் திறக்கின்றபோதுதான் அவன் விருதுகளோடு, வெற்றி வாய்ப்பைப் பெற முடியும். ஷைனி வில்சன் என்கிற தடகளப் போட்டியாளருடைய வாழ்க்கை வரலாற்றை நான் படித்தேன். ஷைனி வில்சன் ஒவ்வொரு முறையும் தன்னுடைய தந்தையாரிடத்தில் ஐஸ் வேண்டுமென்று கேட்பார். ஐஸ் வேண்டுமென்று கேட்கிறபோது, அவர் காசு கொடுத்து வாங்கி வரச்சொல்வார்.

வாங்கி வருகிற அந்த வேகத்தைப் பார்த்து, நம்முடைய குழந்தைக்குள்ளே, அந்த விளையாடுகிற, அந்த வேகமாக ஓடுகிற ஆற்றல் இருக்கிறது; ஆகவே, இந்த ஆற்றலை வளர்க்க வேண்டுமென்பதை யோசித்து, 'பால் ஐஸ் வாங்கி வர வேண்டுமென்று உத்தரவிட்டு, பால் ஐஸ் கரையாமல் இருப்பதற்குள்ளே நீ ஓடி வர வேண்டும்' என்று உத்தரவிடுவார். ஒவ்வொரு முறையும் பால் ஐஸ் கரைந்து விடக்கூடாதே என்பதற்காக ஓடி வந்த ஷைனி வில்சன், ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்றபோது, 'எங்கோ ஒரு மூலையில் என்னுடைய தந்தை ஐஸோடு காத்துக் கொண்டிருப்பதைப்போலத்தான், பால் ஐஸ் கரைந்து விடக்கூடாது என்பதைப் போலத்தான் நான் ஓடினேன்' என்று சொல்வார்

ஷைனி வில்சன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி ஒவ்வொரு இளைஞனுக்குள்ளும், வீரருக்குள்ளும், வீராங்கனைக்குள்ளும் எவ்வளவோ கதைகள் இருக்கின்றன.

பிற்பகல் 4–50

திறன் வாய்ந்த விளையாட்டு வீரர்களைத் தேர்ந்தெடுத்து, 25 இலட்சம் ரூபாய் தருகிற நிகழ்ச்சியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் தந்தார்கள். அதிலே தடகளப் போட்டிக்கு பிரேம்குமார், செல்வி காயத்ரி. வறுமையில் வாடுகிற இந்த விளையாட்டு வீரர்களைத் தேர்ந்தெடுத்தபோது, ஊடகவியல், பத்திரிகை நண்பர்கள் என்னிடத்தில் தொலைபேசியில், 'மகத்தான வாய்ப்பை அம்மா அவர்கள் அரசு தந்திருக்கிறது; மிகச் சரியான தேர்வு' என்று சொன்னார்கள். அதைப்போல நீச்சல் போட்டியிலே செல்வி ஜெயவீனா, மேசைப்பந்து விளையாட்டிற்கு சத்யன், படகோட்டும் போட்டிக்கு செல்வி ஐஸ்வர்யா நெடுஞ்செழியன் என ஐவரைத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொருவருக்கும் ரூ.25 இலட்சம் வீதம் மொத்தம் 1.25 கோடி ரூபாய் நிதி உதவியை வழங்கியவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவேதான், எப்படி 'Each one, Teach one' என்று பள்ளிக் கல்வி இயக்ககத்திலே ஒரு பிரகடனம் இருக்கிறதோ, அப்படித்தான், விளையாட்டுத் துறைக்கு என்று பிரகடனம் இருக்கிறது. தங்கப் பதக்கத்திலிருந்து நாம் தொடங்குவோம் என்பதுதான் விளையாட்டுத் துறையினுடைய பிரகடனம். ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் பெறுபவர்களுக்கு ஊக்கத் தொகை, தங்கம் தட்டி வருபவர்களுக்கு ரூ.200 இலட்சம், வெள்ளி வெல்பவர்களுக்கு ரூ.100 இலட்சம், வெண்கலம் வென்றவர்க்கு ரூ.50 இலட்சம் அள்ளிக் கொடுக்கிற ஒரே அரசு மாண்புமிகு அம்மாவினுடைய அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தில் ஐந்து முறை சதுரங்க சாம்பியன் பட்டம் வென்று தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்திற்கு ரூ.2 கோடியை வழங்கி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாராட்டி மகிழ்ந்தார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போல உலக சதுரங்கக் கூட்டமைப்பின் வேண்டுகோளினை ஏற்று இந்த

ஆண்டு, நவம்பர் மாதம் விஸ்வநாதன் ஆனந்தும் மேக்னஸ் கார்ல்சனும் பங்கு கொள்ளும் உலக சதுரங்க வாகையர் போட்டியினை (உலக செஸ் போட்டி) நடத்துவதற்கு 29 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து தந்தவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, இந்த வகையில், விளையாட்டுத் துறைக்கென்று பல்வேறு சலுகைகளைத் தந்திருக்கிறார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடனே மூன்று மடங்கு நிதியை அதிகரித்து ரூ.112.50 கோடி தொகையை கொடைக் குணத்தோடு கொட்டித் தந்தவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் துறையிலே தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம், தேசிய மாணவர் படை, நாட்டு நலப் பணித் திட்டம், நேரு யுவ கேந்திரா சங்கேதன் போன்றவை சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

“ஓடி விளையாடு பாப்பா” என்று ஒரு பாட்டை பாரதி எடுத்துரைத்தான். அதைப்போல, “Sport is a universal language that can bring people together, no matter what their origin, background, religious beliefs or economic status.” என்று சொல்வார் Kofi Annan. “உலகின் பொது மொழி விளையாட்டு. அது மனிதர்களின் மதம், பொருளாதாரம் போன்ற வேறுபாடுகளைப் போக்கி உலகில் ஒற்றுமையையும் அமைதியையும் நிலவச் செய்கிறது” என்று சொன்னார் ஐ.நா. சபையின் முன்னாள் செயலாளர் Kofi Annan. அப்படிப்பட்ட விளையாட்டை ஊக்குவிக்கும் ஒரே முதல்வர் தன்னிகரில்லாத தியாக தீபம் நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

1992–ல் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் 80 இலட்சம் மதிப்பீட்டில் 1,200 பேர் பயிற்சி பெறும் பல்வேறு சிறப்பு அகாடமிகள் 15–ஐ உருவாக்கியதோடு, மாநிலத்தின் விளையாட்டுத் தரத்தினை உயர்த்தியிருக்கிறது. ‘ஆரோக்கியத்தின் தூரம் மூன்று கிலோ மீட்டர். அதை ஒவ்வொரு நாளும் போய் பார்க்க வேண்டும்’ என்று சொன்னார் நம் தேசப் பிதா காந்தி. அப்படித்தான், இந்த உடற்பயிற்சியின் அவசியத்தை

உணரும் விதமாக, தமிழகத்தில் தரம்மிக்க விளையாட்டு வீரர்களைக் கண்டறிய 6, 7, 8 ஆம் வகுப்பு மாணவ, மாணவியருக்கு உடல் திறனறியும் சோதனை, பெருமளவில் கிராம மக்கள் பங்கேற்கும் பைக்கா விளையாட்டுப் போட்டிகள், மாவட்ட, மாநில அளவிலான போட்டிகளையும் தொடர்ந்து நடத்தி வருகிறது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்.

"பிஞ்சிலேயே பயிற்சி செய்தால் பெரிய வெற்றியையும் பெறலாம்" என்பார்கள். 10–14 வயதுக்குட்பட்டவர்கள் மற்றும் இவர்களுக்கெல்லாம் "முதன்மை நிலை விளையாட்டு மையம்" செயல்பட்டு வருகிறது. இப்படித்தான், குறிப்பிட்ட விளையாட்டுத் திறன் மேம்பாட்டு மையத்தின் மூலமாக, இந்திய அணியின் முன்னாள் கால் பந்து விளையாட்டு வீரர் திரு. ராமன் விஜயன் அவர்கள் கால்பந்துப் பயிற்சி அளித்து வருகிறார் என்கிற பெருமையோடு, இந்த அவையிலே நான் பதிவு செய்கிறேன்.

பிற்பகல் 4–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் சத்துவாச்சாரியில், இரண்டு, மூன்று தெருக்களில் இருப்பவர்கள் அத்தனை பேரும் பளுதூக்கும் பயிற்சியாளர்களாக இருக்கிறார்கள். அதைப்போல, "நீந்தக் கற்றுக் கொள்" என்ற திட்டத்தின்மூலம் 22 மையங்களில் 7,325 நபர்கள் நீச்சல் பயிற்சி பெற்று வருகிறார்கள். பைக்கா விளையாட்டுப் போட்டிகளின்மூலம் கிராமப்புற விளையாட்டை மேம்படுத்துதல், மாநில விளையாட்டுக் கழகங்கள் நடத்தும் போட்டிகள், முதலமைச்சர் கோப்பைக்கான தடகளம் மற்றும் நீச்சல் போட்டிகள், முதலமைச்சர் கோப்பைக்கான குழுப் போட்டிகள், சென்னை ஓப்பன் டென்னிஸ் போட்டிகள், மாற்றுத் திறனாளிகளுக்கான போட்டிகள், அரசுப் பணியாளர்களுக்கான போட்டிகள் எனப் பல்வேறு வகையான விளையாட்டுப் போட்டிகளை தமிழக அரசு நடத்தி வருகிறது. இந்த முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவிலான போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு உயர் பரிசுத் தொகைகளை அறிவித்து, விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பவர் மாண்புமிகு அம்மா அவர்கள். முதல் பரிசாக ரூ.1 இலட்சம், இரண்டாவது பரிசாக ரூ.75,000/–, மூன்றாவது பரிசாக ரூ.25,000/–, நான்காவது பரிசாக ரூ.10,000/–, மொத்தம் 716 வெற்றியாளர்களுக்கு ரூபாய் 452.02

இலட்சத்தைத் தந்த ஒரே அரசு தமிழக அரசுதான் என்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அடுத்து, விளையாட்டு வீரர்கள் ஓய்வூதியம். விளையாட்டு வீரர்கள் ஓய்வடைந்து, தங்களால் இயலாத நிலை அடைந்தால், அவர்களுக்கு 3,000/– ரூபாயாக உயர்த்தித் தந்து, 70 பயனாளிகளுக்கு இதுவரை 25.20 இலட்சம் ரூபாயைத் தந்தவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பொறியியல் கல்லூரிகளில் விளையாட்டு வீரர்களுக்கான இடங்களின் எண்ணிக்கையை Sports Quota–வை 100–லிருந்து 500–ஆக உயர்த்தித் தந்தவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்டுகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

வடக்கில் இருந்து வருவது வாடைக் காற்று, கிழக்கில் இருந்து வீசுவது கொண்டல் காற்று, மேற்கில் இருந்து வீசுவது கோடைக் காற்று, தெற்கில் இருந்து வருவது தென்றல் காற்று, அத்தனைக் காற்றும் கட்டுப்படும் புதுக் காற்று, புரட்சிக் காற்று இந்தியாவின் இன்றைய நம்பிக்கைக் காற்றுதான் நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா. அவர்களுடைய ஆட்சியிலே, *(மேசையைத் தட்டும் ஒலி)* தேசிய மாணவர் படைக்கு இந்த ஆண்டு 35.46 கோடி நிதியை வழங்கியுள்ளார்கள்.

அதுமாத்திரமல்ல, 3,70,018 மாணவ தொண்டர்களோடு நாட்டு நலப் பணித் திட்டத்தில் முதலிடம் வகிக்கிறது தமிழ்நாடுதான் என்பதைப் பெருமையோடு இந்த அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரம் நட்டு, மண் காக்கும் பணியை இத்திட்டம் மாநிலம் முழுவதும் முழுமையாகச் செயல்படுத்தி வருகிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்கள் அறிவுக்கு அகரம் தந்தவர், எங்கள் உணர்வுக்கு உயிர் தந்தவர், கல்லாய் இருந்த எங்களைச் சிலையாகச் செதுக்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவை வணங்கி பதிலுரையை நிறைவு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியோடு பள்ளிக் கல்வித் துறையினுடைய அறிவிப்புகளை வாசிக்கின்றேன்.

1) பார்வையற்ற குழந்தைகளுக்குச் சிறப்புக் கல்வி உபகரணங்கள் வழங்குதல்

மாற்றுத் திறனாளிகளை சமூகத்தின் ஓர் அங்கமாகவும், நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் அவர்களும் பங்கேற்கும் வகையில் சம வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவும் அவர்களது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தி, தன்னம்பிக்கை வளரச் செய்யவும் அவர்களுக்காக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் பல திட்டங்களைத் தீட்டி இவ்வரசு செயல்படுத்தி வருகிறது.

மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளை முறையான பள்ளிகளில் சேர்ப்பதற்கு மாநில அளவில் சிறப்புக் கவனம் செலுத்தப்படுகின்றது. பார்வைக் குறைபாடு, இயக்கக் குறைபாடு, தற்புனை ஆழ்வு, கற்றலின் குறைபாடு, மனவளர்ச்சிக் குறைபாடு மற்றும் இதர குறைபாடுகள் உடைய மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகள் இவ்வரசின் பல்வேறு திட்டங்கள் வாயிலாகப் பயன்பெற்று வருகின்றனர்.

நல்ல உடல் நலம் கொண்ட குழந்தைகள் மட்டுமின்றி, சிறப்புக் கவனம் தேவைப்படும் மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளும் தரமான கல்வி பெறுவதற்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இவ்வரசு 2013–2014 ஆம் கல்வி ஆண்டில் பள்ளிகளில் பயிலும் பார்வையற்ற குழந்தைகளுக்குக் கற்பித்தல் முறையை எளிதாக்கக் கீழ்க்கண்ட சிறப்புக் கல்வி உபகரணங்கள் அடங்கிய பையினை வழங்கத் திட்டமிட்டுள்ளது:

Stylus, Smaller Tailor Frame, Abacus, Folding Stick, Draught Board with coins, Arithmetic types, Algebra types *போன்றவற்றை வழங்கும் இத்திட்டத்தின்மூலம் 2,221 மாணவர்கள் பயனடைவார்கள். இதற்கான திட்டச் செலவு ரூபாய் 18.52 இலட்சம் ஆகும்.*

2) சதுரங்க விளையாட்டுப் போட்டி

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாணவ, மாணவியர்களின் அறிவுத்திறன் வளர்வதற்கும், கூர்மையாகச் சிந்திக்கும் ஆற்றல் விரிவடைவதற்கும், 7 வயது முதல் 17 வயது வரை உள்ள பள்ளி மாணவர்களுக்குச் சதுரங்க விளையாட்டு அறிமுகப்படுத்தப்படும் என 26–8–2011 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி

எண் 110–ன்கீழ் சட்டமன்றப் பேரவையில் வெளியிட்ட அறிவிப்பிற்கிணங்க 2012–2013 கல்வியாண்டு முதல் 39,469 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளிகளிலும், 5,082 அரசு உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளிலும் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி, சுயநிதிப் பள்ளிகளில் சதுரங்க விளையாட்டு அறிமுகப்படுத்தப்பட்டது. மாணவர்கள் நன்கு பயிற்சி பெற்ற பின்னர் பள்ளிக் கல்வித் துறையும், மாநில விளையாட்டு ஆணையமும் இணைந்து பள்ளிகளில் சதுரங்க விளையாட்டுச் சங்கங்கள் ஏற்படுத்தி, முதற்கண் பள்ளிகளுக்கிடையே போட்டிகள் நடத்தவும், பின்னர் 2013–2014 ஆம் கல்வி ஆண்டிலிருந்து கல்வி மாவட்டம், மண்டலம் மற்றும் மாநில அளவிலான பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகள் மற்றும் குடியரசு தின விளையாட்டுப் போட்டிகளில் இச்சதுரங்க விளையாட்டுப் போட்டிகள் நடத்தவும் வழிவகை செய்யப்பட்டது.

மாணவர்களின் சதுரங்க விளையாட்டுத் திறனை வெளிக்கொணரும் வகையில் 2013–2014 ஆம் கல்வியாண்டில் முதற்கண் 269 வட்டாரங்களில், வட்டார அளவிலான பள்ளிகளுக்கிடையேயும், பின்னர் கல்வி மாவட்ட அளவில் 67 கல்வி மாவட்டங்களிலும், பின்னர் மண்டல அளவில் 15 மண்டலங்களிலும் பள்ளி மாணவர்களுக்குச் சதுரங்க விளையாட்டுப் போட்டி நடத்தப்பட்டு, இறுதியாக மாநில அளவிலான போட்டிகள் நடத்தப்படும். இதற்கான செலவினம் ரூ.22 இலட்சம் ஆகும்.

பிற்பகல் 5–00

3) ஆங்கிலவழிப் பிரிவுகள் தொடங்குதல்

தற்போதைய கல்வி முறையில், வேலைவாய்ப்பிற்கு ஆங்கிலக் கல்வியின் அவசியம் கருதி, தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் ஆங்கில மொழிப் பயிற்சியில் சிறந்து விளங்குவதைப் போன்று ஊரகப் பகுதிகளிலுள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களும் எதிர்கால வாழ்க்கைக்குத் தேவையான ஆங்கில மொழி பயில, பள்ளியிலேயே வாய்ப்பளிக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்குடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2012–2013 முதல் அரசுப் பள்ளிகளிலும் ஆங்கிலவழிக் கல்வி வழங்க ஆணையிட்டார்கள். அதன்படி 2012–2013 ஆம்

கல்வியாண்டில் 320 ஊராட்சி ஒன்றியத் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள், அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் ஒன்று மற்றும் ஆறாம் வகுப்பில் தலா இரண்டு ஆங்கில வழிப் பிரிவுவீதம் 640 பிரிவுகள் தொடங்கிட அனுமதித்து, அப்பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இதனால் 22,400 மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

ஆங்கிலவழிக் கல்வி கற்க அனைவருக்கும் வாய்ப்பளிக்க வேண்டும் என்ற நோக்குடன், வரும் 2013–2014 ஆம் கல்வியாண்டு முதல் தேவைப்படும் அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலவழிப் பிரிவுகள் தொடங்கப்படும். இதனால் ஆண்டொன்றுக்கு சுமார் 1,50,000 மாணவர்கள் பயன்பெறுவர். (மேசையைத் தட்டும் ஒலி)

4) நூலகங்களைத் தரம் உயர்த்துதல்

அனைவருக்கும் சிறந்த வாசிப்பு வசதிகள் கிடைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இவ்வரசு நூலகத்திற்கு முக்கியத்துவம் அளித்துள்ளது. அவ்வகையில் குறைந்த செலவில் அதிக வாசகர்களுக்குச் சிறந்த வாசிப்பு வசதிகளை வழங்குதல் என்ற இலக்குடன் தமிழ்நாட்டில் பொது நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. அனைவருக்கும் நூலகம் என்ற இலக்கினை அடையும் வகையில் ஆயிரத்திற்கு மேல் மக்கள் தொகையுள்ள இடங்களில் பகுதிநேர நூலகம் திறப்பது பொது நூலகத் துறையின் முக்கியச் செயல்பாடாகும். மேலும், இப்பொது நூலகச் சேவையினை கிராமப்புறங்களில் 5,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள நூலகம் இல்லாத கிராமங்களில் வழங்கும்பொருட்டு புதியதாக ஊர்ப்புற நூலகங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும், ஏற்கெனவே பகுதிநேர நூலகங்களாகச் செயல்பட்டுவரும் நூலகங்கள் ஊர்ப்புற நூலகங்களாகத் தரம் உயர்த்தப்படுகின்றன. மேலும், இத்தகைய ஊர்ப்புற நூலகங்கள் கிளை நூலகங்களாகவும் தரம் உயர்த்தப்படுகின்றன. இவ்வாறு சென்ற 2012–2013 ஆம் ஆண்டில் மாவட்டத்திற்கு 5 பகுதிநேர நூலகங்கள்வீதம் மொத்தம் 160 பகுதிநேர நூலகங்கள் ஊர்ப்புற நூலகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டு, அந்நூலகங்களுக்கு 160 ஊர்ப்புற நூலகர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டன.

2013–2014 ஆம் ஆண்டில் மாவட்டத்திற்கு *3* பகுதிநேர நூலகங்கள் வீதம் *96* பகுதிநேர நூலகங்கள் ஊர்ப்புற நூலகங்களாகத் தரம் உயர்த்தப்படும். அந்நூலகங்களுக்கென *96* ஊர்ப்புற நூலகர் பணியிடங்கள் உருவாக்கப்படும். மாவட்டத்திற்கு *5* ஊர்ப்புற நூலகங்கள் வீதம் *160* ஊர்ப்புற நூலகங்கள் கிளை நூலகங்களாகத் தரம் உயர்த்தப்படும். இதற்கான திட்டச் செலவினம் ரூ.*8.35* கோடியாகும்.

5) மாதிரி நூலகம் உருவாக்குதல்

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி பொது நூலகங்களின் சேவைகளை மேம்படுத்தும் நோக்கில் குறைந்த செலவில் அதிக வாசகர்களுக்குச் சிறந்த வாசிப்பு வசதிகளை வழங்குதல் என்ற இலக்குடன் பொது நூலகத் துறை செயல்பட்டு வருகிறது. பொது நூலகத் துறையின்கீழ் தமிழகமெங்கும் பின்வரும் *4,093* பொது நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன:–

வரிசை எண்	நூலகங்கள்	எண்ணிக்கை
1.	மாவட்ட மைய நூலகங்கள்	32
2.	கிளை நூலகங்கள்	1,785
3.	நடமாடும் நூலகங்கள்	10
4.	ஊர்ப்புற நூலகங்கள்	1,885
5.	பகுதிநேர நூலகங்கள்	399
6.	கன்னிமாரா (மாநில மைய) பொது நூலகம்	1
7.	அண்ணா நூற்றாண்டு நூலகம்	1
	மொத்தம்	4,093

மாவட்ட மைய நூலகங்களில் நூலகச் சேவையினை மேம்படுத்தும்பொருட்டு, காஞ்சிபுரம், கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்ட மைய நூலகங்கள் ஒவ்வொன்றும் ரூ.*50.00* இலட்சம் செலவினத்தில் மாதிரி நூலகங்களாகத் தரம் உயர்த்தப்படும். இதனால் *500*–க்கும் மேற்பட்ட புத்தக ஆர்வலர்கள் பயன்பெறுவர். இதற்கான மொத்தத் திட்டச் செலவினம் ரூ.*1.5* கோடி ஆகும்.

6) நூலகங்களில் குழந்தைகள் பகுதியினை நவீனப்படுத்துதல்

குழந்தைப் பருவத்திலிருந்தே பாடப் புத்தகங்கள் மட்டுமல்லாது பிற புத்தகங்களையும் வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கவும், அதன்பொருட்டு நூலகத்திற்கு வருவதற்கான ஆர்வத்தை அவர்களிடையே ஏற்படுத்தவும், குழந்தைகளை ஈர்க்கும் விதத்தில் அனைத்து மாவட்ட நூலகங்களிலும் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் செயல்படும் 150 பெரிய கிளை நூலகங்களிலும் ஏனையோருக்கான பிரிவுகளுடன் குழந்தைகளுக்கென தனியாக ஒரு பகுதி செயல்பட்டு வருகின்றது. அப்பகுதியில் குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்கான போதுமான சிறந்த புத்தகங்களுடன் மற்றும் பொருத்தமான Multimedia Computer-Section போன்ற இதர நவீன தொழில்நுட்ப வசதியுடன் கூடிய படிக்கும் சாதனங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி கோயம்புத்தூர் மைய நூலகத்தில் குழந்தைகள் பகுதி நவீனப்படுத்தப்பட்டு செம்மையாகச் செயல்பட்டு வருகிறது.

அதேபோல் 2013–2014 ஆம் ஆண்டில் மதுரை, திருச்சி, விருதுநகர் மற்றும் ஈரோடு ஆகிய நான்கு மாவட்ட மைய நூலகங்களில் உள்ள குழந்தைகள் பகுதிகளுக்கு ரூ.20 இலட்சம் செலவில் கணினி, கல்விக் குறுந்தகடுகள் போன்ற நவீனத் தொழில்நுட்பம் படிக்கும் சாதனங்களுடன், புவியியல் வரைபடம், உலக உருண்டை மற்றும் விளையாட்டுப் பொருள்களுடன் கூடியதாக நவீனப்படுத்தப்படும்.

பிற்பகல் 5–05

7) மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தில் உள்ள 2 இணை இயக்குநர்களுக்கு ஊர்திகள் வழங்குதல்

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி அனைத்துப் பள்ளிகளிலும் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டு செயல்பட்டுவரும் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை மற்றும் முப்பருவ கல்வி முறை ஆகிய இரு திட்டங்களை முனைப்புடன் பள்ளிகளில் செயல்படுத்திட தலைமை நிறுவனம் ஒன்று இருப்பது இன்றியமையாதது ஆகும். இதனைக் கருத்தில் கொண்டு 1989 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வந்த ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்

பயிற்சி நிறுவனமாக 26–3–2012 முதல் தரம் உயர்த்தப்பட்டது. இந்நிறுவனம்மூலம் திறன் மேம்பாடு சார்ந்த பயிற்சிகள், கலைத் திட்டம், பாடத் திட்டம் மாற்றியமைத்தல் மற்றும் பாட நூல்களை மேம்படுத்துதல். குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009–ஐ நடைமுறைப்படுத்துதல், தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டினை அறிமுகப்படுத்துதல், முப்பருவக் கல்வித் திட்டத்தின்படி பாட வடிவமைப்பு மற்றும் பயிற்சிகளை மேற்பார்வை செய்தல், கல்வி ஆய்வுகள் நடத்துதல், ஆங்கில ஆசிரியர்களுக்கான பயிற்சி, பிற பணியிடைப் பயிற்சிகளைத் திட்டமிட்டு நடத்துதல் போன்ற பணிகள் செயல்படுத்தப்படுகின்றன, தமிழகத்தில் 30 மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்களும், 9 அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களும், 43 அரசு உதவி பெறும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களும் மற்றும் 530 சுயநிதி தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களும் உள்ளன, இப்பணிகளைக் கவனிக்க ஒரு இயக்குநர் தலைமையில் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட இரண்டு இணை இயக்குநர்கள் பணியிடங்களுடன் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்குக் கூடுதலாக இரண்டு இணை இயக்குநர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டு அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இந்நிறுவனத்தில் மேற்காணும் பணிகளைக் கையாளவும் புதிதாக அனுமதிக்கப்பட்ட இரண்டு இணை இயக்குநர்கள் அலுவலகப் பணிகள் மற்றும் களப் பணிகள் ஆற்றவும் ஊர்திகள் மிகவும் இன்றியமையாதவையாகும். எனவே ரூ.12 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு ஊர்திகள் 2013–2014 ஆம் நிதியாண்டில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

8) ஆசிரியர் காலிப் பணியிடங்கள் நிரப்புதல்

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி மாணவ, மாணவியர்களுக்குத் தரமான கல்வி வழங்கும்பொருட்டு, 2011–2012 மற்றும் 2012–2013 ஆண்டுகளில் மொத்தம் 63,125 ஆசிரியர் பணியிடங்களுக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், இதன் தொடர்ச்சியாகவும் தொடக்கக் கல்வி, இடைநிலைக் கல்வி, மேல்நிலைக் கல்வி ஆகியவை சிறப்புடன் அமையவும், மாணவர்கள் தரமான கல்வியைப் பெறவும் கீழ்க்காணும் 3,711 ஆசிரியர் பணியிடங்கள் நடப்புக் கல்வி ஆண்டில் நிரப்பப்படும்: (மேசையைத் தட்டும் ஒலி)

வரிசை எண்	ஆசிரியர்களின் வகை	எண்ணிக்கை
1.	நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்	314
2.	தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர்கள்	380
3.	முதுகலை ஆசிரியர்கள்	880
4.	பட்டதாரி ஆசிரியர்கள்	1,094
5.	இடைநிலை ஆசிரியர்கள்	887
6.	சிறப்பாசிரியர்கள்	156
	மொத்தம்	3,711

9) ஆசிரியர் சார்ந்த காலிப் பணியிடங்கள் நிரப்புதல்

தமிழகத்தில் தொடக்கப் பள்ளிகளின் செயல்பாடுகளைக் கண்காணிக்கவும், தொடக்கக் கல்வியின் தரத்தை உயர்த்தவும் மற்றும் ஆசிரியர்களுக்குத் தரமான பயிற்சி அளிக்கவும் தொடக்கக் கல்வி இயக்ககம் மற்றும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தின் கட்டுப்பாட்டில் பின்வரும் 125 காலிப் பணியிடங்கள் நடப்புக் கல்வியாண்டில் நிரப்பப்படும்: (மேசையைத் தட்டும் ஒலி)

வரிசை எண்	ஆசிரியர்களின் வகை	எண்ணிக்கை
1.	உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள்	16
2.	முதல்வர்கள், அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம்	2
3.	விரிவுரையாளர்கள், அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம்	99
4.	உடற்கல்வி இயக்குநர்கள், மாவட்டக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்	8
	மொத்தம்	125

10) ஆசிரியரல்லாத காலிப் பணியிடங்கள் நிரப்புதல்

தமிழகத்தில் கல்வியின் தரத்தை உயர்த்த பள்ளிகளில் ஆசிரியர்களைப் பணியமர்த்தியபோது மட்டுமல்லாது, அலுவலகப் பணிகளைச் செம்மையுடன் செயல்படுத்தவும் அரசால் வழங்கப்படும் அனைத்துத் திட்டங்களும் உரிய நேரத்தில் மாணவர்களுக்குச் சென்றடையச் செய்யவும், ஆசிரியரல்லாத பணியிடங்கள் நிரப்புவது இன்றியமையாததாகிறது. எனவே, பின்வரும் 1,146 காலிப் பணியிடங்கள் நடப்புக் கல்வியாண்டில் நிரப்பப்படும்: (மேசையைத் தட்டும் ஒலி)

வரிசை எண்	ஆசிரியர்களின் வகை	எண்ணிக்கை
1.	உதவியாளர்கள்—நேரடி நியமனம் (ஒருமுறை மட்டும்)	850
2.	சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் நிலை—3	18
3.	இளநிலை உதவியாளர்கள்	188
4.	தட்டச்சர்கள்	90
	மொத்தம்	1,146

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையினுடைய அறிவிப்புகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அனுமதியோடு வாசிக்கிறேன்.

1) மேயர் இராதாகிருஷ்ணன் விளையாட்டரங்கில் செயற்கை இழை வளைகோல்பந்து ஆடுகளம் சீரமைத்தல்

கடந்த 1995 ஆம் ஆண்டில் நடைபெற்ற 7—வது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளுக்கு முன்னர் மேயர் இராதாகிருஷ்ணன் விளையாட்டரங்கில் செயற்கை இழை வளைகோல் பந்து ஆடுகளம் அமைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 2004 ஆம் ஆண்டு சேம்பியன் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளுக்காக இந்த ஆடுகளம் சீரமைக்கப்பட்டது. செயற்கை இழை வளைகோல் பந்து ஆடுகளத்தின் பயன்பாடு 7 முதல் 10 ஆண்டுகளாகும். ஆடுகளம் அமைக்கப்பட்ட நாள் முதலாக முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு

வருகிறது. இந்நிலையில் தற்போது ஆடுகளம் வழுக்கும் தன்மையுடையதாக உள்ளதால் விளையாட்டு வீரர்கள் பயிற்சி மேற்கொள்ள கடினமாக உள்ளது. வருங்காலங்களில் நடைபெறவுள்ள பன்னாட்டு மற்றும் தேசிய அளவிலான போட்டிகளைக் கருத்தில்கொண்டு, தற்போதுள்ள செயற்கை இழை ஆடுகளத்தினை ரூ.3.5 கோடியில் சீரமைத்திட மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5—10

2) அகில இந்திய குடிமைப் பணி விளையாட்டுப் போட்டிகள் மாதிரி மாநில அளவில் குடிமைப் பணி போட்டிகளை நடத்துதல் (8 விளையாட்டுகள்—ஆண்கள் மற்றும் பெண்கள்)

ஆண்டுதோறும் அகில இந்திய குடிமைப் பணி விளையாட்டுப் போட்டிகள் இந்திய அரசின் சார்பாக நடத்தப்பட்டு வருகின்றன. உடற்பயிற்சி குறித்த விழிப்புணர்வையும், விளையாட்டுக் கலாச்சாரத்தையும் அரசு ஊழியர்களிடையே உருவாக்கும் வகையில் மற்றும் தமிழ்நாடு சார்பாகக் கலந்துகொள்ளும் சிறந்த அணிகளை, அகில இந்திய குடிமைப் பணி விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கச் செய்வதற்கு ஏதுவாக, மாநில அளவில் பல்வேறு விளையாட்டுகளில் குடிமைப் பணி விளையாட்டுப் போட்டிகளை நடத்திட மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அகில இந்திய குடிமைப் பணி விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்பவர்கள் மாநிலத்தில் உள்ள விளையாட்டு வசதிகளை இலவசமாகப் பயன்படுத்தலாம்.

3) மாவட்ட விளையாட்டு வளாகங்களில் உடற்பயிற்சிக் கூட (Gym) வசதிகள் செய்தல்

மாவட்ட விளையாட்டு வளாகங்களில் உடற்பயிற்சிக் கூடம் அமைப்பதன்மூலம் நல்ல ஆரோக்கியம் மற்றும் அனைவரது நலன்கள் மேம்படுத்தப்படுவதுடன் இளைஞர்கள், சிறார்கள், ஆண்கள் மற்றும் பெண்கள் சீரிய உடல் நலத்துடன், ஆரோக்கியமாக வாழ வழிவகுக்கும். அனைத்து மாவட்ட விளையாட்டு வளாகங்களில் உடற்பயிற்சிக்கூட வசதிகளை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. உடற்பயிற்சிக் கூடம் அமைத்தல்

மற்றும் உடற்பயிற்சிக்கான தரமான உபகரணங்கள் வழங்குதல் போன்ற பணிகளுக்காக மாவட்டம் ஒன்றுக்கு ரூ.40 இலட்சம் தேவைப்படுகிறது. கட்டமைப்பு வசதிகள்—ரூ.20 இலட்சம், உடற்பயிற்சி உபகரணங்கள்—ரூ.20 இலட்சம். முதற்கட்டமாக 10 மாவட்டங்களில் உடற்பயிற்சிக்கூடம் மொத்தம் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைத்திட மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

4) விருதுநகர் மாவட்டத்தில் நீச்சல் குளம் கட்டுதல்

தற்போது மாநிலத்தில் 21 நீச்சல் குளங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், 4 நீச்சல் குளங்கள் கட்டப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மாவட்ட தலைநகரங்களிலும், ஓர் திறந்தவெளி விளையாட்டரங்கம், ஓர் உள் விளையாட்டரங்கம் மற்றும் ஒரு நீச்சல் குளம் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் விருதுநகர் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் ரூ.80.00 இலட்சம் செலவில் நீச்சல் குளம் ஒன்று கட்டுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

5) விழுப்புரம் விளையாட்டரங்கில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளுதல்

விழுப்புரம் நகரின் மையப் பகுதியில் 14.5 ஏக்கர் நிலப் பரப்பில் அமைக்கப்பட்டுள்ள ஒரு திறந்தவெளி விளையாட்டரங்கம், விளையாட்டு வீரர்கள் மற்றும் பொது மக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

மேலும், இவ்விளையாட்டரங்கை மேம்படுத்த கீழ்க்காணும் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளன:

1. மழைக்காலங்களில் நீர் தேங்குவதைத் தவிர்க்க வளாகத்திலுள்ள பள்ளமான பகுதி முழுவதையும் 0.60 செ.மீ. அளவிற்கு உயர்த்துதல்

2. ஓடுபாதை வடிகால் வசதி ஏற்படுத்துதல் (580 சுற்றளவு)

3. வளாகத்தில் 250 சுற்றளவு நீளத்திற்குப் பாதுகாப்புச் சுவர் அமைத்தல்

4. வளாகத்திற்கு அணுகுப் பாதை அமைத்தல்

மேற்கண்ட பணிகள் ரூ.50.00 இலட்சம் செலவில் மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

6) திருநெல்வேலி மற்றும் திருச்சி உள் விளையாட்டரங்கில் மரத்தாலான தரைத் தள வசதி ஏற்படுத்துதல்

தற்போது, பல்நோக்கு உள் விளையாட்டரங்கம் சென்னை, தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் சேலம் ஆகிய இடங்களில் உள்ளன. மேலும், திருவாரூர், திருநெல்வேலி, திருப்பூர், திருவண்ணாமலை மற்றும் திருச்சி ஆகிய ஐந்து இடங்களில் கட்டப்பட்டு வருகின்றன. இந்த உள் விளையாட்டரங்கங்களில் இதர தரைத் தளங்களைவிட மரத்தாலான தரைத் தளம் அமைப்பதால் அதிக ஆயுட்காலம், குறைவான பராமரிப்புச் செலவு, விளையாட்டுத் தரம் போன்ற கூடுதல் நன்மைகள் கிடைக்கின்றன. தற்காலத்தில் உள்ளரங்க விளையாட்டுக்கள் பெரும்பாலும் மரத்தாலான தரைத் தளத்திலேயே நடத்தப்பட்டு வருகின்றன. சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு இணையாக விளையாட்டுத் திறனை மேம்படுத்த மரத்தாலான தரைத் தளம் மிகவும் அவசியமாகும். எனவே, திருநெல்வேலி மற்றும் திருச்சி உள் விளையாட்டரங்களில் ரூ.57.50 இலட்சம் வீதம் ரூ.115.00 இலட்சம் செலவில் மரத்தாலான தரைத் தளம் அமைத்திட மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

7) குடிசைவாசிகளுக்கு விளையாட்டு வசதிகள் ஏற்படுத்துதல்

குடிசைப் பகுதி மக்களின் புனரமைப்பிற்காக தென் சென்னையில் உள்ள ஒக்கியம் துரைப்பாக்கம் மற்றும் பெரும்பாக்கம் ஆகிய பகுதிகளில் 31,912 குடியிருப்புகளை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் கட்டியுள்ளது. இங்கு வசிக்கும் இளைஞர்களிடையே ஆரோக்கியம் மற்றும் உடற்தகுதி ஆகியவற்றை வளர்ப்பதற்கு அவர்களுக்கு விளையாட்டு வசதிகளை ஏற்படுத்தித் தருவது அவசியமாகிறது. இந்தக் குடிசைப் பகுதியில் அரசு விளையாட்டுத் திடல்களை மேம்படுத்தவும், கூடைப்பந்து, கையுந்துபந்து, கபாடி, டென்னிகாய்ட் ஆகிய விளையாட்டுகளுக்கான வசதிகளை ஏற்படுத்தவும், அதற்குத் தேவையான நிரந்தரம் மற்றும் நிரந்தரமல்லாத விளையாட்டு

உபகரணங்கள், உடற்பயிற்சி உபகரணங்கள் ரூ.26.64 இலட்சம் செலவில் வழங்கவும் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள்.

8) என்.சி.சி. மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக பத்து சரிநுட்ப துப்பாக்கிகள் (Precision Rifles) வாங்குதல்

இயக்குநரக தேசிய மாணவர் படைகளுக்குக்கிடையேயான துப்பாக்கி சுடும் போட்டி ஒரு வருடாந்திர நிகழ்வு. இந்த நிகழ்வு மிகவும் போட்டி வாய்ந்ததாக இருப்பதனால், இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு வருடம் முழுவதும் சரியான உபகரணங்களைக் கொண்டு பயிற்சி அளிப்பது அவசியமாகும். தமிழ்நாடு தேசிய மாணவர் படை மாணவர்கள் தற்போது எடை அதிகம் கொண்ட 0.22 வகை துப்பாக்கிகளைப் பயன்படுத்துகின்றனர்.

இந்த இரக துப்பாக்கிகளின்மூலம் பயிற்சி பெறுவதால் துப்பாக்கி சுடும் போட்டிகளில் அவர்களால் திறம்பட செயல்பட இயலவில்லை. எனவே, மாணவர்களின் பயிற்சிக்காக ரூ.20.00 இலட்சம் செலவில் எடை குறைந்த சரிநுட்பத் திறன்வாய்ந்த நவீன இரக துப்பாக்கிகளை வாங்கிட மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

9) தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் ஆய்வுக் கூட உபகரணங்களுடன் கூடிய ஊடக சாதன வெளிப்பாட்டு வகுப்பறைகள் கட்டுதல்

2005 ஆம் ஆண்டு இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முதன்முதலாக உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்களுக்கு நவீன மற்றும் சிறந்த வசதிகளை அளிக்கும் பொருட்டு விளையாட்டு உடல் இயக்கவியல் மற்றும் இயந்திரவியல் துறையில் ரூ.36.88 இலட்சம் மதிப்பீட்டில் ஆய்வுக்கூட உபகரணங்களுடன் கூடிய ஊடக சாதன வெளிப்பாட்டு வகுப்பறைகள் கட்டுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்கிற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஒப்புதலோடு, தமிழ் வளர்ச்சித் துறையினுடைய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

பிற்பகல் 5–15

1) உலகத் தாய்மொழி நாள்

'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த தமிழ்' என உலக மக்களால் போற்றப்படும் நம் தமிழ் மொழியைப் போற்றிடும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, ஒவ்வோர் ஆண்டும் உலகத் தாய் மொழி நாளான பிப்ரவரி 21 ஆம் நாளன்று ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் மாநில அளவில் கருத்தரங்கம் நடத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2) சென்னையில் உள்ள சாலைகளுக்குத் தமிழ்ப் பெயர்

தமிழ் வளர்ச்சித் துறை, கலை–பண்பாட்டுத் துறை, தொல்லியல் துறை ஆகிய அலுவலகங்கள் அடங்கிய தமிழ் வளர்ச்சி வளாகம் அமைந்துள்ள ஹால்ஸ் சாலைக்கு மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி 'தமிழ்ச் சாலை' எனப் பெயர் சூட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், சென்னையிலுள்ள கொலைகாரன்பேட்டை பெயர் மாற்றம் செய்யப்படும்.

3) உதவி இயக்குநர் பணியிடங்கள் நிலை உயர்வு

தமிழ் வளர்ச்சிப் பணிகளைத் திறம்படச் செயல்படுத்தவும், நீண்ட காலமாகப் பதவி உயர்வின்றி பணியாற்றும் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்களுக்குப் பதவி உயர்வு வழங்கவும் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, ஈரோடு, வேலூர், திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள உதவி இயக்குநர் பணியிடங்கள் துணை இயக்குநர் பணியிடங்களாக நிலை உயர்வு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4) இளந்தமிழர் இலக்கியப் பட்டறை

இளைய தலைமுறையினரிடையே தமிழ் இலக்கியப் படைப்பாற்றலை வளர்க்கும் வகையில் மாவட்டம்தோறும் தேர்வு செய்யப்பட்ட 100 இளைஞர்களுக்குக் கவிதை, கட்டுரை, பேச்சுப் பயிற்சி, துறை சார்ந்த வல்லுநர்களைக் கொண்டு ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒருவார காலம் பயிற்சி அளிக்கும் வகையில் இளந்தமிழர் இலக்கியப் பட்டறை மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில், மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி கூடுதலாக 100 பேருக்கு ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் பயிற்சி அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5) திருக்குறள் காட்சிக் கூடம் அமைத்தல்

வள்ளுவம் கூறும் வாழ்வியல் கருத்துகள், ஆளுமைப் பண்புகள், மேலாண்மை நுட்பங்கள், தனி மனித–குடும்ப அமைப்புகள், சமுதாயம், நாடு, உலகம் சார்ந்த சிந்தனைகளை இன்றைய இளைஞர்கள் கண்டு, கேட்டு, உற்று உணர்தல் சமுதாய வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரியும் என்ற அரிய நோக்கோடு மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் சிறந்த உட்கட்டமைப்புடன் கூடிய ஓவியக் காட்சிக் கூடம் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6) சங்கத் தமிழ்க் காட்சிக் கூடம்

பண்டைத் தமிழரின் பெருமைகளையும், சிறப்புகளையும் இன்றைய தலைமுறையினர் கண்டு பெருமைகொள்ளும் வகையில் சங்கத் தமிழ்ப் பாடல்களை ஓவியங்களாகவும், காணொலிக் காட்சிகளாகவும், அசைவுப் படங்களாகவும் (Animation), *எழிலார்ந்த சிற்பங்களாகவும் காட்சிப்படுத்தும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி சங்கத் தமிழ்க் காட்சிக் கூடம் மதுரையில் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

7) உலகத் தமிழர் பண்பாட்டுத் தகவல் மையம்

உலகமெல்லாம் பரவி வாழ்ந்து கொண்டிருக்கின்ற புலம் பெயர்ந்த தமிழர்கள் தாய்த் தமிழகத்தின் பண்பாட்டு வேர்களைக் கண்டு, கேட்டு இன்புற இலக்கியம் சார்ந்த பண்பாட்டுப் பயணம் மேற்கொள்ளவும், தமிழ், தமிழர்கள் குறித்த தகவல்கள் அவர்களுக்கு ஒருங்கே கிடைத்திடவும், மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் சிறப்பான கட்டமைப்புடன் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் உலகத் தமிழர் பண்பாட்டு வரவேற்பு மற்றும் தகவல் மையம் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வி, இளைஞர் நலன், விளையாட்டு மற்றும் தமிழ் வளர்ச்சித் துறையின்மீது நடைபெற்ற மானியக் கோரிக்கை விவாதத்தில், பதிலுரையில் மற்றும் அறிவிப்புகளை வாசிக்கக்கூடிய அரிய சந்தர்ப்பத்தை, வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிற தமிழகத்தினுடைய தலைசிறந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியறிதலை வெளிப்படுத்திக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிலுரையில் விளக்கமாகவும், தெளிவாகவும் நான் உறுப்பினர்களுக்குப் போதிய கருத்துகளை, பதில்களை அளித்திருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 43–பள்ளிக் கல்வித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 43–பள்ளிக் கல்வித் துறை. மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.16,670,40,10,000/–, மூலதனக் கணக்கில் ரூ.294,84,60,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.5,40,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பிற்பகல் 5–20

(ஆ) கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.37,28,99,000/–, மூலதனக் கணக்கில் ரூ.2,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள்

அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

(இ) கோரிக்கை எண் 49–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 49–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

“இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.112,50,08,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் (13–5–2013) திங்கட்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 5–21 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

93. 2011–2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்தின் ஆண்டறிக்கை. [1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 40/1992) 16 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

94. 2008–2009 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் ஆண்டறிக்கை மற்றும் அவ்வறிக்கையில் இடம்பெற்றுள்ள பரிந்துரைகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய அறிக்கை. [1993 ஆம் ஆண்டு மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 10/1994) 28 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

95. 2011–2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பதின்மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

96. 2011–2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125 (2) (a) *பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

264. மானியக் கோரிக்கை எண் 43–பள்ளிக் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2013–2014. (தமிழ், ஆங்கிலம்)

265. மானியக் கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2013–2014. (தமிழ், ஆங்கிலம்)

266. மானியக் கோரிக்கை எண் 49–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2013–2014. (தமிழ், ஆங்கிலம்)

267. இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) மானியக் கோரிக்கையின்மீதான பதிலுரையின்போது மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2013–2014. (தமிழ்)

268. அரசு உறுதிமொழிக் குழுவின் ஐம்பத்தெட்டாவது அறிக்கை. (2012–2013)

269. அரசு உறுதிமொழிக் குழுவின் ஐம்பத்தொன்பதாவது அறிக்கை. (2012–2013)

270. அரசு உறுதிமொழிக் குழுவின் அறுபதாவது அறிக்கை. (2012–2013)

271. அரசு உறுதிமொழிக் குழுவின் அறுபத்தொன்றாவது அறிக்கை. (2012–2013)

272. அரசு உறுதிமொழிக் குழுவின் அறுபத்திரண்டாவது அறிக்கை. (2012–2013)

273. அரசு உறுதிமொழிக் குழுவின் அறுபத்து மூன்றாவது அறிக்கை. (2012–2013)

274. அரசு உறுதிமொழிக் குழுவின் அறுபத்து நான்காவது அறிக்கை. (2012–2013)

275. அரசு உறுதிமொழிக் குழுவின் அறுபத்தைந்தாவது அறிக்கை. (2012–2013)

276. அரசு உறுதிமொழிக் குழுவின் அறுபத்தாறாவது அறிக்கை. (2012–2013)

277. அரசு உறுதிமொழிக் குழுவின் அறுபத்தேழாவது அறிக்கை. (2012–2013)

278. அரசு உறுதிமொழிக் குழுவின் அறுபத்தெட்டாவது அறிக்கை. *(2012–2013)*

279. அரசு உறுதிமொழிக் குழுவின் அறுபத்தொன்பதாவது அறிக்கை. *(2012–2013)*

280. அரசு உறுதிமொழிக் குழுவின் எழுபதாவது அறிக்கை. *(2012–2013)*

281. அரசு உறுதிமொழிக் குழுவின் எழுபத்தொன்றாவது அறிக்கை. *(2012–2013)*

282. அரசு உறுதிமொழிக் குழுவின் எழுபத்திரண்டாவது அறிக்கை. *(2012–2013)*

283. அரசு உறுதிமொழிக் குழுவின் எழுபத்து மூன்றாவது அறிக்கை. *(2012–2013)*

284. அரசு உறுதிமொழிக் குழுவின் எழுபத்து நான்காவது அறிக்கை. *(2012–2013)*

285. அரசு உறுதிமொழிக் குழுவின் எழுபத்தைந்தாவது அறிக்கை. *(2012–2013)*

286. அரசு உறுதிமொழிக் குழுவின் எழுபத்தாறாவது அறிக்கை. *(2012–2013)*

287. அரசு உறுதிமொழிக் குழுவின் எழுபத்தேழாவது அறிக்கை. *(2012–2013)*

288. அரசு உறுதிமொழிக் குழுவின் எழுபத்தெட்டாவது அறிக்கை. *(2012–2013)*

289. அரசு உறுதிமொழிக் குழுவின் எழுபத்தொன்பதாவது அறிக்கை. *(2012–2013)*

290. அரசு உறுதிமொழிக் குழுவின் எண்பதாவது அறிக்கை. *(2012–2013)*

291. அரசு உறுதிமொழிக் குழுவின் எண்பத்தொன்றாவது அறிக்கை. *(2012–2013)*

292. அரசு உறுதிமொழிக் குழுவின் எண்பத்திரண்டாவது அறிக்கை. *(2012–2013)*

[2013 மே 10

293. அரசு உறுதிமொழிக் குழுவின் எண்பத்து மூன்றாவது அறிக்கை. *(2012–2013)*

294. அரசு உறுதிமொழிக் குழுவின் எண்பத்து நான்காவது அறிக்கை. *(2012–2013)*

295. அரசு உறுதிமொழிக் குழுவின் எண்பத்தைந்தாவது அறிக்கை. *(2012–2013)*

296. அரசு உறுதிமொழிக் குழுவின் எண்பத்தாறாவது அறிக்கை. *(2012–2013)*

297. அரசு உறுதிமொழிக் குழுவின் எண்பத்தேழாவது அறிக்கை. *(2012–2013)*

298. அரசு உறுதிமொழிக் குழுவின் எண்பத்தெட்டாவது அறிக்கை. *(2012–2013)*

299. அரசு உறுதிமொழிக் குழுவின் எண்பத்தொன்பதாவது அறிக்கை. *(2012–2013)*

300. அரசு உறுதிமொழிக் குழுவின் தொண்ணூறாவது அறிக்கை. *(2012–2013)*

301. அரசு உறுதிமொழிக் குழுவின் தொண்ணூற்றொன்றாவது அறிக்கை. *(2012–2013)*

302. அரசு உறுதிமொழிக் குழுவின் தொண்ணூற்றிரண்டாவது அறிக்கை. *(2012–2013)*

303. அரசு உறுதிமொழிக் குழுவின் தொண்ணூற்று மூன்றாவது அறிக்கை. *(2012–2013)*

304. அரசு உறுதிமொழிக் குழுவின் தொண்ணூற்று நான்காவது அறிக்கை. *(2012–2013)*

305. அரசு உறுதிமொழிக் குழுவின் தொண்ணூற்றைந்தாவது அறிக்கை. *(2012–2013)*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–I

(378 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 43–பள்ளிக் கல்வித் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2013–2014

I. கொள்கை

கல்வி சிறந்த தமிழ்நாடு- புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு-நல்ல
பல்விதமாயின சாத்திரத்தின்-மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு

-மகாகவி பாரதியார்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமான கல்வி வழங்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன் 2013-2014 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில், பரந்த மனதுடன், பள்ளிக் கல்வித் துறைக்கு ரூ.16,965.30 கோடி வழங்கியுள்ளார்கள். 2012-2013 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தினைவிட இது 16.57 சதவிகிதம் கூடுதலாகும்.

கடந்த ஆண்டில் பல வெற்றிகளைப் பள்ளிக் கல்வித் துறை சாதித்துள்ளது. அவை, தரமான கல்வி, குழந்தைகளுக்கான இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்தியது, அதிகளவில் மாணவர் சேர்க்கை குறிப்பாக, பெண் குழந்தைகள், பள்ளி சேரா குழந்தைகள், மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளை பள்ளியில் சேர்த்தல், சமூக பாலின வேறுபாடுகளைக் களைதல் போன்றவையாகும்.

முப்பருவ முறையுடன்கூடிய தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையினை நடைமுறைப்படுத்தியதில் தமிழகம் முன்னோடியாகத் திகழ்கிறது. இத்திட்டம் தேசிய அளவில் பெரும் வரவேற்பினைப் பெற்று பல மாநிலங்கள் பின்பற்றுவதற்கான முன்மாதிரியாகத் விளங்குகிறது. மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகிய முக்கியமான முத்தரப்பினரின் பாராட்டினைப் பெற்றுள்ளது. இவ்வெற்றி தந்த உற்சாகத்தினால் முப்பருவ முறையுடன்கூடிய தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை, 2013-2014 ஆம் கல்வியாண்டில் 9 ஆம் வகுப்பிற்கும் விரிவுபடுத்தப்படும்.

[2013 மே 10

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வித் தரத்தினை மேம்படுத்திட முப்பருவ முறையுடன்கூடிய தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையை நடைமுறைப்படுத்தியதுடன், நான்கு இணைச் சீருடைகள், மடிக் கணினி, பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், புத்தகப் பைகள், கல்வி உபகரணங்கள், காலணி, நில வரைபடப் புத்தகம் மற்றும் சிறப்பு ஊக்கத் தொகை ஆகியவற்றை வழங்கியதன் வாயிலாக அவர் அளித்த அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றியுள்ளார். இந்நலத் திட்டப் பயன்கள் அனைத்தும் 2012-2013 ஆம் கல்வியாண்டில் மாணவர்களுக்குச் சென்று அடைந்துள்ளதை பள்ளிக் கல்வித் துறை உறுதி செய்துள்ளது.


மலைப் பிரதேசங்களில் வாழும் குழந்தைகள் அசாதாரண கால நிலைகளில் மற்றும் கடும் குளிர் கால நிலைகளில் பள்ளி செல்லவேண்டிய சூழ்நிலை உள்ளது. இந்நிலையைக் கண்டறிந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மலைப் பிரதேசங்களில் வாழும் 10.30 இலட்சம் குழந்தைகளுக்கு, ரூ.4.12 கோடி செலவில் கம்பளிச் சட்டை வழங்க ஆணையிட்டு உள்ளார்கள். முன்னோடியான இத்திட்டம், வரும் கல்வி ஆண்டிலேயே நடைமுறைப்படுத்தப்படும்.

தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி மாணவர் சேர்க்கை விகிதம் தற்போது முறையே 99.69% மற்றும் 99% ஆக உள்ளது, இது, 2010-2011 ஆம் ஆண்டில் இருந்த சேர்க்கை விகிதமான முறையே 99.60% மற்றும் 98.84%-ஐக் காட்டிலும் அதிகரித்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2011-2012-ல், 49,369 ஆசிரியர் பணியிடங்களையும், 2012-2013-ல், 13,756 ஆசிரியர் பணியிடங்களையும் நிரப்ப ஆணையிட்டதன் விளைவாக, ஆசிரியர் மாணவர் விகிதாச்சாரம் தமிழ்நாட்டில் தொடக்கப் பள்ளியில் 1:26.70 ஆகவும், நடுநிலைப் பள்ளியில் 1:27.28 ஆகவும் அடைய உதவியுள்ளது. தற்போதுள்ள ஆசிரியர்-மாணவர் விகிதாச்சாரம், 2010-2011-ல் இருந்த தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்-மாணவர் விகிதாச்சாரமான 1:28.18 மற்றும் 1:35.20-ஐவிடக் குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்துள்ளது. தேசிய அளவில் மத்திய அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட ஆசிரியர்-மாணவர் விகிதாச்சாரமான தொடக்கப் பள்ளிக்கு 1:30 மற்றும் நடுநிலைப் பள்ளிக்கு 1:35-ஐவிட தமிழ்நாட்டின் விகிதாச்சாரம் மேம்பட்டதாக உள்ளது என்பது பெருமைக்குரிய ஒன்றாகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் "தமிழகத் தொலைநோக்கு 2023"-ல் இடைநிலைக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்து இடைநிலை அளவில் இடை நிற்றலைக் குறைத்திட சிறப்பு ஊக்கத்தொகை வழங்கிட அறிவித்துள்ளார்கள். இதன்படி,

2013 மே 10]


2011-2012 ஆம் ஆண்டில் ரூ.313.13 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, 19.10 இலட்சம் மாணவர்கள் பயனடைந்துள்ளனர். 2012-2013 ஆம் ஆண்டில் மாணவர்களின் எண்ணிக்கை 21.52 இலட்சமாக உயர்ந்து இத்திட்டத்திற்காக ரூ.353.56 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக இக்கல்வியாண்டில் மாணவர் இடை நிற்றல் மேலும் குறைந்து, 24.76 இலட்சம் மாணவர்கள் பயன் பெறும் வகையில் ரூ.381 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (வரைபடம் 1) அண்மையில் நடைபெற்ற X மற்றும் XII ஆம் வகுப்புகளுக்கான பொதுத் தேர்வு எழுதியுள்ள மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதன்மூலம் இடைநிலைக் கல்வியினைத் தொடர்ந்து பயில்பவர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது நிரூபணமாகிறது.



வரைபடம் 1


ஆதாரம்—பள்ளிக் கல்வி இயக்ககம்

பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வினை அரசுப் பள்ளிகளில் *மார்ச்/ஏப்ரல் 2011-ல், 4,69,783 மாணவர்கள் எழுதிய நிலையோடு ஒப்பிடுகையில் மார்ச்/ஏப்ரல் 2012-ல், 4,94,225 மாணவர்களும் (வரைபடம் 2), 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வினை அரசுப் பள்ளிகளில் மார்ச்/ஏப்ரல் 2011-ல், 3,10,434 மாணவர்கள் எழுதியதோடு ஒப்பிடுகையில் மார்ச்/ஏப்ரல் 2012-ல், 3,22,494 மாணவர்களும் (வரைபடம் 3) எழுதியுள்ளனர்.*



வரைபடம் 2

ஆதாரம்— அரசுத் தேர்வுகள் இயக்ககம்



வரைபடம் 3

ஆதாரம் – அரசுத் தேர்வுகள் இயக்ககம்

2013 மே 10]

மாண்புமிகு முதலமைச்சரின் சீரிய வழிகாட்டுதலின்படி, புவியியல் தகவல் வரைபடத்தின் (GIS Mapping) முதல் முயற்சியினால் பள்ளிக் கல்வித் துறை விரைவில் மின்னணு-பள்ளிக் கல்வித் துறையாக மாறவுள்ளது. புவியியல் தகவல் வரைபடத்தின்மூலம் ஒவ்வொரு பள்ளியின் அமைவிடம், அதன் அட்ச, தீர்க்க ரேகைகளுடனும், அருகிலுள்ள குடியிருப்பிலிருந்து உள்ள தூரத்துடனும், பள்ளியில் செய்யப்பட்டுள்ள அடிப்படை வசதிகளுடனும், சாலை இணைப்பு, இரயில் இணைப்பு போன்ற விவரங்களுடன் தெளிவாகக் காண்பிக்கப்படும். எதிர்காலத் திட்டங்களைத் திட்டமிடுவதில் இவ்வரைபடத் திட்டம் பள்ளிக் கல்வித் துறையை மிக உயர்ந்த இடத்திற்குக் கொண்டுச் செல்லும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

புவியியல் தகவல் வரைபடத்துடன் (GIS) இணைந்து கல்வி சார் மேலாண்மைத் திட்டம் (EMIS) பள்ளிகளை மட்டுமன்றி ஒவ்வொரு பள்ளி செல்லும் குழந்தையையும் தொடர்ந்து கண்காணித்திட உதவும். திருச்சிராப்பள்ளியில் உள்ள ஐந்து பள்ளிகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்டுள்ள இம்முன்னோடித் திட்டம் வரும் கல்வியாண்டில் மாநிலம் முழுவதிலும் விரிவுபடுத்தப்படுவதால் இந்தியாவிலேயே புவியியல் தகவல் முறைமையுடன் இணைந்த கல்வி மேலாண்மைத் திட்டத்தை செயல்படுத்திய முதன்மை மாநிலமாகத் தமிழகம் விளங்கும். அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தனியார் பள்ளியில் பயிலும் ஒவ்வொரு குழந்தை பற்றிய தகவல், பள்ளிக் கல்வித் துறையின் மையக் கணினியில் சேகரிக்கப்படுகிறது. இத்தகவல்கள் பள்ளி செல்லும் மற்றும் பள்ளி செல்லாக் குழந்தைகளைக் கண்காணிக்கவும், இடைநிற்றலைக் கட்டுப்படுத்தவும், பாலின/சமூக இடைவெளிக்கான காரணங்களை சீர்தூக்கிப் பார்க்கவும் உதவும். இதன் விளைவாக தேவைக்கேற்ப அரசினால் திட்டங்கள் தீட்டப்படும்.

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009-ல் வரையறுக்கப்பட்டபடி, குடியிருப்புகளுக்கு அருகே உள்ள பள்ளிகள் குறித்த இடைவெளியை அளவிட புவியியல் தகவல் முறைமை உதவுகிறது. இதனடிப்படையில், 100 சதவிகித சேர்க்கையை உறுதிசெய்யும் பொருட்டு படிப்படியாக புதிய தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் ஏற்படுத்தப்படும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாநிலத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் பயன்படுத்தத்தக்க கழிவறைகள்

[2013 மே 10

அமைக்கவும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவும் ஆணையிட்டுள்ளார்கள். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைகளுடன் இணைந்து பள்ளிக் கல்வித் துறை 2,733 பயன்படுத்தத்தக்க கழிவறைகள் இல்லாத அரசுப் பள்ளிகள் மற்றும் 702 குடிநீர் வசதி இல்லாத அரசுப் பள்ளிகளுக்கு இவ்வசதிகளைச் செய்து கொடுத்திட நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அனைத்துப் பள்ளிகளிலும் பயன்படுத்தத்தக்க கழிவறைகள் அமைப்பதிலும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதிலும் ஏதேனும் இடைவெளி ஏற்பட்டால், 100 சதவீதம் அதனை நிறைவு செய்யும் வகையில் நபார்டு நிதியுதவியின்கீழ் ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாக இக்கல்வியாண்டில் அனைத்து அரசுப் பள்ளிகளிலும் கழிவறை மற்றும் குடிநீர் வசதி ஏற்படுத்தப்படும்.

அனைவருக்கும் கல்வி அளிக்கப்படவேண்டும் என்ற தணியாத ஆர்வத்தினால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011-ஐ வெளியிட்டு, அவை நடைமுறைப்படுத்துவதைத் தொடர்ந்து கண்காணிக்க, மாநில மற்றும் மாவட்ட அளவில் குழுக்களை அமைத்துள்ளார்கள். 2013-2014 ஆம் கல்வி ஆண்டில் நலிவுற்ற மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட வகுப்பினருக்கு அருகிலுள்ள பள்ளிகளில் தொடக்க நிலைச் சேர்க்கையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 25 சதவிகிதம் சேர்க்கையை உறுதிப்படுத்திட ஏதுவாகப் படிவங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. அனைத்துப் பள்ளிகளிலும் சமூகத் தணிக்கை மற்றும் பள்ளி வளர்ச்சித் திட்டம் தயாரித்திட பள்ளி நிருவாகக் குழுவுடன் அன்னையர் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

சிறந்த கல்வி அளிக்கப்படுவதை உறுதி செய்வதற்குத் தரமான ஆசிரியர்கள் அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2011-2012 ஆம் ஆண்டில் 49,369 ஆசிரியர் பணியிடங்களையும், 2012-2013 ஆம் ஆண்டில் 13,756 ஆசிரியர் பணியிடங்களையும் ஒப்பளித்தது மட்டுமன்றி, இதுநாள் வரை 51,757 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டதையும் உறுதி செய்துள்ளார்கள். ஒரே நாளில், 20,920 ஆசிரியர்களுக்குப் பணி நியமன ஆணைகள் வழங்கி சாதனை செய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தேசிய அளவிலான வரலாறு படைத்துள்ளார்கள். பள்ளிகளில் ஆசிரியரல்லாத பணியாளர்களின் தேவையை அறிந்து, 2011-2012 மற்றும் 2012-2013 ஆகிய இரண்டு

2013 மே 10]

ஆண்டுகளில் 18,176 பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு அதில் 7,275 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

கல்வியின் தரத்தை மேலும் உயர்த்தும் நோக்கத்தோடு, பள்ளி செல்லும் குழந்தைகளின் படிக்கும் மற்றும் எழுதும் திறனைக் கண்டறிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குழந்தைகளின் வயதிற்கேற்ப படிக்கும் மற்றும் எழுதும் திறனை உயர்த்திட உரிய நடவடிக்கைகள் எடுக்கத் திட்டமிடப்பட்டு வருகின்றது. பாடப் புத்தகங்களில் உள்ள பாடங்களை அந்தந்த வயதினருக்கு ஏற்றனவாக மேம்படுத்தி, ஒரு வகுப்பிற்கும் அடுத்த வகுப்பிற்கும் தொடர்புள்ளதாக அமைப்பதற்குக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இது குழந்தைகள் தங்களின் அறிவாற்றலையும், ஆராய்ந்தறியும் திறனையும் மேம்படுத்திக்கொள்ள உதவும். குழந்தைகள், பொருள் உணராது மனப்பாடம் செய்யும் முறையினை மாற்றி சிந்தனை செய்யும் வகையிலும், பகுத்தாய்ந்து புரிந்து கொள்ளும் வகையிலும் பாடப் புத்தகங்களில் உள்ள பாடங்கள் வடிவமைக்கப்படும். மாநில கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் தகுதி வாய்ந்த ஆசிரியர் குழுவுடன் இணைந்து, தமிழகப் பள்ளிகளை, இதர தேசிய கல்வி வாரியப் (Board) பள்ளிகளுக்கு இணையாக்கும் வகையில் பள்ளி பாடப் புத்தகங்களில் தேவையான திருத்தங்களை மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் சாதிகளற்ற சமத்துவ சமுதாயம் (Casteless Society) மற்றும் பல்லூடகப் பாதுகாப்பு (Cyber Safety) குறித்த பாடங்கள் பாடநூல்களில் சேர்க்கப்பட வேண்டுமென அறிவித்துள்ளார்கள். அவ்வறிவிப்பினை நிறைவேற்றும் வகையில், 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்பு பாடப் புத்தகத்தில் “பன்மைச் சமூகம்” மற்றும் “பல்லூடகப் பாதுகாப்பு” குறித்த பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இம்முன்முயற்சி, காலப் போக்கில் மாணவர்கள் உள்ளத்தில் நல்ல விழுமியங்களை வளர்க்கும் என்பதில் ஐயமில்லை.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் உள்ள குழந்தைகள் அனைவரும் சிறந்த, தரமான கல்வி பெறவேண்டும் என்ற தொலைநோக்கினை எய்திட அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளார்கள். உலக பள்ளி வரைபடத்தில் தமிழகத்தைச் சிறந்த இடத்தில் வைத்திட வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சரின் விருப்பத்தினை நிறைவேற்ற பள்ளிக் கல்வித் துறை அயராது பாடுபடும்.

[2013 மே 10

II. நிதி ஒதுக்கீடு

மானியக் கோரிக்கை எண் 43, பள்ளிக் கல்வி என்ற தலைப்பில் 2013-2014 ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.16965.30 கோடியாகும். இதில் திட்டப் பணிகளுக்கு ரூ.2832.19 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

2013–2014 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு					
	கணக்குத் தலைப்பு		திட்டப் பணிகள்	திட்டத்தில் சேராதது	மொத்தம்
வருவாய் பகுதி			(ரூபாய் இலட்சத்தில்)		
2059	பொதுப் பணிகள்		--	4042.00	4042.00
2202	பொதுக் கல்வி				
	01	தொடக்கக் கல்வி	117665.35	703649.36	821314.71
	02	இடைநிலைக் கல்வி	121990.32	696801.86	818792.18
	04	வயது வந்தோர் கல்வி	600.00	133.35	733.35
	05	மொழி வளர்ச்சி	2.52	1222.77	1225.29
	மொத்தம் – பொதுக் கல்வி		**240258.19**	**1401807.34**	**1642065.53**
2204	போட்டி விளையாட்டுகளும், இளைஞர் நலப் பணிகளும்		501.18	204.47	705.65
2205	கலையும், பண்பாடும்		0.01	6315.70	6315.71
2225	ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்		12975.47	56.32	13031.79
2235	சமூகப் பாதுகாப்பும், நலனும்		--	342.65	342.65
2251	தலைமைச் செயலகம் – சமூகப் பணிகள்		--	517.14	517.14
	நிகர மொத்த வருவாய்ப் பகுதி		**253734.85**	**1413285.62**	**1667020.47**
மூலதனச் செலவு பகுதி					
4202	மூலதனச் செலவு		29484.60	--	29484.60
	மொத்த மூலதனச் செலவு பகுதி		**29484.60**	**--**	**29484.60**

2013 மே 10]

2013–2014 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு				
	கணக்குத் தலைப்பு	திட்டப் பணிகள்	திட்டத்தில் சேராதது	மொத்தம்
கடன்கள் பகுதி				
7610	அரசுப் பணியாளர் முதலானோருக்குக் கடன்கள்	--	4.91	4.91
7615	பல்வகைக் கடன்கள்	--	0.49	0.49
	மொத்த கடன்கள் பகுதி	--	**5.40**	**5.40**
	நிகர மொத்தம்	**283219.45**	**1413291.02**	**1696510.42**
	கூட்டுக – திருப்பி வசூலிப்பவை (வருவாய் இனத்தின் கீழ்)			19.81
	மானியக் கோரிக்கை எண் 43–ன் நிகர மொத்தம்			**1696530.28**

2013–2014 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டங்கள்

உட்கூறு – 1

வ. எண்	திட்டப் பணிகளின் விவரம்	ஒதுக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்)
தலைமைச் செயலகம் – பள்ளிக் கல்வித் துறை		
1.	தலைமைச் செயலக பள்ளிக் கல்வித் துறையை கணினிமயமாக்கல்	10.00
தொடக்கக் கல்வி		
2.	4 உதவி தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்குக் கட்டடங்கள் கட்டுதல்	88.00
3.	மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலரின் கழிவு செய்யப்பட்ட 2 வாகனங்களுக்குப் பதிலாக இரண்டு புதிய வாகனங்கள் வாங்குதல்	12.00
4.	தொடக்கக் கல்வி இயக்ககத்திற்கு கழிவு செய்யப்பட்ட வாகனங்களுக்குப் பதில் புதிய வாகனங்கள் வாங்குதல்	6.00
5.	தொடக்கக் கல்வி இயக்ககத்தில் தகவல் மேலாண்மை முறை அமைத்தல்.	6.00

வ. எண்	திட்டப் பணிகளின் விவ ரம்	ஒதுக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்)
தொடக்கக் கல்வி / பள்ளிக் கல்வி		
6.	தமிழ்நாட்டின் வகுப்புகளை ஒருங்கிணைத்துப் பயிலும் திட்டம்	13.50
பள்ளிக் கல்வி		
7.	பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு 1 டிஜிட்டல் (Digital)படிபெருக்கி இயந்திரம் மற்றும் 3 தொலைநகலி (Fax) கருவிகள் வாங்குதல்	5.50
8.	மாநில அளவிலான அலுவலர்களுக்கு 7 மடிக்கணினிகள் வழங்குதல்	3.00
9.	பள்ளிக் கல்வி இயக்ககத்திற்குப் புதிய தொலைபேசி கேபிள் (cable), தேவைப்படக்கூடிய ஆப்ரேட்டர் போர்டு, EPABX போர்டு மற்றும் உபகரணங்கள்	10.00
10.	26 மாவட்ட கல்வி அலுவலகத்திற்கு ஒளிப்பட நகல் கருவிகள் வழங்குதல்	19.50
அரசுத் தேர்வுகள்		
11.	அரசுத் தேர்வுகள் இயக்ககத்திற்கு 2 பிரிண்டர்கள் வாங்குதல்	3.40
12.	அரசுத் தேர்வுகள் இயக்ககத்திற்கு 3 ஸ்கேனிங் இயந்திரம் கொள்முதல் செய்தல்	0.60
13.	கடலூர் அரசுத் தேர்வுகள் மண்டல அலுவலகத்திற்கென அலுவலக கட்டடம் கிடங்கு வசதியுடன் கட்டுதல்	80.00
பொது நூலகங்கள்		
14.	32 மாவட்ட நூலக அலுவலர்களுக்கு மடிக்கணினி வழங்குதல்.	16.00
	மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்	
15.	2G மற்றும் Wifi இணைப்புடன் கூடிய 2 ஊடாட்டு பலகைகள் (Interactive Board) பயிற்சிக் கூடங்களுக்கு வாங்குதல்.	2.50

2013 மே 10]

வ. எண்	திட்டப் பணிகளின் விவரம்	ஒதுக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்)
மெட்ரிக் பள்ளிகள்		
16.	மெட்ரிக் பள்ளி இயக்குநருக்குக் கழிவு செய்யப்பட்ட வாகனத்திற்குப் பதிலாக புதிய வாகனம் வாங்குதல்	6.00
17.	மெட்ரிக் பள்ளி ஆய்வாளர்களுக்குக் கழிவு செய்யப்பட்ட 3 வாகனங்களுக்குப் பதிலாக புதிய வாகனங்கள் வாங்குதல்	18.00
	மொத்தம்	**300.00**

2013–2014 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டங்கள்

உட்கூறு – 2

வ. எண்	திட்டப் பணிகளின் விவரம்	ஒதுக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்)
தொடக்கக் கல்வி / பள்ளிக் கல்வி		
1.	தமிழகத்திலுள்ள அரசுப் பள்ளிகளில் ஆங்கில கல்வி பயிற்றுவித்தல்	38.60
2.	தமிழ்நாட்டின் வகுப்புகளை இணைத்து ஒருங்கிணைத்துப் பயிலும் திட்டம்	10.56
3.	தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையை நடைமுறைப்படுத்துதல்	98.00
4.	கிராமப்புறக் குழந்தைகளின் ஆங்கில மொழி அறிவை மேம்படுத்துதல்	119.90
5.	நடுநிலைப் பள்ளிகளில் கணிதம் கற்கும் திறனை வலுப்படுத்துதல்	128.00
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்		
6.	கல்வித் தொலைக்காட்சி அலைவரிசையை நடைமுறைப்படுத்துதல்	100.00
	மொத்தம்	**495.06**

[2013 மே 10

III கொள்கை மற்றும் திட்டங்கள்

1. நலத் திட்டங்கள்

1.1 அறிமுகம்

அனைவருக்கும் கல்வி, நூறு சதவீத மாணவர் சேர்க்கை, பள்ளியில் பயிலும் மாணவர்களை இடைநிற்றலின்றி தக்கவைத்தல் மற்றும் தரமான கல்வி அளித்தல் ஆகிய அனைத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட பல்வேறு நலத் திட்டங்கள் வாயிலாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 2011-2012 மற்றும் 2012-2013 ஆம் ஆண்டுகளில் மாணவர்களின் நலன் கருதி அறிவிக்கப்பட்ட திட்டங்கள் அனைத்தும் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டன. இதன் காரணமாக அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை மேம்படுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பல்வேறு நலத் திட்டங்களை 2013-2014 ஆம் கல்வியாண்டிற்கும் நீட்டித்து வழங்கியுள்ளார்கள். இதனால் மாநிலம் முழுவதும் 92 இலட்சம் குழந்தைகள் பயனடைவார்கள்.

மாணவர்களுக்கான நலத் திட்டங்கள்

1.2 நான்கு இணை சீருடைகள் வழங்குதல்

2011-2012 இல், பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வந்த சீருடைகளை ஒன்றிலிருந்து இரண்டு இணைச் சீருடைகளாக உயர்த்திய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2012-2013 இல், அதனை நான்கு இணைச் சீருடைகளாக உயர்த்தியுள்ளார்கள். 47.07 இலட்சம் மாணவ, மாணவியருக்கு நான்கு இணைச் சீருடைகள் ரூ.329.88 கோடி செலவில் டிசம்பர் 2012-க்குள் வழங்கப்பட்டது. 2013-2014 ஆம் கல்வியாண்டின் முதல் காலாண்டிற்குள்ளேயே நான்கு இணைச் சீருடைகளை வழங்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2013-2014 இல், 53.53 இலட்சம் மாணவர்கள் பயனடையும் வகையில் ரூ.353.22 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

1.3 இடைநிற்றலைக் குறைப்பதற்கான சிறப்பு ஊக்கத் தொகை

மாணவர்கள் அனைவரும் இடைநிலைக் கல்வியை இடைநிற்றல் இன்றி தொடர, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சிறப்பு

ஊக்கத் தொகை அளிக்கும் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளார்கள். இதற்கென 2011-2012 இல் ரூ.313.13 கோடியும், 2012-2013 இல் ரூ.353.56 கோடியும் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் 2011-2012 இல் 19.10 இலட்சம் மாணவர்களும் 2012-2013 இல் 21.52 இலட்சம் மாணவர்களும் பயன்பெறுவார்கள். 2013-2014 இல், 24.76 இலட்சம் மாணவர்கள் பயனடையும் வகையில் ரூ.381 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.4 பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு விலையில்லா மடிக் கணினி வழங்குதல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதன்மைத் திட்டங்களில் ஒன்று பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு மடிக் கணினி வழங்குதல் ஆகும். இத்திட்டம் நாட்டிற்கே ஒரு முன்மாதிரியாகத் திகழ்கிறது. பிற மாநிலங்களும் இத்திட்டத்தை ஆர்வத்துடன் பின்பற்றத் தொடங்கியுள்ளன. 2011-2012 இல், ரூ.739.78 கோடி செலவில் 5,30,729 மாணவர்கள் பயனடைந்தனர். 2012-2013 இல், ரூ.898 கோடி செலவில் 5,35,247 மாணவர்கள் பயன் அடைவார்கள். 2013-2014 இல், இத்திட்டம் தொடரப்பட்டு ரூ.925.01 கோடி செலவில் 5.50 இலட்சம் மாணவர்கள் பயன் அடைவார்கள்.

1.5 காலணிகள் வழங்குதல்

மாணவர்கள் வெறும் கால்களில் நடந்தால் சில தொற்று நோய்களுக்கு ஆளாகி அவர்களது உடல் நலன் பாதிக்கப்படும். இதனைத் தவிர்க்க அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு விலையின்றி ஓர் இணை காலணிகள் வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

2012-2013 இல், ரூ.104.15 கோடி ரூபாய் செலவில் 78,82,813 மாணவர்களுக்குக் காலணிகள் வழங்கப்பட்டன. 2013-2014 ஆம் ஆண்டில் புதிதாகச் சேர்க்கப்படும் 6.10 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.8.47 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

1.6 கல்வி உபகரணங்கள் வழங்குதல்

கற்றல் செயல்பாடுகள் பொருளுள்ளதாகவும், எளிமையாகவும், குழந்தைகள் விரும்பத்தக்க வகையிலும் அமைந்திட மாண்புமிகு

முதலமைச்சர் அவர்கள் புத்தகப் பை, கணித உபகரணப் பெட்டி, வண்ணப் பென்சில்கள்/ கிரேயான்கள் மற்றும் நில வரைபடப் புத்தகங்கள் உள்ளிட்ட கல்வி உபகரணங்கள் வழங்கிட வேண்டும் என அறிவித்தார்கள்.

2012-2013 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்தோர் மற்றும் நிதி ஒதுக்கீட்டின் விவரம் கீழ்வருமாறு:-

பொருள்	வகுப்புகள்	மாணவர் எண்ணிக்கை (இலட்சத்தில்)	தொகை ரூபாய் (கோடியில்)
புத்தகப் பை	1 முதல் 12	92.00	127.78
கணித உபகரணப் பெட்டி	6 முதல் 10	46.00	16.37
கிரேயான்கள்	1 முதல் 2	11.77	1.97
வண்ணப் பென்சில்	3 முதல் 5	19.68	3.20
வரைபடப்புத்தகம்	6 முதல் 10 வரை	46.00	13.57

2013-2014 இல் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் புதிதாகச் சேர்க்கப்படும் மாணவர்கள் பயனடைவதற்கு இத்திட்டத்தின்கீழ் ரூ.33.72 கோடி கீழ்க்கண்டவாறு ஒதுக்கப்பட்டுள்ளது:-

பொருள்	வகுப்புகள்	பயனடையும் மாணவர் எண்ணிக்கை (இலட்சத்தில்)	தொகை ரூபாய் (கோடியில்)
புத்தகப் பை	1 முதல் 12	13.00	19.79
கணித உபகரணப் பெட்டி	6 முதல் 10	9.67	3.38
கிரேயான்கள்	1 முதல் 2	33.63	7.70
வண்ணப் பென்சில்	3 முதல் 5		
வரைபடப் புத்தகம்	6 முதல் 10	9.67	2.85
மொத்தம்			33.72

2013 மே 10]

1.7 நோட்டுப் புத்தகங்கள் வழங்குதல்

2012-2013 ஆம் கல்வியாண்டில் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் 81.02 இலட்சம் மாணவர்களுக்கு ரூ.102.69 கோடி செலவில் நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

2013-2014 ஆம் கல்வியாண்டில் 86.71 இலட்சம் மாணவர்கள் பயனடையும் வகையில் ரூ.110.96 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

1.8 பாடநூல் வழங்குதல்

2012-2013 ஆம் கல்வியாண்டில் ரூ.257.41 கோடி செலவில் ஒன்று முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் 92 இலட்சம் மாணவர்களுக்குப் பாடநூல்கள் வழங்கப்பட்டன.

2013-2014 ஆம் கல்வியாண்டில் 97.70 இலட்சம் மாணவர்கள் பயனடையும் வகையில் ரூ.217.22 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

1.9 கம்பளிச் சட்டை

மலைப் பிரதேசங்களில் பயிலும் மாணவர்களில், சத்துணவுத் திட்டத்தில் பயன்பெறுவோருக்குக் கம்பளிச் சட்டை வழங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சியர் மாநாட்டில் அறிவித்தார்கள். இதன்மூலம், 10.30 இலட்சம் மலைவாழ் மாணவர்கள் பயனடைவர். இதற்காக, ரூ.4.12 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

1.10 மிதிவண்டி வழங்குதல்

2012-2013 இல் அரசு, அரசு நிதியுதவி பெறும் மற்றும் பகுதி நிதியுதவி பெறும் பள்ளிகளில் பதினோராம் வகுப்பு பயிலும் 6.31 இலட்சம் மாணவர்களுக்கு ரூ.194.20 கோடி செலவில் மிதிவண்டிகள் வழங்கப்பட்டன.

இத்திட்டம் 2013-2014 ஆம் கல்வியாண்டிலும் தொடரும். 6.30 இலட்சம் மாணவர்கள் பயனடைய ரூ.200.98 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.11 புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்

1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் இலவச

மதிய உணவு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2012-2013-இல் 48.63 இலட்சம் மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

2013-2014 ஆம் கல்வியாண்டில் 53.40 இலட்சம் மாணவர்கள் பயன்பெறுவார்கள்.

1.12 பேருந்துப் பயண அட்டை

மாணவர்கள் எளிதாக பள்ளி சென்று வர 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்துப் பள்ளி மாணவர்களுக்கும் இலவச பேருந்துப் பயண அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2013-2014 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் வழியாக 14.02 இலட்சம் மாணவர்கள் பயன்பெறுவார்கள். இத்திட்டத்திற்கென ரூ.323.70 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.13 வருவாய் ஈட்டும் தாய் / தந்தை இழந்த மாணவர்களுக்கான துயர் துடைப்பு நிதியுதவி

விபத்தில் மரணமடைவது அல்லது நிரந்தர முடக்கம் அடைவது போன்றவற்றால் வருவாய் ஈட்டும் பெற்றோரை (தாய்/தந்தை) இழக்க நேரிடும் மாணவர்களுக்கானது இத்திட்டம். இவ்வாறான குழந்தைகளின் கல்வி எதிர்பாராத சூழ்நிலையினால் எவ்விதத்திலும் பாதிக்கப்படக்கூடாது என்பதில் அரசு தீவிரமாக உள்ளது. அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் பெயரில் ரூ.50,000 வீதம் பொதுத் துறை நிறுவனத்தில் வைப்பு நிதியாகச் செலுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ், 2012-2013 கல்வியாண்டில் 2,410 மாணவர்கள் பயன் பெற்றுள்ளனர்.

1.14 சதுரங்க விளையாட்டை அறிமுகப்படுத்துதல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களது அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு அரசு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் வழிகாட்டுதலுடன் பள்ளிகளில் அனைத்து மாணவர்களும் சதுரங்கம் விளையாடுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. தேசிய மற்றும் சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளுக்கு மாணவர்களைத் தயார் படுத்துவதற்காக ஆசிரியர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இச்சதுரங்க விளையாட்டு மாணவர்களின் கவனத்தினை அதிகரிக்கவும், பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் திறனை மேம்படுத்தவும் உதவும்.

2013 மே 10]

ஆசிரியர்களுக்கான விருதுகள்/பயன்கள்

1.15 டாக்டர் இராதாகிருட்டிணன் விருது

தமிழக அரசு 1960 ஆம் ஆண்டு முதல் "நல்லாசிரியர் விருதினை" வழங்கி வருகிறது. இவ்விருது 1997 முதல் டாக்டர் இராதாகிருட்டிணன் விருது எனப் பெயர் மாற்றம் செய்து ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி வழங்கப்பட்டு வருகிறது. 2012-2013 ஆம் ஆண்டில் 364 ஆசிரியர்களின் பணிகள் அங்கீகரிக்கப்பட்டு அவர்களுக்கு ரூ.5,000 ரொக்கப் பரிசும், வெள்ளிப் பதக்கமும், பாராட்டுப் பத்திரமும் வழங்கப்பட்டன.

1.16 ஆசிரியர்களுக்கான தேசிய விருது

மத்திய அரசு, இந்தியாவில் சிறப்பாகப் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு தேசிய விருது அளித்து வருகிறது. தமிழகத்தில் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சிறப்பாகப் பணியாற்றும் 22 ஆசிரியர்களைத் தேர்வு செய்து, அவர்களுக்கு இந்தியக் குடியரசுத் தலைவரால் ஆசிரியர் தினத்தில் புது டில்லியில் இத்தேசிய விருதுகள் வழங்கப்படுகின்றன.

தேசிய விருது பெறும் ஆசிரியர்களுக்கு ரூ.25,000 ரொக்கமும், வெள்ளிப் பதக்கமும், பாராட்டுப் பத்திரமும் அளிக்கப்படுகிறது.

1.17 தேசிய ஆசிரியர் நல நிறுவனம்

தேசிய ஆசிரியர் நல நிறுவனம், 1962 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நிறுவனத்திற்கு மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பதவிவழித் தலைவராகவும், பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் பதவிவழிச் செயலராகவும் இருக்கின்றனர். ஆசிரியர் தினக் கொடி விற்பனை நிதியைப் பயன்படுத்தி பல்வேறு ஆசிரியர் நலத் திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

1.18 ஆசிரியர்களுக்கான மருத்துவ உதவி

இத்திட்டத்தின்கீழ் ஆசிரியரோ அல்லது அவரைச் சார்ந்தோரோ உடல் நலிவுற்று மருத்துவமனையில் சேர்த்து

உடல்நலம் பேணும் செலவிற்கு ரூ.50,000 அல்லது மருத்துவச் செலவில் 75 சதவீதம் ஆகியவற்றில் எது குறைவோ அத்தொகை வழங்கப்படுகிறது. 2012-2013 ஆம் கல்வியாண்டில் இரு ஆசிரியர்கள் இம்மருத்துவ உதவியைப் பெற்றனர்.

1.19 ஆசிரியர்களின் குழந்தைகளுக்கான கல்வி உதவித் தொகை

ஆசிரியர்களின் குழந்தைகள் தொழிற்கல்வி/பட்டயப் படிப்பு பயின்றால் அக்குழந்தைகளுக்குக் கல்வி உதவி நிதியாக முறையே ஆண்டுக்கு ரூ.5,000 மற்றும் ரூ.2,500 வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2012-2013 ஆம் ஆண்டு 262 மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகையாக ரூ.12.60 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது

1.20 பெற்றோர்–ஆசிரியர் கழகம்

பள்ளி வயதில் உள்ள அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்ப்பது, பள்ளியில் சேர்ந்தோர் இடைநிற்காமல் தொடர்ந்து பள்ளியிலேயே படிக்கச் செய்தல் மற்றும் கற்றல் கற்பித்தல் தரத்தை மேம்படுத்துதல் போன்றவை இக்கழகத்தின் முக்கிய நோக்கங்களாகும். 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதும் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் வினா வங்கிகள் மற்றும் மாதிரி வினாத்தாள் புத்தகங்கள் அச்சிடப்பட்டு மாநிலப் பெற்றோர்–ஆசிரியர் கழகத்தால் வெளியிடப்பட்டு வருகின்றன. மார்ச்/ஏப்ரல் பொதுத் தேர்வுகளில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாநிலப் பெற்றோர்–ஆசிரியர் கழகம் சான்றிதழ் வழங்கி பெருமைப்படுத்துகிறது.

தமிழக அரசின் நிலைத்த ஆதரவோடு பள்ளிக் கல்வித் துறை/தொடக்கக் கல்வித் துறை எடுத்து வரும் உறுதியான முயற்சிகளின் பயனாக, குறிப்பாக 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களின் இடைநிற்றலைத் தவிர்த்து மாணவர் சேர்க்கையினை அதிகரிக்கும் பணியினைப் பெற்றோர்-ஆசிரியர் கழகம் சிறப்பாக ஆற்றி வருகிறது.

2013 மே 10]

2. தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்பம்

2.1 முன்னுரை

தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்பம் என்பது சமூக மாற்றம் மற்றும் தேசிய வளர்ச்சிக்கான முக்கிய தூண்டுகோல் என உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டமானது இந்தியப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்குக் கணினிசார் செயல்பாட்டிலுள்ள இடைவெளியை நிரப்புவதற்கு வாய்ப்பளிக்கும் ஒரு சாளரமாக உள்ளது.

தமிழக அரசு, தமது தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்பக் கொள்கையில் பள்ளிக் கல்வியில் படித்தல், எழுதுதல், மற்றும் பிற பாடங்களில் புலமை பெறுதலுக்கிணையாகத் தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படைத்திறன் மேம்பட வேண்டும் எனக் குறிப்பிடுகிறது. தகவல் தொடர்பு தொழில்நுட்பம்மூலம் பள்ளிகளில் மாணவர்கள் கணினியைப் பயன்படுத்துவதை ஊக்குவித்து, அனைத்துப் பாடங்களையும் பகுப்பாய்வு செய்து பாடங்களைப் புரிந்துகொள்வதற்குச் சுயமாகக் கற்கும் திறனைப் பயன்படுத்துவதற்கு ஏற்புடைய சூழலை உருவாக்கும் என்பது அரசின் நோக்கமாகும். இணையதள வசதி, மாணவர்களைப் பல்வேறு ஆதாரங்களிலிருந்து தகவல்களைப் பெற்று, தொகுத்துப் பாடங்களை முழுமையாகப் புரிந்து கொள்ள உதவுகிறது.

பல்வேறு பாடம் சார்ந்த தகவல்களைப் பெறுவதற்கு உதவுவதற்காகவும், உயர்நிலை மற்றும் மேல்நிலை கல்வி நிலைக்கு மாணவர்களைத் தயார்படுத்துவதற்காகவும், மாணவர்கள் கணினிக் கல்வியில் புலமைப் பெறவும், கணினியில் அடிப்படைத் திறன்களை முழுமையாகப் பெறவும், ஆசிரியர்களுக்குக் கணினி சாதனங்களைப் பயன்படுத்துவதற்கும் அதன் பல்வேறு பயன்பாடுகளை அறிந்துகொள்வதற்கும் அரசு பயிற்சி அளிக்கிறது. மேற்கூறப்பட்ட தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்ப முன்முயற்சிகள் மற்றும் அதைச் சார்ந்த பயன்பாடுகள்மூலம் சிறந்த தரமான கல்வியினை அளிப்பதென்ற குறிக்கோள், அரசினுடைய பிற திட்டங்களான பள்ளிகளில் தகவல் தொடர்பு தொழில்நுட்பம், பள்ளிகளுக்கான தகவல் தொடர்பு தொழில்நுட்பம், கல்விசார் மேலாண்மை தகவல் முறைமை, ஸ்மார்ட் கார்டு போன்றவைற்றைச் செயல்படுத்த வழிவகை செய்கிறது.

[2013 மே 10

2.2 பள்ளிகளுக்கான தகவல் தொடர்பு தொழில்நுட்பம் (ICT @ Schools)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பள்ளிகளுக்கான தகவல் தொடர்பு தொழில்நுட்பம் என்னும் புதிய திட்டத்தினை சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் அறிவிப்பு செய்தார்கள். அதன்மூலம் அனைத்து வகுப்புக்குமான பாடப் புத்தகங்களிலுள்ள பாடங்கள் கணினிமயப்படுத்தி வகுப்பறைகளில் வழங்கப்படும்.

இத்திட்டம் 2013-2014 ஆம் ஆண்டில் விழுப்புரம் மாவட்டத்தில் ஒரு முன்னோடித் திட்டமாக செயல்படுத்தப்படும். இதற்கென ரூ.10.03 கோடி செலவில் 1,329 தொடக்கப் பள்ளிகளில் தனியாக கணினிகளை அமைப்பதற்கும், கணினி, பல்லூடக ஒளி எறிவுக் கருவி மற்றும் சாதனங்கள் வழங்கப்படும். இதன்மூலம் 95,470 மாணவர்கள் பயன்பெறுவார்கள்.

2.3 பள்ளிகளில் தகவல் தொழில்நுட்பம் (ICT in Schools)

பள்ளிகளில் தகவல் தொழில்நுட்ப திட்டம் மத்திய மாநில அரசுகளால் 75:25 என்ற விழுக்காட்டில் செலவினம் பகிர்ந்துகொள்ளப்பட்டு செயல்படுத்தப்படும் திட்டமாகும். இத்தகவல் தொடர்பு திட்டம் 4,340 அரசு உயர்நிலை / மேல்நிலை பள்ளிகளில் செயல்படுத்தப்படும். 2013-2014 ஆம் ஆண்டிலிருந்து 5 ஆண்டுகளுக்கு தகவல் தொடர்பு தொழில்நுட்ப வசதி 'உருவாக்கி, உரிமையாக்கி, இயக்கி மாற்றுதல்' (Built, Own, Operate and Transfer - BOOT Model) *மாதிரியின் அடிப்படையில் ஏற்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான செலவினம் ரூ.277.75 கோடியாகும். இத்திட்டத்தின்மூலம் 27,94,829 மாணவர்கள் பயன்பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.*

2.4 அறிவுசார் பள்ளிகள் (Smart Schools)

தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதை வலியுறுத்துவது மட்டுமின்றி, அடுத்த நூற்றாண்டில் களமிறங்கும் அறிவுசார் கணினித் திறன்களையும் விழுமியங்களையும் (Computer Skills and Values) *மாணவர்களுக்கு வழங்குவதே அறிவுசார் பள்ளிகளாகும். இத்தகு பள்ளிகளில் மாணவர்கள் வெகுவாக கல்வித் திறனடைவு பெற்று முன்னேறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.*

2013 மே 10]

2012-2013 இல், *5* அறிவுசார் பள்ளிகளுக்கு மாநில அரசுத் திட்டத்தின்கீழ் *1.25* கோடி ரூபாய் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள திருச்செந்துறை, அயிலாப்பேட்டை, எட்டரை, சோமரசம்பேட்டை மற்றும் இனாம்குளத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் அறிவுசார் வகுப்புகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

இவை தவிர, மத்திய அரசுத் திட்டத்தின்கீழ் *2012-2013* ஆம் ஆண்டில் நாமக்கல் மாவட்டத்தில் ஆர். புதுப்பாளையத்திலும், தேனி மாவட்டத்தில் பெரியகுளத்திலும், விருதுநகர் மாவட்டத்தில் வீரசோழனிலும், திண்டுக்கல் மாவட்டத்தில் பழனியிலும் மற்றும் மதுரை மாவட்டத்தில் மேலூரிலும், அரசு மேல்நிலைப் பள்ளிகளில் அறிவுசார் பள்ளிகள் துவக்க *1.25* கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உருவாக்கி, உரிமையாக்கி, இயக்கி மாற்றுதல் மாதிரியின் அடிப்படையில் (BOOT Model) *5* ஆண்டுகளுக்கு இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான முதற்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2.5 கல்விசார் மேலாண்மை தகவல் முறைமை (EMIS)

தற்போது பள்ளிக் கல்வித் துறை, தகவல் தொடர்பு மற்றும் இணையதள வசதியைத் தேசிய தகவல் மையம் மற்றும் அதன் இணையதள உதவியோடு இயக்கி வருகிறது. அதிக அளவிலான தொடர்பு மற்றும் புள்ளிவிவரங்களைத் தன்னகத்தே கொண்ட பள்ளிக் கல்வித் துறைக்கு தனக்கென்று தனியான தகவல் மையம் வைத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. இதைக் கருத்திற்கொண்டு கல்விசார் மேலாண்மைத் தகவல் முறைமை (EMIS)-யை ஏற்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

கல்விசார் மேலாண்மை தகவல் முறைமைத் திட்டமானது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு தற்போது செயல்பாட்டில் உள்ளது. *2013-2014* ஆம் ஆண்டில் இத்திட்டம் அனைத்துப் பள்ளிகளிலும் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம்மூலம் *1.35* கோடி குழந்தைகளின் அடிப்படைத் தகவல்கள் பதிவு செய்யப்படவுள்ளன. இத்திட்டம் www.tnschools.gov.in என்ற இணையதள முகவரியில் செயல்படுத்தப்படுகிறது. இக்கல்வித் தகவல் மேலாண்மை முறைமையில் பள்ளிகள், ஆசிரியர்கள்,

[2013 மே 10

மாணவர்கள், அலுவலர்கள் போன்றோரது முழுமையான தகவல்கள் திரட்டப்பட்டு இவ்வலைத்தளத்தில் தொகுத்து வைக்கப்படும். இந்த வலைதளம், கல்விப் பாடப் பொருள் வழங்கும் இணையமாகவும், துறைகளுக்கிடையே தொடர்பினை அளிக்கும்விதமாகவும் ஏற்கெனவே செயல்படத் தொடங்கியுள்ளது. பள்ளிகள் சார்ந்த அனைத்துத் தகவல்களும் பதிவேற்றம் செய்யப்பட்டு பயன்படுத்துவோர் அனைவருக்கும் எளிதில் கிடைக்கும் வண்ணம் வழிவகை செய்யப்படும். இது தகவல் மற்றும் புள்ளிவிவர பரிமாற்றத்தினை மேம்படுத்துவதுடன் தரவு பகுப்பாய்வுக்கும் / செயலாக்கத்திற்கும் மற்றும் திட்டமிடுதலுக்கும் உதவிகரமாக அமையும்.

2.6 கல்விசார் பாடப்பொருள் பகிர்ந்தளிக்கும் தளம் (ECS)

மடிக் கணினிகளையும், கணினிகளையும் வழங்கிய பின் மாணவர்கள் நன்றாகக் கற்கத் தேவையான பாடப் பொருளையும் தரவேண்டியது அவசியமாகும். கல்வி மேலாண்மை தகவல் வலைதளம் பல்வேறு பாடப் பொருள்களைச் சேமித்து வைத்துள்ள மின்னணு நூலகமாகவும் செயல்படும். கல்விசார் மற்றும் கல்வி இணைச் செயல்பாடுகளைத் திறன்படச் செய்யத் தேவையான விவரங்களைத் திரட்டவும் இது உதவும். இவ்வலைதளத்தின் பாடப் பொருள்களைத் தொடர்ந்து அவ்வப்போது புதுப்பிக்க வகைசெய்வது இதன் சிறப்பம்சமாகும்.

2.7 குறுஞ்செய்திமூலம் வருகைப் பதிவு (SMS based attendance)

ஆசிரியர்களின் செயல்பாட்டினை முறையாகக் கண்காணிப்பதற்கு அவர்களுடைய பள்ளி வருகைப் பதிவினை குறுஞ்செய்திமூலம் கண்காணிப்பதற்குக் கணினி பயன்பாட்டு மென்பொருள் உருவாக்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். அதற்கெனத் தனி மென்பொருள் வடிவமைக்கப்பட்டு கல்விசார் மேலாண்மைத் தகவல் முறைமையில் (EMIS) ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. 2013-2014 ஆம் கல்வியாண்டில் பள்ளி திறக்கும் நாளிலிருந்து இம்முறைமை செயல்பாட்டிற்கு வரும். திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள 5 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் இத்திட்டம் முதற்கட்டமாக முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது.

2013 மே 10]

2.8 ஸ்மார்ட் கார்டு

குழந்தைகள் பள்ளிவிட்டு வேறு பள்ளிக்கு இடம்பெயர்தல், பள்ளியிலிருந்து இடைநிற்றல் குறித்த விவரம், உடல் நலம் மற்றும் இதர தகவலையும் கண்காணிப்பதற்கு ஒவ்வொரு குழந்தைக்கும் ஸ்மார்ட் கார்டு அவசியமாகிறது. ஒவ்வொரு மாணவரின் கல்வி வளர்ச்சியைத் தொடர்ந்து கண்டறிய ஸ்மார்ட் கார்டு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் மாணவர்கள் பற்றிய அனைத்து விவரங்களும் இடம்பெறும். மேலும், அத்தகவல்கள் மையக் கணினியில் சேமித்து வைக்கப்படும். 5-9-2012 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இத்திட்டம் முன்னோடித் திட்டமாக திருச்சி மாவட்டம் அயிலாப்பேட்டை, எட்டரை, திருச்செந்துறை, சோமரசம்பேட்டை மற்றும் இனாம்குளத்தூர் ஆகிய 5 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 2013-2014 ஆம் கல்வியாண்டில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து குழந்தைகளுக்கும் ஸ்மார்ட் கார்டு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 'ஆதார்' (Aadhaar) தனிப்பட்ட அடையாள எண் (UID) மற்றும் பயோமெட்ரிக் தகவலையும் (Biometric data) ஒருங்கிணைப்பதன்மூலம் எதிர்காலத்தில் மாணவர் மேலாண்மை குறித்த நடவடிக்கையை எளிமையாக்கிட வாய்ப்புள்ளது. பள்ளிக் கல்வித் துறையும், 'ஆதார்' தனிப்பட்ட அடையாள ஆணைய அமைப்பினரும் இணைந்து புதுக்கோட்டை மற்றும் அரியலூர் மாவட்டங்களில் முன்னோடியாக இத்திட்டத்தினை செயல்படுத்தப்பட உள்ளனர். மாணவர் நலத் திட்டங்களை திறம்படச் செயல்படுத்திடவும் மாணவர்களைத் தொடர்ந்து கண்டறிய ஸ்மார்ட் கார்டு உதவும்.

2.9 கணினி உதவியுடன் கற்பதற்கான மொழி ஆய்வகங்கள்

இத்திட்டத்தில் ஆங்கில மொழி ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் உயர்தர பயிற்சி அளிப்பதற்கு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், ரூ.25 இலட்சம் செலவில் கணினிவழி கற்பதற்கான ஆங்கில மொழி ஆய்வகம் ஒன்று நிறுவப்படவுள்ளது.

[2013 மே 10

2.10 புவியியல் தகவல் முறைமை (Geographic Information System)

புவியியல் தகவல் முறைமை (GIS) என்பது கணினிசார் தகவல் சேகரிப்பு, தகவல் மீட்பு, தகவலைத் தேவைக்கேற்ப மாற்றி அமைத்தல், பகுப்பாய்தல் மற்றும் புவியியல் தகவல்களைக் காட்சிப்படுத்துதல் ஆகும்.

- புவியியல் தகவல் என்பது, இட மற்றும் விவரணத் தகவல்களை உள்ளடக்கியதாகும்.
- இடத் தகவல் (வரைபடம்) என்பது அமைவிடம், வடிவம், மனித மற்றும் புவியியல் அம்சங்களுக்கிடையே உள்ள உறவுகள் குறித்ததாகும்.
- விவரணத் தகவல் (வரைபடம் சாராதது) என்பது, கூறுகளின் பண்புகளைக் குறிப்பதாகும்.

புவியியல் தகவல் முறைமை என்பது பள்ளிசார்ந்த செயல்பாடுகளை மேலாண்மை செய்தல் மற்றும் கண்காணிப்பதற்கான ஒரு சிறந்த கருவியாகும். இதன் முக்கிய நோக்கம், குழந்தைகளை மையப்படுத்தி அக்குழந்தைகளுக்கான வசதிகள் பள்ளிகளிலேயே வழங்கப்படுதல் ஆகும். சுட்டியைச் (Mouse) சொடுக்கினாலே தமிழகத்தின் தொலைதூரப் பகுதிகளில் அமைந்துள்ள பள்ளி குறித்த அனைத்துத் தகவல்களையும் அடுத்த நொடியில் நமக்குக் கணினித் திரையில் காட்சிப்படுத்துமானால் திட்டமிடுதல் தெளிவாகவும் செயல்பாட்டை விரைவாகவும் செய்ய இயலும்.

புவியியல் தகவல் முறைமையின் மிக முக்கியக் கூறு பள்ளியை வரைபடப்படுத்தலாகும். இச்செயல்பாடு கீழ்க்காணும் வழிகளில் உதவும்.

- சமூக, கலாச்சார மற்றும் பொருளாதாரக் காரணங்களுக்காகப் பள்ளி செல்ல இயலாக் குழந்தைகள் அனைவரும் பள்ளி செல்வதை உறுதி செய்தல்.

2013 மே 10]

- பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதிகள், ஆசிரியர்கள் மற்றும் உபகரணங்கள் உள்பட தேவையான மாற்றங்களை முடிவு செய்தல்.

- தகவல்களை காட்சிப்படுத்திப் பார்ப்பதற்கும், புரிந்து கொள்வதற்கும், அவை குறித்து வினா எழுப்புவதற்கும், விளக்கமளிப்பதற்கும் ஏற்ற வகையில் தகவல்களுக்கிடையேயான தொடர்பு, ஒரே மாதிரிகள் மற்றும் போக்குகள் ஆகியவற்றை வெளிப்படுத்தும் விதமாக வரைபடங்களாகவும், அறிக்கைகளாகவும், புள்ளிவிவர தகவல் வரைபடங்களாகவும் பல்வேறு வகையில் காட்சிப்படுத்துதல்.

- பார்த்தவுடன் விரைவாகப் புரிந்து கொள்ளவும், எளிதில் பகிர்ந்து கொள்வதற்கும் ஏற்றவாறு தகவல்களை அமைத்து, கேள்விகளுக்கான விடைகாணல் மற்றும் பிரச்சினைகளுக்கான தீர்வு காணல்.

மாநிலம் முழுவதற்கான புவியியல் தகவல் முறைமை தகவல்தளம் முழுமையாக உருவாக்கப்பட்டு விட்டது. இது பள்ளிக் கல்வித் துறையின் மிகப் பெரிய வெற்றியாகும். இது எதிர்காலத்தில் பள்ளிக் கல்வித் துறையில் தலைசிறந்த திட்டமிடல்களுக்கு வழிவகுக்கும்.

2.11 இணையதள வாயிலாகக் கண்காணித்தல்

பள்ளி செல்லாக் குழந்தைகளை இணையதளம் வாயிலாகக் கண்காணித்து தொடர்ந்து கல்வி பயில்வதை உறுதி செய்ய பிரத்யேகமாக மென்பொருள் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் குழந்தைகள் பற்றிய முழு விவரம், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு ஆகியவை உரிய படிவம்மூலம் கண்காணிக்கப்படுகிறது.

2013-2014 ஆம் கல்வியாண்டில் 51,447 பள்ளி செல்லாக் குழந்தைகளுக்குச் சிறப்புப் பயிற்சி வழங்க ரூ.16.88 கோடி ஒதுக்கீடு செய்யவும் கோரப்பட்டுள்ளது.

இத்துறையால் மேற்கொள்ளப்பட்டுள்ள தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்ப முன்முயற்சிகள் பள்ளிகளை சிறப்பாக நிருவகிக்கவும், நலத் திட்டங்களைச் சிறந்த முறையில் திட்டமிட்டு வழங்கவும் உதவும்.

[2013 மே 10

3. தொடக்கக் கல்வி

3.1 நோக்கம்

6 முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகள் அனைவருக்கும் அவர்கள் எளிதில் செல்லக்கூடிய தூரத்தில் பள்ளி வசதிகள் செய்து கொடுத்து அவர்களுக்குத் தரமான கல்வி அளிப்பதே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்காகும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் இத்தொலை நோக்கை நடைமுறைப்படுத்துவதற்காக தொடக்கக் கல்வி இயக்ககம், அனைவருக்கும் கல்வி இயக்கத்துடன் ஒருங்கிணைந்து 2012-2013 ஆம் கல்வியாண்டில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. இத்திட்டங்கள் யாவும் இளம் சிறார்களின் சிந்தனையைத் தூண்டுவதற்கும், பிரச்சினைகளுக்கு சரியான தீர்வு காண்பதற்கும் மற்றும் உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதற்குமான பயிற்சி அளிப்பது மட்டுமின்றி அவர்களது உள்ளார்ந்த படைப்பாற்றல் திறனை ஊக்குவித்து சிறந்த படைப்புத் திறனை வெளிக் கொணர்வதற்குமானதாகும்.

6 முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகள் அனைவரும் பள்ளியில் சேர்க்கப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு தமிழக அரசு, "தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவசக் கட்டாயக் கல்வி உரிமை விதிகள் 2011"-ஐ இயற்றியுள்ளது. இவ்வாறு பள்ளிகளில் குழந்தைகளின் சேர்க்கையை உறுதிசெய்வதோடு மட்டுமின்றி, தரமான கல்வியையும், தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தித் தருவது தலையாய கடமையென இவ்வரசு கருதுகிறது.

3.2 குறிக்கோள்கள்

தொடக்கக் கல்வி இயக்ககம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கினை அடைவதற்காக கீழ்க்காணும் குறிக்கோள்களை வரையறுத்து அவற்றின் அடிப்படையில் தனது செயல்பாட்டுப் பாதையை வகுத்துள்ளது:

- குடியிருப்புப் பகுதிக்கும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கும் இடைவெளியை மதிப்பீடு செய்து குழந்தைகள் எளிதில் பள்ளிக்குச் செல்ல ஏதுவாகத்

2013 மே 10]

தேவையான எண்ணிக்கையில் 1 கி.மீ. சுற்றளவுக்குள் தொடக்கப் பள்ளியும், 3 கி.மீ. சுற்றளவுக்குள் நடுநிலைப் பள்ளியும் படிப்படியாக ஏற்படுத்தப்படும். இதன்மூலம் தகுதியான அனைத்துக் குடியிருப்புப் பகுதிகளுக்கும் 100% பள்ளி வசதி கிடைப்பதையும், அதன்மூலம் 100% மாணவர் சேர்க்கையையும் உறுதி செய்தல்

- பள்ளியில் சேர்க்கப்பட்ட குழந்தைகளை இடை நிற்றலின்றி தக்கவைத்தலை உறுதி செய்தல்
- அனைத்துப் பள்ளிகளிலும் தொடக்கக் கல்வியின் தரத்தை உயர்த்துதல்
- கல்விசார் செயல்பாடுகள் மற்றும் கல்வி இணைச் செயல்பாடுகளில் மாணவர்களின் அறிவினை மேம்படுத்துதல்
- மாணவர்களின் வாசித்தல், எழுதுதல் மற்றும் கேட்டல் திறன்களை மேம்படுத்துதல்
- புத்தகச் சுமையைக் குறைத்து, மதிப்பீட்டு முறையிலும் மாற்றம் கொண்டு வருதல்மூலம் மாணவர்களின் மன அழுத்தம் மற்றும் உடல் சோர்வைக் குறைத்தல்
- தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையை அதிகரிப்பதன்மூலம் மாணவர்களின் முழுமையான வளர்ச்சியை மதிப்பிடுதல்
- சிறப்புக் கவனிப்புத் தேவைப்படும் மாற்றுத் திறன் பெற்ற குழந்தைகளின்மீது கவனம் செலுத்தி, 100% உள்ளடங்கிய கல்வியை எட்டுதல்
- பள்ளி செல்லாக் குழந்தைகள், குறிப்பாக இடம் பெயர்வோரின் குழந்தைகள், சாலையில் வசிக்கும் குழந்தைகள் மற்றும் இடைநின்ற குழந்தைகள் உள்ளிட்ட அனைவரையும் விடுபடாமல் பள்ளியில் சேர்க்க நடவடிக்கை எடுத்தல்
- பாலின அடிப்படையில் ஏற்படும் கல்வி இடைவெளியைக் களைந்து, பெண் கல்வியில் கவனம் செலுத்துதல்
- அனைத்துப் பள்ளிகளிலும் முழுமையான உள்கட்டமைப்பு வசதிகளை நிறைவு செய்வதற்கான பணிகளை விரைவுபடுத்துதல்

- அரசின் நலத் திட்ட உதவிகள் அனைத்துக் குழந்தைகளுக்கும் உரிய நேரத்தில் சென்றடைதல்
- "தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவசக் கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011"-ல் கூறப்பட்டுள்ள விதிகளைக் கடைப்பிடித்து அவற்றைச் செயல்படுத்துதல்
- கல்வி அடைவையும், சுமூகமான நிருவாக நடைமுறைகளையும் சீரிய கண்காணிப்பின் மூலம் மேம்பாடு அடையச் செய்தல்

3.3 பள்ளி வசதி ஏற்படுத்துதல்

அனைத்துக் குடியிருப்புகளுக்கும் பள்ளி வசதியை உறுதிப்படுத்துவதற்கு ஆண்டுதோறும் புதிய தொடக்கப் பள்ளிகள் மற்றும் தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துதல் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன. 300 மக்கள்தொகை கொண்ட குடியிருப்புகளுக்கு 1 கி.மீ. சுற்றளவுக்குள் தொடக்கப் பள்ளிகளும், 500 மக்கள்தொகை கொண்ட குடியிருப்புகளுக்கு 3 கி.மீ. சுற்றளவுக்குள் நடுநிலைப் பள்ளிகளும் தொடங்கப்படுகின்றன. அனைத்துக் குடியிருப்புப் பகுதிகளுக்கும் 100 விழுக்காடு பள்ளி வசதியினை உறுதிப்படுத்தும் பொருட்டு மாநிலத்தில் புவியியல் தகவல் முறைமை வாயிலாகக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதன்படி 732 தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்படவும், 330 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படவும் வேண்டியுள்ளது. படிப்படியாக, இவ்வசதி அரசால் செய்து கொடுக்கப்படும்.

3.4 சேர்க்கை


தொடக்கப் பள்ளிகளில் 99.69%, நடுநிலைப் பள்ளிகளில் 99% மாணவர் சேர்க்கை விகிதம் மிகவும் ஊக்கம் அளிப்பதாக உள்ளது. மேலும், இச்சேர்க்கை விகிதத்தை 100 ஆக உயர்த்துவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை ஊக்கப்படுத்த பல புதுமையான திட்டங்கள் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகப் படுத்தப்பட்ட "ஸ்மார்ட் கார்டு" திட்டம் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையினை கணக்கிடுவதற்கு உதவுவது மட்டுமல்லாமல்,

2013 மே 10]


அரசுப் பள்ளியிலிருந்து தனியார் பள்ளிக்கும், தனியார் பள்ளியிலிருந்து அரசுப் பள்ளிக்கும் சென்று சேரும் மாணவர்களின் விவரத்தையும் அறிய உதவுகிறது.

அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை குறைந்து தனியார் பள்ளிகளில் சேர்க்கை அதிகரித்து வருவதும் கவலையளிக்கும் விதத்தில் உள்ளது. இதனைப் பின்வரும் படம் தெளிவாக உணர்த்துகிறது. (வரைபடம் 4 மற்றும் வரைபடம் 5)



வரைபடம் 4

ஆதாரம் - DISE



	2008–09	2009–10	2010–11	2011–12	2012–13
அரசு	50.46	47.68	46.77	46.36	45.03
உதவி பெறுபவை	29.03	28.30	28.21	28.04	26.45
தனியார்	20.52	24.02	25.02	25.61	28.50

வரைபடம் 5

ஆதாரம்—DISE

2013 மே 10]

மாணவர் சேர்க்கையின் இப்போக்குக் குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, அதற்கான காரணங்களைப் பகுப்பாய்வு செய்து, விவாதிக்கப்பட்டதன் விளைவாக, அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை ஊக்கப்படுத்த கீழ்க்காணும் புதிய திட்டங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்:

அ. நோட்டுப் புத்தகங்கள்

ஆ. 4 இணைப் பள்ளிச் சீருடைகள்

இ. புத்தகப் பைகள்

ஈ. வண்ணக் கிரேயான்கள்

உ. வண்ணப் பென்சில்கள்

ஊ. நில வரைபட நூல்

எ. கணித உபகரணப் பெட்டி

ஏ. காலணிகள் மற்றும்

ஐ. அரசுப் பள்ளிகளில் 2012-2013 ஆம் கல்வியாண்டில் ஆங்கிலவழிப் பிரிவுகளை அறிமுகம் செய்தல், அதன் முதல்படியாக மாவட்டத்திற்கு 10 பள்ளிகள் வீதம் 640 ஆங்கில வழிப் பிரிவுகள்

மேற்கூறப்பட்ட நலத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டதால் கிராமப்புறங்களில் அதிகமான மாணவர்கள் அரசுப் பள்ளிகளை நோக்கி ஈர்க்கப்படுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அரசின் திட்டங்கள் கடைக்கோடிக்கும் எட்டுவதற்கான அனைத்துவிதமான முயற்சிகளையும் தொடக்கக் கல்வி இயக்ககம் மேற்கொண்டு வருகிறது. இதன்மூலம் 2013-2014 ஆம் கல்வி ஆண்டில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை மேம்படும் என்று நம்பப்படுகிறது.

3.5 கல்வித் தரத்தினை உயர்த்துதல்

6 முதல் 14 வயது வரையுள்ள மாணவர்களைப் பள்ளிகளில் சேர்க்கும் இலக்கை எட்டுவதோடு அவர்களுக்குத் தரமான கல்வி அளித்தலை உறுதி செய்ய அரசு அதிக அக்கறை கொண்டுள்ளது.

[2013 மே 10

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் "தமிழக தொலைநோக்கு-2023"-ல் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க கல்வியின் தரத்தினை மேம்படுத்த அரசு உறுதிபூண்டுள்ளது. 2012-2013 ஆம் கல்வி ஆண்டு முதல் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரையுள்ள மாணவர்களுக்குத் தரமான கல்வியை வழங்குவதற்காக முப்பருவக் கல்வி முறை மற்றும் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை போன்ற முன்னோடியான திட்டங்களை பள்ளிக் கல்வித் துறை செயல்படுத்தி வருகிறது. தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை மாணவர்களைப் பகுப்பாய்வுச் சிந்தனைத் திறனுள்ளவர்களாக ஆக்குவது மட்டுமல்லாமல் அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான திறன், வாழ்வியல் திறன் ஆகியவற்றையும் மேம்படுத்தி அதன் விளைவாக அம்மாணவர்கள் தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளைத் திறமையுடன் எதிர்கொள்வதற்குரிய முழுமையான வளர்ச்சியை அடைவதற்கும் வழிவகை செய்கிறது.

2012-2013 ஆம் கல்வி ஆண்டில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் அடைவுத் திறனை மதிப்பீடு செய்ய பள்ளிக் கல்வித் துறை பின்வரும் கல்விசார்ந்த அடிப்படை செயல்பாடுகளில் ஆய்வொன்றை நடத்தியது:

1. *தமிழ் வாசித்தல் மற்றும் எழுதும் திறன்*
2. *ஆங்கிலம் வாசித்தல் மற்றும் எழுதும் திறன்*
3. *அடிப்படைக் கணித அறிவுத் திறன்*

மேற்படி ஆய்வு, மாநிலம் முழுவதிலும் உள்ள 412 ஒன்றியங்களில், ஒன்றியத்திற்கு 5 பள்ளிகள் வீதம் 2,047 தொடக்கப் பிரிவுகளிலும் 2,048 உயர் தொடக்கப் பிரிவுகளிலும் நடத்தப்பட்டது. இதில் ஏறத்தாழ 2.5 இலட்சம் மாணவர்கள் மதிப்பீடு செய்யப்பட்டனர்.

3.6 கண்டுபிடிப்புகள்

1. *மாணவ மாணவியர்களின் செயல்பாடு தமிழில் மிகச் சிறப்பாகவும், கணிதத்தில் சிறப்பாகவும் அமைந்திருந்தது. ஆனால், ஆங்கிலத்தில் திருப்திகரமாக இல்லை.*
2. *ஒரே வகுப்பில் பயிலும் மாணவர்களைக் காட்டிலும் மாணவிகளின் செயல்பாடு நிலை சிறப்பாக இருந்தது.*

2013 மே 10]

3. *கணிதம் மற்றும் ஆங்கிலத்தில் மாணவர்களின் அடைவுத் திறன் கவலையளிக்கும் விதத்தில் உள்ளது. 3 ஆம் வகுப்பிற்கான இடைப்பருவத்திலும், 5 ஆம் வகுப்பிற்கான இறுதிப் பருவத்திலும் தேசிய கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் மேற்கொண்ட மதிப்பாய்வில் மொழி, கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களில் மாணவர்கள் திறனை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை வெளிப்படுத்தியுள்ளது. ஆகவே, கணிதம் மற்றும் ஆங்கிலப் பாடத்தைக் கற்கும் திறனை மேம்படுத்த 2013-2014 ஆம் ஆண்டில் பல்வேறு செயல்பாடுகளை மேற்கொள்ள அரசு பின்வருமாறு முடிவு செய்துள்ளது.*

அ) *இதற்காக முன்னோடித் திட்ட அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலும், தேர்ந்தெடுத்த இரு பள்ளிகளில் கணித ஆய்வகம் ஏற்படுத்தப்படும். இத்திட்டம் மாணவர்கள் கணிதப் பாடத்தை எளிமையான முறையில் விருப்பத்துடன் கற்பதற்கு வகை செய்யும். 2013-2014 ஆம் ஆண்டில், ரூ.1.28 கோடி செலவில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

ஆ) *2013-2014 ஆம் ஆண்டில், ரூ.38.60 இலட்சம் செலவில் முன்னோடித் திட்டமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் 50 பள்ளிகளுக்குப் புதுமையான உத்திகளைப் பயன்படுத்தி நன்கு திட்டமிடப்பட்ட செயல்விளக்கத் தொடர் அடங்கிய தொகுப்பு முறையுடன்கூடிய ஆங்கில மின்னணு குறுந்தகடுகளாக வழங்கப்படும்.*

இ) *உயர்தொடக்கப் பள்ளி அளவில் மாணவர்களின் ஆங்கிலம் கற்றல் செயல்பாடுகளை வளப்படுத்துவதற்கு அரை மணி நேரம் கால அளவு கொண்ட வானொலிப் பாடங்கள் மற்றும் ஆங்கிலப் பயிற்சித் தாள்கள் தயாரிக்கப்படும். இத்திட்டம், 2013-2014 ஆம் ஆண்டில், ரூ.1.20 கோடி செலவில் நடைமுறைப்படுத்தப்படும்.*

ஈ) *ஆசிரியர்களின் திறனை மேம்படுத்துதல் என்பது இம்முழுச் செயல்பாடுகளின் ஓர் அங்கமாகும். மாணவர்களின் கணிதம் மற்றும் அறிவியல் பாடங்கள் கற்கும் திறனை மேம்படுத்துவதற்காக அப்பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு நவீன முறையில் கருத்தூன்றி*

அப்பாடங்களைக் கற்றுத்தருவதற்குரிய தகுதிபெற தீவிரமான பயிற்சி அளிக்கப்படும். இதற்காக ரூ.69.44 கோடி செலவிடப்படும்.

உ) குழந்தைகள் விஞ்ஞானப் பூர்வமாக சிந்திக்கும் திறனுள்ளவர்களாகவும், எதனையும் அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆர்வம் உள்ளவர்களாகவும் விளங்க வேண்டும். பள்ளி அளவிலும், வட்டார அளவிலும் மற்றும் மாவட்ட அளவிலும் நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்காக அறிவியல் கண்காட்சி நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் அறிவியல் அறிவை வலுப்படுத்துவதற்காக நடமாடும் அறிவியல் ஊர்தி பள்ளிகளுக்குச் செல்லும். மாணவர்கள் நேரடி அனுபவம் பெறுவதற்காகக் களப் பயணங்களும் ஏற்பாடு செய்யப்படும்.

ஊ) "படித்தலே ஒரு மனிதனை முழுமையாக்குகிறது". மாணவர்களிடம் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துவதற்கு வகுப்பறைகளில் சிறார்களுக்கான "நூலகப் பகுதி ஒன்று" அமைக்கப்படும். நடமாடும் நூலகங்கள் இதற்காகப் பயன்படுத்தப்படும். மாணவர்களின் நீதி மற்றும் பண்பாடு சார்ந்த விழுமியங்கள் மேம்படுவதற்குரிய கதைப் புத்தகங்கள் வழங்கப்படும்.

3.7 மன அழுத்தமற்று மகிழ்ச்சியாக கற்றல்

மாணவர்கள் மன அழுத்தமின்றிக் கற்பதற்கு வகை செய்யவேண்டுமென்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அக்கறை காரணமாக 2012-2013 ஆம் ஆண்டு முதல் தொடக்கக் கல்வி அளவில் 1-8 வகுப்புகளுக்கு முப்பருவக் கல்வி முறை மற்றும் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை அறிவிக்கப்பட்டு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இம்முறை இடைநிலைக் கல்விக்கும் விரிவுபடுத்தப்பட்டு முதற்கட்டமாக 2013-2014 ஆம் கல்வி ஆண்டில் 9 ஆம் வகுப்புக்கு அறிமுகப்படுத்தப்பட உள்ளது. தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையினை நடைமுறைப்படுத்தியதில் தமிழகம் இந்தியாவிலேயே முதல் மாநிலமாகவும் அதன்வழி குழந்தைகள் மன அழுத்தமின்றியும், தேர்வு அச்சமின்றியும் மகிழ்வாக கற்க வழிவகை செய்த வகையில் தமிழகம் முன்னோடி மாநிலமாகவும் விளங்குகின்றது. இம்முறையில் ஒரு கல்வியாண்டினை மூன்று

2013 மே 10]

பருவங்களாகப் பிரித்து ஒவ்வொரு பருவத்திற்கும் ஒரு பாடநூல் வழங்கப்படுவதன்மூலம் மாணவர்களின் கடுமையான புத்தகச் சுமையும், மனச்சுமையும் குறைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் கல்விச் செயல்பாடுகள் மற்றும் கல்வி இணைச் செயல்பாடுகளில் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையில் மதிப்பீடு செய்யப்படுகின்றனர். ஆசிரியர்களுக்கும் இம்முறையில் மதிப்பீடு செய்வதற்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. மாணவர்களது படைப்புச் சிந்தனை மற்றும் திறன்களை வளர்க்கும் செயல்பாடுகள் பாடநூல்களில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

3.8 எளிய செயல்வழிக்கற்றல் முறை

புதிய பாடத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதையொட்டி செயல்வழிக் கற்றல் முறையினை, மறுசீரமைப்பு செய்யவேண்டிய அவசியம் உணரப்பட்டு, மாற்றியமைக்கப்பட்ட செயல்வழிக்கற்றல் அட்டைகள், பாடநூல்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. 2012-2013 ஆம் ஆண்டில் அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1-4 வகுப்புகளுக்கு புதிய ஏணிப்படி முறை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

3.9 ஆசிரியர்—மாணவர் விகிதம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆசிரியர்-மாணவர் விகிதத்தைக் கருத்தில் கொண்டு 7,625 இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் 3,541 பட்டதாரி ஆசிரியர்களை பணி நியமனம் செய்ய அறிவித்துள்ளார்கள். இதன்விளைவாக குழந்தைகளுக்கான இலவசக் கட்டாயக் கல்வி மற்றும் உரிமைச் சட்டம் நிர்ணயித்தபடியான ஆசிரியர்-மாணவர் விகிதத்தை தமிழகம் முன்கூட்டியே அடைந்து ஒரு உதாரண மாநிலமாக விளங்குகிறது. மாநிலத்தில் ஆசிரியர்-மாணவர் விகிதம் தொடக்கக் கல்விக்குத் தேவையான 1:30 என்பதிலிருந்து 1:26.70 என்னும் விகிதத்திலும், நடுநிலைப் பள்ளிகளுக்குத் தேவையான 1:35 என்ற விகிதத்திலிருந்து 1:27.28 என்ற விகிதத்திலும் அமைந்துள்ளது. இந்த நேர்மறையான ஆசிரியர்-மாணவர் விகிதம் ஆசிரியருக்கும் மாணவருக்கும் நேரடித் தொடர்பை அதிகப்படுத்தியுள்ளன. இதனால் ஆசிரியர்களுக்கு, மாணவர்களின் சிறந்தத் திறனை வெளிக்கொணர்ந்து ஒருங்கிணைந்த வளர்ச்சி காண்பதற்கான வாய்ப்பினை அளிக்கிறது.

3.10 ஆசிரியர் நியமன முறை

சரியான மனப்பாங்குடன் கற்றலில் ஆர்வமிக்க தகுதிவாய்ந்த ஆசிரியர்களைத் தேர்வு செய்வதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எழுத்துப் போட்டித் தேர்வுமூலம் ஆசிரியர் தேர்வு செய்யப்படுவதை அறிமுகப்படுத்தினார்கள். குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி மற்றும் உரிமைச் சட்டம், 2009-ல் வலியுறுத்தியபடி, ஆசிரியர் தகுதித் தேர்வின் அடிப்படையில் ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். 2012-2013 ஆம் கல்வி ஆண்டு வரை அனுமதிக்கப்பட்ட இடைநிலை ஆசிரியர் மற்றும் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில் 9,692 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களும், 1,073 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளன. மீதம் உள்ள ஆசிரியர் பணியிடங்கள் 2013-2014 ஆம் ஆண்டு நிரப்பப்பட உள்ளன. இதைத் தவிர, 2012-2013 ஆம் ஆண்டில் 75 தெலுங்கு மொழி, 14 உருது மொழி, 13 மலையாள மொழி இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் 6 தெலுங்கு, 8 மலையாளம், 6 கன்னடம், 7 உருது மொழி பட்டதாரி ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

3.11 பகுதிநேர ஆசிரியர்கள்

தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு என்பது கல்விச் செயல்பாடுகளை மட்டுமின்றி கல்வி இணைச் செயல் பாடுகளையும் சார்ந்தே அமைந்துள்ளது. இதன்பொருட்டு 16,549 பகுதிநேர ஆசிரியர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. உடற்கல்வி, சுகாதாரக் கல்வி, கலை, தையல், தோட்டக்கலை, தொடர்புத் திறன், கணினிப் பயன்பாடு போன்ற பல்வேறு பிரிவுகளில் 15,169 பகுதிநேர ஆசிரியர்கள் முதன்முறையாக நியமிக்கப்பட்டுள்ளனர். இதனால் ஆசிரியர்களுக்கு மாணவர்களின் உள்ளார்ந்த ஆற்றலை கண்டறிந்து அவற்றை வெளிக்கொணரவும், அதன்மூலம் அவர்கள் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கவும் வாய்ப்பளிக்கப்படுகிறது.

3.12 ஆசிரியர் செயல்திறன் மேம்பாடு

ஆசிரியர்களின் செயல் திறன் மேம்பாட்டிற்கு அவர்களின் அறிவும் ஆற்றலும் புத்தாக்கம் செய்யப்படுவது இன்றியமையாததாகும். கல்விச் செயல்பாடு மற்றும் கல்வி இணைச் செயல்பாடுகளிலும் ஆசிரியர்கள் திறனடைய மாநிலக்

2013 மே 10]

கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் மற்றும் அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் வளஆதாரங்களை ஒருங்கிணைத்து பயிற்சி அளிக்கப்படும். முந்தைய ஆண்டுகளில் அடைந்த வெற்றி எதிர்வரும் ஆண்டுகளுக்குச் சிறந்த இலட்சியமாக அமையும். இவ்வெற்றிக் கதைகளை பயிற்சியின்போது பகிர்ந்து கொள்ளப்படுவதன்மூலம் ஆசிரியர்கள் ஊக்கமடைவர். முந்தைய அனுபவங்களை அடிப்படையாக வைத்துப் புதுமையான செய்முறைகள் உருவாக்கப்படும். உலகளாவிய சவால்களைச் சமாளிப்பதற்கு மாணவர்களைத் தன்னம்பிக்கையுடன் தயார்படுத்தும் வகையில், ஆங்கில மொழித்திறனுக்கு ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்படும். அதன்மூலம் ஆசிரியர்கள் மாணவர்களை உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதற்கு தயார்படுத்துவதற்குக் கூடுதல் தன்னம்பிகை உடையவர்களாக விளங்குவர்.

கல்வி சார்ந்த குறுந்தகடுகள், பள்ளிகளுக்கு வழங்கப்பட்டு அவை தொடர்ந்து வகுப்பறைகளில் முறையாகப் பயன்படுத்தப்படும். ஆசிரியர்கள் பள்ளிகளில் உள்ள நவீன பல்நோக்கு ஊடகங்களையும், தொழில்நுட்பங்களையும் பயன்படுத்துவதில் திறனுள்ளவர்களாக்க வேண்டும். மாணவர்களுக்கு வழிகாட்டுதலும் ஆலோசனை வழங்குதலும் இத்தருணத்தின் தேவையாகும். ஆகவே ஆசிரியர்கள் எத்திறனும் பெற்றவர்களாக விளங்க வேண்டும். மாணவர்களை ஆபத்தின்றி காத்திடுதல் மற்றும் அவர்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

3.13 கண்காணித்தல்

திறமையான செயல்பாட்டிற்கும், தர மேம்பாட்டிற்கும் முக்கியமான கருவியாக அமைவது கண்காணிப்பே ஆகும். மேற்பார்வை, பள்ளிப் பார்வை, ஆய்வு, மாதிரி ஆய்வுகளை பகுப்பாய்தல் மற்றும் மதிப்பீடுகள் முறையாக செயல்படுத்தப்பட வேண்டும். இத்தேவையை உணர்ந்து, 34 உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். மலையாள மொழிப் பள்ளிகளை மேற்பார்வையிட 2 உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களும் (மலையாளம்) நியமிக்கப்பட உள்ளனர். நிருவாகம் மற்றும் கண்காணித்தல் சார்ந்த திறனை மேம்படுத்தும் வகையில் இவ்வலுவலர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.

[2013 மே 10

3.14 உள்கட்டமைப்பு வசதிகள்

போதுமான உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதன்மூலம் அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்க இயலும். இதனை கருத்தில் கொண்டே அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் உறுதுணையுடன் தலைமையாசிரியர் அறை, புதிய பள்ளிகளுக்கான வகுப்பறைகள் மற்றும் மாணவர் எண்ணிக்கைக்கேற்பக் கூடுதல் வகுப்பறைகள், குடிநீர் வசதி, சமையலறை, சுற்றுச்சுவர் மற்றும் கழிவறை போன்ற பள்ளிகளுக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாற்றுத் திறனாளி மாணவர்களின் வசதியைக் கருதி சாய்தளம் மற்றும் மாற்றியமைக்கப்பட்ட கழிவறை போன்ற சிறப்பு உள்கட்டமைப்பு வசதி ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் அனைவருக்கும் கல்வி இயக்கத்துடன் ஒருங்கிணைந்து கிராமப்புறங்களிலுள்ள பள்ளிகளுக்கு 100% கழிவறை மற்றும் குடிநீர் வசதி செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கிராமப்புறப் பள்ளிகளில் தற்பொழுதுள்ள நிலைமைக்கும் 100 விழுக்காடு கழிவறை வசதி மற்றும் குடிநீர் வசதி இலக்கினை அடைவதற்கும் இடையே உள்ள இடைவெளியை நிறைவு செய்யும் பொருட்டு 2,733 பள்ளிகளில் கழிவறை வசதியும், 702 பள்ளிகளில் குடிநீர் வசதியும் அமைப்பதற்கு முன்னுரிமை தரப்பட்டுள்ளது.

2013-2014 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் குடிநீர் வசதி மற்றும் கழிவறை வசதி செய்து கொடுப்பதில் 100 விழுக்காடு இலக்கினை எய்தும்பொருட்டு “நபார்டு” வங்கித் திட்டத்தின்கீழ் ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தரமான கல்வியை அளிப்பது மட்டுமல்லாமல், உள்கட்டமைப்பு வசதிகளோடு கூடியதாக, மாணவர் சேர்க்கை மற்றும் தக்கவைத்தலில் 100 விழுக்காடு இலக்கினை எட்டிய மாநிலமாக, நம் மாநிலத்தை உயர்த்த வேண்டுமென்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலை நோக்கினை நிறைவேற்றுவதற்கு தொடக்கக் கல்வி இயக்ககம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு அயராது செயல்படும்.

2013 மே 10]

3.15 வரவு–செலவுத் திட்ட ஒதுக்கீடு

2012-2013 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் தொடக்கக் கல்வி இயக்குநரகத்திற்கு ரூ.6,402.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்போது இவ்வொதுக்கீடு அதிகரிக்கப்பட்டு 2013-2014 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.7,618.36 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொடக்கக் கல்வியே இடைநிலைக் கல்விக்கான அடித்தளமாகும். கல்வியின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலை நோக்கினை நிறைவேற்றுவதற்கும் தொடக்கக் கல்வி இயக்ககம் மாணவர்கள் பயனடையும் வகையில் அனைத்து விதமான முன்னேற்றச் செயல்பாடுகளையும் மேற்கொண்டு வருகிறது.

4. அனைவருக்கும் கல்வி இயக்கம்

4.1 முன்னுரை

ஒவ்வொரு தனி மனிதனுக்கும் கல்வி மிகவும் அவசியமானது. கல்வியின் மூலமாகத்தான் சமூகத்தில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் களையவும், நலிவடைந்த பிரிவினரை முன்னேற்றவும் இயலும். குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி வழங்குவதன்மூலம் அவர்களின் அடிப்படை மற்றும் சமூக உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. இதன் மூலமே குழந்தைகள் தரமான, வளமிக்க சமூகத்தில் துடிப்புடன் செயல்படக் கூடியவர்களாக ஆவர். வருங்காலத்தை வளமாக எதிர்கொள்ள ஏற்ற வாழ்வியல் திறன்களைத் தொடக்கக் கல்வியே குழந்தைகளுக்கு அளிக்கிறது. இக்கல்வி முறையானது ஆராய்ந்தறிதல், ஆரோக்கியம் பேணுதல், பிரச்சினைகளை எதிர்கொள்ளுதல், தளராத தன்னம்பிக்கை போன்ற உயர்ந்த பண்புகளைப் பள்ளிக் குழந்தைகள் பெற வழிவகை செய்கிறது.

அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமான தொடக்கக் கல்வியை இலக்காகக் கொண்டு அனைவருக்கும் கல்வி இயக்கமானது வழிவகை செய்கிறது. அனைவருக்கும் கல்வி இயக்கமானது குழந்தைகளின் திறன்களை சமுதாயம் கொண்டாடும் வகையிலான தரமான கல்வியை உயர்ந்த நோக்கில் அளித்தலாகும். தமிழகத்தில் இத்திட்டத்தைச் செயல்படுத்த மேற்கொள்ளப்பட்ட தீவிர

[2013 மே 10

முயற்சியின் காரணமாகப் பள்ளி வயதுக் குழந்தைகள் வாழும் பகுதிக்கு அருகில் பள்ளி வசதியை உருவாக்குதல், மாணவர்களின் சேர்க்கையை அதிகரித்தல், பள்ளியில் உள்ள குழந்தைகளைத் தக்க வைத்தல், பள்ளியில் சேர்ந்த குழந்தைகளின் பள்ளிப் படிப்பை நிறைவு செய்தல், பெண் கல்வியில் சிறப்புக் கவனம் செலுத்துதல் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி பெற்று தமிழகம் முன்னோடியாகத் திகழ்கிறது.

பள்ளி வசதி இல்லாத இடங்களில், தேவையறிந்து பள்ளி வசதியினை ஏற்படுத்துதல், குழந்தைகள் சேர்க்கை மற்றும் வருகை, குழந்தைகள் பள்ளிப் படிப்பினை முடித்தல் போன்றவற்றில் தமிழ்நாடு குறிப்பிடத்தக்க வளர்ச்சி பெற்று, ஒரு முன்னோடி மாநிலமாக விளங்குகிறது.

கல்விக்கு முக்கிய இடம் தந்து தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக உருவாக்குவதுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் "தமிழகத் தொலைநோக்கு 2023" பார்வையாகும். ஏழை எளிய மக்களிடமும், பொருளாதாரம் மற்றும் சமூகத்தில் பின்தங்கிய வகுப்பினர்களிடமும் தரமான கல்வி எளிதில் சென்றடைய வேண்டும் என்பதை மனதில் கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், பள்ளி செல்லும் குழந்தைகளுக்காகவே பல நலத் திட்டங்களை நடைமுறை படுத்தியுள்ளார்.

13-வது தேசிய நிதிக் குழுவின் பரிந்துரையின் பேரில் குழந்தைகளுக்கான இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்காக 2011-2012 ஆம் ஆண்டிற்கு ரூ.126 கோடியும், 2012-2013 ஆம் ஆண்டிற்கு ரூ.141 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2013-2014 ஆம் ஆண்டிற்கு ரூ.157 கோடி நிதி ஒதுக்கீடு எதிர்பார்க்கப்படுகிறது.

பின்தங்கிய மற்றும் நலிவுற்ற பிரிவினரின் குழந்தைகளுக்குத் தரமான கல்வி வழங்குதலை உறுதிசெய்யும் நோக்கத்துடன் தனியார் பள்ளிகளின் ஆரம்ப நிலை வகுப்பில் மொத்த மாணவர் சேர்க்கையில் 25 விழுக்காடு ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவசக் கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011-ன்படி வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாநிலத்தில் உள்ள அனைத்துக் குழந்தைகளும் 100 விழுக்காடு பள்ளியில் சேர்வதை உறுதி செய்வதும் அதற்கான

2013 மே 10]


வசதிகளை மேம்படுத்துவதுமே இம்முன்முயற்சிகளின் தலையாயக் குறிக்கோளாகும்.

4.2 தொலைநோக்கு

6 முதல் 14 வயதுள்ள குழந்தைகளின் சேர்க்கையை 100 விழுக்காடு உறுதி செய்து, சமூக மற்றும் பாலின வேறுபாடுகளைக் களைந்து அனைத்துப் பள்ளிகளின் வகுப்பறைகளில் ஆரோக்கியமான சூழலை உருவாக்கி, அனைவருக்கும் தரமான தொடக்கக் கல்வி அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

4.3 கல்விசார் குறியீடுகள்

கல்விசார் இலக்குகளை அடைவதில் தமிழ்நாடு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது. அதுமட்டுமின்றி கல்விசார் தகவல்கள் சேகரித்தல் மற்றும் பராமரித்தல், அவற்றைச் சரிபார்த்து பிற துறைகளுடன் தகவல்களைப் பகிர்ந்து, பல்துறை வளர்ச்சிக்குப் பயன்படுத்திக்கொள்வதிலும் தமிழ்நாடு தேசிய அளவில் முன்மாதிரி மாநிலமாக விளங்குகிறது. (வரைபடம் 6 முதல் 8)




வரைபடம் 6

ஆதாரம் - DISE & EER

[2013 மே 10

- *தொடக்க நிலையில், நிகர சேர்க்கை விகிதம் 2001-2002 இல் 93%-லிருந்து உயர்ந்து 2005-2006-ல் 99.29% ஆகவும் தற்பொழுது 99.69% ஆகவும், உள்ளது.*

- *நடுநிலையில், நிகர சேர்க்கை விகிதம் 2001-2002-ல் 90%-லிருந்து உயர்ந்து 2005-2006 இல் 98.25% ஆகவும், தற்பொழுது 99% ஆகவும் உள்ளது.*




வரைபடம் 7

ஆதாரம் - Cohort

- *தொடக்க நிலையில், இடைநிற்றல் விகிதம் 2001-2002-ல் 12%-லிருந்து குறைந்து 2005-2006 இல் 1.91% ஆகவும், தற்பொழுது 0.93% ஆகவும் உள்ளது.*

- *நடுநிலையில், இடைநிற்றல் விகிதம் 2001-2002-ல் 13%லிருந்து குறைந்து 2005-2006-ல் 4.08% ஆகவும், தற்பொழுது 1.70% ஆகவும் உள்ளது.*

2013 மே 10]



வரைபடம் 8

ஆதாரம் - Cohort


- *2001-2002 இல் தொடக்க நிலையில் நிறைவு விகிதம் 64% ஆகவும், 2005-2006-ல் 86.55% ஆகவும், தற்போது 97.73% ஆகவும் உயர்ந்துள்ளது.*
- *2001-2002-ல் நடுநிலையில் நிறைவு விகிதம் 68% ஆகவும், 2005-2006-ல் 88.57% ஆகவும், தற்போது 93.83% ஆகவும் உயர்ந்துள்ளது.*

மாணவர் சேர்க்கை (பாலின விகிதம்)

தொடக்க நிலை வகுப்புகளின் மொத்த சேர்க்கையில் 51.30 விழுக்காடு மாணவர்களும், 48.70 விழுக்காடு மாணவிகளும் (வரைபடம் 9), நடுநிலை வகுப்புகளில் 51.10 விழுக்காடு மாணவர்களும், 48.90 விழுக்காடு மாணவிகளும் கல்வி பயில்கின்றனர். (வரைபடம் 10). தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் மாணவர் மற்றும் மாணவியர் சேர்க்கை விகிதத்தினை


[2013 மே 10

ஒட்டுமொத்தமாக நோக்கும்பொழுது 51.20 விழுக்காடு மாணவர்களும், 48.80 விழுக்காடு மாணவியரும் கல்வி பயில்கின்றனர்.



வரைபடம் 9

ஆதாரம் – DISE




வரைபடம் 10

ஆதாரம் – DISE

2013 மே 10]

ஆசிரியர்—மாணவர் விகிதம் தொடக்கப் பள்ளிகளில் 1:26.70 ஆகவும், நடுநிலைப் பள்ளிகளில் 1:27.28 ஆகவும் உள்ளது. (வரைபடம் 11)



வரைபடம் 11

ஆதாரம்—DISE

4.4. அனைவருக்கும் கல்வி இயக்கம் – படிப்படியான முன்னேற்றங்கள்

தொடக்க மற்றும் நடுநிலைக் கல்வியில் சீர்மிகு மாற்றங்கள் ஏற்பட மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்:

- *அன்றாட வாழ்க்கை முறையுடன்கூடிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிக் கல்வியில் வியக்கத்தக்க மாற்றங்களை வெளிக் கொணர்தல்*
- *கல்வி பெறுவதற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்த தொடர் நடவடிக்கைகளைச் செயல்படுத்துதல்*
- *கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதற்கான தொடர் முயற்சிகளை எல்லா நிலைகளிலும் மேற்கொள்ளுதல்*

[2013 மே 10

- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்தல்
- சமூக நீதி மற்றும் சமூக நிலையை உயர்த்துவதற்கு வழிவகை செய்தல்

4.5 அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் குறிக்கோள்கள்

- தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 100% சேர்க்கையை உறுதி செய்தல், குறிப்பாகப் பள்ளி செல்லாக் குழந்தைகளைப் பள்ளியில் சேர்த்தல்
- சாதி, மதம், இனம் மற்றும் சிறப்புக் கவனத்திற்குரிய குழந்தைகளை வேறுபடுத்தும் செயல்பாடுகளைக் களைதல்
- முறையான பள்ளிகளில் சேர்க்கப்படும் அனைத்துக் குழந்தைகள் மனதளவிலும், சமூக அளவிலும் வகுப்பில் இணைந்திட சிறப்புப் பயிற்சியும், கல்வி சார்ந்த உதவிகளையும் தொடர்ந்து அளித்தல்
- பள்ளி செல்லாத, சமுதாயத்தால் புறக்கணிக்கப் பட்ட, பெரியவர்களின் அரவணைப்பில் அல்லாத குழந்தைகளைப் பள்ளியில் சேர்த்தல்
- மக்கள்தொகை குறைவான பகுதியில் வாழும் குழந்தைகளுக்கு உண்டி உறைவிட வசதி ஏற்படுத்துதல்
- தொலைதூரக் குடியிருப்புப் பகுதிகளில் வாழும் குழந்தைகளுக்கு வாகன மற்றும் பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்துதல்
- பெண் கல்வியை மேம்படுத்துவதற்கு வாகன வசதி, பாதுகாப்பு, நல்வழி காட்டி உதவுதல்
- பெண் குழந்தைகள் மற்றும் சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட குழந்தைகளுக்கும் கல்வியைத் தொடரும்பொருட்டு உண்டி, உறைவிட வசதி உருவாக்குதல்
- சிறப்புக் கவனம் தேவைப்படும் ஒவ்வொரு குழந்தைக்கும் இயலாமை அளவினைக் கருதாமல் பாகுபாடற்ற கல்வியைப் பாரபட்சம் இன்றி அளித்தல்

2013 மே 10]

- அனைத்துத் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்
- கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கு ஆசிரியர்களுக்குத் தரமான பயிற்சி அளித்தல்

4.6 அனைவருக்கும் கல்வி இயக்ககத்தின் செயல்பாடுகள்

2013-2014-கான அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் செயல்பாடுகளாவன:

- பள்ளிகளின் தேவைகளைக் கண்டறிதல்
- மாணவர் சேர்க்கையைத் தக்க வைத்தல்
- தர மேம்பாட்டுத் திட்டங்கள்
- சமூக மற்றும் பாலின வேறுபாடுகளைக் களைதல்
- பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்
- வருடாந்திர மானியம்

4.7 பள்ளி வசதி

புதிய பள்ளிகளின் தேவைகளைக் கண்டறிய, புவியியல் தகவல் முறைமை (Geographic Information System) எனும் நவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன் தமிழகத்தில் பள்ளிகள் பற்றிய அமைவிட வரைபடத் தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த புவியியல் தகவல் முறைமையின்படி 2,928 குடியிருப்புகளில் புதிய தொடக்கப் பள்ளிகள் தேவை எனவும், இவற்றில் 39,342 பள்ளி வயது குழந்தைகள் எளிதில் கல்வி பெறும் வகையில் 732 குடியிருப்புகள் புதிதாக தொடக்கப் பள்ளி தொடங்க தகுதியானவை எனவும் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் 24,428 பள்ளி வயது குழந்தைகள் பயன் பெறும் வகையில் 330 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த தகுதியானவை எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், இந்த புவியியல் தகவல் முறைமையின் உதவியால் தேர்ந்தெடுக்கப்பட்ட குடியிருப்புப் பகுதியில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை மற்றும் அருகிலுள்ள உண்டி உறைவிடப் பள்ளிகளின் தூரம் ஆகியவற்றின் அடிப்படையில் புதிய உண்டி உறைவிடப்

பள்ளிகள் தொடங்குவதற்கான இடங்களும் தெரிவு செய்யப்படுகின்றன.

தொலைதூரப் பகுதிகள், அடர்ந்த வனப் பகுதிகள், பள்ளி வசதியற்ற மக்கள் அடர்த்தி குறைவாக உள்ள குடியிருப்புகளில் வாழும் குழந்தைகளை பள்ளியில் தக்கவைப்பதற்காகவும் 100 சதவீத மாணவர் சேர்க்கையை உறுதி செய்வதற்காகவும் போக்குவரத்து மற்றும் பாதுகாப்பாக மாணவர்களை பள்ளிகளுக்கு அழைத்துச் சென்று வீட்டிற்கு திரும்ப அழைத்துவர வசதிகள் 8 மாவட்டங்களில், 4,857 குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. 2013-2014 ஆம் கல்வி ஆண்டில் 15,485 மாணவர்களுக்குப் போக்குவரத்து மற்றும் பாதுகாப்பாக பள்ளிகளுக்கு அழைத்துச் சென்று திரும்ப அழைத்துவர வசதிகள் வழங்கப்பட உள்ளன.

4.8 தக்கவைத்தல்

4.8.1 சிறப்புப் பயிற்சி


அரசு பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டதன் விளைவாக 2001-2002-ல் 5.74 இலட்சமாக இருந்த பள்ளி செல்லா குழந்தைகளின் எண்ணிக்கை 2012-2013-ல் 51,447 ஆகக் குறைந்துள்ளது. (வரைபடம் 12) கடந்த ஆண்டில் கண்டறியப்பட்ட 53,832 பள்ளி செல்லா குழந்தைகளில் 47,684 குழந்தைகளுக்கு உண்டி/உறைவிட சிறப்புப் பயிற்சி மையங்கள்/ இணைப்பு சிறப்புப் பயிற்சி மையங்கள் வாயிலான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

குழந்தைகளின் இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 இன்படி கண்டறியப்பட்ட பள்ளி செல்லா குழந்தைகள் 2012-2013 முதல் அருகிலுள்ள முறையான பள்ளிகளில் வயதுக்கேற்ற வகுப்பில் சேர்க்கப்படுகின்றனர். அக்குழந்தைகளுக்கு உண்டி உறைவிட சிறப்புப் பயிற்சி அல்லது இணைப்பு சிறப்புப் பயிற்சி மையங்கள் வாயிலாகத் தேவையான பயிற்சி வழங்கப்படுகின்றது. 6 முதல் 12 மாத பயிற்சிக்கு பிறகு சிறப்புப் பயிற்சி மைய குழந்தைகள் மீள பள்ளிகளில் வயதுக்கேற்ற வகுப்புகளில் இணைக்கப்படுகின்றனர்.

ஒவ்வொரு குடியிருப்பிலும் அனைவருக்கும் கல்வி இயக்க திட்ட அலுவலர்கள் கிராம சபா கூட்டங்களில் கலந்து கொண்டு பள்ளி செல்லாக் குழந்தைகளைக் கண்டறிந்து நூறு விழுக்காடு

2013 மே 10]

மாணவர் சேர்க்கை மற்றும் தரமான கல்வி வழங்குதல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். (வரைபடம் 12)



வரைபடம் 12

ஆதாரம்—EER & MRF

4.8.2 உள்ளடங்கிய கல்வி

2012-2013 ஆம் கல்வியாண்டில் 1,46,282 சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகள் பயன் அடைந்துள்ளனர். 417 மையங்களில் நடைபெற்ற மருத்துவ முகாமில் 12,317 மாணவர்களுக்கு உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. மாணவர்கள் பள்ளி சென்று கல்வி பயில இயலாத, உடல்நிலை பாதிக்கப்பட்ட 26,263 குழந்தைகளுக்குப் பயிற்சி பெற்ற பணியாளர்கள்மூலம் அவர்கள் வீட்டிலேயே உரிய பயிற்சி அளிக்கப்படுகிறது. குறைபாடு அதிகமுள்ள 8,211 மாணவர்கள் 392 பகல் நேர பாதுகாப்பு மையம் வாயிலாக பயன் அடைந்து வருகின்றனர்.

[2013 மே 10

சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகள் எளிதாகப் பயன்படுத்தும் வகையில் 4,226 பள்ளிகளில் உள்ள கழிப்பறைகள் அவர்கள் பயன்படுத்த ஏதுவாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. 1,858 பள்ளிகளில் இக்குழந்தைகள் பயன்படுத்தும் வகையில் நடைமேடைகள் அமைக்கப்பட்டுள்ளன. 60 ஆதார வள மையங்களில் மேற்காண் குழந்தைகள் பயன்படுத்தத்தக்க வகையில் கழிப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளன, 375 மாணவர்களுக்குத் தேவையான அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. 894 மன வளர்ச்சி குன்றிய மாணவர்கள், 24 சிறப்பு உண்டி உறைவிடப் பள்ளியில் பயின்று வருகின்றனர். 86 மாணவர்களுக்கு மேல் உதடு பிளவுக்கான அறுவை சிகிச்சையும் செய்யப்பட்டுள்ளது. 2012-2013 ஆம் ஆண்டில் கற்றலில் குறைபாடு உள்ள மாணவர்களுக்கு கற்றலை மேம்படுத்தும் விதம் குறித்து 1,78,351 ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் கல்வியாண்டில் (2013-2014) மாணவர்களிடையே காணப்படும் பார்வைக் குறைபாடுகளை பரிசோதனை செய்து தேவையான உதவிகள், உபகரணங்கள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. 5 மாவட்டங்களில் மூளைக் காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தவும் மற்றும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குத் தடுப்பூசிகள் போடவும் (Vaccination) திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிகளுக்காக ரூ.25.36 கோடி அடுத்த கல்வியாண்டிற்காக ஒதுக்கீடு செய்ய கோரப்பட்டுள்ளது.

4.8.3 மாநில ஆதார வள மையம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ், கற்றல் குறைபாடுள்ள குழந்தைகளுக்கான சிறப்புப் பயிற்சி மற்றும் தேவையான ஆலோசனைகள் அளிக்கும் வகையிலும் பொது சுகாதாரத் துறை, பொது நூலகத் துறை ஒன்றிற்கு மேற்பட்ட ஊனமுற்றோருக்கான மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனம், தேசிய பார்வையற்றோருக்கான மண்டல நிறுவனம் மற்றும் இந்திய செயற்கை உடலுறுப்புகள் உற்பத்திக் கழகம் போன்ற நிறுவனங்கள்மூலம் உதவிப்பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கும் வகையிலும் சென்னை சாந்தோமில் மாநில ஆதார வள மையம் உருவாக்கப்படும் என அறிவித்தார்கள்.

பிற நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன் இம்மையம் தேசிய அளவில் மாதிரி மையமாக அமைக்க நடவடிக்கை

2013 மே 10]

மேற்கொள்ளப்பட்டுள்ளது. கற்றல் குறைபாடு உடைய மாணவர்களின் ஆற்றல் மேம்பாட்டிற்குத் தேவையான அனைத்து வாய்ப்புகளும் இம்மையத்தில் உருவாக்கப்படும்.

4.8.4 மழலையர் முன்பருவக் கல்வி (ECCE)

மனிதனுடைய வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தில் குழந்தைப் பருவத்தின் முதல் ஆறு வருடங்கள் மிக முக்கியமானவை. இப்பருவம் வளர்ச்சிக்கான சவால்கள் நிறைந்து இருக்கும். ஆதலால், 0 - 6 வயது பருவம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டிய பருவமாக அமைந்துள்ளது. அடிப்படைக் கல்வி மற்றும் உடல் சார்ந்த வளர்ச்சி இவையிரண்டும் ஒருங்கிணைந்த செயல்பாடாக இருக்கவேண்டும். குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் பராமரிப்பில் நாம் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை நமது கடந்த கால அனுபவங்கள் மற்றும் ஆராய்ச்சியின் வாயிலாக பெற்ற அனுபவங்கள் கற்றுத் தந்துள்ளன. இதனை முறையாகப் பின்பற்றுவதன்மூலம் மழலையரின் முன்பருவக் கல்வி மற்றும் பராமரிப்பு குறிப்பிடத்தகுந்த முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

முறைப்படுத்தப்பட்ட முன்பருவ மழலையர் கல்வி மற்றும் பராமரிப்பு, கீழ்க்கண்ட செயல்பாடுகள்மூலம் குழந்தைகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது:

- குழந்தைகளிடையே ஒருங்கிணைந்த சமூகப் பண்புகளை மேம்படுத்துதல்
- ஆரோக்கியமான பழக்கவழக்கங்களை உருவாக்குதல்
- ஆக்கச் சிந்தனையுடன்கூடிய கற்றல் அனுபவங்களைப் பெற ஊக்குவித்தல்
- குழந்தைகளின் ஒருங்கிணைந்த உடல், மன ஆளுமைக்கேற்ற சூழலை உருவாக்குதல்

ஒருங்கிணைந்த குழந்தைகள் முன்பருவ மழலையர் கல்வியானது, குழந்தைகள் மனம், சமூகம், சத்துணவு, ஆரோக்கியம் மற்றும் கல்வி சார்ந்த முழுமையான வளர்ச்சியைப் பெற உடல் மற்றும் மனம் சார்ந்த செயல்களை ஊக்குவிக்கும் வகையில் ஆரோக்கியமான சூழலை வளர்க்கக்கூடியதாக உள்ளது. சமூக பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மற்றும் முதல் தலைமுறையினராக கல்விபெறும் குழந்தைகளின் உடல், அறிவு

மற்றும் உள்ளம் சார்ந்த நிலைகளை எதிர்கொள்ள, மழலையின் முன்பருவக் கல்வி மிகவும் முக்கியமானதாகும்.

2012-2013 கல்வி ஆண்டில் 4,800 தரம் உயர்த்தப்பட்ட, அங்கன்வாடி மையங்களுக்கு ரூ.3.81 கோடி செலவில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

4.9 தர மேம்பாட்டுத் திட்டங்கள்

4.9.1 தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை

வகுப்பறைகளில் கற்றல் கற்பித்தல் நடைபெறுகின்ற அனைத்து நேரங்களிலும் பாடம் மற்றும் பாடத்துடன் இணைந்த அனைத்துத் திறன்களை தொடர்புபடுத்தி மதிப்பிடுதல் மிகவும் அவசியமானதாகும் என்பதை நமது தேசிய கல்விக் கொள்கைகள் வலியுறுத்துகின்றன. அதனடிப்படையில் மாணவர்களின் அறிவுசார் திறன்கள், வாழ்க்கையோடு இணைந்த பிற திறன்களுடன் ஒருங்கிணைத்து பள்ளிப் படிப்பின்மூலம் பெறும் அறிவையும், அதனைப் பயன்படுத்தும் திறனையும் மதிப்பீடு செய்யும் வகையில் மதிப்பீட்டு முறையில் புதிய யுத்திகளை பயன்படுத்தவேண்டிய அவசியத்தினைக் கருதி தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை மாணவர்களின் அடைவுத் திறனை உறுதி செய்வதற்கு மிகவும் அவசியமானது என்பதால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாநிலத்திலுள்ள கல்வியின் தரத்தையும் குழந்தைகளின் திறமையையும் தேசிய அளவில் மேம்படுத்தும் பொருட்டு 2012-2013 ஆம் ஆண்டு முதல் 1 முதல் 8 வகுப்புகளுக்கும், 2013-2014 ஆம் ஆண்டு முதல் 9 ஆம் வகுப்பிற்கும் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையை அமல்படுத்திட ஆணையிட்டுள்ளார்கள்.

தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை, பள்ளியை அடிப்படையாகக் கொண்ட ஒரு மதிப்பீட்டு முறையாகும். இம்முறை மாணவர்கள் பள்ளிப் படிப்பினை மன உளைச்சல் மற்றும் சஞ்சலம் இல்லாத சூழலில் முடிக்க ஏதுவாக உள்ளது. மேலும், இம்முறையில் மாணவர்களை சுதந்திரமான சூழ்நிலையில் மதிப்பீடு செய்ய வழிவகுக்கப்பட்டுள்ளது. மாணவர்களிடம் அமைந்துள்ள திறமைகளை ஒருங்கிணைத்து சமூக நல்லிணக்கத்துடன் இணைந்து வாழும் முறையினை உருவாக்குதலை இம்மதிப்பீட்டு முறை வலியுறுத்துகிறது.

2013 மே 10]

கற்றல், கற்பித்தல் நிகழ்வுகளை இணைத்து வடிவமைக்கப்பட்டுள்ள இம்மதிப்பீட்டு முறை, வகுப்பறை கற்றலை உறுதிப்படுத்துதல், கற்றல் குறைபாடுகளைக் கண்டறிதல், அதற்கேற்ப தீர்வினைக் கையாளுதல் ஆகியவற்றினை உள்ளடக்கியது. தொடர் மதிப்பீடு, மாணவர்கள் பருவம்தோறும் அடைந்துள்ள கற்றல் திறன்களையும், கற்றல் குறைபாடுகளையும் கண்டறிந்து அவர்களே தம்மை மேம்படுத்திக்கொள்ள உதவுவதோடு, அதற்கேற்ப ஆசிரியர்களும் தமது கற்பித்தல் முறைகளை மாற்றியமைத்துக் கொள்ளவும் உதவுகிறது. இது வளரறி மதிப்பீடு மற்றும் தொகுத்தறி மதிப்பீடுகளை உள்ளடக்கியது.

4.9.2 முப்பருவ முறை

"தமிழகத்தின் இன்றைய திட்டம்,
இந்திய துணைக் கண்டத்தின் நாளைய செயலாக்கம்".

தேசிய மற்றும் சர்வதேச அளவிலான ஆய்வுகள் அனைத்தும் மாணவர்களின் எடையில் 10% முதல் 15% வரை தான் அவர்களது புத்தகச் சுமை இருக்கவேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றன.

சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 26-8-2011 ஆம் தேதியன்று தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் 2012-2013 ஆம் ஆண்டு முதல், 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை மாணவர்களின் புத்தகச் சுமையை குறைத்திட முப்பருவ முறை நடைமுறைப்படுத்தப்படும் என அறிவித்தார்கள்.

4.9.3 எளிமைப்படுத்தப்பட்ட செயல்வழிக் கற்றல்

முப்பருவப் பாடத் திட்டத்தின் அடிப்படையில் ஒன்று முதல் நான்கு வகுப்புகளுக்கு எளிமைப்படுத்தப்பட்ட செயல்வழிக் கற்றல் அட்டைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. திருத்தி அமைக்கப்பட்டுள்ள பாடத் திட்டத்தின் அடிப்படையிலும், எதிர்பார்க்கும் கற்றல் விளைவுகளை அடையும் விதமாகவும், முப்பருவப் பாடத் திட்டத்திற்கு ஏற்பவும் கற்றல் அட்டையில் செயல்பாடுகள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. பாடப் புத்தகத்தில் உள்ள பயிற்சிகளுக்கேற்ப கற்றல் அட்டைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு செயல்பாடுகளுக்கு ஏற்ப சின்னங்களும் திருத்தி

அமைக்கப்பட்டுள்ளன. அனைத்துப் பாடங்களுக்கும் பொதுவான சின்னங்களும் குறிப்பிட்ட பாடத்திற்கு மட்டும் சில சின்னங்களும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

பழைய கற்றல் அட்டைகளில் ஒவ்வொரு வகுப்பிற்கு ஒரு நிறமும் ஒவ்வொரு பாடத்திற்கு தனித் தனியான சின்னங்களும் இருந்தன. தற்போதுள்ள கற்றல் அட்டைகளில் பாடத்திற்கு ஏற்ப வண்ணங்கள் மாற்றப்பட்டு கீழ்க்கண்டவாறு கொடுக்கப் பட்டுள்ளன:

பாடம்	வண்ணம்
தமிழ்	நீலம் (Blue)
ஆங்கிலம்	இளஞ்சிவப்பு (Pink)
கணக்கு	கருஞ்சிவப்பு (Maroon)
அறிவியல்	பச்சை (Green)
சமூக அறிவியல்	ஆரஞ்சு (Orange)

தேசிய கலைத் திட்டம் 2005 இன்படி 5 மற்றும் 6 வயதுள்ள குழந்தைகள் உளவியல் ரீதியாகவும், சிந்தனைத் திறனிலும் ஒத்த மனநிலையைக் கொண்டிருப்பதால், அவர்களுக்கேற்ப 1 மற்றும் 2 ஆம் வகுப்பு கற்றல் ஏணிப்படிகள் தனியாகவும், 3 மற்றும் 4 ஆம் வகுப்புகளுக்கென ஏணிப்படிகள் தனியாகவும் தற்பொழுது ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. ஒரே படிநிலையில் ஒன்று அல்லது இரண்டு திறன்கள் இணைத்து கொடுக்கப்பட்டுள்ளதால், ஏணிப்படியில் படிநிலைகளின் எண்ணிக்கை குறைக்கப் பட்டுள்ளது. பக்கவாட்டு ஏணிப்படியிலுள்ள செயல்பாடுகள் அனைத்தும், படிநிலைகளிலேயே இணைக்கப்பட்டுள்ளன. 1 முதல் 4 ஆம் வகுப்பு வரையிலுள்ள சின்னங்கள் மற்றும் படிநிலைகள் அனைத்திற்கும் தொடர் எண்கள் கொடுக்கப் பட்டுள்ளன. செயல்வழிக் கற்றலிலுள்ள செயல்பாடுகளிலும் தொடர் மதிப்பீடு உள்ளடங்கியுள்ளது.

2013-2014 ஆம் ஆண்டில் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப கூடுதலாக 2,025 ஜோடி கற்றல் அட்டைகளும், ஆங்கில வழியில் செயல்வழிக் கற்றல் அட்டைகள் கற்பிப்பதற்கு 1,000 ஜோடியும் சிறுபான்மை மொழிகளான தெலுங்கு, கன்னடம், உருது,

2013 மே 10]

மலையாளம் போன்ற மொழிகளில் கற்பிப்பதற்கு 900 ஜோடி கற்றல் அட்டைகளும் வழங்கப்பட உள்ளன.

4.9.4 பயிற்சி

ஆசிரியர்களுக்கான பணியிடைப் பயிற்சி

2013-2014 ஆம் ஆண்டில் ஆசிரியர்களுக்கான பணியிடைப் பயிற்சிக்காக ரூ.6.26 கோடி நிதி கோரப்பட்டுள்ளது. தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் வழங்கிய கருத்துகளின் அடிப்படையில் குறு வள மைய அளவில் வாசித்தல், எழுதுதல், அடிப்படை கணிதத் திறன், எளிய அறிவியல் கருத்துகளை உள்ளடக்கிய பயிற்சிகள் ஆசிரியர்களுக்கு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. கல்வி உரிமைச் சட்டத்தை நிறைவேற்றவும், பாடப் பொருள் மற்றும் கற்பித்தல் முறைகளை மேம்படுத்தவும் வட்டார வள மைய அளவில் 'குழந்தைகள் பாதுகாப்பு, பாலியல் வன்கொடுமை, ஒழுக்கம், சமத்துவ முறையிலான சமூகம், சமூக விழிப்புணர்வு, இணையதளம் சார்ந்த குற்றங்களில் இருந்து காத்துக் கொள்ளல் எளிமைப்படுத்தப்பட்ட செயல்வழிக் கற்றல், தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு, பாடப் பொருள் வளப்படுத்தல்' போன்ற தலைப்புகளில் பயிற்சிகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

தலைமை ஆசிரியர் மற்றும் குறு வள/வட்டார வள மைய ஆசிரியப் பயிற்றுநர்களுக்கான பயிற்சி

தலைமை ஆசிரியர் மற்றும் குறு / வட்டார வள மைய ஆசிரியப் பயிற்றுநர்களின் குழுச் செயல்பாடுகள், அக மேற் பார்வை போன்ற செயல்பாடுகளை மேம்படுத்த "ஆளுமைத் திறன் வளர்ச்சி, மென் திறன்கள், வழிகாட்டுதல் அறிவுரை பகிர்தலும், கணினிப் பயிற்சி, அக மேற்பார்வை மற்றும் நிதி மேலாண்மை" போன்ற தலைப்புகளில் பயிற்சிகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

4.9.5 கணினிவழிக் கல்வி

அரசுப் பள்ளிகளில் மாநில அளவில் 23,168 கணினி மற்றும் அதனைச் சார்ந்த உபகரணங்களைக் கொண்டு 8,645 கணினிவழிக் கல்வி மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. 1,23,228 ஆசிரியர்களுக்கு மைக்ரோசாஃப்ட் மற்றும் இதர நிறுவனங்கள் வாயிலாக கணினி

[2013 மே 10

கற்றல் செயல்பாடுகளுக்குக் கணினியைப் பயன்படுத்தும் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. 2012-2013 ஆம் கல்வியாண்டில் 2,91,118 மாணவர்களுக்கும், 23,642 ஆசிரியர்களுக்கும் கணினி பயன்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்கு பாடக் கருத்துகளை வலுவூட்டும் விதமாக "தூன் மஸ்தி" குறுந்தகடுகள் வழங்கப்பட்டுள்ளன.

தொடக்கப் பள்ளிக் குழந்தைகளுக்கும் கணினிவழிக் கல்வியை ஊக்கப்படுத்த கல்வித் தரத்தில் சற்று பின்தங்கிய மாவட்டமான விழுப்புரம் தேர்ந்தெடுக்கப்பட்டு குழந்தை நேய சூழலை உருவாக்கும் வகையில் அனைத்துப் பள்ளிகளுக்கும் கல்விக்கென்று தனி அறை அமைத்து கணினி, ப்ரொஜக்டர் மற்றும் இதர உபகரணங்கள் வழங்கி முன்னோடித் திட்டத்தைச் செயல்படுத்தி, இதன் பயன்பாட்டினை ஆய்வுசெய்து பிற மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

4.10 பாலின மற்றும் சமூக இடைவெளியை ஒருங்கிணைத்தல்

4.10.1 கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா உண்டி உறைவிடப் பள்ளிகள்

கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்களிலுள்ள 10 முதல் 14 வயது வரையிலான பள்ளி செல்லா மற்றும் இடைநின்ற பெண் குழந்தைகள் கல்வியைத் தொடர வசதியாக, கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா என்னும் உண்டி உறைவிட சிறப்புப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன.

2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி பெண்களின் எழுத்தறிவு விகிதம் தேசிய சராசரியான 46.13%-க்கு குறைவாகவும், பாலின வேறுபாடு விகிதம் தேசிய சராசரியான 21.59%-க்கு அதிகமாகவும் உள்ள மாவட்டங்கள் கல்வியில் பின்தங்கியுள்ள ஒன்றியங்களாக கருதப்படுகின்றன.

*தமிழகத்தில் 12 மாவட்டங்களில் (கடலூர், தருமபுரி, ஈரோடு, கரூர், கிருஷ்ணகிரி, நாமக்கல், பெரம்பலூர், சேலம், சிவகங்கை, திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் விருதுநகர்) 44 கல்வியில் பின்தங்கியுள்ள ஒன்றியங்களில் 61 உண்டி உறைவிடப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 31 பள்ளிகள் மாதிரி-*I *பள்ளிகளாகவும் (100 பெண் குழந்தைகள் தங்கிப் பயில்வது) 30 பள்ளிகள் மாதிரி-*II *(50 பெண் குழந்தைகள் தங்கிப் பயில்வது)*

பள்ளிகளாகவும் செயல்படுகின்றன. இப்பள்ளிகளின்மூலம் 4,461 பெண் குழந்தைகள் பயன்பெற்று வருகின்றனர். 2012-2013 ஆம் ஆண்டிற்காக ரூ.15.43 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையில் ரூ.74.14 இலட்சம் தொடரா செலவினத்திற்காகவும் ரூ.14.69 கோடி தொடர் செலவினத்திற்காகவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி ஒன்றியம் மற்றும் ஈரோடு மாவட்டம், தூ.நா.பாளையம் ஒன்றியத்தில் செயல்பட்டு வந்த மாதிரி-I பள்ளிகள் 2012-2013-ல் மாதிரி-II பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

2013-2014 ஆம் ஆண்டிற்கு ரூ.9.77 கோடி தொடராச் செலவினங்களுக்காகவும், ரூ.18.11 கோடி தொடர் செலவினங்களுக்காகவும் ஆக ரூ.27.88 கோடி நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது.

4.10.2 தேசியப் பெண் கல்வி சிறப்புத் திட்டம்

தமிழகத்தில் 11 (கடலூர், தருமபுரி, ஈரோடு, கரூர், கிருஷ்ணகிரி, நாமக்கல், பெரம்பலூர், சேலம், சிவகங்கை, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம்) மாவட்டங்களில் உள்ள 37 கல்வியில் பின்தங்கியுள்ள ஒன்றியங்களில் தேசிய பெண் கல்வி சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. பள்ளிகளில் பெண் குழந்தைகளின் சேர்க்கையை அதிகரிக்கவும், 100 விழுக்காடு பெண் குழந்தைகளை தக்கவைக்கவும் தரமான கல்வி வழங்குவதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இது கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்களில் உள்ள, 6 முதல் 14 வயதுள்ள பள்ளி செல்லும் பெண் குழந்தைகள் பயன்பெறும் சிறப்புத் திட்டமாகும். இக்கல்வியாண்டில், பள்ளி செல்லும் 6 முதல் 14 வயதிற்குட்பட்ட 1,08,440 பெண் குழந்தைகள் இத்திட்டத்தின்மூலம் பயனடைந்து வருகின்றனர். 3 முதல் 4 பள்ளிகள் ஒன்றிணைக்கப்பட்ட 937 மாதிரித் தொகுப்பு பள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளன. 2012-2013 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்திற்காக ரூ.4.86 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. 2013-2014 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.5.95 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது,.

4.10.3 பெண் கல்வி

பெண் குழந்தைகள் அனைவரையும் 100% பள்ளியில் சேர்க்கவும் அவ்வாறு பள்ளியில் சேர்க்கப்பட்ட பெண் குழந்தைகளை

பள்ளியில் தக்கவைக்கவும் புதிய அணுகுமுறையாக இத்திட்டத்தின்கீழ் வாழ்வியல் திறன் பயிற்சிகள், கல்விச் சுற்றுலா போன்ற செயல்பாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் 2012-2013 கல்வி ஆண்டில் 48,000 பெண் குழந்தைகள் பயன் அடைந்துள்ளனர்.

4.10.4 ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் குழந்தைகளுக்கான கல்வி

சமூக ஏற்றத்தாழ்வினைக் களையவும், சம நிலையை உருவாக்கவும் ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் வகுப்புகளைச் சார்ந்த உயர் தொடக்க வகுப்புகளில் பயிலும் 63,000 குழந்தைகளுக்கு வாழ்வியல் திறன் பயிற்சி, ஆங்கிலத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் கல்விச் சுற்றுலா போன்ற செயல்பாடுகள்மூலம் தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

4.11 உட்கட்டமைப்பு வசதிகள்

தொடக்கக் கல்வி இயக்ககத்தின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாக அனைவருக்கும் கல்வி இயக்கத்தின்கீழ் புதிய பள்ளிகள் ஆரம்பித்தல், கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், தலைமை ஆசிரியர் அறைகள், சுற்றுச் சுவர் ஏற்படுத்துதல், குடிநீர் வசதி, பள்ளிக் கழிப்பறைகள், மாணவிகளுக்கான தனிக் கழிப்பறைகள், மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான கழிப்பறைகள், சமையலறைக் கூடம், மராமத்துப் பணிகள் மேற்கொள்வதற்கான நிதி, அரசுப் பள்ளிகளுக்கு வழங்கப்படுகிறது. தளவாடங்கள் மற்றும் விளையாட்டுப் பொருட்களும் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிறது.

2012-2013 ஆம் ஆண்டில், 1,423 பள்ளிக் கழிப்பறைகள், 1,468 மாணவிகளுக்கான தனிக் கழிப்பறைகள், மற்றும் 810 பள்ளிகளுக்குக் குடிநீர் வசதி ரூ.45 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் 2013-2014 ஆம் ஆண்டில் ரூ. 39.98 கோடி, 1,681 பொதுக் கழிப்பறைகள் கட்டவும், 2,317 மாணவிகளுக்கான தனிக் கழிப்பறைகள் கட்டவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பள்ளிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி பிற துறைகளுடன் இணைந்து செயல்பட திட்டமிடப்பட்டுள்ளது. புவியியல் தகவல் முறைமை (GIS) என்னும் தொழில்நுட்பத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகள் குறித்த விவரங்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

2013 மே 10]

4.12 வருடாந்திர மானியம்

பள்ளிகளின் தரத்தை மேம்படுத்துவதற்கும், ஆசிரியர்களின் கற்றல் - கற்பித்தல் திறனை வலுவூட்டுவதற்கும், அனைவருக்கும் கல்வி இயக்க செயல்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கும், அனைவருக்கும் கல்வி இயக்கம் பள்ளி மானியம், பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு மானியம் ஆகியவற்றை வழங்கி வருகின்றது. 2013-2014 ஆம் ஆண்டிற்குப் பள்ளி மானியம், பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு மானியமாக ரூபாய் 57.09 கோடி வழங்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

4.13 பள்ளி மேலாண்மைக் குழு

அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. பள்ளி வளர்ச்சித் திட்டம் தயாரித்து குழந்தைகளுக்கான இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து அம்சங்களும் பொருந்திய பள்ளிகளாக மாற்றியமைத்தல் இக்குழுவின் முக்கிய பணிகளாகும். பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிப்பது அவசியம் என்பதால் 2012-2013 ஆம் ஆண்டில், 2,29,074 பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு ரூ.7.03 கோடி செலவில் பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும் 2013-2014 ஆம் ஆண்டில் பயிற்சி வழங்க ரூ4.00 கோடி ஒதுக்கீடு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

4.14 சமூக தணிக்கை

அனைத்துப் பள்ளிகளிலும் குழந்தைகளின் இலவச கட்டாய கல்வி உரிமை சட்டம், 2009-ன்படி உள்ள பள்ளிக்குத் தேவையான பாதுகாக்கப்பட்ட குடிநீர், கழிப்பறை வசதி, விளையாட்டு மைதானம், சுகாதாரமான சூழல் போன்ற அனைத்து வசதிகளும் இருக்கின்றனவா என்பதை உறுதிப்படுத்த சமூகத் தணிக்கை தமிழ்நாட்டில் உள்ள 6 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4.15 அன்னையர் பள்ளி பார்வைக் குழு

பள்ளியில் உள்ள கழிப்பறை, குடிநீர், ஆய்வகம், கணினி, நூலகம், விளையாட்டு மைதானம், வகுப்பு அறை போன்ற எல்லா வசதிகளும் இருப்பதை உறுதி செய்யும் பொருட்டு அன்னையர் குழு ஒன்று ஒவ்வொரு பள்ளியிலும் மாநிலத்தில் உள்ள அரசு,

அரசு உதவிபெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழு வாரத்தில் ஒரு நாள் ஐந்து பேர் கொண்ட குழுவாகச் சென்று அளிக்கப்படும் வசதிகள் சார்ந்து எல்லாப் பகுதிகளையும் பார்வையிட்டு இவர்கள் தமது பார்வைக் குறிப்பைப் பதிவு செய்தல் வேண்டும். இக்குறிப்புகள் பள்ளியில் அடிப்படைத் தேவைகளையும் கண்டறியப்படும் குறைபாடுகளைக் களையவும் மற்றும் மேம்படுத்தவும் வகை செய்யும்.

தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கல்வியின் தரம் மற்றும் உள்கட்டமைப்புகளை மேம்படுத்திட மேற்காண் முயற்சிகள் அனைவருக்கும் கல்வித் திட்டம்மூலம் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4.16 வரவு—செலவுத் திட்ட ஒதுக்கீடு

2012-2013 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இத்திட்டச் செயல்பாட்டிற்காக ரூ.700 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும், தற்போது 2013-2014 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தில் இத்திட்டச் செயல்பாட்டு செலவினத்திற்கு ரூ.700 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அனைவருக்கும் கல்வி இயக்ககமும், தொடக்கக் கல்வி இயக்ககமும் 6 முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகள் அனைவருக்கும் தரமான கல்வியை அளிக்கவும், தேவையான கட்டமைப்பு வசதிகளை உருவாக்கவும் இணைந்து செயல்பட்டு வருகிறது.

5. இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி

5.1 அறிமுகம்

அனைத்து மாணவர்களுக்கும் அவர்களின் வயதிற்கு ஏற்ற தரமான இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வியை வழங்குவதன் நோக்கம், அவர்களது உள்ளார்ந்த திறன்களை வளர்த்து உடல், மனம், அறிவு மற்றும் சமூகம் சார்ந்த வளர்ச்சியை உறுதி செய்வதே ஆகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் “தமிழகத் தொலைநோக்கு - 2023”, வலியுறுத்தும் வேலைவாய்ப்புப் பெறும் திறன்களை, மாணவர்களிடம் ஏற்படுத்துவதை இடைநிலை மற்றும்

2013 மே 10]

மேல்நிலைக் கல்விக் கலைத் திட்டம் அடித்தளமாகக் கொண்டுள்ளது.

"தமிழகத் தொலைநோக்கு-2023"இல் மனித வள மேம்பாட்டினை மிக உச்சத்திற்கு கொண்டு செல்வதே கல்வித் துறையின் மிக முக்கியக் குறிக்கோளாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்மூலம் சமூக மேம்பாட்டில் தமிழகத்தை இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாகத் திகழச் செய்வதுடன், மனித மேம்பாட்டுக் குறியீட்டில் [Human Development Index (HDI)] மற்ற மாநிலங்களைவிட தமிழகத்தை உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்லுதல் ஆகும்.

5.2 தொலைநோக்கு

பன்னிரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் அதாவது 2017-க்குள் அனைத்து மாணவர்களுக்கும் இடைநிலைக் கல்வியை அளிப்பதற்குத் தேவையான பள்ளி வசதியினை ஏற்படுத்தவும், 2020-க்குள்ளாக அனைத்து மாணவர்களும் இடைநிற்றலின்றி தொடர்ந்து தரமான கல்வி கற்பதை உறுதி செய்யவும், பாலின, இயலாத்தன்மை மற்றும் பொருளாதார சமூகக் காரணிகளால் ஏற்படும் வேறுபாடுகளைக் களைந்து சிறப்பாகச் செயல்படல் அவசியம்.

5.3 குறிக்கோள்கள்

- 11 முதல் 18 வயது வரையுள்ள அனைத்து மாணவர்களும் இடைநிலைக் கல்விபெறும் வசதிகளை மேம்படுத்தும் வகையில் மாணவர்களின் குடியிருப்புகளுக்கு அருகில் 5 கி.மீ. சுற்றளவுக்குள் உயர்நிலைப் பள்ளிகளையும், 8 கி.மீ. சுற்றளவுக்குள் மேல்நிலைப் பள்ளிகளையும் ஏற்படுத்துதல்

- அனைத்து மாணவர்களுக்கும் இலவச போக்குவரத்து வசதியையும் தேவைக்கு ஏற்ப விடுதி வசதியையும் ஏற்படுத்துதல்

- அனைத்து இடைநிலைப் பள்ளிகளுக்கும் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை உறுதி செய்தல்

- மாணவ ஆசிரியர் விகிதாச்சாரப்படி, தேவைப்படும் பட்டதாரி மற்றும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களை நியமித்தல். மேலும், நியமிக்கப்படும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி

[2013 மே 10

அளித்து அவர்கள், தரமான கல்வியை மாணவர்களுக்கு வழங்கச் செய்தல்

- பாலின, சமூகப் பொருளாதார மற்றும் இயலாத்தன்மை போன்றவற்றால் ஏற்படும் தடைகளின் காரணமாக எந்தக் குழந்தைக்கும் தரமான இடைநிலைக் கல்வி மறுக்கப்படாமல் வழங்கப்படுவதை உறுதி செய்தல்
- மாணவ, மாணவியர், மத்தியில் உடல்நலம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி அதைப் பரவலாக்குதல்
- இடைநிற்றலைக் குறைத்து, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நூறு விழுக்காடு சேர்க்கை இலக்கை அடைதல்
- மாணவர்களுக்குத் தொழில் செய்யும் திறன்களை வளர்த்து வாழ்க்கைச் சூழல்களை எதிர்கொள்ளும் திறன்களை அளிக்கக்கூடிய தரமான வாழ்க்கைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி வழங்குதல்
- பொதுத் தேர்வில் மாணவர்கள் சிறப்பான தேர்ச்சி பெற சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துதல்
- தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவசக் கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011-ஐ முறையாகவும் உறுதியாகவும் செயல்படுத்திக் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாத்தல்

அனைவருக்கும் இடைநிலைக் கல்வி பெறச் செய்வதில் உள்ள பிரச்சினைகளை எதிர்கொள்ள இடைநிலைக் கல்வித் திட்ட வடிவை முழுமையாக மாற்ற வேண்டியுள்ளது. இம்மாற்றம், அனைவருக்கும் கல்வி வசதி, சமத்துவம், சமூக நீதி, இன்றைய காலத்திற்கேற்ற பாடத் திட்டம், கலைத் திட்ட மற்றும் கட்டமைப்பு மேம்பாடு போன்ற வழிகாட்டு நெறிமுறைகளின் அடிப்படையில் அமையும்.

5.4 வழிமுறைகள்

5.4.1 பள்ளி வசதி

- நுண் திட்டமிடல்மூலம் தேவையின் அடிப்படையில் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தவும், அதற்குத் தேவையான ஆசிரியர்கள் மற்றும் உள் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்

2013 மே 10]

- தேவையின் அடிப்படையில் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துதல்
- பள்ளி வரைபடக் கணக்கெடுப்பின்படி பள்ளி வசதியற்ற பகுதிகளில் புதிய உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளைத் தொடங்குதல்
- அனைத்துப் பள்ளிக் கட்டடங்களில் மாற்றுத் திறனாளிகளின் பயன்பாட்டிற்கு ஏற்ப வசதிகளை ஏற்படுத்துதல்


5.4.2 அடைவுத் தேர்வுகள்

*அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 9 மற்றும் 10 வகுப்பு பயிலும் மாணவர்களின் கற்றல் திறனை மதிப்பிட, மாவட்டத்துக்கு 5 பள்ளிகளில் சோதனை முறையில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் (*RMSA*) மூலம் அடைவுத் தேர்வுகள் நடத்தப்பட்டன. கணிதப் பாடத்தின் அடிப்படைக் கூறுகள், தமிழ்மொழிப் பாடத்தில் எழுதுதல், ஆங்கிலத்தில் எழுத்துப் பிழை, ஒலிப்புப் பயிற்சி, வாக்கிய அமைப்பு ஆகியவற்றில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் கற்பித்தலில் ஆசிரியர்களின் கவனம் அதிகரித்துள்ளது. மாணவர்களின் தமிழ், ஆங்கிலம் மற்றும் அடிப்படைக் கணிதம் ஆகியவற்றைக் கையாளும் திறன்கள் மேம்பட்டுள்ளன.*

5.4.3 அரசு நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துதல்

தமிழகத்தில் உள்ள 95,000 குடியிருப்புகளுள் 73,101 குடியிருப்புகளில் மட்டுமே 5 கி.மீ. தொலைவிற்குள் உயர்நிலைப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2006 முதல் 2011 ஆம் ஆண்டு வரை 989 நடுநிலைப் பள்ளிகள் மட்டுமே உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன. உயர்நிலைப் பள்ளித் தேவைக்கும் இருப்புக்கும் இடையே உள்ள மிகப் பெரிய இடைவெளி கண்டுகொள்ளப்படாமல் இருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இச்சூழலை உடனடியாகப் புரிந்து கொண்டு 2011-2012 ஆம் கல்வியாண்டில் மட்டுமே 710 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த ஆணை பிறப்பித்தார்கள். (வரைபடம் 13)

[2013 மே 10



வரைபடம் 13

ஆதாரம்:பள்ளிக் கல்வி இயக்ககம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது முக்கியத்துவம் வாய்ந்த இந்த அறிவிப்பினால் 2011-2012 ஆம் கல்வியாண்டில் 37,550 மாணவ, மாணவியர் தமது குடியிருப்பிலிருந்து 5 கி.மீ. சுற்றளவிற்குள்ளாகவே உயர்நிலைப் பள்ளி வசதியைப் பெற்று பயனடைந்துள்ளனர்.

5.4.4 அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துதல்

2011 ஆம் ஆண்டிற்கு முன்னர் கிராமப்புறங்களில் பத்தாம் வகுப்பை நிறைவு செய்த மாணவர்களின் இடைநிற்றல் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து வந்தது. இப்பிரச்சினை 2006 முதல் 2011 வரை கவனத்தில் கொள்ளப்படாமல் இருந்தது. இந்நிலையை உணர்ந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இத்தகு மாணவர்களின் கல்வித் தேவைகளை நிறைவு செய்ய 2011-2012 மற்றும் 2012-2013 ஆம் கல்வியாண்டுகளில் ஒவ்வோர் ஆண்டிலும் 100 அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தி ஆணையிட்டுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இந்தப் பெருந்தன்மையான செயலின்

2013 மே 10]

பலனாக 12,000 மாணவர்கள் தங்கள் மேனிலைக் கல்வியைத் தொடர வாய்ப்பு பெற்றுள்ளனர். கிராமப்புற மாணவர்களின் வளர்ச்சியில் அக்கறை உள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2011-2012 ஆம் கல்வியாண்டு முதல், புதிதாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ள மேனிலைப் பள்ளிகளில் கலைப் பிரிவையும் அறிவியல் பிரிவையும் அறிமுகப்படுத்தி ஆணையிட்டுள்ளார்கள். இவ்வாணையின்படி தரம் உயர்த்தப்பட்ட ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு தலைமையாசிரியர் பணியிடமும், ஒன்பது முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

5.4.5 அறிவியல் ஆய்வகக் கருவிகள் வழங்குதல்

2012-2013 ஆம் கல்வியாண்டில் தரம் உயர்த்தப்பட்ட 100 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் ரூ.1 கோடி செலவில் அறிவியல் ஆய்வகக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வறிவியல் ஆய்வகக் கருவிகள், மாணவர்கள் செய்முறை அறிவைப் பெறவும் விரிவடைந்து வரும் அறிவியல் அறிவை வளர்த்துக்கொள்ளவும் உதவும். இவ்வாய்வகங்கள்மூலம் 80,735 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.


5.4.6 நூலக வசதிகள்

நூலகங்கள், மாணவர்களது எதிர்கால வேலைவாய்ப்பையும் வாழ்க்கையையும் வடிவமைக்கும் அறிவுப் பெட்டகங்களாகத் திகழ்பவை. இவற்றைக் கருத்தில் கொண்டு அரசு 100 அரசு உயர்நிலைப் பள்ளிகளிலும், 100 அரசு மேனிலைப் பள்ளிகளிலும் நூலக வசதியை மேம்படுத்த 2012-2013 ஆம் ஆண்டில் ரூ.40 இலட்சத்தை ஒதுக்கீடு செய்துள்ளது. இதன்மூலம், 1,46,335 மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

5.5 பள்ளி உள்கட்டமைப்பு வசதிகள்

அரசுப் பள்ளிகளில் ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவர்களின் பயன்பாட்டிற்கு 25,786 வகுப்பறைகள் உள்ளன. 2012-2013 ஆம் கல்வியாண்டில் கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகங்கள், நூலக அறைகள் போன்ற பள்ளிக் கட்டட வசதிகள், ரூ.1256.62 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. (வரை படம் 14) இந்த உள்கட்டமைப்பு வசதிகள், கற்க ஏதுவான சூழலை உருவாக்குவதோடு கற்றல் தரம் மேம்படவும் உதவும்.

[2013 மே 10




வரைபடம் 14

ஆதாரம்:பள்ளிக் கல்வி மற்றும் தொடக்கக் கல்வி இயக்ககம்

தமிழக அரசு, நபார்டு உதவியுடன் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகங்கள், ஆய்வக உபகரணங்கள், தளவாடப் பொருள்கள், பாதுகாக்கப்பட்ட குடிநீர், கழிவறைகள் போன்ற தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் படிப்படியாகச் செய்து வருகிறது.

இச்செயல்பாட்டின் பதினோராவது கட்டத்தில் 131 பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு ரூ.152.73 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (வரை படம் 15) இவ்வொதுக்கீடானது அமராவதி நகரில் செயல்படும் சைனிக் பள்ளியையும் உள்ளடக்கியதாகும்.

2013 மே 10]



வரைபடம் 15

ஆதாரம்:பள்ளிக் கல்வி இயக்ககம்

மேலும், இத்திட்டத்தின்கீழ், 377 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கட்டப்பட்டுள்ள 845 கூடுதல் வகுப்பறைகளுக்கு ரூ.8.26 கோடி செலவில் தளவாடப் பொருள்கள் வழங்கப்படும். 309 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்குத் தேவையான ஆய்வக உபகரணங்களுக்கு ரூ.3.09 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.6 ஆசிரியர் நியமனம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாணவர்களுக்குத் தரமான கல்வியை வழங்கத் தகுதி வாய்ந்த ஆசிரியர்களை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நியமனம் செய்ய உறுதிபூண்டதன்பேரில், தேவையான புதிய பணியிடங்களுக்கு ஒப்புதல் அளித்ததோடு மட்டுமல்லாது அப்பணியிடங்களில் உடனடியாக ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுவதையும் உறுதி செய்துள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி 8,025 ஆசிரியர்கள் தற்போது பணிபுரியும் பள்ளிகளில் உபரி எனக் கண்டறியப்பட்டு தேவையுள்ள

[2013 மே 10

பள்ளிகளுக்குப் பணி நிரவல்மூலம் பணி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். இதுபோன்ற மாநிலம் தழுவிய பணி நிரவல் கடந்த 20 ஆண்டுகளில் நடைபெற்றதில்லை. இப்பணி நிரவல்மூலம் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு, மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் பாடவாரியான ஆசிரியர்கள் தேவையான எண்ணிக்கையில் அளிக்கப்பட்டுள்ளனர். இத்துடன் 5,128 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள், 12,642 பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், 5,881 ஆசிரியர் அல்லாத பணியாளர்களும் 2011-2013 வரையிலான இரண்டு ஆண்டு காலத்தில் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இந்நியமனங்களின் எண்ணிக்கை 2006-2011 வரையிலான ஐந்தாண்டு காலத்தை ஒப்பிடும்போது மிகக் கூடுதலாகும். (வரைபடம் 16)



வரைபடம் 16

ஆதாரம்: பள்ளிக் கல்வி மற்றும் தொடக்கக் கல்வி இயக்ககங்கள்

மேலும், அரசு/நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதலாக 1,591 முதுகலைப் பட்டதாரிப் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

2013 மே 10]

5.7 ஆசிரியர் திறன் மேம்பாடு

சமகால பல்கலைக்கழக கல்வி முறை, தேவைக்கேற்ப மாணவர்களை உருவாக்குவதற்குரிய வாழ்வியல் திறன், தொழில் திறனோடுகூடிய தரமான கல்வியை அளித்து மாணவர்களை உருவாக்குவதற்கு ஆசிரியர்களுக்குப் போதுமான பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டியது இன்றியமையாதது. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்தின்மூலம் புதியதாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு நுழைநிலைப் பயிற்சி மட்டுமின்றி பாடவாரியான சிறப்புப் பயிற்சி, தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையின் இன்றியமையாமை, மென்திறன் பயிற்சி போன்றவையும் வழங்கப்படும். இப்பயிற்சிகள் யாவும் மாணவர்களுக்குத் தரமான கல்வியை வழங்க ஆசிரியர்களை ஊக்கப்படுத்தும் வகையில் அமையும்.

5.8 முப்பருவ முறையுடன்கூடிய தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையினை 2013–2014 ஆம் கல்வி ஆண்டில் ஒன்பதாம் வகுப்பிற்கும் நீட்டித்தல்

2012-2013 ஆம் கல்வி ஆண்டில், முப்பருவ முறையுடன்கூடிய தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை, 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த மதிப்பீட்டு முறை, கல்வியில் பங்குதாரர்களாகிய மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் மிகுந்த வரவேற்பினைப் பெற்றுள்ளது. இவ்வெற்றி தந்த ஊக்கத்தின் காரணமாக இம்முறை 2013-2014 ஆம் கல்வி ஆண்டில் ஒன்பதாம் வகுப்புக்கும் நீட்டிக்கப்பட உள்ளது.

5.9 பெண்களுக்கான கல்வி உதவித் தொகைத் திட்டம்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த மாணவிகளின் சேர்க்கையை அதிகரித்தல் மற்றும் அவர்களைப் பள்ளிகளில் தக்கவைத்தல் ஆகிய இரட்டை நோக்கங்களை நிறைவு செய்யும் வகையில், இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், ஒரு மாணவிக்கு அவர் பெயரில் ரூ.3,000/- வைப்புத் தொகையாக வங்கியில் செலுத்தப்படுகிறது. குறிப்பிட்ட மாணவி, பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றபின் 18 வயது நிறைவடையும்போது இந்த வைப்புத் தொகை வட்டியுடன் அவர்களுக்கு வழங்கப்படும்.

[2013 மே 10

இத்திட்டத்தின்கீழ் 2011-2012 ஆம் கல்வியாண்டில் 86,414 மாணவிகள் பயனடையும் வகையில் ரூ.25.92 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.10 மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்வி

தொழிற்கல்விக்கான உயர்மட்டக் குழு அறிக்கையின் அடிப்படையில் 2010-2011 ஆம் ஆண்டு முதல் தொழிற்கல்வி திருத்தியமைக்கப்பட்டு, 12 தொழிற்கல்விப் பிரிவுகள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்மூலம் 1,86,094 மாணவ, மாணவியர் பயனடைந்து வருகின்றனர். தமிழக அரசு, வரும் ஆண்டுகளில் மேலும் புதிய தொழிற்கல்விப் பிரிவுகளை அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

5.11 தேர்ச்சியில் முன்னணியில் உள்ள மாணவர்களுக்கான பரிசுத் தொகை

திறமைமிக்க மாணவர்கள் மேற்படிப்பு தொடர்வதை ஊக்குவிக்கும்பொருட்டு அரசு, இத்திட்டத்தை நடைமுறைப் படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்படி, மாநில அளவில் தமிழை முதல் மொழிப் பாடமாகப் படித்து மேல்நிலை / இடைநிலை பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மூன்று மாணவர்களுக்குத் தமிழக அரசால் பரிசுத் தொகை பின்வருமாறு அளிக்கப்படுகிறது:-

	பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வு	பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு
முதலிடம்	ரூ.50,000	ரூ.25,000
இரண்டாமிடம்	ரூ.30,000	ரூ.20,000
மூன்றாமிடம்	ரூ.20,000	ரூ.15,000

அதைப் போலவே, மாவட்ட அளவிலும் மேல்நிலைத் தேர்வில் முதலிடம் பெறும் மூன்று பள்ளி மாணவர்களுக்கு மேற்படிப்பிற்கான செலவை அரசே ஏற்கிறது. மேலும் பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் முதலிடம் பெறும் மூன்று மாணவர்களுக்கு உயர் கல்விக்கான செலவினமாக ரூ.1,500/- வழங்கப்பட்டு வருகிறது. முதலிடம் பெறும் மூன்று மாணவர்கள் பின்வரும்வகைப் பள்ளிகளில் இருந்து தெரிவு செய்யப்படுவர்.

2013 மே 10]

பள்ளியின் வகை	தெரிவு செய்யப்படும் மாணவர் எண்ணிக்கை
அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி	1
அரசு நிதி உதவி பெறும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி	1
ஆங்கிலோ இந்தியன் / மெட்ரிகுலேஷன் / சுயநிதி உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி	1

பாடவாரியாக இடைநிலை மற்றும் மேல்நிலைப் பொதுத் தேர்வில் மாநிலத்தில் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் அரசு நிர்ணயிக்கும் விகிதத்தில் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

5.12 நடமாடும் ஆலோசனை மையங்கள்

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் ரூ.2.00 கோடி மதிப்பில் 10 மண்டலங்களில் 10 நடமாடும் ஆலோசனை மையங்கள் செயல்படுத்தப்படவுள்ளன. இம்மையங்கள், நடமாடும் ஊர்திகளின் (Counselling Vans) மூலம் மாணவர்களைச் சென்றடைய உள்ளன. இதன்மூலம் மாணவர்களின் மன நலத்தைப் பேணவும் வலுப்படுத்தவும் உதவும். இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், சமுதாயத்தில், வகுப்பறைகளில் மாணவர்கள் எதிர்கொள்ளும் பொதுவான பிரச்சினைகளினால் ஏற்படும் மன அழுத்தம், தேர்வுகள் குறித்த அச்சம் மற்றும் பல விதமான மன உளைச்சல்களைப் போக்குவதாகும்.

5.13 மாற்றுத் திறனுடைய குழந்தைகளுக்கான சிறப்பு முன்முயற்சிகள்

எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாற்றுத் திறனாளி மாணவர்கள் ஒன்பதாம் வகுப்பில் சேர்ந்து பயில முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஒன்பதாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாற்றுத் திறனாளிகளுக்கு விலையில்லாப் பாடப் புத்தகங்கள், எழுதுபொருள்கள், சீருடைகள் மற்றும் விடுதி வசதிகள், மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்கான உள்ளடங்கிய இடைநிலைக் கல்வி (IEDSS) என்ற திட்டத்தின்

மூலம் வழங்கப்படும். பார்வைக் குறைபாடுடையோருக்கான பிரெய்லி புத்தகங்கள், மாற்றுத் திறனாளிகளுக்குத் தேவையான இன்றியமையாத துணைக் கருவிகளான காதுகேட்கும் கருவிகள், உலோகக் கால் ஆதாரக் காலணிகள், ஊன்றுகோல்கள் போன்றவை விலையின்றி வழங்கப்பட்டுள்ளன. 14 முதல் 18 வயதுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு மாற்றுத் திறன் மதிப்பீட்டு மருத்துவ முகாம்களை நடத்தி, அதன்மூலம் தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன. 12 ஆம் வகுப்பு படித்து முடித்த மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகள் வெற்றிகரமாகத் தங்கள் வாழ்க்கைப் பாதையைத் தேர்ந்தெடுக்க ஏதுவாக வழிகாட்டுதல் மற்றும் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

5.14 யோகா

யோகா என்பது மனம், உடல் மற்றும் ஆன்மாவை ஒருங்கிணைக்கும் உடற்பயிற்சியாகும். இதன் மறைபொருள் அகத்தூய்மை, மனதை ஒருங்கிணைத்தல் மற்றும் உடல், மனம் சார்ந்த இயக்கங்களைப் பண்படுத்தி எண்ணங்கள், உணவுப் பழக்கங்கள்மூலம் மனதையும், உடலையும் தூய்மைப்படுத்துதல் ஆகும். எனவே, மாணவர்களுக்குப் பள்ளிகளில் யோகா கற்றுத் தரப்படுகிறது. உடற்கல்விக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 2 பாடவேளைகளில் ஒரு பாடவேளை, யோகா கற்றுத் தருவதற்கெனவே ஒதுக்கப்பட்டுள்ளது.

5.15 சாரண, சாரணியர் இயக்கம்

தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் சாரண சாரணியர் இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வியக்கத்தில், வழிபாட்டுத் தலங்களைத் தூய்மைப்படுத்துதல், மரம் வளர்த்தல், போக்குவரத்தைக் கட்டுப்படுத்துதல் மற்றும் முதலுதவி செய்தல் ஆகிய சமூகச் செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. சாரண, சாரணியர் இயக்கத்திற்குத் தமிழக அரசால் ஆண்டுதோறும் பராமரிப்பு மானியத் தொகையாக ரூ.7 இலட்சம் வழங்கப்படுகிறது. 1998-1999 ஆம் ஆண்டு முதல் தலைசிறந்த சாரண, சாரணியர்களுக்கு "இராஜ்ய புரஸ்கார்" விருது மேதகு தமிழக ஆளுநர் அவர்களால் வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக ஆண்டுதோறும் ரூ.5 இலட்சம் தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2013 மே 10]

5.16 சுற்றுச்சூழல் மன்றம்

- மாணவர்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வை உருவாக்குவதே இம்மன்றத்தின் முக்கிய நோக்கமாகும்.
- மேற்காண் நோக்கத்தைச் செயல்படுத்த, பள்ளி ஒன்றுக்கு ஆண்டுக்கு ரூ.1,250/- வீதம் தமிழ்நாட்டில் 1,869 பள்ளிகளுக்குச் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை வழங்கி வருகிறது.
- சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையின் நிதி உதவியுடன் தேசிய பசுமைப் படைத் திட்டம், 7,500 பள்ளிகளில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பள்ளி ஒன்றுக்கு ரூ.2,500/- வீதம் வழங்கப்பட்டு வருகிறது.
- சுற்றுச்சூழல் மன்றமும், தேசிய பசுமைப் படை திட்டமும் இணைந்து தோட்டங்களை அமைத்தல், மரங்களை நடுதல் போன்ற பல்வேறு சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றன.

5.17 இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்

இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம், தமிழ்நாட்டில் உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்தில், மாவட்ட ஆட்சியர் தலைவராகவும், ஆசிரியர்கள் ஆலோசகர்களாகவும், மாணவர்கள் தன்னார்வத் தொண்டர்களாகவும் செயலாற்றி வருகின்றனர். இச்சங்கம், மாணவர்களுக்குள் பொதிந்துள்ள திறன்களை வெளிக் கொணரவும், அவர்களிடையே மனித நேயப் பண்பு மற்றும் தலைமைப் பண்பை வளர்க்கவும் உதவுகிறது.

5.18 இளைஞர் திறன் மேம்பாட்டுத் திட்டம்

ஒவ்வொரு ஆண்டும் பள்ளி/கல்வி, மாவட்ட/வருவாய் மாவட்ட/ மாநில அளவில், பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியம் வரைதல், வினாடி வினா, இசை, கவிதை எழுதுதல், பரதநாட்டியம், கிராமிய நடனம், இசைக் கருவிகள் இசைத்தல், நடிப்பு, தனி நடிப்பு, நாடகம், இசைப் போட்டிகள் என இளைஞர் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இதன்மூலம் இளைஞர்களின் உள்ளார்ந்த ஆற்றல்கள் வெளிக்கொணரப்பட்டு ஊக்கப்படுத்தப்படுகின்றன. இதன்படி, மாநில அளவில் வெற்றி பெறுகிறவர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

[2013 மே 10

5.19 தமிழ்நாடு ஊரகப் பகுதி மாணவர் திறன்வளர் திட்டம்

ஊரகப் பகுதிகளில் பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் விதமாக அரசு / அரசு உதவிபெறும் பள்ளிகளில் 8 ஆம் வகுப்பில் 50 விழுக்காடு மதிப்பெண்ணுடன் தேர்ச்சி பெற்று 9 ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் மாணவர்கள், தகுதியானவர்கள் எனக் கருதப்பட்டு ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் மாதத்தில் அரசுத் தேர்வுத் துறையினரால் தனித் திறன் தேர்வுகள் நடத்தப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 50 மாணவர்கள் மற்றும் 50 மாணவிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆண்டிற்கு ரூ.1,000/- வீதம் 4 ஆண்டுகளுக்கு 9 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்புவரை தொடர்ந்து பயிலும் மாணாக்கர்களுக்கு வழங்கப்படுகிறது. இதற்கென ஒவ்வோர் ஆண்டும் ரூ.1.10 கோடி நிதி ஒதுக்கப்பட்டு முதன்மைக் கல்வி அலுவலர்கள்மூலம் வழங்கப்படுகிறது. இவ்வுதவி பெறும் மாணவரின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேல் இருக்கக் கூடாது.

5.20 நாட்டு நலப் பணித் திட்டம்

நாட்டு நலப் பணித் திட்டத்தின் முக்கியக் குறிக்கோள், மாணவர்களின் ஆளுமை வளர்ச்சியை சமூக சேவைகளின்மூலம் வளர்ப்பதாகும். மருத்துவ முகாம், இரத்த தான விழிப்புணர்வு முகாம், நலத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு, நாட்டு நலப் பணித் திட்டத்தின்மூலம் மக்களிடையே வளர்க்கப்படுகிறது. பள்ளிக் கல்வித் துறையில் தற்போது 1,940 அலகுகளில் 97,000 மாணவத் தொண்டர்களுடன் மேல்நிலைப் பள்ளிகளில் நாட்டு நலப் பணித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வலகுகளின் தொடர் நிகழ்வுகளுக்கு ஒரு அலகிற்கு ரூ.11,000/- மானியமும், சிறப்பு முகாமிற்கு ஒரு அலகிற்கு ரூ.11,250/- மானியமும் வழங்கப்படுகின்றன.

5.21 சாதி, வருவாய் மற்றும் இருப்பிடச் சான்று வழங்குதல்

2012-2013 ஆம் கல்வி ஆண்டில் அரசு, அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களுக்குச் சாதி, வருவாய் மற்றும் இருப்பிடச் சான்று வழங்கும் திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் 8.60 இலட்சம் மாணவர்கள் பயனடைகின்றனர். பள்ளிக் கல்வி இயக்ககத்தின் இம்முயற்சிகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது

2013 மே 10]

தொலைநோக்கான அனைவருக்கும் தரமான இடைநிலைக் கல்வி என்ற இலக்கை அடைய உறுதியாக வழிவகுக்கும்.

5.22 வரவு–செலவுத் திட்ட ஒதுக்கீடு

பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு 2012-2013 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.6,936.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவ்வொதுக்கீடு தற்போது அதிகரிக்கப்பட்டு 2013-2014 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.8,056.72 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முயற்சியால் இடைநிலைக் கல்வியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு, மாநிலத்தில் இடைநிலைக் கல்வித் தரத்தினை 2023-க்குள் மேம்படுத்திட பள்ளிக் கல்வி இயக்கத்திற்குச் சிறந்த செயல் திட்டமாக அமையும்.

6. அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம்

6.1 அறிமுகம்

அடுத்த பத்தாண்டுகளில் இடைநிலைக் கல்வியை மேம்படுத்தி உயர்நிலைக்கு கொண்டு செல்வது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தொலைநோக்குத் திட்டமாகும். பள்ளிக் கல்வி இயக்ககமானது, தம் கள அலுவலர்களின் துணையுடன் இத்தொலைநோக்குத் திட்டத்தினைச் சிறப்பாக நிறைவேற்றும் முனைப்போடு செயலாற்றி வருகிறது. அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டமானது, பள்ளிக் கல்வி இயக்ககத்தோடு இணைந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குத் திட்டத்தினை நிறைவேற்றத் தேவையான செயல்திட்டங்களை வடிவமைத்துச் செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டமானது ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளின் தரத்தை உயர்த்துவதற்கும், தொடக்கக் கல்வியினை நிறைவு செய்த மாணவர்கள் தொடர்ந்து இடைநிலைக் கல்வியினைப் படிப்பதற்கும் உரிய வகையில் ஊக்கம் அளித்து வருகிறது. தமிழ்நாட்டில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டச் செயலாக்கத்திற்காக அனைவருக்கும் இடைநிலைக் கல்விச் சங்கம் தொடங்கப்பட்டுள்ளது.

[2013 மே 10

தேவையான இடங்களில் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்துதல், தரமான மேம்பட்ட இடைநிலைக் கல்வியைத் தருதல், தேவையான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், போதிய ஆசிரியர்களை நியமித்தல், ஆசிரியர்களுக்குத் தேவையான திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல் போன்ற பணிகளில் இச்சங்கம் தனது முழுமையான கவனத்தைச் செலுத்தி வருகிறது. மேலும், கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்களில் மாதிரிப் பள்ளிகள் மற்றும் மாணவியர் விடுதிகளை ஏற்படுத்தும் பணிகளையும் அனைத்து குழந்தைகளும் குறிப்பாக, மாணவிகள் தரமான இடைநிலைக் கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்பையும் இச்சங்கம் வழங்குகின்றது.

6.2 தொலைநோக்கு

14-18 வயது வரையிலான பள்ளிக் குழந்தைகள் அனைவருக்கும் தரமான இடைநிலைக் கல்வியை அவர்கள் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வழங்குதலை உறுதி செய்தல்.

6.3 நோக்கங்கள்

- பள்ளி வசதியற்ற குடியிருப்புகளுக்கு 5 கி.மீ. தொலைவிற்குள் ஒரு உயர்நிலைப் பள்ளியையும், 7-10 கி.மீ. தொலைவிற்குள் ஒரு மேனிலைப் பள்ளியையும் ஏற்படுத்துதல். புவியியல் தகவல் முறைமை வரைபடங்கள் (GIS Mapping) மூலமாக உயர்நிலைப் பள்ளிகள் இல்லாத குடியிருப்புகள் 546 எனக் கண்டறியப்பட்டிருப்பினும் அவை விரைவில் சரிசெய்யப்பட உள்ளன. இந்த இடைவெளியைப் போக்கும் வகையில் படிப்படியாகப் பள்ளிகளை ஏற்படுத்தவும், அதன் மூலமாக 2017 ஆம் ஆண்டிற்குள் அனைவருக்கும் இடைநிலைக் கல்வியை அளித்து (நூறு விழுக்காடு சேர்க்கை) 2020 ஆம் ஆண்டிற்குள் அனைவரையும் தக்கவைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

- குறிப்பாக, பொருளாதாரத்தில் நலிவுற்றோர் மற்றும் கல்வியில் பின் தங்கியோர், மாணவியர், மாற்றுத் திறனாளிகள், ஆதி திராவிடர், பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் ஆகிய பிரிவினருக்கு இவர்கள் வசிப்பிடத்திற்கு அருகிலேயே தரமான இடைநிலைக் கல்வியைத் தருதல்

2013 மே 10]

- மாணவர்கள் எளிதாக இடைநிலைக் கல்வி பெற அதிக வாய்ப்பினைத்தரும் வகையில் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துதல்

- ஏற்கெனவே உள்ள இடைநிலைப் பள்ளிகளை மேம்படுத்தும் வகையிலும், கல்வி கற்பதற்கான உகந்த சூழலை ஏற்படுத்தும் வகையிலும் இப்பள்ளிகளுக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்

- கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்களில் அனைத்துப் பெண் குழந்தைகளும் இடைநிலைக் கல்வி பெறும் வகையில் தங்கிப் படிப்பதற்கு ஏதுவாகப் பள்ளிகளுக்கு அருகிலேயே விடுதிகளை ஏற்படுத்துதல்

- அனைவருக்கும் ஒரே சீரான கல்வி அளிக்கும் நோக்கில் கல்வியில் பின்தங்கிய 44 ஒன்றியங்களில் மாதிரிப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட உள்ளன. இதனால் பிற ஒன்றியங்களில் உள்ள மாணவர்களுக்குச் சமமான கல்வியினை, பின்தங்கிய ஒன்றியங்களைச் சேர்ந்த மாணவர்களும் பெறுவது உறுதி செய்யப்படும்

6.4 செயல்பாடுகள்

அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டமானது பள்ளிக் கல்வி இயக்ககத்தோடு இணைந்து கீழ்க்காணும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது:-

அ. நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துதல்

ஆ. கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்களில் மாணவியர் விடுதிகளை ஏற்படுத்துதல்

இ. கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்களில் மாதிரிப் பள்ளிகளை ஏற்படுத்துதல்

ஈ. ஆசிரியர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குதல்

உ. தரம் உயர்த்தப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

[2013 மே 10

6.5 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துதல்

அனைவருக்கும் தரமான இடைநிலைக் கல்வியினை வழங்கும் உன்னத நோக்குடன் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 2011-2012 ஆம் கல்வியாண்டில் 710 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்திட ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பெரும்பான்மை கிராமப்புற மாணவர்கள் சிறப்பான இடைநிலைக் கல்வி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2012-2013 ஆம் ஆண்டு முதல் பள்ளிகள் தரம் உயர்த்தப்பட மத்திய அரசு பரிசீலிக்காத போதும், 100 விழுக்காடு அருகாமையினை (accem) உறுதி செய்ய மாநில அரசு உறுதி பூண்டுள்ளது. இருப்பினும், 546 பள்ளிகள் தரம் உயர்த்தப்பட வேண்டியுள்ளது; இதற்கான முயற்சிகள் வரும் ஆண்டுகளில் படிப்படியாக மேற்கொள்ளப்பட உள்ளன.

6.6 கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்களில் மாணவியர் விடுதிகள் ஏற்படுத்துதல்

2009-2010 ஆம் ஆண்டு முதல் செயல்படாமல் இருந்த இத்திட்டமானது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கருணை உள்ளத்தால் தற்போது செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டம் முழுமை பெறும்போது 13 மாவட்டங்களில் உள்ள 44 கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்களில் உள்ள 4,400 மாணவிகள் விடுதியிலேயே தங்கி கல்வி பெறும் வசதி ஏற்படும். இதன்மூலம் கிராமப்புற மாணவியர் உயர்க் கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்பு பெறுவதோடு பிற கிராமப்புற மாணவியர்களுக்கு சிறப்பான முன்மாதிரிகளாகவும் அமைவர் என்பது திண்ணம்.

6.7 கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்களில் மாதிரிப் பள்ளிகள் ஏற்படுத்துதல்

2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மத்திய அரசு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் அதிகமுள்ள ஒன்றியங்கள் மற்றும் பெண்கள் எழுத்தறிவு விகிதம் குறைவாக உள்ள ஒன்றியங்களைக் கண்டறிந்து, அவற்றைக் கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்களாக அறிவித்துள்ளது. இந்தக் கல்வியில் பின்தங்கிய 44 ஒன்றியங்களில் இடைநிலைக் கல்வி பயிலும் மாணவர்களுக்குப் பள்ளிகளின் அருகாமை வசதியை அதிகரிக்க மாதிரிப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டன. அனைவருக்கும்

2013 மே 10]

இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் 13 மாவட்டங்களில் கல்வியில் பின்தங்கிய 44 ஒன்றியங்களில் மாதிரிப் பள்ளிகள் ஏற்படுத்தத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால் மத்திய அரசினால் போதுமான நிதி ஒதுக்கப்படாததால், 2012-2013 ஆம் ஆண்டில் இப்பள்ளிகளுக்கான கட்டுமானப் பணிகளைத் தொடங்க இயலவில்லை.

இப்பிரச்சினையை கவனத்தில் கொண்டு, கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்களில் உள்ள குழந்தைகள் நலம் பெறும் வகையில் தரமான இடைநிலைக் கல்வியினை வழங்குவதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளையும் மாநில அரசு எடுத்து வருகிறது.

வரிசை எண்	மாவட்டம்	கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்கள்
1.	அரியலூர்	அரியலூர்
2.	கடலூர்	நல்லூர், பண்ருட்டி, மங்களூர்
3.	தருமபுரி	பெண்ணாகரம், காரிமங்கலம், பாலக்கோடு
4.	ஈரோடு	அம்மாப்பேட்டை, நம்பியூர், சத்தியமங்கலம், தாளவாடி, அந்தியூர்
5.	திருப்பூர்	மூலனூர், குண்டடம்
6.	கிருஷ்ணகிரி	சூளகிரி, கெலமங்கலம், தளி, வேப்பன அள்ளி
7.	பெரம்பலூர்	வேப்பூர்
8.	சேலம்	எடப்பாடி, காளடயாம்பட்டி, கொங்கணாபுரம், நங்கவள்ளி, சங்ககிரி, வீரபாண்டி, பெத்தநாயக்கன்பாளையம், தாரமங்கலம், கொளத்தூர், மகுடஞ்சாவடி, பனமரத்துப்பட்டி, ஏற்காடு
9.	திருவண்ணாமலை	ஜவ்வாது மலை

வரிசை எண்	மாவட்டம்	கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்கள்
10.	விழுப்புரம்	தியாகதுருகம், ரிஷிவந்தியம், கள்ளக்குறிச்சி, திருக்கோவிலூர், திருநாவலூர், திருவெண்ணைநல்லூர், சங்கராபுரம், உளுந்தூர்பேட்டை
11.	நாமக்கல்	கொல்லிமலை, மல்லசமுத்திரம்
12.	கரூர்	கடவூர்
13.	சிவகங்கை	எஸ்.புதூர்

6.8 திறன் மேம்பாட்டுப் பயிற்சி

அரசு உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பொதுத் தேர்வுகளில் சிறப்பான தேர்ச்சியினைப் பெறுவதற்குத் தேவையான உத்திகளையும், வழிமுறைகளையும் கண்டறிய 946 தலைமையாசிரியர்களுக்கு மாநில அளவிலும், மண்டல அளவிலும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டது.

பள்ளி வளர்ச்சி மற்றும் மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் 23,706 பேருக்குப் பள்ளிக்காக ஒதுக்கீடு செய்யப்படும் நிதி பற்றி அறியவும் மற்றும் உறுப்பினர்களது பொறுப்புகள் பற்றி அறிந்து கொள்ளவும் பயிற்சி அளிக்கப்பட்டது. பல்கலைக்கழக கல்வி வல்லுநர்கள், இந்திய தொழில்நுட்ப நிறுவனப் பேராசிரியர்கள் மற்றும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவன உதவிப் பேராசிரியர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து 915 தலைமை ஆசிரியர்களுக்கு பள்ளித் தலைமை குறித்த பயிற்சி அளித்தனர். தேசியக் கல்வித் திட்டமிடுதல் மற்றும் நிருவாகப் பல்கலைக்கழகம் (NUEPA), பள்ளித் தலைமைக்கான தேசியக் கல்லூரி (இங்கிலாந்து) போன்ற நிறுவனங்கள் ஒருங்கிணைந்து ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தெரிந்தெடுக்கப்பட்ட உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்குத் தலைமைப் பண்பு பயிற்சி வழங்கின. ஆசிரியர்களின் தொடர் பணி மேம்பாட்டிற்காகப் பாடம் சார்ந்த பயிற்சி 7,847 பட்டதாரி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டது. அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் புதிதாக நியமிக்கப்பட்டு பணி புரிந்து வரும் 8,217 பட்டதாரி ஆசிரியர்களுக்கு ரூ.154.53 இலட்சம் செலவில்

நுழைநிலைப் பயிற்சி வழங்கப்பட்டது. மேலும், ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்பைக் கையாளும் 29,176 ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி ரூ.4.37 கோடி செலவில் வழங்கப்படும்.

6.9 இடைநிலைக் கல்வியின் தரத்தினை உயர்த்துதல்

மாணவர்களை மையப்படுத்தி அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்மூலம் நடத்தப்படும் ஆசிரியர்களுக்கான பணியிடைப் பயிற்சியானது வகுப்புகளில் நடைபெறும், கற்றல் கற்பித்தல் நிகழ்வுகளைச் செம்மையாக்குகின்றது. அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம், பத்தாம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் குறைவான தேர்ச்சி விழுக்காடு பெற்ற பள்ளிகளை இனம் கண்டு, அப்பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்குத் தேர்ச்சி விகிதத்தினை உயர்த்துவதற்குச் சிறப்பு பயிற்சி அளித்தது. இத்திட்டத்தின்மூலம் நடைமுறைப்படுத்தப்பட உள்ள மாணவியர்கள் விடுதி, கஸ்தூர்பா காந்தி பெண்கள் பள்ளிகளில் பயிலும் மாணவியர் இடர்ப்பாடின்றி இடைநிலைக் கல்வியைத் தொடர வழிவகுக்கின்றது. மேலும் மாண்புமிகு முதலமைச்சரின் பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டம், இம்மாணவிகள் இடைநிலைக் கல்வியை வெற்றிகரமாகத் தொடர வழிவகை செய்துள்ளது.

6.10 பள்ளிகளுக்கான கட்டமைப்பு வசதிகள்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தொலைநோக்குத் திட்டத்தினை நிறைவேற்றும் வகையில் அகில இந்திய அளவில் சிறப்பான கட்டமைப்பு சேவைகளை உள்ளடக்கி அனைவருக்கும் இடைநிலைக் கல்வியை அளிக்கும் நோக்கில் தேவையான அனைத்து கட்டுமான வசதிகள் அளித்திட உரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

பல்வேறு கட்டுமான வசதிகள் கீழ்க்காணுமாறு வழங்கப்படவிருக்கின்றன:

- 213 பள்ளிகளில் சுகாதாரமான குடிநீர் வசதி செய்வதற்கு ரூ.1.06 கோடி அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது
- கழிப்பறை வசதிகள் இல்லாத நிலை, மாணவர்களின் இடைநிற்றலுக்கு ஒரு முக்கியக் காரணம் என்று கண்டறியப்பட்டதால், இக்குறைபாட்டை நீக்கும் வகையில், 474 பள்ளிகளில் கழிப்பறை வசதிகள் ரூ.4.74 கோடியில் ஏற்படுத்தப்பட உள்ளன.

- நடைமுறையில் 879 பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் கட்டடங்கள் ரூ.157.98 கோடிகளில் ஏற்படுத்துதல்

- பள்ளிகளுக்குத் தேவையான அறிவியல் உபகரணங்கள், அறிவியல் கருவிகள் மற்றும் செய்தித்தாள்கள் வாங்குவதற்காக 5,670 அரசு உயர்நிலை / மேனிலைப் பள்ளிகளுக்குப் பள்ளி மானியமாக தலா ரூ.50,000/- வீதம் மொத்த செலவினமாக ரூ.28.35 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது

- பள்ளிகளில் கழிப்பறை வசதிகள் பராமரிப்பு, கதவு மற்றும் தரைகளைச் சரிசெய்தல், மின்சாதனப் பொருள்களைப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகளுக்காக சிறு மராமத்து மானியமாக தலா ரூ.25,000/- வீதம் தமிழகத்திலுள்ள 4,092 அரசு உயர்நிலை / மேனிலைப் பள்ளிகளுக்கு ரூ.10.23 கோடி வழங்கப்பட்டுள்ளது

- 28,235 பள்ளி மேலாண்மை வளர்ச்சிக் குழு உறுப்பினர்களுக்குப் பயிற்சிப் பணிமனைகள் ரூ. 84.71 இலட்சம் செலவில் நடத்தப்பட்டுள்ளன.

6.11 திட்ட ஒதுக்கீடு

அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்திற்கான செயல்பாடுகளுக்காகத் திட்ட ஏற்பளிப்புக் குழுவால் 2012-2013 ஆம் ஆண்டிற்கு ரூ. 461.75 கோடி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் "தமிழக தொலைநோக்குத் திட்டம் 2023" என்னும் மாபெரும் ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள தரமிகு கட்டமைப்பு வசதிகள், அனைவருக்கும் சமமான, தரமிக்க கல்வியினை அரசு உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளுக்கு வழங்குதல் என்னும் இலக்குகளும் செயல்வடிவம் பெற்றிட அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்ட இயக்ககம் முனைப்புடன் செயலாற்றி வருகிறது.

6.12 மாநில வரவு—செலவுத் திட்ட ஒதுக்கீடு

2012-2013 ஆம் ஆண்டு மாநில வரவு-செலவுத் திட்டத்தில் இத்திட்டச் செயல்பாட்டிற்காக ரூ.300 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்போது 2013-2014 ஆம் ஆண்டு மாநில

2013 மே 10]

வரவு-செலவுத் திட்டத்தில் இவ்வொதுக்கீடு ரூ.366.57 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சிறப்பு முயற்சிகள் மாணவர்கள் இடைநிலைக் கல்வியைப் பெறுவதற்கு உதவுவதோடு மட்டுமல்லாமல், உயர் கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்பையும், தரமான கல்வியைப் பெறுவதற்குமான பாதையையும் உருவாக்குகிறது.

7. மெட்ரிகுலேஷன் பள்ளிகள்

7.1 அறிமுகம்

2001 ஆம் ஆண்டு சுயநிதி ஆங்கிலவழி மெட்ரிகுலேஷன் பள்ளிகளைத் திறம்படக் கண்காணிப்பதற்கெனத் தனியாக மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்ககம் ஏற்படுத்தப்பட்டது. அப்போது 11,68,479 மாணவர்களுடன் 2,983 மெட்ரிகுலேஷன் பள்ளிகள் செயல்பட்டுவந்தன. 2001 ஆம் ஆண்டு முதல் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் நிலையான வளர்ச்சி பெற்று மாணவர் சேர்க்கையில் மூன்று மடங்கு அதிகரித்துள்ளன. தற்போது 3,774 மெட்ரிகுலேஷன் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 33,39,414 மாணவர்கள் பயில்கின்றனர்.

7.2 முக்கியப் பங்கு

இவ்வியக்ககத்தின் முக்கியப் பணியானது, மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கான விதித் தொகுப்பு, அரசு அவ்வப்போது வெளியிடும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளின்கீழ் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் மற்றும் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளிகள் தொடங்க அனுமதிப்பது / அங்கீகாரம் வழங்குவதாகும். மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்ககம், அதன்கட்டுப்பாட்டில் கள அளவில் செயல்படும் 15 மெட்ரிகுலேஷன் பள்ளி ஆய்வாளர்களின் மூலமாக மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் செயல்பாட்டைக் கட்டுப்படுத்திக் கண்காணித்து வருகிறது.

7.3 அனைத்து தனியார் சுயநிதிப் பள்ளிகளுக்கான கட்டணத்தை ஒழுங்குபடுத்துதல்

தனியார் சுயநிதிப் பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதிகள், நிருவாகச் செலவினங்கள் மற்றும் மாணவர்களின் நலனுக்காகச்

செலவிடப்படும் பிற அனைத்து செலவினங்களின் அடிப்படையில் சுயநிதிப் பள்ளிகளில் மாணவர்களிடமிருந்து வசூலிக்கவேண்டிய கட்டணத்தை நிர்ணயிப்பதற்கு "தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல்) சட்டம் 2009"-இன்படி ஒரு ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. தொடக்கத்தில் இக்குழு 10,500 பள்ளிகளுக்கு 2010-2013 ஆம் ஆண்டுகளுக்கான கட்டண விகிதங்களை நிர்ணயம் செய்தது. அடுத்த மூன்று ஆண்டுகளுக்கான கட்டண விகிதங்களை நிர்ணயம் செய்யும் பணி தற்பொழுது நடைபெற்று வருகிறது. இப்பணி, ஜூன் 2013 இறுதிக்குள் நிறைவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பள்ளிகளில் கூடுதல் கட்டணம் வசூல் சார்பாக பெறப்படும் புகார்கள் குறித்து பரிசீலனை செய்ய மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் தலைமையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் குழு அமைக்கப்பட்டுள்ளது. புகார்கள்மீது விசாரணை நடத்தி தக்க நடவடிக்கை எடுக்க உரிய இயக்குநருக்கு இக்குழு பரிந்துரை செய்யும்.

7.4 குழந்தைகளுக்கான இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட நடைமுறைகளுக்கான தலைமை மாநில இணைப்பு அலுவலர் நியமனம்

குழந்தைகள் இலவசக் கட்டாயக் கல்வி பெறுவதை உறுதி செய்ய தமிழ்நாட்டில் குழந்தைகளுக்கான இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009-ஐ நடைமுறைப்படுத்துவதற்கென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட விதிகள், 2011-ஐ அறிவிக்கை செய்துள்ளார்கள். இதனையடுத்து மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர், தலைமை மாநில இணைப்பு அலுவலராகவும், பள்ளிக் கல்வி இயக்ககம், தொடக்கக் கல்வி இயக்ககம் மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்ககங்களைச் சார்ந்த இணை இயக்குநர்கள் மற்றும் பள்ளிக் கல்வித் துறையின் பிரதிநிதிகள் உறுப்பினர்களாகவும் கொண்ட ஒரு குழு அமைக்கப் பட்டுள்ளது. கீழ்க்கண்ட பணிகள் மற்றும் பொறுப்புகள் தலைமை மாநில இணைப்பு அலுவலருக்கு ஒதுக்கப்பட்டுள்ளன:

1. குழந்தைகளுக்கான இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்-2009-ஐ நடைமுறைப்படுத்துவதில் எழும் அனைத்து சிக்கல்களையும் தீர்த்தல்

2013 மே 10]

2. குழந்தைகளுக்கான இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் தொடர்பாக எழும் புகார்கள்மீது விசாரணை நடத்தி தீர்வு காண்பதற்கு வழிவகை செய்தல்

3. பயிற்சி மற்றும் கல்வி சார்ந்த செயல்பாடுகளில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்திற்கு ஒத்துழைப்பு நல்குதல்

4. குழந்தைகளுக்கான இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் சார்பாக அவ்வப்போது எழும் பிரச்னைகளுக்குத் தீர்வு காணுதல்

தமிழ்நாடு இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட விதிமுறைகள், 2011-ஐ அதன் முழுமையான சாராம்சத்துடன் நடைமுறைப்படுத்துவதை இக்குழு உன்னிப்பாகக் கண்காணிக்கும்.

7.5 பள்ளிகளில் மாணவர்களின் பாதுகாப்பு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அனைத்து வகைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டுமென்பதில் அக்கறை கொண்டுள்ளார்கள். இதுதொடர்பாக அனைத்துப் பாதுகாப்பு அம்சங்களையும் உள்ளடக்கி ((உ-ம்) கட்டடம், பள்ளி வளாகம், கழிப்பறை, குடிநீர் வசதி, ஆய்வக வசதிகள், உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பிற) விரிவான ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த அரசாணையின் விளைவால் “அன்னையர் குழு” அமைத்து சமூக ஆய்வு மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இச்செயல்பாட்டின் சிறப்பு அம்சங்களாவன:

1. தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை வகுப்புகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 5 அன்னையர்கள் அடங்கிய ஒரு குழு அமைக்கப்படுகிறது.

2. அக்குழு, ஒரு குறிப்பிட்ட நாளில் பள்ளிக்குச் சென்று அப்பள்ளியில் வகுப்பறை வசதிகள், ஆய்வகம், நூலகம், கழிப்பறை, குடிநீர், போக்குவரத்து போன்ற வசதிகள் உள்ளதா என்பதை மேற்பார்வையிடும்.

[2013 மே 10

3. மேலும் அக்குழு, தமது பார்வைக் குறிப்பினை ஒரு பதிவேட்டில் பதிவு செய்யும். இப்பதிவேட்டினை ஒவ்வொரு மாதமும் பள்ளி நிருவாகமும் ஆய்வு அலுவலர்களும் பார்வையிட்டுக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்வார்கள்.

இந்த நடைமுறை அன்னையர் குழுவால் தொடர் சமூக தணிக்கை மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்யும்.

7.6 கழிவறை / குடிநீர் வசதி

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அனைத்துத் தனியார் பள்ளிகளிலும் தேவையான எண்ணிக்கையில் கழிவறை மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகளைச் செய்துகொடுக்க ஆணையிட்டுள்ளார்கள். மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு இவ்வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

7.7 தனியார் சுயநிதி சிறுபான்மையல்லாத பள்ளிகளில் மாணவர் சேர்க்கை தொடர்பாகப் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்

குழந்தைகளுக்கான இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்படி, அனைத்துப் பள்ளிகளிலும் நலிந்த பிரிவினர்/ வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவிலிருந்து வரும் மாணவர்களுக்கு நுழைவுநிலை வகுப்புச் சேர்க்கையில் 25 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்யவேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதற்கிணங்க அனைத்து தனியார் சுயநிதி சிறுபான்மையல்லாத பள்ளிகளில் 25 விழுக்காடு இட ஒதுக்கீட்டினை நடைமுறைப்படுத்துவதை உறுதிசெய்ய தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கென 2013-2014 ஆம் கல்வியாண்டில் வரையறுக்கப் பட்டுள்ள படிவங்களில் விவரங்கள் ஒவ்வொரு பள்ளியிலும் பெறப்பட்டு, அவை மாநில மற்றும் மாவட்ட அளவிலான குழுக்களால் ஆய்வு செய்து கண்காணிக்கப்படும்.

7.8 உயர்மட்டக் குழு அமைத்தல்

மெட்ரிகுலேஷன் பள்ளிகள் / மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளிகளில் இருக்க வேண்டிய குறைந்தபட்ச நிலப்பரப்பை அரசு வரையறுத்து ஆணையிட்டுள்ளது. அவ்வாணையில் மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்குக் குறைந்தபட்சம் இருக்கவேண்டிய நிலப் பரப்பளவு சார்ந்த விவரங்கள் பின்வருமாறு:-

2013 மே 10]

அமைவிடம்	வரையறுக்கப்பட்ட குறைந்தபட்ச நில அளவு
மாநகராட்சி	6 மனையிடம் தொடர் நிலப்பரப்பு
மாவட்டத் தலைமையிடங்கள்	8 மனையிடம் தொடர் நிலப்பரப்பு
நகராட்சி	10 மனையிடம் தொடர் நிலப்பரப்பு
பேரூராட்சி	1 ஏக்கர் தொடர் நிலப்பரப்பு
கிராமப்புறம்	3 ஏக்கர் தொடர் நிலப்பரப்பு

தமிழக அரசு, மெட்ரிகுலேஷன் பள்ளி நிருவாகங்களுக்குக் குறைந்தபட்ச நில அளவுத் தேவையை நிறைவு செய்ய வலியுறுத்தியுள்ளது. இதற்கென அப்பள்ளிகளுக்கு 4 ஆண்டுகள் கால அவகாசம் அரசு வழங்கியது. இக்கால அவகாசத்திற்குப் பின்னரும் சில மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இக்குறைந்தபட்ச நிலத் தேவையைப் பூர்த்தி செய்யாததால் அரசு அப்பள்ளிகளுக்கு மேலும் 3 ஆண்டு கால நீட்டிப்பு வழங்கியது. இக்கால நீட்டிப்பிற்குப் பின்னரும் இக்குறைந்தபட்சத் தேவையை நிறைவுசெய்யாத பள்ளிகள் உள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இப்பள்ளிகளின் செயல்பாட்டை முறைப்படுத்துவதற்கு ஓர் உயர்மட்டக் குழுவினை அமைக்க ஆணையிட்டுள்ளார்கள். பள்ளிக் கல்வி இயக்குநரின் தலைமையிலான இக்குழு, விரிவாக ஆய்வுசெய்து தற்போதுள்ள விதிமுறைகளின்படி பள்ளிகளுக்குக் குறைந்தபட்சம் இருக்கவேண்டிய நிலப்பரப்பு தொடர்பாக அரசுக்கு தனது பரிந்துரைகளை அளிக்கும்.

7.9 பள்ளிகளில் நீச்சல் குளங்களை ஒழுங்குபடுத்துவதற்கான விதிமுறைகள்

ஒரு தனியார் பள்ளி நீச்சல் குளத்தில் நடந்த விபத்தில் மாணவர் ஒருவர் உயிரிழக்க நேரிட்ட துயர சம்பவத்தினை அடுத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பள்ளிகளில் அமைந்துள்ள நீச்சல் குளங்களை வரைமுறைப்படுத்துவதற்கான விதிமுறைகளை உருவாக்க வல்லுநர் குழு ஒன்றை அமைக்க உடனடி நடவடிக்கை மேற்கொண்டார்கள். அதன்படி, பள்ளிகளில் பயன்பாட்டில்

உள்ள நீச்சல் குளங்களை ஆய்வுசெய்து அவற்றை முறைப்படுத்துவதற்குத் தேவையான விதிமுறைகளைப் பரிந்துரைப்பதற்கு அரசு குழு ஒன்றை அமைத்தது. இக்குழு அரசுக்கு அளித்த பரிந்துரைகளுக்கிணங்க நீச்சல் குளங்களை முறைப்படுத்துவதற்கான விதிகளை உருவாக்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

7.10 பள்ளி வாகனங்களில் செல்லும் மாணவர்களின் பாதுகாப்பு

பள்ளி வாகனங்களில் செல்லும் மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டு, அப்பள்ளி வாகனங்களை முறைப்படுத்துவதற்குத் தேவையான விதிமுறைகளை வகுக்க குழு ஒன்றை அமைத்தது. அதன்படி, அரசு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (பள்ளிப் பேருந்துகளை ஒழுங்குபடுத்துதல், கட்டுப்படுத்துதல்) சிறப்பு விதிகள், 2012-ஐ உருவாக்கி அவ்விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கு அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரகம், தனியார்ப் பள்ளிகளை முறைப்படுத்தும் பணியில் மாணவர்களின் நலனையும் அவர்களது பாதுகாப்பையும் தலையாய நோக்கமாகக் கொண்டு செயல்படும்.

7.11 வரவு–செலவுத் திட்ட ஒதுக்கீடு

2012-2013 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இவ்வியக்ககத்திற்கு ரூ.4.28 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்போது, இவ்வொதுக்கீடு அதிகரிக்கப்பட்டு 2013-2014 ஆம் நிதியாண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.4.37 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரசின் முனைப்பான நடவடிக்கைகளான தரமான கல்வி அளித்தல், முப்பருவக் கல்வி முறை, தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை, குழந்தைகளுக்கான இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், குழந்தைகள் பாதுகாப்பு ஆகிய செயல்பாடுகளைச் செம்மையாக நடைமுறைப்படுத்துவதை இயக்குநரகம் தீவிரமாகக் கண்காணித்து வருகிறது.

2013 மே 10]

8. பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி

8.1 அறிமுகம்

பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 1976 ஆம் வருடம் தொடங்கப்பட்டது. இதன் தலையாய நோக்கம் தமிழகத்தில் உள்ள 15 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் அடிப்படை எழுத்தறிவை வழங்குவது ஆகும். இத்துறையில் நடைமுறைப்படுத்திய திட்டங்களில் மிக முக்கியமானது அறிவொளி இயக்கம் என்கிற அடிப்படை எழுத்தறிவுத் திட்டமாகும். இப்பணியை மிகச் சிறப்பாக செய்தமைக்காக யுனெஸ்கோ நிறுவனம் 1982 ஆம் ஆண்டு இவ்வியக்ககத்தைப் பாராட்டி, ஒரு பாராட்டுச் சான்றிதழ் வழங்கி ரூ.67,000 ரொக்கப் பரிசும், ஒரு பிளாட்டினம் பதக்கமும் வழங்கியுள்ளது. இதனைத் தொடர்ந்து மத்திய அரசு இத்துறையின் பணியைப் பாராட்டி 1983 மற்றும் 1984 ஆம் ஆண்டுகளில் ரூ.50 இலட்சம் மானியம் வழங்கியுள்ளது.

இவ்வியக்ககத்தால் செயல்படுத்தப்பட்டு வந்த வயது வந்தோருக்கான எழுத்தறிவுத் திட்டம் பதினோராம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சக்ஷார் பாரத் எனப்படும் பெண்களுக்கானச் சிறப்பு எழுத்தறிவுத் திட்டம் 8-9-2009-இல் கொண்டு வரப்பட்டது. 11-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் அதாவது 8-9-2009 முதல் 31-3-2013 வரை ரூ.48.09 கோடி நிதி பெறப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், 31-3-2017 வரை இத்திட்டம் தொடர்ந்து நடைபெறவுள்ளது. இத்திட்ட நோக்கத்தின்படி, அகில இந்திய அளவில், 2001 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி 50 சதவிகிதத்திற்கும் குறைவான பெண்கள் எழுத்தறிவு உள்ள வருவாய் மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டு அம்மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் விழுப்புரம், திருவண்ணாமலை, அரியலூர், பெரம்பலூர், சேலம், தருமபுரி மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் 2001 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, எழுத்தறிவு விகிதம் 50 சதவிகிதத்திற்கு குறைவாக உள்ளது. எனவே, தமிழ்நாட்டில் இந்த 7 மாவட்டங்களில் மட்டும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 'சக்ஷார் பாரத்' எனப்படும் இத்திட்டம், தமிழ்நாட்டில் "கற்கும் பாரதம்" என அழைக்கப்படுகிறது.

[2013 மே 10

8.2 தொலைநோக்கு

- *பெண்களுக்கான அடிப்படை எழுத்தறிவுத் திட்டம் செயல்படுத்தப்படும் 7 மாவட்டங்களில் கற்றல் கற்பித்தலில் மரபுசார்ந்த மற்றும் நவீன முறைகளைப் பின்பற்றி பெண் எழுத்தறிவை 100 சதவிகிதத்திற்கு உயர்த்துதல்*
- *வயது வந்த கற்போரது வாசிக்கும் திறனை மேம்படுத்தி அவர்கள் 8 ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்பு போன்ற உயர் வகுப்புகளுக்கான தேர்வுகளை எழுத ஊக்குவித்தல்*
- *எளிய தொழிற்சார்ந்த பயிற்சியை வயது வந்த கற்போருக்கு அளித்து அந்தப் பயிற்சியின் அடிப்படையில் அவர்கள் தாங்கள் கற்றுக் கொண்ட ஏதேனும் ஒரு தொழிலைச் செய்து வாழ்க்கை நடத்த உதவுதல்*
- *தொழிற்பயிற்சியைக் கற்பிக்கும்போது மிகச் சிறப்பாகக் கற்றுக் கொள்ளும் நபர்களைக் கண்டறிந்து அவர்கள் மிகச் சிறிய தொழில்முனைவோராக மாற ஊக்குவித்தல்*

8.3 நோக்கமும், குறிக்கோளும்

- *ஆண், பெண் இடையில் காணப்படும் எழுத்தறிவு இடைவெளியை 11 ஆம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் (31-3-2013) முற்றிலுமாக அகற்றுதல்*
- *தேர்வு செய்யப்பட்ட ஏழு மாவட்டங்களில் 31-3-2013 அன்றோ அதற்கு முன்னதாகவோ 15 வயதிற்கு மேற்பட்ட அனைத்து மகளிருக்கும் அடிப்படை எழுத்தறிவு வழங்குதல் மற்றும் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து கற்கும் பழக்கத்தை அவர்களிடையே வளர்த்து குடியுரிமை பெற்ற இந்தியாவில் அவர்களை சராசரி குடிமக்களாக வாழச் செய்தல்*
- *சிறப்பாகக் கற்றோரைக் கண்டறிந்து அவர்களை ஊக்குவித்து மிகச் சிறந்த சிறிய தொழில்முனைவோராக மாற்றி கிராமப்புற பெண்களிடையே புதிய சகாப்தத்தை ஏற்படுத்துதல்*

8.4 வகுப்புகள் நடத்துதல்

அடிப்படை செயல்முறை எழுத்தறிவுத் திட்டத்தில் 300 மணி நேரம் படிக்க, எழுத, எண்ணறிவு பெற கலைத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஓர் ஆண்டில், ஆகஸ்ட் மற்றும் மார்ச்

2013 மே 10]

மாதங்களில் அடிப்படை எழுத்தறிவு மதிப்பீட்டுத் தேர்வு நடைபெறுகிறது. இதுவரை தமிழ்நாட்டில் தேர்வு எழுதிய 19.30 இலட்சம் புதிதாக அடிப்படை எழுத்தறிவு பெற்றவர்களுள் 17.26 இலட்சம் பேர் அடிப்படை எழுத்தறிவு தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

8.5 மாதிரி வயது வந்தோர் கல்வி மையங்கள்

2012-2013 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் கல்வி அமைச்சர் அறிவித்ததற்கிணங்க மரபுவழிக் கற்பித்தல் முறையோடு இணைத்து கற்பிக்கப்படும் 40 மாதிரி வயது வந்தோர் கல்வி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மாதிரி மையங்களில் வயது வந்த கற்றோருக்குக் கணினியையும், நீர்மப் படப்பெருக்கியையும் (LCD) பயன்படுத்தி ஏற்கெனவே தொகுக்கப்பட்ட அடிப்படை எழுத்தறிவுத் திட்டத்தை உள்ளடக்கிய மென்பொருளை இணைத்து கற்பிக்கப்படுகிறது. கல்வித் துறையின் இம்முன்முயற்சியைத் தமிழகம் மட்டுமே சீரிய முறையில் செயல்படுத்தியமைக்கு தேசிய அளவில் பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

8.6 இலக்கை அடையும் வழிமுறைகள்

‘சஷார் பாரத்’ எனப்படும் ‘கற்கும் பாரதம்’ திட்டத்தினை பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம், தேசிய மற்றும் மாநில எழுத்தறிவு முனைப்பு ஆணையங்களை இணைத்துச் செயல்படுத்துவதன்மூலம் மேற்காணும் நோக்கங்களும் குறிக்கோள்களும் எட்டப்படும். 2001 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, இத்திட்டம், 50 விழுக்காட்டிற்கும் குறைவான பெண்கள் எழுத்தறிவு விகிதம் உள்ள வருவாய் மாவட்டங்களான விழுப்புரம், திருவண்ணாமலை, அரியலூர், பெரம்பலூர், சேலம், தருமபுரி மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப் படுகிறது. 8-9-2009-ல் ஆரம்பிக்கப்பட்ட கற்கும் பாரதம் எனும் எழுத்தறிவுத் திட்டமானது தமிழ்நாட்டில் 3,152 கிராம பஞ்சாயத்துகளில் களப் பணியாளர்களை நியமனம் செய்து இம்மாவட்டங்களில் வீடுதோறும் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு நடத்தி எழுத்தறிவு இல்லாதவருக்கான கள அளவிலான கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. எழுத்தறிவற்றோர் 20.5 இலட்சம் எனக் கண்டறியப்பட்டு கற்கும் பாரதம் இணையதளத்தில் பதிவு

செய்யப்பட்டது. இது 2001 மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் இலக்காக நிர்ணயிக்கப்பட்ட 17.46 இலட்சத்தையும் தாண்டியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

8.7 கற்றல் சூழ்நிலையை உருவாக்குதல்

ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், உள்ளூர் முக்கிய பிரமுகர்கள், ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்களின் கூட்டு முயற்சியால் விழிப்புணர்வு முகாம்களும் ஊக்குவித்தலுக்கான கூட்டங்களும் நடைபெற்றன. இவையே அக்கிராமப் பஞ்சாயத்திலுள்ள எழுத்தறிவற்றோர், வயது வந்தோர் கல்வி மையங்களை நோக்கி வருவதற்கு உதவிகரமாக அமைந்தது. அடிப்படை எழுத்தறிவை இம்மையங்களில் கற்றுக் கொள்ள விலையில்லா கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் மையங்களுக்கு வழங்கப்பட்டன.

3,152 பஞ்சாயத்துகளில் செயல்படும் இம்மையங்களில் தொழில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. சோப்பு பவுடர், கம்ப்யூட்டர் சாம்பிராணி, மெழுகுவர்த்தி செய்தல், செயற்கை ஆபரணங்கள் தயாரித்தல், தையல் பயிற்சி போன்ற பயிற்சிகள் வயது வந்த கற்போர் அனைவருக்கும் அளிக்கப்படுகின்றன. இப்பயிற்சி பெற்ற பயனாளிகள் சுய தொழில் தொடங்கி, சிறு தொழில்முனைவோராக மாறியுள்ளனர்.

8.8 அடிப்படை எழுத்தறிவு மதிப்பீட்டுத் தேர்வு

தேசிய திறந்தவெளிப் பள்ளி, கற்கும் பாரதம் எழுத்தறிவு மையங்களில் கற்போருக்கு அடிப்படை எழுத்தறிவு மதிப்பீட்டுத் தேர்வினை நடத்தி மூன்றாம் வகுப்பிற்கு சமமான சான்று வழங்குகிறது. இத்தேர்வு, ஆண்டுதோறும் ஆகஸ்ட் மற்றும் மார்ச் மாதத்தில் நடைபெறுகிறது. இத்திட்டத்தின் பயனாக 17.26 இலட்சம் பேருக்கு அடிப்படை எழுத்தறிவு அளிக்கப்பட்டு தேசிய திறந்தவெளிப் பள்ளியினால் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. 79,660 வயது வந்த கற்றோர்களுக்கு தொழிற்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதில் சிலர் சிறு தொழில்முனைவோராக மாறியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க வெற்றியாகும்.

இத்திட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட 7 மாவட்டங்களில் எழுத்தறிவு விகிதத்தினை மேம்படுத்தியுள்ளது.

2013 மே 10]

8.9 வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு

2012-2013 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இவ்வியக்கத்திற்கு ரூ.6.32 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்போது இவ்வொதுக்கீடு அதிகரிக்கப்பட்டு 2013-2014 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.7.33 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வியக்ககம், தமிழ்நாட்டில் எழுத்தறிவு விகிதத்தினை மேம்படுத்துவதில் முக்கியப் பங்காற்றி வருகிறது.

9. அரசுத் தேர்வுகள்

பள்ளிக் கல்வித் துறை சார்ந்த அரசுப் பொதுத் தேர்வுகளையும் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த இதர அரசுத் தேர்வுகளையும் நடத்துகின்ற மிகப் பெரிய பொறுப்பு அரசுத் தேர்வுகள் இயக்ககம்வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

9.1 தொலைநோக்கு

தேர்வுகளை நடத்த கையாளப்படும் பல்வேறு வழிமுறைகளிலும், அதற்கான மனித வள பயன்பாட்டிலும் நவீன தொழில்நுட்பங்களை உட்புகுத்தி அரசுக்கு நிதிச் சுமையோ கூடுதல் பணியாளர்கள் தேவையோ ஏற்படுவதைத் தவிர்த்து தேர்வுப் பணிகளை விரைவாகவும் துல்லியமாகவும் மேற்கொள்வதற்கான குறிக்கோளினை எட்டுவதற்கும், தேர்வர்களின் நியாயமான எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யும் வகையில் தேர்வுகளை நடத்துவதில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்துதல்.

9.2 துறையின் பொறுப்புகள்

பள்ளி இறுதிப் பொதுத் தேர்வுகளை நடத்தி அத்தேர்வு முடிவுகளை உரிய காலத்தில் வெளியிடுவதே அரசுத் தேர்வுகள் துறையின் தலையாய பணியாகும். ஆண்டுதோறும் அரசுத் தேர்வுகள் துறையினால் 31 வகையான தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றுள் மேல்நிலைக் கல்வி பொதுத் தேர்வு, இடைநிலைக் கல்வி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வு, தொடக்கக் கல்விப் பட்டயத் தேர்வு மற்றும் எட்டாம் வகுப்புத் தேர்வு ஆகியவை முக்கியமான தேர்வுகள் ஆகும்.

[2013 மே 10

ஒவ்வோர் ஆண்டும் மேல்நிலை / இடைநிலைக் கல்விப் பொதுத் தேர்வுகள் மார்ச் / ஏப்ரல், ஜூன் / ஜூலை மற்றும் செப்டம்பர் / அக்டோபர் ஆகிய மூன்று பருவங்களில் நடத்தப்படுகின்றன. ஏனைய தேர்வுகள் ஆண்டுக்கு ஒருமுறை நடத்தப்படுகின்றன.

சென்னை, வேலூர், கடலூர், திருச்சி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய ஏழு மண்டலத் துணை இயக்குநர் அலுவலகங்கள் இத்துறையின்கீழ் செயல்படுகின்றன. இம்மண்டல அலுவலர்கள் இடைநிலை பொதுத் தேர்வு எழுதுவோரிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களை மேற்பார்வையிடுகிறார்கள். மேலும் தங்களது மண்டல வரையறைக்குட்பட்ட தேர்வு மையங்களுக்குத் தேவையான எழுதுபொருட்கள், தேர்வுக்கான முன்பணங்கள் விநியோகம் செய்யப்படுவதையும் கண்காணிக்கிறார்கள்.

9.3 தேர்வரின் புகைப்படம் மற்றும் கூடுதல் இரகசியக் குறியீட்டுடன்கூடிய மதிப்பெண் சான்றிதழ் வழங்குதல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110-ன்கீழ் அறிவித்த அறிவிப்பிற்கிணங்க மேல்நிலை மற்றும் இடைநிலைக் கல்வி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வுகளை எழுதும் தேர்வர்களுக்கு புகைப்படம், இரு பரிமாணப் பட்டக் குறியீடு மற்றும் கூடுதல் இரகசிய குறியீடுகளுடன் கூடிய சான்றிதழ்கள் மார்ச் 2012 முதல் வழங்கப்பட்டு வருகிறது. இந்நடைமுறையால் 18,07,386 மாணவ / மாணவிகள் பயன் பெற்றுள்ளனர்.

முதன்முறையாக மார்ச் 2012 முதல் தேர்வுகளின்போது பயன்படுத்தக்கூடிய பெயர்ப் பட்டியல், அனுமதிச் சான்றிதழ் (தேர்வுக்கூட நுழைவுச் சீட்டு), வருகைச் சான்றிதழ் ஆகிய தேர்வு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் தேர்வர்களது புகைப்படத்தோடு இணைத்து வழங்கப்படுகின்றன. மேலும் வருகைச் சான்றிதழில் தேர்வரின் பெயர், பதிவெண், தேர்வெழுதும் பாடங்கள் மற்றும் தேர்வெழுத அனுமதிக்கப்பட்ட மையம் ஆகிய விவரங்களும் இடம்பெறுவதால் தேர்வில் ஆள்மாறாட்டம் செய்து தேர்வெழுதும் குற்றச்செயல்கள் முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளன.

2013 மே 10]

9.4 அனைத்துப் பாடங்களிலும் சிறப்புத் துணைப் பொதுத் தேர்வு நடத்துதல்

பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் சட்டமன்றப் பேரவை அறிவிப்பின்படி ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் பள்ளிகள் மூலமாகவும் தனித் தேர்வர்களாகவும் மார்ச் / ஏப்ரல் பொதுத் தேர்வு எழுதி மூன்று பாடங்கள் வரை தேர்ச்சிப் பெறாதவர்களுக்கு மட்டும் அக்கல்வியாண்டிலேயே ஜூன் / ஜூலை மாதத்தில் சிறப்புத் துணைப் பொதுத் தேர்வு எழுதுவதற்கு அனுமதிக்கப்பட்டு வந்ததைத் தளர்த்தி 2012 ஆம் ஆண்டு முதல் தேர்ச்சி பெறாத அனைத்துப் பாடங்களையும் ஜூன்/ஜூலை மாத சிறப்புத் துணைப் பொதுத் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டு வருகிறது. இதனால் தோல்வியுறும் மாணவர்களுக்கு அந்த முழு கல்வியாண்டு வீணாகாமல் அதே ஆண்டிலேயே அவர்கள் உயர் கல்வியினை தொடர்வதற்கு உதவியாக உள்ளது.

9.5 மாணவர்களின் தேர்ச்சி சதவீதம்

மார்ச் 2011 இல் நடைபெற்ற இடைநிலைத் தேர்வில் 85.30%-ம் மேல்நிலைத் தேர்வில் 85.90%-ம் தேர்ச்சிப் பெற்றனர். மார்ச் 2012-ல் நடைபெற்ற தேர்வில் இத்தேர்ச்சி விழுக்காடு அதிகரித்து இடைநிலைத் தேர்வில் 86.20%-ம், மேல்நிலைத் தேர்வில் 86.70%-ம் தேர்ச்சிப் பெற்றனர். 2011 ஆம் ஆண்டுக்கான தேர்ச்சி விழுக்காட்டினை பகுப்பாய்வு செய்ததில் தென்மாவட்டங்களைவிட வட மாவட்டங்களின் தேர்ச்சி விகிதம் மிகவும் குறைவாக இருப்பது தெரியவந்தது. பள்ளிகளில் ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருந்ததற்கும் இத்தேர்ச்சி சதவிகிதம் குறைந்ததற்கும் நேரடி தொடர்பிருப்பது இதற்கான காரணமாக அறியப்பட்டது. இதுகுறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி தற்போது பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டு மாணவர்களுக்குத் தரமான கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. மார்ச் 2013 இடைநிலை / மேல்நிலை பொதுத் தேர்வுகளில் மாணவர்களின் தேர்ச்சி சதவீதம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[2013 மே 10

9.6 மீண்டும் எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வினைத் தொடர்ந்து நடத்துதல் (தனித் தேர்வர்)

குறைந்தபட்ச கல்வித் தகுதியை வழங்குவதற்கும் வேலைவாய்ப்புக்காகவும், அடிப்படை நிலையில் பதவி உயர்வுக்காகவும், ஓட்டுநர் உரிமம் பெறுவதற்காகவும், எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு மீண்டும் தொடர்ந்திடும் வகையில் ஏப்ரல் 2012 முதல் நடத்தப்படுகிறது.

9.7 மதிப்பெண் சான்றிதழ்களின் சான்றிட்ட நகல் மற்றும் மறுபிரதிச் சான்றிதழ் வழங்குதல்

அரசுத் தேர்வுகள் எழுதிப் பெற்ற மதிப்பெண் சான்றிதழ்களைத் தவறவிட்டவர்களுக்கு உரிய கட்டணத்தின் பேரில் மதிப்பெண் சான்றிதழ்களின் சான்றிட்ட நகல் மற்றும் மறுபிரதி மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

9.8 புலப்பெயர்ச்சிச் சான்றிதழ் வழங்குதல்

அரசுத் தேர்வுகள் துறையால் நடத்தப்படும் 10 மற்றும் 12 ஆம் வகுப்புக்கான தேர்வில் தேர்ச்சியுற்று இம்மாநிலத்தை விட்டு வேறுயெங்கேனும் மேற்படிப்பைத் தொடர விரும்புவோர்க்கு புலப்பெயர்ச்சிச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

9.9 மதிப்பெண் சான்றிதழ்கள்

மேல்நிலை / இடைநிலைக் கல்வி பொதுத் தேர்வு சான்றிதழ்கள் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இருமொழி வடிவில் தேர்வர்களுக்கு வழங்கப்படுகிறது.

9.10 தேர்வு முடிவுகள்

மேல்நிலை / இடைநிலைக் கல்விப் பொதுத் தேர்வுகளுக்கான முடிவுகளை வெளியிடுவதற்கான பிரத்யேகமான இணையதளங்கள் உருவாக்கப்பட்டு தேர்வு முடிவுகள் கிடைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாணவர்கள் தேர்வு முடிவுகளை அவரவர் பயின்ற பள்ளிகள், மாவட்ட மைய மற்றும் கிளை நூலகங்களில் உள்ள இணையதளத்தின் வழியாகவும், மேலும் குறுஞ்செய்தி சேவை வழியாகவும் அறிந்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2013 மே 10]

9.11 மதிப்பெண் மறுகூட்டல் மற்றும் விடைத்தாள்கள் மறுமதிப்பீடு செய்தல்

மேல்நிலை / இடைநிலை மற்றும் தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வு ஆகிய பொதுத் தேர்வுகளுக்கான தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்டதும் தேர்வர்களின் விருப்பத்தின் பேரில், விடைத்தாட்கள் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்க வாய்ப்பளிக்கப்படுகிறது. ஜூன்/ஜூலை 2012 தேர்வு முதல் மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீட்டிற்கு online *மூலமாக விண்ணப்பிக்க வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேல்நிலைத் தேர்வுக்கு மட்டும் விடைத்தாட்களை மறுமதிப்பீடு செய்ய விரும்பும் தேர்வர்களுக்கு முன்னதாக அவ்விடைத்தாட்களின் அச்சுப் பகர்ப்பு நகலினை விண்ணப்பித்து பெறுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.*

9.12 தமிழ்நாடு ஊரக மாணவர் திறனாய்வுத் தேர்வு (TRUSTS தேர்வு)

ஊரக மாணவர்களை ஊக்குவிக்கவும், அரசு வழங்கும் நன்மைகளை பயன்படுத்திக்கொள்ளவும் தமிழ்நாடு ஊரக மாணவர்களுக்கான திறனாய்வுத் தேர்வு ஆண்டுதோறும் செப்டம்பர் திங்களில் நடத்தப்படுகிறது.

நடப்புக் கல்வியாண்டில் ஊரகப் பகுதியில் ஒன்பதாம் வகுப்புப் படிக்கும் மாணவர்கள், அவர்களின் பெற்றோர் ஆண்டு வருமானம் ஒரு இலட்சத்திற்கும் மிகாமல் இருக்கும்பட்சத்தில், இத்தேர்வினை எழுத தகுதி பெற்றவர்களாவார்கள்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் 50 மாணவியர் மற்றும் 50 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, ஆண்டொன்றுக்கு ரூ.1000 வீதம் தொடர்ந்து நான்கு ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது.

9.13 தேசிய அளவிலான திறனறித் தேர்வு

தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் நடத்தப்படும் தேசிய அளவிலான திறனறித் தேர்வினை தமிழகத்தில் நடத்துவதற்கு தேர்வுத் துறை ஒருங்கிணைப்பு அங்கமாக செயல்படுகிறது. இத்தேர்வின் முதல் நிலை தமிழக அரசாலும், இரண்டாம் நிலை தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தாலும் நடத்தப்படுகிறது. நடப்புக் கல்வியாண்டில் 9 ஆம் வகுப்புத் தேர்வில் 60% பெற்று மத்திய/

மாநிலப் பள்ளிக் குழுமங்களில் 10 ஆம் வகுப்புப் பயிலும் மாணவர்கள் இத்தேர்வினை எழுதத் தகுதிப் படைத்தவர்கள் ஆவர்.

முதல் நிலைத் தேர்வுக்கான முடிவுகள் தேர்வுத் துறையால் வெளியிடப்பட்ட பின்னர் தகுதியுள்ள தேர்வர்களுக்கு தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் தேசிய அளவிலான இரண்டாம் நிலைத் தேர்வுக்கான தேர்வுகள் நடத்தப்பட்டு, தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு நேர்காணல் நடத்தப்படுகின்றது. இந்நேர்காணலில் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு 11 ஆம் வகுப்பு முதல் பி.எச்.டி. ஆராய்ச்சிப் பட்டப் படிப்பு வரை உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி, தமிழகத்தில் ஆண்டுதோறும் 40 மாணவர்கள் பயன் பெறுகின்றனர்.

9.14 தேசிய வருவாய் வழி மற்றும் தகுதிப் படிப்பு உதவித் தொகைத் திட்டம்

அரசுத் தேர்வுகள் துறையால், தேசிய வருவாய் வழி மற்றும் தகுதிப் படிப்பு உதவித் தொகை பெறுவதற்கான தேர்வு ஒன்று நடத்தப்படுகிறது. மதிப்பெண்கள் அடிப்படையிலும், இட ஒதுக்கீடு விதிகள் அடிப்படையிலும் மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

மத்திய / மாநில அரசுப் பள்ளிகள் / அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஏழாம் வகுப்பில் தேர்ச்சி பெற்று எட்டாம் வகுப்பில் பயிலும் (ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த மாணவர்கள் 50% ஏனையோர் 55% மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்) மாணவர்களது பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கும்பட்சத்தில், ஆண்டொன்றுக்கு ரூ.6,000 (மாதம் ரூ.500 வீதம்) உதவித் தொகையாக ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் தமிழகத்தில் ஆண்டுதோறும் 6,695 மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. 2012 ஆம் ஆண்டு முதல் இத்தேசிய வருவாய் வழி மற்றும் தகுதிப் படிப்பு உதவித் தொகை தேர்வு தேசிய அளவிலான திறனறிவுத் தேர்விலிருந்து பிரிக்கப்பட்டு தனியாக நடத்தப் படுகின்றது.

2013 மே 10]

9.15 மைய அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் பணியாளர் தேர்வாணையக் குழுமத்தினால் நடத்தப்படும் தேர்வுகளை நடத்துதல்

ஆண்டுதோறும் மைய அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் பணியாளர் தேர்வாணையக் குழுமத்தினால் நடத்தப்படும் தேர்வுகளை சென்னையில் நடத்துவதற்கு ஒருங்கிணைப்பு அங்கமாக அரசுத் தேர்வுகள் துறை செயல்படுகிறது. இத்தேர்வுகளில் இந்திய ஆட்சிப் பணித் தேர்வு மிகவும் பெருமைமிக்கது ஆகும். மேலும், இத்துறை ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் தேர்வுகளுக்கான மந்தணப் பணிகளுக்கு உறுதுணையாக செயல்படுகிறது.

9.16 மதிப்பெண் சான்றிதழில் பயிற்று மொழியினைக் குறிப்பிடுதல்

மாணவர்களுக்கு வழங்கப்படும் மேல்நிலை / எஸ்.எஸ்.எல்.சி / தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வு ஆகிய சான்றிதழ்களில் பயிற்று மொழியினைக் குறிப்பிட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

9.17 ஆன்லைன்மூலம் தேர்வுகளுக்கு விண்ணப்பித்தல்

ஏற்கெனவே உள்ள நடைமுறையின்படி தேர்வுகள் எழுத தனியர்கள் உரிய அலுவலகத்திலிருந்து விண்ணப்பப் படிவத்தினை பெற்று பூர்த்தி செய்து விண்ணப்பிக்க வேண்டிய நிலை இருந்தது. இதில் ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களைவதற்கும், விண்ணப்பித்தலை எளிதாக்கும் பொருட்டும் "ஆன்லைன்"மூலம் விண்ணப்பிக்கும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டு பின்வரும் தேர்வுகளுக்கு ஆன்லைன் மூலமாக விண்ணப்பங்களை விண்ணப்பிக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது:-

1. *மேல்நிலைக் கல்வி பொதுத் தேர்வு*
2. *இடைநிலைக் கல்வி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வு*
3. *மேல்நிலைக் கல்வி பொதுத் தேர்வு விடைத்தாள் மறுமதிப்பீடு/ மறுகூட்டல்*
4. *மேல்நிலைக் கல்வி பொதுத் தேர்வு விடைத்தாள் மறுமதிப்பீட்டிற்கு விடைத்தாள் அச்சுப் பகர்ப்பு நகல் கோருதல்*
5. *இடைநிலைத் தேர்வு விடைத்தாள் மறுகூட்டல்*

[2013 மே 10

மேலும், கீழ்க்கண்ட நேர்வுகளுக்கு ஆன்லைன் மூலமாக விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்துகொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது;

1. பத்தாம் வகுப்பு தனித் தேர்வர், அறிவியல் செய்முறை வகுப்பிற்கு விண்ணப்பிக்க உரிய விண்ணப்பம்
2. ஊரகத் திறனாய்வுத் தேர்வு
3. தேசிய திறனாய்வுத் தேர்வு
4. தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி படிப்புத் தேர்வு
5. புலப்பெயர்ச்சிச் சான்றிதழ், மறுபிரதிச் சான்றிதழ் மற்றும் இதரப் படிவங்கள்

9.18 மதிப்பெண் அட்டவணைப் பதிவேடுகளை மின்னணு முறையில் பராமரித்தல்

மதிப்பெண் அட்டவணைப் பதிவேடுகளை மின்னணு முறையில் பராமரிக்க 2012-2013-ல் ரூ.10 இலட்சம் அரசால் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு இடைநிலைக் கல்வி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வுக்கான மதிப்பெண் பதிவேடுகள் அக்டோபர் 1972 பருவத் தேர்வு முதலும், மேல்நிலைக் கல்வி தேர்வுக்கான மதிப்பெண் பதிவேடுகள் மார்ச் 1978 பருவம் முதலும் மின்னணு முறையில் ஆவணங்கள் மாற்றப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணி எல்காட் நிறுவனம்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

9.19 ஆன்லைன் மூலமாக மதிப்பெண் சான்றிதழின் உண்மைத் தன்மை சரிபார்த்தல்

இடைநிலை மற்றும் மேல்நிலை பொதுத் தேர்வு சான்றிதழ்களின் உண்மைத் தன்மைகளை சரிபார்ப்பதற்குரிய அதிகார அமைப்பாக அரசுத் தேர்வுகள் துறை செயல்படுகிறது. நியமன அலுவலர்கள் / கல்வி நிறுவனங்கள் மற்றும் இதர முகவான்மையிலிருந்து உண்மைத் தன்மை கோரி பெறப்படும் சான்றிதழ்களை சரிபார்ப்பதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க ஆன்லைன் மூலமாக உண்மைத் தன்மை அறியும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டமானது, எல்காட் மற்றும் தேசியத் தகவல் மையம், மாநிலத் தகவல் மையம் மற்றும்

2013 மே 10]

அரசுப் புள்ளிவிவர மையம் ஆகிய நிறுவனங்களின் ஒத்திசைவுடன் நிறைவேற்றிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆன்லைனில் உண்மைத் தன்மையைச் சரிபார்த்து அறிந்து கொள்வதற்குத் தேவையான பயிற்சி அரசுத் தேர்வுத் துறை பணியாளர்களுக்கும், கல்வி நிறுவனங்களுக்கும் அளிக்கப்பட்டு வருகிறது.

9.20 தேர்வு நடத்துதல்

அரசுத் தேர்வுத் துறையால் நடத்தப்படும் தேர்வுகளில் இடைநிலை விடுப்புச் சான்றிதழ் மற்றும் மேல்நிலைக் கல்வி பொதுத் தேர்வுகளும் அதிமுக்கியத்துவம் வாய்ந்தாகும். ஆண்டுதோறும் இலட்சக்கணக்கானோர் இத்தேர்வுகளை எழுதுகின்றனர். தேர்வு மையங்களை ஒருங்கிணைப்பது, வினாத்தாள் தயாரித்தல், பாதுகாப்புக்கான மையங்கள், மதிப்பீடு மையங்கள் தெரிவு செய்தல் ஆகிய அனைத்துப் பணிகளையும் இத்துறை மேற்கொள்கிறது.

விடைத்தாள்களை மதிப்பீட்டு மையங்களுக்குக் கொண்டு சேர்க்கும் பொறுப்பு அஞ்சல் துறைவசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச்செயல்பாட்டு முறையில் குறைபாடுகள் உள்ளன. அண்மையில் ஏற்பட்ட சம்பவங்கள் அரசுக்குக் கவலை ஏற்படுத்தியுள்ளது. பிற நிறுவனங்களின் தலையீட்டினை குறைந்தபட்சமாக்கி வினாத்தாட்களைப் பாதுகாப்பு மையத்திலிருந்து தேர்வு மையங்களுக்குக் கொண்டு சேர்ப்பது போல விடைத்தாள்களை மதிப்பீட்டு மையத்திற்கு பாதுகாப்பான முறையில் கொண்டு சேர்ப்பதை உறுதிசெய்ய விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மார்ச்/ஏப்ரல் இல், அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் நடத்தப்படும் மேல்நிலை மற்றும் இடைநிலைக் கல்வி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வுகளுக்கு, மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டு, தேர்வுகளை நல்லமுறையிலும், பொதுமக்களின் நம்பிக்கைக்கு உகந்தவகையிலும் நடத்திட கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பள்ளிக் கல்வித் துறையைச் சார்ந்த இயக்குநர்கள், இணை /துணை இயக்குநர்கள், மாவட்டங்களில் கண்காணிக்கப்பட வேண்டிய தேர்வு மையங்களைக் கண்காணித்து, தேர்வுகள் செவ்வனே நடைபெற நடவடிக்கைகள் மேற்கொள்ளும்படி

அறிவுறுத்தப்பட்டு மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். மேலும், உயர் கல்வித் துறையைச் சார்ந்த, சென்னை, அண்ணா பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் மாற்றெண் கொண்ட முக்கிய பாடங்களுக்கான தேர்வுகளைக் கண்காணிக்கும்பொருட்டு அனுப்பப்படுகிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும், முதன்மை/ மாவட்டக் கல்வி அலுவலர்கள், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் முதல்வர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் தலைமையின்கீழ் பறக்கும் படை உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு, தேர்வு மையங்கள் பார்வையிடப்படுகின்றன. இதனால், தேர்வுகளை எவ்வித புகார்களுக்கும் இடமின்றியும், சுமுகமாகவும், திறம்படவும் அரசுத் தேர்வுத் துறை நடத்தி வருகிறது.

9.21 இணையதளம்

இத்துறையால் நடத்தப்படும் பல்வேறு தேர்வுகளுக்கான கால அட்டவணை, விண்ணப்பப் படிவத்தின் மாதிரிப் படிவம், சான்றிட்ட மதிப்பெண் நகல், புலப்பெயர்ச்சிச் சான்றிதழ், மறுபிரதிச் சான்றிதழ், மாதிரி வினாத்தாட்கள், மேல்நிலைத் தேர்வு, இடைநிலைக் கல்வி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வுகளுக்கான முந்தைய ஆண்டுகளின் வினாத்தாட்கள், பத்தாம் வகுப்பு தனித் தேர்வர்களுக்கான அறிவியல் பாட செய்முறை வகுப்புக்கான விண்ணப்பம் மற்றும் அறிவுரைகள் ஆகியவை மாணவர் சமுதாயம் பயன்பெறும் வகையில் www.tn.gov.in/dge என்ற இணையதளத்தில் அரசுத் தேர்வுத் துறையால் அளிக்கப்பட்டு வருகிறது.

9.22 நிதிநிலை

2013-2014 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்படி, இத்துறைக்கென ரூ.76.30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரசுத் தேர்வுகள் இயக்குநரகம், தனது பணிகளில் நவீனத்துவத்தை புகுத்துவதன்மூலம் மாணவர்களுக்கான தேர்வு சம்பந்தப்பட்ட பணிகளில் பணியாளர்களின் தலையீட்டைக் குறைந்தபட்சமாக்கி இணையதளம் வாயிலாகத் தேர்வு முடிவுகளை விரைவாக அளித்து மாணவர்களுக்குச் சிறப்பான பணியினை செய்கிறது.

2013 மே 10]

10. பொது நூலகங்கள்

10.1 முன்னுரை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அமுத மொழியான "குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் முழுமையான வளர்ச்சியே எனது தனிப்பட்ட விருப்பமாகும். ஒவ்வொரு குழந்தையும் கற்றறிவதற்கும், நல்ல ஆரோக்கியமுள்ளவர்களாகவும் மற்றும் மகிழ்ச்சி ததும்பும் குழந்தைப் பருவம் நிறைந்தவர்களாகவும் திகழ்வதற்கு போதுமான வாய்ப்புகளை அளித்தாக வேண்டும். ஒவ்வொரு குழந்தையையும் சமுதாயத்தின் மதிப்புமிக்க சொத்தாக மாற்றுவது நமது தேவையாகும்" என்ற உயர்ந்த குறிக்கோளை நிறைவேற்றும் வகையில், தமிழகத்தில் உள்ள பொது நூலகங்கள் குழந்தைகளிடையேயும், இளைஞர்களிடையேயும், பொது மக்களிடையேயும் வாசிப்புப் பழக்கத்தைப் பேணி வளர்க்கும் மகத்தான பணியைச் செய்துவருகிறது.

ஒவ்வொரு குடிமகனின் அறிவுத் திறன், சிந்தனைத் திறன், தனித்தன்மை மற்றும் விழுமியங்கள் ஆகியவை சமுதாய முன்னேற்றத்திற்கு அடித்தளமாக அமைகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் "தமிழக தொலைநோக்கு - 2023" என்ற மகத்தான குறிக்கோளுக்கிணங்க அறிவு சார்ந்த சமுதாயத்தை உருவாக்குதல் மற்றும் மனித வளத்தை மேம்படுத்துவதற்கு தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்துவருகிறது. தமிழக மக்கள் ஆற்றல் மிக்கவராகத் திகழ, கிராமங்கள்தோறும் நூலகங்களை ஏற்படுத்தி சிறப்பான சேவையை பொது நூலகத் துறை அளித்து வருகிறது. இயற்கையின் அனைத்து படைப்புகளிலும் மனிதனே முதன்மையானவனும் சிறப்பு நிலை பெற்றவனுமாவான். சிந்திக்கத் தெரிந்தவன் மனிதன். மனிதன் தனது நவீன சிந்தனைக்கு ஏற்ப கருத்துகளை உருவாக்கி அப்புதிய கருத்துகளுக்குப் பொருத்தமான கல்வியைப் பெறுகிறான். அவ்வாறு அவன் கற்பதற்கு முதலும் மூலமாகவும், கருத்துக் கருவூலங்களாகவும் இருப்பது நூலகங்கள்.

"சமுதாய வளர்ச்சிக்கு பொது நூலகங்களின் பங்கினைக் கருத்தில் கொண்டு குறைந்த செலவில் அதிக வாசகர்களுக்கு சிறந்த வாசிப்பு வசதிகளை வழங்குதல் என்ற இலக்குடன் பொது நூலகங்களுக்கென இந்தியாவிலேயே முதன்முறையாக இயற்றப்பட்ட "தமிழ்நாடு பொது நூலகச் சட்டம், 1948-ன்படி" தமிழ்நாட்டில் தொடர்ந்து பொது நூலகங்கள் நிறுவப்படுகின்றன.

10.2 குறிக்கோள்கள்

- பொது நூலக இயக்கத்தை மக்கள் இயக்கமாகவும், சமுதாய இயக்கமாகவும் மாற்றுதல்

- 1,000-த்திற்கும்மேல் மக்கள்தொகை உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் நூலக வசதிகள் ஏற்படுத்துதல்

- நூலகங்களில் சிறந்த அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல்

- வாசகர்களுக்கு பயன்படும் வகையில் நூலகங்களுக்குத் தரமான புத்தகங்கள், நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்கள் வழங்குதல்

- நூலகச் சேவையின் தரத்தை மேம்படுத்த அனைத்து நூலகங்களையும் கணினிமயமாக்குதல்

- பழமையான மற்றும் அரிய வகை நூல்களை மின்னணு முறையில் படியெடுத்து பாதுகாத்தல்

- போட்டித் தேர்வுகளில் பங்குபெற விரும்பும் படித்த இளைஞர்களுக்குத் தேவைப்படும் படிப்பு சாதனங்கள் நிறைந்ததாக மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் வருவாய் வட்ட தலைநகரங்களில் செயல்படும் நூலகங்களை மேம்படுத்துதல்

10.3 செயல்பாடுகள்

- கிராமங்களில் உள்ள மக்களின் ஆற்றலை மேம்படுத்தும் வண்ணம், அனைவருக்கும் நூலகம் என்ற இலக்கினை அடையும் வகையில், 1,000 மக்கள் தொகைக்குமேல் உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் படிப்படியாக பகுதிநேர நூலகங்கள் திறத்தல்

- அனைத்து நூலகங்களுக்கும், தேவையான புதிய புத்தகங்கள், நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்கள், தளவாடங்கள் வழங்குதல் மற்றும் புதியதாக நூலகக் கட்டடங்கள் கட்டுதல்

- தேசிய அறிவுசார் மற்றும் தகவல் ஆணையத்தின் பரிந்துரைக்கிணங்க பொது நூலகங்களை "அறிவுசார் மற்றும் தகவல் மையங்கள்" ஆக மாற்றியமைத்தல்

2013 மே 10]

- பொது நூலகங்களில் செயல்படும் குடிமைப் பணி பயிற்சி மையங்களில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்துதல்
- அனைத்து நூலகங்களையும் இணையத்தின்மூலம் ஒருங்கிணைத்து, வாசகர்களுக்கு நூலகச் சேவையை எளிதாகவும் விரைவாகவும் சென்றடைய செய்தல்
- பழமையான மற்றும் அரிய வகை நூல்கள், மின்னணு முறையில் படியெடுத்து பாதுகாத்தல்
- பொது நூலகச் சேவையை விரிவுபடுத்தும் வகையில், புத்தகப் பதிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கத்தின் துணையுடன் புத்தகக் கண்காட்சி நடத்துதல்
- மாணவர் / மாணவியரிடையே வாசிக்கும் பழக்கத்தையும், எழுத்தாற்றலையும் மேம்படுத்தும் வகையில், அரசுப் பள்ளிகளுக்கு நூல்கள் வழங்கப்பட்டு, மாணவர்கள் படித்ததை கட்டுரையாக (புத்தக மதிப்புரைகள்) பெற்று, மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் போட்டிகள் நடத்தப்பட்டு சிறந்த கட்டுரை எழுதிய மாணவர்களுக்கு விருதுகள் வழங்குதல்
- குடிமைப் பணி மற்றும் பிற போட்டித் தேர்வுகள் எழுத விரும்பும் இளைஞர்கள் நலன் கருதி, கல்வி மையங்கள் மற்றும் பயிற்சி மையங்கள் ஏற்படுத்துதல்
- மாவட்ட மைய நூலகங்களில் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கென பாட நூல்கள் "புத்தக வங்கி" (Book Bank) சேவையை ஏற்படுத்துதல்

10.4 தமிழகத்தில் பொது நூலக இயக்ககம்

தமிழகத்தில் 1948 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் இயற்றப்பட்டபின், பொது நூலகச் சேவைகளை மேம்படுத்தும் வகையில் கிராமங்கள் உட்பட பல்வேறு இடங்களில் நூலகங்கள் திறக்கப்பட்டன. மேலும் பொது நூலகச் சேவையை மேம்படுத்தும் நோக்கில், 1972-ல் பொது நூலக இயக்ககம் உருவாக்கப்பட்டது. பொது நூலக இயக்ககத்தின்கீழ் தமிழகத்தில் தற்போது 4,093 நூலகங்கள் செயல்படுகின்றன. அதன் விவரங்கள் கீழ்வருமாறு:-

TRUTH ALONE TRIUMPHS

[2013 மே 10

வ. எண்	நூலகங்கள்	எண்ணிக்கை
1.	மாவட்ட மைய நூலகங்கள்	32
2.	கிளை நூலகங்கள்	1765
3.	ஊர்ப்புற நூலகங்கள்	1885
4.	நடமாடும் நூலகங்கள்	10
5.	பகுதிநேர நூலகங்கள்	399
6.	கன்னிமாரா (மாநில மைய) பொது நூலகம்	1
7.	அண்ணா நூற்றாண்டு நூலகம்	1
	மொத்தம்	4093

இதுமட்டுமல்லாது, அரசு உதவிப் பெறும் நூலகங்களும் தமிழகத்தில் செயல்படுகின்றன. அவற்றுள் மிகவும் புகழ் பெற்றதும், பழமையானதுமான தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி சரசுவதி மகால் நூலகம் - தஞ்சாவூர், டாக்டர் உ.வே.சாமிநாத அய்யர் நூலகம் - சென்னை மற்றும் மறைமலையடிகள் நூலகம்-சென்னை ஆகிய நூலகங்களும் அடங்கும். பொதுமக்களிடையே நூலகச் சேவை செவ்வனே சென்றடைவதை உறுதி செய்யும்வண்ணம் புதிய நூலகங்கள் திறக்கப்பட்டு, நூலகங்களுக்கு வாசகர் நலன் கருதி, தேவையான நூல்கள், நாளிதழ்கள், பருவ இதழ்கள் மற்றும் தளவாடங்கள் வழங்கப்படுகின்றன. மேலும், புதிய நூலகக் கட்டடங்களும் கட்டப்பட்டு வருகின்றன. நூலக இயக்கம் உயிரோட்டத்துடன் வலிமையாக செயல்படுவதற்கு பொதுமக்களின் பங்கினை ஊக்குவிக்கவும் மற்றும் மக்களிடையே நூலக விழிப்புணர்வு ஏற்படுத்தும்வண்ணம் நூலகப் புரவலர்கள் ஏற்கப்படுகின்றனர். படித்த இளைஞர்களுக்கும், இளஞ்சிறார்களுக்கும் பயன்படும் வகையில் நூலகச் சேவை அமைந்துள்ளது. இளைஞர்களுக்கிடையே வாசிக்கும் பழக்கத்தை தக்கவைப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

10.5 நூற்றாண்டு கண்ட கன்னிமாரா பொது நூலகம்

கன்னிமாரா பொது நூலகம் 1890 ஆம் ஆண்டு கன்னிமாரா பிரபுவால் அடிக்கல் நாட்டப்பட்டு, 5 டிசம்பர் 1896 இல் துவக்கப்பட்டது. இந்நூலகம் மாநிலத்தில் முதல் பொது நூலகம்,

2013 மே 10]

மாநில மைய நூலகம், தேசிய வைப்பு நூலகம், ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் வெளியீடுகள் வைப்பு மையம், ஆசிய வளர்ச்சி வங்கிப் பதிப்புகளின் வைப்பு மையம் என பல பெருமைகளைத் தன்னகத்தே கொண்டதாகும். இந்நூலகத்தில், சுமார் 7.50 இலட்சம் நூல்களும், 3,500 தலைப்புகளில் பருவ இதழ்களும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளன. அரிய நூல்கள் பிரிவு, குறிப்புதவி பிரிவு, பருவ இதழ் பிரிவு, நூற்றொகைப் பிரிவு, குடிமைப் பணி கல்வி மையம், இந்திய மொழிகள் பிரிவு, குழந்தைகள் பிரிவு என பல பிரிவுகளுடன் இந்நூலகம் செயல்பட்டு வருகிறது.

பழமையான மற்றும் அரிய நூல்கள், நாட்டுடைமையாக்கப் பட்ட தமிழ் நூல்களை மின்னணு முறையில் படி எடுத்து, குறுந்தகட்டில் பதிவு செய்து எதிர்காலப் பயன்பாட்டிற்கு பாதுகாக்கும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது.

2012-2013 ஆம் ஆண்டில் 3.9 இலட்சம் வாசகர்கள் இந்நூலகத்தின்மூலம் பயனடைந்துள்ளனர். இந்நூலகத்தில் 1.34 இலட்சம் பேர் உறுப்பினர்களாக சேர்ந்துள்ளனர். 2012-2013 ஆம் ஆண்டில் மைய அரசுப் பங்குத் தொகையாக திட்டத் தலைப்பில் ரூ.35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாநில அரசு பங்குத் தொகையாக திட்டத் தலைப்பில் ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கன்னிமாரா பொது நூலகத்தின் செயல்பாடுகள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. இங்குள்ள நூல்கள் பற்றிய விவரங்களை அறிந்துகொள்வதற்கான வசதி www.connemarapubliclibrarychennai.com என்ற வலைதளத்தின் வாயிலாக செய்யப்பட்டுள்ளது.

10.6 தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி சரசுவதி மகால் நூலகம் – தஞ்சாவூர்

இந்நூலகம் நாயக்கர்கள் ஆண்ட காலத்தில் 1535 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. 1918 ஆம் ஆண்டு முதல் இந்நூலகம் மாவட்ட ஆட்சித் தலைவரின் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்நூலகத்தில் சுமார் 46,000 தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் மற்றும் மராத்திய மொழிகளில் ஓலைச்சுவடிகள், கையெழுத்துப் படிகள் உள்ளன. இந்நூலகத்தில் கீழ்த்திசை ஓலைச்சுவடிகள் மற்றும் கையெழுத்துப் படிகள் உள்ளன. இந்நூலகத்தை மன்னர் சரபோஜியின் சரசுவதி மகால் மற்றும் ஆய்வு மையமாக மாற்றி சர்வதேச தரத்தில்

மின்னணு மைய நூலகமாகத் தரம் உயர்த்துவதற்காக தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வரும் தமிழ்நாடு அரசு பராமரிப்பு மானியம் ரூ.40 இலட்சத்திலிருந்து ரூ.75 இலட்சமாக உயர்த்தி வழங்க மேதகு ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டுள்ளது. 2012-2013 ஆம் ஆண்டில் மொத்தம் 12,784 பார்வையாளர்கள் இந்நூலகத்திற்கு வருகை புரிந்துள்ளனர்.

10.7 மறைமலையடிகள் நூலகம், சென்னை

கன்னிமாரா பொது நூலகத்தின் ஒரு பகுதியில் இயங்கி வரும் இந்நூலகம், தமிழக அரசிடமிருந்து ஆண்டுதோறும் ரூபாய் ஒரு இலட்சம் மானியம் பெற்று வருகிறது. ஆண்டுதோறும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆராய்ச்சியாளர்கள் இங்குள்ள அரிய பழமையான தமிழ் பருவ இதழ்களைப் பயன்படுத்தி வருகின்றனர். 2012-2013 ஆம் ஆண்டில் 1,200 ஆய்வறிஞர்கள் உட்பட 4,500 வாசகர்கள் இந்நூலகத்தைப் பயன்படுத்தியுள்ளனர்.

10.8 டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர் நூலகம், சென்னை

டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர் நூலகத்தில் 28,500 பழமையான தமிழ் நூல்களும், 2,128 ஓலைச்சுவடிகளும் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. ஆண்டுதோறும் தமிழக அரசின் மானியமாக ரூ.4.71 இலட்சம் வழங்கப்படுகின்றது. 2012-2013 ஆம் ஆண்டில் 3,000-க்கும் மேற்பட்ட ஆய்வறிஞர்கள் இந்நூலகத்தைப் பயன்படுத்தியுள்ளனர்.

10.9 இராஜா ராம்மோகன் ராய் நூலக அறக்கட்டளை, கொல்கத்தா

கொல்கத்தாவில் உள்ள இராஜா ராம்மோகன் ராய் நூலக அறக்கட்டளை மைய அரசின் கலை மற்றும் பண்பாட்டுத் துறையின்கீழ் செயல்படும் நிறுவனம் ஆகும். இவ்வறக்கட்டளை இந்தியாவிலுள்ள நூலகங்களின் வளர்ச்சிக்கு ஆண்டுதோறும் இணை மானியமும் / இணையில்லா மானியமும் அளித்து வருகிறது. இவ்வறக்கட்டளையிலிருந்து பொது நூலக இயக்ககம் ஆண்டுதோறும் மானியம் பெற்று, அதன்மூலம் கருத்தரங்குகள் / பயிற்சிகள் நடத்துதல், நூலகக் கட்டடம் கட்டுதல், சிறுவர் பிரிவு ஏற்படுத்துதல், புதிய நூல்கள் வாங்குதல், கணினிமயமாக்குதல், நூலடுக்குகள் வாங்குதல், நூலக அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2013 மே 10]

2011-2012 ஆம் ஆண்டில் அறக்கட்டளையிலிருந்து ரூ.6.63 கோடி இணை மானியம் பெற்று பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும், 2012-2013 ஆம் ஆண்டு இணை மானியம் ரூ.6.58 கோடி பெறப்பட்டு உன்னதமான நூலக மேம்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

10.10 நிதி ஆதாரம்

நூலகங்களுக்கான நிதி ஆதாரம் நூலக வரி வருவாயே ஆகும். இந்நிதியின் மூலமாகவே நூலகங்களுக்கு நூல்கள், நாளிதழ்கள், பருவ இதழ்கள் வாங்குதல், புதிய நூலகக் கட்டடம் கட்டுதல், தளவாடங்கள் வாங்குதல் போன்ற நூலக வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் நூலக வரித் தொகையினைக் கொண்டே ஊர்ப்புற மற்றும் பகுதிநேர நூலகப் பணியாளர்களின் ஊதியம் மற்றும் இதர செலவினங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ்நாடு பொது நூலகச் சட்டம், 1948-ன்படி, உள்ளாட்சி அமைப்புகளாகிய மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளில் சொத்து வரி விதிப்பில் ஒரு ரூபாய்க்கு 10 பைசா வீதம் நூலக வரியாக வசூலிக்கப்பட்டு, அந்நூலக வரியினை அந்தந்த மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட நூலக ஆணைக் குழுக்களுக்கு செலுத்தி வருகின்றன.

2012-2013 ஆம் நிதியாண்டில் மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் மூலம் ரூ.70.26 கோடி நூலக வரியாக பெறப்பட்டுள்ளது. 2012-2013 ஆம் நிதியாண்டில் தமிழகத்தில் உள்ள நூலகங்களைப் பராமரிக்கவும், நூலகச் சேவையை அளிக்கவும் ரூ.165 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2013-2014 ஆம் ஆண்டில் அரசுக்கு நூலகப் பணிக்கான செலவினம் ரூ.198 கோடி ஏற்படும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

10.11 புதிய நூலகங்கள் திறத்தல்

“அனைத்துத் துறைகளிலும் தமிழகத்தை முதன்மை மாநிலமாக்குதல்” என்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உன்னதமான குறிக்கோளை நிறைவேற்றும் வகையில் 1,000 மக்கள் தொகைக்குமேல் உள்ள கிராமங்களில் பகுதிநேர நூலகங்கள் படிப்படியாக திறக்கப்பட்டு வருகின்றன. 2012-2013 ஆம் நிதியாண்டில் 36 பகுதிநேர நூலகங்கள் திறக்கப்பட்டன.

[2013 மே 10

10.12 நூலகக் கட்டமைப்பு

தமிழகமெங்கும் 4,093 பொது நூலகங்கள் உள்ளன. இவற்றில், 286 நூலகங்கள் தனியார்களுக்குச் சொந்தமான வாடகைக் கட்டடங்களில் செயல்படுகின்றன. அனைத்து நூலகங்களையும் சொந்தக் கட்டடங்களில் செயல்படுத்துவதே பொது நூலகத் துறையின் தொலைநோக்குத் திட்டமாகும். இத்தொலைநோக்கிற்கிணங்க 2013-2014 ஆம் ஆண்டில் ரூ.25 கோடி மதிப்பீட்டில் புதிய நூலகக் கட்டடங்கள் கட்டுவதற்கும் மற்றும் ரூ.10 கோடி மதிப்பீட்டில் நூலகக் கட்டடங்களில் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

10.13 நூல்கள் வாங்குதல்

ஆண்டுதோறும் ரூ.15 கோடி மதிப்பில் "நூல் தேர்வுக் குழு" தேர்வு செய்யும் நூல்கள் பொது நூலகங்களுக்கு வாங்கப்பட்டு வருகின்றன. 2012-2013 ஆம் ஆண்டில் ரூ.21.02 கோடி மதிப்பில் 4,269 தலைப்புகளில் நூல்கள் வாங்கப்பட்டன. 2013-2014 ஆம் ஆண்டில் ரூ.25 கோடி மதிப்பில் நூல்கள் வாங்க திட்டமிடப்பட்டுள்ளது.

10.14 நூலகங்களை கணினிமயமாக்குதல்

மாண்புமிகு முதலமைச்சரின், தமிழகத்தை அறிவு சார்ந்த சமூகமாகவும், தகவல் தொழில்நுட்பத்தை ஒவ்வொரு துறையிலும் பயனுள்ள கருவியாக பயன்படுத்துவதற்கேற்ற மாநிலமாகவும் மாற்றுவதற்கான உன்னதமான குறிக்கோளை நிறைவேற்றும் வகையில், பொது மக்களுக்கு நூலகச் சேவைகள் திறம்படவும், விரைவாகவும் செயல்படும்வண்ணம், அனைத்து பொது நூலகங்களும் கணினிமயமாக்கப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே, கன்னிமாரா பொது நூலகத்துடன் மாவட்ட மைய நூலகங்கள் இணையத்தின் வாயிலாக இணைக்கப்பட்டு அந்நூலகங்களில் உள்ள நூல்களின் விவரங்களை பொது மக்கள் இணையதளம்மூலம் அறியும் வசதியும் செய்யப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து படிப்படியாக வருவாய் வட்டத் தலைநகரங்களில் செயல்படும் நூலகங்கள் மற்றும் கிளை நூலகங்களையும் கணினி மயமாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2013 மே 10]

கன்னிமாரா பொது நூலகத்தில் உள்ள அரிய நூல்களை உருபடம் (Scan) செய்து அவற்றை மின்னணு நூல்களாக மாற்றம் செய்து அனைத்து மாவட்ட மைய நூலகங்களில் வாசகர்கள் பயன்பாட்டிற்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் ரூ.1.43 கோடி மதிப்பீட்டில் டிஜிட்டல் நூலகம் கட்டப்பட்டு விரைவில் திறக்கப்படவுள்ளது.

10.15 மடிக் கணினி வழங்குதல்

நவீன தொழில்நுட்ப யுகத்திற்கு ஏற்ப, மின் ஆளுமையை செயல்படுத்துவதில் மிகுந்த முக்கியத்துவம் அளித்து வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் திருக்கரங்களால், பொது நூலகத் துறையில் பணியாற்றும் 32 இருப்பு சரிபார்ப்பு அலுவலர்களுக்கு, 22-11-2012-ல் மடிக் கணினிகள் வழங்கப்பட்டன. மடிக் கணினிகள்மூலம் இருப்பு சரிபார்க்கும் பணி எளிமையாக்கப்பட்டு விரைவுபடுத்தப்பட்டுள்ளது.

10.16 குடிமைப் பணி மற்றும் போட்டித் தேர்வு கல்வி மையங்கள்

குடிமைப் பணி தேர்வுகளில் பங்கெடுக்க விரும்பும் இளைஞர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் போட்டித் தேர்வுகள் பல நடத்தி அதன்மூலம் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற்றுவருகின்றனர். பெருவாரியான படித்த இளைஞர்களின் நலன் கருதி கன்னிமாரா பொது நூலகம், மாவட்ட மைய நூலகங்கள், வட்டத் தலைநகர் மற்றும் நகராட்சிகளில் அமைந்துள்ள 150 நூலகங்கள் மற்றும் சிறிய நகரங்களில் அமைந்துள்ள 50 நூலகங்களில் மேற்கோள் நூல்கள் வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் 233 நூலகங்களில் குடிமைப் பணி மற்றும் போட்டித் தேர்வு கல்வி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. போட்டித் தேர்வு எழுதும் இளைஞர்களின் நலனை முன்னிட்டு இம்மையங்களில் போட்டித் தேர்வுகளுக்கான நூல்கள், தினசரிகள், பருவ இதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் இணையதள வசதி மற்றும் குளிர்சாதன வசதிகள் ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இம்மையங்களுக்கு மேற்கண்ட வசதிகளை வழங்குவது மட்டுமின்றி போட்டித் தேர்வுக்கு தயார் செய்யும் இளைஞர்களுக்கு

[2013 மே 10

பயிற்சி அளிக்கும் வகையில் முதற்கட்டமாக மூன்று மாவட்ட மைய நூலகங்களில் பயிற்சி மையம் அமைக்கப்படவுள்ளது. படிப்படியாக அனைத்து மாவட்ட மைய நூலகங்களில் இம்மையம் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

10.17 நூலகர்களுக்கான பயிற்சி மற்றும் கருத்தரங்கு

கொல்கத்தாவில் உள்ள இராஜா ராம்மோகன் ராய் நூலக அறக்கட்டளை, இணை மானிய நிதியுதவியின்கீழ் 2012-2013 ஆம் ஆண்டில், எட்டு மையங்களில் ரூ.8 இலட்சம் செலவில் 320 நூலகர்களுக்கு பணியிடைப் பயிற்சிகள் நடத்தியது. மேலும், ஒன்பது மையங்களில் 900 நூலகர்களுக்கு ரூ.9 இலட்சம் செலவில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. இவ்வாறான புத்துணர்வுப் பயிற்சிகள் மற்றும் கருத்தரங்குகள் 2013-2014 ஆம் ஆண்டிலும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் பொது நூலக இயக்ககத்தில் நூலகவியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

10.18 டாக்டர் எஸ்.ஆர். அரங்கநாதன் விருது

நூல்களையும், வாசகர்களையும் இணைக்கும் உன்னதமான பணியினை மேற்கொண்டு வரும் நூலகர்களைக் கௌரவிக்கும் வகையிலும், நூலகர்கள் பணியினை ஊக்குவிக்கும் வகையிலும் ஒவ்வொரு ஆண்டும் டாக்டர் எஸ்.ஆர். அரங்கநாதன் விருது வழங்கப்பட்டு வருகிறது. 2011 ஆம் ஆண்டு வரை "நல்நூலகர் விருது" என்ற பெயரில் வழங்கப்பட்டு வந்த விருது இந்திய நூலகத் தந்தை எனப் போற்றப்படும் டாக்டர் எஸ்.ஆர். அரங்கநாதன் அவர்களைக் கௌரவிக்கும் வகையில் 2012 ஆம் ஆண்டு முதல் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தலைமையிலான தமிழக அரசு "டாக்டர் எஸ்.ஆர். அரங்கநாதன் விருது" என்ற பெயரில் விருது வழங்கி வருகிறது. ஒவ்வோர் ஆண்டும் சிறப்பாக சேவையாற்றும் நூலகர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. தேர்ந்தெடுக்கப்படும் நூலகர்களுக்கு வெள்ளிப் பதக்கத்துடன் ரூ.2,000 பண முடிப்பும் வழங்கப்படுகிறது.

10.19 கேடயம் வழங்குதல்

நூலக உறுப்பினர்களை அதிகரித்தல், நூல்கள் அதிகரித்தல், வாசகர்கள் அதிகரித்தல், நூலகப் பயன்பாடு அதிகரித்தல், புரவலர்கள் அதிகரித்தல் போன்ற பணிகள் ஒரு நூலகத்தின்

2013 மே 10]

வளர்ச்சியை நிர்ணயிக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, பொது நூலக இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றுவதற்கு தூணாக உள்ள நூலகரின் பணியினை ஊக்குவிக்கும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் நிறுவப்பட்ட சிறப்பு கேடயங்கள் 2012 ஆம் ஆண்டு முதல், மாநில அளவில் அதிக உறுப்பினர்கள், புரவலர்கள் மற்றும் அதிக நன்கொடைகள் (தளவாடங்கள், காலி மனைகள், கட்டடங்கள்) கொண்ட மாவட்ட மைய நூலகம், கிளை நூலகம் மற்றும் ஊர்ப்புற நூலகங்களின் சார்பாக அந்தந்த நூலகர்களுக்கு வழங்கப்படுகின்றன.

10.20 சிறைச்சாலை நூலகம்

மாவட்டம் மற்றும் வட்டத் தலைநகரங்களில் சிறைகளிலுள்ள சிறைவாசிகளுக்கு நற்சிந்தனையைத் தூண்டும் பயனுள்ள நூல்களை பொது நூலகங்கள் வழங்கி வருகின்றன.

10.21 மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்கான நூலகப் பிரிவு

மாற்றுத் திறன் கொண்டவர்கள் தங்கள் வாழ்வில் சிறந்தோங்க பல்வேறு சிறப்புத் திட்டங்களை அறிவித்துள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் அறிவித்துள்ளபடி, மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்கிடையே வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்தும் வகையில், கோயம்புத்தூர் மாவட்ட மைய நூலகத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்கான தனிப் பிரிவு விரைவில் தொடங்கப்பட உள்ளது. இது பிற மாவட்ட மைய நூலகங்களுக்கு படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

10.22 புரவலர் சேர்க்கை

பொது நூலகத் துறையின்கீழ் செயல்படும் நூலகங்களில் ரூ.10,000 நன்கொடையாக வழங்கியவர்கள் கொடையாளர்களாகவும், ரூ.5,000 நன்கொடை வழங்கியவர்கள் பெரும் புரவலர்களாகவும், ரூ.1,000 நன்கொடை வழங்கியவர்களை புரவலர்களாகவும் தங்களை இணைத்து கொண்டு பொது நூலகங்களின் வளர்ச்சியில் பங்கு பெறுகின்றனர்.

தமிழகத்தில் கொடையாளர்களாகவும், பெரும் புரவலர்களாகவும், புரவலர்களாகவும் 65,282 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

[2013 மே 10

10.23 வாசகர் வட்டம்

நூலக வளர்ச்சிப் பணிகளில் பொது மக்கள் பங்கேற்கும் வகையில் ஒவ்வொரு நூலகத்திலும் கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், நூலக உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் முக்கிய பிரமுகர்களைக் கொண்டு "வாசகர் வட்டம்" என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாசகர் வட்டம் வாயிலாக நூலகச் செயல்பாட்டை மேம்படுத்தவும், மக்களிடையே வாசிக்கும் பழக்கத்தை மேம்படுத்தவும் புதிய நூல்கள் அறிமுகம், இலக்கியச் சொற்பொழிவு, புத்தகக் கண்காட்சி, பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, வினாடி-வினா போட்டிகள் உள்ளிட்ட பல விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நூலகங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

10.24 விழாக்கள்

பொது மக்களிடையே நூலக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 14 முதல் 20 வரை தேசிய நூலக வார விழாவாகவும், நூலகத் தந்தை டாக்டர் எஸ்.ஆர். அரங்கநாதன் அவர்களைக் கௌரவிக்கும் வகையில் அவரது பிறந்த நாளான ஆகஸ்ட் 12 ஆம் தேதியினை நூலகர் தினமாகவும் மற்றும் உலகப் புத்தக தினம், மகளிர் தினம் போன்ற விழாக்களும் நூலகங்களில் கொண்டாடப்பட்டு வருகின்றன.

எனவே, அனைத்து தரப்பு மக்களுக்கும் நூலகச் சேவை சென்றடையும் வகையில் நூல்களையும், வாசகர்களையும் இணைக்கும் வகையில் பொது நூலகங்கள் நூல்களை வாங்கி வாசகர்களிடம் கொண்டு போய் சேர்க்கும் பாலமாக இருந்து மிகப் பெரிய பணியை செய்து வருகின்றன.

10.25 உங்கள் நூலகம் உங்கள் குடியிருப்பில்

"உங்கள் நூலகம் உங்கள் குடியிருப்பில்" எனும் புதிய திட்டம் மூலம் வாடகையில்லா கட்டடம் வழங்க முன்வரும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் / சங்கங்கள்மூலம் "நூல் வழங்குமுனை" ஏற்படுத்துதல்.

10.26 வரவு–செலவுத் திட்ட ஒதுக்கீடு

2012-2013 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இவ்வியக்ககத்திற்கு ரூ.49.63 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2013-2014 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில்

2013 மே 10]

இவ்வொதுக்கீடு அதிகப்படுத்தப்பட்டு ரூ.63.16 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சமுதாய முன்னேற்றத்திற்குப் பொது நூலகங்களின் பயன் மகத்தானது. பொது நூலக இயக்ககம் என்பது மக்கள் இயக்கமாகும். குழந்தைகள் முதல் முதியோர்கள் வரை வாழ்நாள் முழுவதும் சுயமாகக் கற்கும் வகையில் போதுமான மற்றும் பொருத்தமான படிக்கும் சாதனங்கள், நவீன தொழில்நுட்ப வசதிகளுடன்கூடிய சிறந்த உட்கட்டமைப்பு வசதிகள் இவ்வியக்கம் மூலம் ஏற்படுத்தப்படுகிறது. சிறந்த இலக்கியங்கள் தோன்றுவதற்கும், பொது மக்களின் வாசிப்புத் தன்மையை உயர்த்துவதற்கும் பொது நூலக இயக்ககம் சமுதாய இயக்கமாக திகழ பொது நூலகத் துறை செவ்வனே செயலாற்றி வருகிறது.

11. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்

11.1 முன்னுரை

கல்விச் சீர்திருத்த நடவடிக்கைகளில் திறனுடன் பங்காற்றுவதற்கும், கல்விசார்ந்த பணிகள் சிறந்து விளங்கவும் தமிழக அரசு, தொடர்ந்து முற்போக்குக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தி வருகிறது. ஆசிரியர்கள் வாழ்நாள் முழுவதும் படிப்பவராக விளங்கவும், அவர்களுக்கு உறுதுணையாக புதிய அமைப்புகளை உருவாக்கவும் மற்றும் நிறுவனச் செயல்பாடுகளை மேற்கொள்ளவும் இக்கொள்கைகள் ஆதரவு அளிக்கின்றன. இதனை நடைமுறைப்படுத்தும் விதமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உள்ளார்ந்த தொலைநோக்குப் பார்வைக்கிணங்க மாநில அரசு, 26-3-2012 அன்று ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சி இயக்ககத்தை (DTERT) மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனமாகத் (SCERT) தரம் உயர்த்தியுள்ளது. இதனால், ஆசிரியர்களின் திறமை மற்றும் பள்ளிக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் வகையில் ஆராய்ச்சிகள் மற்றும் வளர்ச்சிச் செயல்பாடுகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சட்டமன்றப் பேரவையில் கல்வித் துறையை மேம்படுத்த பல்வேறு சீர்திருத்தங்களையும், மதிப்பீட்டு முறையில் மாற்றங்களையும் மேற்கொள்ள வேண்டுமென அறிவித்தார்கள். தமிழகக் கல்வி வரலாற்றில் ஒரு மைல் கல்லாக முப்பருவ முறை மற்றும் தொடர் மற்றும்

[2013 மே 10

முழுமையான மதிப்பீட்டு முறையை முதல் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை 2012-2013 ஆம் கல்வியாண்டிலிருந்தும், ஒன்பதாம் வகுப்புக்கு 2013-2014 ஆம் கல்வியாண்டிலும் நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டு நடைமுறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பள்ளிக் கல்வியில் தற்போது நடைமுறையில் உள்ள புத்தகச் சுமை, பாடச் சுமை, மன அழுத்தம் முதலியவற்றைப் போக்குவதற்குரிய சீர்திருத்தமாக முப்பருவ முறையும் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. பாடப் புத்தகங்கள் இதுவரையில் இல்லாத அளவில் சிறு அளவிலான புத்தகங்களாக இரண்டே தொகுதிகளாக ஒருங்கிணைக்கப்பட்டு மாணவர்கள் மகிழும்வண்ணம் அளிக்கப்பட்டுள்ளன.

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம், ஓர் இயக்குநரின் தலைமையில், 4 இணை இயக்குநர்கள், 1 துணை இயக்குநர், 21 உதவிப் பேராசிரியர்கள் மற்றும் 47 அமைச்சுப் பணியாளர்களுடன் செயல்படுகிறது. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் விரிவான ஆய்வுப் பணிகளைத் திட்டமிட்டு மாநில அளவில் ஆய்வுகள் (Researches) மதிப்பாய்வுகள், கணக்காய்வுகள் (Surveys) செய்து, தமிழகத்தின் வருங்காலக் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கும், முடிவுகள் எடுப்பதற்கும் உதவியாக உள்ளது. இந்நிறுவனத்தின் அமைப்பு முறையை மாற்றி கலைத் திட்டப் பிரிவு, ஆசிரியர் கல்விப் பிரிவு, கணினிவழிக் கல்விப் பிரிவு, சிறப்புத் தேவைகளுக்கான பிரிவு, நூலக மற்றும் ஆவணப் பிரிவு ஆகியவை உருவாக்கப்பட உள்ளன. தேசிய ஆசிரியர் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்திற்கு இணையாக, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் ஆய்வுகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனக் கட்டுப்பாட்டின்கீழ் 30 மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்கள், 9 அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள், 722 கல்வியாளர்கள், 508 ஆசிரியரல்லாத பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன. மேலும் 42 உதவி பெறும் ஆசிரியப் பயிற்சி நிறுவனங்கள், 544 தனியார் சுயநிதி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் ஆகியவை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவன மேற்பார்வையில் இயங்கி வருகின்றன. இவற்றுள் 625 நிறுவனங்களில் 43,000 மாணவர்கள் இரண்டாண்டு ஆசிரியப் பட்டயப் பயிற்சிப் படிப்பைப் படித்து வருகிறார்கள்.

2013 மே 10]

11.2 தொலைநோக்கு

- மழலையர் கல்வி முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை மாணவர்களுக்குத் தரமான கல்வியை அளித்தல்
- கலைத் திட்டத்தைத் திட்டமிட்டு வடிவமைத்தலும் குழந்தைகள் மையக் கற்பித்தல் நெறிமுறைகளை வகுத்தளித்தலும், அதற்கேற்ற பாடத் திட்டம் மற்றும் பாடநூல்களைத் தயாரித்தலும், குழந்தைகளுக்கு இணக்கமான தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையினைச் செயல்படுத்துவதற்கும் வாய்ப்பேற்படுத்துதல்
- தரமான பணிமுன் மற்றும் பணியிடைப் பயிற்சிகள் வாயிலாக ஆசிரியர்களின் தரத்தை மேம்படுத்துதல்
- பயிற்சிசார்ந்த ஆய்வுகள், புதியன படைத்தல், சிறப்பு அணுகுமுறைகளைப் பகிர்தல்
- தேசிய அளவிலான மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள் வாயிலாகக் கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளுதல்
- தமிழ்நாட்டில் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்குரிய ஆய்வுகளை மேற்கொள்ளுதல்

11.3 குறிக்கோள்கள்

- தொடக்கக் கல்வி இயக்ககம், பள்ளிக் கல்வி இயக்ககம், அனைவருக்கும் கல்வி இயக்கம், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் ஆகியவற்றுடன் இணைந்து, பள்ளிகளில் சேரும் ஒவ்வொரு குழந்தையும் முனைப்போடு இருக்கும் வகையில், அவர்களது கற்றல் மற்றும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வள ஆதாரங்கள் கொண்ட நிறுவனமாக ஒவ்வொரு பள்ளியையும் உருவாக்குதல்
- முதல் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை குழந்தை மையக் கல்விக்கான பாடத் திட்டத்தை வடிவமைப்பதற்கும், ஆசிரியர் கல்விக்கான கலைத் திட்டம் மற்றும் பாடத் திட்டம் மற்றும் தற்போதுள்ள கற்பித்தல் முறையில் பழையனவற்றைப் போக்கிப் புதியனவற்றைக் காலத்திற்கேற்ப மாற்றுவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளுதல்

[2013 மே 10

- தமிழகத்திலுள்ள அனைத்துக் கல்வி அலுவலர்களுக்கும் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைகளை எடுத்துரைத்து அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப வள ஆதாரங்களை அளித்தல்

- கல்வியில் எல்லா நிலைகளிலும் தர மாற்றத்தையும், வளர்ச்சியையும் ஏற்படுத்தி மாநில அரசின் கொள்கைகளைப் பிரதிபலிக்கச் செய்தல்

- கல்விக் களத்திலுள்ள அனைவருக்கும் கல்விச் செயல்பாடுகளை மேற்பார்வையிடுவதற்கான ஆதரவு நல்குதல், கல்வியியல் ஆய்வு மற்றும் கல்வி விரிவாக்கப் பணிக்கு ஆதரவு நல்குதல்

- குழந்தைகளின் முழு ஆளுமைத் திறனை வளர்ப்பதற்காக மாநில அரசின் கல்வி வளர்ச்சிக் கொள்கை மற்றும் நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்த கல்வித் துறைசார்ந்த அனைத்து இயக்ககங்களுக்கும் உதவி புரிதல்

- பள்ளித் தலைமை ஆசிரியர்களைப் பள்ளிகளில் கற்றல்—கற்பித்தலை மேற்பார்வையிடுபவராக உயர்த்தி, பள்ளிக் கல்வியின் அனைத்து மட்டத்திலும் தரமான கல்வியை உறுதிப்படுத்துதல்

- அரசு மற்றும் அரசு நிதியுதவிப் பள்ளிகளில் சேரும் மாணவர்கள் அனைவருக்கும் தொடக்கக் கல்வி மற்றும் இடைநிலைக் கல்வியினை உறுதி செய்தல்

- அனைத்துத் தரப்புக் குழந்தைகளுக்கும் சமத்துவம் மற்றும் சமூக நீதி கிடைக்கப்பெறுவதை உறுதி செய்யும் வகையில் ஆசிரியர்களுக்குத் தரமான பயிற்சிகளை வழங்குதல்

- இந்நிறுவனத்தின்கீழ் இயங்கும் மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்களை, மாவட்டக் கல்வி வள மையங்களாகவும், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்தின் பயிற்சி விரிவாக்க மையங்களாகவும் ஆராய்ச்சி நிறுவனமாகவும் செயல்படும் வகையில் அவற்றின் தரத்தை மேம்படுத்துதல்

2013 மே 10]

- அனைவருக்கும் கல்வித் திட்டம் மற்றும் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ்ப் பயிற்சித் திட்டங்களை வடிவமைத்தல் மற்றும் மாவட்ட அளவிலான பயிற்றுநர்கள், மாநில அளவிலான கல்வியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்

- தேசிய ஆசிரியர் கல்விக் கலைத் திட்டம், 2009-இன்படி, உயர்கல்வி நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட்டு ஆசிரியர் கல்விக் கலைத் திட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வருதல்

- தொடக்கக் கல்வி நிலையில் ஆசிரியர் கல்விக்கான வள நூல்களைத் தற்போது அரசு அறிவித்துள்ள மதிப்பீட்டுச் சீர்திருத்தங்களை உள்ளடக்கி மாற்றியமைத்தல் (எ.கா.-தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு)

- நாட்டிலுள்ள சிறந்த கல்வி நிறுவனங்களான தேசிய கல்வி ஆராய்ச்சி பயிற்சி குழுமம் (NCERT), மண்டல கல்வி நிறுவனம் (RIE), NUPEA, ஏகலைவா, (மத்தியப் பிரேதசம்), டாடா சமூக அறிவியல் நிறுவனம், மும்பை (Tata Institute of Social Sciences, Mumbai) ஹோமி பாபா அறிவியல் நிறுவனம், மும்பை (Homi Baba Institute of Science, Mumbai) இராமானுஜம் கணித நிறுவனம், சென்னை (Ramanujan Institute of Mathematics, Chennai) போன்ற நிறுவனங்களோடு இணக்கமான தொடர்பினை ஏற்படுத்தி அதன்மூலம் கிடைக்கும் வளங்களைக் கொண்டு, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்களில் பணியாற்றும் கல்வியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் தொழில் முறைமையை இன்றைய நிலைக்கேற்றவாறு மேம்படுத்துதல்

- சிறந்த வகுப்பறைச் செயல்பாடுகளின் அனுபவங்களை, அனைத்து ஆசிரியர்களும் பின்பற்றக்கூடிய வகையில் எடுத்துரைத்தல்

- மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்கள், வட்டார வள மையங்கள், குறுவள மையங்கள் வாயிலாக ஆசிரியர்களுக்கு உதவும் வகையில் வகுப்பறை சிக்கல்களைத் தீர்க்க உதவும் செயலாய்வுகளை மேற்கொள்ளச் செய்தல்

- ஆசிரியர்களுக்குக் கணினிவழித் தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பம் சார்ந்த புள்ளிவிவரத் தகவல்களை மேலாண்மைச் செய்வதற்குப் பயிற்சியளித்து அவர்களின் விவரங்களைப் பதிவுசெய்தல். அவ்வாசிரியர்களின் அறிவுசார்திறன், மனப்பான்மை மற்றும் கற்பித்தல் அணுகுமுறையில் மாற்றம் ஏற்படுத்துவதற்குரிய கல்வி சார்ந்த ஆதரவு அளித்தல்
- கல்வியியல் ஆய்வு முடிவுகளையும் புதிய கண்டுபிடிப்புகளையும் பரவலாக்கும் மையமாகச் செயல்படுதல்

11.4 கல்வி முறையை மேம்படுத்துவதற்கான வல்லுநர் குழு அமைத்தல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சட்டசபையில் தற்போதுள்ள கல்வி முறையை மாற்றியமைக்கவேண்டும் என அறிவித்தார்கள். அதற்கேற்றபடி, தமிழக அரசு, மாண்புமிகு தமிழகப் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் உள்ளிட்ட 9 பேர் கொண்ட கல்வி முறையை மேம்படுத்துவதற்கான வல்லுநர் குழு ஒன்றினை நியமித்தது. இந்த வல்லுநர் குழுவினரால் கீழ்க்கண்ட மூன்று துணைக் குழுக்கள் பரிந்துரைக்கப்பட்டன:-

1. தமிழ்நாடு பள்ளிக் கல்வித் திட்ட வடிவமைப்புக் குழு
2. மேனிலைக் கல்விப் பாடத் திட்டத்தை மாற்றியமைத்தல் குழு
3. தேர்வு முறைகளை மாற்றியமைத்தல் குழு

11.5 கல்வியியல் சீர்திருத்தங்கள் மற்றும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்தின் பயிற்சி செயல்பாடுகள்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழகச் சட்டமன்றப் பேரவையில் பாடப் புத்தகச் சுமையைக் குறைக்கவும், மன அழுத்தத்தை நீக்கவும் வெளியிட்ட அறிவிப்புக்கு இணங்க, தமிழக அரசு கீழ்க்காண் கல்விச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளத் திட்டமிட்டது.

11.5.1 முப்பருவ முறை (Trimester Pattern)

தமிழகம் தரமான கல்வி நிலையை எட்டுவதற்கு மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனமானது (SCERT),

2013 மே 10]

முப்பருவமுறை உள்ளிட்ட பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இப்புதிய திட்டத்தின்படி, மாணவர்களின் புத்தகச் சுமையையும், பாடச் சுமையையும் குறைத்து, மாண்புமிகு முதலமைச்சரின் தொலைநோக்குத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. 2012-2013 ஆம் ஆண்டில் முதல் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பாடப் புத்தகங்கள் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, அந்த ஒவ்வொரு பகுதிக்குமான பாடப் புத்தகங்கள் ஒவ்வொரு வகுப்புக்கும் இரு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மொழிப் பாடங்கள் (தமிழ், ஆங்கிலம்) ஒரு தொகுதியாகவும், கணக்கு, அறிவியல், சமூக அறிவியல் பாடங்கள் ஒரு தொகுதியாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. 2013-2014 ஆம் கல்வியாண்டில் 9 ஆம் வகுப்புக்குரிய பாடநூல்களை முப்பருவ முறைக்கேற்ப பிரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

11.5.2 தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு (Continuous and Comprehensive Evaluation- CCE)

தமிழக அரசானது, பள்ளிகளில் தரமான கல்வி அளிக்க உறுதி பூண்டுள்ளது. அத்தரத்தினை மேம்படுத்த மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம், முதல் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரையுள்ள அனைத்து வகைப் பள்ளி ஆசிரியர்களுக்கும், தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையில் கற்பித்தல் திறனை மேம்படுத்த பல்வேறு பயிற்சிகளை வடிவமைத்து அளித்து வருகிறது. தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றும் 1,14,402 இடைநிலை ஆசிரியர்களுக்கும், நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேனிலைப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை கற்பிக்கும் 82,492 ஆசிரியர்களுக்கும் ஏற்கெனவே பயிற்சி அளிக்கப்பட்டு தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

11.6 பாடநூல்களின் தரத்தை மேம்படுத்துதல்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம், நடைமுறையில் உள்ள பாட நூல்களின் தரத்தை மேம்படுத்தும் பொறுப்பை ஏற்றுள்ளது. தொடர் கூட்டங்கள் நடத்தப்பட்டு பாடநூல்களிலுள்ள எழுத்துப் பிழைகள், கருத்துப் பிழைகள், தொடரமைப்புப் பிழைகள் முதலியவை கண்டறியப்பட்டன. அந்தந்த பாடத்திற்கான சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் வல்லுநர்கள்

அடங்கிய குழு இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டது. இறுதியாகச் சரிபார்க்கப்பட்ட பருவவாரியான பாடப் புத்தகங்கள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

11.6.1 சாதிகளற்ற சமத்துவ சமுதாயம் (Casteless Society) மற்றும் பல்லூடகப் பாதுகாப்புச் (Cyber Safety) சார்ந்த பாடப் பொருள்களைப் பாடநூல்களில் சேர்த்தல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சியர்களின் மாநாட்டுக் கூட்டத்தில் அறிவித்தபடி, இனவேறுபாடற்ற சமுதாயம் மற்றும் பல்லூடகப் பாதுகாப்புச் சார்ந்த கருத்துகளைப் பாட நூல்களில் சேர்ப்பதற்குரிய பாடப் பொருள்களை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் தயாரித்துள்ளது. இவை 2013-2014 ஆம் ஆண்டு பாடப் புத்தகங்களில் இடம்பெறும்.

11.6.2 குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 மற்றும் தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011 ஆகியவை சார்ந்த பயிற்சிகள்

2012-2013 ஆம் கல்வியாண்டில், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம், குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்விச் சட்டம், 2009 மற்றும் தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011 ஆகியவற்றில் கல்வித் துறை சார்ந்த 1,92,958 தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்-ஆசிரியர் கழக உறுப்பினர்கள், மாவட்ட அளவிலான அலுவலர்கள், ஒன்றிய அளவிலான அலுவலர்கள் என கல்வித் துறையில் பணியாற்றும் அனைவருக்கும் விழிப்புணர்வுப் பயிற்சியை அளித்துள்ளது. இப்பயிற்சியினால் குழந்தைகளுக்கான கல்வி உரிமைகள் மீறப்படுவதைத் தடுப்பதற்கான ஆற்றல், கல்வி அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், காவல் துறை அலுவலர்கள் 60 பேரும், வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள் 64 பேரும் கல்வி உரிமைச் சட்டப் பயிற்சி பெற்றதனால், அவர்கள் தத்தம் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில், கல்வி மறுப்புப் புகார்களின்மீது உரிய நடவடிக்கைகளைத் திறமையாக மேற்கொள்வார்கள். "குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009" மற்றும் "தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011" பற்றிய பயிற்சிக் கையேடும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்தால் உருவாக்கப்பட்டன.

2013 மே 10]

11.6.3 குழந்தைப் பாதுகாப்பு மற்றும் பாலியல் கொடுமைத் தடுப்புப் பயிற்சி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், குழந்தைகளின் பாதுகாப்பு குறித்து ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளார்கள். குழந்தைகளின் உரிமையைப் பாதுகாப்பது மற்றும் இளம் சிறார்களைப் பாலியல் ரீதியாக தவறாகப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கான வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கையாகத் தவறிழைக்கும் ஆசிரியர்களுக்குத் தண்டனையாக கட்டாய ஓய்வு, பணி நீக்கம் அல்லது பணியறவு மற்றும் அவர்களது ஆசிரியர் தொழில் புரிவதற்கான கல்விச் சான்றுகளை இரத்து செய்வது உள்ளிட்ட நடவடிக்கை எடுப்பதற்கு மாநில அரசு ஆணையிட்டுள்ளது. இவ்வரசாணை சார்ந்து 32 மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள், 15 மெட்ரிகுலேஷன் பள்ளி ஆய்வாளர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட 32 மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்களுக்குக் குழந்தைகளின் பாதுகாப்புக் கருதி இவ்வாணையினை வலுவாகச் செயல்படுத்துவதற்கு விழிப்புணர்வுப் பயிற்சி அளிக்கப்பட்டது.

11.6.4 புதிதாக நியமனம் செய்யப்பட்ட உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கான நுழைநிலைப் பயிற்சி

தமிழக அரசானது, அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கான நலத் திட்டங்கள் முறையாகச் சென்றடைகின்றனவா என்பதைத் தீவிரமாகக் கண்காணித்து வருகிறது. அதனடிப்படையில், புதிதாகப் பணியேற்ற 34 உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கு, அனைத்து அரசு நலத் திட்டங்கள், மதிப்பீட்டு முறை, மேற்பார்வையிடுதல் முதலியவை சார்ந்து, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் நுழைநிலைப் பயிற்சியை அளித்துள்ளது. இதனால், ஒன்றிய அளவில் செயல்படும் அலுவலர்களின் பணித் தர மேம்பாடு உறுதி செய்யப்பட்டுள்ளது.

11.7 பணி மேம்பாட்டுப் பயிற்சித் திட்டங்கள்

11.7.1 உயர் தொடக்க மற்றும் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கான சுற்றுச்சூழல் விழிப்புணர்வுப் பயிற்சி

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், அனைவருக்கும் கல்வி இயக்ககத்தின் ஒத்துழைப்புடன் சுற்றுச்சூழல்

[2013 மே 10

விழிப்புணர்வுப் பயிற்சி நடத்தியது. 30 மாவட்டங்களைச் சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட 90 ஆசிரியர்களுக்கு முதன்மைக் கருத்தாளர் பயிற்சி அளித்துள்ளது. இப்பயிற்சி பெற்ற ஆசிரியர்கள்மூலம் உயர் தொடக்கப் பள்ளி மாணவர்கள் சுற்றுச்சூழல் சார்ந்த நிகழ்வுகளைப் புரிந்துகொண்டு எதிர்காலத்தில் அவர்கள் சுற்றுச்சூழல் குறித்த முடிவுகள் எடுப்பதில் சிறந்து விளங்குவார்கள். இப்பயிற்சி குறு வள மையங்கள்மூலம் 1,40,000 தொடக்கப் பள்ளி ஆசிரியர்களைச் சென்றடைந்தது.

11.7.2 உள்ளடங்கிய கல்வி – முதன்மைக் கருத்தாளர் பயிற்சி

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கற்றல் குறைபாடுகளுடைய குழந்தைகளின் கல்வித் தேவைகளை நிறைவேற்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு, உள்ளடங்கிய கல்வியை வழங்குவதற்கு மாநில கல்வித் துறைக்கு அறிவுறுத்தியுள்ளார்கள். மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கற்றலில் குறைபாடுகளுடைய குழந்தைகளுக்கான கற்றல்-கற்பித்தல் முறைகளில் சிறப்புக் கவனம் செலுத்த பரிந்துரைத்துள்ளார்கள். மன வளர்ச்சி குன்றிய, நுண்ணறிவுத் திறன் குறைந்த மற்றும் கற்றல் குறைபாடுகள், புற உலகச் சிந்தனை அற்ற குழந்தைகளிடம் சிறப்புக் கவனம் செலுத்த உள்ளடங்கிய கல்விப் பயிற்சியை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் திட்டமிட்டு நடத்தியது. 31 சிறப்பு ஆசிரியர்களுக்கும், 30 வட்டார வள மைய ஆசிரியப் பயிற்றுநர்களுக்கும், 30 மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனக் கல்வியாளர்களுக்கும் முதன்மைக் கருத்தாளர் பயிற்சி அளிக்கப்பட்டது. முதன்மைக் கருத்தாளர்கள் பெற்ற இப்பயிற்சி, அடுத்தடுத்த நிலைகளில் குறு வள மையங்களின் வாயிலாக, அனைத்துத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களையும் சென்றடைய உள்ளது. இதன் தொடர்ச்சியாக, அனைவருக்கும் கல்வி இயக்கமானது, கற்றல் குறைபாடுடைய குழந்தைகளுக்கெனச் சில கற்றல் கருவிகளை அளித்து வருகிறது. சிறப்பு ஆசிரியர்கள் மூலமாகத் தொடக்க மற்றும் உயர் தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்கப்படவுள்ளது. அனைத்துக் கற்றல் குறைபாடுள்ள குழந்தைகளுக்கும் கற்பித்தலில் சம வாய்ப்பு ஏற்படுத்தும் பொருட்டு ஆசிரியர்களுக்கும் ஆண்டு முழுவதும் பயிற்சி நடத்தப்படுகிறது.

2013 மே 10]

11.7.3 எளிமைப்படுத்தப்பட்ட செயல்வழிக் கற்றல் பயிற்சி

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள், வட்டார வள மைய ஆசிரியப் பயிற்றுநர்கள், ஆசிரியர்கள் உடன் இணைந்து நடத்திய தொடர் கருத்தரங்கிற்குப் பின் தொடக்க வகுப்புகளில் மாணவர்களின் அடிப்படை எழுத்தறிவு, எண்ணறிவு மற்றும் பாடப் பொருளைப் புரிந்துகொள்ளுதலை எளிதாக்குவதற்குச் செயல்வழிக் கற்றலின் கற்றல் அட்டைகளின் எண்ணிக்கை மற்றும் சின்னங்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டு குழந்தைகள் சுமையின்றிக் கற்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இச்சீர்செய்யப்பட்ட அட்டைகளில் உயர் சிந்தனைத் திறனை வளர்க்கவும் அனுபவக் கல்விக்கான ஆர்வத்தை மேம்படுத்தவும் சிறு செயல் திட்டங்கள், இணைச் செயல் திட்டங்கள் மற்றும் குழுச் செயல் திட்டங்கள் போன்றவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இவை இச்சீரமைக்கப்பட்ட கற்றல் அட்டைகளின் முக்கிய அம்சங்களாகும். எளிமைப் படுத்தப்பட்ட செயல்வழிக் கற்றல் பயிற்சியுடன் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை ஒருங்கிணைக்கப்பட்டதால் தொடக்க நிலை மாணவர்களின் படித்தல் மற்றும் கேட்கும் திறன் மேம்பட வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் நடத்திய எளிமைப்படுத்தப்பட்ட செயல்வழிக் கற்றல் அட்டைகளுக்கான மாநில அளவிலான முதன்மைக் கருத்தாளர் பயிற்சியில் 256 வட்டார வளமைய ஆசிரியர்கள் மற்றும் மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள் கலந்துகொண்டனர். மாவட்ட அளவிலான பயிற்சிகளின் வாயிலாக 1,45,000 தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் பயிற்சி பெற்றுள்ளார்கள்.

11.7.4 தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கான எளிய அறிவியல் செய்முறைகளில் பயிற்சி

உலக அளவில் கற்றல்-கற்பித்தல் முறையில் பெருமாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. அறிவியல் பாடங்களைப் பழைய முறையான கரும்பலகையைக் கொண்டு மட்டுமே கற்பிக்க இயலாது. குழந்தைகள் இயல்பாகவே ஒன்றைத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுவர். ஆகவே, ஒன்றைச் செய்து கற்கும்போதுதான், அக்குழந்தையின் அறிவியல் மனப்பான்மை, அறிவியல் சிந்தனை,

[2013 மே 10

பகுத்தாய்வுத் திறன் முதலியன மேலோங்கும். இந்நோக்கில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனமானது, தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் வகுப்பறைகளில் நடைமுறைப்படுத்தும் நோக்கில், எளிமையான அறிவியல் செய்முறைகளுக்கான முதன்மைக் கருத்தாளர் பயிற்சியை, அனைவருக்கும் கல்வி இயக்கத்துடன் கூட்டாக இணைந்து வழங்கியுள்ளது. இப்பயிற்சியில், 123 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். பயிற்சி பெற்ற முதன்மைக் கருத்தாளர்கள் 1,45,000 தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளார்கள்.

11.7.5 கலை மற்றும் வாழ்க்கைக் கல்விப் பயிற்சி

விடுதலைக்கு முன்பே ஆதாரக் கல்வியில் நம்பிக்கை கொண்டிருந்த வல்லுநர்களின் கருத்துப்படி, உடல் உழைப்பு மற்றும் கைத்தொழிலுடன் இணைந்த கல்வி முறை வலியுறுத்தப்பட்டிருந்தது. தற்போது, புதிய பொதுப் பாடத் திட்டத்துடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையில், பாடப் பொருளுடன் இணைத்துக் கலைக் கல்வி மற்றும் வாழ்க்கைக் கல்வி வகுப்பறைகளில் செயல்படுத்தப்பட்டதன் வாயிலாக புறக்கணிக்கப்பட்ட செயல்முறை அனுபவம் மற்றும் கலைக் கல்வி மீண்டும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இதற்கென தொடக்க மற்றும் உயர் தொடக்க வகுப்பு ஆசிரியர்களுக்கான முதன்மைக் கருத்தாளர் பயிற்சியில் 128 நபர்கள் கலந்துகொண்டனர். இவர்கள்மூலம் இப்பயிற்சி மாநிலம் முழுவதும் 4,000 ஆசிரியர்களைச் சென்றடைந்துள்ளது. இதன்மூலம் மாணவர்களின் படைப்பாற்றல் வளப்படுத்தப்படும்.

11.7.6 தொடக்க மற்றும் உயர் தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கான பயிற்சி

பள்ளியின் முழுமையான வளர்ச்சி, பள்ளித் தலைமையாசிரியரைச் சார்ந்தது. ஆசிரியர்களுள் பணி மூப்பின் அடிப்படையில் தலைமையாசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கென தனியான மனித வள மேம்பாட்டு மேலாண்மைப் பயிற்சி மற்றும் அவர்களது நிருவாகத் திறனை உயர்த்துவதற்கான வாய்ப்பு இல்லாததால் அவர்கள் தங்கள் வேலையைத் தாங்களே மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, இவர்களுக்குப்

2013 மே 10]

பயிற்சியளிக்க அனைவருக்கும் கல்வி இயக்கத்துடன் இணைந்து, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் 10 நாள்களுக்கு உண்டி உறைவிட முதன்மைக் கருத்தாளர் பயிற்சியை அளித்தது. மாநில அளவில் சிறப்புப் பெற்ற, மேலாண்மைமிக்க தலைமையாசிரியர்களுடன் தொடக்க / நடுநிலை / உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளி நிகழ்வுகளைக் கொண்டு கலந்துரையாடல் முறையில் இப்பயிற்சி நடத்தப்பட்டது. பள்ளிகளின் சிறந்த நடைமுறைகள் பரிமாறிக்கொள்ளப்பட்டன. பயிற்சியில், கற்பித்தலைக் கண்காணித்தல், உள்ளூர் வளங்களைத் திரட்டுதல், பள்ளியில் பயிலும் மாணவர்களின் பெற்றோர் ஆதரவைப் பெறுதல், பள்ளி அளவிலான திட்ட மேலாண்மை போன்ற பல்வேறு கூறுகள் குறித்து கலந்துரையாடப்பட்டன. இதன்மூலம், 45,000 தலைமையாசிரியர்கள் பயன்பெறுவார்கள்.

11.7.7 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கான உண்டி உறைவிடப் பயிற்சி

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம், 123 முதன்மைக் கருத்தாளர்களுக்கு இரண்டு நாள் உண்டி உறைவிடப் பயிற்சியை அளித்துள்ளது. இப்பயிற்சியில், முதன்மைக் கருத்தாளர்களாக மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவன விரிவுரையாளர்கள், வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள், உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் கலந்து கொண்டார்கள். தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேனிலைப் பள்ளிகளைச் சார்ந்த வெற்றி பெற்ற தலைமையாசிரியர்கள், தாங்கள் எதிர்கொண்ட சூழலை, வெற்றி பெற்ற நிகழ்வுகளை மற்றையோருக்கு பகிர்ந்து கொண்டனர். இப்பயிற்சி, கலந்துரையாடல் முறையில் நடைபெற்றது. பெரும்பாலானோர் வகுப்பறை கற்றல்-கற்பித்தல் நிகழ்வுகளை நடைமுறைப்படுத்திய முறைகளைத் தத்தம் பட்டறிவோடு எடுத்துரைத்தது, எல்லோரையும் ஈடுபாட்டுடனும் ஆர்வத்துடனும் கேட்கத் தூண்டியது. பள்ளிகளில் ஆய்வு நடத்தும் முறைகளையும் கற்றல்-கற்பித்தல் நிகழ்வுகளையும் உணர்த்துவதாய், இந்நிகழ்வுகள் அமைந்தன. அனைத்து மாவட்டங்களிலும் ஏறக்குறைய 3,000 வட்டார வள மையப் பயிற்றுநர்கள் மற்றும் மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவன விரிவுரையாளர்கள் இப்பயிற்சியினால் பயன்பெற்றார்கள்.

[2013 மே 10

11.8 ஆய்வுப் பணிகளும் பிற செயல்பாடுகளும்

11.8.1 கணினிவழிக் கல்வியைப் பள்ளிக் கல்வி மற்றும் ஆசிரியர் கல்வியில் ஒருங்கிணைத்தல்

இந்நூற்றாண்டின் இணையற்ற விரைவான, விரிவான வளர்ச்சிக்கு ஏற்ற பல்வேறு தொழில்நுட்ப முன்னேற்றங்கள் செய்தியை அனுப்புவதிலும் பெற்றுக்கொள்வதிலும் ஏற்பட்டுள்ளன. இப்புதுயுகத்தில் ஒவ்வொரு மூன்று ஆண்டுக்குள் அறிவு இருமடங்காக விரிகிறது. வரும் பத்து ஆண்டுகளுக்குள், ஒவ்வொரு பணிக்கும் செய்திப் பரிமாற்றத்தில் சில திறன்களைப் பெற்றிருந்தால் மட்டுமே, அப்பணியை ஒருவரால் செவ்வனே செய்ய இயலும். ஆகவே, இன்றைய குழந்தைகள் கணினிவழிக் கல்வியைச் சிறப்பாகக் கற்றால்தான் எதிர்காலத்தில் பணிபுரியும் இடத்தில் சிறப்பாகப் பணியாற்றவும், கலந்துரையாடவும், செயல்படவும் முடியும். குழந்தைகளுக்குத் தொழில்நுட்ப அறிவை வளர்க்க, ஆசிரியர்களுக்குக் கணினிசார்ந்த அறிவும் கற்பித்தல் முறையும் தெரிந்திருத்தல் இன்றியமையாதது. வகுப்பறைக் கற்பித்தலில் கணினிவழிக் கல்வியை ஒருங்கிணைக்கும் பொறுப்பு, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்தைச் சார்ந்தது. இந்நிறுவனத்தால் உருவாக்கப்படும் கையேடுகள் கணினித் தொழில்நுட்ப வல்லுநர்களுடன் இணைந்து, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் மற்றும் பள்ளிக் கல்வி இணையதளங்களில் ஏற்றப்பட்டுள்ளன. அவற்றைக் குழந்தைகள் இலவசமாகக் கற்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

11.8.2 வாழ்வியல் திறன் கல்விப் பயிற்சி

உயர்நிலை மற்றும் மேல்நிலை வகுப்புகளில் பயிலும் வளரிளம் பருவ மாணவர்கள் எதிர்கொள்ளும் உடல் மற்றும் மனம் சார்ந்த பிரச்சினைகள், ஊடகங்கள் வாயிலான கருத்துகளால் ஏற்படும் தாக்கத்தினால் விளையும் குழப்பங்கள், பிரச்சினைகள், தம்மைத் தற்காத்துக்கொள்ளல், மன அழுத்தம், ஒத்த வயதினரின் வற்புறுத்தல் முதலியவை சார்ந்து அவர்களுக்கு விழிப்புணர்வுப் பயிற்சி அளிக்கப்பட வேண்டியுள்ளது. எனவே, உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளில் பயிலும் வளரிளம் பருவ மாணவர்களுக்கு வாழ்வியல் திறன் கல்விப் பயிற்சியினை தமிழ்நாடு எய்ட்ஸ்

2013 மே 10]

கட்டுப்பாட்டுச் சங்கத்துடன் (TNSACS) இணைந்து, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் அளித்து வருகிறது. ஆசிரியர்கள் மற்றும் வகுப்பு மாணவர்களைப் பயிற்சி உறுப்பினர்களாகக் கொண்டு நடத்தப்படும் இப்பயிற்சியில் ஒத்த வயதினரின் தவறான வழிகாட்டுதல்களுக்கு மறுத்தல் திறன் வலியுறுத்தப்படுகிறது. முழுமையும் செயல்பாடுகளாக வடிவமைக்கப்பட்டுள்ள இப்பயிற்சியினால், ஒன்பது மற்றும் பதினோராம் வகுப்பில் பயிலும் மாணவர்கள் பயனடைகின்றனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டில் வாழ்வியல் கல்வி ஒரு பகுதியாகச் சேர்க்கப்பட்டு மாணவர்கள் இளம் வயதிலேயே வாழ்வியல் திறன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

11.8.3 நீரிழிவு நோய் விழிப்புணர்வுப் பயிற்சி (Diabetes Awareness Training Programme)

இந்திய நீரிழிவு நோய் ஆராய்ச்சி மையத்துடன் இணைந்து, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனமானது பள்ளி மாணவர்களின் உடல் நலம் மற்றும் உடல் தூய்மையைப் பேணவும், மேம்படுத்தவும், நீரிழிவு நோய் விழிப்புணர்வுப் பயிற்சியை அளித்தது. இப்பயிற்சியானது இந்நோய் குறித்த விழிப்புணர்வையும், நலவாழ்வு முறையையும் வளரிளம் பருவ மாணவர்களிடையே ஏற்படுத்தும். முன்முயற்சியாக, இத்திட்டம் சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்னை நகர்ப்புறத்தில் உள்ள 500 உயர்நிலைப் பள்ளி அறிவியல் பட்டதாரி ஆசிரியர்களும், திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள 450 உயர்நிலைப் பள்ளிப் பட்டதாரி ஆசிரியர்களும் இப்பயிற்சியினால் பயன்பெற்றுள்ளார்கள். இப்பயிற்சியின் மூலமாக மாணவர்கள் நீரிழிவு நோய் வராமல் தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்தும், நோயின் தாக்கம் குறித்தும் அறிந்து கொள்வதோடு மட்டுமின்றி அவர்கள் வாயிலாக குடும்ப உறுப்பினர்களையும் இக்கருத்துகள் சென்றடையும். இவர்களின் வாயிலாகச் சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களைச் சேர்ந்த 95,000 மாணவர்களுக்கு இவ்விழிப்புணர்வுப் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியின் தாக்கம் மற்றும் விளைவுகள் பற்றிய மதிப்பீட்டு ஆய்வும் மேற்கொள்ளப்படவுள்ளது.

[2013 மே 10

11.8.4 மேம்படுத்தப்பட்ட பள்ளி சுகாதார நலத் திட்டம் (Modified School Health Programme)

குழந்தைகள் தத்தம் வளர்பருவத்தில் உடலளவிலும் மனத்தளவிலும் வளமார்ந்தவர்களாகத் திகழ்ந்தால்தான், கற்கவும் சிந்திக்கவும் செயல்படவும் இயலும். ஊட்டச்சத்துக் குறைபாட்டினாலும் தன்சுத்தம் இன்மையினாலும் உடல்நலத்தில் தன் தூய்மைக்கு அக்கறை எடுத்துக் கொள்ளாததாலும் குழந்தைகள் பல்வேறு நோய்களுக்கு ஆளாகின்றனர். குழந்தைகள் அடிக்கடி நோய்வாய்ப்படுவதற்குக் காரணம் பொதுச் சுகாதாரமின்மையும், நோய் வருவதற்கான காரணங்களை அவர்களுக்கு முறையாக எடுத்துரைக்காததுமே ஆகும். இவற்றைக் கருத்திற்கொண்டே தமிழக அரசு, விரிவான ஊரக நலத் திட்டத்தைச் செயல்படுத்தி உள்ளது. அத்தோடு, பள்ளிக் கல்வியில் குழந்தைகளுக்குப் பல்தூய்மை, உடல்நலம், தன்சுத்தம் முதலியவற்றை உறுதிசெய்யும் பொருட்டுப் பல்வேறு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி வருகின்றது. மேம்படுத்தப்பட்ட பள்ளி சுகாதார நலத் திட்டத்தின் வாயிலாக மாணவர்களுக்கு நோய்த் தடுப்பு முறைகள், நலமாக வாழும் முறைகள், உடல்நலக் குறைபாடுகளுக்கான காரணங்கள் முதலியவை எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சுகாதாரத் துறையால் நடத்தப்பெற்ற இப்பயிற்சியைச் செம்மையாகக் கொண்டுசேர்க்க, மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவன விரிவுரையாளர்கள், வட்டார வள மையப் பயிற்றுநர்கள் என 594 நபர்கள் பயிற்சி பெற்றார்கள். இப்பயிற்சி சுகாதாரத் துறையின் சென்னை, மதுரை, புதுக்கோட்டை, விழுப்புரம், சேலம், திருவள்ளூர் ஆகிய 6 மண்டல மையங்களில் சுகாதாரத் துறையுடன் இணைந்து, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் பயிற்சி அளித்தது. இதன் தொடர்ச்சியாக, மாவட்ட அளவில் 28,503 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியினால் அனைத்து மாணவர்களும் பயன் பெறுவார்கள்.

11.8.5 கல்வித் தொலைக்காட்சிப் படப் பதிவு நிலையம்

கல்வித் தொலைக்காட்சிப் படப் பதிவு நிலையத்தின் வாயிலாக மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனமும், அனைவருக்கும் கல்வி இயக்கமும் இணைந்து மாவட்ட அளவில் பள்ளிகளில் சிறந்த கற்றல்-கற்பித்தல் நிகழ்வை மேற்கொள்ளும் ஆசிரியர்களைத் தெரிவுசெய்து, மாநில அளவிலான ஒத்திகை மற்றும் படப் பதிவை மேற்கொள்கிறது. இதன்கீழ் கணிதம்,

2013 மே 10]

அறிவியல் மற்றும் சமூக அறிவியல் பாடங்களோடு 5 நிகழ்ச்சிகள் வீதம் மொத்தம் 15 நிகழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் பாடப் பொருளை இறுதி செய்தல், ஒத்திகை மற்றும் படப் பதிவு மேற்கொள்ளுதல் ஆகியவற்றிற்கு மாவட்ட ஆசிரியர் கல்வி நிறுவன முதுநிலை விரிவுரையாளர்கள் / விரிவுரையாளர்கள் / வட்டார வள மைய ஆசிரியப் பயிற்றுநர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர் பங்கேற்றுத் தங்கள் மேலான கருத்துகளை ஆசிரியர்களுடன் பகிர்ந்துகொள்வார்கள். இத்தொலைக்காட்சி நிகழ்ச்சியை ஒளிபரப்புவதன்மூலம் நேரடிக் கற்றல் அனுபவங்களைப் பெற்று மாணவர்கள் சிறப்பாகக் கற்பார்கள்.

11.8.6 சிறந்த பள்ளியைத் தேர்ந்தெடுத்தல்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம், தமிழகத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள ஒவ்வொரு மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனத்தின் மூலமாக, ஒவ்வொரு மாதமும் ஓர் ஒன்றியத்தில் சிறந்த ஒரு பள்ளியைத் தேர்ந்தெடுத்து புதுமையான முறையை மேற்கொண்டு வருகிறது. தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த பள்ளி பற்றிய செய்திகள் பெற்றோர்—ஆசிரியர் கழகச் செய்தி இதழில் வெளியிடப்படுகின்றன. இவற்றைக் காணும் பிற பள்ளிகளும் சிறந்த பள்ளியாகத் தம்மை தரம் உயர்த்திக்கொள்ளும் நோக்கிலே இவ்வாறு வெளியிடப்படுகிறது. மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள் மற்றும் ஒன்றிய அளவிலான அலுவலர்கள் வரையறுக்கப்பட்ட விதிகளின்படி பள்ளிகளைப் பார்வையிட்டு சிறந்த பள்ளிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

11.8.7 நாட்டு நலப் பணித் திட்டம்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனமும் கல்லூரிக் கல்வி இயக்ககமும் இணைந்து, அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் நாட்டு நலப் பணித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. இத்துறையின்கீழ் 34 நாட்டு நலப் பணித் திட்ட அலகுகள், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வலகுகள்மூலம் 2012-2013 ஆம் கல்வியாண்டில் 34 கிராமங்களைத் தத்தெடுத்து ஜனவரி மூன்றாவது வாரத்தில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன. மேலும், இத்திட்டம்

தொடர்பான தொடர் பணிகளும் ஆண்டு முழுவதும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. மொத்தம் 1,700 மாணவத் தொண்டர்களும் 34 திட்ட அலுவலர்களும் இப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

11.8.8 தேசிய மக்கள்தொகைக் கல்வித் திட்டம்

இந்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறையானது, தேசிய மக்கள்தொகைக் கல்வித் திட்டத்தைத் (NPEP) தேசியக் கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்தின் வாயிலாகச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தைத் தமிழகத்தில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தைச் செயல்படுத்த தமிழகத்திலுள்ள அரசு உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்குக் கல்வி இணைச் செயல்பாடுகள் (Co-curricular Activities), சுவரொட்டிப் போட்டிகள் (Poster Competitions) பங்கேற்று நடித்தல் (Role Play), நாட்டுப்புற நடனம் (Folk Dance), எனப் போட்டிகளை இந்நிறுவனம் நடத்தியது. சுவரொட்டிப் போட்டிகளுக்கு மக்கள்தொகைக் கல்வி, வளரிளம் பருவக் கல்வி (Adolescent Education), வளரிளம் பருவ மாற்றங்கள், பாலியல் நலக் கல்வி, பாலினச் சமத்துவம் (Gender Equity), பெண்களை மேம்படுத்துதல் (Empowerment of Women), அரசு உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளில் ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்புவரை பயிலும் மாணவர்களின் குடும்பம் மற்றும் சமூகப் பொருளாதாரக் காரணிகள் ஆகியன கருத்துகளாக அளிக்கப்பட்டன. பங்கேற்று நடித்தலுக்கான கருத்துகள், தேசியக் கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் அளித்த சூழ்நிலைகளைக் கொண்டு, அரசு உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளில் பயிலும் ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கு அளித்துப் போட்டிகள் நடத்தப்பட்டன. இப்போட்டிகள் அனைத்தும் பல்வேறு நிலைகளில் நடத்தி, அவற்றில் பங்கேற்றவர்களுக்கும் வெற்றி பெற்றவர்களுக்கும் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மாநிலத்திலுள்ள ஆசிரியர் பயிற்றுநர்களுக்கு மக்கள்தொகைக் கல்விசார்ந்த பயிற்சிகளுக்கான செயல்பாடுகள், பயிற்சிக் கையேடுகள் இந்நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ளன.

2013 மே 10]

11.8.9 ஆராய்ச்சி

கல்வியியல் ஆராய்ச்சியை மேற்கொள்வது மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் பெரும் பொறுப்பாகும். அரசின் கல்வியியல் திட்ட நடைமுறையின் விளைவினை ஆய்வு செய்து மாநிலக் கல்வியியல் கொள்கையில் தக்க மாற்றங்களைக் காண்பது இதன் நோக்கமாகும். ஆசிரியர்களைக் கற்பித்தலில் திறமையானவர்களாக ஆக்கி, அவர்களின் நிருவாகத் திறனை அதிகரித்து மாநிலத் தரத்தை உயர்த்துவது மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் ஒன்றே என்பதால் கல்வித் தளத்தில் இயங்கும் அனைவரும் இந்நிறுவனத்தின் ஆராய்ச்சிகளுக்கு ஆதரவு தர வேண்டியவர்களாவார்கள். மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், ஆசிரியர்களுக்குச் செயலாய்வுகளில் பயிற்சியளிப்பதன்மூலம் அவர்களைக் கற்பிப்பதில் திறமையுள்ளவர்களாக ஆக்க இயலும். மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் நடத்தும் மாநாடுகள் மற்றும் தேசிய அளவிலான கருத்தரங்குகளில் ஆசிரியர்களால் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெறும். மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் நிதியுதவியுடன் தனியாள் மற்றும் கூட்டுச் செயலாய்வு சார்ந்த பயிற்சிகள் அளிக்கப்படும். மாவட்ட அளவிலான ஆராய்ச்சிகளில் கண்டறியப்படும் முடிவுகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம் ஏற்பாடு செய்யும் கருத்தரங்குகளில் பகிர்ந்து கொள்ளப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

11.9 நிதிநிலை

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்துக்கென 2012-2013 ஆம் வரவு-செலவுத் திட்டத்தில் மொத்தம் ரூபாய் 63.46 கோடியை பணியாளர் சம்பளம், பயிற்சி மற்றும் மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன மேம்பாட்டிற்காகவும், செலவினங்களுக்காகவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகை 2013-2014 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் அதிகப்படுத்தப்பட்டு ரூ.65.21 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம், ஆசிரியர் பயிற்சி மாணவர்களின் தர மேம்பாடு மற்றும் பள்ளிகளின் செயல்பாட்டை அதிகப்படுத்துதல் போன்றவற்றில் கவனம் செலுத்தி தமிழகக் கல்வித் தரத்தை உயர்த்துவதில் பெரும் பங்காற்றுகிறது.

[2013 மே 10

12. ஆசிரியர் தேர்வு வாரியம்

12.1 அறிமுகம்

ஆசிரியர் தேர்வு வாரியம், தரமும் திறமையும் நிறைந்த ஆசிரியர்களை அரசுப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு தெரிவு செய்வதற்காக 1987-ல் உருவாக்கப்பட்டது. பல்வேறு வகையான நியமன முறைகள்மூலம் ஆசிரியர்களை இவ்வாரியம் தெரிவு செய்து வருகிறது. மார்ச் 2012 வரை இவ்வாரியம் 1,03,351 ஆசிரியர்களைத் தெரிவு செய்துள்ளது. ஏப்ரல் 2012 முதல் டிசம்பர் 2012 வரை இவ்வாரியம் 33,705 ஆசிரியர்களை குறுகிய காலத்தில் வெளிப்படையான முறையில் தெரிவு செய்துள்ளது. ஆக மொத்தம் 1,37,056 ஆசிரியர்களைத் தெரிவு செய்து சம்பந்தப்பட்ட துறைகளுக்கு வழங்கியுள்ளது.

12.2 தொலைநோக்கு

ஆசிரியர் தேர்வு வாரியம் பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி, தொழில்நுட்பக் கல்வி, சட்டக் கல்வி மற்றும் தமிழ்நாடு அரசின் பிற துறைகளுக்கான ஆசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களை நவீன கணினி தொழில்நுட்பத்தின் மூலமும் இணையதளம் மூலமும் வெளிப்படையான தேர்வு முறைகளைப் பயன்படுத்தித் தெரிவு செய்கிறது. மேலும், குறிப்பிட்ட காலவரையறைக்குள் விரைவான துல்லியமான தேர்வு முடிவுகள் வெளியிட ஏதுவாக ஆசிரியர் தேர்வு வாரியம் அனைத்து நடவடிக்கைகளையும் முழுமையாக கணினிமயப்படுத்தி இணையதளம்மூலம் தேர்வுப் பணிகளை மேற்கொள்ளத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் ஆசிரியர் தேர்வு வாரியம் மேற்கொண்டு வருகிறது.

12.3 ஆசிரியர் தகுதித் தேர்வு

இந்திய அரசால் இயற்றப்பட்ட குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009, 1-4-2010 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இச்சட்டத்தின் 23-வது பிரிவின் உட்பிரிவு (1)-ன்படி, ஒன்று முதல் எட்டு வரையிலான ஆரம்ப நிலை வகுப்புகளுக்கு நியமனம் செய்யப்படும் ஆசிரியர்கள் பெற்றிருக்க வேண்டிய குறைந்தபட்ச தகுதிகளை தேசிய ஆசிரியர் கல்வி நிறுவனம் (NCTE) தனது 23-8-2010 ஆம் நாளிட்ட

2013 மே 10]

அறிவிக்கையில் தெரிவித்துள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி சட்டத்தின் உட்பிரிவு (2)(n)-ல் வரையறுக்கப்பட்டுள்ளபடி பள்ளிகளில் ஒன்று முதல் எட்டு வகுப்புகளுக்கு நியமனம் செய்யப்படும் ஆசிரியர்கள், அரசால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பினால் நடத்தப்படும் ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாட்டில் ஆசிரியர் தகுதித் தேர்வினை நடத்தும் முகவாண்மையாக ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் தேர்வு வாரியம் தனது அறிவிக்கை எண் 4/2012 நாள் 7-3-2012-ன்படி ஆசிரியர் தகுதித் தேர்வு 2012-ன் தாள் I (இடைநிலை ஆசிரியர்) மற்றும் II (பட்டதாரி ஆசிரியர்)-க்கான தேர்வினை, 12-7-2012 அன்று தமிழகம் முழுவதும் நடத்தியது. அதன் விவரம் பின்வருமாறு:-

வ. எண்	தகுதித் தேர்வு தாள்	தேர்வு எழுதிய நபர்களின் எண்ணிக்கை	தேர்ச்சி பெற்ற நபர்களின் எண்ணிக்கை	தேர்ச்சி சதவீதம்
1	தாள்-1	305405	1735	0.57%
2	தாள்-2	409121	713	0.17%
	மொத்தம்	714526	2448	0.34%

ஆசிரியர் தகுதித் தேர்வில் 60% மதிப்பெண்கள் பெறாத தேர்வர்களுக்குத் கூடுதலாக தேர்வுக் கட்டணம் ஏதுமின்றி ஆசிரியர் தகுதி துணைத் தேர்வு நடத்த ஆசிரியர் தேர்வு வாரியம் பணிக்கப்பட்டது.

அரசின் வழிகாட்டுதலுக்கிணங்க, ஆசிரியர் தகுதித் தேர்வு தாள் I மற்றும் II-க்கு ஆசிரியர் தகுதித் துணைத் தேர்வு 14-10-2012 அன்று 1,024 மையங்களில் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தமிழகத்தில் நடத்தப்பட்டது. இத்துணைத் தேர்வில் புதிய விண்ணப்பதாரர்களும் தேர்வு எழுத வாய்ப்பு அளிக்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:

[2013 மே 10

ஆசிரியர் தகுதி துணைத் தேர்வு				
வ. எண்	தாள்	தேர்வு எழுதிய நபர்களின் எண்ணிக்கை	தேர்ச்சி பெற்ற நபர்களின் எண்ணிக்கை	தேர்ச்சி சதவீதம்
1.	*தாள்-1*	*278725*	*10397*	*3.7%*
2.	*தாள்-2*	*364370*	*8864*	*2.4%*
	மொத்தம்	*643095*	*19261*	*2.99%*

ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தகுந்த தேர்வுகள் நடத்தி மீதமுள்ள முதுகலை ஆசிரியர் / பட்டதாரி ஆசிரியர் மற்றும் இடைநிலையாசிரியர்கள் பணியிடங்கள் நிரப்ப உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

12.4 வெளிப்படையான தெரிவு

ஆசிரியர்களின் தெரிவு வெளிப்படையாகவும் துல்லியமாகவும் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் அப்பணிகள் யாவும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. அனைத்து விண்ணப்பங்களும் 'ஒளிக் குறி உணர்தல்' (OMR) தொழில்நுட்பத்திற்கு உட்படுத்தப்பட்டு, தகவல்கள் பெறப்படுவதோடு, தேர்வர்களின் விடைத்தாள்களும் அதே தொழில்நுட்பத்தின் உதவியுடன் விரைவாக மதிப்பிடப்பட்டு, தேர்வு முடிவுகள் மிகத் துல்லியமாக வெளியிடப்படுகின்றன.

ஆசிரியர் தேர்வு வாரியத் தேர்வினை எழுதி முடித்த உடனேயே தேர்வர்கள் தாங்கள் எழுதிய விடைத்தாளின் நகல் ஒன்றினைப் பெற்றுக்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு தேர்வும் முடிவுற்ற பின்பு, விடைத்தாள் தயாரித்தவரின் விடைகள் ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் வெளியிடப்பட்டு, அதன்மீது தேர்வர்களின் கருத்துகள் பெறப்பட்டு, விடைகளுக்கு மாற்றுக் கருத்து இருப்பின் அவை வல்லுநர் குழுவின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு, சரியான விடைகளின் இறுதிப் பட்டியல் தயாரிக்கப்படுகிறது. இவ்விறுதி விடைகளின் அடிப்படையிலேயே தேர்வர்களின் விடைகளுக்கு மதிப்பெண்கள் வழங்கப்படுகின்றன.

2013 மே 10]

இவ்வாறு நடைபெறும் தேர்வு நடைமுறைகள் மற்றும் முடிவுகள் யாவும் ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் ('http://trb.tn.nic.in') தேர்வர்களின் கவனத்திற்காக வெளியிடப்படுகின்றன. இதனால் தேர்வர்களும், பொது மக்களும் தேர்வு முடிவுகளை எளிதாகத் தெரிந்துகொள்ள முடிகிறது.

12.5 ஆசிரியர் தேர்வு வாரியத்தை நவீனமயமாக்குதல்

ஆசிரியர் தேர்வு வாரியத்தால் மேற்கொள்ளப்படும் தெரிவுப் பணிகள் சார்ந்த அனைத்துப் பணிகளையும் கணினிமயமாக்குதல், விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை இணையதளம்மூலம் பதிவு செய்யும் முறையை மேற்கொள்ளுதல், அனைத்து நியமனங்களுக்கும் தேர்வுக் கட்டணங்களை அரசுடைமையாக்கப்பட்ட வங்கியில் இணையதளவழியில் எளிமையாக செலுத்துதல் போன்ற திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆசிரியர் தேர்வு வாரிய நடவடிக்கைகள் நவீனமயமாக்கப்பட்டதன்மூலம் இவ்வாரியம் திறம்படவும், பயன்படத்தக்க வகையிலும் செயல்பட முடிகிறது. இதன் காரணமாக அனைத்து வகையான ஆசிரியர் பணியிடங்களும் வெளிப்படையான முறையில் குறிப்பிட்ட கால வரையறைக்குள் நிரப்பப்படுகின்றன.

12.6 வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு

2012-2013 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு ரூ.1.38 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்போது 2013-2014 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இத்தொகை உயர்த்தப்பட்டு ரூ.2.11 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரசின் பணி நியமன நிறுவனமாகச் செயல்பட்டு வரும் ஆசிரியர் தேர்வு வாரியம், ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களை நிரப்புவதில் முக்கிய பங்காற்றி வருகிறது.

[2013 மே 10

13. தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்

13.1 அறிமுகம்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் 4-3-1970 அன்று சங்கங்களின் பதிவுச் சட்டம், 1860-ன்கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கமாக நிறுவப்பட்டது. இந்நிறுவனம் 1993 ஆம் ஆண்டு தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு பாடநூல்களை அச்சிட்டு வழங்குகிறது. அத்துடன் தனியார் சுயநிதி பள்ளி மாணவர்களுக்கும் பாடநூல்களை அச்சிட்டு நியாய விலையில் விற்பனை செய்கிறது. இக்கழகம் ஆளுநர் குழுவால் நிருவகிக்கப்படுகிறது. இப்பாடநூல் கழகம், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அடங்கிய குழாமின் உறுதுணையுடன் மேலாண்மை இயக்குநரால் நிருவகிக்கப்படுகின்றது.

13.2 பாடநூல் கழகத்தின் பணிகள்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் இறுதி செய்யப்பட்டு அளிக்கப்படும் பாடநூல்களின் அடிப்படையில் தரமான பாடநூல்களை அச்சிட்டு மாணவர்களுக்கு வழங்குவது தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் பணியாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஜூன் 2012 முதல் முப்பருவ முறையை அறிமுகப்படுத்தினார்கள். இம்முப்பருவ முறையின்கீழ் ஒரு கல்வியாண்டில் 1 முதல் 8 வரையான வகுப்புகளுக்கு பாடநூல்கள் 3 பருவத்திற்கு 3 தொகுதிகளாகவும் வழங்கப்படுகின்றன. 9 முதல் 12 ஆம் வகுப்புகளுக்கு ஆண்டுக்கு ஒரு பாடநூலாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. 2013-2014 ஆம் கல்வியாண்டு முதல் முப்பருவ முறை 9 ஆம் வகுப்பிற்கும் பின்பற்றப்படவுள்ளது. மாணவர்களின் புத்தகச் சுமையைக் குறைப்பதே இதன் நோக்கமாகும். இத்திட்டம் மாணவர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் 2012-2013 ஆம் கல்வியாண்டில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரையுள்ள மாணவர்களுக்கு 6.62 கோடி பாட புத்தகங்களை அச்சிட்டு உரிய நேரத்தில் வழங்கியுள்ளது. மேலும் தனியார் சுயநிதிப் பள்ளிகளில் அனைத்து வகுப்புகளுக்குமான 2.68 கோடி பாடப் புத்தகங்களை அச்சிட்டு நியாய விலையில் வழங்கியுள்ளது. இவ்வாறு 2012-2013 ஆம்

2013 மே 10]

கல்வியாண்டில் 9.30 கோடி பாடநூல்கள் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளன. இதில் சிறுபான்மை மொழிவழிப் பாடநூல்களும் அதாவது தெலுங்கு, உருது, கன்னடம், மலையாளம் மொழிவழிப் பாடநூல்களும் சமஸ்கிருதம், அரபு மொழி நூல்களும் அடங்கும். இதனால் 1,35,14,218 மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர். அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் இப்பாடநூல்களை அச்சிடுவதற்கு ரூ.305.96 கோடி அரசால் செலவிடப்பட்டுள்ளது.

இவை தவிர, தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் பிற துறைகளுக்காக 10, 12 ஆம் வகுப்பு வழிகாட்டி நூல்கள், வினா வங்கி, தீர்வுப் புத்தங்கள், மாதிரி வினாத் தாள்கள், நிதிசார் எழுத்தறிவு புத்தகங்கள், செயல்வழிக் கற்றல் அட்டைகள் 9, 10 ஆம் வகுப்புகளுக்கான அறிவியல் ஆய்வக பயிற்சிக் கையேடுகள், பிற துறைகளுக்கு பல்வகை தொழில்நுட்ப பாடநூல்கள் ஆகியவற்றையும் அச்சிடுகிறது. 2012-2013 ஆம் கல்வியாண்டிற்கு ஆதி திராவிட நலத் துறைப் பள்ளிகளைச் சார்ந்த 10, 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்காக 1.60 இலட்சம் வழிகாட்டி நூல்களையும், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட நலப் பள்ளி 10, 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்காக 13.82 இலட்சம் வழிகாட்டி நூல்களையும், பெற்றோர் ஆசிரியர் கழகத்திற்காக 10, 12 ஆம் வகுப்புகளுக்கான 6.75 இலட்சம் வினா வங்கி ஏடுகளையும், 8, 9, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்காக 6.32 இலட்சம் நிதிசார் எழுத்தறிவு புத்தகங்கள், அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் 1 முதல் 4 ஆம் வகுப்பு மாணவர்களுக்காக 7.56 லட்சம் செயல்வழிக் கற்றல் அட்டைகளையும், அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டத்தின்கீழ் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்காக 2.44 இலட்சம் அறிவியல் ஆய்வக பயிற்சிக் கையேடுகளையும் மற்றும் தொழில்நுட்ப பட்டயப் படிப்பிற்கான 73,000 பாடநூல்களையும் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் அச்சிட்டு வழங்கியுள்ளது.

13.3 மாண்புமிகு முதலமைச்சரின் "நில வரைபட நூல் வழங்கும் திட்டம்"

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா நில வரைபட நூல் வழங்கும் திட்டத்தினை அறிவிப்பு செய்தார்கள். இந்நில வரைபட நூல் அச்சிடும் பணி தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்திடம்

ஒப்படைக்கப்பட்டது. தமிழ் வழியில் 41.50 இலட்சம் மற்றும் ஆங்கில வழியில் 4.50 இலட்சம் ஆக மொத்தம் 46 இலட்சம் நில வரைபட நூல்கள் அச்சிட்டு 6 முதல் 10 ஆம் வகுப்புகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் விலையில்லாமல் வழங்கப்பட்டுள்ளன. இவ்விலையில்லா நில வரைபட நூல் வழங்கும் திட்டத்திற்காக அரசு ரூ.14.27 கோடி செலவு செய்துள்ளது. இந்நூல் மாணவர் சமுதாயத்தின் கற்றல் தேவைகளைப் பெரிதும் பூர்த்தி செய்துள்ளது. நில வரைபட நூலின் பொருளடக்கம் பாடத் திட்டத்தை உள்ளடக்கி கையடக்கமான வண்ண நூலாக வெளிவந்துள்ளதால் தனியார் பதிப்பகத்தால் விற்பனை செய்யப்படும் நில வரைபட நூலைக் காட்டிலும் இந்நில வரைபட நூல் மாணவர்களின் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. மேலும், இந்நில வரைபட நூலின் தேவையும் அதிகரித்து வருகிறது. மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் 2013-2014 ஆம் கல்வியாண்டிற்கான 6 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் 11.85 இலட்சம் நில வரைபட நூல்களை அச்சிடவுள்ளது. இதற்காக அரசுக்கு ரூ.3.50 கோடி செலவாகும்.

தமிழ்நாட்டு பாடநூல் கழகம் மகாராஷ்டிரா, டில்லி, குஜராத், கேரளா, அந்தமான் நிக்கோபார் தீவுகள் ஆகிய பிற மாநில தமிழ் மாணவர்களுக்கான பாடநூல்களை அரசு ஆணைப்படி விலையில்லாமல் வழங்கி வருகிறது. இவ்வகையில் 2012-2013 ஆம் கல்வியாண்டிற்கு ரூ.19 இலட்சம் மதிப்பில் பாடநூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டு பாடநூல் கழகம், பாடநூல் அச்சிடுவது முதல் கையேடுகள், வழிகாட்டி நூல்கள், செயல்வழிக் கற்றல் அட்டைகள் மற்றும் நில வரைபட நூல்கள் ஆகியவற்றை அச்சிடுவது வரை பல்வேறு வகையில் தனது பணிகளை விரிவுபடுத்தியுள்ளது. தற்போது அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் மாணவர்களுக்கான தேர்ச்சி அட்டைகள் அச்சிட்டு வழங்கப்பட உள்ளன.

13.4 தரமான பதிப்புப் பணி

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் பாடநூல்களை அச்சிடும் பணிக்கு 14-12-2013 உடன் முடிவடையும் ஈராண்டு காலத்திற்கு 134 அச்சகத்தினரின் பட்டியலை ஏற்பளித்துள்ளது.

2013 மே 10]

இவ்வச்சகத்தினர் ஷீட்பெட், வெப்-ஆப்செட் ஆகிய முறையில் அச்சிடும் இருவகைப்பட்டவர்களாவார்கள். பெரும்பான்மையான அச்சகங்கள் சென்னை, விருதுநகர் மாவட்டத்திலுள்ள சிவகாசி, ஆந்திரப் பிரதேச மாநிலத்திலுள்ள ஹைதராபாத் ஆகிய இடங்களில் அமையப்பெற்றுள்ளன. பாடநூல்கள் CTP என்னும் நவீன அச்சு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ஷீட்-பெட், வெப்-ஆப்செட் அச்சு முறைகளில் ஒரே வண்ணம் மற்றும் பல வண்ணங்களில் அச்சிடப்படுகின்றன. பாடநூல்கள் அச்சிடுவதற்கான தாள்கள் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்திடமிருந்து (TNPL) வாங்கப்படுகிறது. தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் வழங்கும் காகிதங்கள் உயர் தொழில்நுட்பம் சார்ந்த மேப்லித்தோ 80 ஜி.எஸ்.எம். காகிதமாகவும், வெண்மையாகவும், உறுதியானதாகவும் நல்ல தரமானதாகவும் உள்ளன. பாடப் புத்தகங்களுக்கு நல்ல தரமான அட்டைகள் பயன்படுத்தப்படுகின்றன. சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றிய தகவல்கள் மாணவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த பாடநூல்களின் பின் அட்டையில் அச்சிடப்படுகிறது. தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தைச் சார்ந்த தொழில்நுட்ப அலுவலர்களின் தர ஆய்வு பணி மற்றும் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் வழங்கும் தரமான காகிதங்களில் பாடப் புத்தகங்கள் அச்சிடப்படுவதன் விளைவாக மாணவர்களுக்கு மிகத் தரமான பாடநூல்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

13.5 உரிய காலத்தில் பாடநூல்கள் வழங்குதல்

அச்சிடப்பட்ட பாடநூல்கள் பள்ளிகளுக்கு வழங்குவதற்காக மாநிலத்தில் உள்ள 64 பாடநூல்கள் விநியோக மையங்களுக்கும் அச்சகங்களிலிருந்து நேரடியாக அனுப்பப்படுகின்றன. 2012-2013 ஆம் கல்வியாண்டின் முதல் பருவத்திற்கான 4.82 கோடி பாடநூல்கள் 2012 மே மாத இறுதிக்குள் வழங்கப்பட்டுவிட்டன. அதேபோல் 2012-2013 ஆம் கல்வியாண்டிற்கான 2 மற்றும் 3 ஆம் பருவங்களுக்கான 2.3 கோடி மற்றும் 2.18 கோடி பாடநூல்கள் அச்சிடப்பட்டு உரிய நேரத்தில் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. விற்பனைக்குரிய பாடநூல்கள் மாநிலத்திலுள்ள 22 மண்டல அலுவலகங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இவை தனியார் சுயநிதிப் பள்ளிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இவை தவிர ரூ.6 கோடி மதிப்பிலான விற்பனைக்குரிய பாடநூல்கள் மாநிலத்திலுள்ள

[2013 மே 10

சில்லறை விற்பனையாளர்கள்மூலம் விற்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் மொத்தம் 1,097 சில்லறை விற்பனையாளர்கள் உள்ளனர்.

13.6 வலைதளத்தில் பாடநூல்கள்

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தால் வெளியிடப்பட்ட பாடநூல்கள் www.textbookssonline.tn.nic.in என்ற வலைதளத்தில் கிடைக்கப் பெறுகின்றன. மாணவர்கள் பாடநூல்களை அவர்களின் தேவைக்கேற்ப பதிவிறக்கம் செய்துகொள்ள வசதிப்படுவதால் மாணவ சமுதாயத்திற்கு இவ்வலைத்தள வசதி மிகப் பெரிய வரமாகும்.

13.7 பாடநூல்கள் அச்சாக்கம் 2013–2014

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் 2013-2014 ஆம் கல்வியாண்டிற்கான முப்பருவங்களுக்கும் 10.47 கோடி பாடநூல்களை அச்சிடத் திட்டமிட்டுள்ளது. முதல் பருவத்திற்கான 5.33 கோடி பாடநூல்கள் அச்சிடும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முதல் பருவ பாடநூல்கள் முழுவதும் அச்சடிக்கப்பட்டு 2013 மே மாதம் 25 ஆம் தேதிக்கு முன்பாக பாடநூல் விநியோக மையங்களுக்கு அனுப்பப்படும். இதுபோன்று 2 மற்றும் 3 ஆம் பருவங்களுக்காக 5.14 கோடி பாடநூல்கள் அச்சடிக்கப்பட்டு மாணவர்களுக்கு உரிய நேரத்தில் வழங்கப்படும். சென்னை மாநகரில் 4 விற்பனை நிலையங்களை பள்ளிக் கல்வி இயக்ககத்தின்கீழ் திறந்து மாணவர்கள் எவ்வித இடர்ப்பாடுமின்றி பாடநூல்களை பெறும் வகையில் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் வசதி செய்து தர உள்ளது.

அச்சகங்கள் துணையுடன் விரிவான பாடநூல் விநியோக ஏற்பாடுகளின்மூலம் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், பாடநூல்கள் மற்றும் நில வரைபட நூல்கள் ஆகியவற்றை உரிய நேரத்தில் மாணவர்களுக்கு வழங்கி மாணவர்களின் தேவைகளை நிறைவு செய்கிறது.

2013 மே 10]

இணைப்பு—II

(378 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 46—தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2013—2014

*"தமிழ் மொழி, ஒருபுறம் பழமைச்
சிறப்புகளோடு விளங்குவதைப் போலவே,
இன்னொரு புறம் இளமைத் துடிப்போடு
வளர்ந்துகொண்டிருக்கிறது என்பதைப்
பார்த்து உலகம் வியக்கிறது."*

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா

அறிமுகம்

"தொன்மைமிக்க உலக மொழிகள் அனைத்திலும் தமிழே தொன்மை, மென்மை, தாய்மை, தூய்மை, செம்மை, மும்மை, இயன்மை, வியன்மை, வளமை, இளமை என்னும் பல்வகைச் சிறப்புகளை ஒருங்கேயுடையது" என்று மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் தமிழின் சிறப்புகளை விளக்கியுள்ளார். இத்தகைய சிறப்புகளைக் கொண்ட தமிழ் மொழியின் வளர்ச்சியில் தமிழ்நாடு அரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது.

தமிழ் மொழியின் பழமைக்கும் பெருமைக்கும் சான்றாக, இன்றும் விளங்குபவை தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் ஆகும். தமிழ் மொழியின் சொல்வளமும் இலக்கியச் செல்வமும் வெளிநாட்டு அறிஞர்களை மிகப் பெரிய அளவில் ஈர்த்தன. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் கண்ட அறிஞர் கால்டுவெல் "இத்தனை இலக்கிய வளங்கள் கொண்ட மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழர்கள் பெருமை மிக்கவர்கள். அவர்கள் சிறந்த நாகரிகத்திற்கு உரியவர்களாக வாழ்ந்திருந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை" என்று கூறுகின்றார்.

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்றார் பாரதியார். தெய்வப் புலவர் திருவள்ளுவர்

[2013 மே 10

வழங்கிய திருக்குறள் இன்று உலக மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது; இந்நூல் உலகப் பொதுமறை என்று போற்றப்படுகிறது.

அறிஞர் வீரமாமுனிவர், ஜி.யூ.போப்பு, டாக்டர் வின்சுலோ, முதலான மேனாட்டு அறிஞர்களின் உள்ளங்களை கொள்ளை கொண்ட இலக்கியச் செல்வம் படைத்த இனியமொழி நம் தமிழ் மொழி என்று எண்ணி நாம் பெருமைப்படுகின்றோம். தமிழ் மொழி பயன்பாட்டில் முழு நிறைவெய்தவும், கலை, இலக்கிய, நாகரிகப் பண்பாட்டுக் கூறுகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கவும் தமிழுக்கென்று தனியாக ஒரு துறை தோற்றுவிக்கப்பட்டது.

முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1981 ஆம் ஆண்டு மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டின் நிறைவு விழாவில் ‘எங்கும் தமிழ்’, ‘எதிலும் தமிழ்’ என்று முழங்கினார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1995 ஆம் ஆண்டு தஞ்சையில் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில், “சீரிய முறையில் நடைபெற்ற இந்த எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் விளைவாகத் தமிழ் வளர்ச்சிக்கு ஒரு புதிய பரிமாணத்தையும், உத்வேகத்தையும் ஏற்படுத்தியுள்ளதை நிரந்தரமாக்கிட, ‘இன்றும் தமிழ், என்றும் தமிழ்’ என்ற புதிய முழக்கத்தை இந்த மாநாட்டின் எழுச்சி முழக்கமாக அறிவிப்பதில் நான் பெருமிதமும் பேருவகையும் அடைகிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

இவ்வகையில் காலத்தால் ஏற்படும் மாற்றங்களுக்கு ஈடு கொடுத்துத் தமிழ்மொழி வளர்ந்து வருகிறது. ஆக்கமளிக்கும் மாற்றங்களை ஏற்று இன்றைய நிலையில் இல்லங்கள் தொடங்கி இணையதளங்கள் வரையில் உலகளாவிய நிலையில் தொடர்ந்து உயர் மொழியாகத் தமிழ் விளங்குகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய சிந்தனையைச் செயற்படுத்தும் வகையில் தமிழ் வளர்ச்சித் துறை வளர்ச்சிப் பாதையை நோக்கித் தன் பயணத்தைத் தொடர்கிறது.

2013 மே 10]

தமிழ் வளர்ச்சித் துறை

செழுமைச் சிறப்பும் சீரிளமைத் திறமும் ஒருங்கே கொண்ட மொழி நம் தாய் மொழியாகிய தமிழாகும். இம்மாநிலத்தின் ஆட்சிமொழியாக விளங்கும் தமிழின் வளர்ச்சியில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மிகுந்த ஈடுபாடும் அக்கறையும் கொண்டுள்ளது.

ஆட்சிமொழியின் பயன்பாட்டினை அரசு நிருவாகத்தில் மேம்படுத்தும் நோக்கில் இத்துறை ஆட்சிமொழி ஆய்வுக் குழுவாக 1957 இல் தொடங்கப்பட்டது. பின்னர், 1968 முதல் தமிழ் வளர்ச்சி இயக்ககமாக மாற்றி அமைக்கப்பட்டது. ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம் தொடர்பான ஆய்வுப் பணிகளும் தமிழ் வளர்ச்சி தொடர்பான பிற பணிகளும் இத்துறையால் மேற்கொள்ளப் பெறுகின்றன.

ஆட்சிமொழித் திட்டம்

ஆய்வு

தமிழ் வளர்ச்சித் துறையின் தலையாய பணி ஆட்சித் துறையில் தமிழை மேம்பாடடையச் செய்வதாகும். தமிழ் ஆட்சிமொழிச் சட்டம், 1957 முதல் நடைமுறைக்கு வந்தது.

தமிழக அரசின் அனைத்துத் துறைப் பணிகளிலும் தமிழ் முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்தினை நிறைவேற்றும் வகையில் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்க ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தலைமைச் செயலகத் துறைகளில் ஆய்வுப் பணிகளைத் தமிழ் வளர்ச்சித் துறை அரசுச் செயலாளர் அவர்கள் மேற்கொள்கிறார். துறைத் தலைமை அலுவலகங்கள், வாரியங்கள், கழகங்கள், அரசு நிறுவனங்கள், அமைப்பின் துறைத் தலைமை அலுவலகங்கள் ஆகியவற்றில் தமிழ் வளர்ச்சி இயக்குநர் ஆய்வு மேற்கொள்கிறார். மண்டல நிலை அலுவலகங்களைத் தமிழ் வளர்ச்சி மண்டலத் துணை இயக்குநர்களாலும் பிற அலுவலகங்களில் மாவட்ட தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்களாலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுக் குறைகள் களைய வழிகாட்டப்படுகிறது.

[2013 மே 10

மொழிபெயர்ப்புப் பணி

பல்வேறு துறைகளுக்குரிய விதிகள், விதித் தொகுப்புகள், நடைமுறை நூல்கள், படிவங்கள், பதிவேடுகள் ஆகியவை அத்துறைகளின் கோரிக்கைகளுக்கு ஏற்ப தமிழ் வளர்ச்சி இயக்ககத்தால் அவ்வப்போது மொழிபெயர்த்து அளிக்கப் பெறுகின்றன.

ஆட்சிமொழிக் கருத்தரங்குகள்

ஆட்சிமொழித் திட்டம் தொடர்பாக அரசுப் பணியாளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தித் திட்டத்தைச் சிறப்பாகச் செயற்படுத்துவதற்காக அனைத்து மாவட்டங்களிலும் ஆட்சிமொழிக் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. மாவட்டம்தோறும் கருத்தரங்குகள் நடத்துவதற்கான ஆண்டுச் செலவு ரூ.5,000 ஆக இருந்த நிலையில் 2012-2013 ஆம் ஆண்டு முதல் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ரூ.20,000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. அதற்கிணங்க அனைத்து மாவட்டங்களிலும் கருத்தரங்குகள் நடத்தப்பெற்று வருகின்றன.

ஆட்சிமொழிப் பயிலரங்குகள்

மாவட்டங்களில் உள்ள அனைத்து அலுவலர்களுக்கும் ஆண்டுதோறும் இரண்டு நாள்களுக்கு ஆட்சிமொழிப் பயிலரங்குகள் கீழ்க்காணும் தலைப்புகளின்கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் ரூ.30,000 செலவில் நடத்தப்படுகின்றன:

- *ஆட்சி மொழி வரலாறு*
- *ஆட்சி மொழிச் சட்டம்*
- *ஆட்சிமொழி செயலாக்கம்*
- *மொழிபெயர்ப்பு*
- *குறிப்புகள் வரைவுகள் எழுதுதல்*
- *குறைகளைக் களைய நடவடிக்கைகள்*

2013 மே 10]

ஆட்சிமொழித் திட்டப் பயிற்சி

சென்னை மாவட்டத்திலுள்ள அனைத்துத் துறைப் பணியாளர்களுக்கும் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் ஆட்சிமொழிப் பயிற்சி தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. 2012-2013 ஆம் ஆண்டில் தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் 5 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. மேலும், பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்திலும், பிற துறைகளிலும் ஆட்சிமொழித் திட்டப் பயிற்சிகள் தமிழ் வளர்ச்சித் துறையின் அலுவலர்களால் அளிக்கப்பட்டுவருகின்றன.

சிறந்த வரைவுகள், குறிப்புகளுக்குப் பரிசுகள்

ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தைச் சிறப்பாகச் செயற்படுத்தும் அரசுப் பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டிலும் தமிழில் சிறந்த வரைவுகள், குறிப்புகள் எழுதும் அரசுப் பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டுவருகின்றன:

மாவட்ட அளவில்	மாநில அளவில்	பரிசுகள்
மாவட்ட நிலை சார் நிலை	தலைமைச் செயலகத் துறை	முதல் பரிசு ரூ.3000
உள்ளாட்சித் துறையின் சார்நிலை	துறைத் தலைமை அலுவலகங்கள்	இரண்டாம் பரிசு ரூ.2000
தன்னாட்சி நிறுவனச் சார்நிலை	தன்னாட்சி நிறுவனத் தலைமை அலுவலகங்கள்	மூன்றாம் பரிசு ரூ.1000

அரசு அலுவலகங்களுக்குக் கேடயம்

ஆட்சிமொழித் திட்டத்தினைச் சிறந்த முறையில் செயற்படுத்தும் துறைத் தலைமை அலுவலகம் ஒன்றிற்கும், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ஒன்றிற்கும், தன்னாட்சி நிறுவனத் தலைமை அலுவலகம் ஒன்றிற்கும் ஆண்டுதோறும் கேடயமும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கும் திட்டம் தொடர்ந்து

செயற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், மாவட்டந்தோறும் மாவட்ட நிலை அலுவலகங்களில் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தில் சிறந்து விளங்கும் அலுவலகம் ஒன்றிற்கு கேடயமும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

ஆட்சிச் சொல்லகராதி

அரசு அலுவலர்கள், பணியாளர்கள் தமிழில் வரைவுகள், குறிப்புகள் எழுதிடத் துணை செய்வது ஆட்சிச் சொல்லகராதி ஆகும். இந்நூலின் படிகள் தமிழ் வளர்ச்சி இயக்ககத்தால் அச்சிடப்பட்டு அரசு அலுவலகங்களுக்கு விலையேதுமின்றி வழங்கப்பட்டு வருகின்றன. முதன் முதலில் இவ்வகராதி 1957-ல் வெளியிடப்பட்டது. ஏழாம் பதிப்பு அச்சிடும் நிலையில் உள்ளது.

சிறப்புச் சொல்லகராதி

அரசின் பல்வேறு துறைகளில் அந்தந்தத் துறையின் பயன்பாட்டிற்குரிய ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்கள் கொண்ட 75 சிறப்புச் சொல்லகராதிகள் வெளியிடப்பட்டுள்ளன. தற்போது முதன்முறையாக ஒருங்கிணைக்கப்பட்டு ஒரே தொகுப்பாக வெளியிடும் நிலையிலுள்ளது.

சொல் வங்கி

புதிதாகப் பயன்பாட்டிற்கு வரும் ஆங்கில, பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை உருவாக்கிப் பொது மக்கள், அரசு அலுவலகங்கள் மற்றும் ஊடகங்களின் பயன்பாட்டுக்காக அளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். திங்கள்தோறும் மொழி வல்லுநர்கள், இதழாசிரியர்கள், பேராசிரியர்கள் கலந்துரையாடிப் புதிய சொற்களைப் படைக்கின்றனர். படைத்துள்ள புதிய சொல்லாக்கங்களுள் சில:

TRUTH ALONE TRIUMPHS

2013 மே 10]

English Technical Words	தமிழ்க் கலைச் சொற்கள்
Articulate	தெளிவுற மொழிதல்
Auto Stand	தானி நிலையம்
Banquet Hall	பெரு விருந்துக் கூடம்
Blue Tooth	தரவி
Booster Card	ஊக்கி அட்டை
Casino	ஆடவை
Castle	கோட்டை வீடு
Caretaker	அக்கறையாளர்
Digital	எண்மம்
Download	பதிவிறக்கம்
E-Business	மின் தொழில்
E-Governance	மின் ஆளுகை
E-Waste	மின் கழிவு
Flash News	பளீர் செய்தி

விருதுகள்

தமிழறிஞர்களுக்கு விருதுகள், தமிழில் சிறந்த நூல்களுக்குப் பரிசுகள், சிறந்த நூல்களை வெளியிட நிதியுதவி முதலிய தமிழ் வளர்ச்சி தொடர்பான பல்வேறு பணிகளும் தமிழ் வளர்ச்சித் துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

திருவள்ளுவர் திருநாளில் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழா கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழ் மொழிக்கு வளம் சேர்க்கும் வகையில் தம் வாழ்நாளில் பெரும்பகுதி தமிழ்ப் பணி ஆற்றிய தமிழ் அறிஞர்களைப் பாராட்டும் வகையில் ஆண்டுதோறும் பின்வரும் விருதுகள் வழங்கப்படுகின்றன:

திருவள்ளுவர் விருது	*(1986 முதல்)*
பாரதியார் விருது	*(1997 முதல்)*
பாரதிதாசன் விருது	*(1978 முதல்)*
திரு. வி.க. விருது	*(1979 முதல்)*
கி.ஆ.பெ. விசுவநாதம் விருது	*(2000 முதல்)*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[2013 மே 10

விருது பெறும் பெருமக்களுக்கு விருதுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும், தகுதியுரையும் வழங்கப்படுகின்றன.

சித்திரை—தமிழ்ப் புத்தாண்டு

சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டைக் கொண்டாடும் வகையில் சிறந்த தமிழ் அமைப்புக்கும், தமிழறிஞர்களுக்கும் பின்வரும் விருதுகள் வழங்கப்படுகின்றன:

தமிழ்த்தாய் விருது	(2012 முதல்)
கபிலர் விருது	(2012 முதல்)
உ.வே.சா. விருது	(2012 முதல்)
கம்பர் விருது	(2013 முதல்)
சொல்லின் செல்வர் விருது	(2013 முதல்)

தமிழ் நாட்டிலும், பிற மாநிலங்களிலும் தமிழுக்கும், தமிழ் இலக்கியத்திற்கும், தமிழர்களுக்கும் தொண்டாற்றிவரும் தமிழ் அமைப்புகளை ஊக்கப்படுத்திப் பாராட்டிச் சிறப்பிக்கும்வகையில் 'தமிழ்த்தாய் விருது' வழங்கப்படுகிறது. இவ்விருது பெறும் அமைப்பிற்கு ரூ.5.00 இலட்சம் பரிசுத் தொகையுடன் தகுதியுரை மற்றும் பாராட்டுக் கேடயமும் வழங்கப்படுகின்றது. ஏனைய விருது பெறும் தமிழறிஞர்களுக்கு விருதுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும், தகுதியுரையும் வழங்கப்படுகின்றன.

விழாக்கள்

ஆண்டுதோறும் சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு விழாவை சிறப்போடு கொண்டாடுவதுடன் தமிழறிஞர் பெருமக்கள் புகழ் பரப்பும் வகையில் கீழ்க்காணும் விழாக்கள் நடத்தப்படுகின்றன:

திருவள்ளுவர் திருநாள்

ஔவையார் சிலைக்கு மாலையணிவித்தல் (உலக மகளிர் தினம்)

உ.வே.சா. பிறந்த நாள் விழா மாலை அணிவித்தல்

2013 மே 10]

தமிழ் நூல்களுக்குப் பரிசுகள்

பரிசு பெறும் நூல்கள் பின்வரும் 33 வகைப்பாடுகளில் தேர்வு செய்யப்படுகின்றன. தேர்வு பெற்ற சிறந்த நூலாசிரியருக்குப் பரிசுத் தொகையாக ரூ.30,000/-மும், சான்றிதழும் வழங்கப்படுகின்றன; பதிப்பகத்தாருக்குப் பரிசுத் தொகையாக ரூ.10,000/-மும்; சான்றிதழும் வழங்கப்படுகின்றன:—

1. மரபுக் கவிதை
2. புதுக் கவிதை
3. புதினம்
4. சிறுகதை
5. நாடகம்
6. சிறுவர் இலக்கியம்
7. திறனாய்வு
8. மொழியியல், இலக்கணம்
9. மொழிபெயர்ப்பு
10. நுண் கலைகள்
11. அகராதி
12. பயண இலக்கியம்
13. வாழ்க்கை வரலாறு
14. நாட்டு வரலாறு, கல்வெட்டு, தொல்லியல், கடலியல்
15. இயற்பியல், வேதியியல், வானவியல், கணிதவியல்
16. பொறியியல், தொழில்நுட்பவியல்
17. மானுடவியல், சமூகவியல், புவியியல், நிலவியல்
18. சட்டவியல், அரசியல்
19. பொருளியல், வணிகவியல், மேலாண்மையியல்

20. மருந்தியல், உடலியல், நலவியல்

21. தமிழ் மருத்துவ நூல்கள் (சித்தம், ஆயுர்வேதம்)

22. சமயம், ஆன்மிகம், அளவையியல்

23. கல்வியியல், உளவியல்

24. வேளாண்மையியல், கால்நடையியல்

25. சுற்றுப்புறவியல்

26. கணினியியல்

27. நாட்டுப்புறவியல்

28. வெளிநாட்டுத் தமிழ்ப் படைப்பிலக்கியம்

29. இதழியல், தகவல் தொடர்பு

30. பிற சிறப்பு வெளியீடுகள்

31. விளையாட்டு

32. மகளிர் இலக்கியம்

33. தமிழர் வாழ்வியல்

தமிழ் எழுத்தாளர்களுக்கு பெருமை சேர்க்கும் வகையில் கடந்த 1991-1996, 2001-2006 மற்றும் 2012-2013 ஆம் ஆண்டில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட மகளிர் இலக்கியம், தமிழர் வாழ்வியல் எனும் இரு வகைப்பாடுகள் உட்பட 20 வகைப்பாடுகள் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

நூல்கள் வெளியிட நிதியுதவி

தமிழில் சிறந்த நூல்கள் வெளியிடப்படுவதை ஊக்கப்படுத்தும் நோக்கில் நூலாசிரியர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்படுகிறது. நூலின் அச்சுச் செலவில் 60% தொகை (அரசு அச்சக மதிப்பீட்டின்படி) அல்லது ரூ.50,000/- இவற்றில் எது குறைவோ அத்தொகை நூலாசிரியருக்கு நிதியுதவியாக இரு தவணைகளில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இத் திட்டத்தின்கீழ் நிதியுதவி பெற நூலாசிரியருக்கு ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்குள் இருக்க வேண்டும்.

2013 மே 10]

திருக்குறள் பரிசு

திருக்குறள் நெறிகள் மாணவச் செல்வங்களின் மனத்தில் பதியும் வகையிலும், அவர் தம் நினைவாற்றலை மேம்படுத்தும் வகையிலும் திருக்குறள் ஒப்பித்தல் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. அத் திட்டத்தின்படி 1,330 திருக்குறளையும் ஒப்பிக்கும் மாணவர்களுக்கு ரூ.10,000/— பரிசாக வழங்கப்பட்டு வருகிறது. 2012—2013 ஆம் ஆண்டு 36 மாணவர்களுக்கு குறள் பரிசாக தலா ரூ.10,000/— வழங்கப்பட்டது.

கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டி

தமிழ் இலக்கியத் திறனையும், பேச்சுத் திறனையும் மாணவப் பருவத்திலேயே வெளிப்படுத்திட ஆண்டுதோறும் மேல்நிலைப் பள்ளி மாணவர்களிடையேயும், கல்லூரி மாணவர்களிடையேயும் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் நடத்தப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கீழ்க்காணுமாறு பரிசுத் தொகை உயர்த்தப்பட்டது.

பரிசுத் தொகை விவரம்:—

வகைப்பாடு	பரிசு	2011–2012–க்கு முன்னர் வழங்கப்பட்ட தொகை (ரூபாயில்)	தற்போது உயர்த்தப்பட்டு வழங்கப்படும் தொகை (ரூபாயில்)
மாவட்ட அளவில் பள்ளி மாணவர்கள்	முதற்பரிசு	1,000	10,000
	இரண்டாம் பரிசு	500	7,000
மாவட்ட அளவில் கல்லூரி மாணவர்கள்	முதற்பரிசு	1,000	10,000
	இரண்டாம் பரிசு	–	7,000
மாநில அளவில் பள்ளி மாணவர்கள்	முதற்பரிசு	5,000	15,000
	இரண்டாம் பரிசு	3,000	12,000
	மூன்றாம் பரிசு	2,000	10,000
மாநில அளவில் கல்லூரி மாணவர்கள்	முதற்பரிசு	5,000	15,000
	இரண்டாம் பரிசு	3,000	12,000
	மூன்றாம் பரிசு	2,000	10,000

நூல்கள் நாட்டுடைமை

தமிழ் மொழிக்கு வளமும் பெருமையும் சேர்க்கும் வகையில் தமிழறிஞர்களின் நூல்கள் அனைவரையும் சென்றடைய வேண்டும்

எனும் நோக்கில் 146 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களின் மரபுரிமையர்க்குப் பரிவுத் தொகைகள் வழங்கப்பட்டன. நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்களை அச்சிட்டு வெளியிடும் பணி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வாயிலாக நடைபெற்று வருகிறது.

சுற்றுலாப் பயணிகளுக்குத் திருக்குறள்

தலைசிறந்த ஆங்கில மொழியாக்கத்துடன்கூடிய திருக்குறள் நூல் அரசு விருந்தினர் இல்லங்களிலும், நட்சத்திர விடுதிகளிலும் அணி செய்கின்றன,

திருக்குறள் தமிழ் மூலவடிவத்துடன் இந்தி, வங்காளம் மற்றும் ஆங்கில மொழியாக்கத்துடன் ஒரே பதிப்பாகத் தொகுத்து உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வாயிலாக அச்சிட்டு வெளியிடும் நிலையிலுள்ளது.

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களின் இன்னலைப் போக்கும் வண்ணம் இத்திட்டத்தின்கீழ் ரூ.1,000/- ஆக வழங்கப்பட்ட நிதியுதவியினை ரூ.2,000/- ஆக உயர்த்தியும், தமிழறிஞர்கள் பயன்பெறும் வகையில் ஆண்டு வருமான வரம்பு ரூ.12,000/- என்று இருந்ததை ரூ.24,000/- என உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார். கடந்த 2012-2013 ஆம் நிதியாண்டில் 30 தமிழறிஞர்களுக்கு நிதியுதவி ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

தமிழறிஞர்களுக்கு நிதியுதவி

தமிழ் மொழிக்கும், தமிழ்ப் பண்பாட்டுக்கும் ஏற்றமளிக்கும் வகையில், தொண்டும் தியாகமும் புரிந்தவர்களைப் பாராட்டும் வகையில் அவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் அரசால் உதவித் தொகை வழங்கப்படுகிறது. அவர்களின் மறைவுக்குப் பின் மரபுரிமையர்க்கும் நிதியுதவி வழங்கப்படுகிறது. இவ்வகையில் தமிழறிஞர்களுக்கு வாழ்நாள் முழுவதும் திங்கள்தோறும் நிதியுதவி ரூ.3,000/- மற்றும் மருத்துவப் படி ரூ.15/- எனவும், அவர்களின் மரபுரிமையர்க்கு நிதியுதவி ரூ.1,500/- மற்றும் மருத்துவப் படி ரூ.15/- எனவும் வழங்கப்படுகிறது. 2012-2013 ஆம் ஆண்டில் தமிழறிஞர்கள் 2 பேருக்கும் தமிழறிஞர்களின் மரபுரிமையர் 88 பேருக்கும் நிதியுதவி ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

2013 மே 10]

எல்லைக் காவலர்களுக்கு நிதியுதவி

தமிழக எல்லையைக் காக்கப் போராடியவர்களைப் போற்றும் வகையில் அவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் திங்கள்தோறும் நிதியுதவி ரூ.4,000/- மற்றும் மருத்துவப் படி ரூ.15/-, அவர்களின் மரபுரிமையருக்கு நிதியுதவி ரூ.2,000/- மற்றும் மருத்துவப் படி ரூ.15/- வழங்கப்படுகிறது. 2012-2013 ஆம் ஆண்டில் எல்லைக் காவலர்கள் 12 பேருக்கும் எல்லைக் காவலர் மரபுரிமையர்கள் 19 பேருக்கும் நிதியுதவி ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

நல்கைகள்

தமிழ் வளர்ச்சியின் மேல் அக்கறையும் ஈடுபாடும் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்ற 2011-2012 நிதியாண்டைக் காட்டிலும் 2012-2013 நிதியாண்டில் இருமடங்காக நிதியை உயர்த்தி வழங்கி ஆணையிட்டுள்ளார்.

2012–2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட அரசின் நல்கைகளின் விவரம்

வ. எண்	நிறுவனம்	பொருண்மை		நல்கைத் தொகை ரூ.
1.	தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்	ஊதியச் செலவுகள் மற்றும் பிற செலவினங்கள்	7,95,97,000	8,49,67,000
		சீன மொழியில் திருக்குறள்	41,70,000	
		கணினி வழித் தமிழ் வளர்ச்சி (தமிழக தகவல் தளம்)	12,00,000	
2.	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை	ஆண்டு நல்கை மற்றும் ஓய்வூதியப் பயன்கள்	1,93,62,000	2,03,62,000
		அரபு மொழியில் பாரதியார், பாரதிதாசன், கவிதைகள்.	10,00,000	
3.	உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை	ஆண்டு நல்கை		38,52,000
4.	ஆசியவியல் நிறுவனம், சென்னை	ஆண்டு நல்கை – தமிழ் ஆய்வுத் திட்டம்		22,50,000

வ. எண்	நிறுவனம்	பொருண்மை		நல்கைத் தொகை ரூ.
5.	தமிழ் இணையக் கல்விக் கழகம்	கணினிவழித் தமிழ் வளர்ச்சி (தமிழக தகவல் தளம்)		12,00,000
6.	அறிவியல் தமிழ் மன்றம்	ஆண்டு நல்கை		8,14,000
7.	பன்னாட்டு திராவிட மொழியியல் பள்ளி திருவனந்தபுரம்	ஆண்டு நல்கை		5,00,000
8.	திராவிடப் பல்கலைக் கழகம், குப்பம்	ஆண்டு நல்கை – தமிழில் முதுகலை, ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்டம் பயிலும் மாணவர்களுக்கு நிதியுதவி		3,67,350
	மொத்தம்			11,43,12,350
(பதினொரு கோடியே நாற்பத்து மூன்று இலட்சத்து பன்னிரண்டாயிரத்து முந்நூற்று ஐம்பது மட்டும்)				

திருக்குறள் சீன, அரபு மொழிகளில்

திருக்குறள் சீன மொழியிலும் அரபு மொழியிலும் மொழியாக்கம் நிறைவடைந்து நூல்கள் வெளியிடும் நிலையில் உள்ளன.

பாரதியார், பாரதிதாசன் கவிதைகள் சீன அரபு மொழிகளில்

பாரதியார் மற்றும் பாரதிதாசன் பாடல்கள் தெரிவு செய்து மொழியாக்கப் பணி தொடங்கவுள்ளது. சீன மொழிபெயர்ப்புக்கு ரூ.60 இலட்சத்திற்கு நிருவாக ஒப்புதலும், அரபு மொழிபெயர்ப்புக்கென உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு ரூ.10 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

2012–2013 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்ட திட்டங்கள்

தமிழ் வளர்ச்சிப் பணிகள் மேலும் செம்மையுறும் நோக்கில் 2012-2013 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் பின்வருமாறு செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

2013 மே 10]

1. இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை

ஆர்வமுள்ள இளம் படைப்பாளிகளை ஊக்குவிக்கும் வகையில் கவிதை, கட்டுரை, பேச்சுத் திறன் மேம்பாடு அடைய ஒருவார காலத்திற்கு ரூ.10 இலட்சம் மதிப்பில் 100 பேருக்குத் திருவரங்கம், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது.

2. ஆட்சித் தமிழ்ப் புத்தாக்கப் பயிற்சி

தமிழ் வளர்ச்சித் துறையால் வெளியிடப்பட்டுள்ள ஆட்சித் தமிழ் நூல் அடிப்படையில் 2012 ஆம் ஆண்டு முதல் ஆட்சிமொழி வரலாறு, ஆட்சிமொழிச் சட்டம், ஆட்சிமொழிச் செயலாக்கம் தொடர்பாக அனைத்து மாவட்டங்களிலும் (சென்னை நீங்கலாக) உள்ள கழகங்கள், வாரியங்கள் மற்றும் கூட்டுறவுப் பணியாளர்களுக்கும், அரசுப் பணியாளர்களுக்கும் ரூ.9.30 இலட்சம் செலவில் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

(அ) ஆட்சிமொழிக் கருத்தரங்கம்

மாவட்டந்தோறும் ஆட்சிமொழிக் கருத்தரங்குகள் நடத்திட ஆண்டிற்கு செலவினத் தொகை ரூ.5,000/-லிருந்து ரூ.20,000/- ஆக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டது. அவ்வகையில், அனைத்து மாவட்டங்களிலும் கருத்தரங்குகள் நடத்தி முடிக்கப்பட்டன.

3. அரிய தமிழ் நூல்கள்

தமிழகத்தில் கிடைக்கப்பெறாத, வெளிநாட்டு நூலகங்களில் உள்ள அரிய தமிழ் நூல்கள் அறியப்பட்டுள்ளன. அவற்றுள் 10 நூல்கள் தெரிவு செய்து மின் எண்மத்தில் பதிவு செய்து நூலாக வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

4. தமிழ் வளர்ச்சித் துறைக்கு வலைத்தளம் (www.tamilvalarchithurai.org)

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ் வளர்ச்சித் துறைக்கென தனி வலைத்தளத்தை தொடங்கி வைத்தார்கள். இவ்வலைத்தளம் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கப் பணிகள், தமிழ் வளர்ச்சி தொடர்பான திட்டங்கள், நாட்டுடைமை ஆக்கப்பட்ட நூல்கள், ஆட்சிச் சொல்லகராதி போன்றவற்றை அரசு அலுவலர்களும் பொதுமக்களும் உடனுக்குடன் அறிந்துகொள்ளும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

[2013 மே 10

தமிழ் வளர்ச்சித் துறை வலைத்தளத்தின் பக்கங்களைச் சொடுக்கியவுடன் தமிழ் மாநாடுகளின் ஒளி-ஒலிப்படங்கள், அரிய குறிப்புகள் பதிவிறக்கம் செய்யும் வசதி உள்ளது.

5. பிறநாட்டு அறிஞர்கள் பார்வையில் தமிழ்

தமிழ், தமிழர் வரலாறு மற்றும் சிறப்புகள் குறித்துப் பிறநாட்டு அறிஞர்கள் கூறிய கருத்துகளைத் திரட்டித் தமிழிலும் ஆங்கிலத்திலும் நூலாக வெளியிடும் நிலையில் உள்ளது.

6. அறநெறிக் கருவூலம்

பள்ளி மாணவர்களுக்குத் தமிழ் நூல்களில் உள்ள அறக்கருத்துகள் சென்றடைய வேண்டும் எனும் நோக்கோடு அறநெறிக் கருத்துகள் நூலாகத் தொகுக்கப்பட்டு வெளியிடும் நிலையில் உள்ளது. அறநெறிக் கருவூலம் நூல் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு விலையின்றி வழங்கப்படும்.

7. பொன்மொழிக் களஞ்சியம்

சங்ககாலம் முதல் இக்காலம் வரை தமிழ் இலக்கியங்களில் உள்ள புகழ் வாய்ந்த பொன்மொழிகளைத் தொகுக்கும் பணி நிறைவுற்று அச்சடித்து நூலாக வெளியிடும் நிலையில் உள்ளது.

8. சிறந்த நூல்களுக்குப் பரிசு

சிறந்த நூல் பரிசுத் திட்டத்தில் மகளிர் இலக்கியம், தமிழர் வாழ்வியல் என்ற இரு புதிய வகைப்பாடுகள் உருவாக்கப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

9. உலகத் தமிழ்ச் சங்கம்

உலகத் தமிழ்ச் சங்கம் மதுரையில் புதுப்பொலிவுடன் செயற்படும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உயரிய எண்ணப்படி புத்தாக்கம் பெற்றுச் சிறப்புடன் செயற்பட்டு வருகிறது.

10. புதிய வாகனங்கள்

புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட அரியலூர் மற்றும் திருப்பூர் மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கு இரண்டு வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன.

2013 மே 10]

மொழிபெயர்ப்புப் பிரிவு – தலைமைச் செயலகம்

'மொழியாக்கம் தமிழுக்கு வாய்த்த நல்லாக்கம்' என்பது ஆட்சிமொழித் தமிழ் தொடர்பான நன்மொழியாகும். தலைமைச் செயலகத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் மொழிபெயர்ப்புப் பிரிவு செயற்பட்டு வருகிறது.

நெடுங்காலமாகச் சட்டமன்றப் பணிகள், அரசு நிருவாகச் செயல்முறைகள் ஆகிய அனைத்துமே ஆங்கில மொழி வாயிலாகவே நடைபெற்றுவந்தன. இந்நிலையில், ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கும் பணி நாட்டின் விடுதலைக்குப் பிறகு முதலிடம் பெறலாயிற்று. அதற்குரிய வகையில் மொழியாக்கம் செய்யும்போது, புதிய சொற்களும், கலைச்சொற்களும் உருவாகின்றன. இப்பணி ஆட்சிமொழி வளர்ச்சிக்கு அருந்துணையாக அமைகிறது.

அரசுக் கோப்பு நிரல்

பின்வரும் இனங்களில் ஆங்கிலத்தில் உருவாக்கம், வரைவு செய்யப்பட்ட அனைத்துக் கோப்புகளும் தமிழாக்கம் செய்யப்படுகின்றன:

- அமைச்சரவைக் குறிப்புகள்
- அரசிதழில் வெளியிடப்படும் அறிவிக்கைகள்
- பொதுத் துறையின் கமுக்கக் குறிப்புகள்
- விசாரணை ஆணையங்களின் அறிக்கைகள்
- அரசாணைகள்
- சுற்றோட்டக் குறிப்புகள்
- காவலர் பதக்கங்கள் தொடர்பான தகுதியுரைகள்
- மானியக் கோரிக்கைகள்
- துணை மதிப்பீடுகள்
- பொதுக் கணக்குக் குழுவின் பயன்பாட்டிற்கான அறிக்கைகள்
- வனத் துறை அறிவிக்கைகள்

[2013 மே 10

- *இந்து சமய அறநிலையத் துறையின் நிருவாக வரைவுத் திட்டங்கள்*
- *மாநில மனித உரிமை ஆணைய அறிக்கைகள்*
- *தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆண்டறிக்கைகள்*
- *ஊடக வெளியீடுகள்*

முதன்மைப் பணிகள்

கடந்த ஆண்டில் ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்ட முக்கிய ஆவணங்கள் குறித்த விவரங்கள் பின்வருமாறு:—

- *மாண்புமிகு முதலமைச்சரின் உரைகள்*
- *மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் உரைகள்*
- *தமிழ்நாடு மாநிலத் தகவல் ஆணையத்தின் ஆண்டறிக்கை*
- *தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் ஆண்டறிக்கை*
- *விழிப்புப் பணி ஆணையத்தின் ஆண்டறிக்கை*
- *சுற்றுச்சூழல் பாதுகாப்பு வழிகாட்டிக் குறிப்புகள்*
- *சாலைப் பாதுகாப்பு (திருத்த) விதிகள்*
- *வெளிநாடு வாழ் இந்தியர் திருமணம் தொடர்பான வழிகாட்டிக் குறிப்புகள்*
- *இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களின் நடத்தை (திருத்த) விதிகள்*
- *காவேரி நதிநீர்ப் பங்கீடு குறித்த அறிக்கை*
- *விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கான ஓய்வூதியம் குறித்த விண்ணப்பங்கள்*
- *அரிய 547 வேதிமக் கலைச் சொற்களைத் தமிழில் உருவாக்கி வெளியிடுதல்*
- *தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் நிகழ்ச்சி நிரல்*

2013 மே 10]

மொழிபெயர்ப்புத் துறையைச் சேர்ந்த அலுவலர்கள், ஆட்சியறிக்கைகளின் மொழிபெயர்ப்புப் பணிகளுக்கும் அப்பால், திருக்குறளைச் சீன மொழியிலும், அரபு மொழியிலும் மொழியாக்கம் செய்கிற மொழிபெயர்ப்பாசிரியர்களுக்குத் துணையாக ஒருங்கிணைக்கும் வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

“அறிஞர்களும் ஆராய்ச்சியாளர்களும், அடங்கிய ஒரு நிறுவனத்தினை நீங்கள் அமைக்க விரும்பினால் அதனை வரவேற்போரில் நான் முதல்வனாக இருப்பேன். பிரெஞ்சு அகெதமியினைப் போன்று (French Academy) ஒரு நிறுவனத்தைத் தமிழ்நாட்டில் தமிழுக்காக நிறுவுங்கள்”

பேரறிஞர் அண்ணா
இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு-1968

பேரறிஞர் அண்ணா அவர்களின் மேற்கூறிய கருத்தின் அடிப்படையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது.

நோக்கம்

- தமிழ்க் கல்வியில் உயராய்வினை வளப்படுத்துவது
- உயர் தமிழாய்வினை ஊக்குவிக்கும் கல்விச் சூழலை உருவாக்குவது
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஆய்வுக்குகந்த தரமான நூலகம் பேணுதல்
- தமிழரல்லாதார்க்குத் தமிழ்மொழியினைப் பயிற்றுவிப்பது
- பல்துறை ஆராய்ச்சியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பது
- தமிழாய்வு தொடர்பாகப் பிற நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்வது
- பிறநாட்டுத் தமிழறிஞர்களுடன் தமிழாய்வுத் தகவல்களைப் பகிர்ந்துகொள்வது
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் கல்விச் சூழல் வளம்பெறும் வகையில் அயலகத் தொடர்புகளை மேம்படுத்துவது

[2013 மே 10

ஆளுகைக் குழு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் உயராய்வுத் தமிழ்ப் பணிகள் சிறப்புடன் தொடர்ந்து நடைபெற மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களை ஆளுகைக் குழுத் தலைவராகக் கொண்டு செயற்படுகின்றது.

புலங்கள்

1. தமிழ் இலக்கியம் மற்றும் சுவடிப் புலம்
2. தமிழ் மொழி மற்றும் மொழியியல் புலம்
3. சமூகவியல், கலை மற்றும் பண்பாட்டுப் புலம்
4. அயல்நாட்டுத் தமிழர் புலம்

செயற்பாடுகள்

தமிழ் உயராய்வு மையமாகத் திகழும் இந்நிறுவனத்தில் பல்துறை அறிவுப் புலங்களில் கல்விசார் அலுவலர்கள் இலக்கியவியல், இலக்கணவியல், மொழியியல், சமூகவியல், பண்பாட்டியல், நாட்டுப்புறவியல், மொழிபெயர்ப்பியல் போன்ற பிரிவுகளில் தனித்தனியே திட்டப் பணிகளில் செயலாற்றி வருகின்றனர். மேலும், இந்நிறுவனம் தமிழ் பரப்பும் பணியில் பின்வருமாறு செயலாற்றி வருகிறது:

- தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிராத, பிற மொழியாளர்களுக்குத் தமிழ் மொழியினைக் கற்பித்தல்
- முனைவர் பட்ட ஆய்வாளர்களைச் சென்னைப் பல்கலைக்கழக இணைவுடன் நெறிப்படுத்துதல்
- ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட மாணவர்களைத் தமிழ்ப் பல்கலைக்கழக இணைவுடன் நெறிப்படுத்துதல்
- சான்றிதழ்ப் பயிற்சி வகுப்புகளை நடத்துதல்
- பன்னாட்டு / தேசிய ஆய்வுக் கருத்தரங்குகள் (ம) பயிலரங்குகள் நடத்துதல்

2013 மே 10]

அறக்கட்டளைப் பொழிவுகள்

உயர் தமிழாய்வுக்காக அறக்கட்டளைகள் தனிமனிதக் கொடை அல்லது பலரது முயற்சி என்ற நிலையில் நிறுவப்பட்டுள்ளன. இதுவரை 34 அறக்கட்டளைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

2012-2013 ஆம் ஆண்டில் 16 அறக்கட்டளைப் பொழிவுகள் நிகழ்த்தப்பெற்று அவை அனைத்தும் நூலாக வெளியிடப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சரின் பிறந்த நாள் நிகழ்வுகள்

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 2013 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் முழுவதும் பன்னாட்டுக் கருத்தரங்குகள், பயிலரங்குகள், கலை நிகழ்ச்சிகள், அறக்கட்டளைப் பொழிவுகள் பின்வரும் தலைப்புகளை அடிப்படையாகக் கொண்டு சிறப்பாக நடத்தப்பெற்றன:

- *பள்ளிக் கல்வியில் தமிழ் மொழி கற்பித்தல்*
- *கலைகளும் கலைஞர்களும்*
- *தமிழ்க் கணினி*
- *அயல்நாட்டுத் தமிழ் இலக்கியங்கள்*
- *சுவடிப் பதிப்புகளின் தொகுப்பாய்வு*

தாய் மொழித் திருநாள்

ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனம் (யுனெஸ்கோ) பிப்ரவரித் திங்கள் 21 ஆம் நாளினைத் தாய் மொழித் திருநாளாக அறிவித்தது.

உலகத் தாய் மொழித் திருநாள் விழா உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பிப்ரவரி 21 ஆம் நாளன்று கொண்டாடப்பட்டது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பயிலும் முனைவர் மற்றும் ஆய்வியல் நிறைஞர் மாணவர்களுக்கிடையே கவிதை, கட்டுரை, பேச்சு மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2013 மே 10

மொழியாக்கத் திருநாள்

மொழிபெயர்ப்பின் தேவையை உணர்த்தும் வகையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் மொழியாக்கத் திருநாள் 16-3-2013 ஆம் நாளில் கொண்டாடப்பட்டது.

தைவான் நாட்டின் பொருளியல் மற்றும் பண்பாட்டு மையத் தலைமை இயக்குநர், மலேசிய நாட்டுத் துணைத் தூதர், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகப் பதிப்புத் துறை இயக்குநர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நூல் வெளியீடுகள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இதுவரையில் 751 தரமான ஆய்வு நூல்களை வெளியிட்டுள்ளது. அவை கல்விசார் அலுவலர்களின் திட்டப் பணிகள், நிறுவனக் கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்புகள் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், சுவடிப் பதிப்புகள், மொழிபெயர்ப்புகள், அரிய நூல் மறுபதிப்புகள், பிற தமிழறிஞர்களின் படைப்புகள் என்னும் பகுப்புகளில் அடங்கும்.

தமிழியல்—ஆய்விதழ்

தமிழியல் இதழ் தமிழ் ஆங்கில மொழிகளில் ஆண்டுக்கு இருமுறை 1972 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் முதல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் தொய்வின்றி வெளியிடப்பட்டு வருகிறது. உலகில் வாழும் தமிழ் ஆங்கில அறிஞர்களுக்கு இவ்விதழ் இணைப்புப் பாலமாக அமைகிறது.

தமிழியல் ஆய்விதழிலுள்ள கட்டுரைகளை உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வலை தளத்திலிருந்து (www.ulakaththamizh.org.) *பதிவிறக்கம் செய்யவும் வகை செய்யப்பட்டுள்ளது.*

கல்வியியல் பட்டங்கள்

சென்னைப் பல்கலைக்கழக ஏற்புடன் தமிழ் இலக்கியத்தில் முழுநேர மற்றும் பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வும் தமிழ்ப் பல்கலைக்கழக ஏற்புடன் தமிழ் ஆய்வியல் நிறைஞர் பட்ட வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாண்டு 16 முனைவர் பட்ட ஆய்வாளர்களும் 48 ஆய்வியல் நிறைஞர் மாணவர்களும் பயின்று வருகின்றனர்.

2013 மே 10]

ஆய்வு நூலகம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன ஆய்வு நூலகத்தினை ஆய்வாளர்கள் மட்டுமன்றி இந்திய ஆட்சிப் பணித் தேர்வு மாணவ-மாணவியர், முதுகலை மாணவ-மாணவியர், தமிழாய்வாளர்கள் என அனைவரும் பயன்படுத்துகின்றனர். இந்நிறுவன நூலகத்தில் 1,00,800 நூல்கள் அணி செய்கின்றன.

நல்கை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் செலவினங்கள் அனைத்தையும் மேற்கொள்ள தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் நல்கை வழங்கி வருகிறது. 2013-2014 ஆம் நிதியாண்டில் வாலாய நல்கையாக ரூ.147.80 இலட்சமும், ஓய்வூதிய நல்கையாக ரூ.29.60 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளன.

புதிய நிருவாகக் கட்டடம்

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் மூன்று தளங்களைக் கொண்ட புதிய நிருவாகக் கட்டடம் ரூ.3.60 கோடியில் தமிழ்நாடு அரசு தொழில்நுட்பக் கல்விக் கோட்டப் பொதுப் பணித் துறையின்மூலம் விரைவில் கட்டப்படவுள்ளது.

தமிழ்ச் சங்கப் பூங்கா

சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள மரங்களான அகில், கொன்றை, காயா, காஞ்சி போன்ற மரங்களையும் மற்றும் மலர்ச் செடிகளான குறிஞ்சி, காந்தள், முல்லை, தோன்றி, ஆம்பல் போன்ற செடி வகைகளையும் கொண்ட பூங்கா ஒன்று 'தமிழ்ச் சங்கப் பூங்கா' எனும் பெயரில் இந்நிறுவனத்தில் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

அரபு மொழியில் திருக்குறள்

திருக்குறள் 13 இந்திய மொழிகளிலும், 10 ஆசிய மொழிகளிலும் 14 ஐரோப்பிய மொழிகளிலும் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும், 97 ஆங்கில மொழியாக்கங்களும் இந்நாள்வரை வெளியிடப்பட்டுள்ளன. தமிழ் மொழியின் தொன்மையையும் பெருமையையும் மற்ற மொழியினரும் உணர்ந்து போற்றத்தக்க வகையில் திருக்குறள் அரபு மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டு அச்சிட்டு வெளியிடப்படும் நிலையில் உள்ளது.

[2013 மே 10

அரபு மொழியில் பாரதியார், பாரதிதாசன் பாடல்கள்

பாரதியார், பாரதிதாசன் பாடல்களை அரபு மொழியில் மொழியாக்கம் செய்ய பாடல்கள் தெரிவு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

செந்தமிழில் சொற்பிறப்பியல் பேரகரமுதலி 12 மடலங்களில் 31 பகுதிகளாகத் தொகுக்கப்பட்டன. அவை 12,000 பக்கங்கள் கொண்ட பேரகரமுதலியாக இவ்வியக்ககத்தால் வெளியிடப்பட்டது.

இந்நூல் தொகுப்பு, மொழி ஆராய்ச்சியாளர்களுக்கும், ஆசிரியப் பெருமக்களுக்கும், மாணவ மணிகளுக்கும் பெரிதும் பயன்தரும் சிறந்த கருவி நூலாகத் திகழும்வண்ணம் திருந்திய பதிப்பாக வெளியிடப்பெறும்.

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

தமிழ்மொழி உலகின் தொன்மையான மொழிகளுள் தலைசிறந்தது. உலக நாடுகளைத் தனது நாடு என்றும் உலக மக்களைத் தன் உறவினர்கள் என்றும் எண்ணுபவன் தமிழன். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது தமிழனின் உயர் குணம். தமிழ் உலகளாவிய சிந்தனை உடையது. உலகளாவிய உயர் எண்ணங்களுடன் தமிழ்ப் பல்கலைக்கழகம் 1981 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் நாள் முன்னாள் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் தமிழ்ப் பணிகளைத் தொடர்ந்து சிறப்பாக ஆற்றிவருகிறது.

நோக்கங்கள்

- *இந்தியப் பண்பாட்டிற்குத் தமிழர் பண்பாட்டின் பங்கு பற்றிய ஆய்வினை மேற்கொள்ளுதல்*
- *தமிழ் இனத்தின் பண்டைய அறிவியல் சிந்தனைகள், அறிவுசார் படைப்புகள், தொழில் சிறப்புகள் முதலியவற்றை மீட்டுருவாக்கம் செய்தல், காலத்தின் தேவைகளுக்கு ஏற்றவாறு பழமையை வடிவமைத்தல்*

2013 மே 10]

- தமிழிலக்கணக் கோட்பாடுகளுடன், மொழியியல் கொள்கைகளை ஆராய்தல், மொழியின் அமைப்பினையும் பயன்பாட்டினையும் விளக்குதல், மொழி கற்பித்தலில் நவீன முறைகளை உருவாக்குதல்
- அரிய தமிழ் நூல்களைப் பிற மொழிகளிலும், பிறமொழி நூல்களைத் தமிழிலும் மொழிபெயர்த்தல். கல்வெட்டுகள், ஓலைச் சுவடிகள், பழைய கையெழுத்துச் சுவடிகள், முதல் பதிப்புப்பெற்ற பழைய நூல்கள் ஆகியவற்றைப் பேணிக் காத்தல், மறுபதிப்பு வெளியிடுதல், இலக்கியக் களஞ்சியங்கள், இலக்கணக் களஞ்சியங்கள், அறிவியல் கலைச்சொற் களஞ்சியங்கள், மெய்யியல் களஞ்சியங்கள் முதலியவற்றை உருவாக்குதல்
- மறைந்துபோன பண்பாட்டுக் கூறுகளை வரலாற்றுச் சின்னங்களை ஆய்வுகளின் வாயிலாக மீட்டெடுத்து அவற்றைப் பற்றிய அருஞ்செய்திகளை வெளியிடுதல்
- அயல்நாட்டார் தமிழகத்தாருடன் கொண்ட உறவு பற்றியும், புலம்பெயர்ந்து சென்ற தமிழர்கள் தாம் சென்ற இடங்களில் தம் மரபுசார் பண்பாட்டினைப் பின்பற்றுதல் பற்றியும் ஆராய்தல்

புலங்கள்—துறைகள்

- கலைப் புலம்
- சுவடிப் புலம்
- வளர்தமிழ்ப் புலம்
- மொழிப் புலம்
- அறிவியல் புலம்

இப்புலங்களின்கீழ் 25 துறைகள் செயல்படுகின்றன.

முதன்மைத் திட்டங்கள்

- தூய தமிழ்ச் சொல்லாக்க அகர முதலிகள் திட்டம்
- கலைக்களஞ்சியத் திட்டம்
- பெருஞ்சொல்லகராதித் திட்டம்

[2013 மே 10

கல்விப் பணி

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம், ஆய்வியல் நிறைஞர் பட்டம், முதுகலை, முது அறிவியல், இளங் கல்வியியல் பட்ட வகுப்புகள் நடைபெற்றுவருகின்றன.

புதிய வகுப்பு

- *முது கல்வியியல் பட்டம்*

மாணவர் சேர்க்கை

- *முனைவர் பட்டம்—137*
- *ஆய்வியல் நிறைஞர்—284*
- *முதுகலை மற்றும் முது அறிவியல்—171*
- *முது கல்வியியல்—35*
- *இளங் கல்வியியல்—100*

தொலைநிலைக் கல்வி

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தொலைநிலைக் கல்வி இயக்ககம் 2006-2007 ஆம் கல்வியாண்டில் தொடங்கப்பட்டது.

தமிழ், வரலாறு, தமிழிசை, புவியியல் போன்ற பல்வேறு பாடப் பிரிவுகளில் 4 முதுநிலைப் பட்டப் படிப்புகள் நடைபெற்று வருகின்றன.

ஐந்து இளநிலைப் பட்டப் படிப்புகளும் நடைபெற்று வருகின்றன. பரத நாட்டியம், மூலிகை மருத்துவம், அழகுக் கலை, மணியியல் முதலிய பட்டயப் படிப்புகளும் நடைபெற்று வருகின்றன.

இசை, தமிழ்ப் புலவர் பயிற்சி, நூலகம் மற்றும் தகவலறிவியல் முதலிய சான்றிதழ்ப் படிப்புகளும் பி.பி.ஏ, எம்.பி.ஏ., பி.சி.ஏ. முதலிய தொழில் முறைப் படிப்புகளும் நடைபெறுகின்றன. இளங்கல்வியியல் (பி.எட்.) பட்ட வகுப்பும் நடத்தப்படுகிறது.

இப்பாடப் பிரிவுகளில் 2011-2012 ஆம் கல்வியாண்டில் 2,317 மாணவ மாணவியர் பயின்றுவருகின்றனர். மேலும், இளங்கல்வியியல் (பி.எட்.) பாடப் பிரிவில் தொலைநிலை வழியாக 500 மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

2013 மே 10]

பல்வேறு நிறுவனங்களுடன் தொலைநிலைக் கல்வி நிறுவனம் இணைந்து தொடு சிகிச்சை, கணினிப் பாடங்கள் முதலியவற்றைக் கற்பித்து வருகிறது. தமிழ் மொழி வழியாக இப்பாடங்கள் கற்பிக்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

உதவித் தொகை

இப்பல்கலைக்கழகத்தில் பயின்றுவரும் 723 மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகையாக ரூ.64,24,477/- அரசால் வழங்கப்பட்டுள்ளது.

கல்வி ஆய்வுப் பணிகள்

இப்பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்கள் கற்பித்தல் பணிகளோடு ஆய்வுப் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றனர். பல்கலைக்கழக நல்கைக் குழு, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் மற்றும் பிற நல்கை நிறுவனங்களின் உதவியுடன் கல்வியாளர்கள் பெருந்திட்ட, குறுந்திட்ட ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் முதுகலை மற்றும் ஆய்வியல் நிறைஞர் படிப்புகள் நடத்திவரும் நிலையில், தற்போது கூடுதலாக முனைவர் பட்டப் படிப்பும் தொடங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக நல்கைக் குழுவின் நல்கையின்கீழ் 9 ஆய்வுத் திட்டங்களும், பிற நிறுவனங்களின் நல்கைவழி 20 ஆய்வுத் திட்டங்களும், தமிழ்ப் பல்கலைக்கழக நிதியின்கீழ் 43 ஆய்வுத் திட்டங்களும் நடைபெற்று வருகின்றன.

அறக்கட்டளைப் பொழிவுகள்

2012-2013 ஆம் ஆண்டில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகள் வாயிலாக 41 அறக்கட்டளைச் சொற்பொழிவுகளும், 26 கருத்தரங்குகளும் நடத்தப்பட்டுள்ளன.

ஆய்வு, பயிற்சி, மேம்பாட்டுப் பணிகள்

- தமிழ்நாடு அரசின் 2012-2013 ஆம் ஆண்டிற்கான பகுதி 2 திட்டத்தின்கீழ் ரூ.15.00 இலட்சம் பெறப்பட்டு, மாணவர்கள் பயன்பாட்டிற்குச் சிற்றுந்து, நிதிப் பிரிவுக்குரிய மென்பொருள், கருவிகள் வாங்கப்பட்டுள்ளன.

[2013 மே 10

- தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தனித்தன்மையை மீட்டெடுக்க, கல்வி ஆய்வுப் பணிகளுக்கு 2012-2013 ஆம் ஆண்டில் ரூ.1,35,85,000/- நிதி பெறப்பட்டுப் பல்வேறு துறைகள் சார்ந்த 59 ஆய்வுத் திட்டப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

- கணினிவழித் தமிழ் வளர்ச்சிக்கும் ஆராய்ச்சி மேம்பாட்டிற்கும் ரூ.12.00 இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

- இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி மற்றும் இந்திய வனப் பணி அலுவலர்கள் 40 பேருக்கு மூன்று பயிற்சி வகுப்புகள் நடத்தப்பெற்றன.

- தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் உலகச் செம்மொழிகள் உயராய்வு மையம் செயற்பட்டுவருகிறது. இரண்டு ஆய்வு நூல்கள் இதுவரை தயாரிக்கப்பட்டுள்ளன. உலகச் செம்மொழிகள் இலக்கியம் முதல் தொகுதி வெளியிடப்பட்டுள்ளது. சீன இலக்கிய நூல் அச்சில் உள்ளது.

- திராவிட மொழிகளுக்கான சொல்வலை உருவாக்கும் திட்டம் ரூ.16.39 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்றுவருகின்றது.

- இந்திய மொழிகளுக்கான பெருந்தரவுத் திட்டம் ரூ.16 இலட்சம் மதிப்பில் நடைபெற்றுவருகிறது.

- ஐநூறு மாணவர்களுக்கு முதலுதவிப் பயிற்சி அளிக்கப்பட்டது. மேதகு ஆளுநரால் பல்கலைக்கழகத்திற்கு விருது வழங்கப்பட்டது.

வளர்தமிழ்ச் சமுதாய வானொலி

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் செயற்படுத்தப்பட்டுவரும் ‘வளர்தமிழ்ச் சமுதாய வானொலி’, தினம் ஒரு திருக்குறள், தமிழிசை, அறிவியல் விழிப்புணர்வுப் பாடல்கள் முதலிய பயன்மிகு நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி வருகிறது.

2013 மே 10]

2012–2013 ஆம் ஆண்டில் தமிழக அரசிடமிருந்து பெறப்பட்ட நல்கை விவரம்

1. ஊதியம் மற்றும் பராமரிப்புக்கான நல்கை

வ. எண்	விவரம்	தொகை (ரூபாயில்)
1.	தொகுப்பு நல்கை முதல் தவணை	95,29,750
2.	ஆறாவது ஊதியக் குழு நிலுவை மற்றும் முதல், இரண்டாவது தவணையில் 60 விழுக்காடு முன்மானியம்	1,51,34,000
3.	தொகுப்பு நல்கை இரண்டாவது தவணை ரூ.95,29,750/– முதல், இரண்டாவது தவணை தொகுப்பு நல்கையின் கூடுதல் நல்கை ரூ.27,50,000 + 27,50,000	1,50,29,750
4.	தொகுப்பு நல்கை மூன்றாவது தவணை	1,22,79,750
5.	தொகுப்பு நல்கை நான்காவது தவணை	1,22,79,750
	மொத்தம்	**6,42,53,000**
	(ரூபாய் ஆறு கோடியே நாற்பத்து இரண்டு இலட்சத்து ஐம்பத்து மூன்று ஆயிரம் மட்டும்)	

2. ஆய்வுத் திட்டங்களுக்கான நல்கை

வ. எண்	விவரம்	தொகை (ரூபாயில்)
1.	கணினிவழித் தமிழ் வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சி மேம்பாடு	12,00,000
2.	இ.ஆ.ப. பயிற்சி வகுப்பு	90,018
3.	இ.கா.ப. பயிற்சி வகுப்பு	25,900
4.	பகுதி 2 திட்டம் – சிற்றுந்து வாங்குதல்	13,00,000
5.	பகுதி 2 திட்டம் – நிதிப்பிரிவு, காசாளர் அறைக்குப் பணம் எண்ணும் கருவி, கள்ளநோட்டு அறியும் கருவி, கணினி மென்பொருள்கள் வாங்குதல்	2,00,000
6.	முனைவர் த. நல்லதம்பி, மார்ச்சு 2011 முதல் பிப்ரவரி 2012 வரை ஊதியம்	2,57,008
7.	திருக்குறள், பாரதியார், பாரதிதாசன் படைப்புகள் சீன மொழிபெயர்ப்பு	41,70,000
8.	ஆய்வுத் திட்டப் பணிகள்	1,30,85,000
9.	காலமுறை இதழ் வெளியிடல்	5,00,000
	கூடுதல்	**2,08,27,926**
	(ரூபாய் இரண்டு கோடியே எட்டு இலட்சத்து இருபத்து ஏழாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்து ஆறு மட்டும்)	

[2013 மே 10

உலகத் தமிழ்ச் சங்கம்—மதுரை

1981 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் உலகத் தமிழ்ச் சங்கம் மதுரையில் தோற்றுவிக்கப்படும் என அறிவித்தார்கள். அதன்படி 1982 ஆம் ஆண்டு உலகத் தமிழ்ச் சங்கத்திற்கென மதுரை, தல்லாகுளம் பகுதியில் 14.15 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது.

நோக்கம்

- *முத்தமிழைப் பேணிக் காத்தல்*
- *உலகெங்குமுள்ள தமிழர்களின் திறம் வெளிப்பட நடவடிக்கை மேற்கொள்ளல்*
- *தமிழ் இலக்கியங்கள், இலக்கண நூல்கள், ஆராய்ச்சி நூல்கள் முதலியன பெருகிட நடவடிக்கை எடுத்தல்*
- *உலகெங்கும் உள்ள தமிழரிடையே அந்தந்த நாடுகளில் பிறந்து தமிழை மறந்துவிட்ட புதிய தலைமுறையினரிடையே தமிழ்க் கல்வி, கலை பண்பாட்டினைப் பரப்ப வழிவகை செய்தல்*

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி உலகத் தமிழ்ச் சங்கம் புதுப்பொலிவுடன் செயற்படும் வகையில் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:

- *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு துணை விதிகள் உருவாக்கப்பட்டு, இச்சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது*
- *உலகத் தமிழ்ச் சங்கம் சிறப்பாகச் செயற்பட தனி அலுவலர் மற்றும் இதர அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்*
- *ரூ.100 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது*
- *இச்சங்கத்திற்கு ரூ.25 கோடி மதிப்பீட்டில் பெருந்திட்ட வளாகம் கட்ட திட்ட வரைபடம் மற்றும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது*

2013 மே 10]

ஆசியவியல் நிறுவனம்

ஆசியவியல் நிறுவனம் ஜப்பானியக் கூட்டுறவோடு 1982 இல் தொடங்கப்பட்டது. முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்நிறுவனத்தின் பணிகளுக்குத் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக ஆண்டு நல்கை 1983 ஆம் ஆண்டு முதல் வழங்க ஆணையிட்டார்கள். அதன்படி, தொடர்ந்து 29 ஆண்டுகளாக அரசு நல்கை இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுவருகிறது.

பணிகள்

- தமிழாய்வை ஒப்பியல் சார்ந்த பன்முக நோக்கில் பிறநாட்டு அறிஞர்களோடு இணைந்து மேற்கொள்ளுதல்
- தமிழர்களின் அயல்நாட்டுத் தொடர்புகளை ஆழமாக ஆய்வு செய்தல்
- பிற ஆசிய நாடுகளின் பண்பாட்டுச் செழிப்புக்குத் தமிழ்ப் பண்பாடு வழங்கிய பங்களிப்புகளை ஆய்ந்து நிலைநாட்டுதல்
- ஆசிய மொழிகளுக்கும், தமிழ் மொழிக்கும் இடையே காணப்படும் தொடர்புகளை ஆய்வு செய்தல்
- புலம்பெயர்ந்த தமிழர்களின் வாழ்வியல் முறைகளைப் பிறநாட்டு அறிஞர்களின் துணையோடு ஆய்வு செய்தல்
- தமிழியல் தொடர்பான ஆய்வுத் தரவு நூல்களை உலக மொழிகளில் வெளியிட்டுத் தமிழாய்வினை உலகளாவிய நிலையில் மேற்கொள்ளுதல்

இந்நிறுவனத்தில் அரிய வகை நூல்களும், ஓலைச் சுவடிகளும் உள்ளன. தமிழியல் தொடர்பான பல கருத்தரங்குகளை இந்தியா மட்டுமன்றி அயல் நாடுகளில் இந்நிறுவனம் நடத்தியுள்ளது. இந்நிறுவனத்தின் உலக நாடுகள் ஆய்விதழ் தமிழியல் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்டு வெளியிடப்படுகிறது.

பதிப்புப் பணி

- அரிய ஓலைச் சுவடிகளிலிருந்து வெளியிடப்படாத தமிழாய்வு நூல்கள்-ஆங்கில மொழியில்
- தமிழிலக்கியக் கலைக் களஞ்சியம்-ஆங்கில மொழியில்
- ஓலைச் சுவடிகளின் விரிவான வகைப்பாடு-தமிழ் மொழியில்

[2013 மே 10

நிறைவுரை

"அறிவுச் செல்வங்கள் அனைத்தையும் தமிழுக்குக் கொண்டு வரவேண்டும், இனி வரும் நூற்றாண்டுகளுக்கும் அருந்தமிழை ஆற்றல்படுத்த வேண்டும்"

–மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா எட்டாம் உலகத் தமிழ் மாநாடு, தஞ்சாவூர்-1995

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சி தமிழ் வளர்ச்சிக்குப் பொற்காலம். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எழிலார்ந்த தமிழுக்கு ஏற்றம் தரும் வகையில் எண்ணற்ற திட்டங்களைச் செயற்படுத்திவருகிறார்கள். சான்றாக

- சித்திரை முதல் நாளைத் தமிழர் மரபுப்படி தமிழ்ப் புத்தாண்டாக அறிவித்தல்
- உலகத் தமிழ்ச் சங்கம் புதுப்பொலிவுடன் செயற்பட ரூ.100 கோடி
- தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தனித்தன்மையை மீட்டெடுக்க ரூ.12 கோடி
- தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பெருமைமிகு கட்டடப் பராமரிப்புக்கு ரூ.2 கோடி சிறப்பு நிதியுதவி
- சீன, அரபு மொழிகளில் திருக்குறளை மொழியாக்கம் செய்தல்
- மாணவர்களுக்கு அறநெறிக் கருவூலம், பொன்மொழிக் களஞ்சியம்
- அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உயர்த்தப்பட்ட ஓய்வூதியம்
- சிறந்த தமிழ் அமைப்புக்குத் தமிழ்த்தாய் விருது
- சிறந்த தமிழறிஞர்களுக்கு உ.வே.சா., கபிலர், கம்பர், சொல்லின் செல்வர் விருதுகள்
- மாணவர்களுக்கான இலக்கியப் போட்டிகளுக்கு உயர்த்தப்பட்ட பரிசுத் தொகை

2013 மே 10]

- இளந்தமிழர் இலக்கியப் பட்டறை
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு ரூ.3.23 கோடி நல்கை
- தமிழ் வளர்ச்சித் துறைக்குத் தனி வலைத்தளம்

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய தலைமையின்கீழ் தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சிப் பணிகளுக்கு மிக முக்கியத்துவம் அளித்துச் செயலாற்றி வருகிறது.

இணைப்பு – I

2013–2014 திட்ட மதிப்பீடு

பொருள்	(நிகர செலவு – ரூபாய் ஆயிரத்தில்)		
	2012–2013 வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு	2012–2013 திருத்த மதிப்பீடு	2013–2014 வரவு – செலவுத் திட்ட மதிப்பீடு
2059 பொதுப் பணிகள்	9,50	8,00	8,00
2202 பொதுக் கல்வி	23,85,63	29,19,75	29,07,34
2251 தலைமைச் செயலகம் சமூகப் பணிகள்	6,73,35	5,34,05	8,13,69
4202 கல்வி, போட்டி விளையாட்டு, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு			2,00,00
7610 அரசுப் பணியாளர் முதலியோருக்குக் கடன்கள்	1	40,00	1
மொத்தம்	**30,68,49**	**35,01,80**	**39,29,04**

இணை

2013–2014 – பகுதி

			(ரூ
தொ. எண்	**திட்டப் பணிகளின் விவரம்**	**இறுதி நிலை**	
		தொடர் செலவினம்	**தொட செலவி**
1.	**தலைமைச் செயலகம்** மொழிபெயர்ப்புப் பிரிவுக்கென மும்மொழி மென்பொருள் வாங்குதல்		40
2.	**தமிழ் வளர்ச்சி இயக்ககம்** அயற்சொல் கையடக்க அகரமுதலி வெளியிடுதல்		10
3.	தமிழில் இணைச் சொல் – எதிர்ச் சொல் அகர முதலி வெளியிடுதல்		10
4	**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்** பழுதுற்றுள்ள கம்பிகளை மாற்றியமைத்து மின் பலகையினைப் புதுப்பித்தல்		2
5	**தமிழ்ப் பல்கலைக்கழகம்** கணினிமயமாக்கப்பட்ட புதுமைக் கருத்தரங்கக் கூடம் – (smart Seminar Hall) தமிழ்ப் பல்கலைக்கழக அலுவலகக் கட்டடத்தில் உள்ள பேரவைக் கூடத்தினைக் கணினிமயமாக்கப்பட்ட புதுமைக் கருத்தரங்கக் கூடமாக உருவாக்குதல் – உயர் தொழில் நுட்பக் கருத்தரங்கக் கருவிகள், ஒலி–ஒளி அமைப்புக் கருவிகள், புகைப்படக் கருவிகள், பட வீழ்த்திகள், திரை அமைப்பு வாங்குதல் மற்றும்		10

ப்பு – II

தி II திட்டப் பணிகள்

(ாய் இலட்சத்தில்)

ச் செலவு		2013–14 இல் செலவு			
ராச் னம்	மொத்தம்	வருவாய் கணக்கில் செலவு	மூலதனக் கணக்கில் செலவு	கடன் கணக்கில் செலவு	மொத்தம்
0.00	40.00	40.00			40.00
0.00	10.00	10.00			10.00
0.00	10.00	10.00			10.00
2.30	2.30	2.30			2.30
0.00	10.00	10.00			10.00

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு—III

(378 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 49—இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2013—2014

"உலகத்தை மாற்றக்கூடிய சக்தி விளையாட்டிற்கு உண்டு. ஒரு வகையில் சிறிதளவேனும் இதற்கு மக்களை ஒன்றுபடுத்தும் ஆற்றல் உடையது. இளைஞர்கள் புரிந்து கொள்ளக்கூடிய மொழியில் பேசக் கூடியது விளையாட்டு.

—நெல்சன் மண்டேலா

நாட்டின் உற்பத்தித் திறன் மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதுடன், சமுதாய எழுச்சியை உயர்த்துவதற்காக தேசிய பெருமிதம் மற்றும் ஒற்றுமையினை தூண்டக்கூடிய சக்தி வாய்ந்த கருவியாக விளையாட்டு விளங்குகிறது என்றால் மிகையாகாது. அதேபோன்று இளைஞர்கள்தான் ஒரு நாட்டின் சக்தி வாய்ந்த தூண்களாவர். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டின் முக்கியத்துவத்தை உணர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின்கீழ் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு மிகப் பெரிய உந்துதல் அளிக்கப்பட்டுள்ளது. விளையாட்டினை அரசு ஆடம்பரமாகக் கருதாது, சமூகத்தின் நிகழ்கால மற்றும் எதிர்கால முதலீடாகக் கருதுகிறது. அதற்கேற்ப பல புதிய திட்டங்கள் துவக்கப்பட்டு, நிதி ஒதுக்கீடு கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏறக்குறைய இரு மடங்காக, அதாவது 2010-2011 ஆம் ஆண்டில் ரூ.56.32 கோடியிலிருந்து 2012-2013 ஆம் ஆண்டிற்கு ரூ.103.48 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

உயர்தரமான விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தியும், விளையாட்டு கலாச்சாரத்தினை மேம்படுத்தியும், அடித்தட்டு நிலையிலுள்ளவர்களது திறமைகளை மெருகேற்றியும் முழுஅளவில் திறனை வளர்த்து தேசிய மற்றும் சர்வதேச அளவில் சிறந்த நிலையினை எய்தி தமிழ்நாட்டை விளையாட்டில்

[2013 மே 10

முன்னோடியான மாநிலமாக உயர்த்துவதே இத்துறையின் முக்கிய நோக்கமாகும்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம், தேசிய மாணவர் படை, நாட்டு நலப் பணித் திட்டம் மற்றும் நேரு யுவ கேந்த்ரா சங்கேதன் ஆகியவை இத்துறையின்கீழ் செயல்பட்டு வருகின்றன. இத்துறைகள் செயல்படுத்தும் பல்வேறு விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் செயல்பாடுகள் இளைஞர்களிடையேயான பண்பினை உயர்த்தி, பொறுப்புள்ளவர்களாக மலரச்செய்து, நாட்டின் வெற்றிகரமான குடிமக்களாக உருவாக்கும் நோக்குடையதாகும்.

தமிழ்நாட்டில் விளையாட்டு மேம்பாட்டிற்கான உயரிய அங்கமான தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், அரசின் அனைத்து கொள்கை முடிவுகளையும் செயல்படுத்தி வருகின்றது. 2005 ஆம் ஆண்டில் மாநில அரசால் விளையாட்டிற்கென துவங்கப்பட்ட முதல் விளையாட்டு பல்கலைக்கழகமான தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம், கற்பித்தல், பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் சீரிய நடவடிக்கைகள் உடைய புதுமையான திட்டங்கள் மூலம் உடற்கல்வி மற்றும் விளையாட்டுத் துறையினை மேம்படுத்த மற்றும் உயரிய நிலையினை எய்தும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

நாட்டிலேயே நாட்டு நலப் பணித் திட்டத்தின்கீழ் அதிகபட்சமாக 3,70,018 தன்னார்வ உறுப்பினர்களுடன் தமிழ்நாடு தனித்தன்மை பெற்றுள்ளது.

விளையாட்டை நேசிக்கும் ஆற்றல் மிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விளையாட்டு மேம்பாட்டிற்கு மிகப் பெரிய உந்துதல் அளிக்கப்பட்டு, 2013-2014 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை எண் 49-ல் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு ரூ.112.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதி ஒதுக்கீட்டில் ரூ.71.36 கோடி தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கும், ரூ.4.71 கோடி தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்திற்கும் மற்றும் ரூ.35.46 கோடி தேசிய மாணவர் படைக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2013 மே 10]

படலம் – 1

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

மக்களிடையே விளையாட்டினை மேம்படுத்தவும் தேசிய மற்றும் சர்வதேச அளவில் திறமையானவர்கள் சிறப்பான நிலையினை எய்திடும் வகையில் உயர்த்துவதற்காக அரசாணை நிலை எண் 641, கல்வி (ஒய்1) துறை, நாள் 18-7-1992-ல் அதற்கு முன்னர் இயங்கி வந்த விளையாட்டு மற்றும் இளைஞர் நல இயக்குநரகம் மற்றும் தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து "தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்" என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இவ்வாணையத்தின் தலைவர் ஆவார்.

1.1 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் குறிக்கோள்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முக்கிய குறிக்கோள்கள் பின்வருமாறு:

1. மாநிலத்தில் விளையாட்டின் தரத்தை மேம்படுத்தவும், விளையாட்டை உயர்த்துவதற்கான திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துதல் மற்றும் விளையாட்டுச் செயல்பாடுகளை உயர்த்தி மேம்படுத்துதல்

2. மாநிலத்தில் விளையாட்டு மற்றும் போட்டி விளையாட்டுகளின் தரத்தை மேம்படுத்தவும், உயர்த்தவும் தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களை செயல்படுத்துதல்

3. திறமைமிக்க விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு தக்க பயிற்சி மற்றும் நிதியுதவி அளித்து அவர்கள் தேசிய மற்றும் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிகரமாக பங்கு பெறச் செய்தல்

4. தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் மேன்மேலும் உயர்ந்த அளவில் சாதனைகள் அடைய பல்வேறு ஊக்க உதவித் தொகை மற்றும் விருதுகளை அளித்து ஊக்குவித்தல்

5. மாநிலத்தின் பல்வேறு நிலைகளில் விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்க திட்டமிடுதல் மற்றும் மேம்படுத்துதல்

[2013 மே 10

6. ஆராய்ச்சி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் தொடர்பான மருத்துவம், உயிர் வேதியியல், உளவியல் மற்றும் தொடர்புடைய விஞ்ஞானம் ஆகியவற்றைத் துவக்கி, மேற்கொண்டு, ஆதரவு தந்து, ஊக்குவித்து, உற்சாகமளித்தல்

7. மாற்றுத் திறனாளிகளின் சிறப்புத் தேவைகளை அங்கீகரித்து போட்டி விளையாட்டு மற்றும் விளையாட்டுகளில் பங்கேற்க வசதி செய்தல்

8. மாநிலத்தில் வீர சாகச விளையாட்டுக்களை ஊக்குவிக்கும் பொருட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளல்

9. தற்போது இயங்கி வரும் அல்லது புதிய விளையாட்டு நிறுவனங்கள், நிறுவ, நடத்த, மேற்பார்வை மற்றும் நிருவாகம் செய்ய, மேலும் அத்தகைய நிறுவனங்களில் முழுமையாக அல்லது பகுதியாக செயல்கள் மற்றும் செயல்பாடுகளைச் செய்தல்

10. பல்வேறு விளையாட்டுக்கள் மற்றும் போட்டி விளையாட்டுக்களுக்கு மேம்படுத்தப்பட்ட பயிற்சியளித்தல்

11. பொதுமக்களிடையே உடற்பயிற்சியின் அவசியத்தை உணரச் செய்வதன்மூலம் விளையாட்டு மற்றும் ஆரோக்கியத்தின்மீது கவனம் கொள்ளச்செய்து அவர்களை விளையாட்டில் தொடர்ந்து ஈடுபடச் செய்வதன்மூலம் தமிழ்நாட்டை ஆரோக்கியமான மற்றும் வலிமையான மாநிலமாக ஆக்குதல்

தமிழ்நாடு, தேசிய மற்றும் சர்வதேச அளவில் சில தனி நபர் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் குழுப் போட்டிகளில் முன்னணியில் உள்ளது. தமிழக அரசு அளிக்கும் மிகச் சிறந்த விளையாட்டுக் கட்டமைப்புகள், பயிற்சி வசதிகள், விளையாட்டுப் போட்டிகள் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் ஊக்க உதவித் தொகைகள் ஆகியற்றின்மூலம் இந்நிலையினை அடைய முடிந்துள்ளது

1.2 விளையாட்டில் சிறப்பான நிலையினை அடைந்திட திறன் வாய்ந்த செயல்முறை

விளையாட்டில் சிறந்துள்ள பெரும்பாலான நாடுகள் நீண்ட கால உத்திகளைக் கடைப்பிடித்து வருகின்றன. தமிழ்நாடு, நீண்ட கால உத்தியினை கீழிலிருந்து மேல் நோக்கிச் செல்லும் பிரமிடு

2013 மே 10]

முறையினை கடைப்பிடித்து வருகின்றது. தெளிவாக வரையறுக்கப்பட்ட நீண்ட கால உத்தி, ஐந்து பல்வேறு நிலையினைக் கொண்ட பிரமிடு முறையிலான, செயல் திட்டத்தினைக் கொண்டுள்ளது. இவ்வாறான பிரமிடு வரிசையில் நிலை-1, அடித்தள திறன் கொண்ட அளவிலும், நிலை-5, அதிகபட்ச திறன்கொண்ட அளவிலுமாக உள்ளது.

நிலை 1: மக்கள் திரள் பங்கேற்பு மற்றும் பரந்த அடித்தளம்

உலகளாவிய திறமைகளைக் கண்டறியும் திட்டத்தின்கீழ் மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 6, 7 மற்றும் 8-வது வகுப்புகளில் பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் உடல் திறனறியும் சோதனைகள் நடத்தப்படுகின்றன. இச்சோதனைகள் மூலம் சிறந்த திறனுள்ளவர்கள் கண்டறியப்பட்டு, அடுத்த நிலை பங்கேற்பிற்கு ஆயத்தப்படுத்தப்படுகின்றனர்.

இதுமட்டுமல்லாமல், கிராமம் மற்றும் கோட்ட அளவில் விளையாட்டுக் கட்டமைப்புகள் கொண்ட “பைக்கா” மையங்கள் தோற்றுவிக்கப்பட்டு பெருமளவில் மக்கள் கலந்து கொள்ளும் அளவில் “பைக்கா” விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. மாநிலம் முழுவதும் பெரும்பாலானோர் கலந்து கொள்ளும் வகையில் பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகின்றன.

நிலை 2: மாவட்ட அளவு

திருப்பூர் மற்றும் வேலூர் மாவட்டங்களைத் தவிர அனைத்து மாவட்டத் தலைமையிடங்களிலும் 400 மீ. ஓடுதளப் பாதையுடன், கால்பந்து விளையாட்டுத் திடல் கொண்ட விளையாட்டு அரங்கங்கள் ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ளன. 21 மாவட்டங்களில் நீச்சல் குளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், பல்நோக்கு உள் விளையாட்டரங்கங்கள் அனைத்து மாவட்டங்களிலும் படிப்படியாக அமைக்கப்படும். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், மாவட்ட விளையாட்டு சங்கங்கள் மற்றும் பள்ளிக் கல்வித் துறைமூலம் மாவட்ட அளவிலான பல்வேறு போட்டிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

நிலை 3: மாநில அளவு

உலகத் தரத்திலான விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள் பல்வேறு விளையாட்டுக்களில் சென்னை, கோயம்புத்தூர், திருச்சி,

[2013 மே 10

மதுரை உள்ளடக்கிய பல மாவட்டங்களில் உருவாக்கப் பட்டுள்ளன.

முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் தடகளம் மற்றும் 9 இதர விளையாட்டுக்களில் நடத்தப்பட்டது. இது தவிர, மாநில விளையாட்டுச் சங்கங்களுக்கு ஆண்டுதோறும் மாநிலப் போட்டிகள் மற்றும் தேசியப் போட்டிகள் நடத்திட நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

நிலை 4 மற்றும் நிலை 5: தேசிய அளவு / பன்னாட்டு அளவு

கீழ்மட்ட அளவில் மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளின் பலன்களாக தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் பலர், தேசிய மற்றும் பன்னாட்டு போட்டிகளில் தங்களது வெற்றிகளைப் பதிவு செய்துள்ளனர். தடகளம், கால்பந்து, வளைகோல்பந்து, வாலிபால், கூடைப்பந்து, டென்னிஸ், ஸ்குவாஷ், கபாடி, நீச்சல், வாள்வீச்சு, மேசைப்பந்து, செஸ் ஆகிய விளையாட்டுகளில் தமிழ்நாட்டு வீரர்கள் தேசிய அணிகளில் பங்கேற்றுள்ளனர்.

1.3 ஊக்கத் தொகைகள்

தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்ள நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது. தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் வெற்றி பெறுபவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையினை தமிழக அரசு வழங்கி வருகிறது. சர்வதேச மற்றும் ஒலிம்பிக் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகையினையும் தமிழக அரசு கணிசமாக உயர்த்தியுள்ளது. ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்லும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவருக்கு ரூ.2 கோடி மாநில அரசால் வழங்கப்படும்.

மேலும், உலக சதுரங்க சாம்பியன் பட்டத்தினை 5-வது முறையாக தனது மகுடத்தில் பதித்திருக்கும் "கிராண்ட் மாஸ்டர்" விஸ்வநாதன் ஆனந்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ரூ.2.00 கோடி வழங்கி சிறப்பித்துள்ளார்கள்.

ஒலிம்பிக் போட்டிகள் மற்றும் பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வெல்லக்கூடிய 5 சிறந்த விளையாட்டு

வீரர்களுக்கு தங்களுடைய திறமையை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் ஓராண்டிற்கு தலா ரூ.25 இலட்சம் வழங்கும் திட்டத்தினை தமிழ்நாடு அரசு நிறுவியுள்ளது.

பயன்பாட்டில் உள்ள உலகத் தரத்திலான விளையாட்டு வசதிகள் மற்றும் சிறப்பு மானியத் தொகையினைக் கொண்டு சர்வதேச அளவிலான போட்டிகளை நடத்துவதற்கு தமிழக அரசு ஊக்கப்படுத்தி வருகிறது.

படலம் – 2

விளையாட்டுத் திறன் கண்டறிதல்

விளையாட்டுத் திறன் கண்டறிதலில் மிக முக்கியமானது சிறந்த வெற்றியாளரை உருவாக்குவது. அவ்விலக்கினை நோக்கி நான்கு செயல் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1. உலக அளவிலான திறமைமிக்கவர்களைக் கண்டறியும் திட்டம்
2. விளையாட்டு விடுதிகளுக்கான தேர்வு
3. சிறப்பு விளையாட்டு விடுதிக்கான தேர்வு
4. முதன்மை நிலை விளையாட்டு மையங்களுக்கான தேர்வு

2.1 உலக அளவிலான திறமைமிக்கவர்களைக் கண்டறியும் திட்டம்

சிறு வயதிலேயே திறமைகளைக் கண்டறியும் வண்ணம், பள்ளிகளில் 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு "உலக அளவிலான திறமைமிக்கவர்களைக் கண்டறியும் திட்டத்தின்" கீழ் உடற்கூறு திறன் தேர்வுகள் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நடத்தப்பட்டு வருகின்றது. பின்னர் வழங்கப்படும் உடற்கூறு திறன் தேர்வுகளின் முடிவுகள் கொண்ட அறிக்கை அட்டை, குழந்தைகளை அவர்களுக்கு ஏதுவான குறிப்பிட்ட விளையாட்டு மற்றும் போட்டி விளையாட்டில் திறமைகளை மதிப்பீடு செய்து மேலும் மேம்படுத்திக் கொள்ள உதவுகிறது.

[2013 மே 10

2.2 கல்வி மாவட்டம், மண்டலம் மற்றும் மாநில அளவில் விளையாட்டுத் திறன் மிக்கவர்களைக் கண்டெடுத்தல்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தமிழ்நாடு முழுவதும் உள்ள 67 கல்வி மாவட்டங்களில் தடகள விளையாட்டுக்களில் போட்டிகளை நடத்துகிறது. இப்போட்டிகளில், ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் 500 சிறுவர் /சிறுமியர்கள் கலந்து கொள்கிறார்கள். ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலிருந்தும், இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்கள் அருகிலுள்ள கல்வி மாவட்டங்களுடன் ஒருங்கிணைந்து மண்டல அளவிலான போட்டிகளில் கலந்து கொள்கிறார்கள்.

ஒவ்வொரு மண்டல அளவில் நடத்தப்படும் போட்டிகளில் தலையாய திறமையுடன் செயலாற்றுபவர்களைக் கண்டறிந்து 15 நாட்களுக்கு முனைப்பான இருப்பிடப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி முகாமில் சிறந்த சிறுவர்கள் / சிறுமியர்கள் மாநில அளவிலான தேர்வுகளுக்கு கண்டறியப்படுவர். இவ்வாறு கண்டறியப்பட்ட சிறந்த திறன் மிக்கவர்கள் சிறப்பு அகாடமிகளில் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு ஆண்டு முழுவதும் தொடர் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. விருப்பமுள்ளவர்கள் விளையாட்டு விடுதிகளில் அனுமதிக்கப்படுவர்.

2012-2013 ஆம் ஆண்டில் 12,173 பள்ளிகளில் உடற்கூறு திறன் தேர்வுகள் நடத்தப்பட்டது. 9 மண்டல அளவிலான போட்டிகளில் பங்கேற்க 4,690 மாணவ / மாணவியர்கள் கண்டறியப்பட்டனர்.

2.3 விளையாட்டு விடுதிகளுக்கான தேர்வு (இரண்டு அடுக்கு)

விளையாட்டு விடுதிகளில் 7, 8, 9 மற்றும் 11-வது வகுப்புகளில் பயிலும் மாணவ / மாணவிகளுக்கு மாவட்ட மற்றும் மாநில அளவிலான தேர்வுகள் நடத்தப்பட்டு, அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். விளையாட்டு விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட மொத்த மாணவர் எண்ணிக்கை 1,400 ஆகும். தற்போது, 1,357 விளையாட்டு வீரர்கள் சேர்க்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறார்கள்.

2013 மே 10]

2.4 ஆண்கள் / பெண்களுக்கான சிறப்பு விளையாட்டு விடுதிக்கான தேர்வு

கல்லூரிகளில் பயிலும் பல்வேறு விளையாட்டுகளில் தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் வெற்றி பெறும் திறமை உடைய மாணவ / மாணவியர்களை சிறப்பு விளையாட்டு விடுதியில் சேர்ப்பதற்கான தேர்வுப் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன. ஆண்கள் மற்றும் பெண்களுக்கான சிறப்பு விளையாட்டு விடுதிகள் முறையே ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் மற்றும் பல்நோக்கு உள் விளையாட்டரங்கம் ஆகியவற்றில் செயல்பட்டு வருகின்றன. ஆண்களுக்கான சிறப்பு விளையாட்டு விடுதிகளில் 80 பேரும், பெண்களுக்கான சிறப்பு விளையாட்டு விடுதிகளில் 60 பேரும் உள்ளனர்.

2.5 முதன்மை நிலை விளையாட்டு மையம்

மாவட்ட மற்றும் மாநில அளவிலான சிறந்த விளையாட்டு வல்லுநர்களால் நடத்தப்படும் திறன் கண்டறியும் தேர்வில் 10 முதல் 14 வயதிற்குட்பட்ட மிகச் சிறந்த 25 சிறுவர்கள் மற்றும் 25 சிறுமியர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட திறமையான சிறுவர் / சிறுமியர்கள் சென்னையில் துவங்கப்பட்டுள்ள முதன்மை நிலை விளையாட்டு மையத்தில் அனுமதிக்கப்பட்டு, சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

படலம் – 3

விளையாட்டுத் திறமைகளை மேம்படுத்துதல்

பல்வேறு விளையாட்டுத் திறமைகளை மேம்படுத்தும் திட்டம் ஏழு நிலைகளின்கீழ் விரிவாகச் செயல்படுத்தப்படுகின்றன. அவை, முதன்மை நிலை விளையாட்டு மையம், சிறப்பு அகாடமிகள், விளையாட்டு விடுதிகள், கல்லூரிகளின் இணை விளையாட்டு மையங்கள், திறன் மேம்பாட்டு மையங்கள், சிறப்பு மேம்பாட்டு மையங்கள், பயிற்சி மையங்கள் மற்றும் வெற்றியாளர்கள் மேம்பாட்டுத் திட்டம் ஆகும்.

3.1 முதன்மை நிலை விளையாட்டு மையம்

சிறந்த திறமை வாய்ந்த 10 முதல் 14 வயதுக்கு உட்பட்ட 25 மாணவர்களுக்காகவும், 25 மாணவியர்களுக்காகவும் "முதன்மை

[2013 மே 10

நிலை விளையாட்டு மையம்" சென்னையில் 2012 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டுள்ளது. இவர்களுக்குத் திட்டமிடப்பட்ட, விஞ்ஞான பூர்வமான பயிற்சிகள் மற்றும் சத்தான உணவு வகைகள் வழங்கப்படுவதன்மூலம் அவர்களது செயலாற்றும் திறமை உயர்த்தப்படுகிறது. அவர்களுடைய திறமையினை வளர்க்கும் வகையில் அவர்களுக்குத் தேவையான வசதிகள் செய்து தரப்பட்டு பயிற்சியாளர்கள் சென்னையிலுள்ள சிறந்த பள்ளிகளில் படிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். தற்போது 19 சிறுவர்கள் / 19 சிறுமியர்கள் இத்திட்டத்தில் பயிற்சி பெற்றுவருகிறார்கள்.

3.2 சிறப்பு அகாடமிகள்

கீழ்க்காணும் சிறப்பு அகாடமிகளைத் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் துவங்கியுள்ளது:

வ. எண்	அகாடமி	இடம்
1.	குறுந்தூர ஓட்டம் மற்றும் குதித்தல் அகாடமி	சென்னை
2.	மாணவர்களுக்கான கிரிக்கெட் அகாடமி	சென்னை
3.	மாணவியர்களுக்கான கையுந்துபந்து அகாடமி	சென்னை
4.	டைவிங் அகாடமி-நீச்சல் குள வளாகம்	சென்னை
5.	மாணவர்கள் / மாணவியர்களுக்கான ஹாக்கி அகாடமி	சென்னை
6.	சந்திரா மேசைப்பந்து அகாடமி	சென்னை
7.	ஏகேஜி மேசைப்பந்து அகாடமி	சென்னை
8.	டால்பின் நீச்சல் அகாடமி	சென்னை
9.	தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் அகாடமி	சென்னை
10.	மாணவர்களுக்கான கால்பந்து அகாடமி	நாகப்பட்டினம்

2013 மே 10]

வ. எண்	அகாடமி	இடம்
11.	எறிதல் அகாடமி	திருச்சி
12.	மிததூர ஓட்ட அகாடமி	திருவண்ணாமலை
13.	நீண்ட தூர ஓட்ட அகாடமி	உதகமண்டலம்
14.	மாணவியர்களுக்கான கால்பந்து அகாடமி	சிவகங்கை
15.	மேசைப்பந்து அகாடமி	மதுரை

இந்த அகாடமிகளில் 1200 விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகள் பயிற்சி பெற்று வருகிறார்கள். இந்த அகாடமிகளில் தொடர் பயிற்சிகள் மட்டுமின்றி சத்தான உணவு வகைகள், விளையாட்டு உபகரணங்கள் மற்றும் சீருடைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

3.2.1 விளையாட்டு விடுதிகள்

கீழ்க்காணும் 17 விளையாட்டு விடுதிகளை அரசு துவக்கியுள்ளது:

வ. எண்	விளையாட்டு விடுதிகளின் பெயர்கள்	பயிற்சி விளையாட்டுக்கள்
1.	விளையாட்டு விடுதி, ஒய்.எம்.சி.ஏ. விளையாட்டு விடுதி-சென்னை	குத்துச்சண்டை, கால்பந்து மற்றும் ஹாக்கி
2.	என்.எல்.சி. விளையாட்டு விடுதி-நெய்வேலி	தடகளம், கூடைப்பந்து மற்றும் கால்பந்து
3.	விளையாட்டு விடுதி, அண்ணா விளையாட்டு அரங்கம்-திருச்சிராப்பள்ளி	தடகளம், கால்பந்து, ஹாக்கி, நீச்சல், கையுந்துபந்து மற்றும் குத்துச்சண்டை
4.	விளையாட்டு விடுதி, ரேஸ் கோர்ஸ் விளையாட்டு அரங்கம்-மதுரை	தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, கையுந்துபந்து மற்றும் ஹாக்கி
5.	விளையாட்டு விடுதி, அண்ணா விளையாட்டு அரங்கம்-திருநெல்வேலி	தடகளம், ஹாக்கி, நீச்சல், கையுந்துபந்து, குத்துச்சண்டை மற்றும் கூடைப்பந்து

வ. எண்.	விளையாட்டு விடுதிகளின் பெயர்கள்	பயிற்சி விளையாட்டுக்கள்
6.	*மாணவியர்களுக்கான விளையாட்டு விடுதி, வ.ஊ.சி. விளையாட்டரங்கம்-ஈரோடு*	*தடகளம், கால்பந்து மற்றும் கையுந்துபந்து*
7.	*மாணவியர்களுக்கான விளையாட்டு விடுதி, பாரதி வித்யா பவன், திண்டல்-ஈரோடு*	*கூடைப்பந்து*
8.	*விளையாட்டு விடுதி, (சிறுவர்கள் / சிறுமியர்கள்), செல்வம் மேனிலைப் பள்ளி-நாமக்கல்*	*தடகளம் (சிறுமியர்), வாள்சண்டை (சிறுவர் / சிறுமியர்)*
9.	*விளையாட்டு விடுதி, அரசு மேனிலைப்பள்ளி, புதூர்-சென்னை*	*கிரிக்கெட்*
10.	*மகளிர் விளையாட்டு விடுதி-திருவண்ணாமலை*	*தடகளம், கைப்பந்து மற்றும் ஹாக்கி*
11.	*விளையாட்டு விடுதி, (சிறுவர்)-கிருஷ்ணகிரி*	*தடகளம், கைப்பந்து, டேக்வாண்டோ மற்றும் கால்பந்து*
12.	*மகளிர் விளையாட்டு விடுதி, டென்னிஸ் விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம்-சென்னை*	*கையுந்துபந்து மற்றும் டென்னிஸ்*
13.	*விளையாட்டு விடுதி, (சிறுவர்)-கோயம்புத்தூர்*	*தடகளம், கூடைப்பந்து, ஜிம்னாஸ்டிக்ஸ் மற்றும் கையுந்துபந்து*
14.	*விளையாட்டு விடுதி, (சிறுவர்)-கடலூர்*	*இறகுபந்து, தடகளம் மற்றும் டேக்வாண்டோ*
15.	*விளையாட்டு விடுதி, (சிறுமியர்)-திண்டுக்கல்*	*தடகளம், கூடைப்பந்து மற்றும் கால்பந்து*

2013 மே 10]

வ. எண்.	விளையாட்டு விடுதிகளின் பெயர்கள்	பயிற்சி விளையாட்டுக்கள்
16.	விளையாட்டு விடுதி, (சிறுமியர்)—நாகர்கோவில்	தடகளம், கையுந்துபந்து மற்றும் பளுதூக்குதல்
17.	விளையாட்டு விடுதி, (சிறுவர்)—தஞ்சாவூர்	கூடைப்பந்து, பளுதூக்குதல் மற்றும் கையுந்துபந்து

இவ்விளையாட்டு விடுதிகளில் மொத்தம் 1,400 பயிற்சி மேற்கொள்பவர்கள் உள்ளனர்.

3.2.2 ஆண்களுக்கான சிறப்பு விளையாட்டு விடுதி

தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளில் பதக்கம் பெறும் திறமை வாய்ந்த, கல்லூரி மாணவர்களுக்கென ஒரு சிறப்பு விளையாட்டு விடுதி, சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் செயல்பட்டு வருகிறது. 80 விளையாட்டு வீரர்கள் பயிற்சி பெறும் சிறப்பு விளையாட்டு விடுதியில் தடகளம், கூடைப்பந்து, குத்துச்சண்டை, கையுந்துபந்து மற்றும் டேக்வாண்டோ விளையாட்டுக்களில் முனைப்பான பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இவ்விளையாட்டு விடுதியிலிருந்து பல விளையாட்டு வீரர்கள் தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெறுபவர்களாகவும், சில விளையாட்டு வீரர்கள் பன்னாட்டு அளவிலான போட்டிகளிலும் கலந்து கொள்பவர்களாகவும் வெளிக்கொணரப்பட்டுள்ளனர்.

3.2.3 பெண்களுக்கான சிறப்பு விளையாட்டு விடுதி

பெண்களுக்கான சிறப்பு விளையாட்டு விடுதி சென்னையில் உள்ள பல்நோக்கு உள் விளையாட்டரங்கில் செயல்பட்டு வருகிறது. கல்லூரிகளில் பயிலும் தனித்திறன் வாய்ந்த 60 விளையாட்டு வீராங்கனைகள் தடகளம், கால்பந்து மற்றும் கையுந்துபந்து ஆகிய விளையாட்டுக்களில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு முனைப்பான பயிற்சிகள், விளையாட்டு உபகரணங்கள், உணவுடன் கூடிய இலவச தங்குமிட வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. பெரும்பாலானவர்கள் தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வென்றுள்ளனர்.

[2013 மே 10

3.3 இணை விளையாட்டு மேம்பாட்டு மையம்

கல்லூரிகளில் பயிலும் விளையாட்டு வீரர்களின் திறன்களை மேம்படுத்தி அவர்கள் பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் வெற்றிவாகை சூடிப் பெருமை சேர்த்திடும் வகையில், வெவ்வேறு மாவட்டங்களில் அமைந்துள்ள கல்லூரிகளில் உள்ள பல்வேறு விளையாட்டுகளுக்கான விளையாட்டுக் கட்டமைப்புகளைப் பயன்படுத்தி, இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் 29 கல்லூரிகள் பயனடைந்துள்ளன. 2011-2012 ஆம் ஆண்டில் 185 விளையாட்டு வீரர்களுக்கு ஊக்க உதவித்தொகையாக ரூ.10.71 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 2012-2013 ஆம் ஆண்டில் 23 கல்லூரிகளைச் சேர்ந்த 219 விளையாட்டு வீரர்கள் பயனடைய உள்ளனர்.

3.4 விளையாட்டுத் திறன் மேம்பாட்டு மையம்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், 6 விளையாட்டுத் திறன் மேம்பாட்டு மையங்களை ஹாக்கி, கால்பந்து, ரோயிங், மேசைப்பந்து ஆகிய விளையாட்டுக்களில் விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள் அமைந்துள்ள நிறுவனங்களுடன் இணைந்து விளையாட்டு திறன் மேம்பாட்டு மையங்களை நிறுவியுள்ளது. இம்மையங்கள் குறிப்பிட்ட விளையாட்டில் திறன் படைத்த வீரர்களுக்கு பயிற்சி மேற்கொள்ள ஏதுவாக உள்ளது.

3.5 சிறப்பு மேம்பாட்டு மையங்கள்

வேலூருக்கு அருகிலுள்ள சத்துவாச்சாரியில் ஒரு சிறப்பு பளுதூக்கு விளையாட்டு மேம்பாட்டு மையம் துவங்கப்பட்டுள்ளது. இங்கு 30 பளுதூக்கும் வீரர்கள், 12 வீராங்கனைகள் பயிற்சி பெற்று வருகின்றனர். இதற்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ.3.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலியில் ஹாக்கி விளையாட்டு வீரர்கள் பாரம்பரியமாக உருவாகி வருவதை சிறப்பிக்கும் வகையில் வளைகோல்பந்து விளையாட்டிற்கென சிறப்பு மேம்பாட்டு மையம் உருவாக்கப்பட்டுள்ளது. பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டரங்கில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள செயற்கை இழை புல் மைதானத்தினைப் பயன்படுத்தி இம்மையத்திலுள்ள 30 விளையாட்டு வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

2013 மே 10]

கூடைப்பந்து விளையாட்டினை மேம்படுத்துவதற்காக தஞ்சாவூரில் சிறப்பு மேம்பாட்டு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையத்தில் 25 வீரர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

சென்னையில் டென்னிஸ் சிறப்பு மேம்பாட்டு மையம் துவக்கப்பட்டு, மாநகராட்சி மற்றும் அரசு பள்ளிகளைச் சார்ந்த 10 சிறுவர், 10 சிறுமியர் டென்னிஸ் பயிற்சி பெற்று வருகின்றனர். அதேபோன்று, டென்னிஸ் மேம்பாட்டு மையங்கள் காஞ்சிபுரம், திருவண்ணாமலை, கடலூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் சேலம் மாவட்டங்களில் அமைக்கப்பட்டு 80 சிறுவர்கள் / சிறுமியர்கள் பயனடைந்து வருகின்றனர்.

இதுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் பாரம்பரியமிக்க கழைக்கூத்தாடிகள் மற்றும் மீனவர்களின் திறன் கண்டறியப்பட்டு அவர்களை வெற்றியாளர்களாக மேம்படுத்த ஜிம்னாஸ்டிக்ஸ் பயிற்சி மையம் ஒன்று ஈரோடு மாவட்டம் கரட்டுப்பாளையத்திலும் (20 சிறுவர்கள்), நீச்சல் மையம் ஒன்று நாகப்பட்டினத்திலும் (10 சிறுவர்கள்) அமைக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படுகிறது.

3.6 பயிற்சி மையங்கள்

3.6.1 நீச்சல் பயிலகங்கள்

“நீந்தக் கற்றுக் கொள்” திட்டம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்கீழ் செயல்பட்டு வரும் அனைத்து நீச்சல் குளங்களிலும் நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பங்குபெறும் நபர்கள் 12 நாட்களில் தினமும் 1 மணி நேர பயிற்சியின்மூலம் சரியாக நீச்சல் கற்றுக்கொள்கின்றனர். தமிழ்நாட்டில் 2012-2013 ஆம் ஆண்டில் 22 மையங்களில் 7,325 நபர்கள் பங்கேற்று நீச்சல் பயிற்சி பெற்றனர்.

3.6.2 கிராம விளையாட்டு வளர்ச்சி வளர்ப்பிடங்கள்

சில கிராமங்களில் பல வருடங்களாக பிரபலமாக விளங்கும் குறிப்பிட்ட விளையாட்டினை மேம்படுத்தும் வண்ணமாக ஒவ்வொரு மாவட்டத்திலும், (சென்னை நீங்கலாக) ஒரு கிராமத்தை தேர்ந்தெடுத்து அங்கு கிராம விளையாட்டு வளர்ச்சி வளர்ப்பிடம் ஏற்படுத்தப்பட்டு உள்ளது. கிராம விளையாட்டு வளர்ச்சி வளர்ப்பிடங்களில் கண்டறியப்பட்ட விளையாட்டில் முறையான பயிற்சி வசதிகளுக்காக விளையாட்டு மைதான வசதி மற்றும்

[2013 மே 10

விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதுவரை 31 கிராமங்களில் இவ்வாறான வளர்ச்சி வளர்ப்பிடங்கள் நிறுவப்பட்டுள்ளன.

3.7 வெற்றியாளர்கள் மேம்பாட்டுத் திட்டம்

20 வயதிற்கு உட்பட்ட, விளையாட்டு வீரர்கள் ஏற்கெனவே தேசிய அளவில் தங்கப் பதக்கம் வென்றவர்கள், இத்திட்டத்தில் சேர்க்கப்படுகிறார்கள். அத்தகைய விளையாட்டு வீரர்களிலிருந்து வெற்றியாளர்களை உருவாக்கும் நோக்கத்துடன் இவர்களுக்கு ஊட்டச்சத்து, உடை, விளையாட்டுக் கருவிகள் வாங்கவும், அவர்களது தேவைக்கேற்ப வெளிநாடு சென்று பயிற்சி பெறவும், வெளிநாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளவும், நிதி உதவி அளிக்கப்படுகிறது. 31-3-2013 முடிய, வெற்றியாளர்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் 217 விளையாட்டு வீரர்கள் சேர்க்கப்பட்டு பயனடைந்து வருகின்றனர்.

படலம் – 4

பயிற்சித் திட்டங்கள்

வெற்றியாளர்களை உருவாக்குவதில் பயிற்றுநர்கள் மிகவும் முக்கியத்துவமான பங்கு வகிக்கின்றனர். இதனடிப்படையில், பல்வேறு நிலைகளில் சிறந்த தரமான போதுமான அளவில் பயிற்றுநர்கள் அமைந்திருப்பது விளையாட்டு மேம்பாட்டிற்கான முக்கியமான செயல்முறையாகும். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் பல்வேறு விளையாட்டுக்களில் 158 பயிற்றுநர்கள் உள்ளனர்.

4.1 பயிற்றுநர்கள் திறன் கட்டமைப்பு

ஒரு பயிற்றுநரின் திறன் ஒரு தடகள வீரரின் சிறந்த செயல்பாடினை வெளிக் கொண்டு வருவது போன்று அவசியமானதாகும். அதனடிப்படையில், ஒரு பயிற்றுநரின் செயல்பாடுகளை போதுமான கவனத்துடன் வழிநடத்தி, பயிற்சி அளித்து கண்காணிப்பதே தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உத்திகளில் முக்கியமானதாகும். குறிப்பிட்ட இலக்குகள் மற்றும் அவர்களது செயல்திறன் தரத்தினை நிர்ணயம் செய்வதற்காக வழிகாட்டுதல் அடங்கிய பயிற்றுநர்கள் பங்கு குறித்த விரிவான அறிவுறுத்தல்கள் கொண்ட சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

2013 மே 10]

பயிற்றுநர்களின் திறன் முன்னேற்றம் மற்றும் அவர்களது அறிவினை மேம்படுத்தும் பொருட்டு, பயிற்றுநர்களுக்கு முறையான சான்றிதழ் பயிற்சித் திட்டங்கள் பல்வேறு விளையாட்டுக்களில் நடத்தப்பட்டு வருகின்றன. இதனை துவக்கும் வண்ணம் சென்னையில் சர்வதேச கையுந்துபந்து இணையம் உதவியுடன் ஜுன் 2013 ஆம் ஆண்டில் நிலை 1 சான்றிதழ் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட உள்ளன. இந்திய விளையாட்டு ஆணையத்தின் சிறந்த பயிற்றுநர்கள்மூலம் தடகளம், ஹாக்கி, டென்னிஸ் மற்றும் கையுந்துபந்து ஆகிய 4 விளையாட்டுக்களில் சிறப்பு பயிற்சி வகுப்புகள் பயிற்றுநர்களுக்கு 2013 மார்ச் மாதத்தில் நடத்தப்பட்டது. இதைப் போன்றே, கால்பந்து, இறகுபந்து, நீச்சல் மற்றும் இதர விளையாட்டுக்களில் தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டு இணையங்கள் மற்றும் இந்திய விளையாட்டு ஆணையம்மூலம் பயிற்சித் திட்டங்கள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

இதுமட்டுமல்லாமல் 2011-2012 ஆம் ஆண்டில் திரு. செந்தில், குத்துச்சண்டை பயிற்றுநர் மற்றும் திரு. அருணா, நீச்சல் பயிற்றுநர் ஆகியோர் ஹங்கேரியில் நடைபெற்ற மேம்பட்ட பயிற்சி முகாமிலும், 2012-2013 ஆம் ஆண்டில் திரு. ஞானசேகரன், நீச்சல் பயிற்றுநர் மற்றும் திரு. ரமேஷ், ஹாக்கி பயிற்றுநர் ஆகியோர் க்யூபாவில் நடைபெற்ற மேம்பட்ட பயிற்சி முகாமிலும் பயிற்சிக்காக அனுப்பப்பட்டனர்.

4.2 உயிர் காப்பாளர் சான்றிதழ்

நீச்சல் குளங்களில் பயிற்சி பெறும் குழந்தைகளின் பாதுகாப்பு தலையாய முக்கியத்துவம் வாய்ந்ததாகும். உயிர் பாதுகாக்கும் வண்ணம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் 21 நீச்சல் குளங்களில் பணிபுரியும் 84 உயிர் பாதுகாவலர்களுக்கு 4 நாட்கள் கட்டாய உயிர் பாதுகாவல் குறித்த சான்றிதழ் வகுப்புகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்மூலம் தேசிய உயிர் பாதுகாப்பு சங்கத்தின் உதவியுடன் மார்ச் 2013-ல் நடத்தப்பட்டது.

4.3 கோடைக் கால பயிற்சி முகாம்

ஒவ்வொரு ஆண்டும் 16 வயதிற்குட்பட்ட மாணவர் மற்றும் மாணவியருக்கு தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து, கையுந்துபந்து மற்றும் பிற விளையாட்டுக்களில்

மாவட்டத் தலைமையிடங்கள் மற்றும் சிறு விளையாட்டரங்கங்களில் கோடைக்கால பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இம்முகாம்கள் மாவட்டங்களில் பிரசித்தி பெற்றவை. 2012-2013 ஆம் ஆண்டில் 5,820 குழந்தைகள் இம்முகாம்களில் கலந்து கொண்டுள்ளனர்.

4.4 கல்வி மாவட்ட அளவிலான பயிற்சி முகாம்

உலகத் திறனாளர்கள் கண்டறியும் திட்டத்தின்மூலம் கண்டறியப்பட்ட மாணவர் மற்றும் மாணவியர்களுக்கென கல்வி மாவட்ட அளவிலான பயிற்சி முகாம்கள் மாநிலத்தில் 67 கல்வி மாவட்டங்களிலும் 5 நாட்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த முகாம்களில் பல்வேறு விளையாட்டுக்களின் அடிப்படை திறமைகள் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் 30,000-க்கும் மேற்பட்ட மாணவ / மாணவியர்கள் இத்திட்டத்தின்மூலம் பயனடைகிறார்கள்.

4.5 மாவட்ட அளவிலான இருப்பிட பயிற்சி முகாம்

ஒவ்வொரு கல்வி மாவட்ட அளவிலான பயிற்சி முகாமில் திறமையான 60 மாணவ/மாணவியர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு மாவட்ட அளவிலான இருப்பிட பயிற்சி முகாம்கள், மாவட்டங்களில் வருடத்தில் 15 நாட்கள் நடத்தப்பட்டு வருகின்றன. 2012-2013 ஆம் ஆண்டில் 4,020 சிறுவர்கள் / சிறுமியர்கள் பயனடைந்துள்ளனர்.

4.6 பைக்கா கிரிடா ஸ்ரீ பயிற்சி

ஊரக விளையாட்டுக்களை மேம்படுத்தும்வண்ணம், கிராம இளைஞர் விளையாட்டு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், மாவட்ட விளையாட்டு அலுவலர்கள் மற்றும் பயிற்றுநர்களிடையே 56 தலைமைப் பயிற்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு தேசிய பயிற்சியாளர்களால் பயிற்சி அளிக்கப்படுகின்றனர். இத்தலைமைப் பயிற்சியாளர்கள் உதவியுடன் 498 பயிற்சியாளர்களுக்கு 5 மண்டலங்களில் 6 நாட்கள் பயிற்சியளிக்கப்பட்டது. இதில் பெரும்பாலானவர்கள் கல்வித் துறையைச் சேர்ந்த உடற்கல்வி இயக்குநர்கள் / உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் சிறந்த விளையாட்டு வீரர்கள் ஆவர். இப்பயிற்சியாளர்களைக் கொண்டு 2013 ஆம் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் அந்தந்த கிராமங்களில் கோடை கால பயிற்சி முகாம்கள் நடத்திட எதிர்பார்க்கப்படுகிறது.

2013 மே 10]

இவர்களைக் கொண்டு ஆண்டு முழுவதும் கிராம அளவில் தொடர்ந்து பயிற்சியளிக்கவும் மற்றும் பைக்கா போட்டிகள் மற்றும் உயர் நிலையிலான போட்டிகள் உட்பட பல்வேறு போட்டிகளில் விளையாட்டு வீரர்களை பங்கேற்கும் வகையில் ஊக்கப்படுத்த / தயார்செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

படலம் – 5

விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல்

5.1 மாதாந்திர விளையாட்டுப் போட்டிகள்

போட்டி விளையாட்டுப் பண்பாட்டினை ஊக்கப்படுத்த அனைத்து வயதினருக்கும் வெவ்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் அனைத்து மாவட்டங்களிலும் ஆண்டிற்கு இரு மாதங்களில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த விளையாட்டுப் போட்டிகள் விளையாட்டு வீரர்கள் தங்களது திறமையை வெளிப்படுத்த மற்றும் செயல்திறனை வளர்த்துக் கொள்ள நல்ல வாய்ப்பு அளிக்கிறது. 2012-2013 ஆம் ஆண்டில் 25,024 விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகள் (17,216 வீரர்கள், 7,808 வீராங்கனைகள்) கலந்து கொண்டனர்.

5.2 அண்ணா சைக்கிள் போட்டி

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை நினைவு கூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15 ஆம் நாள் அனைத்து மாவட்டத் தலைமையிடங்களிலும் 16 வயதிற்குட்பட்ட சிறுவர்கள், சிறுமியர்களுக்கு மாவட்ட அளவிலான அண்ணா சைக்கிள் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

5.3 இந்திய அரசின் “பைக்கா”(PYKKA) திட்டத்தின்கீழ் போட்டிகள் நடத்துதல்

இந்திய அரசு “பைக்கா” திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் கிராம ஒன்றியங்கள் மற்றும் கோட்ட அளவில் விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த திட்டத்தின்கீழ் 16 வயதிற்குட்பட்ட கிராம இளைஞர்கள் / பெண்களுக்கான பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் கிராம ஒன்றிய அளவிலும், மாவட்ட மற்றும் மாநில அளவிலும் நடத்தப்பட்டு வருகின்றன. 2012-2013 ஆம் ஆண்டில் இவ்வாறு மாநில அளவில் 16 விளையாட்டுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட

[2013 மே 10

குழுக்கள் நாட்டின் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்ற தேசிய அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டுள்ளன.

5.4 இந்திய அரசின் "பைக்கா" திட்டத்தின்கீழ் நடத்தப்படும் தேசிய போட்டிகளில் பங்கேற்பு

இந்திய விளையாட்டுக் குழுமம், "பைக்கா" திட்டத்தின்கீழ் 2008-2009 ஆம் ஆண்டிலிருந்து கிராமங்களில் உள்ள 16 வயதிற்குட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்காக 16 விளையாட்டுகளில் தேசிய அளவிலான போட்டிகள் நடத்தி வருகின்றன. தேசிய அளவிலான போட்டிகளில் தமிழக அணிகள் களமிறங்கியுள்ளன.

இந்த பைக்கா திட்டத்தின்கீழ் 38-வது தேசிய பெண்கள் விளையாட்டு பகுதி-3 போட்டிகள் 2012 டிசம்பர், 5 முதல் 8 வரை சென்னையில் நடத்தப்பட்டன. தடகளம், இறகுப்பந்து மற்றும் மேசைப்பந்து ஆகிய விளையாட்டுப் போட்டிகளில், 18 மாநிலங்களைச் சார்ந்த 650-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் மற்றும் அலுவலர்கள் பங்கேற்றனர். இப்போட்டிகளில் தமிழ்நாடு பெண்கள் அணியினர் இறகு பந்து மற்றும் மேசைப்பந்து விளையாட்டு போட்டிகளில் வெள்ளிப் பதக்கம் வென்றனர். தடகள விளையாட்டில் தமிழ்நாட்டைச் சேர்ந்த பெண்கள் 4 தங்கப் பதக்கம், 6 வெள்ளிப் பதக்கம் மற்றும் 5 வெண்கலப் பதக்கங்களை வென்றனர்.

நாட்டின் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்ற தேசிய அளவிலான பைக்கா போட்டிகளில் தமிழ்நாடு மாநில அணியினர் ஒட்டு மொத்த வெற்றி பெற்றுள்ளனர்.

5.5 மாநில விளையாட்டுக் கழகங்கள் நடத்தும் மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகள்

பல்வேறு மாநில விளையாட்டுக் கழகங்கள், மாவட்டங்களுக்கிடையே, மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகளை தொடர்ச்சியாக நடத்தி வருகின்றன. தேசிய அளவில் போட்டிகளை நடத்துவதற்காக அதிகபட்சமாக ரூ.3 இலட்சம் மானியமாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் வழங்கப்படுகிறது. மேலும், தமிழகத்தின் சார்பில் தேசிய அளவிலான போட்டிகளில் தமிழ்நாட்டு அணிகளை பங்கேற்கச் செய்யும் மாநிலக் கழகங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

2013 மே 10]

5.6 தமிழகத்தில் சர்வதேச அளவிலான போட்டிகள் நடத்துதல்

தமிழகத்தில் சர்வதேச அளவிலான போட்டிகள் நடத்துவதை ஊக்குவிக்கும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட பல்வேறு மாநில விளையாட்டுக் கழகங்களுக்கு வழங்க ரூ.50 இலட்சம் மொத்த மானியம் உள்ளது. கடந்த 2011-2012 மற்றும் 2012-2013 ஆம் ஆண்டுகளில், ரூ.68 இலட்சம் பல்வேறு சர்வதேச போட்டிகள் நடத்திட வழங்கப்பட்டுள்ளது.

5.7 முதலமைச்சர் கோப்பைக்கான தடகளம் மற்றும் நீச்சல் போட்டிகள்

மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான தடகளப் போட்டிகள் 10 பிரிவுகளிலும், நீச்சல் விளையாட்டில் 8 பிரிவுகளிலும் ஆண்கள் மற்றும் பெண்களுக்காக நடத்தப்பட்டது. இப்போட்டிகளில் முதல், இரண்டு மற்றும் மூன்றாமிடம் பெறுவோருக்கு முறையே ரூ.1.00 இலட்சம், ரூ.75,000/- மற்றும் ரூ.25,000/- வழங்கப்பட்டது. மாநிலப் போட்டிகளுக்கு முன்னர் மாவட்ட அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டன.

5.8 முதலமைச்சர் கோப்பைக்கான குழுப் போட்டிகள்

முதலமைச்சர் கோப்பைக்கான குழு விளையாட்டுப் போட்டிகள் கால்பந்து, வளைகோல்பந்து, கையுந்துபந்து, கபாடி, கூடைப்பந்து, டென்னிஸ், மேசைப்பந்து மற்றும் இறகுப்பந்து ஆகிய விளையாட்டுக்களில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு மாநில அளவில் நடத்தப்பட்டன. ஒவ்வொரு மாவட்டத்திலும் மாநில அளவில் போட்டியிடுவதற்காக சிறந்த அணிகள் தேர்வு செய்யப்பட்டன.

இப்போட்டிகளில் தங்கப் பதக்கம், வெள்ளிப் பதக்கம் மற்றும் வெண்கலப் பதக்கம் பெறும் அணிகளில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் முறையே ரூ.1 இலட்சம், ரூ.75,000/- மற்றும் ரூ.25,000/- பரிசுத் தொகையாக வழங்கப்பட்டது. இத்திட்டத்தினை 2012-2013 ஆம் ஆண்டில் செயல்படுத்துவதற்காக ரூ.5.02 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

[2013 மே 10

5.9 தேசிய மகளிர் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பு

இந்திய விளையாட்டுக் குழுமம், மகளிர் பிரிவினரை விளையாட்டு செயல்பாடுகளில் பங்கேற்க ஊக்கம் அளிக்கும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் 13 விளையாட்டுப் பிரிவுகளில் தேசிய மகளிர் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகிறது.

தமிழக அணி இப்போட்டிகளில் தொடர்ந்து பங்கேற்று வருகிறது. 2012-2013 ஆம் ஆண்டில் தமிழக மகளிர் அணிகள் 2 தங்கப் பதக்கங்கள், 8 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 5 வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுள்ளன.

5.10 சென்னை ஓப்பன் டென்னிஸ் போட்டிகள்

பெருமைமிக்க சென்னை ஓப்பன் டென்னிஸ் சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டரங்கத்தில் 31-12-2012 முதல் 6-1-2013 வரை நடத்தப்பட்டன. இப்போட்டிகளில் உலக முன்னணி டென்னிஸ் விளையாட்டு வீரர்கள் பங்கேற்பதால் இந்த சர்வதேச டென்னிஸ் ஓப்பன் போட்டிகளின் தகுதி ஒவ்வொரு ஆண்டும் மேம்பாடு அடைந்து வருகிறது. இப்போட்டிகளை நடத்த தமிழ்நாடு அரசு ரூ.2 கோடியை ஒப்பளித்து முன்னோடி ப்ளாட்டினம் ஆதரவாளராக விளங்குகிறது.

5.11 மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல்

மாற்றுத் திறனாளிகள், விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதை ஊக்குவிக்கும்பொருட்டு அவர்களுக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் பல்வேறு பிரிவுகளில் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும், மாநில அளவிலான மாற்றுத் திறனாளிகளுக்கான தடகளப் போட்டிகள் நான்கு பிரிவுகளில் அதாவது, உடல் ஊனமுற்றோர், கண் பார்வையற்றோர், மூளை வளர்ச்சி குன்றியோர் மற்றும் காது கேளாதோர் ஆகியோருக்காக நடத்தப்படுகின்றன. போட்டிகளில் அனைத்துப் பிரிவுகளில் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுத் தொகைகள் வழங்கப்படுகின்றன.

2013 மே 10]

5.12 அகில இந்திய குடிமுறை அரசுப் பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள்

அரசுப் பணியாளர்களிடையே விளையாட்டினை ஊக்கப்படுத்துவதன்மூலம் அவர்களது உடற்தகுதியினை பராமரிக்கச் செய்யும் பொருட்டு சுழற்சி முறையில் வெவ்வேறு மாநிலங்களில் நடத்தப்பட்டுவரும் அகில இந்திய குடிமுறை அரசுப் பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு, அதன் அணிகளை களமிறங்கச் செய்கிறது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும் சில போட்டிகளை நடத்தி வருகிறது. 2012-2013 ஆம் ஆண்டில் சென்னையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அகில இந்திய குடிமுறை அரசுப் பணியாளர்களுக்கான தடகள விளையாட்டுப் போட்டிகளை நடத்தியது. அதில் 307 நபர்கள் கலந்து கொண்டனர்.

படலம் – 6

உதவித் தொகைகள், விருதுகள், ஊக்கத் தொகைகள்

தமிழக அரசு பல்வேறு நிலைகளில், பல்வேறு பிரிவுகளில் தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு உதவித் தொகைகள், விருதுகள் மற்றும் ஊக்கத் தொகைகள் வழங்கி வருகின்றது.

6.1 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உதவித் தொகைத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், தேசிய அளவில் பதக்கம் பெறும் தலைசிறந்த பள்ளி மாணவர்களுக்கு ரூ.10,000/- கல்லூரி மாணவர்களுக்கு ரூ.13,000/- உதவித் தொகையாக வழங்கப்படுகின்றன. 2011-2012 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ், 231 பள்ளி மாணவர்களும், 155 கல்லூரி மாணவர்களும் பயனடைந்துள்ளனர்.

6.2 உயர்நிலை விளையாட்டு வீரர்களுக்கு உதவித் தொகை (ஒலிம்பிக் போட்டிகளை நோக்கி)

ஒலிம்பிக் போட்டிகள் மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கம் பெற வாய்ப்புள்ள, திறன்வாய்ந்த சிறந்த விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகளை தயார் செய்ய மற்றும்

உதவி அளிக்க ஒரு சிறப்புத் திட்டம் துவங்கப்பட்டுள்ளது. இதன்படி 5 தலை சிறந்த விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் ஓராண்டிற்கு ரூ.25 இலட்சம் நிதி உதவி விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கவும், விஞ்ஞானரீதியில் சிறப்புப் பயிற்சி பெறவும், உயர்தர விளையாட்டுக் கருவிகள் மற்றும் பயிற்சி கருவிகள் வாங்கிடவும், சத்தான உணவு வகைகள் பெற்றிடவும் வழங்கப்படுகிறது. இத்திட்டம் ஆண்டு தொடர் செலவினமான ரூ.1.25 கோடியில் செயல்படுத்தப்படுகிறது.

6.3 திறமைவாய்ந்த இளம் சிறார்களுக்கு பரிசுத் தொகை வழங்குதல்

உலகத் திறனாய்வுத் திட்டத்தின்கீழ் மண்டல அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டு திறன்வாய்ந்த இளம் சிறார்கள் கண்டறியப்படுகிறார்கள். 2012-2013 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் 3,240 திறன்வாய்ந்த இளம் சிறார்கள் கண்டறியப்பட்டு சிறப்பு பரிசுத் தொகையாக ரூ.97.20 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

6.4 உயர் ஊக்கத் தொகை

தமிழ்நாட்டைச் சார்ந்த விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக், ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் காமன்வெல்த் போட்டிகள் மற்றும் இதர விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வெல்பவர்களுக்கு கீழ்க்கண்டவாறு உயரிய ஊக்கத் தொகை வழங்கப்படுமெனத் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது:

வ. எண்	போட்டிகள்	உயரிய ஊக்கத் தொகையின் அளவு (ரூபாய் இலட்சத்தில்)		
		தங்கம்	வெள்ளி	வெண்கலம்
1.	**ஒலிம்பிக்** (நான்கு ஆண்டுக்கு ஒருமுறை) தனிநபர் போட்டி / குழுப் போட்டியில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும்	200.00	100.00	50.00
2.	**ஆசிய விளையாட்டுப் போட்டிகள்** (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை) தனிநபர் போட்டி / குழுப் போட்டியில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும்	50.00	30.00	20.00

2013 மே 10]

வ. எண்	போட்டிகள்	உயரிய ஊக்கத் தொகையின் அளவு (ரூபாய் இலட்சத்தில்)		
		தங்கம்	வெள்ளி	வெண்கலம்
3.	**காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள்** (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை) தனிநபர் போட்டி / குழுப் போட்டியில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும்	50.00	30.00	20.00
4.	**தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்** (2 ஆண்டுக்கு ஒரு முறை) (தனிநபர் போட்டி / குழுப் போட்டியில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும்)	5.00	3.00	2.00
5.	**தேசிய விளையாட்டுப் போட்டிகள்** (2 ஆண்டுக்கு ஒரு முறை) (தனிநபர் போட்டி / குழுப் போட்டியில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும்)	5.00	3.00	2.00

மேலும், ஒலிம்பிக் அல்லாத விளையாட்டுகளான சதுரங்கம், கேரம், வலைபந்து (Tennikoit) *மற்றும் வலுதூக்கல்* (Powerlifting) *ஆகியவற்றில் உலகப் போட்டிகள் மற்றும் தேசியப் போட்டிகளில் பதக்கம் வெல்லுபவர்களுக்கு கீழ்க்கண்டவாறு ஊக்கத் தொகை அரசு வழங்குகிறது:*

இனம்	விளையாட்டுகளின் வரிசைக் கிரமம்	உயரிய ஊக்கத் தொகையின் அளவு		
		தங்கம்	வெள்ளி	வெண்கலம்
1.	சதுரங்கம், கேரம், வலுதூக்கல் மற்றும் வளைபந்து விளையாட்டுகளில் நடைபெறும் சர்வதேச போட்டிகள்	ரூ.20 இலட்சம்	ரூ.15 இலட்சம்	ரூ.10 இலட்சம்
2.	சதுரங்கம், கேரம், வலுதூக்கல் மற்றும் வளைபந்து விளையாட்டுகளில் நடைபெறும் தேசிய போட்டிகள்	ரூ.1 இலட்சம்	ரூ.50,000/–	ரூ.25,000/–

[2013 மே 10

6.5 நலிந்த நிலையிலுள்ள விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கான ஓய்வூதியத் திட்டம்

தற்போது நலிந்த நிலையிலுள்ள முன்னாள் தலைசிறந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளது மாத வருமானம் ரூ.6000/-க்கு மிகாமலும், 58 வயதைக் கடந்தவராகவும் இருந்தால், அவர்களுக்கு ஓய்வூதியமாக மாதமொன்றுக்கு ரூ.3000/- வீதம், அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் வழங்கப்படுகிறது. அவர்களது இறப்பிற்குப் பின்னர் அவர்களுடைய வாழ்க்கைத் துணை அவர்களது வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவராகிறார். இன்றைய தேதியில் இத்திட்டத்தின்கீழ், 65 ஓய்வூதியதாரர்களும், 5 குடும்ப ஓய்வூதியதாரர்களும் பயனடைந்துள்ளனர்.

6.6 விளையாட்டு வீரர்கள் நல நிதி

தேசிய மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெறும்போது விளையாட்டு வீரர்கள் காயமடைந்தால் அவர்களுக்கு நிதி உதவி அளிக்கும் பொருட்டு விளையாட்டு வீரர்கள் நல நிதி ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது. 2012-2013 ஆம் ஆண்டில் காயமடைந்த 3 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.70,000/- வழங்கப்பட்டுள்ளது.

6.7 சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு பணி ஒதுக்கீடு மற்றும் தொழிற்கல்லூரிகளில் இட ஒதுக்கீடு

காவல் துறையில் 5% பணியிடங்கள் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர விளையாட்டு வீரர்களுக்கான பங்கீட்டில், பொறியியல் கல்லூரிகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 100 இடங்களானது 500 இடங்களாக உயர்த்தப்பட்டுள்ளது. சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு மருத்துவக் கல்லூரிகளில் 3 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6.8 "முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது"

விளையாட்டு வீரர்கள், பயிற்றுநர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களது சாதனைகளை அங்கீகரிக்கும்பொருட்டு, தலா ரூ.1 இலட்சம், பாராட்டுப் பத்திரம் மற்றும் சம்பந்தப்பட்ட விளையாட்டினை பிரதிபலிக்கும் பட்டயமும் கொண்ட

2013 மே 10]

'முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது' இப்பிரிவுகளில் தலைசிறந்த தனி நபர்களுக்கு பரிசாக வழங்கப்படுகிறது.

6.9 வெற்றியாளர்கள் மேம்பாட்டுத் திட்டம்

வெற்றியாளர்கள் மேம்பாட்டுத் திட்டம் ஒரு தனித் தன்மையுடைய திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் சர்வதேச அளவில் பதக்கங்கள் வெல்லக்கூடிய திறன் படைத்தவர்கள் மற்றும் தனித்திறன்மிக்க விளையாட்டு வீரர்கள் கண்டறியப்பட்டு, தேவை அடிப்படையிலான உதவிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட விளையாட்டு வீரர்களுக்கு அதிகபட்சமாக ரூ.2 இலட்சம் ஒவ்வொரு ஆண்டும் நிதி உதவி வழங்கப்படுகிறது. இதுகாறும், 215 விளையாட்டு வீரர்கள் இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த ஊக்கத்தொகைகள் 2016-ல் பிரேஸில் ரியோ டி ஜெனிரோவில் நடக்கும் ஒலிம்பிக்ஸ், 2014-ல் நடக்கும் ஆசிய மற்றும் காமன்வெல்த் விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்வதற்கான தகுதியினை மேம்படுத்தும் வாய்ப்பினை தமிழக விளையாட்டு வீரர்கள் பெறுவதற்கு முக்கிய பங்கு வகிக்கும்.

படலம் – 7

விளையாட்டுக் கட்டமைப்பு

திறமைகளை மேம்படுத்தவும், அதனை வடிவமைக்கவும் விளையாட்டுக் கட்டமைப்பு இன்றியமையாத தேவையாகும். வளரும் இளம் சிறார்களுக்கு உலகத்தரத்திலான கட்டமைப்புகளை கிடைக்க செய்வதன்மூலம் தேசிய மற்றும் சர்வதேச அளவில் சாதனை புரிய இயலும். கடந்த 1995 ஆம் ஆண்டில் நடைபெற்ற தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் போது மிகச் சிறந்த கட்டமைப்புகளான பல்நோக்கு உள் விளையாட்டரங்கம், மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டரங்கம் மற்றும் வேளச்சேரி நீச்சல் குள வளாகம் ஆகியவற்றை அமைத்த பெருமை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையே சாரும். மேலும், தனி முத்திரை பதித்துள்ள ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் 1993 ஆம் ஆண்டில் 234 நாட்களிலேயே கட்டி முடிக்கப்பட்ட சாதனைக்குரியது. தற்சமயம் இவ்விளையாட்டு வசதிகளை பெருமளவில் பயன்படுத்தி தொழில் முறை விளையாட்டு வீரர்கள்

[2013 மே 10

பல்வேறு நிலைகளில் வெற்றி வாகை சூடி சாதனை புரிய உதவுகிறது ஊரக மற்றும் பகுதி அளவிலான நகர்புறங்களிலுள்ள விளையாட்டு வீரர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தரும் வகையில் நல்ல விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள் பல்வேறு மாவட்டங்களில் அரசு உருவாக்கி வருகிறது.

பல்வேறு மாவட்டங்களில் உள்ள விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் குறித்த விவரங்கள் இணைப்பில் வழங்கப்பட்டுள்ளது

7.1 மாநிலத்தில் உள்ள பெரிய விளையாட்டு கட்டமைப்பு வசதிகள்

7.1.1 ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை

1993 ஆம் ஆண்டு ரூ.44 கோடி செலவில் 234 நாட்களுக்குள் கட்டி முடிக்கப்பட்ட சாதனை படைக்கப்பட்ட இவ்விளையாட்டரங்கில் 40,000 நபர்கள் அமரக்கூடிய கொள்திறன் கொண்டது. 8 பாதை கொண்ட 400 மீட்டர் செயற்கை இழை தடகள ஓடுதளம், மையத்தில் இயற்கை புல் கால்பந்து மைதானத்துடன் அமைந்துள்ளது. மேலும், ஜூடோ, பளு தூக்குதல், மேசைப்பந்து, குத்துச்சண்டை, சதுரங்கம் மற்றும் கேரம் ஆகியவற்றிற்கான விளையாட்டு வசதிகள் செய்யப்பட்டுள்ளது. இரண்டு கடற்கரை கையுந்துபந்து திடல்கள், மூன்று களிமண் தரையிலான கையுந்துபந்து திடல்கள் (ஒளி வெள்ள வசதியுடன்), ஒரு எறிபந்து திடல், ஒரு கபாடி மைதானம் மற்றும் ஒரு கைப்பந்து திடல் வசதிகள் இவ்விளையாட்டு வளாகத்தில் உள்ளன. இது மட்டுமல்லாமல், குளிர் சாதன வசதி கொண்ட உடற்பயிற்சிக் கூடம் மற்றும் கூட்ட அரங்கம் இச்சீர்மிகு விளையாட்டரங்கில் உள்ளன.

சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் தற்போதுள்ள விளையாட்டுக் கட்டமைப்புகளில் நிறைவடையாமல் செயற்கை இழை தடகள ஓடுதளம் அமைத்தல், புல் கால்பந்து திடல், மின்னொளி மாற்றுதல் மற்றும் அலுவலகங்களை நவீனமாக்கல் ஆகிய பணிகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தவிர, விளையாட்டரங்க வடக்குப் பகுதியில் அனைத்து வசதிகளுடன் கூடிய செயற்கை தடகள பயிற்சி ஓடுதளம், இயற்கை புல் கால்பந்து திடல், உடற்பயிற்சி அரங்கம் மற்றும் இதர வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. ரூ.33.65 கோடிகளில் இவ்வசதிகள் செய்யப்படுவதன்

மூலம் தற்போதுள்ள வசதிகள் பெருமளவில் மேம்படுத்தப்படுவதுடன் வருங்காலங்களில் சர்வதேச அளவிலான போட்டிகளை நடத்த இயலும்.

7.1.2 பல்நோக்கு உள் விளையாட்டரங்கம், சென்னை

1995 ஆம் ஆண்டு ரூ.20 கோடி செலவீட்டில், 2,50,000 சதுர அடி பரப்பளவில் 4 நிலைகளில் பார்வையாளர்கள் மாடங்கள் கொண்டு 8,000 நபர்கள் அமரக்கூடிய கொள்திறனுடன் கட்டப்பட்டது. இவ்விளையாட்டரங்கம் முழுமையாக குளிர் சாதன வசதி கொண்டதாகும். ஒளி வெள்ள வசதியுடன் மரத்திலானதளம் அமையப் பெற்றது. கையுந்துபந்து, கூடைப்பந்து, மேசைப்பந்து, இறகுப்பந்து, குத்துச்சண்டை, மல்யுத்தம், பளுதூக்குதல், சதுரங்கம், கேரம், கைப்பந்து மற்றும் இதர விளையாட்டுக்கள் இவ்விளையாட்டரங்கத்தில் விளையாடலாம். கூடுதலாக இவ்விளையாட்டு வளாகத்தில் ஒளி வெள்ள வசதி கொண்ட சறுக்கு விளையாட்டுப் பகுதி, ஒளி வெள்ள வசதி கொண்ட இரண்டு கான்கிரீட் கூடைப்பந்து திடல்கள், களிமண் கைப்பந்து திடல், ஒளி வெள்ள வசதி கொண்ட வாள்சண்டை அரங்கம் மற்றும் திறந்த வெளி குத்துச்சண்டை திடல் வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. 2012-2013 ஆம் ஆண்டில் ஒளி மற்றும் குளிர்சாதன வசதிகள் மேம்படுத்துதல் பணிகளுக்காக ரூ.5 கோடிகளை அரசு அனுமதித்துள்ளது.

7.1.3 மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கம், எழும்பூர், சென்னை

1995 ஆம் ஆண்டு ரூ.8 கோடி செலவீட்டில் கட்டப்பட்டது. பிரதான அரங்கம் மற்றும் பார்வையாளர் மாடங்களில் 8,670 நபர்கள் அமரக்கூடிய கொள்திறன் கொண்டது. சர்வதேச தரத்திலான ஒளி வெள்ள வசதியுடன் கூடிய செயற்கை இழை ஹாக்கி ஆடுகளம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், நான்கு டென்னிஸ் திடல்கள் (களிமண்), ஒளி வெள்ள வசதி கொண்ட மூன்று கையுந்துபந்து திடல்கள் மற்றும் உடற்பயிற்சிக் கூடம் ஆகியவை உள்ளன.

7.1.4 நீச்சல் குள வளாகம், வேளச்சேரி, சென்னை

1995 ஆம் ஆண்டு ரூ.11.32 கோடி செலவீட்டில் கட்டப்பட்டது. 4,000 பார்வையாளர்கள் கண்டுகளிக்கும் வகையில் இவ்வளாகத்தில்

[2013 மே 10

சர்வதேச தரத்திற்கு இணையான 8 பாதையுடன் கூடிய 50 மீ. X 25 மீ. பந்தய நீச்சல் குளம், 18 மீ. X 25 மீ. குதித்தல் குளம் மற்றும் 25 மீ. X 25 மீ. பயிற்சிக்கான நீச்சல் குளம் ஆகியவை அமையப் பெற்றுள்ளன. இதுமட்டுமல்லாமல், இவ்வசதிகளுடன் ஒரு உடற்பயிற்சிக் கூடம் மற்றும் ஜிம்னாஸ்டிக்ஸ் விளையாட்டிற்கான உள்ளரங்கம் ஆகியவையும் இவ்வளாகத்திலேயே உள்ளன.

7.1.5 டென்னிஸ் விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம், சென்னை

1995 ஆம் ஆண்டு ரூ.7.50 கோடி செலவீட்டில் கட்டப்பட்ட இவ்விளையாட்டரங்கம், 5,000 பார்வையாளர்கள் அமரக்கூடிய கொள்திறனுடனும், பார்வையாளர் மாடங்களில் 2,000 நபர்கள் அமரக்கூடிய கொள்திறனுடனும் அமையப் பெற்றுள்ளது. இவ்வளாகத்தில் முக்கிய விளையாட்டரங்கில் ஒரு மையத் திடலும், வெளியே 6 பயிற்சித் திடல்களும் ஒளி வெள்ள வசதியுடன் அமையப் பெற்றுள்ளன. அனைத்துத் திடல்களும் சர்வதேச தரத்திலான செயற்கை மேற்பரப்பு கொண்டவையாகும். உடற்பயிற்சிக் கூடம் ஒன்றும் இவ்விளையாட்டரங்கில் உள்ளது.

7.1.6 ஷெனாய் நகர் நீச்சல் குளம், சென்னை

இவ்வளாகத்தில் ஒரு நீச்சல் குளம் மற்றும் ஒரு குழந்தைகளுக்கான நீச்சல் குளம் உள்ளன. இதுமட்டுமல்லாமல், கடந்த 2012 ஆம் ஆண்டு இறகுப்பந்து உள் விளையாட்டரங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

7.1.7 மாவட்ட ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகங்கள்

திருப்பூர் மற்றும் வேலூர் மாவட்டங்கள் தவிர அனைத்து மாவட்டத் தலைமையிடத்திலும் மாவட்ட ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து, கையுந்துபந்து மற்றும் கபாடி போன்ற விளையாட்டுகளுக்கான ஆடுகள வசதிகள் உள்ளன. இதர விளையாட்டுகளுக்கான வசதிகள் படிப்படியாக அமைக்கப்படும். தற்போது தமிழக அரசு, ஒவ்வொரு மாவட்டத் தலைமையிடங்களிலும் ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகம், ஒரு திறந்தவெளி விளையாட்டரங்கம், ஒரு உள்விளையாட்டரங்கம் மற்றும் ஒரு நீச்சல் குளம் இருக்க வேண்டும் என்ற உறுதியுடன் மாவட்டங்களில் விளையாட்டு கட்டமைப்பு வசதிகளை ஆர்வத்துடன் ஏற்படுத்துகிறது.

2013 மே 10]

7.1.8 பல்நோக்கு உள் விளையாட்டரங்கங்கள்

சென்னை மட்டுமல்லாது, தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் சேலம் மாவட்டங்களில் பல்நோக்கு உள் விளையாட்டரங்கங்கள் கட்டப்பட்டுள்ளன. கூடுதலாக ரூ.14.30 கோடி செலவினத்தில் திருவாரூர், திருநெல்வேலி, திருப்பூர், திருவண்ணாமலை மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் பல்நோக்கு உள் விளையாட்டரங்கங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இவ்விளையாட்டரங்கங்கள் இறகுப்பந்து, கையுந்துபந்து, கூடைப்பந்து, மேசைப்பந்து, டேக்வாண்டோ, கைப்பந்து, கபாடி, வாள் சண்டை மற்றும் இதர விளையாட்டுக்களில் விளையாட்டு வீரர்கள் சர்வதேச தரத்தில் பயிற்சி பெற வகை செய்யும். மேலும், தலா ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் ஸ்ரீரங்கம் (திருச்சி), அரியலூர், விழுப்புரம், காஞ்சிபுரம், திண்டுக்கல், கன்னியாகுமரி, மதுரை, தஞ்சாவூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள் விளையாட்டரங்கங்கள் கட்டுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

7.1.9 செயற்கை இழை தடகள ஓடுதளம் மற்றும் ஹாக்கி புல் மைதானம்

தற்போது செயற்கை இழை தடகள ஓடுதளங்கள் சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் உள்ளன. 2012-2013 ஆம் ஆண்டில் ரூ.6.00 கோடி மதிப்பீட்டில் திருச்சியில் செயற்கை இழை தடகள ஓடுகளம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்னை மேயர் இராதாகிருஷ்ணன் விளையாட்டரங்கம் மற்றும் ஒய்.எம்.சி.ஏ. வளாகத்திலும், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலியிலும் செயற்கை புல் ஹாக்கி மைதானங்கள் உள்ளன. இதுமட்டுமல்லாமல் ரூ.6.00 கோடி செலவினத்தில் மதுரையில் செயற்கை புல் ஹாக்கி மைதானம் அமைக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கடந்த மாவட்ட ஆட்சியர்கள் கூட்டத்தில் அறிவித்துள்ளவாறு, கோவில்பட்டியில் செயற்கை புல் ஹாக்கி விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான பணிகள் விரைவில் துவக்கப்படும்.

7.1.10 நீச்சல் குளங்கள்

தற்போது 21 மாவட்டங்களில் நீச்சல் குளங்கள் செயல்பட்டு வருகின்றன. இது தவிர பெரம்பலூர், விழுப்புரம் மற்றும் நாமக்கல்

மாவட்டங்களில் நீச்சல் குளம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

7.2 விளையாட்டு விடுதிகள்

ரூ.2.26 கோடி மதிப்பீட்டில் கன்னியாகுமரி, திண்டுக்கல், தஞ்சாவூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் விளையாட்டு விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன. இவ்விளையாட்டு விடுதிகள் கட்டி முடிக்கப்பட்ட பின்னர், இன்றைய தேதியில் 17 விளையாட்டு விடுதிகளில் 16 விளையாட்டு விடுதிகள் முழுமையான கட்டிட வசதியுடன் செயல்படத் தொடங்கும். இத்துடன், தேனியில் விளையாட்டு விடுதி கட்டப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பினைத் தொடர்ந்து, விரைவில் அதற்கான பணிகள் துவங்கப்படும்.

7.3 கட்டமைப்புகள் பராமரித்தல்

விளையாட்டு கட்டமைப்புகளை சிறப்பாக வைத்திருக்க உறுதி செய்வதற்காக 2012-2013 ஆம் ஆண்டில் மாநிலத்திலுள்ள நவீன விளையாட்டரங்கம் மற்றும் இதர விளையாட்டு வசதிகளை பராமரிப்பதற்காக தமிழக அரசு ரூ.3.71 கோடி அளித்துள்ளது.

படலம் – 8

தகவல் மற்றும் ஆவணப்படுத்துதல்

8.1 தற்போதைய உலகப் பார்வையில் சமூக ஊடகப் புரட்சி மிகப்பெரிய வேகத்தில் நடைபெற்று வருகிறது. சமூக ஊடகம் என்பது பெருவாரியாக தனிப்பட்ட தகவல் தொடர்பு முறையாகும். பெரும்பாலான மக்கள் தகவல் தொடர்பான ஒளிபரப்பு காட்சி மற்றும் அச்சு ஊடகத்தைவிட சமூக ஊடகத்திற்கே முன்னுரிமை அளிக்கின்றனர்.

8.2 சமூக ஊடகத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தன்னுடைய திட்டங்கள்/ நடவடிக்கைகள் / அறிவிப்புகள் / கொள்கைகள் மற்றும் இதர செயல்பாடுகள் குறித்த விவரங்களைப் பரப்புவதற்கு ஏதுவாக முகநூல் பக்கமான www.facebook.com/sdat.gov. தற்போது துவக்கியுள்ளது. இதன்மூலம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் நடவடிக்கைகள் வெளிப்படைத் தன்மையுடன் விளங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றன. இம்முகநூல் பக்கங்களை

காண்பவர்களின் விமர்சனங்கள் மற்றும் கருத்துக்கள்மூலம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தவறுகளைச் சரிப்படுத்திக்கொள்ள உதவுவதுடன் தன்னுடைய செயல்பாடுகளை தொழில் முறையாக மேற்கொள்ள உதவும். உலகத்தில் உள்ள பல்வேறு வயது தரப்பினரும் ஏற்கனவே முகநூலில் தங்களது விலைமதிப்பற்ற விமர்சனங்களையும், கருத்துக்களையும் வழங்குவது ஊக்கப்படுத்துவதாக உள்ளது என அறியப்படுகிறது.

8.3 பல்வேறு செயல்பாடுகள், சாதனைகள் மற்றும் விளையாட்டு நிகழ்வுகளுடன் விளையாட்டு தோழமைக்கான பல்வேறு விளையாட்டு தொடர்பான விவரங்களுடன் அறிவியல்பூர்வமான செய்திகள் பரப்பப்படவும், ஆவணப்படுத்தவும் மாதாந்திர செய்திக் கடிதம் மார்ச் 2013-ல் துவக்கப்பட்டது.

படலம் – 9

இளைஞர் நலத் திட்டங்கள்

9.1 இளைஞர் விடுதிகள்

சென்னை, மதுரை, திருச்சி, தஞ்சாவூர் மற்றும் உதகமண்டலம் ஆகிய இடங்களில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின்மூலம் 5 இளைஞர் விடுதிகள் சிறப்புற செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டின் தொன்மையான மேம்பட்ட கலாச்சாரத்தினை நாட்டில் உள்ள இளைஞர்கள் தங்களது பயணங்கள்மூலம் அனுபவிப்பதை ஊக்குவிப்பதையே குறிக்கோளாகக் கொண்டு இந்த இளைஞர் விடுதிகள் நிறுவப்பட்டன.

மத்திய மற்றும் மாநில அரசுகளின் இணை திட்டமாக இளைஞர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கு மத்திய அரசும், மேம்படுத்தப்பட்ட நிலத்தினை மாநில அரசும் இலவசமாக வழங்குகிறது.

படலம் – 10

தேசிய மாணவர் படை

தேசிய மாணவர் படை நற்பண்பு, நட்புடைமை, ஒழுங்குமுறை, தலைமைப் பண்பு, சமய சார்பற்ற நோக்கம், துணிவுச் செயல் மற்றும் உன்னதமான சுயநலமில்லாத தொண்டின் குறிக்கோள்களை

இளைஞர்களிடையே வளர்த்தல் ஆகிய குறிக்கோள்களுடன் 15 ஜூலை 1948 அன்று முறைப்படி தோற்றுவிக்கப்பட்டது. தேசிய மாணவர் படையானது இளைஞர்களை இராணுவத்தில் பணியேற்பதற்கு ஊக்குவிக்கிறது. ஒற்றுமை மற்றும் ஒழுங்குமுறை தேசிய மாணவர் படையின் நோக்கமாகும்.

தேசிய மாணவர் படையானது இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தின்கீழ் நிருவகிக்கப்பட்டு வருகிறது. துணைத் தலைமை இயக்குநர் அவர்கள் மாநிலத்தின் தேசிய மாணவர் படையின் துறைத் தலைமை அதிகாரி ஆவார்.

தேசிய மாணவர் படை திறமையாக செயல்பட தமிழக அரசு 2013-2014 ஆம் ஆண்டிற்காக, தேசிய மாணவர் படைத்துறைக்கு ரூபாய் 35.46 கோடி நிதி வழங்கியுள்ளது.

தமிழ்நாடு தேசிய மாணவர் படை மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 98,790 கீழ்வருமாறு:

இளநிலைப் பிரிவு மாணவர்கள் (பள்ளி மாணவர்கள்)	—	66,230
இளநிலைப் பிரிவு மாணவிகள் (பள்ளி மாணவிகள்)	—	5,450
முதுநிலைப் பிரிவு மாணவர்கள் (கல்லூரி மாணவர்கள்)	—	21,923
முதுநிலைப் பிரிவு மாணவிகள் (கல்லூரி மாணவிகள்)	—	5,187
மொத்தம்	—	98,790

தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு தமிழக அரசு கீழ்க்காணும் ஊக்க ஊதியங்களை வழங்குகின்றது:—

(அ) தேசிய மாணவர் படை மாணவ, மாணவியர்களுக்கான தமிழக அரசு ஊக்கத் தொகையினை 100 முதுநிலை மாணவ மாணவியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.200/- வீதம் பத்து மாதங்களுக்கும், 100 இளநிலை மாணவ, மாணவியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/- வீதம் பத்து மாதங்களுக்கும் உதவித் தொகையாக வழங்குகின்றது.

2013 மே 10]

(ஆ) குடியரசு தின விழா முகாமில் பதக்கங்கள் வென்றவர்களுக்கு மட்டுமல்லாது முகாமில் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கும் ரொக்க ஊக்க ஊதியமாக ஓராண்டிற்கு ரூ.5,80,400/- வழங்குகின்றது.

(இ) தமிழ்நாட்டில் இளநிலை ஆசிரியர் மற்றும் முதுகலை பட்ட மேற்படிப்பு ஆசிரியர்களுக்கான தேர்வு நியமன வாய்மொழித் தேர்வில், 12 மொத்த மதிப்பெண்களில் 1/2 மதிப்பெண் தேசிய மாணவர் படை செயல்பாடுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2012-2013 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரளணி மற்றும் மாநில பாராட்டு விழாவிற்காக மற்றும் தமிழக குடியரசு தின படைப்பிரிவுக்கான வரவேற்புக்கு தமிழக அரசு ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம்) அளித்துள்ளது. தமிழக படைப் பிரிவு புது டில்லியில் நடந்த குடியரசு தின விழா முகாம் மற்றும் பிரதமரின் திரளணியில் மூன்றாம் இடத்தை பெற்றுள்ளது.

படலம் — 11

நாட்டு நலப் பணித் திட்டம்

நாட்டு நலப் பணித் திட்டமானது இந்திய அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின்கீழ் இயங்கி வரும் ஒரு சிறந்த இளைஞர் நலத் திட்டமாகும். இத்திட்டமானது செப்டம்பர் 1969-ல் துவக்கப்பட்டதிலிருந்து மிகவும் சீரிய முறையில் செயல்படுத்தப்படுகிறது. 2012-2013 ஆம் ஆண்டில் 3,70,018 மாணவத் தொண்டர்களுடன் எண்ணிக்கையில் நாட்டு நலப் பணித் திட்டத்தில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.

இயக்குநர், கல்லூரிக் கல்வி இயக்ககம் இத்திட்டத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் ஆவார். மாநிலத் தொடர்பு அலுவலரின் உதவியோடு, பல்வேறு தொடர் பணிகள் மற்றும் சிறப்பு முகாம்கள் செயல்படுத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டின் நாட்டு நலப் பணித் திட்டமானது 38 பல்கலைக்கழகங்கள்/தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி நிறுவனம்/ஆசிரியர் பயிற்சி நிலையங்கள்/பள்ளிக் கல்வி இயக்ககம் ஆகியவற்றில் செயல்பட்டு வருகின்றன.

[2013 மே 10

மத்திய மற்றும் மாநில அரசுகளால் நாட்டு நலப் பணித் திட்ட நடவடிக்கைகளுக்காக 7:5 என்ற விகிதத்தில் நிதி ஒப்பளிக்கப்படுகிறது. நாட்டு நலப் பணித் திட்ட தொடர் நடவடிக்கைகள் மற்றும் சிறப்பு முகாம்களுக்கான மானியத் தொகை மாற்றத்தின் அடிப்படையில் 2013-2014 ஆம் நிதியாண்டிற்கு பல்கலைக்கழகங்கள் மற்றும் இயக்ககங்களுக்கு ரூ.1296.84 இலட்சமும், பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு ரூ.705.65 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நாட்டு நலப் பணித் திட்ட மாணவத் தொண்டர்களால் நடத்தப்படும் தொடர் பணிகள் மற்றும் சிறப்பு முகாம்கள் அனைத்து விதத்திலும் மாணவத் தொண்டர்களின் ஆளுமைத் திறனை மேம்படுத்தும் நோக்கத்தில் அமைந்துள்ளன.

நாட்டு நலப் பணித் திட்டத்தின்மூலம் கீழ்க்காணும் சாதனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன:—

1. 2012-2013 ஆம் ஆண்டில் நாட்டு நலப் பணித் திட்ட மாணவத் தொண்டர்கள் 1,00,505 யூனிட் இரத்தத்தை நன்கொடையாக வழங்கியுள்ளார்கள்.

2. 6,97,744 மரக்கன்றுகளை நாட்டு நலப் பணித் திட்ட மாணவத் தொண்டர்கள் நட்டுள்ளனர்.

3. மாணவத் தொண்டர்களின் செயல்பாடுகளால் உருவாக்கப்பட்ட சமுதாய சொத்தின் மதிப்பு ரூ.6,10,00,000/-.

4. நாட்டு நலப் பணித் திட்ட மாணவத் தொண்டர்கள் தத்தெடுக்கும் கிராமங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தி நுகர்வோர் பாதுகாப்பு, சுற்றுப்புறச் சூழல் விழிப்புணர்வு, பெண்ணுரிமை மற்றும் மதுவினால் தவறு புரிதல் குறித்த விழிப்புணர்வு ஆகிய கருப்பொருள்கள் குறித்து தெருமுனை நாடகங்கள்மூலம் விளக்குகின்றனர்.

படலம் — 12

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் பல்கலைக்கழகம், உயர் கல்வித் துறையின் கட்டுப்பாட்டிலிருந்து இத்துறையின் கட்டுப்பாட்டிற்கு 7-3-2012 முதல் கொண்டு வரப்பட்டது. 2005 ஆம் ஆண்டு தொலைநோக்கு ஆளுமைத் திறன் வாய்ந்த

2013 மே 10]

தமிழக முதல்வர் அவர்களது தலைமையின்கீழ் இந்திய தேசத்திலேயே விளையாட்டிற்கென தனி பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்ட ஒரே மாநிலம் தமிழ்நாடு மட்டுமே. இப்பல்கலைக்கழகம் உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுத் துறை தொடர்பான உடற்கல்வி மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றில் உயர்ந்த மையமாக விளங்குகிறது. இப்பல்கலைக்கழகத்தில் 106 மாணவர்கள் ஆராய்ச்சியில் முனைவர் பட்டத்திற்கும், 73 மாணவர்கள் நிறைஞர் பட்டத்திற்கும் பதிவு செய்துள்ளனர். இதுமட்டுமின்றி 200-க்கு மேற்பட்ட மாணவர்கள் பட்ட மேற்படிப்பு பயின்று வருகின்றனர். இவை தவிர 11 பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகளில் 1,400-க்கு மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர். 2012-2013 ஆம் ஆண்டில் இப்பல்கலைக்கழகத்தில் விளையாட்டு விஞ்ஞான ஆய்வகம் அமைப்பதற்காக ரூபாய் 2 கோடியே 20 இலட்சத்தினை தமிழக அரசு ஒதுக்கியுள்ளது. இது தவிர 2012-2013 ஆம் நிதியாண்டில் ஒரு தொகுப்பு நிதி மானியமாக ரூ.10 கோடி ஒப்பளிக்கப்பட்டு பல்கலைக்கழக நல்கைக் குழுவின் பங்களிப்பு ரூ.5 கோடியும், தமிழக அரசு பங்களிப்பாக ரூ.5 கோடியும் வழங்கி ஆணையிட்டுள்ளது.

பின் இணைப்பு

தமிழ்நாட்டில் தற்போதுள்ள விளையாட்டு கட்டமைப்பு வசதிகள்

வ. எண்.	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
1.	அரியலூர்	400 மீ. தடகள ஓடுபாதை (களிமண்), கால்பந்து மைதானம் (களிமண்), வளைகோல் பந்து மைதானம் (களி மண்), கூடைப்பந்து ஆடுகளம் 1, (சிமெண்ட்), கையுந்துபந்து ஆடுகளம் 1, (களிமண்), கபாடி ஆடுகளம் 1, டென்னிஸ் ஆடுகளம் 1, (செயற்கை இழை), உடற்பயிற்சி கூடம் 1, நீச்சல்குளம் 25 மீ. x 13 மீ., ஸ்கேட்டிங் வளையம்

வ. எண்.	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		சிறு விளையாட்டரங்கம், ஜெயங்கொண்டம்: 400 மீ. தடகள ஓடுபாதை (மண்), கால்பந்து மைதானம் 1 (மண்), கையுந்துபந்து ஆடுகளம் 1, கூடைப்பந்து ஆடுகளம் 1
2.	சென்னை	**ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம்:** 400 மீ. 8-வரிசை தடகள ஓடுபாதை (செயற்கை இழை மின்னொளி வசதியுடன்), கால்பந்து மைதானம் (புல்தரை), ஜூடோ அரங்கம், செஸ் அரங்கம், கேரம் அரங்கம், பளுதூக்கும் அரங்கம், மேசைப்பந்து அரங்கம், குத்துச்சண்டை அரங்கம், பீச் கையுந்துபந்து ஆடுகளம் 2, கையுந்துபந்து ஆடுகளம் 3 (களிமண் தரை மின்னொளி வசதியுடன்), எறிபந்து ஆடுகளம் 1, கபாடி ஆடுகளம் 1, கைப்பந்து ஆடுகளம் 1, குளிர்சாதன உடற்பயிற்சிக் கூடம்
		பல்நோக்கு உள் விளையாட்டரங்கம் பெரியமேடு, சென்னை: மரத்தாலான குளிர்சாதன வசதி கொண்ட உள்ளரங்கம் (கையுந்து பந்து, கூடைப்பந்து, மேசைப்பந்து, பாட்மிண்டன், குத்துச்சண்டை, மல்யுத்தம், பளுதூக்குதல், செஸ், கேரம், கைபந்து), ஸ்கேட்டிங் வளையம் (மின்னொளியுடன்), கூடைப்பந்து ஆடுகளம் 2 (சிமெண்ட் தரை மின்னொளியுடன்), கைப்பந்து 1 (களிமண்), வாள்சண்டை அரங்கம் (மின்னொளியுடன்), திறந்தவெளி குத்துச்சண்டை வளையம்

வ. எண்.	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		மேயர் இராதாகிருஷ்ணன் வளைகோல் பந்து விளையாட்டரங்கம், எழும்பூர், சென்னை: வளைகோல்பந்து செயற்கை இழை மைதானம் (மின்னொளியுடன்), உடற்பயிற்சி கூடம், டென்னிஸ் ஆடுகளம் 4 (களிமண்), கையுந்துபந்து ஆடுகளம் 3 (மின்னொளி வசதியுடன்)
		நீச்சல் குள வளாகம், வேளச்சேரி, சென்னை: 8-வரிசை பந்தைய நீச்சல் குளம் (50மீ. x 25மீ.), குதித்தல் நீச்சல் குளம் (18மீ. x 25மீ.), பயிற்சி நீச்சல் குளம் (25மீ. x 25மீ.), உடற்பயிற்சி கூடம், ஜிம்னாஸ்டிக் உள்ளரங்கம்
		டென்னிஸ் விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம், சென்னை: டென்னிஸ் ஆடுகளம் 6 (செயற்கை இழை மின்னொளி வசதியுடன்), உடற்பயிற்சி கூடம்
		நேரு பூங்கா விளையாட்டு வளாகம், சென்னை-84: உலகத்தர ஸ்குவாஷ் ஆடுகளம் 8 மற்றும் பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் (தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் கழகம்) பொது-தனியார் பங்களிப்புடன் (ppp), 400 மீ. தடகள ஓடுபாதை (களிமண்), கால்பந்து மைதானம், கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட்), டென்னிஸ் ஆடுகளம் 12 (செயற்கை இழை), கபாடி ஆடுகளம் 1, தங்கும் விடுதி வசதி

வ. எண்.	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		அண்ணா நீச்சல் குளம், சென்னை 5: நீச்சல் குளம் (50மீ. x 25மீ.), நீச்சல் குளம் (25மீ. x 12.5மீ.)
		ஓய்.எம்.சி.ஏ. உடற்பயிற்சி கல்லூரி மைதானம், நந்தனம்: வளைகோல் பந்து மைதானம் (செயற்கை இழை) தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் ஒய்.எம்.சி.ஏ. புரிந்துணர்வுடன்
		சென்னை மாவட்டப் பிரிவு: செனாய் நகர் நீச்சல் குளம் (36மீ. x 18மீ.), உடற்பயிற்சி கூடம், இறகுப்பந்து உள்ளரங்கம் 2, இறகுப்பந்து ஆடுகளம் 4 (களிமண்), கையுந்துபந்து ஆடுகளம் 1 (களிமண்)
3.	கோயம்புத்தூர்	400 மீ. தடகள ஓடுபாதை (செயற்கை இழை), கால்பந்து மைதானம் (புல்தரை)
4.	கடலூர்	400 மீ. தடகள ஓடுபாதை (கரித்தூள்), கால்பந்து மைதானம் (களிமண்), வளைகோல்பந்து மைதானம் (களிமண்), கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட் மின்னொளியுடன்), கையுந்துபந்து ஆடுகளம் 2 (களிமண்), கபாடி ஆடுகளம் 2 (களிமண்), பூப்பந்து ஆடுகளம் 1 (களிமண்), உடற்பயிற்சி கூடம் 1, சிமெண்ட் நடைபாதை 1,200 மீ., திறந்தவெளி குத்துச்சண்டை வளையம் 1, டென்னிஸ் ஆடுகளம் 2 (செயற்கை இழை), கிரிக்கெட் ஆடுகளம், நீச்சல்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வ. எண்.	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		குளம் 25மீ. x 13மீ., இறகுப்பந்து உள்ளரங்கம் 3 (மரத்தரை), ஸ்குவாஷ் ஆடுகளம் 1, கைப்பந்து ஆடுகளம் 1
		சிறு விளையாட்டரங்கம், விருத்தாசலம் தாலுகா: 400 மீ. தடகள ஓடுபாதை (களிமண்), கால்பந்து மைதானம் 1 (களிமண்), கையுந்துபந்து ஆடுகளம் 2 (களிமண்), கபாடி ஆடுகளம் 1, கோ கோ ஆடுகளம் 1
5.	தருமபுரி	400 மீ. தடகள ஓடுபாதை (களிமண்), கால்பந்து மைதானம் (களிமண்), கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட்), கையுந்துபந்து ஆடுகளம் 2 (களிமண்), பீச் கையுந்துபந்து ஆடுகளம் 1, பூப்பந்து ஆடுகளம் 1 (களிமண்), குத்துச்சண்டை வளையம் 1, உடற்பயிற்சி கூடம் 1, நீச்சல்குளம் 25மீ.X13மீ., இறகுப்பந்து உள்ளரங்கம் 5 (மரத்தரை மற்றும் மின்னொளி), ஸ்கேட்டிங் வளையம்
		சிறு விளையாட்டரங்கம், அரூர்: கூடைப்பந்து ஆடுகளம் (சிமெண்ட்), கையுந்துபந்து ஆடுகளம் (மண்)
6.	திண்டுக்கல்	400 மீ. தடகள ஓடுபாதை (மண்) ,கால்பந்து மைதானம் (புல்தரை), வளைகோல் பந்து மைதானம் (களிமண்), கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட் மற்றும் மின்னொளி), கையுந்துபந்து ஆடுகளம் 1 (களிமண்), கோ கோ ஆடுகளம் 1 (களிமண்), கபாடி ஆடுகளம் 1 (களிமண்),

[2013 மே 10

வ. எண்.	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		கைப்பந்து மைதானம் 1 (களிமண்), திறந்தவெளி இறகுப்பந்து ஆடுகளம் 3 (மண்), பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் 1, நீச்சல் குளம் 25மீ.x12மீ.
		SDAT மலைக்கோட்டை மாரியம்மன் கோவில் மைதானம், திண்டுக்கல்: 200மீ. தடகள ஓடுபாதை, வளைகோல் பந்து மைதானம், கூடைப்பந்து ஆடுகளம் 1 (மின்னொளி), கையுந்துபந்து ஆடுகளம் 2 (1 மின்னொளி), இறகுப்பந்து ஆடுகளம் 3, வலைப்பந்து ஆடுகளம் 1
		SDAT என்.ஜி.ஓ. காலனி, பாலகிருஷ்ணாபுரம், திண்டுக்கல்: கையுந்துபந்து ஆடுகளம் 1, கபாடி ஆடுகளம் 1, பூப்பந்து ஆடுகளம் 1, யோகா அரங்கம் 1, வலைப்பந்து ஆடுகளம் 1
		சிறு விளையாட்டரங்கம், நிலக்கோட்டை தாலுகா: கால்பந்து மைதானம் 1, கையுந்துபந்து ஆடுகளம் 1, கூடைப்பந்து ஆடுகளம் 1, கபாடி ஆடுகளம் 1
7.	ஈரோடு	400 மீ. தடகள ஓடுபாதை (களிமண்), கால்பந்து மைதானம் (புல்தரை), கூடைப்பந்து ஆடுகளம் 2 (சிமெண்ட் மின்னொளியுடன்), கையுந்துபந்து ஆடுகளம் 2 (களிமண்), (1 மின்னொளி), கபாடி ஆடுகளம் 1, கோ கோ ஆடுகளம் 1, வலைப்பந்து

வ. எண்.	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		ஆடுகளம் 1, பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் 1, பூப்பந்து ஆடுகளம் 1, இறகுப்பந்து உள்ளரங்கம் 1 (சிமெண்ட் மின்னொளியுடன்), நீச்சல் குளம் 25மீ.x13மீ.
8.	காஞ்சிபுரம்	400 மீ. தடகள ஓடுபாதை (களிமண்), கால்பந்து மைதானம் (களிமண்), வளைகோல் பந்து மைதானம் (களிமண்), கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட் மின்னொளியுடன்), கையுந்துபந்து ஆடுகளம் 3 (மண்) (1 மின்னொளி), குத்துச்சண்டை வளையம், பூப்பந்து ஆடுகளம் 1 (களிமண்), மேசைப்பந்து அரங்கம் 1, ஸ்குவாஷ் உள்ளரங்கம் 1, செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் 2 (மின்னொளியுடன்), இறகுப்பந்து உள்ளரங்கம் 4 (செயற்கை இழை), நீச்சல் குளம் 25மீ. x 13மீ., கைப்பந்து ஆடுகளம் 1 (களிமண்), இறகு பந்து ஆடுகளம் 2 (களிமண்), வாள்சண்டை ஆடுகளம் (சிமெண்ட்), கோ கோ (களிமண்), கபாடி (களிமண்)
9.	கன்னியாகுமரி	400 மீ. தடகள ஓடுபாதை (களிமண்), கால்பந்து மைதானம் (புல்தரை), கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட் மின்னொளியுடன்), கையுந்துபந்து ஆடுகளம் 1 (சிமெண்ட் மின்னொளியுடன்), கபாடி ஆடுகளம் 1 (களிமண்), பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் 1, குத்துச்சண்டை வளையம் 1, ஸ்குவாஷ் உள்ளரங்கம் 1, நீச்சல் குளம் 25மீ.x13மீ.

வ. எண்.	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
10.	கரூர்	400 மீ. தடகள ஓடுபாதை (களிமண்), கால்பந்து மைதானம் (களிமண்), வளைகோல் பந்து மைதானம் (களிமண்), கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட்), கையுந்துபந்து ஆடுகளம் 1 (களிமண்), கபாடி ஆடுகளம் 1 (களிமண்), கோ கோ ஆடுகளம் 1 (களிமண்)
11.	கிருஷ்ணகிரி	400 மீ. தடகள ஓடுபாதை (களிமண்), ,கால்பந்து மைதானம் (புல்தரை), வளைகோல்பந்து மைதானம் (களிமண்), கூடைப்பந்து ஆடுகளம் 2 (சிமெண்ட்), கைப்பந்து ஆடுகளம் 2 (களிமண்), கையுந்துபந்து ஆடுகளம் 3 (களிமண்), பல்நோக்கு உள்விளையாட்டரங்கம், மரத்தாலான இறகுப்பந்து ஆடுகளம் 4, குத்துச்சண்டை வளையம் (சிமெண்ட்), செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் 2, கபாடி ஆடுகளம் 1 (களிமண்), கோ கோ ஆடுகளம் 1 (களிமண்), இறகுப்பந்து உள்ளரங்கம் 1, டேக்வாண்டோ உள்ளரங்கம் 1, பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் 1, சிமெண்ட் நடைபாதை 1,300 மீ., நீச்சல்குளம் 25மீ.x13மீ., குழந்தைகளுக்கான நீச்சல் குளம் 1
		சிறு விளையாட்டரங்கம், ஓசூர்: 400 மீ. தடகள ஓடுபாதை, கால்பந்து மைதானம் (களிமண்), கையுந்துபந்து ஆடுகளம் 1 (களிமண்), கோ கோ ஆடுகளம் 1 (களிமண்), கபாடி ஆடுகளம் 1 (களிமண்), கிரிக்கெட் மைதானம்

வ. எண்.	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		சிறு விளையாட்டரங்கம், ஊத்தங்கரை தாலுகா: 400 மீ. தடகள ஓடுபாதை, கால்பந்து மைதானம் (களிமண்), கையுந்துபந்து ஆடுகளம் 1 (களிமண்), கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட்), கோ கோ ஆடுகளம் 1 (களிமண்), கபாடி ஆடுகளம் 1 (களிமண்)
12.	மதுரை	400 மீ. தடகள ஓடுபாதை (செயற்கை இழை, மின்னொளியுடன்), கால்பந்து மைதானம் (புல்தரை), வளைகோல்பந்து மைதானம் (களிமண்), கையுந்துபந்து ஆடுகளம் 3 (களிமண்), கபாடி ஆடுகளம் 2 (மின்னொளியுடன்), கோ கோ ஆடுகளம் 1, மேசைப்பந்து அரங்கம் 1, கூடைப்பந்து ஆடுகளம் 2 (செயற்கை இழை), பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் 2
		டென்னிஸ் ஆடுகளம் 2 (செயற்கை இழை), டென்னிஸ் ஆடுகளம் 1 (களிமண்), கிரிக்கெட் பயிற்சி வலை 3, குத்துச்சண்டை வளையம் 1, கைப்பந்து ஆடுகளம் 1 (களிமண்), வலைப்பந்து ஆடுகளம் 4 (சிமெண்ட்), ஜிம்னாஸ்டிக் அரங்கம் 1, வலைப்பந்து ஆடுகளம் 3 (களிமண்), இறகுப்பந்து உள்ளரங்கம் 4 (மரத்தரை மின்னொளியுடன்), நீச்சல் குளம் 25மீ.x13மீ., இறகுப்பந்து உள்ளரங்கம் 3 (சிமெண்ட்), மாற்றுத் திறனாளிகள் பயிற்சி மைதானம்

[2013 மே 10

வ. எண்.	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		யோகா அரங்கம், மதுரை எல்லீஸ் நகர் மைதானம்: வளைகோல்பந்து மைதானம் (களிமண்), கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட்)
13.	நாகப்பட்டிணம்	400 மீ. தடகள ஓடுபாதை (களிமண்), கால்பந்து மைதானம் 1 (களிமண்), கையுந்துபந்து ஆடுகளம் 2 (1 மின்னொளியுடன்), கூடைப்பந்து ஆடுகளம் 2 (சிமெண்ட்), டென்னிஸ் ஆடுகளம் 1 (களிமண்), கைப்பந்து ஆடுகளம் 1, கோ கோ ஆடுகளம் 1, கபாடி ஆடுகளம் 1, பூப்பந்து ஆடுகளம் 1 (களிமண்), திறந்தவெளி குத்துச்சண்டை வளையம் 1, ஸ்குவாஷ் உள்ளரங்கம் 1, இறகுப்பந்து உள்ளரங்கம் 2 (மரத்தரை மின்னொளியுடன்), பீச் கையுந்துபந்து 1, கிரிக்கெட் பயிற்சி களம் 2, நீச்சல்குளம் 25மீ. x 13மீ.
		சிறு விளையாட்டரங்கம், தரங்கம்பாடி: 400 மீ. தடகள ஓடுபாதை (களிமண்), கால்பந்து மைதானம் (களிமண்), கையுந்துபந்து ஆடுகளம் 1, கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட்), கபாடி ஆடுகளம் 1
		சிறு விளையாட்டரங்கம், திட்டச்சேரி: 200 மீ தடகள ஓடுபாதை (களிமண்), கால்பந்து மைதானம் (களிமண்), கையுந்துபந்து ஆடுகளம் 2, பீச் கையுந்துபந்து ஆடுகளம் 1, கபாடி ஆடுகளம் 1

2013 மே 10]

வ. எண்.	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		சிறு விளையாட்டரங்கம், ஆயக்காரன் புலம்: *200 மீ. தடகள ஓடுபாதை (களிமண்), கால்பந்து மைதானம் (களிமண்), கையுந்துபந்து ஆடுகளம் 1, பூப்பந்து ஆடுகளம் 1, கோ கோ ஆடுகளம் 1, கபாடி ஆடுகளம் 1*
14.	நாமக்கல்	*400 மீ. தடகள ஓடுபாதை (களிமண்), கால்பந்து மைதானம் (களிமண்), வளைகோல்பந்து மைதானம் 1 (களிமண்), கையுந்துபந்து ஆடுகளம் 2 (களிமண்), கோ கோ ஆடுகளம் 1 (களிமண்), கபாடி ஆடுகளம் 1 (களிமண்)*
15.	பெரம்பலூர்	*400 மீ. தடகள ஓடுபாதை (களிமண்), கால்பந்து மைதானம் (களிமண்), கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட்), கைப்பந்து ஆடுகளம் 1 (களிமண்), கபாடி ஆடுகளம் 1 (களிமண்), கோ கோ ஆடுகளம் 1 (களிமண்), இறகுப்பந்து உள்ளரங்கம் 2 (மரத்தரை)*
		சிறு விளையாட்டரங்கம், வேப்பந்தட்டை: *200 மீ. தடகள ஓடுபாதை (களிமண்), கால்பந்து சிறு மைதானம் (களிமண்), கையுந்துபந்து ஆடுகளம் 2 (களிமண்), கபாடி ஆடுகளம் 1*
16.	புதுக்கோட்டை	*400 மீ. தடகள ஓடுபாதை (களிமண்), கால்பந்து மைதானம் (களிமண்), வளைகோல் பந்து மைதானம் (களிமண்), கையுந்துபந்து ஆடுகளம் 1 (களிமண்), கபாடி ஆடுகளம்*

[2013 மே 10

வ. எண்.	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		2 (களிமண்), கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட் மின்னொளியுடன்), ஜிம்னாஸ்டிக் கூடம் 1, இறகுப்பந்து உள்ளரங்கம் 2 (மின்னொளியுடன்), இறகுப்பந்து ஆடுகளம் 1 (களிமண்), குத்துச்சண்டை வளையம் 1 (மரத்தரை), பயிற்சி நடைபாதை, நீச்சல்குளம் 25மீ.x13மீ.
17.	இராமநாதபுரம்	400 மீ. தடகள ஒடுபாதை (மண்), கையுந்துபந்து ஆடுகளம் 1 (மின்னொளி), கால்பந்து மைதானம் (களிமண்), ஹாக்கி மைதானம் (களிமண்), கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட்), கைப்பந்து ஆடுகளம் 1 (களிமண்), கபாடி ஆடுகளம் 1 (களிமண்), கோ கோ ஆடுகளம் 1 (களிமண்), பூப்பந்து ஆடுகளம் 1, பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் 1, திறந்தவெளி குத்துச்சண்டை வளையம் (சிமெண்ட்), டென்னிஸ் ஆடுகளம் 2 (செயற்கை இழை மின்னொளியுடன், கிரிக்கெட் பயிற்சி வலை 2, இறகுப்பந்து உள்ளரங்கம் 3 (செயற்கை இழை மின்னொளியுடன்), நீச்சல்குளம் 25மீ.x13மீ.
		சிறு விளையாட்டரங்கம், பரமக்குடி: 400 மீ. தடகள ஒடுபாதை (களிமண்), கால்பந்து மைதானம் (களிமண்), கையுந்துபந்து ஆடுகளம் 1 (களிமண்), கூடைப்பந்து ஆடுகளம் 1 (களிமண்), கபாடி ஆடுகளம் 1, கோ கோ ஆடுகளம் 1 (களிமண்)

2013 மே 10]

வ. எண்.	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
18.	சேலம்	400 மீ. தடகள ஓடுபாதை (களிமண்), கால்பந்து மைதானம் (களிமண்), கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட்), கையுந்துபந்து ஆடுகளம் 2 (களிமண்), கபாடி ஆடுகளம் 1 (களிமண்), கைப்பந்து ஆடுகளம் 1 (களிமண்), குத்துச்சண்டை வளையம் 1 (சிமெண்ட்), பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் 1, கிரிக்கெட் பயிற்சி வலை 1 (களிமண்), டென்னிஸ் ஆடுகளம் 1 (செயற்கை இழை), நீச்சல் குளம் 25மீ. x 13மீ., இறகுப்பந்து உள்ளரங்கம் 4 (சிமெண்ட் மின்னொளியுடன்)
19.	சிவகங்கை	400 மீ. தடகள ஓடுபாதை (களிமண்), வளைகோல்பந்து மைதானம் (களிமண்), கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட்), கையுந்துபந்து ஆடுகளம் 2 (களிமண்), கால்பந்து மைதானம் (புல்தரை), கோ கோ ஆடுகளம் 1 (களிமண்), கபாடி ஆடுகளம் 1 (களிமண்), நீச்சல் குளம் 25மீ.x13மீ., இறகுப்பந்து உள்ளரங்கம் 3 (1 மரத்தரை, 2 செயற்கை இழை)
20.	தஞ்சாவூர்	400 மீ. தடகள ஓடுபாதை (களிமண்), கால்பந்து மைதானம் (களிமண்), வளைகோல் பந்து மைதானம் (களிமண்), கூடைப்பந்து ஆடுகளம் 2 (சிமெண்ட்), கையுந்துபந்து ஆடுகளம் 3 (களிமண்), கபாடி ஆடுகளம் 1, கோ கோ ஆடுகளம் 1, வலைப்பந்து ஆடுகளம் 1, திறந்தவெளி இறகுப்பந்து ஆடுகளம் 1, கைப்பந்து ஆடுகளம் 1, திறந்தவெளி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[2013 மே 10

வ. எண்.	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		குத்துச் சண்டை வளையம் 1, பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் 1, ஸ்குவாஷ் உள்ளரங்கம் 1, பீச் கையுந்துபந்து ஆடுகளம் 1, இறகுப்பந்து உள்ளரங்கம் 1, நீச்சல் குளம் 25மீ.x13மீ.
21.	தேனி	400 மீ. தடகள ஓடுபாதை (களிமண்), கால்பந்து மைதானம் (களிமண்), கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட்), கையுந்துபந்து ஆடுகளம் 2 (களிமண்), டென்னிஸ் ஆடுகளம் 1, (களிமண்), மேசைப்பந்து அரங்கம் 1, இறகுப்பந்து உள்ளரங்கம் 2 (மரத்தரை, மின்னொளியுடன்), பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் 1, ஸ்குவாஷ் உள்ளரங்கம் 1
22	நீலகிரி	400 மீ. 6 வரிசை தடகள ஓடுபாதை (கரித்தூள்), கால்பந்து மைதானம் (புல்தரை), கையுந்துபந்து ஆடுகளம் 1 (களிமண்), கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட்), டென்னிஸ் ஆடுகளம் 1 (செயற்கை இழை), இறகுப்பந்து உள்ளரங்கம் 3 (மரத்தரை மின்னொளியுடன்), ஜிம்னாஸ்டிக் கூடம்
		சிறு விளையாட்டரங்கம், காந்தி மைதானம் கோத்தகிரி: கால்பந்து மைதானம் (களிமண்), கூடைப்பந்து மைதானம் 1, கையுந்துபந்து ஆடுகளம் 1 (களிமண்), 200 மீ. தடகள ஓடுபாதை (களிமண்)

வ. எண்.	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		பல்நோக்கு உள்விளையாட்டரங்கம், குன்னூர்: மரத்தரை ஆடுகளம் 2, பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் **உள்விளையாட்டரங்கம், கூடலூர்:** மரத்தரை ஆடுகளம் 2, பல்நோக்கு உடற்பயிற்சி கூடம்
23.	திருவள்ளூர்	400 மீ. தடகள ஓடுபாதை (களிமண்), கால்பந்து/வளைகோல் பந்து மைதானம் (களிமண்), கூடைப்பந்து ஆடுகளம் 2 (சிமெண்ட்), கையுந்துபந்து ஆடுகளம் 2 (களிமண்), பல்நோக்கு உடற்பயிற்சி கூடம்
		முகப்பேர் விளையாட்டு வளாகம்: டென்னிஸ் ஆடுகளம் 4 (2 செயற்கை இழை, 2 களிமண்), கூடைப்பந்து ஆடுகளம் 2 (செயற்கை இழை), நீச்சல் குளம் 25மீ.x13மீ.
24.	தூத்துக்குடி	400 மீ. தடகள ஓடுபாதை (களிமண்), கால்பந்து மைதானம் (களிமண்), வளைகோல் பந்து மைதானம் (களிமண்), கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட் மின்னொளியுடன்), கையுந்துபந்து ஆடுகளம் 3 (1 மின்னொளியுடன்), பல்நோக்கு உடற்பயிற்சி கூடம், திறந்தவெளி குத்துச்சண்டை வளையம், ஸ்குவாஷ் ஆடுகளம் 1, கபாடி ஆடுகளம் 1, நீச்சல் குளம் 25மீ.x13மீ., கைப்பந்து ஆடுகளம் 1, 800 மீ. நடைபாதை 1

வ. எண்.	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
25.	திருச்சிராப்பள்ளி	400 மீ. தடகள ஓடுபாதை (களிமண்), கால்பந்து மைதானம் (களிமண்), வளைகோல் பந்து மைதானம் 3 (1 செயற்கை இழை), வலைப்பந்து 1 (களிமண்), கையுந்துபந்து ஆடுகளம் 2 (1 மின்னொளியுடன்), பீச் கையுந்துபந்து ஆடுகளம் 1, கூடைப்பந்து ஆடுகளம் 2 (சிமெண்ட்), 1 மின்னொளியுடன், கபாடி ஆடுகளம் 2 (களிமண்), கோ கோ ஆடுகளம் 2 (களிமண்), கைப்பந்து ஆடுகளம் 1 (களிமண்), பூப்பந்து ஆடுகளம் 1 (களிமண்), ஸ்குவாஷ் உள்ளரங்கம் 1, டென்னிஸ் ஆடுகளம் 2 (களிமண்), பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் 1, இறகுப்பந்து உள்ளரங்கம் 1 (மின்னொளி), திறந்தவெளி குத்துச்சண்டை வளையம் 1, நீச்சல் குளம் 25மீ.x13மீ.,
26.	திருநெல்வேலி	400 மீ. தடகள ஓடுபாதை (களிமண்), கால்பந்து மைதானம் (புல்தரை), வளைகோல் பந்து மைதானம் (செயற்கை இழை), கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட் மின்னொளியுடன்), கையுந்துபந்து ஆடுகளம் 1 (களிமண்), கபாடி ஆடுகளம் 1 (களிமண்), கோ கோ ஆடுகளம் 1 (களிமண்), பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் 3, ஜிம்னாசியம் அரங்கம் 1, திறந்தவெளி குத்துச்சண்டை வளையம் 1, டென்னிஸ் ஆடுகளம் 1 (செயற்கை இழை மின்னொளியுடன்), ஸ்கேட்டிங் வளையம் 1, இறகுப்பந்து உள்ளரங்கம் (மரத்தரை), நீச்சல் குளம் 25மீ.x13மீ.,

வ. எண்.	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		சிறு விளையாட்டரங்கம், ஆலங்குளம் தாலுகா: 400 மீ. தடகள ஓடுபாதை (களிமண்), கால்பந்து மைதானம் (களிமண்), கையுந்துபந்து ஆடுகளம் 1 (களிமண்), கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட்), கபாடி ஆடுகளம் 1 (களிமண்), கோ கோ ஆடுகளம் 1 (களிமண்)
		சிறு விளையாட்டரங்கம், கல்லிடைக்குறிச்சி: 400 மீ. தடகள ஓடுபாதை (களிமண்), கால்பந்து மைதானம் (களிமண்), கையுந்துபந்து ஆடுகளம் 1 (களிமண்), கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட்), கபாடி ஆடுகளம் 1 (களிமண்), கோ கோ ஆடுகளம் 1 (களிமண்)
		சிறு விளையாட்டரங்கம், சங்கரன்கோவில்: 400 மீ. தடகள ஓடுபாதை, கால்பந்து மைதானம், கையுந்துபந்து ஆடுகளம் 1
27.	திருவண்ணாமலை	400 மீ. தடகள ஓடுபாதை (களிமண்), கால்பந்து மைதானம் (புல்தரை), வளைகோல் பந்து மைதானம் (களிமண்), கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட் மின்னொளியுடன்), கூடைப்பந்து உள்ளரங்கம் 1, கையுந்துபந்து ஆடுகளம் 2 (களிமண் மின்னொளியுடன்), குத்துச்சண்டை வளையம் (சிமெண்ட்), கபாடி ஆடுகளம் 1, கோ கோ ஆடுகளம் 1, கைப்பந்து ஆடுகளம் 1 (களிமண்), டென்னிஸ் ஆடுகளம் 2 (செயற்கை இழை மின்னொளியுடன்), பல்நோக்கு உடற்பயிற்சி உள்ளரங்கம் 1,

வ. எண்.	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		மேசைப்பந்து அரங்கம் 1, நீச்சல் குளம் 25மீ.x13மீ., குழந்தைகள் நீச்சல் குளம்
		சிறு விளையாட்டரங்கம், தண்டாரம்பட்டு தாலுகா: 400 மீ. தடகள ஓடுபாதை, கால்பந்து மைதானம் 1 (களிமண்), கையுந்துபந்து ஆடுகளம் 1 (களிமண்), கபாடி ஆடுகளம் 1 (களிமண்)
28.	திருவாரூர்	400 மீ. தடகள ஓடுபாதை (களிமண்), கால்பந்து/வளைகோல் பந்து மைதானம் (களிமண்), கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட்), கையுந்துபந்து ஆடுகளம் 1 (களிமண்), கபாடி ஆடுகளம் (களிமண்), கோ கோ ஆடுகளம் (களிமண்), நீச்சல்குளம் 25மீ.x13மீ.
29.	வேலூர்	**சத்துவாச்சாரி பளுதூக்கும் மையம் சிறு விளையாட்டரங்கம், ஜோலார்பேட்டை:** 400 மீ. தடகள ஓடுபாதை (களிமண்), கால்பந்து/வளைகோல் பந்து மைதானம் (களிமண்), கையுந்துபந்து ஆடுகளம் 2 (களிமண்), கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட்), பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் 1
30.	விழுப்புரம்	400 மீ. தடகள ஓடுபாதை (களிமண்), கால்பந்து மைதானம் (களிமண்), கையுந்துபந்து ஆடுகளம் 2 (மண்), கூடைப்பந்து ஆடுகளம் 2 (சிமெண்ட்), கபாடி ஆடுகளம் 1, கோ கோ ஆடுகளம் 1, இறகுப்பந்து உள்ளரங்கம் 1, குண்டுஎறிதல்

2013 மே 10]

வ. எண்.	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		வளையம் 1, நீளம் தாண்டுதல் 1, நீச்சல் குளம் 25மீ.x13மீ. (முடிவுறும் தருவாயில் உள்ளது)
31.	விருதுநகர்	400 மீ. தடகள ஓடுபாதை (களிமண்), கால்பந்து மைதானம் (களிமண்), வளைகோல் பந்து மைதானம் (களிமண்), கையுந்துபந்து ஆடுகளம் 2 (களிமண்) மின்னொளியுடன், கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட்), பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் 1, குத்துச்சண்டை வளையம், ஸ்குவாஷ் ஆடுகளம் 1, கபாடி ஆடுகளம் 1, கோ கோ ஆடுகளம் 1, பூப்பந்து ஆடுகளம் 1 கைப்பந்து ஆடுகளம் 1 (களிமண்), வலைப்பந்து ஆடுகளம் 2, டென்னிஸ் ஆடுகளம் 1 (களிமண்) (மின்னொளியுடன்), திறந்தவெளி இறகுப்பந்து ஆடுகளம் 1
		சிறு விளையாட்டரங்கம், சிவகாசி தாலுகா: 400 மீ. தடகள ஓடுபாதை (களிமண்), கால்பந்து மைதானம் (களிமண்), கையுந்துபந்து ஆடுகளம் 1 (களிமண்), கூடைப்பந்து ஆடுகளம் 1
		சிறு விளையாட்டரங்கம், நென்மேனிப்பட்டி: 400 மீ. தடகள ஓடுபாதை, கால்பந்து மைதானம் 1
